சிவம்



இந்திரா சௌந்தர்ராஜன்

முதற் பதிப்பு: ஜூன், 2003
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 2004
மூன்றாம் பதிப்பு - ஏப்ரல் 2008
நான்காம் பதிப்பு :ஜூலை, 2010
உரிமை: ஆசிரியருக்கு©

SIVAM
By: Indira Soundarrajan

Fourth Edition: July 2010

No. of Pages: 464

Paper used: 11.6 Cream Wove

விலை ரூ. 175/-

THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai-600 017.
Phone: 24342899, 24327696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 23610810

Printed at: Udayam Offsets ✆: 2845 4808, 2845 1906

முன்னுரை

தினமலர் வாரமலரில் வந்த தொடர்கதை இது! 'தினம் ஒரு உயிர்' என்று ஒரு தொடரினை அதே வார மலரில்தான் எழுதினேன். சித்தர்களைப் பற்றிய செய்திகளைக் கொண்ட ஒரு அமானுஷ்யத் தொடர் அது. 51 வாரங்கள் அது வாரமலரில் வெளியிடப்பட்டு மகத்தான வெற்றி கொண்டது. தொடர்ந்து 52வது வாரம் முதல் நான் எழுதத் தொடங்கிய தொடர்தான் சிவம். இதுவும் முந்தைய தொடரினைப் போல 51 வாரங்கள் வந்து நிறைவு பெற்றது.

அதாவது தொடர்ச்சியாக 102 வாரங்கள் தினமலர் வாரமலரில் எழுதும் ஒரு வாய்ப்பு இறையருளால் எனக்கு வாய்த்தது.

முதலில் அதற்காக அந்த இறைவனுக்கும் தினமலர் நிறுவனத்துக்கும் என் நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்.

'சிவம்' என்கிற இந்தத் தொடர் நான் எழுதிய தொடர்களிலேயே மிகமிக வித்தியாசமாக மட்டுமல்ல, என் இறப்புக்குப் பிறகும் எனக்குப் பெயர் சேர்க்க வல்லது என்று கருதுகிறேன்.

ஒரு மர்ம நாவலில் இறை சிந்தனையை எப்படிப் புகுத்த முடியும் என்பது பலரது கேள்வி. இந்த சிவம் தொடர் அவர்களுக்கெல்லாம் விடையாகத் திகழும்.

'சைவ சித்தாந்தம்' பற்றி இவ்வளவு எளிமையாகவும், வலிமையாகவும் இதுவரை யாரும் எழுதியதில்லை என்று ஒரு வாசகர் என்னைப் பாராட்டினார்.

இன்னொருவரோ என் பொருட்டு சிவாலயங்களுக்குச் சென்று அர்ச்சித்துப் பிரசாதம் அனுப்பி 'சிவம்' பற்றிய இந்தத் தொடர் பெரியபுராணம், திருவாசகம் போல பல காலத்திற்கும் நிலைத்து நிற்கக் கூடியது என்றார். நான் அதைக் கேட்டு மிக மகிழ்ந்தேன்.

உண்மையில் வாசகர்கள் வாரம் தவறாமல் மறவாமல் தேடிப்பிடித்து படிக்க வேண்டிய ஒரு விறுவிறுப்பான தொடராகத்தான் இதை எழுத எண்ணினேன்.

ஆனால் என்னையுமறியாமல் இதன் கருப்பொருள் என்னை ஆட்டிவைத்து என் மூலம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

ஒரு கோணத்தில் பார்த்தால் இது ஒரு சராசரி மர்மக் கதை... அவ்வளவுதான்! ஆனாலும் இன்றைய ஹைடெக் யுகத்தில் இறை சிந்தனையை இது புராண நூல்கள் ஏற்படுத்தியதைவிட அதிகம் ஏற்படுத்தியது. 52 வாரமும் வாசகர்கள் பாராட்டுக்களில் நீந்தினேன். சில வைணவர்கள் இப்படி நான் சிவத்தை முழுமுதற் கடவுளாகச் சித்தரிப்பது கண்டு கோபித்துக் கடிதம் எழுதினர். கோவிலில் பணிபுரிபவர்கள் குருக்கள்தான். பட்டர்கள் அல்ல... பட்டர்கள் என்றால் அவர்கள் வைணவர்கள் என்று ஒரு சிலர் கடிதம் எழுதினர்.

ஆனால் நான் பிழையாக எதையும் இதில் எழுதவில்லை. மிக பொறுப்போடு இந்தத் தொடரை எழுதினேன்.

என் நோக்கம் காவியம் படைப்பது அல்ல... எழுத்தை விட்டு டி.வி. நோக்கி பயணிக்கத் தொடங்கி விட்ட வாசக உலகை மீண்டும் எழுத்தின் பக்கம் இழுப்பதே...

அதை வெற்றிகரமாய் செய்து முடித்தேன்.

இந்த நாவலின் அத்தியாயங்களுக்கு முன்னால் வரும் புரலூட்கள் (Proludes) அதாவது தலைப்புச் செய்திகள் புராணச் செய்திகளின் அடிப்படையில் என் கற்பனையில் உருவானவை.

அவை தானாய் என்னுள் தோன்றின.

குறிப்பாக நமது நாக்கே சிவலிங்க வடிவில் இருப்பதாகவும், நமது வாயினுள் 'நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்' என்கிற பஞ்ச பூதமும் அடங்கிச் கிடப்பதாக நான் எழுதி இருப்பதை அதை எழுதவதற்கு முன் வரை நான் சிந்தித்தே பார்க்கவில்லை.

எழுதி முடித்தபிறகோ எனக்கே வியப்பாகி விட்டது. அப்பொழுது தான் எனக்குள் எனக்கே தெரியாமல் ஏராளமான விஷயங்கள் ஒளிந்திருப்பது தெரிய வந்தது.

மொத்தத்தில் இந்த நாவல் எனக்கொரு சந்தோஷ அனுபவம். கர்வமாக என் நெஞ்சை உயர்த்தும் இறைவனின் பேரருள்.

அதற்காக அந்த சிவத்தின் திருவடிகளைப் பற்றி ஆனந்தக் கண்ணீர் உகுக்கிறேன். நன்றி.

அன்புடன்

13.4.2003
மதுரை

இந்திரா சௌந்தர்ராஜன்

சிவம்

1

'சிவலிங்கங்களைப் பற்றிய டாக்டர் விளாதி மீரின் ஆராய்ச்சி மிக வித்தியாசமானது. அது இந்த பூமியில் மொத்தம் எத்தனை லிங்கங்கள் உள்ளன என்று எண்ணிப் பார்க்கவோ, இல்லை அவற்றின் பூர்வ புராணக் கதைகளை அறியவோ முயல வில்லை. இவற்றுக்கப்பால் சிவலிங்கங்கள் பற்றி நாம் யோசிக்கவும் அதை நாம் நேசிக்கவும் நிறைய அடிப்படைகள் இருப்பதாக டாக்டர் விளாதிமீர் கருதினார். அதில் முதலாவது, ஸ்தூல வடிவங்களில் இறை உருவங்களை உருவாக்கி வழிபாடு செய்யும் இந்து மதத்தில் ஒரு குழவிக் கல்லைப் போன்ற லிங்கம் என்னும் உருவமற்ற ஒரு உருவம் எப்படி உட்புகுந்தது என்பதுதான்.

உண்மையில் லிங்க சொரூபமானது மூன்று மதத்திற்கும், புத்த ஜைனர்களுக்கும் கூட பொது வானது என்பதையும் அவர் கண்டறிந்தார்.

ஒரு மலை உச்சி!

அதில் பவுர்ணமி இரவில் கரிய நிழல் உருவாய் கண்ணுக்குத் தெரிந்த லிங்க உருவத்தை ஒரு கிறித்தவன் சிலுவைச் சின்னமாகப் பார்த்தான். ஒரு இஸ்லாமியன் தங்களின் மசூதிக் கூரை தெரிவ

தாகக் கருதினான். புத்த ஜைன சன்யாசிகள் தங்கள் குருமகான்கள் அமர்ந்து தவம் செய்து கொண்டிருப்ப தாகக் கருதினார்கள். ஒரு இந்துவோ அது சிவ லிங்கம் என்று திடமாகக் கருதி இருந்த இடத்தில் இருந்தே வில்வ இலைகளை வாரி அர்ச்சித்தான்.

உருவம் ஒன்று. ஆனால் அனைத்து மார்க்க தரிசிகளையும் அது திருப்திப்படுத்தியது என்றால் சிவம்தான் முதலும் முடிவுமான அனைவருக்கும் பொதுவான இறை. ஸ்வரூபமா?'

டாக்டர் விளாதிமீர் இப்படித்தான் கேட்கிறார்.

மரகதலிங்கம் புதூர்!

புஷ்டியான பசுமையான தென்னங்கூட்டத்திற்கும், வயல்வெளிகளுக்கும் நடுவில் ஒரு இடிந்துபோன பெயர்ப்பலகையோடு அது ராஜ் நாராயணை வரவேற்ற படி இருந்தது. ஒரு ஆளைச் சுருட்டிப் போட்டு அடைக்க லாம் எனும்படியான மகா பெரிய சூட்கேஸ், தோளில் ஒரு ஹோல்டான் பேக் சகிதம் பெயர்ப் பலகையை ஒட்டி மினி பஸ் ஒன்றில் இருந்து உதிர்க்கப்பட்டிருந்த ராஜ் நாராயணுக்குத் தன் அத்தை மகள் பாரதி இருக்கும் மண்ணைத் தொட்டுவிட்ட குஷி!

உற்சாகமாய் யாராவது கண்ணில் படுகின்றார்களா என்று பார்த்தான். நல்லவேளை, வயல் வரப்பில் ஒருவர் அய்யனார் சிந்து பாடியபடியே வந்து கொண்டிருந்தார்.

'கெழக்குப் பக்கம் திருக்கேணி
கேணியிலும் இளநித் தண்ணி
தண்ணி அதை இறச்சிடுடா சாமி ஐய்யா!
இறைச்சுத்தந்தா நான் உனக்கு
படையல் இடுவேன் ஐய்யா!'

பாட்டு ரசமாக இருந்தது. அவர் பாடிவரும் விதத்தி லும் நல்ல ருசுவான உற்சாகம்.

"ஹலோ" -அவரை நோக்கிக் கூவினான் ராஜ்நாராயண். அவரும் பார்த்துவிட்டு ஓடிவந்தார். கம்பீரமாய் ஜீன்ஸ் பேண்ட், டீ ஷர்ட், காந்திக் கண்ணாடி, பின் குடுமியோடு கூடிய ஒரு மாதிரியா பார்பேரியன் தலை முடி என்று நாகரீக மின்னலாய் ஒரு சொடுக்கு சொடுக்கிய ராஜ் நாராயணை பலத்த ஆச்சரிய உள்வாங்கல்களோடு பார்த்தார் அவர். அப்படியே விசாரிக்க ஆரம்பித்தார்.

"ஆரு தம்பி நீங்க?"

"நான்... நான்... என் பேர் ராஜ்நாராயண். சிவன் கோவில் பட்டர் வீட்டுக்கு வந்திருக்கேன். உட் யூ ப்ளிஸ் ஹெல்ப் மீ- இந்த சூட்கேசை கொஞ்சம் தூக்கிட்டு வர முடியுமா?"

"அடடே பட்டர் சாமி வீட்டுக்கா... ஆமா நீங்க அவருக்கென்ன உறவு?"

கேட்டபடியே ஒரே மூச்சில் சூட்கேசைத் தூக்கி தோளில் ஏற்றிக்கொண்ட அந்த நபர் நடக்க ஆரம்பித்தார்.

ஆனாலும் பாரமான சூட்கேசை ஒரே தூக்கில் தூக்கிய தோடு திணறாமல் நடந்த அவர் ராஜ்நாராயணுக்குள் ஆச்சரியமூட்டினார். அந்த ஆச்சரியம் கலையாமல் பதில் சொன்னான் அவனும்-

"நான் பட்டரோட பிரதர் இன்லா சன்"

"என்னது?" அவருக்கு அவன் பிரதர் இன்லா என்றது புரியவில்லை.

"பட்டருக்கு வைஃப் இருக்காங்கல்ல... அதாவது அவர் மனைவி... அவங்களோட அண்ணன் மகன் நான்."

"சரிதான், பட்டரோட மச்சினன் மகனுங்களா?" பட்டென்று ஒரு வார்த்தையில் அவன் படாதபாடு பட்டதற்கு தீர்வு தந்தார் அவர்.

"ஆமாம் மச்சினன் மகன்" அவனும் அசடு வழிந்தான்.

"இப்படி கொழா சூட்டோட இருக்கீங்களே... தம்பிக்கு ஊரு பட்டணமா?"

"ஆமாம், பட்டணம்தான். ஆனா இந்த பக்கத்துப் பட்டணம் இல்ல. இது அமெரிக்கப் பட்டணம்."

"அப்படியா... அமெரிக்கால எங்க தம்பி, நியூயார்க்கா, நியூஜெர்சியா? இல்ல அர்லாண்டோவா, அட்லாண்டாவா?"

அவரது அடுக்கலில் அவனுக்குள் ஆச்சரியப் பட்டாம் பூச்சிகள் பரபரப்போடு பறந்து முடிந்தன.

பட்டணம் என்றாலே சென்னை என்று மட்டுமே நினைக்கும் ஒரு கிராமத்தானா இப்படி விலாவாரியாக அடுக்குவது?

அவனை ஆச்சரியம் பிடுங்கித் தின்றது.

"என்ன பாக்குறீங்க... பட்டிக்காட்டான் அமெரிக்கா ஊருங்களை அப்படியே பளிச் பளிச்சுன்னு சொல்றானேன்னா?"

"ஆமாம்... எப்படி உங்களுக்கு இதெல்லாம் தெரியும்?" நடைபாட்டும் தொடர பேச்சு வளர்ந்தபடியே இருந்தது. காற்றும் மெலிதாய் அவன் தலையைக் கோதியபடி வீசிக்கொண்டிருந்தது.

"எல்லாம் கேள்வி ஞானம்தான். ஆமா அமெரிக்காவுல என்ன கம்ப்யூட்டர் சம்பந்தமான உத்யோகங்களா?"

"ஆமாம்!"

"அப்ப லட்சத்துலதான் சம்பளம்னு சொல்லுங்க."

"அ... ஆமாம்!"

"எங்க ஊருக்கு இதுக்கு முந்தி வந்திருக்கீங்களா?"

"வந்துருக்கேன்... சின்ன வயசுல!"

"இப்ப என்ன உங்களுக்கு ரொம்ப வயசா ஆயிடிச்சு?" அவர் திருப்பிக்கேட்ட விதத்தில் நிறைய

உள்ளர்த்தம். ராஜ்நாராயணுக்கு அவரோடு பேசுவது என்பது மெல்ல சிரமமாகத் தொடங்கியது. பார்ப்பதற்குத்தான் பட்டிக்காரனாகத் தெரிகிறார். வாயைத் திறந்தால் வார்த்தைகள் தூண்டில்போடுகின்றன. தன்னைப் பற்றி பேசாமல் என்னையே அறிய முயற்சிக்கிறாரே...?

அவன் ஒருவித தீர்மானத்தோடு இனி அவர் எது கேட்டாலும் பதில் சொல்லக்கூடாது என்று எண்ணிய மறுநொடி கோவில் மணி சப்தம் காதைத் தீண்டியது.

கம்பீரமான வெண்கல நாதம்!

கூடவே வானில் சிலிர்த்துப் பறந்து ஓடும் பட்சி கூட்டம் வேறு.

"நம்ம கோவில்தான்... பூஜை நடந்துக்கிட்டிருக்குது. உங்க மாமா இப்ப கோவில்லதான் இருப்பார். நேரா கோவிலுக்குப்போலாமா, இல்லை வீட்டுக்கேவா?"

அவர், வானம் பார்த்தபடி நின்றுவிட்ட அவன் காதைத் திருகி விசாரித்தார்.

"இல்ல... முதல்ல வீட்டுக்கே போவோம்!"

"அதுவும் சரிதான்... ஊட்டுக்குப் போய் காபி தண்ணிய குடிச்சுட்டு குளிச்சு முடிச்சுட்டு மெல்ல பொழுது சாய கோவிலுக்குப் போனா போவுது. ஆமா, தம்பிக்கு சாமி கும்புடற பழக்கமெல்லாம் உண்டா?"

அவர்தான் திரும்பவும் கேட்டார்.

"இல்ல..." ஒரு வார்த்தையில் அவன் சொன்ன பதில் பட்டென்று அவர் பொட்டில் அறைந்தது.

"இல்லையா... நிசமாவா?"

"ஆமா..."

"ஐய்யர் ஊட்டுப் பிள்ளையா இப்படி சொல்றது?"

"பேசாம வர்றீங்களா? உங்ககிட்ட உதவி கேட்டது தப்பா போச்சே..."

ராஜ்நாராயண் அவரைக் கட்டிப்போட வேண்டி சற்று செயற்கையாக சளித்துக் கொண்டான். அவரும் கப்சிப் என்று ஆனார். நடையின் போக்கில் ஊருணிக்கரை வந்தது. தளும்பலாய் பச்சை வண்ணத்தில் தண்ணீர்! கரையோரக் கல் படிகளில் ஏனம் கழுவும் கிராமத்துப் பெண்கள். ஊருணிக்குள்ளும் உள்பாவாடையை மார் புக்கு ஏற்றிக் கட்டிக் கொண்டு இளமை பிதுங்க குளித்த படி இருக்கும் இளவட்டங்கள்.

அவர்களில் பட்டர் பெண் பாரதியும் இருந்தாள்.

கரைமேல் ஒரு நவீன பிம்பமாய் தெரிந்த ராஜ்நாராய ணைப் பார்த்தவள் விக்கித்துப் போய் 'அத்தான்' என்று கத்தியவளாய் ஊருணிக் குளத்தைவிட்டு வெளியேறி அவன் முன் போய் நின்றாள்.

மார்; ஊஞ்சலாட, பெருமூச்சு சப்தமாய் பாய்ந்தோட, ஈரம் சொட்டும் தலையும், கத்திரிப்பூ மூக்குத்தி, குடை ஜிமிக்கி என்கிற இத்யாதிகளோடும் ஆசை ஆசையாக வெறித்தவளை ராஜ்நராயணும் பார்த்துப் பரவசப் பட்டான்.

"பாரதி..."

"இப்பதான் வரேளா?"

"ஆமா... ஜஸ்ட் கம்! ஆமா நீ எங்க இங்க ஆத்துல, பாத்ரூம் இல்ல?"

"அதெல்லாம் ஊருணில குளிக்கிற மாதிரி வருமாத் தான்?" என்றவள் அப்போதுதான் பெட்டியோடு நிற்கும் அவரைப் பார்த்து கையை உதறத் தொடங்கினாள்.

"ஆ... மணியக்காரர்! நீங்களா?"

"மணியக்காரரா?"

"ஆமாம்... என்ன மணியக்காரரே கூலிக்காரன் மாதிரி பெட்டியோட... முதல்ல கீழ இறக்குங்க."

பதறினாள் ஈர பாரதி.

"இருக்கட்டும் தாயி.. தம்பிதான் வீடுவரை தூக்கிட்டு வர முடியுமான்னு கேட்டுச்சு. ஒரு உபகாரம் தானே?" அவர் சாதாரணமாகச் சொல்ல, ராஜ்நாராயணும் பதறிப் போனான். ஒரு மணியக்காரரா இத்தனை தன்மையாகத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு எனக்கு உதவியது? -அவனுக்குள் ஆச்சரியமும் அதேசமயம் தவறு செய்து விட்ட பதற்றமும் கூட்டணி அமைத்துக் கொண்டு அவனை துவம்சம் செய்தன.

"சாரி சார்... வெரி சாரி. உங்களை நான் யாரோன்னு நினைச்சுட்டேன்" என்றபடியே சூட்கேசை அவரிடம் இருந்து வாங்கினான்.

"பரவால்ல தம்பி விடுங்க."

"ஐயையோ வேண்டாம். நான் தூக்கிட்டுப்போறேன்."

"மணியக்காரரே நீங்க விடுங்கோ. நான் பாத்துக் கறேன்" பாரதியும் பேசிப்பார்த்தாள். மணியக்காரர் விட வில்லை.

"எந்த உதவியையும் பாதியில விடக்கூடாது. முழுசா செய்து முடிக்கணும் அதுலையும் மரகதலிங்கம் புதூர்காரங்கன்னா சும்மாவா? அந்த சிவன் சாமியோட நேர்ல பேசறவங்களாச்சே" அவர் தன் கருத்தில் இறுதி யாகச் சொன்ன வரிகள் மட்டும் ராஜ்நாராயணுக்கு சிரிப்பை வரவழைத்துவிட்டது.

"என்ன தம்பி சிரிக்கீக.. சாமியாவது அதோட நேர்ல பேசறதாவதுன்னா?"

"ஆமாம் மணியக்காரரே... முதல்ல கடவுள்ங்கறவரே இருக்க முடியாதுங்கறது என் அபிப்ராயம். இதுல அவர் இருந்து அவரோட இந்த ஊர் காரங்க பேசறாங்கன்னா மத்தவங்க பேச மாட்டாங்களா... இல்ல மத்தவங்களோட அந்த கடவுள்தான் பேசமாட்டாரா? இப்படி எவ்வளவு கேள்விகள் இதுல இருக்குத் தெரியுமா?"

"மத்த ஊர்காரங்கள பத்தி தெரியாது தம்பி. எங்க ஊர் அந்த சிவனுக்காக உயிரை விட்ட ஊர். அதான் அந்த சிவனும் இந்த ஊர்னா தனிப்பாசம் காட்றான்."

"இது என்ன கதை?"

"அப்புறமா சாவகாசமா வாங்க. சொல்றேன்" என்று மணியக்காரர் முடிக்க, பட்டரின் வீடு வர சரியாக இருந்தது. பெட்டியை இறக்கி வைத்துவீட்டு அவரும் திரும்பினார். ஒரு நன்றிக்காக கூட காத்திருக்கவில்லை. அவனும் தன்னை மறந்து பார்த்தான். பவழ மல்லிக்கொடி பரவிக்கிடக்கும் ஓட்டுக்கூரை வீடுதான். கடப்பைக் கல் தாழ்வாரமும் நடுவில் முற்றமும், முற்றத்திற்கு மேல் திறப்பும் என்று அந்த நாளைய லட்சணங்கள் அந்த வீட்டில் அப்பட்டமாய் தெரிய உள்ளே அவனும் நுழைந் தான். பாரதி முந்திக்கொண்டு ஓடி பாவாடை தாவணிக்கு மாறத் தொடங்கியிருந்தாள். அத்தை அன்னபூரணி ஓடி வந்தாள். கன்னந்தொட்டு திருஷ்டி கழித்தவள், "உனக்கு இப்பவாவது இந்த அத்தையைப் பார்க்க வரணும்னு தோணித்தே" என்றாள். அவள் பின்னாலேயே இளையவள் சந்திரிகா. ஒன்பதாம் வகுப்புதான் படிக்கிறாள் என்றாலும் மார்பு பெருகிக் கிடந்து அவள் சிறுமி இல்லை, கன்னிப் பெண் என்றது. கன்னங்கரிய விழிகளால் தன் மாமன் மகனான ராஜ்நாராயணை மருகலோடு பார்த்தாள். அன்ன பூரணியோ அவனை பாயை விரித்து உட்கார வைத்து ஷேம நலன்களை விசாரிக்கத் தொடங்கி விட்டாள்.

"எப்படி இருக்கா அண்ணா... எப்படி இருக்கா மன்னி..."

"எல்லாரும் நன்னாருக்கா அத்தை."

"நீ எப்ப அமெரிக்கால இருந்து வந்தே?"

"நான் வந்து பத்து நாள் ஆறது."

"ஒரு மூணுமாசமானும் இருப்பியா?"

"நிச்சயமா..."

"இரு காபி போட்டு எடுத்துண்டு வரேன். அப்புறமா விஸ்தாரமா பேசலாம். உன் அத்திம்பேரும் உச்சிக்காலம் முடிஞ்சு வந்துடுவார்."

அன்னபூரணி மீண்டும் எழுந்து சமையல்கட்டுப்பக்கம் செல்லுமுன் பாரதியே காபி தம்ளரோடு வந்து கொண் டிருந்தாள்!

"அடிக்கள்ளி... அத்தான்னா உடனே வேகத்தைப் பாரு..."

-அன்னபூரணி பூரிக்க அவளும் காபியை நீட்ட அவனும் அதை வாங்கிக் குடிக்கத் தொடங்கினான். அப்படியே அந்த எளிய வீட்டினுள் பார்வையை ஓட விட்டான். சுவற்றில் ஒரு குதிரைப்பட காலண்டர். ஒரு வெள்ளைப்புரவி ஒன்று பாய்ச்சலுடன் ஓடுகிற மாதிரி... அதைப் பார்த்த நொடி அவனுக்குள்ளும் மாற்றங்கள்.

ஆயிரக்கணக்கான புரவிகள் திடீரென்று அவனுக்குள் பிடறி சிலிர்க்க ஓடத் தொடங்குகின்றன. புழுதிப் புயலில் அவனும் சிக்கித் திணறும் போது ஒரு புரவி சிவலிங்கம் ஒன்றை சங்கிலியில் கட்டி இழுத்து வந்தபடி இருக்கிறது.

அந்த லிங்கமும் அந்த புரவியின் பின்னே உருண்டு புரண்டு வர 'ஈஸ்வரா!' என்று ஒரு தீனக்குரல்!

காபித் தம்ளர் கை நழுவ தன்னையும் மறந்து அந்த நினைவுகளின் தாக்கத்தோடு ராஜ்நாராயணும் அல றினான். "ஈஸ்வரா!"

2

'சிவம் பற்றிய டாக்டர் விளாதிமீரின் ஆய்வு மிக விததியாசமானது. புராணங்களிலும், இதிகாசங் களிலும் சிவம் பற்றி சொன்னதை அவர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

லிங்க உருவம் பற்றி யாரும் சரியாக உணரவில்லை என்பதுதான் அவரது கருத்து.

ஒரு ரஷ்ய நாட்டுப் பிரஜையாக இருந்தாலும் சிவலிங்க சொரூபம் அவருக்குள் ஆழமான பாதிப்பு களை உருவாக்கியதாக அவர் கூறுகிறார்.

லிங்கம், சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணம் என்று கணித வடிவங்கள் அவ்வளவையும் தனக்குள் கொண்டிருப்பதாகவும், ஒவ்வொரு கோணத்தில் இருந்து பார்க்கும்போதும் ஒரு பொருள் தருவதாக வும் இருக்கிறது என்பது அவர் கருத்து. குறிப்பாக அணு தத்துவம் சிவலிங்க சொரூபத்துக்குள் விலா வரியாக இருக்கிறது. லிங்கத்தைப் பயன்படுத்தத் தெரிந்தால், அது மழை தரும், நெருப்புத் தரும், காற்று தரும் கேட்ட எல்லாம் தரும், என்றும் நம்புகிறார்.

-என்றால் சிவமாகிய லிங்க சொரூபம் என்பது, மானுடர்கள் பயன்படுத்தத் தெரியாமல் வைத்திருக்கும் மகத்தான ஒரு எந்திரமா?'

ராஜ்நாராயண் ஒரு வினாடி துடித்துப்போனான். முக மெல்லாம் வியர்க்க தடுமாறிக்கொண்டு அருகில் கிடந்த கட்டிலில் விழுந்தான். அது அத்தை அன்ன பூரணிக்கு மட்டுமல்ல, பாரதிக்கும், சந்திரிகாவுக்கும் கூட ஆச்சரிய மாகிவிட்டது.

பாரதி பதறிப்போய் அவனை நெருங்கி, "அத்தான், என்னாச்சு அத்தான்? என்னாச்சு?" என்று கேட்டு கை பிசைந்தாள்.

"ராஜா... என்னப்பா ஆச்சு? ஐயய்யோ, என்ன இப்படி தொப்பலா வேர்த்திருக்கு?" என்று அன்னபூரணியும் பதறினாள்.

"ஒண்ணுமில்ல அத்தை... கொஞ்சம் குடிக்க தண்ணீர் கொடுங்கோ" என்று அவனும் சுதாரிக்க, சந்திரிகா உள்ளே ஓடிப்போய் சிறிய மன்னார்குடி செம்பு நிறைய மரகதலிங்கபுரத்தின் ஊற்றுக்கிணற்று நீரை சிலுசிலு வென்று மொண்டு வந்து எதிரில் நீட்டினாள்.

வாங்கிக் குடித்தான்.

பனிமலை உச்சியில் ஒரு சிறிய நீர்ப்பிரவாகம் நூலளவு பருமனுடன் பீறிட்டு உருவாகி, அவன் வாயில் பாய்ந்து இறங்குவது போல அத்தனை தித்திப்பாயும் வாசனையோடும் இருந்தது அந்த ஜலம்!

அதேசமயம் காதோரமாய் சம்பந்தமே இல்லாதபடி உடுக்கை சத்தமும் கேட்டு அடங்கியது.

"என்ன ராஜா உடம்புக்கு?" -அத்தை விடவில்லை.

"என்னன்னு தெரியல அத்தே.. அந்த குதிரைப் படம் எனக்குள்ள ஒரு பிரளயத்தையே உருவாக்கிடுத்து. சில குதிரைகள் சிவலிங்கங்களை இழுத்துண்டு வர்ற மாதிரி யெல்லாம் ஒரு பிரமை. இப்ப இந்த ஜலத்தைக் குடிக் கும்போது காதுல உடுக்கை சப்தம் கேட்கறது, எல்லாமே வினோதமா இருக்கு."

"ஈஸ்வரா... நீ சொன்ன மாதிரியே தான் இந்த ஆத்துக்கு ஒரு தடவை வந்த தீட்சதர் ஒருத்தரும் சொன்னார். இந்த குதிரைப் படங்கள் இந்த காலத்தது இல்லை. பல நூறு வருஷத்துக்கு முந்தி இந்த ஊர் ஜமீன்தார் வெச்சிருந்ததாகவும் எங்க வம்சாவளியில

கோவில் பட்டரா இருந்த ஒருத்தருக்கு, அதாவது என்னோட மாமனாரோட மூதாதையர்கள்ல ஒருத்தருக்கு இதை ஜமீன்தார் கொடுத்ததாகவும் சொல்வர்."

அன்னபூரணி குதிரைப் படத்துக்கு ஒரு சரித்திர விளக்கம் தர, மீண்டும் அவன் பார்வை அதன்மேல் சென்றடங்கியது.

பாரதிக்கும் படபடப்பு கூடிக்கொண்டே போனது. அமெரிக்காவில் இருந்து வந்திருக்கும் அவன் குதூகலமாய் பேசி பவுடர், செண்ட், கால்குலேட்டர் என்று தந்து அசத்தப் போகிறான் என்கிற கற்பனை தவிடு பொடியாகி, அவனை ஒரு நோயாளி மாதிரி பார்க்க ஆரம்பித்தாள்.

"இட்ஸ் ஓ.கே. சம்திங் ஸ்ட்ரேஞ்ச்! நவ் ஐ ஆம் ஓ.கே... அப்புறம், அத்தை எப்படி இருக்கே?" அவனிடம் சுதாரிப்பு. தலையையும் உதறிக்கொண்டான்.

"நன்னாருக்கோம். உன் உத்தியோகமெல்லாம் எப்படி இருக்கு?"

"அதுக்கென்ன அத்தை... ஆமா அத்திம்பேர் இன்னுமா வரலை?" அவன் கேட்க, அவர் நுழையச் சரியாக இருந்தது.

பழைய டயர்களை அறுத்துச் செய்த செருப்பை உதறியபடி உள்ளே நுழைந்தவர் ராஜ்நாராயணைப் பார்த்து ஆச்சரியமானார்.

"அடடே... ராஜாவா வாவா... இப்பதான் வர வழி தெரிஞ்சுதாக்கும்?"

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்திம்பேர், எப்படி இருக்கேள் நீங்க?"

"எனக்கென்னப்பா... அந்த ஈஸ்வர க்ருபைல ஏதோ ஓடிண்டிருக்கு பொழப்பு."

பட்டர் இடுப்புத் துண்டைக் கருங்கல் தரையில் உதறிப்போட்டவராக காலை நீட்டி அமர்ந்தார். கமகம

வென்று அடுப்படியில் கொதிக்கும் வேப்பம்பூ ரசத்தின் வாசம் இடையிட ஒரு உறிஞ்சு உறிஞ்சியவர் அன்ன பூரணியைப் பார்த்து, "என்ன அன்னம், சமையல் ஆயிடுத்தா?" கேட்டார்.

"தோ... பத்து நிமிஷம். ரசம் கொதிச்சு முடிஞ்சா முடிஞ்சது."

"அப்படியே பாயசம் பண்ணு. அமெரிக்க மருமான் வந்துருக்கானோல்லியோ?

உற்சாகமாகப் பேசியவர் எதிரில் ராஜ்நாராயணும் அமெரிக்க சாமான்களை கடைபரப்ப ஆரம்பித்தான்.

"எனக்கு எதுக்குடாப்பா இதெல்லாம்?" என்று அவர் அன்பாக மறுக்க சந்திரிகாவும், பாரதியும் ஆசை ஆசையாக வாரிக் கொண்டனர்.

குறிப்பாக பாரதிக்கு அவன் வாங்கி வந்திருந்த மேக்கப் செட் படு காஸ்ட்லியாக இருந்தது .அதில் ரோஸ் பவுடரும், வெள்ளி ஜிகினாத் தூள்களும், ட்யுப் லிப்ஸ்டிக்கும் அவளைக் குதூகலப்படுத்தியிருந்தன.

மாராப்பு நழுவியது கூடத் தெரியாமல் அவைகளைத் தொட்டுப் பார்த்து உற்சாகத்தில் மூழ்கிப் போனாள். அந்த நொடியில் ராஜ்நாராயணும் வாலிபப் புயலால் தாக்கப்பட்ட மாதிரி ஆனான்

அமெரிக்க மண்ணில் ஓபன் செக்ஸ் கலாசாரத்தில் எவ்வளவோ பெண்களைப் பார்த்திருக்கிறான்.

ஆனால், பெரிதாக கிளுகிளுப்போ, பரவசமோ ஏற்பட்டதே இல்லை. அங்கேயே பல அழகான பெண்களைப் பார்க்க நேரும்போது அவர்களில் பாரதியைத்தான் பார்ப்பான்.

"ராஜா... நீ அமெரிக்காவுல இருந்து வரும்போது எவளையாவது இழுத்துண்டு வந்து, அம்மா நான் கல்யாணம் பண்ணிண்டுட்டேன்னு சொல்வேன்னுதான்

இங்க ரொம்ப பேர் சொல்றா! அப்படி எல்லாம் பண் ணி-ாதே. நீ பொறந்தப்பவே ராஜாதான் என் மாப்ளை. அவனுக்காகவே நான் ஒரு பொண்ணைப் பெத்துக் காட் றேன் பாருன்னு சொன்னவ உன் அத்தை அன்னபூரணி.

'சொன்ன மாதிரியே பாரதியையும் பெத்து நன்னா ஆசாரமா வளர்த்தியிருக்கா. கிராமத்துல படிச்சவளா இருந்தாலும் அவளோட கற்பூர புத்தி யாருக்கும் வராது.

'அவளும் உன்னையே நினைச்சுண்டு இருக்காங் கறதை மறந்துடாதே.'

ராஜ்நாராயணின் அம்மா கொடுக்கும் ஒவ்வொரு ஈமெயில் மெஸ்ஸேஜும் இப்படித்தான் இருக்கும்.

அதனாலோ என்னவோ பாரதி அவனக்குள் மகாரதி யாகவே படிந்துவிட்டாள். இப்பொழுது அந்த ரதியின் குதூகலம் அவனையும் குதூகலப்படுத்தும்போது இடையில் பட்டரின் குரல் சற்று அதட்டலாக ஒலிக்கத் தொடங்கியது.

"பாரதி... ஒழுங்கா உட்காரு. மூணாம் மனுஷா எதுர்க்க இப்படித்தான் வெட்கமில்லாம நடந்துக்கறதா?"

அவளும் முந்தானையை வேகமாக சரிசெய்து கொண்டு சற்று விதிர்த்துப்போனாள். பட்டர் பார்வை ராஜ்நாராயண் பக்கமும் திரும்பியது. அவன் முகத்தில் அவர் 'மூன்றவாது மனிதன்' என்று அவனைக் குறிப்பிட்டதன் எதிரொலிகள்.

தொடர்ந்து பட்டர் அதிர்ச்சியளிக்கத் தொடங்கினார்.

"அப்புறம் ராஜா... எவ்வளவு நாளைக்கு இங்க தங்கறதா உத்தேசம்?"

"ஒரு பத்து பதினைஞ்சு நாள் தங்கலாம்னு?"

"எவ்வளவு நாள் லீவு போட்டுட்டு வந்துருக்கே?"

"லீவு பிரச்னையில்ல அத்திம்பேர், ஆறுமாசம் கூட நான் இங்க தங்கலாம்."

"ரொம்ப சந்தோஷம். நானும் பாரதிக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சிருக்கேன். நல்ல இடமா அமைஞ்சுடுத்துன்னா நீயும் கல்யாணத்துல கலந்துக்கலாம்."

ராஜ்நாராயண் அதைக்கேட்டு விக்கித்துப்போனான். அவரை அதிர்ச்சி குறையாதபடி வெறித்தான்.

தொடர்ந்து பாரதியும் வேகமாக எழுந்து உள் ஓடுவது தெரிந்தது.

"என்ன பார்க்கறே... பாரதி கல்யாணத்துக்கு நீ கட்டாயம் இருக்கணும்."

"அத்திம்பேர்..."

"என்னப்பா... ஏன் ஒரு மாதிரி ஆயிடுத்து உன் மூஞ்சி?"

"என்ன அத்திம்பேர், நான் வந்துருக்கறதே பாரதியைக் கல்யாணம் பண்ணிக்கத்தானே?"

"அப்படியா... வேடிக்கையா இருக்கே" -பட்டர் சிரித்தபடியே கேட்ட விதத்தில் ஏராளமான ஏளனம்.

இடையில் உள்ளே பாரதி விசும்பி அழும் சப்தமும், அன்னபூரணி அவளைச் சமாதானப்படுத்தும் குரலும் கூட கேட்டது.

"என்ன அத்திம்பேர் இது... பாரதிக்கு நான், எனக்கு பாரதின்னு சின்ன வயசுலயே முடிவு பண்ணிட்டு இப்ப இப்படி மாத்தினா என்ன அர்த்தம்?"

ராஜ்நாராயண் குரல் உடைந்து போக கமறினான்.

"ஆமா உன் அம்மாவோ அப்பாவோ பாரதி விஷயமா எதுவுமே உன்னண்ட பேசலையா?"

பட்டர் அழுத்தமாய் உரிய இடைவெளிவிட்டு வார்த்தைகளை வெளியிட அவன் தலை கோவில் மாடு போல ஆடியது.

நடுவில் சரேலென்று சமையல் கட்டில் இருந்து வெளிப்பட்ட அன்னபூரணி, “அவன் இப்பத்தான் வந்துருக்கான். வந்து அரைமணி ஆகலை. அதுக்குள்ள அவன் மனசுல இப்படி நெருப்ப அள்ளிக் கொட்டணு மாக்கும்?” என்று படபடத்தாள்.

“இப்ப என்ன ஆயிடுத்துன்னு இப்படி அலட்றே? எப்ப இருந்தாலும் சொல்ல வேண்டிய விஷயம்தானே இது. ஆரம்பத்துலேயே சொல்லிட்டா ஒருத்தரோட ஒருத்தர் இழைய மாட்டாளோல்லியோ?”

“அத்திம்பேர்... என்னண்ட பேசுங்கோ, ஏன் இப்படி ஒரு முடிவு எடுத்தேள்?” ராஜ்நாரயண் அவரது தாவா கட்டையைப் பிடித்து திருப்பாத குறையாக அவரைப் பார்க்க, அவர் முகத்தில் பெருமூச்சு, அதன் முடிவில் உதடுகள் பிரிந்தன.

“ராஜா... இது நான் எடுத்த முடிவு இல்ல. அவளோட ஜாதகத்தால் வந்த முடிவு. கடுமையான செவ்வாய் தோஷ ஜாதகம் அவளோடது. உன் ஜாதகத்துலையும் சில ஆச்சரியமான விஷயங்களைப் பார்த்தேன்.”

பட்டர் பீடிகை போட்டார்.

“வேண்டாம்... அவன் ஜாதகம் சம்பந்தமா தீட்சிதர் சொன்னதை அவனண்ட சொல்லாதேள். அவன் ஆத்துக் குள் வந்த நிமிஷமே சிவலிங்கங்கள் அவனுக்குள்ற ஒரு பிரமையை உருவாக்கிடுத்து. அவன் வாழ வேண்டிய குழந்தை. தீட்சிதர் சொன்னதைச் சொல்லி, அவன் மனசை சலனப்படுத்திடாதேள்”

அன்னபூரணி பதறினாள். யார் அது தீட்சிதர்? அப்படி என்னதான் சொன்னார்? ராஜ்நாராயண், அவர் ஏதும் சொல்லும் முன்பே குழம்பிப் போக...

3

டாக்டர் விளாதிமீரின் சிவஸ்வரூப ஆராய்ச்சியில் ஒரு ஆச்சரியமூட்டும் தகவல் ஒன்றும் அவருக்குக் கிட்டியதாம். இந்த மண்ணில் பூமிக்கு மேலாக கண்ணுக்குத் தெரியும் விதத்தில் உள்ள லிங்க ஸ்வரூபங்கள் இல்லாமல் பூமிக்குள் புதைந்து கிடக்கும் ஸ்வரூபங்களும் ஏராளமாம்! அதுவே அவ்வப்போது ஸ்வயம்பு மூர்த்தியாய் வெளிப்படுகிறதாம்.

ஸ்வயம்பு மூர்த்தங்களின் பின்புலத்தில் பஞ்சபூத சக்திகளின் இயக்கம் ஒரு சீராகவும், ஆச்சரியம் ஊட்டும் விதத்தில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த கூட்டுறவோடும் செயல்படுகிறதாம்.

சுருக்கமாகச் சொன்னால், அந்த மூர்த்தங்களைப் பஞ்ச பூதங்கள் ஆராதிக்கின்றன என்பதே உண்மை என்கிறார்.

இப்படிப்பட்ட ஆராதனைக்குரிய இடங்களில் கூர்ந்து கவனித்தபோது பஞ்ச பூதங்களும் சம அளவிலும் அத்துடன் சீரான இயக்கத்துடனும் அவை இருக்கின்றன. மனித சரீரத்திலும் பஞ்ச பூதங்கள் உள்ளன. இவை சுயம்புலிங்க ஸ்தலங்களில் இயற்கையோடு கூடிச் செயல்படுகின்றன என்கிறார்.

அதாவது சுயம்பு மூர்த்தி உள்ள ஸ்தலங்களில் வாழும் மனிதர்களே அந்த மண்ணுக்கான மழை, காற்று, அக்னி மண்வளம் ஆகியவைகளைத் தீர்மானிக்கிறார்கள் என்று கூறும் விளாதிமீர், மதுரை போன்ற சுயம்புலிங்க ஸ்தலங்களில் கூடுதலான மழை அல்லது குறைவான மழைக்கு அங்கு வாழும் மக்களின் மனநிலையே காரணமாகிறது என்கிறார். சுயம்பு லிங்கங்கள் உள்ள மண்ணில் வாழும் மக்கள்

மனது வைத்தால் அங்கே எதை வேண்டுமானாலும் உருவாக்கிட இயலும் என்றும் கூறுகிறார்!'

அன்னபூரணியும் பட்டரும் பேசிக்கொள்வது ராஜ்நாராயணைக் குழப்பிற்று. தான் குதிரைகள் ஓடும் காலண்டர் போன்ற அந்த நாளைய ஓவியப் படத்தைப் பார்த்துவிட்டு ஈஸ்வரா என்று அலறியதற்கும் தீட்சிதர் என்று இவர்கள் இருவரும் குறிப்பிடும் யாரோ ஒருவர் சொன்னதற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அதை பாரதியும் பார்த்தபடி ஒரு சிலை போல நின்று கொண்டிருந்தாள்.

பட்டரும் அன்னபூரணியால் தடுக்கப்பட்டு அதற்கு மேல் எதுவும் பேசாமல் அமைதியானார்.

"ராஜா... நீ அத்திம்பேர் சொல்லிட்டாரேன்னு வருத்தப் படாதே. வந்ததும் வராததுமா உன்னை ஜாதகம் தோஷம்னு சொல்லி சங்கடப்படுத்திட்டோம். நீ அதை எல்லாம் மறந்துடு. எழுந்திரு. போய்க் குளிச்சுட்டு வா. சாப்பிடலாம்" என்று அன்னபூரணி அவனைச் சமாதானப் படுத்த முயன்றாள்.

"என்ன அத்தை நீ... என் மனசுல நெருப்பை அள்ளிக் கொட்டிட்டு சாதாரணமா போய்க் குளிச்சுட்டு வாங்கறே. இதோ பார் அத்தே... நான் இங்க வந்திருக்கறதே பாரதிக்காகத்தான். நீங்கள்ளாமும் எனக்கு அப்புறம்தான். ஜாதகம் தோஷம், அப்புறம் தீட்சிதர்ங்கறவர் என்னத்தையோ சொன்னார்னு உங்களுக்குள்ள ரகசியமா நீங்க பேசிண்டா என்ன அர்த்தம்?"

ராஜ்நாராயண் குழம்பினாலும் எதிர்க்கேள்வியை தீர்க்கமாகவே கேட்டான். பட்டர் பதிலுக்கு அன்னபூரணியைத்தான் முறைத்தார்.

"என்னைப் பார்த்தா என்ன அர்த்தம்னா? அவன் இந்தக் காலத்துப் பிள்ளை. நீங்களே பதில் சொல்லுங்கோ."

"சொல்றேன். இதோ பாருப்பா. நீ இப்படி வெளிப்படையா பேசினது குறிச்சு ரொம்ப சந்தோஷம். நீ என் மாப்ளையா கிடைக்க நான் கொடுத்து வெச்சிருக்கணும். நல்ல படிப்பு, உத்யோகம், சம்பாத்யம்னு எதிலேயும் உனக்குக் குறை கிடையாது. லட்சணமாகவும் இருக்கே. அதோட ரத்த உறவுக்குள்ளேயும் அடங்கறே. இருந்தாலும் இது எல்லாத்தையும் விட பெரிசு உனக்கும் என் பொண்ணுக்குமான ஜாதகம். அது பொருந்திப் போகணும். அப்படிப் போகலைன்னா எது இருந்தும் பிரயோஜனமில்லை. உடம்பு எவ்வளவு திடகாத்திரமா இருந்தாலும் இரண்டு கண்ணும் நொள்ளையாப் போயிட்டா என்ன பிரயோஜனம்? சொல்லு பார்ப்போம். ஜாதகம் பொருந்தலேன்னாலும் அப்படித்தான். வாழ்க்கைக் குருடாப் போயிடும்"

"அப்ப எங்களுக்குப் பகை நீங்க இல்ல. ஜாதகம்தான் அப்படித்தானே?'

"நிச்சயமா."

"அப்ப ஜாதகம்தான் ஒரு மனுஷனுக்கு ரொம்ப முக்கியமா?"

"இல்லையா பின்னே?"

"இதெல்லாம் என்னன்னே தெரியாம அமெரிக்காவிலையும் ஐரோப்பியாவிலையும் கோடிக்கணக்கான பேர் இருக்கா. அவாள்லாம் கல்யாணம் பண்ணிக்கலையா? வாழலையா?"

"இதோ பார் ராஜா... நீ இப்ப நாஸ்திகன் மாதிரிப் பேசறே? நாஸ்திகன்கறவன் கண்ணாலப் பாக்கறதையும், காதால கேக்கறதையும் மட்டும் நம்பற நம்பிக்கைக்

குறைவான ஒருவன். ஆனா, ஆஸ்திகன் அப்படிக் கிடையாது. அவன் தன் புலன்களால உணர முடியாத நிலையில் உள்ள பிரபஞ்ச சக்தியை மதிச்சு நடக்கற ஒருத்தன். நம்ம கைல எதுவும் கிடையாது. எல்லாமே ஈஸ்வரனோட செயல்னு நினைக்கற நம்பிக்கை மிகுந்த ஒருத்தன்தான் ஆஸ்திகன். நான் அந்த ஜாதி. ஆகையால தயவு செய்து என்னண்ட விதண்டாவாதம் பண்ணாம என் பேச்சைக் கேள். கேட்கலைன்னா அப்புறம் உன் சவுகர்யம். ஆனா ஒண்ணு... பாரதி உனக்குக் கெடையாது. இந்த ஜென்மால அவ உனக்கு பொண்டாட்டியாக முடியாது. அந்த நினைப்போட அவளைப் பாக்கறதை விட்டுடு. நேத்துவரை இது தெரியாம நீ ஆசையை வளத்துண்டு இருந்தா அதை இப்பவே மாத்திக்கோ. இதுக்கு மேல இந்த விஷயத்தைப் போட்டு பீராய வேண்டாம். என்னடா வந்ததும் வராததுமா இதைச் சொல்றேனேன்னு நினைச்சுடாதே. இந்த மாதிரி விஷயத்துல துளியும் தாமதிக்கக் கூடாது. அதான் போட்டு உடைச்சிட்டேன். தயவு செய்து என்னை மன்னிச்சுடு."

பட்டர் பேசி முடித்தவராய் எழுந்தார். கொல்லைப் புறமாய் நடந்தார். அங்கே சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் நிரம்பிக் கிடந்தது. அதை மன்னார்குடி சொம்பால் மொண்டு கால்களைக் கழுவிக் கொண்டவர் இடுப்பு உத்தரியத்தால் (துண்டு) துடைத்துக் கொண்டே திரும்ப உள்ளே வந்தார்.

ராஜ்நாராயண் கிட்டத்தட்ட ஒரு பொம்மை போல ஆகி உத்தரத்தில் சிலந்தி ஒன்று பின்னியிருந்த வலையின் மேலேயே கண்ணாய் இருந்தான்.

பாரதி விசும்பி அழும் சத்தமும் அதை கண் கொட்டாமல் வேடிக்கைப் பார்ப்பவளாய் சந்திரிகாவும், அன்னபூரணியும் இருந்தனர்.

உள்ளே வந்த பட்டர், "அன்னம் பசிக்கிறது. இலையைப் போடு" என்று சாப்பிட அமர்ந்தார். அன்ன பூரணி ராஜ்நாராயண் பக்கம் பார்த்து, "ராஜா நீயும் கை கால் அலம்பிண்டு வா சாப்பிடலாம்" என்றாள்.

"இல்ல அத்தே.... எனக்குப் பசிக்கலை" என்றவன், தான் கொண்டு வந்திருந்த ராட்சஸ சூட்கேசைப் பார்த்தான். மளமளவென்று அதைத் திறந்தவன், அதில் இருந்த பல பொருள்களை எடுத்து வெளியே போட்டான். கேமிரா, கேசட், சாக்லேட் பாக்ஸ் என்று என்னென்னவெல்லாமோ அவன் வெளியே எடுத்துப்போட்டதில் கிடந்தன.

திரும்பப் பெட்டியை மூடியவன், அதைத் தூக்கிக் கொண்டு, "அப்ப நான் கிளம்பறேன் அத்தே" என்று கூறியபடி நடக்க ஆரம்பித்தான்.

"ராஜா... நில்லு..." அலறினாள் அன்னபூரணி.

"இல்ல அத்தே... இனி என்னால இங்க இருக்க முடியாது. அத்திம்பேர் சொன்ன மாதிரி பாரதியையும் என்னால நினைக்காம முடியாது. ஆகையால நான் கிளம்பறதுதான் உங்களுக்கு நல்லது. வரேன்."

மளமளவென்று நடக்க ஆரம்பித்துவிட்டான் அவன்

"டேய்... ஒரு வா சாப்பிட்டுட்டுப்போ. சொன்னா கேளு..." அன்னபூரணி கத்திக்கொண்டே பின்னால் ஓடினாள்.

இப்ப உனக்குத் திருப்திதானே? என்பது போல சந்திரிகா பட்டரைப் பார்த்தாள்.

அவரிடம் எந்த சலனமும் இல்லை.

"என்ன பாக்கறே... அவன் சொல்றதுதான் சரி. அவனால இங்க இருக்க முடியாதுதான். இருக்கறதும் நல்லதில்ல... நீ சோத்தப்போடு..."

அவர் சந்திரிகாவைப் பார்த்துச் சொலல அவள் தொடர்ந்து வெறிக்க அன்னபூரணியோ ராஜ்நாராயண ஸின்றி திரும்பி வந்தாள்.

முகம் பொங்கி வழிந்த பொங்கல் பானைபோலச் சிவந்து போயிருந்தது.

பாரதி தொடர்ந்து விசும்பிக் கொண்டே இருந்தாள்.

✠ ✠ ✠

"ஓட்றா... ஓட்றா என் சின்னக் கொம்பா
நீ ஓடாட்டி வருமோ பாலும் சொம்பு சொம்பா?
பார்ரா பார்ரா அங்க பச்சக்காடு
பசிதீர வயிறார நீயும் அள்ளிப் போடு..."

வரதப்பன் என்னும் மாட்டுக்காரன் பாடிக் கொண்டே மாடு மேய்த்தபடி இருந்தான். அறுவடையான வய்ல் காட்டில் மாடுகள் ஊடு பயிர்த் தழைகளைத் தேடித் தேடிக் கரித்துக் கொண்டிருந்தன.

'கிணிங் கிணிங்' கழுத்து மணிச் சத்தம் வேறு அவன் பாட்டோடு சேர்ந்து கல்வையாக அந்த பிராந்தியத்தில் ஒலித்தபடி இருந்தது.

அறுவடை வயலை ஒட்டி பெரிதாய் ஒரு புளிய மரம். புளியமரத்தை முத்தமிட்டுக் கொண்டு வளைந்து செல் லும் மரகதலிங்கபுரத்துக்கான பிரதான சாலை.

சாலை மேல் சூட்கேசை சுமக்க மாட்டாமல் சுமந்தபடி வந்து கொண்டிருந்தான் ராஜ்நாரயண்! சுவற்றிலடித்த பந்தைவிட வேகமாய் இப்படித் திரும்ப வேண்டியிருக்கும் என்று அவன் நினைத்துக் கூட பார்த்திருக்கமாட்டான்.

நல்லவேளை...! பெட்டி முன்போல அவ்வளவு கனக்காமல் அவனுக்கு உதவிக் கொண்டிருந்தது. புளிய மரத்தடிக்கு வந்தவன், அங்கிருக்கும் சுமைதாங்கிக் கல்லை ஆச்சரியமாகப் பார்த்தான். இரண்டு கருங்கல்

கால்கள், கழுத்து உயரத்தில் அதன்மேல் படுக்கை வாக்கில் ஒரு கல். அத்தனை உயரத்தில் இருக்கும் கல் மேல் எப்படி ஏறி அமர்வது என்கிற கேள்வி அவனுக்குள் ஓடி 'சரியான முட்டாப் பசங்க... இப்படியா கழுத்து உயரத்துக்கு போடுவாங்க' என்று அவனை முனங்க விடும்போது தலை கொள்ளாத அறுவடைக் கதிர்களோடு வந்த ஒருத்தி அந்த கல் மேல் கட்டை அழகாக இறக்கி விட்டு கழுத்தைச் சுற்றி ஓடிய வியர்வையையும் ஒத்திக் கொண்டாள்.

ரவிக்கை தரித்திராதபடி சேலையாலேயே மார்பை மூடியிருந்தாள். உழைக்கும் வர்க்கத்துக் கருமை உடம்பு முழுக்கப் பரவியிருந்தது. இருந்தும் ரசனையை ஒரு கிள்ளு கிள்ளும் அழகியாகவே அவள் தெரிய, ராஜ்நாரா யண் அப்போதுதான் அது சுமைதாங்கிக் கல், மனிதர்கள் அமர்வதற்கானதல்ல என்று புரிந்து கொண்டான். இது கூடத் தெரியாமல் சற்றுமுன் சலித்துக் கண்டு திட்டிய தற்காக அவன் மனதே அவனைக் கேலி செய்தபோது அவளும் பார்த்தாள்.

ஊடே வயலில் மேயும் மாடுகளின் கழுத்து மணிச் சப்தம்.

"சாமி ஆரு... ஊருக்கு புதுசா?"

"ஆமாம்..."

"பொட்டியும் கையுமா நிக்கிறீகளே... காருக்காகவா?"

"காரா... இல்லையில்லை, ஏதாவது பஸ் வராதான்னு நிக்கறேன்."

"அதேங்... நானும் அதத்தானே சொன்னேன். இப்ப ஏது பஸ்சும் காரும்?"

"என்ன சொல்றே நீ?"

"இனி நாளை கால ஏழுமணிக்குத்தான் காரு. தெரியாதா?"

"அப்படியா...?" -ராஜ்நாராயண் முகத்தில் சன்னமான அதிர்ச்சியும் ஏமாற்றமும் ஒரு ஓட்டம் ஓடத் தொடங்கின.

"ஆமா ஆரு ஊட்டுக்கு வந்தீக... அவுக யாரும் இப்ப காரு இலலேன்னு உங்களாண்ட சொல்லலியா?"

-அவள் வெள்ளந்தியாக கேட்க அவன் தலை மறுப்பாக ஆடியது.

'இப்போது என்ன செய்வது?'

அவனுக்குள் குழப்பம். அதேவேளையில் பாட்டு வாயும் தட்டுக்குச்சியுமாக மாடு மேய்த்துக் கொண்டிருந்த வரதப்பன் அவர்களை நோக்கி வரப்பைத் தாண்டிக் குதித்து ஓடி வந்தவனாக அந்த பெண்ணையும், ராஜ் நாராயணையும் பார்த்து பெருமூச்சுவிட்டபடி, "ஆரு காத் தாயி இது?" என்றான் முதலில். அவளோ, "நீயே கேளு... எனக்கு என்னா தெரியும்?" என்றாள் பட்டென்று.

"அது சரி, யாரா இருந்தா நமக்கென்னா... ஆமா என் லட்சுமி மாட்டைப் பாத்தியா?" என்றான் வேகமாக...

"இல்லியே..."

"பாழாப்போன இந்த மாட்டோட பெரிய ரவுசாப் போச்சு. ஒருநா கூட கூட்டத்தோட சேர்ந்து மேய மாட் டேங்குது. எங்கிட்டாசும் ஓடிடுது." -என்றவன் பார்வை நாலாபக்கமும் சுழன்றது.

நல்லவேளை, அவன் தேடலில் லட்சுமிப் பசுவும் கண்ணில்பட்டது. ஆனால் அது வடதிசையில் ஊரின் இடிந்த சிவன் கோவிலுக்குள் சுதைந்த மதில் தாண்டி நுழைந்து கொண்டிருந்தது.

"அடக் கெரகமே... நீ நுழைய அந்த கோயில்தானா கிடைச்சுது. இரு வரேன்..." -பின்னேயே ஓடினான் வரதப்பன்.

அவளும் அதைக் கேட்டு மிரண்டது போல, "ஓடு... அங்க சாரையும் நல்ல பாம்புமா கிடக்கு. கடிச்சு வெச்சா அம்புட்டுதான்..." என்றாள்.

ராஜ்நாராயணுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

அவனும் அந்த இடிந்த கோவிலைப் பார்த்தான். சிதிலமான கோபுரம், கோபுரத்திலும் அரசஞ்செடிகள், கோபுர உச்சியில் கழுத்தில் துளியும் முடியில்லாத கூரிய மூக்கையுடைய கழுகு ஒன்று!

வரதப்பன் கோவிலுக்குள் கூக்குரலோடு நுழையும் போது அது வேகமாய் எகிறி வானில் வட்டமிட்டபடி பறக்க, அந்தக் காட்சியே ராஜ்நாராயணை என்னவோ செய்தது. அதேசமயம் மனதிற்குள் திடுமென்று நூற்றுக் கணக்கான புரவிகளின் பாய்ச்சல்.

அதில் ஒரு புரவி முதுகு மேல் ஒருவன் சிறிய தங்கச் சிவலிங்கம் ஒன்றை அணைத்தபடி அமர்ந்திருக்க புரவிக் கூட்டமும் அந்தக் கோவிலுக்குள் திபுதிபுவென்று நுழைகிறது.

எங்கும் ஒரே புழுதி!

மனக்கண்ணில் திரையிடப்பட்டது போல தோன்றிய அந்தக் காட்சியும் புழுதியும் ஓடிய வேகத்தில் அழையும் போது 'ஆ' என்கிற ஒரு பேரலறல். இடிந்த கோவிலுக்குள் இருந்துதான் வெளிப்பட்டது!

4

'இந்த பூமியானது சூரியன் உதிர்த்த ஒரு சிறிய அக்னித் துளி என்கிறது விஞ்ஞானம். மெல்லக் குளிர்ந்த இதில் அடுக்கடுக்காய் உயி ரினங்கள் தோன்ற ஆரம்பித்தன. அந்த உயிரினங் கள் உயிர் வாழத் தேவையான அனைத்தும் கூட அப்போது தோன்றின. இதுதான் பல கோடி ஆண்டு களைக் கண்டு விட்ட இந்த பூமியின் சுருக்கமான வரலாறு.

மாற்றம் என்பதே இந்தப் பூமியில் மாறாத ஒன்றாக என்றும் இருப்பது. அந்த மாற்றங்களால் வந்ததே இந்த மனித சமூகம். கூன் விழுந்த, கொத்துக் கொத்தான முடி கொண்ட, ஏழு எட்டு அடிக்குக் குறையாத உயரம் கொண்ட குறைந்த பட்சம் நூற்றைம்பது கிலோ எடையுடன் தொடங்கியதுதான் சராசரி மனிதனின் உடலமைப்பு.

இன்று அவன் சராசரியாக ஐந்தரை அடி உயரம், எண்பது கிலோ நிறை, நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை என்று மாறியிருக்கிறான். பல ஆயிரம் ஆண்டுகளாக இந்நிலையில் பெரிய மாற்றம் ஏதுமில்லை. ஆனாலும் காலப்போக்கில் இவன் மேலும் குட்டையாகி சுண்டிச் சுருங்கி வினோதமான முக அமைப்பை எல்லாம் பெற்று, ஒரு பெருச்சாளி போல் நிலப்பரப்பைக் குடைந்து அதனுள் ஊர்ந்து சென்று பதுங்கி வாழும் காலம் வரலாம் என்பதெல்லாம் விஞ்ஞான அனுமானங்கள். இந்த அனுமானங்களுக்கு அடிப்படை இந்த பூமியில் கிடைக்கும் பலவித ஆதாரங்களும், மனித மனத்தின் ஊகம் செய்து பார்க்கும் சக்தியுமே!

இதன் நடுவே மிக மாறுபட்ட கருத்துக்களுடன், நமக்கிருக்கும் அறிவாற்றலால் நம்பமுடியவில்லை என்று ஒரு வார்த்தையில் கூறும் விதமாய் இருப்பதே மதப் புராணங்கள். இதில் புராணவழி அறியப்பட்ட சிவமானது தனித்து நிற்கிறது. புராணம், விஞ்ஞானம் இரண்டையும் கடந்து மூன்றாவதாய் ஒன்றும் உள்ளது. அதுதான் நான்! மானுடமே முடிந்தால் என்னைப் புரிந்துகொள் என்பதுபோல் இருக்கிறது அது என்கிறார் டாக்டர் விளாதிமீர்!'

கோவிலில் இருந்து கேட்ட சப்தம் ராஜ்நாராயணையும் காத்தாயி என்கிற அந்தப் பெண்ணையும் கட்டி இழுத்தது.

இருவரும் ஓடினார்கள்!

காத்தாயி அச்சத்துடன் கோவிலுக்கு வெளியே நின்று கொண்டு குரல் கொடுத்தாள். "வரதப்பா... என்ன ஆச்சு? ஏன் கத்துனே?"

ராஜ்நாராயண் அப்படிச் செய்யாமல் மதில் தாண்டி தன் கட்ஷூக் கால்களுடன் நடக்கத் தொடங்கினான். காலடியில் ஏராளமான நெருஞ்சி முட்கள். எவருடைய தயவுமின்றி வளர்ந்துவிட்ட காட்டுச் செடிகள். அங்கங்கே காற்று, மழையால் இடிந்து விழுந்ததுபோல் கிடக்கும் கோவிலின் கல்தூண்கள். அதில் ரசிக்கும்படியான சிற்பங்கள். சில இடங்களில் லிங்கம் இல்லாத அடிப்பாக ஆவுடையார் ஸ்தம்பமும், லிங்கம் இருக்க வேண்டிய இடத்தில் மழைநீர் தேங்கியிருக்க, அதில் பச்சை நிறத்தில் தவளைகளும் இருந்து ராஜ்நாராயணைப் பார்த்தன.

ஊன்றிப் பார்த்தபடி தொடரும் ராஜ்நாராயணுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே லட்சுமிப் பசு ஒரு ஓரமாய் நின்றபடி இருக்க, வரதப்பனின் கழுத்தை ஒரு நல்ல பாம்பு சிவபெருமான் கழுத்துப் பாம்புபோல வளைத்துக் கொண்டு கம்பீரமாக படம் எடுத்திருந்தது.

'ஹக்!'

ராஜ்நாராயணின் ரத்தத்தில் ஷண நேரத்தில் ஒரு ஜில்லிப்பு பரவி உடம்பிலும் அதனால் சொல்ல முடியாத மாற்றங்கள். வரதப்பன் மிரள மிரள விழித்தபடி அந்த பாம்பை எடுத்து விடும் வழி தெரியாதவனாக நின்று கொண்டு ராஜ்நாராயணைப் பார்த்தான். பாம்பிடம் கடிகாரப் பெண்டுலம் போல... இட வல ஆட்டம் சிறிய பேரபோலா வாயில் இருந்து காற்றின் சீற்றம்.

"சார்ர்ர்... என்னை எப்படியாவது காப்பாத்துங்க சார்" வரதப்பன் மிகமிக சன்னமான குரலில் முனங்கினான்.

"தைரியமா இருங்க... தைரியமா இருங்க" என்ற ராஜ்நாராயணும் அடுத்து என்ன செய்யலாம் என்கிற

யோசனையில் இருக்கும்போது பின்னாலேயே யாரோ வரும் அரவம் கேட்டது. திரும்பினான்!

பஞ்சகச்சம் உடுத்தி, பட்டை விபூதி தரித்த நிலையில் பிராமணர் ஒருவர்! கட்டுக் குடுமி, காதில் சிவப்புக் கல் கடுக்கன். படுதீர்க்கமான நாசி, தாடையில் ஒரு மூன்று மாத கால அளவிலான தாடி. கழுத்தில் ஒரு ஒற்றை ருத்திராட்சக் கயிறு.

அவரைப் பார்க்கவும் "சாமீமீ" என்றது வரதப்பனின் உதடுகள்.

"பயப்படாதே... தைரியமா இரு" என்ற அந்த பிராமணர், மிக நிதானமாக அவன் எதிரில் போய் நின்றார். சீறும் பாம்பையே வெறித்துப் பார்த்தார். உதட்டில் ஏதோ மந்திர உச்சாடன முணுமுணுப்பு. அதன் தொடர்ச்சியில் இடுப்பு மடிப்பில் இருந்து ஒரு திருநீற்றுப் பையை எடுத்தவர், திருநீற்றை அள்ளி அந்தப் பாம்பின் மேல் வீசிக் கொட்டினார். அடுத்த ஷணம் அது 'இனி நான் உங்கள் வம்புக்கே வரமாட்டேன்' என்கிறாற்போல் அவன் உடம்பில் இருந்து வளைத்த பிடியை விலக்கிக் கொண்டு தரை இறங்கியது. அப்படியே பக்கவாட்டில் ஓடி காணாமலும் போயிற்று!

வரதப்பன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். "சாமீமீ சமயத்துக்கு வந்தீங்க" என்றபடி அந்த நெருஞ்சி முள் தரையிலும் அவர் காலில் பொதேல் என்று விழுந்தான்.

"எழுந்திருடா இங்க எதுக்குடா வந்தே? அறிவில்ல உனக்கு" அவரிடமிருந்து அதட்டல்.

"நான் எங்க சாமி வந்தேன். தா இந்த மாடால வந்த வினை" என்றபடியே தள்ளி நின்ற மாட்டை எட்டிப் பிடித்தான்.

"சரி... சரி... நடங்கோ... சிவாக்ரம பூமி இது. நல்ல வேளை அந்த சர்பம் என் கோளறு பதிகத்துக்கு கட்டுப் பட்டு உன்னை விட்டது. இல்லேன்னா நீ இத்தனை

நாழி ஆகாசத்துல ஆயிரம் நாழிகை தூரம்னா போயிருப்பே?"

-எதனாலோ அவர் பதில் ராஜ்நாராயணுக்கு சிரிப்பைத் தந்தது. சற்று அவர் பார்க்கும்படியாக க்ளுக் என்கிற சப்தத்துடன் சிரித்துவிட்டான். அவரும் வெளியே வந்தபடியே அவனைப் பார்த்தார்.

"அம்பி யாரு?"

"என் பேரு ராஜ்நாராயண். ஸ்டேட்ஸ்ல இருந்து வந்திருக்கேன். நீங்க யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"பரவால்ல எனக்கான பதிலோட ஒரு கேள்வியையும் கேட்டுட்டே. ஆமா, எதுக்கு சிரிச்ச?"

"அது... அது..."

"சும்மா சொல்லு..." அவர் கேட்க வரதப்பன் மாட்டோடு,

"அப்ப நான் உத்தரவு வாங்கிக்கறேன் சாமீ" என்றபடி இடை வெட்டினான்.

'உம்' கொட்டிய அவர் திரும்பவும் ராஜ்நாராயணைப் பார்க்க, "சாமீ, தம்பி பாக்கத்தான் வாட்ட சாட்டம். ஆனா உடம்பு பூரா பயம்" என்று ஒரு குரல் மீண்டும் கேட்க, திரும்பினார். இப்போது பேசியது காத்தாயி.

"நீ எங்க வந்தஇங்க?"

"நானும் இவரும்தானே ஓடியாந்தோம். ஆனா பாம்ப கழுத்து மேலப் பார்த்துட்டு இது விக்கிப்போய்ல நின்னுடிச்சு. நல்ல வேளை நீங்க வந்தீங்க. இல்லாட்டி இங்க இப்ப ரெண்டு பொணம்ல கிடந்திருக்கும்?"

"சரி, நீ கிளம்பு. நான் பேசிக்கறேன்" அவர் சொல்ல, அவள் அகன்றாள்.

"நில்லு" -நின்று திரும்பினாள்.

"அவசரப்பட்டு இனிமே இப்படி அதிகப்பிரசங்கித் தனமா பேசப்படாது போ."

அவள் குட்டுப்பட்ட மாதிரி முகம்மாற திரும்பி நடந்தாள்.

அவர் பார்வை மீண்டும் ராஜ்நாராயண் மேல்.

"சொல்லுப்பா ராஜ்நாராயணா... இந்த மரகதலிங்க புரத்துக்கு எதுக்கு வந்தே?"

மிக நைச்சியமாக நெடுநாள் பழகியவராட்டம் கேட்க, அவனும் வாயைத் திறக்கும்போது அடுத்த இடையூறாக அருகில் உள்ள தாழ்வான மரக்கிளை மேல்,அது வரை வட்டமடித்துக் கொண்டிருந்த கோபுரத்துக் கழுகு அவர் எதிரிலேயே வந்து அமர்ந்தது.

அதைப் பார்க்கவும் ராஜ்நாராயண் பேசத் தொடங்கிய தைக் கவனிக்காதபடி அதன் அருகே சென்றவர், "என்னடா வீர்யா... எங்க வந்தே? உனக்கு நான் ஒண்ணும் கொண்டு வரலை இன்னிக்கு" என்றார்.

அது பதிலுக்கு தன் அலகால் சிறகுகளுக்குள் ஒரு உரசல் நிகழ்த்தி விட்டு திரும்ப அவரைப் பார்த்தது.

"நீ கிளம்பு. சாயரட்சை யாயிடுத்து பார். நான் உனக்கு செத்தக் கழிச்சு ஆகாரம் கொண்டு வரேன்" என்று அவர் தொடரவும் அடுத்த வினாடி அது அந்த மரக்கிளையில் இருந்து எம்பிப் பறந்து வானில் ஏறத் தொடங்கியது.

ராஜ்நாராயண் இந்த முறை வியந்துபோய் அந்தக் கழுகையே பார்த்தபடி இருந்தான்.

"அம்பி... என்ன பாக்கறே?"

"எல்லாமே ஒரே ஆச்சரியமாயிருக்கு. நீங்க யார்? பாம்பு கழுகெல்லாம் உங்க பேச்சைக் கேக்கறதே. உங்களுக்கு பிளாக் மேஜிக் ஏதாவது தெரியுமா?"

அவர் சிரித்தார். சிரித்தபடியே, "எல்லாம் பழக்கம்பா நீயும் அன்பா பழகினா ஊர்ந்துபோற பல்லிகூட நம்ப கிட்ட பதில் அன்பு காட்டும். சரி சொல்லு, நீ எங்க இந்த ஊருக்கு வந்தே?"

அதான் சொன்னேனே. என் பெயர் ராஜ்நாராயண். இந்த ஊர் கோவில் பட்டர் வைத்யநாதய்யரோட மருமான் நான். அன்னபூரணி எனக்கு அத்தையாகணும்."

"அட, நீ நம்ம வைத்தியோட மருமானா?"

"ஆமாம்... வந்தேன். அவாளைப் பார்த்தேன். கிளம்பிட்டேன்."

"அப்ப நீதான் பாரதிக்கு முறைப் பையன்னு சொல்லு."

"அப்படித்தான் நினைச்சுண்டு இருந்தேன். ஆனால் இப்ப அப்படி இல்லைன்னு ஆயிடுத்து" அவன் குரலில் சுருதி குறைந்து போனது.

"ஏன் என்ன சொன்னான் வைத்தி?"

"என்னென்னவோ சொன்னார். ஜாதகம் பொருந்தலையாம். தோஷமாம்! கூடவே யாரோ ஒரு தீட்சிதர் ஒருத்தர் இன்னும் என்னத்தையோ சொல்லி வெச்சிருக்கார். இந்த மண்ணுல சினிமாலதான் காதல் ஜெயிக்கிறது. ஒருக்கால் அது சங்கடப்பட்டாலும் அதைக் காப்பாத்த ஒரு கேரக்டர் எங்கிருந்தாவது வந்துட்றது.

'ஆனா, நிஜ வாழ்க்கைல காதல் மட்டுமில்ல, சொந்தத்துல கல்யாணம் பண்ணிக்கறதுல கூட ஜாதகம், ஜோசியம்னு ஆயிரம் இடைஞ்சல்கள்."

அவன் பதிலில் வருத்தம் பொங்கி வழிந்தது. இருவரும் ஊர்ப்பாதையில் நடந்து புளிய மரத்தடியில் அவன் வைத்துவிட்டு வந்திருந்திருந்த சூட்கேசைப் பார்த்தபடியே நடந்து கொண்டிருந்தனர். அவர், அவன்

பேச்சால் எகத்தாளமான ஒரு சிரிப்புக்கு உள்ளாகி யிருக்கிறார்.

"என்ன சிரிக்கறேள்... என் நிலை உங்களுக்குச் சிரிப்பா இருக்கா?" அவன் திருப்பிக் கேட்டான்.

"இல்ல அம்பி... இது அந்த காலத்தை நினைச்சு நான் சிரிக்கற சிரிப்பு. இந்த கோவில் பலகணி ஏட்டுக் கட்டுக்குத்தான் என்ன ஒரு சக்தி."

அவர் சிரிப்புக்கான பதிலோடு புதிதாக ஒரு 'பலகணி ஏடு' என்ற விஷயத்தைத் தொட அவனிடம் திரும்பவும் ஆச்சரிய அதிர்வு.

"அது என்ன கோவில்பலகணி ஏட்டுக்கட்டு?"

"சொல்றேன். இனி நீ எங்க போயிடப் போறே? என் கூடத்தானே இருக்க போறே... வா எங்காத்துக்குப் போவோம்."

"என்ன இது... என்னென்னவோ சொல்றேள். நான் உங்க கூட இருக்கப் போறேனா?

"ஆமாம்பா... மிரளாதே. இனிமே நீ ஊருக்குப் போகணும்னாலும் வழி கிடையாது. காலம்பறதான் பஸ். பேசாம வா."

"அது சரி... நீங்க யார்?"

"நான்தான் நீ வருத்தத்தோட குறிப்பிட்ட அந்த தீட்சிதன்! நடராஜ தீட்சிதன்!"

அவர் சொல்ல, ராஜ்நாராயண் திகைக்க....

5

'இந்த பூவுலகில் சிவம் தொடர்பான அடையாளக் குறியீடுகள் பாரத மண்ணில் மட்டுமன்றி ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் கூட இருக்கிறது என்பது டாக்டர் விளாதிமீரின் கருத்து.

அமெரிக்காவில் 'கிராண்ட் கன்யான்' என்னும் வித்தியாசமான மலைப் பகுதியில் பராசக்தியின் அம்சங்கள் என்று வர்ணிக்கப்படும் 'சிவம் விஷ்ணு பிரம்மன்' மூன்றின் அடையாள உருவங்கள் காணப்படுகின்றனவாம்.

ஆயினும், இந்திய மண்ணில் மட்டும் சிவம் தொடர்பான சிந்தனைகளும் சைவம் என்கிற ஒரு பிரிவும் உருவாக ஆழமான ஒரு காரணம் இருப்பதாக விளாதிமீர் கருதுகிறார்.

உலகின் உயர்ந்த சிகரமான இமயம் பூகோள ரீதியில் பூமியின் மையத்தில் (கிட்டத்தட்ட) காணப்படுகிறது. அதன்படி பார்த்தால் இந்த உலகே கூட சிவலிங்க சொரூபம் எனலாம். ஒரு வட்டத்தில் இருந்து கூம்பு முளைத்தது போல் உலகமே ஆவுடையாராகத் திகழ இமயம் சிவஸ்தம்பாக எழும்பி நிற்கிறது.

அங்கே பஞ்ச பூத ஆராதனையாக குளிர்ந்த காற்றும் உறைந்த பனியே நீராகவும், அதன் முற்றிய குணமே நெருப்பாகவும் இருக்கிறது. ஈர்ப்பு விசைக்கு உட்பட்ட வெளி வேறு எங்கும் காணப் படாத விதத்தில் தூயதாக எல்லாவித கதிர் வீச்சுக் களையும் காணப்படாததாகத் திகழ்கிறது.

இங்கே உயிராகிய ஜீவன் மிகச் சுலபமாக சிவத்தை அடைந்து விட(அ) உணர்ந்து விட ஏதுவாகிறது. அதனாலேயே இங்கே ஞானியர் கூட்டம் அதிகம் இருக்கிறது என்பதும் அவரது கருத்து!'**

நான்தான் தீட்சிதன்! என்று அந்த மனிதர் கூறவும் ராஜ்நாராயணுக்கு பொட்டில் அடிபட்ட மாதிரி இருந்தது.

அவரோ சிரித்தார். அவனோ திணறலோடு வெறித்தான்.

"அம்பிக்கு அதிர்ச்சியா இருக்கோ?"

"ஆமாம். நீங்கதான் அவர்னு நான் எதிர்பார்க்கவே இல்லை."

"இது மட்டுமா... பல எதிர்பாராத விஷயங்களையே இனி நீ சந்திக்கப் போறே" புதிர் போட்டுப் பேசினார் அவர்.

'இப்படிப் புதிராவே பேசினா எப்படி?"

"பயப்படாதே. முதல்ல என் ஆத்துக்கு வா. மற்ற விஷயங்களை அங்கே போய்ப் பேசிக்கலாம்."

அவர் அதற்குமேல் பீடிகை போட பிரியமற்றவராக அவனோடு நடந்தார். அவனும் தொடர்ந்தான். வழி நெடுக ஊர் ஜனங்கள் அவரைப் பார்க்கவும் அழுத்தமாக கையெடுத்துக் கும்பிடு போட்டனர்.

சில குடியானவர்கள் அவர் காலைத் தொட்டே வணங்கி நின்றனர். அவரும் இடுப்பில் இருந்து ஒரு பட்டுத் துணிப் பையில் அடங்கியிருந்த விபூதியை எடுத்து அவர்கள் நெற்றியில் பூசி மடாதிபதி பக்தர்களை ஆசீர் வதிக்கிற மாதிரி ஆசீர்வதித்தார்.

அவனுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

அதே நேரம் ஊரின் பிரதான மரகதலிங்க ஸ்வாமி கோவிலும் வந்துவிட்டது.

காவிப்பட்டை அடிக்கப்பட்ட மதில்கள்!

புறாக்கள் வட்டம் கட்டிப் பறக்கும் கோபுரங்கள். மதிலின் நான்கு மூலைகளிலும் நந்தி சொரூபம் அமர்ந் திருந்து உயிருள்ள காளை மாடு ஒன்று மண்டியிட்டு அமர்ந்திருந்து அவனைப் பார்க்கிற மாதிரியே ஒரு பிரமிப்பை உருவாக்கியது.

"அந்தக் காலத்துக் கோயில். அந்தக் காலம்னா சோழர் காலம் இல்ல, அதுக்கும் முந்தின காலம்."

அவர்தான் கோவில் பற்றி எடுத்துப்பேசியது.

"ஒரு ஆயிரம் வருஷம் இருக்குமோ?"

"சொச்சம்"

"அப்ப ஆயிரத்தைந்நூறு வருஷம்."

"திருவள்ளுவா ,காலம்ப்பா... கிட்டத்தட்ட இரண்டா யிரத்து ஐம்பது வருஷம்."

"அடேயப்பா."

"இதுக்கே அசந்தா எப்படி... கோவிலைக் கட்டினது யார் தெரியுமா?"

"அப்ப இருந்த யாராவது ஒரு ராஜாவா?"

"அதான் கிடையாது."

"பின்ன வேற யாராம்?"

"சொன்னா சிரிப்பே..."

"சிரிப்பேனா?"

"ஆமாம்... அந்த இந்திரனே தன் தேவர் கூட்டத்தோட கல்லும் மண்ணும் சுமந்து இதைக் கட்டினான்னா நம்பாம சிரிக்கிறதுதானே இந்தக் காலத்து கம்ப்யூட்டர் மனுஷா வழக்கம்."

அவர் சொல்லி முடிக்க, ஆமோதிக்கிற மாதிரி நிஜமாலுமே சிரித்தான் ராஜ்நாராயண்.

"பாத்தியா சிரிச்சுட்டே..."

"வாஸ்தவம்தான். இல்லேன்னு சொல்ல இந்திரனா வரப்போறான். இந்த மாதிரி புராதனமான கட்டிடங்கள் கண்ணுல பட்டா நாம கற்பனைல யார் பேரை வேணும்னா லும் சொல்லலாம். அவ்வளவு ஏன்... நான்கூட பூர்வ ஜென்மத்துல இந்தக் கோவிலைக் கட்டினேன்னு அடிச்சு விடலாம்.

'சாமி பேரால நாம எவ்வளவு புளுகினாலும் நம்பத்தான் ஒரு கூட்டம் இந்த மண்ணுல இருக்கே?'

அவன் அழகாக அவரை மடக்கினான். பதிலுக்கு தீட்சிதர் கோபித்து முறைப்பார் என்றுதான் நினைத்தான். ஆனால், அவரோ, "அதுவும் ஒரு உண்மை அம்பி. தெரிஞ்சோ தெரியாமலோ உன் வாய்லையே வந்துடுத்து அது. பலே" என்றார். அவனுக்கோ பகீர் என்றது. வெறித்தான்.

கோவில் உள்ள அக்ரஹாரத் தெருவிலேயே அவர் வீடும் இருக்க, அவர்களும் அவர் வீட்டு வாசலை எட்டியிருந்தனர்.

அவன் அந்த பகீர் உணர்வு கலையாமல் அவர் வீட்டு வாசலில் வெறிப்பைத் தொடர்ந்தான்.

"என்ன பாக்கறே...? இந்த பதிலை நீ எதிர்பார்க்கலே இல்ல? உள்ள வா... ஆற அமர உக்காந்து பேசுவோம்."

அவர் உள்ளே நுழைந்தார்.

அந்த நாளைய வீடு. எங்கு பார்த்தாலும் மரச்சட்டங்கள். திண்டு திண்டாய் உத்தரங்கள். ஒரு காட்டையே அழித்து மரத் துண்டுகளை எடுத்து வந்து கட்டின வீடு போல இருந்தது. தரையிலும் கடப்பைக் கற்களை வேய்ந்து வராண்டாவையும் மற்ற பாகங்களையும் மூடி இருந்தனர்.

ஆனால், முற்றமும், பூஜை அறையும் மட்டும் கருங்கற்களாலான பட்டியக் கற்களால் சதுர சதுரமாகப் போட்டு இணைக்கப்பட்டிருந்தன.

சமையல் அறையில் சாணியால் மெழுகிய மண் அடுப்புகள். ஒரு ஓரத்தில் விறகுக் குவியல்! கூடத்திலோ நிறைய மரப் பிறைகள். அதில் தேவார திருவாசக புத்தகக் கூட்டம். முழ நீளமுள்ள ஏட்டுக் கட்டுகளும் செங்கல் அடுக்கு போல அடுக்கப்பட்டிருந்தன.

போனால் போகிறது என்று மின் இணைப்பு பெறப் பட்டு உள்ளே டியூப் லைட் விளக்கும், டேபிள் ஃபேனும் காட்சி தந்தன.

ஃபேனுக்கு அவசியமில்லாதபடி ஒருவிதக் குளிர்ச்சி நிலவிய அந்த வீட்டினுள் ஒரு கயிற்றுக் கட்டில். கட்டிலை ஒட்டி சில மர நாற்காலிகள்.

தீட்சிதர் கட்டிலில் உட்கார்ந்தபடி ராஜ்நாராயணை நாற்காலியில் அமரச் சொன்னார்.

"தேங்க்ஸ்" என்றபடி அமர்ந்தான். பதிலுக்குச் சிரித்தார். நடுவில் சுநாதமாய் கோவில் மணி சப்தம் தொடர்ச்சியாக ஒலிக்கத் தொடங்க, "சாயரட்சை பூஜை ஆறது... அதான் மணிச்சத்தம்" என்றவர், சில நொடிகள் தியானித்து விட்டு அவனைப் பார்த்தார்.

அவன் முகத்தில் 'ஒருவிதக் குழப்பம், ஒருவித ஆச்சரியம், ஒருவித சந்தோஷம்' என்று எல்லாவிதமான உணர்வுகளும் கலந்திருந்தன.

"இன்னிக்கு இங்க தங்கலாம் தானே?"

"உங்களுக்குச் சிரமம் இல்லேன்னா எனக்கு ஆட்சேபணை இல்லை."

"எனக்கென்ன சிரமம்? உனக்குத்தான் சவுகர்யப் படுமோ படாதோ?"

"நீங்க இங்க கூட்டிண்டு வரலைன்னா அந்த மண் ரோட்டுப் புளியமரத்தடியிலதானே கிடந்திருப்பேன். அதோட ஒப்பிடும்போது இது பரம சவுக்யம்"

"சந்தோஷம். ஆமா உன் அத்தை ஆத்துல தங்க மனசு இடம் தரலையோ?"

அவர் நெருக்கிப் பிடித்து விஷயத்துக்கு வரத் தொடங்கினார். அவன் மவுனமாய் அது சரிதான் என்கிற பாவனை புரிந்தான்.

"நினைச்சேன். அப்படித்தான் இருக்கணும்னு ஒரு யூகத்திலேதான் கேட்டேன்."

"அது இருக்கட்டும்... என்னைப் பத்தி வேற பல விஷயங்கள்கூடப் பேசியிருக்கேள் போல இருக்கே?"

"ஆமாம் அம்பி. ஆனா பேசினது நானில்ல. கோவில் ஏடு!"

"கோவில் ஏடா?"

"ஆமாம், கோவிலை சமீபமா புனருத்தாரணம் பண்ணி னோம். அப்ப ஒரு மரப்பெட்டி கிடைச்சுது. அதுல நாடி ஜோதிடம் தொடர்பான ஏட்டுக்கட்டுகளும் அடக்கம்."

"அதான் இதெல்லாமா?"

"இல்ல... இது வேற! அது கோவில்லேயே இருக்கு. அப்படிக் கிடைச்ச அதுல சில குறிப்புகள் இருந்தன."

"குறிப்புகளா?"

"ஆமாம்... இத்தனாம் தேதி கோவிலுக்கு புனருத் தாரணம் நடக்கும். அப்ப இந்த ஏடுகள் கண்டறியப்படும். அதைத் தொடர்ந்து பல அதிசயங்களை இந்த மரகத லிங்கபுரம் சந்திக்கும்னு அதுல குறிப்பு இருந்தது."

"இதென்ன புதுவிதமான புளுகு!"

"அவசரப்பட்டு எல்லாத்தையுமே புளுகுன்னு சொல்லி டாதே. ஏடுகள் ஒண்ணும் இந்த நாளைய வார, மாசப் பத்திரிகை மாதிரி கற்பனைச் சரக்கு கிடையாது. அவை ரிஷிகளால் எழுதப்பட்டவை."

"சரி... எந்த ரிஷி என்னன்னு எழுதியிருந்தார்?"

"அதை நான் வார்த்தையால சொல்லாம ஏட்டையே எடுத்துக் காட்டிட்றேனே."

"அது இன்னும் பெட்டர்"

"அப்ப அதுவரை ரெஸ்ட் எடு. நான் கொஞ்சம் வெளில போய்ட்டு வந்துட்றேன்"

"இப்பத்தானே வெளியில இருந்து வந்தேள். அதுக் குள்ள கிளம்பறேளே?"

அவன் கேள்விக்கு மர்மமாகச் சிரித்த தீட்சிதர், அதற்கு பதில் கூறாமல் எழுந்து சமையல் கட்டுப் பக்கம் சென்றார். அடுப்பு மேடையில் வெண்கலப் பாத்திரம் ஒன்றில் அவர் மதியம் சமைத்த அன்னம் மல்லிகைப் பூ குவியல் போல கண்ணில் பட, அதை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு உரியில் தொங்கிக் கொண்டிருந்த பானை ஒன்றில் இருந்து தயிரையும் எடுத்துப்போட்டுப் பிசைந்தார். பின் அந்தத் தயிர் சாதத்தை ஒரு சிறிய பாத்திரத்தில் போட்டு எடுத்துக்கொண்டவர் வெளியேறத் தொடங்கினார்.

"என்னைத் தனியா நம்பி விட்டுட்டுப்போறேளே?" -அவன் கேட்டான்.

"நீ களவாணியா இருந்தா கவலைப்படுவேன். ஆனா, களவு போனதைக் கண்டுபிடிக்க வந்தவனாச்சே."

அவர் பதிலில் மீண்டும் பூடகம். அவனுக்கு மீண்டும் குழப்பமாகிப் போனது. இவர் யார்? இவர் பேசுவதெல் லாம் உண்மையில் எத்துடன் சேர்த்தி?

"இந்த வீடு எப்பவும் திறந்தே இருக்கும். தீட்சிதன் வீட்டுல திருட என்ன இருக்கு? வேத புத்தகங்களைத் தவிர?" போகும்போது அவரிடம் ஏனன முனங்கல்!

அவனுக்குப் புரியவில்லை! அவரோ போய் விட்டார்.

நெடுநேரம் அந்த நாற்காலியில் அமர்ந்திருந்தவ னுக்கு லேசாகப் புழுங்கியது.

வெளியேயும் இருட்டிக் கொண்டு வந்தது.

ஜீன்ஸ் பேன்ட்டும் சட்டையும் கசகசத்தன. அவை களை அகற்றி விட்டு வேட்டி, ஜிப்பா என்று ஆடை மாற்றிக்கொண்டான்.

டிவி, ரேடியோ என்று அந்த வீட்டில் எதுவும் இல்லை.

மரப் பிறைகளில் கிடந்த புத்தகங்களை எடுத்துப் புரட்டத் தொடங்கினான். எல்லாவற்றிலும் கடினமான தமிழ்! அவன் கருத்தை ஒன்று கூடக் கவரவில்லை. எல்லாமே ஆன்மிகத் தொடர்பாய் கருத்துக்களைப் பேசிற்று. ஒன்றில் திருவாசகம், இன்னொன்றில் திருமந்திரம் மற்றது ஆசாரக்கோவை.

அகதா கிறிஸ்டியோ, இர்வின் வாலசோ எழுதிய ஒரு ஆங்கிலப் புத்தகமுமில்லை.

மிகப் போரடித்து வீட்டுக்கு வெளியே வந்து நின்றான். இரு புறமும் மல்லிகைக் கொடி படர்ந்த அக்ரஹார வீடுகள்.

பக்கத்து வீட்டில் யாரோ ஒருவர் வயலின் சாதகம் செய்து கொண்டிருந்தார். கத்துக்குட்டி போலும்-ரொய்ங்... ரொய்ங்க் என்று ஒரே அபத்த சங்கீதம். எரிச்சலாய் வந்தது.

சகித்தபடி நாற்புறமும் பார்த்தான். தெருவின் முடிவில் மரகதலிங்கேஸ்வரர் ஆலய பிரதான கோபுரமும் வாயிலும் தெரிந்தன. சிலர் போய் வந்து கொண்டிருந்தனர். அவனுக்கும் ஆவலாதி ஏற்பட்டது.

வீட்டுக் கதவை ஒருக்களித்துச் சாத்தி விட்டு கோயில் நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

"இட்டமுடன் பாலகனும் அட்டமி நாளதில்
ஆதித்தன் வானம் விட்டகன்ற வேளையில்
கிட்ட வருவானே!
வருபவன் வசத்திலே பெருமானும் வசப்படுவானே!"

அவன் காதில் யாரோ எங்கோ படிப்பது போல ஒரு பாடலின் வரிகள் ஒலித்து அடங்கியது. படித்தது யார்? கேள்வியோடு நடந்தான் ராஜ்நாராயண்.

அவனுக்கே தெரியாது. அவன் ஒரு பெரிய சாதனை புரியப்போவது!

அவனது கால்கள் கோயில் வாயிலை எட்டியபோது, அங்கே பாரதியும் ஒரு பூக்குடலையுடன் வந்திருந்தாள். இருவர் பார்வையும் மோதிக் கொண்டன.

இன்ப அதிர்ச்சி!

6

'மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைந்ததற்கு வலுவான, வளமான காரணங்கள் பல உண்டு. அதில் பிரதான காரணம், மதுரையின் ஸ்வயம்பு லிங்க மூர்த்தியான சோமசுந்தரக் கடவுளே!

சோமசுந்தரம் என்றால் திங்களாகிய சந்திரனை முடியில் சூடியவன் என்று பொருள். திங்களாகிய சந்திரனே அனைவரின் மனநலன் மற்றும் ஒருவர் மனதில் ஊற்றாக கவிதைப் பெருக்கெடுக்கவும் காரணம்.

எனவே, சோமசுந்தர வழிபாட்டைப் புரிபவர்கள், சந்திரனின் கருணைக்கும் உள்ளாகி மனநலனையும் பெறுவார்கள். தமிழ்ச் சங்கமும் மனநலமுடைய, கவிவளமுடைய புலவர்களாலேயே வளம் பெற்றது.

இன்றும் மதுரையில் கலாரசனை மிகுந்தவர்களும், கலையம்சத்தைப் படைப்பவர்களும், நாவன்மை பெற்றவர்களும் மிகுதியாக இருக்க இந்த சோமசுந்தர மூர்த்தமே காரணம்.

சந்திரனின் கிரணங்கள் மதுரை ஸ்வயம்பு லிங்க மூர்த்தத்தால் பெரிதும் ஆகர்ஷிக்கப்பட்டு, அருள் அலையாக நகரெங்கும் சுற்றி வருகிறது என்பதே பிரதான காரணம்!'

பாரதிக்கு ராஜ்நாராயண் ஏராள இன்ப அதிர்வுகளை உருவாக்கியிருந்தான். அது அவள் பார்க்கும் விதத்தி லேயே தெரிந்தது.

“அம்மாஞ்சி” என்றபடியே அவள், அவன் அருகில் வந்தாள்.

“அப்படிக் கூப்டாதே பாரதி. சாதாரணமா ராஜ்நாரா யண்னே கூப்டு” என்றபடி அவன் உள்ளே நடக்கத் தொடங்கினான்.

கோபுர வாயிலைக் கடந்து ஐம்பது மீட்டர் தொலைவில் தெரியும் கொடிக் கம்பத்தைப் பார்த்தபடியே நடந்த அவனைத் தொடர்ந்த பாரதியும் திக்கல் திணறலுடன் பேச ஆரம்பித்தாள்.

“ஆமா... நீங்க ஊருக்குப்போகலயா?”

“எங்க போக... இன்னிக்குப்போக பஸ் கிடையா தாமே?”

“உங்களுக்கு ஆனாலும் அவசரம். அதச் சொல்லக் கூட நீங்க அவகாசம் தரலை. மளமளன்னு சுவத்துல அடிச்சு திரும்பின பந்து மாதிரி கிளம்பிட்டேள். அம்மா ரொம்ப வருத்தப்பட்டா. கண்ணுல ஜலம் பொங்க அழுதா.”

அவன் உடனேயே திரும்பினான்.

“அம்மா அழறது இருக்கட்டும். நீ அழலையே?”

என்ன ஒரு கேள்வி? அவளைச் சுட்டது அது. பதில் வார்த்தைகளில் வராமல் அவன் கேட்ட அழுகையாகவே கண்ணில் இருந்து வெளிப்படத் தொடங்கியது.

“என்னதிது... நான் சாதாரணமாத்தான் கேட்டேன். யாராவது பாக்கப்போறா. கண்ணைத் துடைச்சிக்கோ...”

அவள் அவன் சொன்னபடி நடக்காமல் கண்ணீரைக் கன்னத்தில் ஓடவிட்டாள். அவனுக்குள் அது பதற்றத் தைக் கூட்டியது. அவனே சட்டென்று நெருங்கி வந்து

கண்ணீரைத் துடைத்து விட்டான். வேஷ்டியின் முகப் பைத் தேடிப் பிடித்து அவள் முகம் வரை உயர்த்தி அதாலும் துடைத்தான். அப்படியே சுற்று முற்றும் பார்த்தான். நல்ல வேளை, யாரும் பார்க்கவில்லை. பாரதி அவனையே வெறித்துக் கொண்டு நின்றாள்.

“என்ன பாரதி... எதுக்கு இப்படிப் பாக்கறே?”

“பாக்காம... என்ன ஒரு கேள்வி கேட்டுட்டேள்... என் மனசு என்ன பாடுபட்டுண்டு இருக்கு தெரியுமா?”

“அதுக்கு நான் என்ன பண்றது. வந்ததும், வராததுமா ஜாதகம் சரியில்லை, அந்த தோஷம் இந்த தோஷம்னு உன் அப்பா பேசினா ஹவ் கேன் ஐ டாலரேட்? நான் எவ்வளவு ஆசையா வந்தேன் தெரியுமா?”

“சரி சரி... மொள்ளப் பேசுங்கோ. அப்படி வாங்கோ.”

அவள் சட்டென்று அவன் கையைப் பிடித்து இழுத் துக் கொண்டு தெற்கு பிரகாரத்தில் நுழைந்தாள்.

குப்பென்ற வவ்வால்களின் அடைசல் வாடை, மந்த காசமான இருட்டு, அங்கங்கே சில பரிவார தேவதை களின் சன்னதிகளில் சிணுங்கி எரிந்து கொண்டிருக்கும் அகல் விளக்குகள்.

இருவரும் நடக்கும்போது பாரதியின் பாவாடை விசுக் விசுக்கென்று உரசுவது நன்றாகவே எதிரொலித்தது.

“ஏய்... எங்க இழுத்துண்டு போறே?”

“ பேசாம வாங்கோ. உங்களண்ட நான் நிறைய பேசணும்.”

“அதுக்கு எதுக்கு எங்கையோ போறே?”

“எங்கேயும் போகலை. இங்க சப்தகன்னியர்க்குன்னு ஒரு சின்ன குகைக் கோயில் இருக்கு. உள்ள அப்பா வைத் தவிர யாரும் போக மாட்டா. பேசாம வாங்கோ” அவள், அவன் கையை இறுகப் பிடித்தபடி நடந்து கொண்டே சொன்னதில் ஒருவித தீவிரம் தெரிந்தது.

'யார் நினைத்தாலும், என்ன செய்தாலும் நான் உன்னை விட மாட்டேன்' என்று அவள் சொல்லாமல் சொல்லுகிற மாதிரியும் இருந்தது.

இருண்ட பிரகாரத்தில் காதை அழுத்தும் பம்மென்ற சப்தம் வேறு. கண்ணே தெரிவில்லை. அத்தனை கரிப்பு. ஆனால் பாரதி சாதாரணமாக நடந்தாள். பிரகாரம் வளைந்து திரும்பிற்று. திரும்பிய இடத்தில் பைரவ மூர்த்தி சன்னதி. கட்டை விரல் பருமனில் விளக்கெரிய பைரவமூர்த்தி பின்புலத்தில் கல்லாலான நாயின் மேல் ஒருக்களித்து நின்று கொண்டு வெறிக்கிற மாதிரி நின்று கொண்டிருந்தார்.

அங்கே சற்று நின்றவள் சரேலென்று மண்டியிட்டு எழுந்தாள். ராஜ்நாராயணையும் சேவிக்கச் சொன்னாள்.

"நான் இன்னும் உள்ற போய் சுவாமி தரிசனமே பண்ணலை. இங்க விழச் சொன்னா என்ன அர்த்தம்?"

"இவர் கால பைரவர். மனுஷாளோட விதியை எழுதற வர். நமக்குக் கல்யாணம் பண்ணிக்க விதி கிடையாதுன்னு அப்பா சொன்னாரில்லையா? அதை இவர் மாத்துவார் பாருங்கோ. சேவிங்கோ."

பாரதி தனக்குத் தெரிந்ததை பேசினாள். அவனும் கீ கொடுத்த பொம்மைபோல இயங்கினான்.

"கன்னத்துல போட்டுக்குங்கோ"

போட்டுக் கொண்டான்.

"இருட்டா இருக்கு. என் கையைப் புடிச்சுக்குங்கோ!"

பிடித்துக் கொண்டான்.

"நடங்கோ."

நடந்தான்.

விசுக் விசுக்கென்று நடந்தாள். பாவாடை உரசலோடு கால் கொலுசு போட்டி போட்டது. அந்தச் சத்தம் நல்ல

சங்கீதமாக அவன் காதில் இனித்தது. பற்றியிருக்கும் அவள் கையில் ஒருவித மெதுமெதுப்பு. அவனுக்கு பரம சுகமாக இருந்தது. அப்படியே அவளுடன் நடந்து கொண்டே இருக்கலாம் போலத் தோன்றியது.

அமெரிக்காவில் கொலரா டோவில் பிவர்க்ரீச் என்று ஒரு இடம் இருக்கிறது. ஒவ்வொரு மலையும் அங்கே பனிச்சட்டைப் போட்டுக் கொண்டு வெள்ளை வெளேர் என்றிருக்கும்.

பனிக்கட்டிகளைப் பந்து போல உருட்டி காலால் உதைத்து விளையாடலாம். காதலியோடு அங்கே செல் கிறவர்களுக்கு கோடித் தங்கம் கூடப் பெரிதாகத் தெரி யாது. கட்டிக் கொண்டு அந்த பனிப் பள்ளத் தாக்கில் உருளுவதுதான் பெரிதாக இருக்கும். ராஜ்நாராயணும் அங்கே பாரதியோடு கற்பனையில் கட்டி உருண்டிருக் கிறான்.

அந்த ஞாபகம் இப்போது வந்து இன்பப் புயல் அடிக்கிற மாதிரி கூட இருந்தது.

நடுநடுவே சிமிட்டும் தீபங்களுடன் தேவ உருவங்கள் தென்பட்டு மறைந்தன. ஒரு இடத்தில் சிறியதாய் வெளியே செல்ல வாசல். அதன் வழியாக வெளியேறிய போது ஆவென்று ஒரு வில்வமரத்தினடியும், அதைச் சுற்றி வரும் காற்றும் முகத்திலறைந்தது.

இருட்டிவிட்டிருந்தது. கையில் கட்டியிருந்த ரேடியம் கடிகாரம் மணி ஏழாகி விட்டதைக் காட்டியது. அதை உணர்ந்து நிமிர்ந்தபோது அந்த வெளிப்புறத்தில் யானை நிற்பது போல ஒரு பெரிய பாறை. அதன் நடுவில் குடைந்தது போல ஒரு வாசல். உடம்பை வளைத்து கூன் போட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டும். பாரதியும் உள்ளே நுழைந்தாள்.

"வாங்கோ" உள்ளேயிருந்து எதிரொலி கலந்த குரல் கொடுத்தாள். அவனும் சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டு

உள்ளே புகுந்தான். உள்ளே ஒரு ஆள் உயரத்துக்கு குகை போல ஒரு இடப்பரப்பு. ஒரு பத்தடி நடக்க முடிந்தது. வரிசையாக ஏழு விளக்குகள் எரிந்து கொண்டிருக்க, ஏழு விளக்குகளின் பின்னாலும் சப்த கன்னியர் உருவங்கள். இந்திராணி, கௌமாரி. சண்டி, வாராஹி, பிராஹ்மி என்று. வாராஹிக்கு நீலவஸ்திரம் சாத்தப்பட்டிருந்தது. பன்றிமுகம், கழுத்தில் செண்பக மாலையுடன் அந்தத் தேவதை உருவம் மட்டும் பளிச்சென்று தெரிந்தது.

"அப்பாடா... இனி கவலையில்லை. இங்க யாரும் வரமாட்டா."

பாரதி மார்பை தூளி போல ஆட்டி பெருமூச்சு விட்டாள். ராஜ்நாராயண் அவளை ஆச்சரியம் குறையாமல் வெறித்துக் கொண்டு நின்றான்.

"ஆங்... கேக்க மறந்துட்டேன். உங்க லக்கேஜ் எல்லாம் எங்க?"

-அவள் கையை உதறிக் கொண்டு அருகில் இருந்த பிரசாதம் வைக்கும் கல்மேடையில் அமர்ந்தபடியே கேட்டாள்.

"தீட்சிதர் ஆத்துல இருக்கு."

"தீட்சிதர் ஆத்துலையா... நீலகண்ட தீட்சிதர் ஆத்துலயா?"

'அங்கேயேதான். அதிர்ச்சியா இருக்கா?"

"பின்னே... அவர்தாம் நம்ம இரண்டு பேருக்கும் எம்.என்.நம்பியார், பி.எஸ்.வீரப்பா, நாசர், ராதாரவின்னு எல்லாம்."

"இவாள்ளாம் யாரு?"

"சினிமாவில வில்லன் வேஷம் போட்றவா. தெரியாதா உங்களுக்கு?"

"நான் தமிழ் சினிமா பார்த்து பத்து பதினைஞ்சு வருஷமாச்சு"

"ஏன் பேச மாட்டேள். உங்களுக்கு ரோஜர் மூர், டெமி மூர், ஜாக்கி சான்னாதானே தெரியும்."

"பரவால்லியே இவாளை உனக்கும் தெரிஞ்சிருக்கே..."

"என்ன பரவால்லியே... உங்க... அமெரிக்கால கிளிண்டன், மோனிகாகிட்ட பட்ட பாடுல இருந்து, ஜார்ஜ் புஷ், பின்லேடன் கிட்ட பட்ற பாடு வரை எல்லாமே தெரியும். இந்த மரகதலிங்கபுரம் ஒண்ணும் பட்டிக்காடு கிடையாது. தெரிஞ்சுக்கோங்கோ..."

"சபாஷ்... எல்லாம் கேபிள் டிவி உபயம்னு சொல்லு."

ஏன்... ஹிந்து, எக்ஸ்பிரஸ் லாமும்தான். அப்பா இங்கிலீஷ் பேப்பர்லாமும் வாங்கறார், தெரியுமா உங்களுக்கு... உக்காருங்கோ இப்படி."

-பதிலோடு அருகிலேயே அவள் இடத்தைக் காட்டினாள். அங்கே சில வெற்றிலைகளும், வாழைப் பழம் ஒன்றும் கிடந்தது.

அவன் அதை ஒதுக்கியபடியே உட்கார்ந்திருந்தான். சிறிய இடம். அவள் உடம்போடு அவன் உடம்பு உரசியது.

அந்த உரசலில் மரகதலிங்கபுரத்துக்கே மின்சாரம் தரலாம். அந்த அளவு மின்சாரம் உற்பத்தியான மாதிரி தோன்றியது.

"பாரதி... இப்ப எதுக்கு இங்க என்னை இழுத்துண்டு வந்தே?"

அவன் மெல்ல விஷயத்துக்கு வந்தான். அப்பொழுதுதான் அவளுக்கே பொறி தட்டியது.

"எதற்கு?" -புரியாமல் பார்த்தாள்.

"கேக்கறேன்ல..."

"ஆமா!"

"பதில் சொல்லு."

"தெரியல."

"தெரியலயா... இடியட். ஏதோ தலைபோற விஷயத்தைச் சொல்லத் துடிக்கற மாதிரி கூட்டிண்டு வந்துட்டு, இப்ப தெரியலன்னா என்ன அர்த்தம்?"

"கோபமா... என்னோட இங்க உக்காந்து பேச உங்களுக்கு பிடிக்கலையா?"

-அவள் குரலில் ஏக்கம் கரை புரண்டது. அதே நேரம் ஸ்ஸ்ஸ்! என்று ஒரு வித சீற்றம்!

இருவருமே விறைப்பானார்கள்.

"என்ன சப்தம் பாரதி?" -அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவர்கள் நுழைந்த குட்டையான வாயில் பகுதி வழியாக பனிரண்டு அடி நீள நாகம் ஒன்று நுழைந்து கொண்டிருந்தது.

7

"லிங்க ஸ்வரூபங்களை மனிதர்களை விட பஞ்ச பூதங்களே அதிகம் ஆராதித்து வருகின்றன. தஞ்சாவூர் பக்கம் திட்டை என்னும் ஊரில் உள்ள சிவாலயத்தில் சந்திரகாந்தக் கல் ஒன்று கருவறைக்கு மேல் உள்ளது. அது காற்றின் ஈரப்பதம் மற்றும் சந்திரனின் கிரணங்களை அபகரித்து, நீராக்கி, தனக்குக் கீழ் இருக்கும் லிங்கத்தின் சிரசை தினமும் அபிஷேகித்து வருகிறது.

இந்தச் சொட்டு நீர் ஒரு அருட் பிரசாதம்!

மனச் சலனம், எப்போதும் துக்கம், குழப்பம் என்று புத்தியால் சிரமப்படுபவர்கள் இந்த சந்திர காந்தக் கல் நீரை ஒரு துளி பருகினாலும் கூடப் போதும்.

தங்களது மன நோயிலிருந்து விடுபடுவார்கள் என்பது நிச்சயம்!"

அத்தனை நீளமான ஒரு பாம்பை ராஜ்நாராயண் தன் ஆயுளில் பார்த்திருக்க வாய்ப்பில்லை. விக்கித்துப் போனான். தொங்கப்போட்டிருந்த காலை சரேலென்று மேலும் இழுத்துக் கொண்டான். பாரதியோ, "இது கோயில் சர்பம். சப்த கன்னியரைச்சேவிக்க வந்திருக்கு..." என்றபடியே எழுந்து நின்றாள்.

"பாரதி... என்ன இது... மேல ஏறி நில்லு. கடிச்சிடப் போறது" அலறினான் ராஜ்நாராயண்.

"பயப்படாதேள். இது கோவில் பாம்பு. வெளிய ஒரு புத்து இருக்கு. அங்க இருந்து தினம் சப்த கன்னி சன்னதிக்கு வரும்னு அப்பா சொல்லியிருக்கார். ஒண்ணும் பண்ணாது."

-அவள் காற்றுக் குரலில் சொல்ல, அந்த சர்பமும் ஒரு வளைகோடு போல் சரசரவென்று ஊர்ந்து முன்னேறி சப்த கன்னியர் சன்னதி முன் வாராஹியின் காலடிக்குச் சென்று, படம் எடுத்து நிமிர்ந்து நின்றது.

ராஜ்நாராயணும் பாரதியும் அதையே பார்த்துக் கொண்டிருந்தனர். பாரதி கை கூப்பியிருந்தாள். அப்படியே ராஜ்நாராயணைப் பார்த்து, "சேவியுங்கோ... இது தெய்வம்" என்றாள். அவனும் கைகளைக் கூப்பினான்.

அது ஆமோதிக்கிற மாதிரி தன் படத்தால் தரையில் ஒரு கொத்து போட்டது.

"வா... வெளிய ஓடிப் போயிடலாம். விஷ ஜந்து இது" அவனிடமிருந்து முனகல்.

"பேசாம நில்லுங்கோ. அது சேவிச்சுட்டுப்போயிடும்"

-அவளும் பதிலுக்கு முனக, அவள் சொன்னபடிதான் நடந்தது. அது மெல்ல ஊர்ந்து சப்த கன்னியரை ஒரு

முறை வலம் வந்தது. பின் மீண்டும் நிமிர்ந்து இருவரையும் ஒரு பார்வை. அதற்குப் பின், 'சரி, போய் வருகிறேன்' என்கிற மாதிரி திரும்பவும் வந்த வழியே வெளியேற, அப்பாடா என்கிற பெருமூச்சு வெளிப்பட்டு ராஜ்நாராயண் மார்பைச் சுட்டது!

"இனி ஒரு பிரச்னையும் இல்ல. நாம எவ்வளவு நாழி வேணும்னாலும் பேசிண்டிருக்கலாம்."

-அவளும் நிம்மதிப் பெருமூச்சு விட்டு நெஞ்சைத் தாலாட்டினாள். அப்படியே ராஜ்நாராயணின் கையை இழுத்துப் பிடித்தவள் திரும்பவும் "அம்மாஞ்சி" என்றாள் விசும்பலாக.

"என்ன பாரதி?"

'அப்பா அப்படி சொல்லிட்டாரேன்னு என்னை கல்யாணம் பண்ணிக்காம போய்டுவேளா?"

அவன் பதிலுக்கு வெறிப்பைத் தொடர்ந்தான்.

"சொல்லுங்கோ"

"என்னத்தச் சொல்றது. ஜாதகம், ஜோசியம்னு அவர் குட்டையைக் குழப்பறாரே..."

"எனக்கும் அதை நினைச்சாதான் பயமா இருக்கு."

"அதை எல்லாம் நீ நம்பறியா பாரதி?"

"இது என்ன கேள்வி? மெஷினுக்கு மேனுவல் மாதிரி மனுஷாளுக்கு ஜாதகம்னு அப்பா சொல்வார்"

"ரொம்ப கொடுமையான அபத்தமான கம்பேரிசன் இது. அதெல்லாம் பொய். பைசா சம்பாதிக்க சில திண்ணைத் தூங்கிகள் கண்டுபிடிச்ச விஷயம் அது."

"இல்லையே... தீட்சிதர் ஒரு பொண்ணுக்கு எங்க ஊர்ல கல்யாணமே பண்ணக் கூடாதுன்னார். ஆனால் மீறிப் பண்ணினா. இப்ப அவ தாலி அறுத்துட்டா.

"அதெல்லாம் சம்மா. இவரே அந்த நபரைக் கொன்னுட்டு தன் ஜோசியத்தை பெரிசுன்னு எல்லாரையும் நம்ப வெச்சுருப்பார்."

"அப்படியெல்லாம் சொல்லாதேள். தீட்சிதர் பெரிய மகான். ஐயோ கேக்கணும்னு நினைச்சேன். அவரை நீங்க எங்கப் பார்த்தேள்?"

"நான் எங்க பார்த்தேன். அவர்தான் என்னைப் பார்த்தார். ஆனா ஒரு விஷயம். அவருக்கு பாம்பு-தோள்ல இருந்து கழுகு, காக்கை வரை எல்லாம் கட்டுப்படறது.

"உன் ஊரே ஒரு மேஜிக் சிடியாதான் இருக்கு. இதோ இங்க கூட ஒரு பாம்பு வந்துட்டு எனக்கென்னன்னு போறதே? நீயும் அதைக் கடவுள்னு சேவிக்கிறே. என்னையும் வேற சேவிக்க வெச்சுட்டே."

"வேண்டாம்... இது கோவில். இங்க தப்பா பேசாதேள். ஆமா... இப்ப தீட்சிதர் எங்க... ஆத்துலதான் இருக்காரா?"

"யாருக்குத் தெரியும்? தயிர் சாதமும் கையுமா எங்கையோ வெளிய போனார்?"

"தயிர் சாதத்தோடயா?" -அதிர்ந்தாள் பாரதி.

"எதுக்கு நீ வாயைப் பொளக்கறே?"

"இல்ல... அவர் தயிர் சாதத்தோட போனா வீர்யனைப் பார்க்கப் போறார்னு அர்த்தம்."

"அது யார் வீர்யன்? இப்ப கூட என் காதுல அந்த பேர் விழுந்த மாதிரி தெரிஞ்சுதே...?"

"அது இடிஞ்ச கோவில். காவல் கழுகு. இந்த ஊரையே அதுதான் காவல் காக்கறதா சொல்வா!" -பாரதி படுவெள்ளந்தியாகப் பேசப்பேச, ராஜ்நாராயணும் தாடையைத் தடவியபடியே கேட்டான்.

"கழுகுக்கு எதுக்கு தயிர் சாதம்?"

"அது விசித்ரமான கழுகு. ஸ்வாமி பிரசாதம் தான் சாப்டும்..."

"அடக்கொடுமையே... சைவக் கழுகுன்னு சொல்லு..."

"சத்யமா அம்மாஞ்சி..."

"அம்மாஞ்சிங்காதேன்னோல்லியோ..."

"வேற எப்படிக் கூப்பிடறது?"

"ராஜான்னு கூப்டு... இப்ப என்ன?"

"அது எப்படி... எனக்கு வெக்கமா இருக்கு. ஆத்துக்காரரை யாராவது பேர் சொல்லிக் கூப்டுவாளா?"

"என்னது ஆத்துக்காரரா... நானா?"

-ராஜ்நாராயண் வெட்டினான். அவளிடம் கூட நறுக்கென்று நாக்கைக் கடித்தது போல திகைப்பு.

"சாரி... இன்னும் கல்யாணம் ஆகலைல்ல?"

"ஆகும்னு நம்பறியா நீ...?"

"ஆகும்... ஆகணும்... உங்க கைலதான் இருக்கு."

-பாரதி மீண்டும் அவன் கையை இழுத்துப் பற்றினாள். அதேநேரம் கோவிலுக்குள் மணி சப்தம்.

✠ ✠ ✠

வைத்யநாத பட்டர் சன்னதி சாமான்களைத் துடைத்துக் கொண்டிருந்தார். கூடவே, ஒத்தாசைக்கு ரமணி என்னும் உதவியாளன்.

"ரமணி, நான் இந்தச் சாமானை எல்லாம் எடுத்து வெச்சுக்கறேன். நீ போய் வரிசையா எல்லா சன்னதிகளின் கதவையும் சாத்திட்டு வா பாக்கலாம்" என்றார் பட்டர்.

அவனும் கிளம்பினான்.

கடிகாரத்தில் மணியும் எட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

காக்கிச் சட்டை போட்டிருந்த வாட்ச்மேன் வேணு கையில் சாவிக் கொத்துடன் ததக்கு பிதக்கு என்று சாவிகள் சத்தமிட சன்னதி நோக்கி வர, அவனைக் கூப்பிட்டு நைவேத்ய பிரசாதத்தை ஒரு தாமரை இலையில் வைத்து மடித்து நீட்டினார் பட்டர். அப்படியே, "வேணு... நாளைக்கு காலம்பற நான் ஆறு மணிக்குத்தான் வருவேன். அஞ்சு மணிக்கே கதவைத் திறந்து வெச்சுண்டு கூத்தடிக்காதே. ஸ்வாமிக்கு நான் இப்பவே விளக்கு போட்டுட்டேன். விடிய விடிய எரியும். ஒரு பாதகமும் இல்லை" என்றார்.

அவனும் பெரிதாகத் தலையை ஆட்டினான்.

"ஆமா... இன்னிக்கு தர்மகர்த்தா வந்தாரா?"

"இல்லையே சாமி... அவர் ஊர்லையே இல்லையே..."

"அட... ஆமால்ல. தன் பொண்ணுக்கு வரன் பார்க்க மாயவரம் வரைப் போறதா சொல்லியிருந்தார். என்ன ஆச்சோ?"

"யாருக்கு சாமி... அந்த ஊமைப் பொண்ணுக்குங்களா?"

"ஆமாம்... பாவம் அதுக்கு ஒரு நல்ல வரன் அமைய மாட்டேங்கறது..."

"அட என்ன சாமீ நீங்க... நம்ம தர்மகர்த்தா பயங்கர கில்லாடி. நீங்க வேணும்னா பாருங்க. பணத்தை வெச்சே அவர் மாப்ளையை விலைக்கு வாங்கிடுவாரு."

"அப்படி எல்லாம் சொல்லாதே... கல்யாணங்கறது மட்டும் மனுஷா கைல கிடையாது. நடக்கணும்னு இருந்தா யார் தடுத்தாலும் நிற்காது. பிராப்தப்படி நடந்தே தீரும்."

"அதுவும் சரிதான்... ஆமா நம்ம பாப்பா கோவிலுக்கு வரும்போது கூட ஒரு பையன் வந்துச்சே யார் சாமி? நமக்கு உறவா?"

-வாட்ச்மேன் வேணு முக்கிய விஷயத்தைத் தொட்டான். பட்டரும் அதிர்ந்தார்.

"என்னது... பாப்பா வந்தாளா? யாரு பாரதியா, சந்திரிகாவா?"

"பாரதி சாமி..."

"எப்ப வந்தா... இங்க வரலையே?"

"வந்துச்சே... கூட சிவப்பா உயரமா, வெள்ளைக்காரன் கணக்கா ஒரு பையனும் வந்துச்சே..."

"என்ன சொல்ற நீ... எப்ப வந்தா?"

"இருட்டும் போது சாமி... நீங்க பாக்கலையா?"

"இல்லையே..." -பட்டர் முகத்தில் பூச்சி பறக்க ஆரம்பித்தது.

"நன்னா பாத்தியா... பாரதிதானா அது?"

"அப்படித்தான் நினைக்கேன்... கொஞ்சம் தொலைவுல இருந்துதான் பாத்தேன்."

"என்ன உளர்றே... செக்கச் செவேர்னு ஒரு பையன்னு வேற சொல்ற..."

"அது... அது..."

"வேற யாராவது இருக்கும். உளறாதே... ஏன்னா நம்ம செட்டியார் வீட்ல வந்துட்டுப் போனா. நீ அவாளைப் பாத்துருப்பே..."

"இருக்கும்... இருக்கும்."

-அவன் ஆமோதிக்க, ரமணி எல்லாச் சன்னதிகளின் நடையையும் சாத்தி விட்டு திரும்பிக் கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்தவர், "என்னடா... யாரும் இல்லையே... தீபாரதனை காட்டிட்டு நடையைச் சாத்தலாமா?" -கேட்டார்

அவன் தலை ஆடிற்று. சுவாமி சன்னதிக்குள் உடனே நுழைந்தவர், தீபம் காட்டி விட்டு பள்ளியறை சேர்ப்புக் காக சுவாமியின் ஐம்பொன் திருமேனியை கையில் எடுத்துக் கொள்ள, ரமணி ஐதீகப்படி மணி அசைக்கத் தொடங்கினான்.

வேணு பிரசாதத்தை வைத்து விட்டு வந்து தீப்பந்தம் பிடித்தான். பின் சுவாமி சன்னதியும் இழுத்து மூடப் பட்டது. தொடர்ந்து ஐம்பொன் மேனியுடன் பட்டர் அம் பாள் சன்னதி நோக்கி நடந்தார். அங்கே அம்பாளுக்கும் தீபாராதனை காட்டப்பட்டது. திரை போட்டு கதவு அடைக்கப்பட்டது. அம்பாள் சன்னதிக்கு இடப் பக்கத்தில் சின்னதாகப் பள்ளியறை.

உடனே கண்ணூஞ்சல்.

அதில் ஸ்வாமி விக்ரகத்தை கொண்டு வைத்து சாம்பிராணி புகை போட்ட பட்டர், தொடர்ந்து தீபம் காட்டி சோடச உபசாரம் முடித்து, வெளியே வந்து பள்ளி யறைக் கதவையும் சாத்தினார்.

பின் மூவரும் நடந்தனர்.

அதே நேரம் வெளியே கோபுர வாசலில் தடிதடியாக நான்கு பேர் பூனை போல் உள்நுழைந்து கொண்டிருந் தனர்.

8

"மனிதனின் மனம் விசித்திரமானது. அது ஒரு உண்டியல் போன்றது. வெளியே இருந்து உண்டியலில் ஒன்றை சுலபமாய் போடலாம். ஆனால், போட்டதை அதே சுலபத்தோடு எடுக்க இயலாது. ஏனெனில், உண்டியல் என்பது ஒரு கூடு போன்றது. அதில் விழும் பொருள் உள்ளுக்குள்

ளேயே கிடக்கும். அசைத்தால் சப்தமிடும். மனதும் அப்படியே. பலவித எண்ணங்கள், சிந்தனைகள் புற உலகால் மிகச் சுலபமாக உள்ளேறி விடும். உள்ளேறி விட்டதை சத்தமின்றியும் பாரமின்றியும் வைத்திருப்பதும் உள்ளேறியதை வெளியேற்றுதலும் மிக அரிதான செயல்.

தியானத்தால் மாத்திரமே அது சாத்தியப்படும். தியானத்திலும் மனதில் சூன்ய நிலையை உருவாக்குவது அசாத்தியம். அப்படி ஒரு நிலையை அடைய மிக உதவியாய் உள்ள ஒரு ரூபம் லிங்க ஸ்வரூபம்!

சிவமாகிய லிங்க ஸ்வரூபத்தை தியானிக்க மனக்குப்பைகள் எரிந்து மனம் தூய்மை அடையும். லேசாகும். பல மடங்கு சக்தியும் பெறும்.

ஒரு அதிசயம் போல லிங்கம் என்னும் சிவம் வயப்பட்ட மனதில் சக்தி வந்து குடியேறி சிவசக்தியின் பீடமாகி விடும் மனது.

சிவசக்திப் பீடமான மனதில் தோன்றும் எண்ணங்கள் அபாரமானவை. அது அந்த மனதை உடைய மனித தேகத்தையே ஒரு கோவிலாக்கி விடும். இதையே திருமூலர் உள்ளம் கோயில்-ஊனுடம்பு ஆலயம், தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம் என்றார்.

ஜீவனே சிவமாகிவிட்டால் அந்த சிவம் சொன்னது பலிக்கும்; கேட்டது கிடைக்கும்; நினைத்தது நடக்கும்.

இப்படிப்பட்ட சிவரூபமாகி விட்ட மனிதர்கள் அற்ப உலகப் பொருள்களை யாசிக்க மாட்டார்கள். அழியாத ஞானத்தையே வேண்டுவார்கள்.

இவர்களைத் தரிசிப்பவர்களுக்கும், இவர்களால் தாக்கம் உண்டாகும். அந்தத் தாக்கத்தால் பல தோஷங்கள் விலகும்.

இது சத்தியமான நிஜம்.

கோவிலுக்குள் நுழைந்திருந்த அந்த நான்கு பேரும் மிகச் சாதுர்யமாக மதில் சுவரை ஒட்டி, ஒரு பூனைக் கூட்டம் சத்தமின்றி மிக மிருதுவாக ஓடுகிறாற்போல் ஓடி அடப்பமான இருளில் கரைந்தது போல மறைந்தும் போனார்கள்.

பட்டர் வைத்தியநாதய்யர், உதவியாளன் ரமணியோடும், வாட்ச்மேன் வேணுவோடும் பேசியபடியே இப்போது கோவிலின் பிரதான கோபுர நுழைவாயில் கதவு அருகே வந்திருந்தார்.

“வேணு... அப்ப நான் கிளம்பறேன். ஜாக்கிரதை” -என்று சொல்கிற மாதிரி சொல்லிக்கொண்டு கோபுரக் கதவைத் தாண்டவும், வேணுவும் அவர்களோடு சேர்ந்து கொண்டு வெளியேறி அந்த பனைமர உயரமுடைய கதவை மணிகள் குலுங்கிச் சத்தமிட இழுத்துப் பூட்டத் தொடங்கினான்.

பூட்டியபின் கைப்பருமனில் உள்ள சாவியோடு அப்படியே கோவிலுக்கு வெளியே சுற்றி வர ஆரம்பிப்பதுதான் அவன் வழக்கம். ஓரிரண்டு சுற்றுக்குப் பிறகு கோபுர முகப்பில் கட்டிலைப் போட்டுக் கொண்டு அப்படியே படுத்து விடுவான்.

அதற்கு ஏற்ப கோபுர முகப்பில் கட்டிலும் அதில் ஒரு கறுப்புப் போர்வையும் கிடந்தது. பட்டரும் ரமணியும் வீதியில் இறங்கியிருந்தார்கள். அழுது வடியும் மின் விளக்கு வெளிச்சத்தில் அவர்கள் நெடுந்தூரம் நடந்து ஒரு புள்ளி போலாகி காணாமலும் போனார்கள்.

வேணுவும் வெளியே கோவில் மதிலை ஒட்டி நடக்கத் தொடங்கியிருந்தான்.

இனி உள்ளே...

ஒளிந்திருந்த நான்கு பேரும் இப்போது எந்தவித பதற்றமும் இன்றி கையில் டார்ச்சுடன் அதன் வட்ட

ஒளியுடன் வெளிப்பட்டு கொடிமரம் அருகே வந்திருந் தனர்.

ஒருவன் தோளில் ஒரு தோல்பை தொங்கிக் கொண்டிருந்தது.

"என்ன ராஜரத்தினம்... ஆரம்பிக்கலாமா?"

-ஒருவன் கேட்டான்.

"இல்ல... உள்ள ஒரு ரவுண்டு அடிச்சுட்டு வருவோம். நிச்சயமா பூட்டுன கதவை காலையில அஞ்சு மணிக்கு முன்னால திறக்கமாட்டாங்க. நாம நிதானமாகவே நம்ம காரியத்தைப் பார்க்கலாம். அதுக்கு முந்தி வெளியே எந்தப் பக்கமா போறதுன்னு முடிவு பண்ணணும் அழகிரி..."

-சொன்னவன்தான் ராஜரத்தினம் என்பதுடன் அவ னைப் பார்த்துக் கேட்டவன் அழகிரி என்பதும் தெரிந்தது.

"ஈசான மூலைல ஒரு வேப்பமரம் இருக்குது. அதுல ஏறினா ஒரு கிளை மதில் சுவர் கிட்டவரை போகுது. அந்த மதில் மேல ஏறி அங்கயிருந்து நங்கூரக் கயிறு போட்டு நாம கீழே இறங்கிடலாம். நான் பகல்ல வந்தப் பவே இடத்தைப் பார்த்து வெச்சுட்டேன், ராஜரத்தினம்..." என்றான் அவர்களில் மூன்றாமவன்.

"எதுக்கும் அந்த மரத்தை ஒரு பார்வை பார்த்துடு வோமே... சரக்கோட ஏறும்போது அது பாரம் தாங்காம உடைஞ்சு விழுந்துட்டா என்ன பண்றது பரஞ்ஜோதி?"

-ராஜரத்தினம் திருப்பிக் கேட்டதில் இருந்து விரிவாக மரத்தின் மேல் ஏறித் தப்பிக்கலாம் என்று சொன்னவன் பேர் பரஞ்ஜோதி என்பதும் தெளிவாக, நான்காமவன் வாயைத் திறந்தான்.

"நின்று பேசிக்கிட்டேயிருந்தா எப்படி? நடப்போம். முதல்ல மரத்தைப் பார்ப்போம். அங்க நான் கயிறு கட்டி

ரெடியா நிக்கறேன். நீங்க வந்தா வசதியா இருக்கும்..." என்றான் அவன்.

"கடம்பன் சொல்றதும் சரிதான்... நடங்க" -என்று ராஜரத்தினம் சொல்ல, நான்காமவன் பெயர் கடம்பன் என்பதும் தெரிகிறது. அதன்பின் அவர்கள் நால்வருமாக நடக்கவும் தொடங்கினர்.

பாறைக் கற்களை சதுரம் சதுரமாக வெட்டி எடுத்து வந்து தரையை வேய்ந்திருந்தனர். அதில் பகல் பொழு தின் சூரியத்தாக்கம் ஒருவித இளஞ் சூடாக அவர்கள் காலைக் கவ்வ, அதை அனுபவித்தபடியே அவர்கள் சுற்றிச் சுற்றிப் பார்த்தபடி நடந்தனர்.

இடையில் நிஜமாலுமே ஒரு கோயில் பூனை ஒன்று கறுப்பு பந்து ஒன்று அவர்கள் முன்னால் உருண்டு ஓடுகிற தினுசில் ஓடி மறைய, ஒரு ஷணம் குப்பென்று வியர்த்தது அவர்களுக்கு.

"என்னவே இது அபசகுனம் பிடிச்ச மாதிரி... வில்லங் கமா ஏதாவது நடந்து தொலைக்கப் போகுது..." என்று முனங்கினான் அழகிரி.

"பொடலங்கா... நாம என்ன நல்ல காரியம் பண்ணவா போறோம். அது கெட்டுப் போய்டுமேன்னு கவலைப்பட. சாமி மேலயே கை வைக்கப்போறோம். நமக்கெல்லாம் சகுனம்தான் ஒரு கேடாக்கும்..." என்றான் ராஜரத்தினம்.

"அதானே... பூனைக்கே இப்படி யோசிச்சா எப்படி? இந்தக் கோவில் கதவை அடைச்சிப்பிட்டா பைரவ சாமி யான ஒரு நாய்தான் காவல் காக்குதுன்னு சொல்லிக் கிறாங்க. அது வந்தா என்னடா பண்ணுவீங்க?" என்று கையை உதறினான் கடம்பன். அவன் தோளில் தொங் கிய தோல் பை அப்போது சப்தம் எழுப்பி உள்ளே பூட்டை உடைக்கவும், கம்பிகளை அறுக்கவுமான ஆயுதங்கள் இருப்பதைச் சொல்லாமல் சொல்லின.

"நாய் வந்தா அது மண்டைல ஒரே போடு... நாயா முல்ல நாய்... எந்த காலத்துலடா சாமிங்களை நாயும் பேயும் காத்துருக்குது? வெண்ணைங்களா?"

-இது பரஞ்ஜோதி... பேச்சசோடு டார்ச் லைட் வெளிச்சத்தை உருட்டிக் கொண்டே அவர்கள் நடந்தனர்.

நான்கு கறுப்பு தூண்கள் நடக்கிற மாதிரி இருந்தது. அந்த அளவுக்கு மிதமான இருட்டு.

சப்த கன்னியர் குகைச் சன்னதி!

ராஜ்நாராயணும் பாரதியும் தங்களை மறந்து ஒருவர் மேல் ஒருவர் சாய்ந்து அமர்ந்திருந்தனர்.

உள்ளே விளக்கிலும் எண்ணை வற்றி அது மங்கத் தொடங்கி விட்டிருந்தது.

"அம்மாஞ்சி..."

"ராஜான்னு சொல்லு."

"வாய் வரமாட்டேங்கறதே..."

"வரும்... இப்பல்லாம் எந்தப் பொண்ணு புருஷனை அத்தான்னோ, ஏன்னான்னோ கூப்பிடறா... எல்லாரும் பேரைச் சொல்லித்தான் கூப்பிடறா..."

"பட்டணத்துக்காராங்களுக்கென்ன... துளியும் விதரணை கிடையாது. மட்டு மரியாதையும் கிடையாது. நான் அப்படியில்ல."

"பேர் சொன்னா மரியாதை இல்லைன்னு யார் சொன்னது? அப்படி பேர் சொல்றவா காதுல நீ இப்பச் சொன்னது விழுந்ததுன்னா உன்னை ஒரு உலகமகா அசடாத்தான் அவா பார்ப்பா..."

"பாத்தாப் பாக்கட்டும். நான் அம்மாஞ்சின்னுதான் கூப்பிடுவேன்."

"நீ அம்மாஞ்சிங்கறது என் காதுல அழுமூஞ்சின்னு விழறது... பாரதி ப்ளீஸ்."

"சரி மிஸ்டர் ராஜ்நாராயண். இப்ப ஓ. கே.யா?"

"குட்... கீப் இப் அப்!"

"பேரைப் பாரு... ஆனாலும் நீளம்."

"அதான் ராஜான்னு கூப்பிடுன்னேன்."

"சரி சரி... கூப்பிடறேன். ஆமா... மணி என்ன இப்ப...?"

-ராஜ்நாராயண் உடனடியாக கையை உதறிக் கொண்டு மங்கின வெளிச்சத்தில் பார்த்தான்.

பிறகு சற்று இருமியபடி சொன்னான்.

"எட்டு இருபது."

"என்னது... எட்டு இருபதா... ஈஸ்வரா..." -பதறினாள் பாரதி.

"எதுக்கு பதற்றப்படறே?"

"எட்டு மணிக்கெல்லாம் கோவில் நடையை அடைச் சுடுவா..."

"அப்படியா... ரொம்ப சவுகர்யமா போச்சு. அப்ப வெளிய போக முடியாதா?" ராஜ்நாராயண் படுகுஷியாக கேட்க... "விளையாடாதேள்... உங்களோட பேசினதுல நேரம் போனதே தெரியல. செத்த வெளிய எட்டிப் பாருங்களேன்" அவள் தொடர்ந்து பதைக்க, ராஜ்நாரா யண் பதிலுக்குச் சிரித்தான்.

"உங்களைத்தான்... கொஞ்சம் வெளிய எட்டிப் பாருங்கோ... கதவை அடைச்சிருந்தா அவ்வளவுதான். நீங்களும் சரி, நானும் சரி தொலைஞ்சோம்."

"என்ன பண்ணுவா... பஞ்சாயத்துக் கூட்டி நீ கெட்டுப் போயிட்டே, நானும் கெடுத்துட்டேன்னு பிலாக்கணம் பாடுவாளா... ரொம்ப சந்தோஷம். நடக்கவே நடக்கா துன்னு உங்கப்பா சொன்ன கல்யாணத்தை நாம் பண்ணிக்க ஒரு ஷார்ட் ரூட் கிடைச்சிடுத்து பாரதி..."

"ஐயோ... நான் அதுக்குக்கூட பயப்படல. சிவாலயத் துல அதுலையும் இந்த சிவாலயத்தை பைரவ ஸ்வாமி காவல் காக்கறதா ஐதீகம். பூட்டின கோவிலுக்குள் யார் இருந்தாலும் அவாளை பைரவ ஸ்வாமி தண்டிச்சுடு வாறாம். தெரியுமா உங்களுக்கு?"

"வெரி இன்ட்ரஸ்ட்டிங்... இப்படி எல்லாம் கூட இங்க டுப் விட்டுண்டு இருக்காளா? அப்ப திருடன் எவனாவது திருட வந்தா அவன் அம்பேல்னு சொல்லு..."

"ஆமாம்... அதுதான் உண்மை. முதல்ல வெளியே போவோம்" -பாரதி பேச்சோடு பேச்சாக குறுகிய அந்த குகை வாயிலை விட்டு வெளியேறக் குனிந்தபோது நாய் ஒன்றின் அசுரத்தனமான குலைப்புச் சத்தம் கேட்க ஆரம்பித்தது.

"ஈஸ்வரா" -பாரதிக்குக் குலை நடுங்கிற்று. ராஜ்நாராய ணுக்கும் பாரதி சொன்னது பொய் இல்லையோ என்று தோன்றும்போது...

"அழகிரி... ராஜரத்தினம்... கடம்பா... ஓடுங்கடா" -என்று ஒரு குரல் அவர்கள் காதில் விழுந்தது.

இருவரும் திடுக்கிட்டு குனிந்து வெளியே வந்து பார்த்தபோது நால்வர் ஓடிக் கொண்டிருக்க, அவர்களுக்குப் பின்னால் ஒன்றுக்குப் பத்தாக நாய்களின் பாய்ச்சல்!

9

"சிவபூஜையில் பிரதான இடம் வகிப்பது வில்வம். ஒரு ஒற்றை வில்வ இலை, சிவபூஜையில் ஓராயிரம் மலர்களுக்குச் சமமாகிறது. இந்த வில்வம் ஒரு கல்ப மூலிகையும் கூட. உஷ்ணம் தணிப்பதில் வில்வம் முன்னிலை வகிக்கிறது. இதற்கு நேரானது துளசி. உஷ்ணகாரம் இதன் குணம். உடலின் வெப்பத்தைத் தணிப்பதில் வில்வம் நிகரற்றது. ஒரு ஆச்சரியம்... சிவமாகிய பரமன் அழித்தல் தொழில் புரிபவன். அழிப்பது என்பது ஒரு வினை. எதை அழித்தாலும் அது ஒன்றாகி இரண்டாகிப் பிரியும். இறுதியில் சாம்பலே மிஞ்சும். இந்த வினையால் வெப்பம் உருவாகும். அணு விஞ்ஞானம் இதன் அடி ஒற்றியே உள்ளது. சிவத்தைத் தியானிக்கும் மனதிலும் காம, குரோத, மாச்சரியங்கள் அழியும். அதனால் உருவாகும் வெப்பம் தணியவே வில்வம் முன் நின்றது. வில்வார்ச்சனை என்பது வெப்பம் தணிப்பது. அகத்திலும் புறத்திலும் வெப்பம் தணிய வைப்பது. உடலில் உயிரும் வெப்பச் சுரளாகவே உள்ளது. வெப்பத்திடம் இயக்க கதியே பிரதானம். அது குளிர்ந்தால் இயக்கமற்ற சமநிலை வாய்க்கிறது.

சிவமும் வில்வமும் இப்படிப் பல சூட்சுமங் களைக் கொண்டு விளங்குவதை என்னென்பது?"

நாய்களின் பாய்ச்சலும், திருடர்களின் ஓட்டமும் அந்த இரவில் கரிய பிம்பங்களாகத் தெரிய, பளிச் சென்று வானில் மேக விலகலில் பூர்ணச் சந்திரனின் பால் ஒளி கீழே சிந்தத் தொடங்கிற்று.

சப்த கன்னியர்களின் குகைக் கோவிலை விட்டு வெளியே வந்து நின்றுவிட்ட ராஜ்நாராயணும் பாரதியும் எதிரே தெரியும் காட்சியில் உறைந்து போய் விட்டிருந் தனர்.

ஒன்றுக்கு ஒன்பது நாய்கள்!

அவ்வளவும் புலிப் பாய்ச்சல் பாய்ந்தன. ஒவ்வொரு திருடனையும் இரண்டு மூன்று நாய்கள் என்று மடக்கி வளைத்தன.

அவர்களும் விழுந்து புரண்டனர்.

தங்கள் பலத்தை எல்லாம் காட்டி அவைகளைத் தூக்கி எறிந்து விட்டு அருகிலேயே மதிலை ஒட்டி வளர்ந்திருக்கும் மரத்தின் மேலேயும் தாவி ஏறினர்.

ஒருவனின் லுங்கியை ஒரு நாய் கவ்வி இழுத்தது. ஒருவனின் முதுகுப் பக்கமாய்த் தாவி சட்டை காலரைப் பிடித்து இழுத்தது ஒன்று. அவர்களும் எதிர்த்துப் போராட சளைக்கவில்லை.

ராஜ்நாராயணைக் கட்டிக் கொண்டு விட்டிருந்தாள் பாரதி.

"பாரதி... என்ன இதெல்லாம். இவ்வாள்ளாம் யார்? எங்க இருந்து வந்தது இத்தனை நாய்கள்?"

"பேசாதீங்கோ... சுவாமியைப் பிரார்த்தனை பண்ணுங்கோ... நான் சொல்லலை? ராவானா கோவிலை கால பைரவர் காவல் காப்பார்னு அதான்... அதேதான்..."

"அப்ப இவாள்ளாம்...?"

"தெரியாது... நிச்சயமா நல்ல மனுஷாளா இருக்க வாய்ப்பே இல்லை..."

"அப்ப திருட வந்திருப்பாளோ?"

"இருக்கும்... இருக்கும்" -அந்த இருக்கும் என்னும் ஆமோதிப்போடு ராஜ்நாராயணை மேலும் இறுக்கக் கட்டிக் கொண்டாள் பாரதி.

அந்தப் பரபரப்பான ரத்தம் உறையும் வேளையிலும் அவனுக்கு அவளது அணைப்பு பரம சுகமாக இருந்தது.

தன்னை மறந்தான். கட்டிக்கொண்டு நிற்பவள் கூந் தலை வருடிக் கொடுத்தான். காதில் குரைப்புச் சத்தமும் மரத்தடிப் போராட்டமும் நீடித்துக் கொண்டிருந்தது. சட்டென்று, "போறும்... இங்க நின்னது... வாங்க உள்ள போயிடுவோம்" என்று பாரதி அவனைக் கட்டி அணைத்த நிலையில் திரும்பக் குகைக் கோவிலுக்குள் நுழைய ஆரம்பித்தாள்.

உள்ளே ஒரு பேராச்சரியம் காத்திருந்தது.

சற்றுமுன்வரை அணைந்து விடும் நிலையில் எரிந்து கொண்டிருந்த ஒரே ஒரு அகல் விளக்கோடு மேலும்

பல விளக்குகள் யாரோ வந்து ஏற்றி வைத்து விட்டுப் போனது போல பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தன.

ராஜ்நாராயண் உண்மையில் பிரமித்துப் போனான்.

"பாரதி... என்ன இது... உள்ள இத்தனை விளக்கு எப்படி வந்தது?"

"எனக்கும் தெரியலை... நானும் உங்க கூடத்தானே இருக்கேன்?"

"என்ன பாரதி... இது மாயம்... நாம மட்டும் தானே இருக்கோம் இங்க?"

-அவள் பார்வை சுற்றிச் சுழன்றது. தீபங்களிடமும் வெளிச்சப் பொலிவு!

"பிரமிப்பா இருக்கு பாரதி... நம்ப முடியலை."

"அதான் எங்க கோவில்..."

-அவன் மார்பை விட்டு விலகாமல் சொன்ன பதிலைத் தொடர்ந்து வெளியேயும் குரைப்புச் சத்தம் சட்டென்று நின்ற மாதிரி இருந்தது.

எங்கும் நிசப்தம்.

சில் வண்டுச் சத்தம் கூட இல்லாத நிசப்தம். அவர்கள் இருவரும் விடும் மூச்சுக் காற்றுச் சத்தம் மட்டும் டி.டி. எஸ். சிஸ்டத்தில் விசேஷமாய்ப் பதிய வைத்து ஒலிக்க வைக்கிறாற்போல அவர்கள் காதில் ஒலித்தது.

"பாரதி..."

"உம்..."

"வெளியே சத்தம் நின்னுடுத்து."

"ஆமாம்."

"இப்ப என்ன பண்ணலாம்?"

"எனக்குத் தெரியாது. பயமா இருக்கு."

"அதுக்காக இப்படியே கட்டிண்டு நிக்க முடியுமா?"

"பயமா இருக்கு அம்மாஞ்சி..."

"முண்டம்... ராஜான்னு கூப்பிடு..."

"அதுவா இப்ப முக்கியம்... நான் இங்கேயே இருக்கேன். நீங்க வெளிய எட்டிப் பாருங்கோ..."

"குட்... அதான் சரி. நீ இங்கேயே இரு. நான் என்ன ஆச்சுன்னு பாக்கறேன்..."

-ராஜ்நாராயண் அவளை விலக்கினான்.

மெல்ல குகைக்கு வெளியே சென்று நின்றான். எதிரில் 'ஹோ'வென்று புறப்பிரகார வெளி. எங்கும் யாரும் இல்லை. சந்திரனின் பால் ஒளி ஸ்ப்ரே செய்த மாதிரி மினுங்கிக் கொண்டிருந்தது.

நடந்தான்.

மிக இதமான தென்றல்... நாய்க்குட்டி போல அதனிடம் ஒரு ஓட்டம்.

மனதுக்குள் மட்டும் பக்... பக்...

ஆங்கிலப் படங்களில்கூட அவன் இப்படி ஒரு பயம் கலந்த சூழலைப் பார்த்ததில்லை.

சுதாரிப்பாக பூனைபோல நடந்தபின் மரத்தடியில் போய் நின்றான். திருடர்களின் துணிகள் கிழிந்து விழுந்து கிடந்தன.

அவர்கள் எப்படியோ தப்பி ஓடி விட்டார்கள் என்பது யாரும் சொல்லாமலே புரிந்தது.

அண்ணாந்து ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் நடக்க ஆரம்பித்தான்.

அமைதியான புறப் பிரகாரப்பாதை வா வா என்கிறாற் போல வரவேற்றது.

நடந்து கொண்டே இருந்தான்!

✠ ✠ ✠

கோபத்தின் உச்சியில் இருந்தார்வைத்தியநாத பட்டர். அருகில் கண்களைக் கசக்கிக் கொணடு அன்ன பூரணி, சற்று தள்ளி சந்திரிகா!

அவளிடமும் பொலிவில்லை.

பட்டர் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து விட்டு கடிகாரத்தைப் பார்த்தார். அந்த நாளைய லண்டன் கடிகாரம். மணி பத்தரையைக் கடந்து விட்டிருந்தது.

அப்போது அங்கே தீட்சிதரும் வந்து கொண்டிருந்தார்.

"வாரும்... உமக்காகத்தான் காத்துண்டிருக்கேன்" -வரவேற்றார் பட்டர். ஆனால், குரலில் கோபத் தொனி.

"என்ன வைத்தி... என்ன குழப்பம்?"

"குழப்பம்தான்... நம்ப வாழ்கைக்கையே பெரிய குழப்பம் தானே?"

"விஷயத்தைச் சொல்லு..."

"என் மருமான் ராஜ்நாராயண் உங்காத்துலதான் தங்கியிருந்தானா?"

"ஆமாம்..."

"இப்ப அவன் எங்கேன்னு தெரியுமா?"

"தெரியல... பெட்டி படுக்கை எல்லாம் இருக்கு. ஆளைக் காணலை"

"இங்கேயும் என் பொண்ணு பாரதியைக் காணலை."

-அதிர்ந்தார் தீட்சிதர்.

"என்ன பாக்கறேள்... என் தலைல நெருப்பை அள்ளிக் கொட்டிட்டு அவனோட சேர்ந்து ஓடிட்டா ஸ்வாமி... ஓடிட்டா!"

-பட்டர் வெடித்தார்.

"சேச்சே... அப்படி எல்லாம் இருக்காது. வாயைக் கழுவு."

"வாயை மட்டுமா... தலையையும் முழுக வேண்டியதுதான்..."

"அவசரம் வேண்டாம். அது எப்படி அவா அப்படித் தான் நடந்துண்டு இருப்பான்னு சொல்ற நீ? ராஜ்நாராயண் என் ஆத்துல தங்கி இருக்கிறது எப்படி உனக்கும் உன் பொண்ணுக்கும் தெரியும்?"

"ஆமா... பெரிய சிதம்பர ரகசியம் பாரும் இது. கோவில் வாட்ச்மேன் வேணு, அவளை அவனோடப் பார்த்ததா சொன்னான். இருக்காதுன்னுதான் நினைச் சேன். இப்பன்னா தெரியறது."

"அவன் எங்கப் பார்த்தானாம்?"

"கோவில் கிட்டதான்... வேற எங்க?"

-பட்டர் விளக்கமளிக்க, தீட்சிதர் முகம் பளிச்சென்று உருமாறியது. அவரது செவ்வரிக் கண்களில் ஒரு புது பிரகாசம்.

அமைதியாக எதையோ, ஆழமாக யோசிக்க ஆரம்பிக்கத் தொடங்கினார்.

"என்ன ஸ்தம்பித்துட்டீரா? நீர்தான் சொன்னீர்... இரண்டு பேரும் சேரக் கூடாதுன்னு. ஆனா, இப்ப ஓடியே போய்ட்டா, அதுவும் உங்களாலையே..."

"என்னாலையா...?"

"இல்லையா பின்னே... நீர்தானே ஊரை விட்டு கிளம்ப இருந்தவனை கூட்டிண்டு வந்து அடைக்கலம் கொடுத்தது..."

-பட்டர் பேச்சில் குத்தினார். ஆனால், தீட்சிதரிடம் துளியும் கோபமில்லை. முகத்தில் ஒருவித மந்தகாசப் புன்னகை.

அன்னபூரணி அதை உணர்ந்தவளாக, "என்னண்ணா... நாங்க இங்க இடி விழுந்தா மாதிரி இருக்கோம். நீங்க சாதாரணமா சிரிக்கிறேளே..." -கேட்டாள்.

"பதற்றப்படாதே அன்னம்... தப்பா எதுவும் நடக்கலை. நடக்கவும் நடக்காது. எல்லாம் சரியாத்தான் நடந்துண்டு இருக்கு..."

"என்னண்ணா சமாதானம்?"

"சமாதானமில்லை... பொழுது விடியட்டும். அப்ப தெரியும் உங்களுக்கு..."

"என்ன தெரியும்... கோவில் பட்டர் பொண்ணு அப்பா, அம்மா பேச்சைக் கேக்காம ஓடிப் போய்ட்டாங்கறதா?"

-பட்டர் குரல் எரிச்சலோடு இடையிட்டது. தீட்சிதர் அடுத்த ஷணம் படுகோபமானார்.

"வைத்தி... நீ ரொம்ப அலட்டிக்கிறே... நீ தினமும் பூஜிக்கிற அந்த ஈஸ்வரனைக் கூட நம்பாம நீ இப்படிப் பேசறது பெரிய தப்பு.

"இந்த ஊரும் சரி, நாமளும் சரி, அந்த ஈஸ்வரனால் ஆட்டி வைக்கப் பட்ற பொம்மைங்கதான். ஞாபகம் வெச்சுக்கோ..."

"அது சரி... விடிஞ்சா தெரிஞ்சுடும்னு பூடகமா சொன்னீரே... என்ன தெரியும்?

"தெரியும்... ஒரு புது உண்மை. இந்த நிமிஷம் நாம எல்லாரும் அந்த சிவத்தை தியானிச்சா போதும் நகரு" -பட்டரை தள்ளிக்கொண்டு நடந்தவர் கூடத்தில் காலண்டரில் தொங்கியபடி இருந்த நடராஜப் பெருமான் படம் முன் போய் நின்றார். கைகளைக் கூப்பிக் கொண்டு அப்படியே மண்டியிட்டும் அமர ஆரம்பித்தார்.

அதன் பின் தியானத்தில் மூழ்கி விட்டார்!

அவர்களுக்கோ அதிர்வுக்கு மேல் அதிர்வு!

✠ ✠ ✠

குகைக் கோவிலை விட்டு பாரதியும் வெளியே வந்திருந்தாள்.

பார்த்து விட்டு வருவதாகச் சொல்லி வெளியே போன ராஜ்நாராயண், எங்கே போனான் என்றே தெரியவில்லை.

பயங்கர நிசப்தம் அவளை மிரட்டியது.

இதயம் தாறுமாறாகத் துடித்தது.

'அம்மாஞ்சி...' என்று கத்தக் கூட திராணியில்லை. இருந்தும் கத்தினாள்.

"அம்மாஞ்சி..."

-குரல் பிரகாரங்களில் மோதி எதிரொலித்தது. ஆனால், பதில் குரல்தான் ஒலிக்கவேயில்லை. அவள் கண்களைக் கண்ணீர் ஆக்ரமித்தது.

நடந்தாள்... பிரகார வெளியில் ராஜ்நாராயண் போன அதே திக்கில்...

பால் நிலா வழிகாட்டிக் கொண்டு ஆவளோடு சென்றது.

கோவில் முழுவதையும் ஒரு வட்டம் சுற்றி வந்தவள், உள் கூட்டுக்குள் பிரவேசித்தாள். உள்ளேதான் நாயன் மார்கள் சந்நிதி, கால பைரவர் சந்நிதி, தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், துர்க்கை, மகாலட்சுமி என்று தனித் தனியாக சந்நிதிகளைக் கொண்டுள்ளனர்.

அவ்வளவு சுவாமிகளையும் பார்த்துக்கொண்டே மிரள மிரள சுற்றி வந்தவள், ஒரு இடத்தைப் பார்த்து அப்படியே வாயைப் பிளந்தாள்.

அங்கே...?

10

'எண்ணங்களால் ஆனது மனது என்பார்கள். மனதிற்கொரு வடிவம் கொடுக்க முயன்றபோது, அது ஒளிக்கதிர்களால் உருவான ஒரு லிங்க ஸ்வரூபம் போலத் தோற்றமளித்தது.

இதையே ஆத்மலிங்கம் என்று கண்டு கொண்ட ஞானியர்கள் தங்களுக்குள்ளேயே அந்த ஆத்மலிங் கத்தைப் பூஜிக்கலானார்கள்.

இதைப் புறத்தில் இருந்து பார்க்கும்போது நமக்கு நாமே பூஜித்துக் கொள்வது போலவும், நாமே சிவம் போலவும் தோன்றும்.

ஆத்மா, பரமாத்மா தத்துவப்படி நமது ஆத்ம சிவம் அந்த பரமசிவத்துடன் சென்று கலக்க உகந்த இந்த பூஜை நம்மை அற்புதமாக வழி நடத்திச் செல்லக் கூடியது.

ஆத்மலிங்கத்தை உணர்ந்து பூஜிப்பவர்கள் சொன்னது நடக்கும். கேட்டது கிடைக்கும். இத்தகைய பூசனைகள் புரிந்தவர்கள் எத்தனை பிறப்புகள் எடுத்தாலும் அவர்களை பூஜா சக்திகள் வழி நடத்திச் சென்று உலகின் அத்தனை லிங்க சொரூபங்களையும் அவர்களுக்குக் காட்டியருளும்!'

விக்கித்துப்போய்விட்ட பாரதிக்கு எதிரில் கன்னங்க ரேல் என்று நாய் ஒன்று வெறித்த விழிகளுடன் நின்று கொண்டிருந்தது.

அதற்கு சில அடி தொலைவில் அதனிடம் வசமாக அகப்பட்டுக் கொண்டவனைப் போல ராஜ்நாராயண்!

பாரதி என்ன செய்வது என்று தெரியாமல் கைகளைப் பிசைந்து கொண்டாள்.

ராஜ்நாராயண் அதன் எதிரில் ஓடுவதற்காக முயலும் போதெல்லாம் அதுவும் அவனைத் துரத்தத் தயாரானது.

"பாரதி... வசமா மாட்டிண்டுட்டேன். இந்த நாயை உனக்குத் தெரியாதா... கூப்பிட்டுப் பாரேன்..." கிசுகிசு குரலில் அவன் கெஞ்சுவதைக் கேட்டு மருண்டுபோன பாரதி.

"அம்மாஞ்சி... நானே இந்த நாயை இப்பத்தான் பாக்கறேன்" என்றாள்.

"கோவில் நாய்... காவல் நாய்னுல்லாம் சொன்னியே, திருடங்களை விட்டுட்டு என்னை வந்து கடிக்கப் பாக்கறதே..."

"இல்ல அம்மாஞ்சி... ஒண்ணும் பண்ணாது இது. நீங்க கையைக் கூப்பி காலபைரவரை பிரார்த்தனை பண்ணிக் குங்கோ நானும் பண்றேன்..." -என்றவள் கைகளைக் கூப்பி கண்களை இடுக்கிக்கொண்டு பிரார்த்திக்கத் தொடங்கினாள். ஆனால் அவன் யோசித்தான்.

ஒரு நாயைக் கடவுளாக நினைப்பது மடத்தனமாகத் தோன்றியதோ என்னவோ அதையே முறைத்துப் பார்த்தான்.

அவன் அப்படி நினைப்பதும் அதற்குப் புரிந்ததோ என்னவோ... அது அவனை நோக்கி இளைத்த நாக்கோடு ஒரு அடி முன்னேறியது.

"நோ... நோ... கிட்ட வராதே..." அலறினான்.

அது அதற்கெல்லாம் அசரவில்லை 'கிர்ர்ர்...' என்று செருமியபடி ஒரே பாயாக அவன் மேல் பாய்ந்தது. சட் டென்று ஒதுங்கிக் கொண்டவன் அங்கிருந்து பயத்துடன் ஓட ஆரம்பித்தான்.

இருண்ட பிரகாரத்தில் அவன் ஓட, நாயும் துரத்த கண் திறந்து பார்த்த பாரதியும் பின்னலேயே ஓடினாள். ஒரு கட்டத்திற்கு மேல் ஓட முடியவில்லை.

இருள் கண்ணைக் கரித்தது.

சுற்றிலும் ஓங்குதாங்கான கல் தூண்களின் வரிசை. விஸ்வரூபம் எடுத்து நிற்கும் கரிய நிற ராட்சசன்களைப் போலத் தெரிந்து பயமுறுத்திற்று.

"அம்மாஞ்சி... அம்மாஞ்சி..." -நடுங்கும் குரலில் பாரதி அவனைக் கூப்பிட்டுப் பார்த்தாள்.

போன அலை திரும்பினது போல அந்தக் குரல் ஒலி எதிரொலியாகத் திரும்பி வந்து அவள் காதில் மோதியது"

"அம்மாஞ்சி..." அவளிடம் அழுகை வெடிக்கத் தொடங்கிவிட்டது. பதிலுக்கு நாயின் குரைப்புச் சத்தமோ, ராஜ்நாராயணின் பதில் குரலோ எதுவும் கேட்கவில்லை.

"அம்மாஞ்சீஈஈஈ..." அவளிடம் துடிப்பு, தொடர்ந்து தடவிக் கொண்டே நடந்தாள். நல்ல வேளை, செல்வ பிள்ளையார் சன்னதி கண்ணில் பட்டு அங்கே ஒரு அகல்விளக்கு எரிந்தபடி இருந்தது.

ஓடிப்போய் அந்த விளக்கை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

கையில் விளக்குடன் முகத்தில் அதன் ஒளிபட அவள் நடக்கையில் கால் கொலுசு கலீர் கலீர் என்று சப்திக்க பார்க்கவே வினோதமாக யாரோ ஒரு தேவதை அந்த இருளில் நடந்து போவது போல இருந்தது.

நாலாபுறமும் பார்வையைச் சுழல விட்டுக் கொண்டே நடந்தாள்.

வீட்டை விட்டு கோவிலுக்குப் புறப்பட்டபோது இப்படி எல்லாம் மாட்டிக் கொண்டு தவிக்கப் போகிறோம் என்பதை கற்பனை கூட செய்து பார்த்திருக்கமாட்டாள்.

ஒரு ஷணம் வீட்டைநினைத்து நெஞ்சில் இடி இறங்கியது போல நடுங்கியவள், அப்படியே தேங்கி நின்று சின்னக் குழந்தை போல அழவும் தொடங்கினாள்.

அந்த அழுகுரல் கூட அடர்ந்த அந்த இருளில் ஒரு தினுசாக எதிரொலித்தது. நடுவில் வவ்வால்கள் சில பளிச்சென்ற பார்வையுடன் ஏவுகணை பறந்த மாதிரி அவள் தலைக்கு மேலே குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து சென்றன.

திடீரென்று இடையிட்டது ராஜ்நாராயணின் குரல்.

"பாரதீஈஈ...!"

"அம்மாஞ்சீஈ..." -பாரதியும் உயிர் வந்தவளாகப் பதில் குரல் கொடுத்தாள்.

"பாரதிஈஈஈ... அப்படியே வா... நான் இடப்பக்கமாக துர்கை சன்னதிகிட்ட இருக்கேன்...."

"இதோ வந்துட்டேன்..."

பாரதி இடம் தெரிந்து வேகவேகமாக நடந்தாள்.

துர்கை சன்னதியும் தெரிந்தது. அருகில் அபிஷேக நீர் சென்று விழும் கல் தொட்டி. அதில் அமர்ந்த நிலையில் வெளியே தலை மட்டும் தெரிய எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜ்நாராயண்.

"அம்மாஞ்சீஈ..." -பாரதியும் ஓடிச்சென்று அருகில் நின்றாள்.

"நல்லவேளை, இந்த கல்தொட்டியில இறங்கி தப்பிச் சேன்... அந்த நாயும் அந்த பக்கமா ஓடிப்போயிடிச்சுதாட் டம் இருக்கு..." என்றவன் இழுத்துப் பெருமூச்சு விட்டான்.

"எனக்கு உசுரே போயிடுத்து. முதல்ல வெளிய வாங்கோ. நாம வெளிய போற வழியைப் பார்ப்போம். திரும்ப அந்த நாய் வந்துடப்போறது..." பாரதி படபடத் தாள்.

"பாரதி, நாம வெளியபோக ஒரு வழி இருக்கு... சொன்னா ஆச்சரியப்படுவே. இதோ இந்த கல் தொட்டிக்குள்ளேயே ஒரு வழி இருக்கு..."

"நிஜமாவா?" -பாரதி விளக்குடன் எட்டிப் பார்த்தாள். அபிஷேக நீர் உருண்டு ஓடும் சாக்கடை வாராவதிதான் ஒரு ஆள் நுழையக் கூடிய விதத்தில் கிடந்து கண்ணில் பட்டது.

"உவ்வேவ்... இந்த சாக்கடை வழியாவா?"

"இல்ல பாரதி... அபிஷேக தண்ணி போற வழி இது கிடையாது. இது இப்ப நான் இங்க ஒளியவும் தெரிய வந்தது. நான் உள்ள போய்ப்பார்த்தேன். குகை மாதிரி போறது!"

"என்ன அம்மாஞ்சி சொல்றே... இங்க ஏது வழி?"

"வந்து பார் காட்றேன்..."

"ஐயோ வேண்டாம்... எனக்கு பயமா இருக்கு..."

"அட பைத்தியமே... சும்மா வா! நிச்சயமா இது கோவி லுக்கு வெளியதான் எங்கையாவது போய் முடியும்."

"அம்மாஞ்சி, வேண்டாம் அம்மாஞ்சி. இந்த கோவில் விஷயம் பத்தி உங்களுக்குத் தெரியாது. பரம்பரை பரம்பரையா இங்க ஊழியம் பண்ற குடும்பம் எங்க குடும்பம். எனக்கே இதெல்லாம் புதுசா தெரியறது."

"சரி... நீ இங்கேயே புலம்பிண்டு நில்லு. நான் போய் பாத்துட்டு வரேன். அந்த விளக்கை இப்படி கொடு."

"அம்மாஞ்சி..."

"அடக்கொடுன்னா..." -அவளை அதட்டி அவளிடம் இருந்து விளக்கை வாங்கிக்கொண்டான். பின் அப்படியே உடம்பை மடித்து அந்த கல் தொட்டிக்குள் குனிந்த நிலையில் துவாரத்தில் நுழைய ஆரம்பித்தான்.

விளக்கின் ஒளி உள்ளே இருட்டை விலக்கியபடி வழியைக் காட்டியது. நூலாம் படைகள் பிசுபிசுப்போடு முகத்தில் ஒட்டி அறுந்து போயின. திடுதிடுவென்று சில எலிகள் ஓடி பயமுறுத்தின. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு கசட்டு வாசம் மூக்கில் ஏறியது. முட்டி

போட்ட நிலையில் நிதானமாகத்தான் முன்னேற முடிந்தது. ராஜ்நாராயணுக்கே ஒரு ஷணம் தான் தப்பான ஒரு திசையில் போகிறோமோ என்று தோன்றியது.

திரும்பி விடுவது புத்திசாலித்தனம் என்று ஒரு எண்ணம் அரும்பிய நொடி, அந்தப் பாதை முடிந்து உள்ளே படு விஸ்தாரமான அறை போன்ற ஒரு பாகம் தெரிந்தது.

நிமிர்ந்து நிற்கவும் முடிந்தது. அப்பாடா...!

நிமிர்ந்து விளக்கோடு ஊடுருவியபோது ஈரக்குலையே மரவட்டை போல சுருண்டு விடுமளவு விளக்கின் ஒளியில் எதிரில் ஒரு காட்சி.

கம்பீரமாக இடுப்புயரத்திற்கு ஒரு நடராஜ விக்கிரகம். அதன் நாட்டிய கோலத்தின் திருவாச்சியின் மேல் ஒரு பாம்புக் கூட்டமே நெளிந்து கொண்டிருக்க, நடராஜ மூர்த்தியின் காலடியில் நொறுங்கின நிலையில் ஒரு மனித எலும்புக் கூடு!

11

'மேகசிவம் என்றும் ஒன்றுண்டு. வானில் சூரியன் உதிக்கும் வேளையில் நேர் எதிர் மேற்குத் திசையில் கார்மேகங்கள் எல்லாம் ஒன்று கூடி சிவலிங்க சொரூபம் போல சில நேரங்களில் தெரியும். அதை சூரியனும் வணங்குவதற்காக கிழக்கில் உதித்தெழுகிறாற் போலத் தோன்றும்.

இது ஒரு அபூர்வக் காட்சி. இந்த மேகச் சிவத்தைத் தரிசித்தும், தியானித்தும் வணங்கினால் பிரபஞ்ச ஞானம் அவ்வளவும் சித்திக்கும்.

ஒரு தற்செயல் தோற்றம்தானே எனக் கருதாமல் இயற்கையின் அற்புதமாக அதைக் கருதியும் உளப்பூர்வமாகவும் தியானிப்பவர்களுக்கு வெகு விரைவில், தான் யார் என்பதில் இருந்து உயிர்களின் ஜனன, மரண காரண காரியங்கள் அவ்வளவும் புத்தியில் புரியத் தொடங்கி விடும்.

மலைத் தலங்களில் பல ஞானியர் இந்த அபூர்வ மேகச் சிவத்துக்காகத் தவமிருப்பார்கள்.'

ராஜ்நாராயண் பார்த்த அந்த அபூர்வக் காட்சி ஒரு கணம் அவன் நெஞ்சையே அடைத்தது. அந்த நடராஜ உருவின்மேல் நெளிந்தபடி கிடந்த சர்ப்பங்களும் அவனையும் தங்கள் மேல் பாய்ந்த விளக்கொளியையும் கண்டு கண்கள் கூசினாற் போல ஒன்றின் மேல் ஒன்றாகப் புரண்டு நெளிந்தன.

ராஜ்நாராயண் திக்கு முக்காடலோடு அதை வெறித்த நிலையில் அந்த சிதைந்த எலும்புக் கூட்டையும் பார்த்தான்.

அடுத்த நொடியே 'சிலீர்' என்று தலைப் பாகத்தில் ஒருவித வலி. கண்ணிரண்டும் அடைத்துக் கொண்டு வருவதுபோலத் தோன்றியது அவனுக்கு. இனியும் அங்கு நின்று அதைப் பார்ப்பது ஆபத்து என்று உள்ளுணர்வு சொல்லும் போதே பல நூறுப் புரவிகளின் குளம்படிச் சத்தம் அவன் காதுகளில் ஒலிக்க ஆரம்பித்தது.

ஊருக்குள் நுழைந்த புதிதில் தோன்றிய அதே உணர்வு. நல்ல ஆகிருதியான புரவி ஒன்றின்மேல் சிவலிங்கத்தை அணைத்தபடி ஒருவர் அமர்ந்திருக்க, அந்தப் புரவியும் அசுரவேகம் காட்டியபடி ஓடிக் கொண்டிக்கிறது.

பின்னாலும் பல நூறு புரவிகளின் பாய்ச்சல்.

கிறுகிறுவென்று தலையைச் சுழற்றிக்கொண்டு மயக்கம்வேறு வந்ததில் அப்படியே விழுந்தான். கை விளக்கு கீழே விழுந்ததில் அணைந்த சிதறியது.

எங்கும் ஒரே இருள்மயம்.

மிக மெலிதாக, "அம்மாஞ்சி அம்மாஞ்சி" என்று கல் தொட்டி அருகில் நின்றபடி பாரதி குரல் கொடுப்பது மட்டும் அங்கே ஊடுருவியது.

✠ ✠ ✠

அர்த்த ராத்திரியைக் கடந்து மணி மூன்றாகி விட்டிருந்தது. வைத்யநாதபட்டரும், அன்னபூரணியும் தூக்கம் பிடிக்காமல் கற்சிலை போல அமர்ந்து கொண்டிருந்தனர். 'விடிந்தால் பல உண்மைகள் தெரிந்து விடும்' என்று பூடகமாய் பேசியிருந்த நீலகண்ட தீட்சிதர் எப்போதோ கிளம்பிப் போய் விட்டிருந்தார்.

"இப்படியே கொட்டக்கொட்ட முழிச்சிண்டிருந்தா ஆச்சா... பொழுது விடியட்டும், அப்புறமா என்ன பண்றதுன்னு யோசிக்கலாம்" -அன்னபூரணி இடையில் பேசிப் பார்த்தாள்.

"உனக்குத் தூக்கம் வந்தா தூங்கு அன்னம். என்னால தூங்க முடியாது. எனக்குத் தூக்கம் போயிடுத்து..." -என்ற பட்டர், எழுந்து போய் ஊஞ்சலில் அமர்ந்தார். அந்த வீட்டின் நடு மூலையில் அமர்ந்த நிலையில் அப்படியே தூங்கிப்போயிருந்தாள் சந்திரிகா.

"அவளை எழுப்பி ஒழுங்கா படுக்க வை..." என்றார் பட்டர். அன்னபூரணியும் ஒரு பாயை விரித்துத் தலையணையைப்போட்டு விட்டு வந்து சந்திரிகாவை எழுப்பினாள்.

"இந்தாடி... எழுந்திருடி... எழுந்திருந்து அந்தப் பாய்ல போய் படு. எழுந்திரு" -உசுப்பி எழுப்பி, சந்திரிகாவைப் படுக்க வைத்து விட்டு பட்டர் எதிரில் வந்து அமர்ந்து கொண்டாள் அன்னபூரணி.

"நீயும் போய்ப் படு... எதுக்கு என் முன்னால வந்து உக்கார்றே?"

"இல்ல... நீங்க இப்படி உக்காந்திருக்கும்போது எனக்கு மட்டும் தூக்கம் வருமா?"

"ஆமா... இதுக்கொண்ணும் குறைச்சலில்ல. ஆனா, பொண்ணை ஒழுங்கா வளர்க்கத் துப்பில்லை."

"நீங்க அவசரப்படறேள். பாரதி நல்ல பொண்ணுன்னா... நீங்க நினைக்கற மாதிரி எதுவும் ஆகியிருக்காது..."

"அப்ப எங்கடி போனா உன் பொண்ணு. எங்க போனா? சொல்லு பார்ப்போம்."

"எனக்குச் சொல்லத் தெரியலைன்னா... ஆனா என் மனசுக்கு எல்லாம் நல்லதுக்குதான்னு தோணறது"

"மண்ணாங்கட்டி. இப்படிப் போலியா சமாதானப் படுத்திக்க என்னால முடியாது. தெரிஞ்சுக்கோ..." -அந்த நடுநிசியில் அனல் தகிக்கப் பட்டர் பேச, அன்னபூரணியும் அதைக் கேட்டு மருகும்போது "சாமீ...ஈ...ஈ" என்று ஒரு குரல்!

"யாரது?" -வெளிப்பக்கமாய் எட்டிப் பார்த்தார் பட்டர்.

வாசல் பக்கமாய் ஒரு உருவம், கருப்பாக நிழலாடியது.

"யாரது இந்த நாழியில...?" -எழுந்து துண்டை உதறிக்கொண்டு நடந்தார் பட்டர். வெளியே கோவிலுக்குள் திருடப் புகுந்த திருடர்களில் ஒருவனான ராஜ ரத்தினம் நின்று கொண்டிருந்தான்.

"யாருப்பா நீ... என்ன வேணும் உனக்கு?" -பட்டர் கேட்ட மறுநொடி பொதேலென்று அவர் காலில் விழுந்தான் ராஜரத்தினம். "சாமி எங்களை மன்னிச்சுக் காப்பாத்துங்க சாமீ... உங்களாலதான் எங்களைக் காப்பாத்த முடியும்..." என்று தேம்பியழத் தொடங்கினான்.

"யாருப்பா நீ... நீ என்ன சொல்றே... எனக்கு ஒண்ணும் புரியலையே..."

"விபரமாச் சொல்றேன் சாமி. கொஞ்சம் வாங்க..."

"எங்க?"

"வாங்க சாமி சொல்றேன். அந்த ஈஸ்வரன்தான் உங்களை இந்த நேரத்திலயும் முழிச்சுட்டிருக்க வெச்சுருக்கான். வாங்க சாமி..." -ராஜரத்தினம் வெலவெலத்துப் போய்த்தான் பேசினான். கழுத்து, கை, மணிக்கட்டுப் பக்கம், மார்புப் பக்கமெல்லாம் ஒரே ரத்தச் சகதி.

பட்டருக்கு ஒரே பதைபதைப்பாகிவிட்டது.

"என்னப்பா நீ? யாருன்னே சொல்லாம வா... வான்னு கூப்பிட்டா என்ன அர்த்தம்? திருடன்தான் இந்த நேரத்துல வருவான். நானே இங்க நொந்து போய்க் கிடக்கறேன்..."

"சாமி, நான் உண்மையைச் சொல்லிடறேன். நானும் ஒரு திருடன்தான் சாமி. அதுலையும் சாதாரண திருடங்க இல்லை. இந்த ஊர் மரகதலிங்க சுவாமியையே களவாட வந்தவங்கதான் நானும் என் கூட்டாளிகளும். ஆனா நாங்க இப்ப ஒரு நாய்க் கூட்டத்துக்கிட்ட மாட்டிக்கிட்டு படாதபாடு படுகிறோம். நான் மட்டும் எப்படியோ தப்பிச்சு ஓடி வந்தேன். உங்க வீட்ல விளக்கெரியவும் நின்னு பார்த்துட்டுத்தான் கூப்பிட்டேன்...

"சாமி, முதல்ல என் சகாக்களை நாயிங்க கிட்டயிருந்து காப்பாத்துங்க. நாங்க இப்ப இந்த சாமியோட சக்தி எப்படிப்பட்டதுங்கறதை நல்லாவே புரிஞ்சுக்கிட்டோம் சாமி... நல்லாவே புரிஞ்சுக்கிட்டோம். திருடங்கதானே நல்லா அனுபவிங்கடான்னு விட்டுடாம தயவு செஞ்சு வந்து காப்பாத்துங்க சாமி..." -ராஜரத்தினம் அவர் காலில் விழுந்து கதறினான்.

சப்தம் எதிர் வீடு, பக்கத்து வீடு என்று எல்லோரையும் எழுப்பி விட்டது. எல்லாருமே வாசலில் வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார்கள்.

திருவேங்கடம் என்பவர் கொட்டாவி பிரிய, "என்ன சாமி... என்ன கலாட்டா?" என்று சற்று முன்னால் வந்தார்.

"என்னன்னு தெரியல... இந்த ஆள் என்னென்மோ சொல்றான். திருட வந்தோம்- நாய் துரத்துறதுங்கறான். நம்ம ஊரில ஏது நாய்? ஒரே ஒரு நாய் இருந்து அதுவும் லாரி ஒ ஈணுல அடிபட்டுச் செத்துப் போயிடுத்து..." -பட்டர் அவனை நம்பாதது போலப் பேச...

"சாமி... வந்து பாருங்க சாமி... ஒரு நாய் இல்ல சாமி. நூறு நாய்ங்க. ஒரு அடி எடுத்து வைக்க முடியல. வந்து பாருங்க..."

"எங்கைய்யா... எங்க?"

"வாங்க சாமி காட்றேன்... வாங்க..."

"நீ பொய் சொல்லலையே..."

"என்னைப் பாருங்க சாமி. இதெல்லாம் அதுங்க கடிச்சதுதான்..."

"பட்டரே... இவன் சொல்றதைப் பார்த்தா எனக்கே பகீர்ங்கறது, போய்த்தான் பார்ப்போமே..." -திருவேங்கடம் வக்காலத்து வாங்க, பட்டரும் அரைமனதாகக் கிளம்பினார்.

ராஜரத்தினம் தடுமாறிக் கொண்டே முன்னால் நடக்க பட்டரும், திருவேங்கடமும், இன்னும் சிலரும் டார்ச் லைட் சகிதம் நடந்தனர்.

"தப்புப் பண்ணிட்டோம் சாமி. பெரிய தப்பு பண்ணிட்டோம். எவ்வளவோ களவாணித்தனம் பண்ணியிருக்கோம். ஆனா, இங்க எங்க பாச்சா பலிக்கலை. கோவிலுக்குள்ளேயே எங்களை என்ன துரத்து துரத்திச்சுங்க தெரியுமா?"

"கோவிலுக்குள்ளேயா?"

"ஆமா சாமி... நீங்க வெளியே போகும் போதுதான் நாங்க உள்ளே நுழைஞ்சோம். நீங்க காலைலலேட்டா வருவேன்னு சொன்னதெல்லாம் எங்க காதுல விழுந்துச்சு..."

-நடக்கும்போது அவன் சொல்லச் சொல்ல பட்டருக்குள் படபடப்பு கூடிக் கொண்டே போயிற்று. நடையும் கோவிலின் வடக்குப் பக்கமாய் ஊரைவிட்டு வெளியேறும் பாதை அருகே முடிவு பெற்று நின்றது.

அங்கே ஊருக்கு தண்ணீர் வழங்கும் பெரிய வாட்டர் டேங்க்!

அதன் மேல் மற்ற மூன்று திருடர்களும் நின்று கொண்டிருக்க, டேங்க்கைச் சுற்றி நூற்றுக்கணக்கான நாய்கள்!

அவ்வளவும் அண்ணாந்து பார்த்தபடியே நின்று கொண்டிருந்தன. ஆனால், ஒரு நாய்கூட குலைக்காதது ஆச்சரியமான ஆச்சரியத்தைத் தந்தது.

பட்டர் அப்படியே ஸ்தம்பிக்க, மற்றவர்களும் வாயடைத்துப் போய்ப் பார்க்க, நாய்கள் கூட்டமும் அவர்களைப் பார்த்தது.

"பட்டரே... என்னய்யா இது அதிசயம்! எங்க இருந்துய்யா இத்தனை நாய்கள் வந்தது?" -திருவேங்கடம் வாய் பிளந்தார்.

"என்ன ஒரு ஆச்சரியம். ஏம்ப்பா நீங்க கோவிலில் திருட வந்தவாதானா?"

"ஆமாம் சாமி.... உள்ள ஆரம்பிச்சத் துரத்தல் சாமி இது..."

"ஈஸ்வரா...! நிச்சயம் இது அந்தக் கால பைரவ ஸ்வாமியோட வேலைதான். அப்பனே பைரவா..."

-பட்டர் நெகிழ்வோடு அப்படியே நெடுஞ்சாண்கிடையாக தரையில் விழுந்தார். மற்றவர்களும் அதைப் பார்த்துவிட்டு அப்படியே கீழே விழுந்து கும்பிட்டனர்.

நிமிர்ந்தபோது மேலும் ஆச்சரியம்! அடப்பமாக நின்று கொண்டிருந்த அத்தனை நாய்களும் மாயமாய் மறைந்திருந்தன.

"என்ன ஒரு ஆச்சரியம்..." என்று எல்லாரும் வாயைப் பிளக்க, அந்த மூன்று பேரும் கூட வாட்டர் டேங்க்கை விட்டு கீழே இறங்கத் தொடங்கியிருந்தனர்.

ரத்த விளாராக கீழே இறங்கியவர்கள் அப்படியே சுருண்டு விழுந்து விட்டனர்!

அதே சமயம் தொலைவில் கையில் ராந்தலுடன் தீட்சிதர் வந்து கொண்டிருந்தார்.

12

'சிவபூஜையில் ருத்ராட்சங்களுக்கு ஒரு சிறப்பான இடமுண்டு. ஒரு கோலி உருண்டை போலத் தோற்றம் தரும் ருத்ராட்சங்களில் ஒரு முகம், இருமுகம் என்று பல முகமும் உண்டு. ஏராளமான சுளைகள் ஒன்று சேர்ந்து ஒரு ஆரஞ்சுப் பழமாய் உருவாகிறாற்போல, சுளை போலவே பல துண்டுகள் ஒன்று சேர்ந்தே ருத்ராட்சம் உருவாகிறது. ஆரஞ்சுப் பழத்தில் சுளை என்று கூறுவதை ருத்ராட்சத்தில் கண்கள் என்கிறோம்.

சில ருத்ராட்சங்கள் 12 கண்களுடன் கூட வட்ட வடிவமாக வசப்படும். பொதுவில் தாவரங்கள் பஞ்ச பூதங்களிடம் இருந்தே உயிர் அணுக்களைப் பெற்று பூ, பழம், காய் என்று நமக்கான அனைத்தையும் தயாரிக்கிறது.

ருத்ராட்சமும் இப்படி ஒரு பஞ்சபூத சேர்க்கையே. இதன் கண்களை வைத்தே இதன் குணம் தீர்மானமாகிறது. கம்ப்யூட்டர் பொருள்களில் சிப்ஸ் எனப்படும் பாகமே அதன் இயக்கத்துக்குப் பிரதான

மாகும். ருத்ராட்சமும் நம் உடலாகிய கம்ப்யூட்டருக்கு ஒரு சிப்ஸைப் போன்றே பயன்படுகிறது.

இதை அணிபவர் சிவநேயச் செல்வராகவும், சிவாம்சங்களில் ஒருவனான ருத்ரனின் செயலாக்கங்களை இந்த ருத்ராட்சங்கள் நமக்கென பஞ்சபூதங்களில் இருந்து பெற்று நம் உடலாகிய கம்ப்யூட்டரைப் பேணுவதாகவும் கூட இதை இதன் சக்தியை உணர்ந்து பயன்படுத்தி சிவத்துக்குள் நாம் புகுந்து நாமே சிவமாகலும் சாத்தியமே.'

விடியப்போகும் அதிகாலை வேளை...

மரகதலிங்கபுரமே ஒரு இரவில் பல அதிசயங்களைப் பார்த்து முடித்துவிட்டது போல திகைத்துப் போய் நிற்க, நிற்கும் பட்டரையும் கள்ளர்களையும் மற்றும் ஊர் ஜனங்களையும் நோக்கி தீட்சிதர் நடந்து வந்து கொண்டிருந்தார்.

சமீபித்து விட்ட அவரைப் பார்த்து எல்லாரும், "அட நம்ம தீட்சிதர்..." என்றனர்.

"தீட்சிதன்தான்... என்ன பைரவக் கூட்டம் போய்டுத்தா?"

-அவர் அங்கேயே இருந்து பார்த்ததைப் போல கேட்கவும், எல்லாருக்கும் ஆச்சரியம்.

"தீட்சிதரே... இங்க இப்ப என்ன நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமா?" -திருவேங்கடம்தான் கேட்டான்.

"தெரியாமத்தான் பைரவக் கூட்டம் போய்டுத்தான்னு கேட்டேனாக்கும்?"

"அதான் எங்களுக்கும் ஒரே ஆச்சரியமாயிருக்கு."

"கோவில்ல கிடைச்ச ஏட்டுக் கட்டை ஞாபகப் படுத்திக்குங்கோ... எல்லா ஆச்சரியங்களும் போய்டும்..."

"என்ன சொல்றேள்?" -இது இன்னொருவர். பட்டர் எதுவும் பேசவில்லை. அவருக்குள் கலவையான குழப்பங்கள்

"இங்க எதுவும் நடக்கக் கூடாதது நடந்துடலை. எது நடக்கணுமோ அதுதான் நடந்துருக்கு. கோவிலை இடிச்சுக் கட்டும்போது மரப்பெட்டி கிடைச்சதும், அதுல ஏட்டுக்கட்டு இருந்து, அது பல தகவல்களைச் சொன்னதும் உங்களுக்கு ஞாபகத்துல இல்லாம போயிருக்கலாம். ஆனா எனக்கு ஞாபகத்துல இருக்கு" என்றபடியே அண்ணாந்தார். வானத்தில் பவுர்ணமியை நோக்கி வளரும் நிலையில் உள்ள நிலா!

"இவாள்ளாம் யார் தெரியுமா... கோவில்ல திருட வந்தவா... நாய்க்கடிபட்டு துடிச்சிண்டு இருக்கா. முதல்ல இவாளுக்கு வைத்தியம் பாக்கணும். நீங்க இப்படி ஆகாசத்துல நிலாவைப் பார்த்தா என்ன அர்த்தம்?"

-பட்டர் சற்று கடுப்போடு கேட்டார். அவருக்குள் தீட்சிதர், ராஜ்நாராயணுக்கு அடைக்கலம் கொடுத்த கோபம். அதனால் அவன் பாரதியோடு ஓடிவிட்டதாக ஒரு கற்பனை.

"வைத்தி... நீ இன்னும் முக்கியமான சில விஷயங்களைப் பத்தி யோசிக்கவே இல்லைன்னு நன்னா தெரியறது. ஊர்க்காராளுக்குக் கூட சில விஷயங்கள் தெரியாது. ஆனா, உனக்குக் கூடவா தெரியலை..." -தீட்சிதரிடம் கோபமான மறுகேள்வி.

"என்ன தெரியணும்...? இல்ல என்ன தெரியணும்னேன்..." -பட்டரும் சற்று ஆவேசமானார்

"முதல்ல உணர்ச்சிவசப்படாம இவாளைக் கூட்டிண்டு வைத்தியர் நாடிமுத்து வீட்டுக்குப்போ. அதிசயமா நாயுருவிச் செடியில இருந்து ஆகாச கருடன் மூலிகை வரை கோவில் நந்தவனத்துல முளைச்சிருக்குன்னு இரண்டு நாள் முந்தி நீ சொன்னதைக் கொஞ்சம் யோசிச்

சுப் பார். யாரும் விதை போடாம தானாவே அவை முளைக்க காரணம் இருக்குன்னு நான் சொன்னதையும் கொஞ்சம் யோசி. அதெல்லாம்தான் இந்த கள்ளப் பசங் களுக்கு மருந்து. இன்னும் கொஞ்ச நாழியில பொழுது விடிஞ்சுடும். உஷத்கால பூஜைக்காக நீ கோவிலைத் திறக்கும்போது உன் மனக்கலக்க மெல்லாம் தீர்ந்துடும். போ... போய் ஆக வேண்டியதைப் பார்...”

-அவர் தீர்க்கமாய்ப் பேசும்போது எதிர்த்துக் கேள்வி கேட்க யாருக்கும் எதுவும் தோன்றவில்லை. ஆனால் நிச்ச யம் ஏதோ ஒரு அதிசயம் நடக்கப் போவதாக மட்டும் எல்லாருக்கும் தோன்றியது.

“தீட்சிதர்வாள் பேசறதுல ஏதோ பெரிய பொருள் இருக்கற மாதிரி தெரியறது. ஆனா, அது என்னன்னு தெரியல...” என்றார் திருவேங்கடம்.

“இப்ப மணி என்ன ஆறது?” திருப்பிக் கேட்டார் தீட்சிதர். யாருக்கும் சொல்லத் தெரியவில்லை. கைக் கடிகாரம் இருந்தால்தானே?

ஆனால், அந்தத் திருடர்களில் தலைவனைப் போன்ற ராஜரத்தினம் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து, “சாமி... மணி மூணேமுக்கால் ஆகுது...” என்றான்.

“பிரம்ம காலம் ஆரம்பமாயிடுத்து... சூரியன் உதிச்சு மூணு முழத்துக்கு கிழக்குல மேல ஏற்றவரை பிரம்ம முகூர்த்தம்தான். அதுலையும் இன்னிக்கு அஷ்டமி... விடிஞ்ச பிறகு, நவமி திதி ஆரம்பமாயிடும்.

“இட்டமுடன் பாலகனும் அட்டமி நாளிதில்
ஆதித்தன் வானம் விட்ட வேளையில்
கிட்ட வருவானே...!
வருவான் வசத்திலே பெருமானும்
வசப்படுவானே...”

-தீட்சிதர் பேச்சோடு சில பாடல் வரிகளை முணு முணுத்தபோது பட்டருக்கு சுரீர் என்றது. இதற்கு முன்

அதைக் கண்டெடுக்கப்பட்ட ஏடுகளில் இருந்து வாசித் துப் பார்த்ததுபோல ஒரு ஞாபகம்!

“சரி... சரி... முதல்ல இவனுகளை வைத்தியன்கிட்ட கூட்டிக்கிட்டு போவோம். விடியட்டும் என்ன பண்ற துன்னு யோசிக்கலாம்...”

-என்ற ஒருவரைத் தொடர்ந்து பட்டிமாடுகளைத் தள்ளிச் செல்கிறமாதிரி அவர்களை தள்ளிக் கொண்டு அனைவரும் நடந்தனர்.

தீட்சிதர் முகத்தில் மட்டும் ஒரு மர்மப் புன்னகை. அதை பட்டரும் காணத் தவறில்லை!

✠ ✠ ✠

பாரதிக்கு மூச்சு முட்டியது... தட்டுத் தடுமாறிக் கொண்டு அந்த கல்தொட்டி கழிவு நீர்ப் பாதையில் ஊர்ந்து கொண்டு முன்னேறியவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

நல்லவேளை...

வெளிப்பிரகாரங்களில் உள்ள அகல் விளக்கு எண்ணைத் துளிகளையும், திரியையும் போட்டு பருமனாக ஏற்றிய தீபம் நன்றாகவே வெளிச்சத்தைக் காட்ட, அதன் ஒளியில் அறை போன்ற பரப்பில் நடராஜ விக்கிரகமும் எலும்புக் கூடும், அதன் முன்னே ராஜ்நாராயண் மயங்கிக் கிடப்பதும் தெரிந்தது. அத்தனை அரவங்களும் எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது போல் இருந்தது.

“அம்மாஞ்சி... அம்மாஞ்சி...” மயங்கிக் கிடந்தவனை பாரதி தொட்டு எழுப்பியபடியே நடராஜ விக்கிரகத்தை யும் எலும்புக் கூட்டையும் பார்த்து விக்கித்துப் போனாள்.

பயத்தில் அழுகை துளிர்த்து குரலும் மிக வேகமாக, “அம்மாஞ்சி... அம்மாஞ்சி” என்று அவனைத் துளைத்தெடுத்தது.

நல்லவேளை... அவள் ஸ்பரிசத்தாலும் உலுக்கலாலும் ராஜ்நாராயணும் கண் திறந்தான்.

"அம்மாஞ்சி... அம்மாஞ்சி."

"யாரது?"

"நான்தான்... என்னாச்சு? எழுந்திருங்கோ..."

-அவனும் எழுந்து அமர்ந்தான். அமர்ந்த பின் அவளை சில வினாடி வெறித்தான்.

"என்ன அம்மாஞ்சி... இது என்ன எலும்புக்கூடு... ஸ்வாமி விக்கிரகம் கூட இருக்கே."

"ஆம்... விக்கிரகமேதான். இவர் நமது மரகத நடராஜர். இந்த பிரபஞ்சத்தையே தன் ஆனந்தத் தாண்டவத்தால் ஆட்டுவிக்கும் கருணாமூர்த்தி... இவன் வராக நந்தரே... கருணாமூர்த்தி இவன்..."

"அம்மாஞ்சி என்ன இது? என்ன ஆச்சு உங்களுக்கு? நான் உங்க பாரதி. என்னமோ வராக நந்தன்கறேளே..."

"நந்தரே... நமது சங்கரலிங்க பூபதி என்ன ஆனார்? அன்னை மரகதாம்பிகையை அவர் அந்தக் கள்ளர் கூட்டத்திடம் இருந்து காப்பாற்றி விட்டாரா? அன்னையை அவர்கள் கொண்டு சென்றுவிடவில்லையே?"

"அம்மாஞ்சீசுசு..."

-வெறுத்துப் போய் அவனை ஒரு உலுக்கு உலுக்கினாள் பாரதி. அவனும் மழைப் புறாபோல உதறிக் கொண்டு பார்த்தான்.

"என்ன அம்மாஞ்சி... என்ன நடக்கறது இங்க? நான் பாரதி... தெரியலையா?"

"பாரதி..."

"ஆங்... பாரதியேதான். தலைல கிலைல அடி பட்டுடுத்தா?"

"இல்ல... இல்ல... ஆமா, நான் இப்ப என்ன பேசினேன்?"

"சரிதான்... அதுவே ஞாபகம் இல்லையா? இந்த சினிமால பூர்வ ஜென்ம ஞாபகம் வந்தவா ராஜாகாலத்து பாஷைல பேசுவாளே... அப்படிப் பேசினேள்."

"அப்படியா?"

"ஆமாம். பயமா இருக்கு அம்மாஞ்சி. இங்க இருக்கற எலும்புக் கூட்டை எல்லாம் பார்த்தா ரொம்பவும் பயமா இருக்கு..."

-அவள் எலும்புக் கூட்டைச் சுட்டிக் காட்டியபடியே கேட்க, ராஜ்நாராயணும் பார்த்தான். எலும்புக்கூட்டின் தலைப் பாகத்துக்குக் கீழ் கழுத்து ஒன்று இருந்த இடத்தின் அருகில் உருண்டையாகவே ஏதோ கொட்டைகள்.

"பாரதி... இங்க இப்ப நீயும் நானும் வந்த மாதிரி யாரோ வந்திருக்கா... வெளியே போக வழி தெரியாம இங்கேயே இருந்து உயிரையும் விட்டுருக்கணும். அப்படிச் செத்துப்போன மனுஷனோட எலும்புக் கூடுதான் இது..."

"ஐயோ... அப்ப நம்மாலயும் வெளியே போக முடியாதா?"

"ஏன் முடியாது? வந்த வழியிலையே போவோம். அதே நேரம் இந்த நடராஜமூர்த்தி சிலையையும் எப்படியாவது எடுத்துண்டு போகணும்"

"இது... இது..."

"இது கோவில் சிலை. இந்த எலும்புக் கூட்டுக்கு உரிய நபர் இதைத் திருடப் பார்த்துருக்கணும். இல்லே காப்பாத்த முயற்சி செய்திருக்கணும்."

"அம்மாஞ்சீ... இப்படி எல்லாம் ஆகும்னு தெரிஞ்சிருந்தா நான் கோவிலுக்கே வந்திருக்க மாட்டேன்..."

"பைத்தியம்... இப்ப இதைப் பத்திப் பேசாம அடுத்து என்ன செய்யறதுன்னு யோசிப்போம். நல்லவேளை... நிறைய பாம்புகள் நடமாடிண்டு இருந்தது. இப்ப எங்கப் போச்சோ தெரியலை."

-கழுத்தோர வியர்வையை வழித்துப் போட்டபடியே, அந்தப் பருத்த திரி ஒளியில் அந்த நடராஜப் பெருமான் உருவத்தைப் பார்த்தவன் சுதாரித்து எழுந்து அருகே சென்று தீண்டினான்.

உடம்பில் மின்சாரம் பாய்ந்த மாதிரி ஒரு பரவச அலை ஒரு ஓட்டம் ஓடிற்று.

கால்கட்டை விரல் அடியில் உருண்டையாக ஏதோ ஒன்று நிரட, என்னவென்று பார்த்தான்.

ஒரு பஞ்சமுக ருத்ராட்சம்!

குனிந்து கையில் எடுத்து உற்றுப் பார்த்தான். ஒரு ஷணம் நெற்றிக்கு நடுவில் இமை திறக்கும் செக்கச் சிவந்த ஈசனின் நெற்றிக் கண்ணே இமை திறந்து கொண்டு அவனை உற்று நோக்குகிற மாதிரி இருந்தது.

"கைலாபதே..." -சிலிர்ப்போடு அப்படியே கைகளைக் கூப்பினான். பாரதிக்கு அவனது சிலிர்ப்பும் சிலாகிப்பும் பேராச்சரியம் தர, அவனையே வெறித்தாள்.

✠ ✠ ✠

கொல்லைக் கிணற்றில் தண்ணீரை இறைத்துக் குளித்து முடித்துவிட்டு அப்படியே ஈரம் சொட்ட வந்து பருத்தித் துண்டால் உடம்பைத் துவட்டிக்கொண்ட வைத்தியநாத பட்டர், விபூதிச் சம்புடத்தில் இருந்து விபூதியை எடுத்து நெற்றியில் பூசிக்கொண்டார். மளமள வென்று கச்சம் உடுத்திக் கொள்ளத் தொடங்கினார். அன்னபூரணி அவர் சந்தியாவந்தனம் செய்யத் தோதாக பஞ்சபாத்திரத்தில் ஜலமுடன் எதிரில் வந்தாள். வெளியே

கீழ்வானம் மெலிதாக வெளுக்க ஆரம்பித்திருந்தது. சூரியன் எட்டிப் பார்க்கும் முன் சந்தியை முடிக்க வேண்டும். அதுதான் நல்ல பிராமணர்களுக்கான லட்சணம்.

பட்டரிடமும் அந்தச் செயலுக்கான வேகம். பட்டரும் கொல்லைக் கிணறு அருகே போய் நின்று கொண்டு சந்தி செய்யத் தொடங்க, "அக்கூவ்வ்வ்..." என்கிற விதமாய் ஒரு குரல்.

எதிரில் கிணற்றுத் திட்டின்மேல் இடிந்த சிவக் கோவிலின் காவல்கழுகான வீர்யன் தன் சிறகுகளைச் சடைத்தபடி வந்து அமர, அதைப் பார்த்த பட்டரிடம் திடுக்!

13

'ரகசியங்களில் தலையானது சிதம்பர ரகசியம்! உண்மையில் 'சிதம்பரம்' என்ற வார்த்தையிலேயே ஒரு ரகசியம் உள்ளது. 'அகம்பரம்' என்னும் உள்ளும் வெளியும்தான் காலத்தால் திரிந்து சிதம்பரம் என்று ஆனதாகவும் சொல்வார்கள்.

எது எப்படியோ... உள்ளுக்கும் வெளிக்குமான புரிந்து கொள்ள வேண்டிய ஒரு செய்தியோடுதான் சிதம்பரத்தின் நடராஜன் சன்னதி விளங்குகிறது. எல்லா இடங்களிலும் லிங்கமாகிய சிவம் பிரதானமாக இருக்க, இங்கே ஆடும் நடராஜன் பிரதானமாக இருக்கிறார். இதிலேயும் சூட்சமம் உள்ளது.

ஆட்டம் என்பது இயக்கம் . அந்த இயக்க கர்த்தராக உயிர்களின் உள் வெளி அனைத்திலும் இருப்பது சிவமே...

அதாவது இயங்கினாலே அனைத்தும் இருப் பதை உணர முடியும். இயங்காத வரை இருந்தும்

இல்லை. உறக்கத்தில் உடல்தான் இயங்குகிறது. மனம் இயங்குவதில்லை. எனவே அது குடி கொண்ட உடல் கூட அப்போது இல்லாததாகிறது. அதே மனது இயங்கும் போது கற்பனையில் இல்லாத பல விஷயங்களை எண்ணி அது இருக்கும் பாவனையை அடைந்து அதற்கேற்ப உடம்பிலும் உளைச்சலை ஏற்படுத்துகிறது. எந்த ஒன்றுமே இயங்குவதில்தான் இருக்கிறது. சிதம்பர நடராஜ சிவம் இந்த உலக உயிர்களுக்கு உரைக்கும் இந்தமறைமுக ரகசியச் செய்தி ஒரு பெரிய தியரி.'

எதிரில் வந்து அமர்ந்த வீரியனைப் பார்த்து பட்டர் விதிர்த்துப் போனார்.

அவர் முன்னால், அவர் சந்தியாவந்தனம் செய்யப் பயன்படுத்திய பஞ்ச பாத்திரத்தில் தண்ணீர் நிரம்பிக் கிடந்தது.

வீரியன் அதைப் பார்த்தபடியே சின்னக் குழந்தை தத்தி வருகிற மாதிரி கிணற்றுத் திட்டில் இருந்து இறங்கி தத்தித் தத்தி நடந்தும் வந்தது.

பட்டருக்குள் திகைப்பு மேலும் கூடிப்போனது. சில அடிகள் அச்சத்துடன் பின் சென்றார். தத்தி வந்த வீரியன் அவர் சந்தி செய்கையில் அர்க்யம் விட்ட தண்ணீரைத் தன் அலகால் விழுங்கத் தொடங்கியது.

அவ்வளவும் அச்சுதாய நம... அனந்தாய நம... கோவிந்தாய நம... என்று சொல்லியும் காயத்ரி தேவிக்கு மாய் விட்ட அர்க்ய நீர். ஒரு சிறு தேக்கமாய் தேங்கிக் கிடந்த அந்த நீரை வீரியன் பருகுவது ஆச்சரியமாய் இருந்தது பட்டருக்கு.

பாம்பையும் தேளையும் கொத்தி விழுங்கும் ஒரு பட்சி. அதற்கு நேர் எதிராக தயிர் அன்னம் புசிப்பதும், இது போல் மந்திர ஜலத்தைக் குடிப்பதையும் என்னவென்று சொல்வது?

வீரியனின் செயல் மிக விசித்திரமாக இருக்க, அது அந்த ஜலத்தைப் பருகிற நிலையில் 'அக் அக் அக்கூக்' என்று கத்திக் கொண்டே வானில் எழும்பிப் பறக்கத் தொடங்கியது.

அப்படி அது பறக்க ஆரம்பித்த வேளை பார்த்து கொல்லைப்புறம் வந்த அன்னபூரணியும் வீரியனைப் பார்த்து விக்கித்துதான் போனாள்.

"என்னன்னா... எங்க வந்துட்டு போறது இந்த கழுகு?"

"அதை ஏன் கேக்கறே... நான் சந்தி பண்ணும்போது அர்க்யமா விட்ட ஜலத்தைக் குடிச்சுட்டு பறந்து போறது..."

"ஏரியில இல்லாத ஜலமா...? இல்லை குளத்துல இல்லாத ஜலமா? இந்த ஜலத்தைத் தேடி வந்து குடிச்சுட்டுப் போறதே..."

"அதான் எனக்கும் புரியலை. எல்லாமே விசித்ரமா இருக்கு... ஒண்ணு மட்டும் உறுதி அன்னம். இது பொறப்புலதான் கழுகு. புத்தியில இது ரிஷி. இன்னிக்கு இது இப்படி செஞ்சதுக்குப் பின்னால பெரிய அர்த்தம் இருக்குன்னு தோணறது அன்னம்..."

-பட்டர் சொல்லிக் கொண்டே அண்ணாந்தார். வானில் இருள் விலகி சூரியக் கதிர்கள் பரவ ஆரம்பித்திருந்தன. வீரியனும் நடுவானம் தொட்டிருந்தது.

"சரி சரி... நாழியாச்சு கிளம்புங்கோ... உங்களுக்கு முந்தி தீட்சிதர் கோயிலுக்குப் புறப்பட்டுப் போய் வாசல்ல நின்னுண்டுருக்கார்"

"அப்படியா... இவரை என்னால புரிஞ்சுக்கவே முடியலையே. கோவில் ஏடுங்கறார்... விடிஞ்சுடும் பார் தெரிஞ்சுடும்கறார்... என்ன தெரியப்போறதோ... எது தெரியப்போறதோ?"

-புலம்பலும் முனகலுமாய் பட்டர் கிளம்பத் தொடங்கினார்.

✠ ✠ ✠

பொலபொலவென்று விடிந்து விட்ட நிலையில் வீதி முழுக்க வாசல்களில் கோலம் தூவித் தெளித்த ஈரத்தில் பளிச்சென்று தெரிந்தது. வீட்டு மல்லிகைக் கொடிகளி லும் முதல் நாள் மாலையில் பறிக்கப்படாத பூக்கள் உதிர்ந்து கிடக்க, ஒரு வித வாசம்.

பட்டர் சுகித்தபடியே நடந்து கொண்டிருந்தார். மனதில் பாரதியும், ராஜ்நாராயணும் கொஞ்சமாய் மறைந்து கிடந்தார்கள். இரவெல்லாம் கண் விழித்த அசதியில் நடையில் அத்தனை வேகமில்லை. ஆனால் மனதில் அர்த்தராத்திரி வேளையில் அகப்பட்ட திருடர்களால் உருவான பதற்றம் புகை போல மூட்டம் போட்டிருந்தது.

கோவில் முகப்பிலும் நல்ல கூட்டம்.

சாதாரணமாய் இப்படி எல்லாம் கூட மாட்டார்கள். கோவில் திறந்த பிறகு நிதானமாகத்தான் வருவார்கள்.

இன்று திருடர்களால் உருவான பதற்றம் கூட்டத் தைக் கூட்டியிருந்தது. கூட்டத்தில் பிரதானமாய் பட்டர் நின்று கொண்டிருந்தார்.

எப்போதும் இல்லாதபடி பட்டு வேட்டியால் கச்சம் உடுத்தி மேலே ஒரு பெரிய ஷாலையும் போர்த்திக் கொண்டு யாரோ ஒரு பெரிய வி.ஐ.பி யை வரவேற்க வந்தவர் போலத் தெரிந்தார்.

பட்டர் வரவும் எல்லாரும் சலசலவென்று சப்தமிடத் தொடங்கினார்கள்.

"வாரும் வைத்யநாதன்... வாரும்... சீக்கிரமா கதவைத் திறந்து உள்ள பாரும்..."

"எதுக்கு எல்லாரண்டையும் இத்தனை பதற்றம்?"

"சரிதான்... கள்ளப்பயலுக ஒருத்தனுக்கு நாலு பேர் உள்ற பூந்துருக்கானுங்க. எது இருக்கோ எது இல் லையோ...?"

"அதான் அவாளை எல்லாம் பைரவ ஸ்வாமி பட்டாளமா வந்து புடிச்சே கொடுத்துட்டாரே...?"

"ஆமா... சாமி வந்து புடிச்சு கொடுக்குது... அதுக்கு அதான் வேலை பாரு... ஏதோ தெருவுல சுத்தற நாயுங்க புது முகமா தெயிறானுங்களேன்னு துரத்தியிருக்கும்... உடனே கதை கட்டிடுங்க."

-விதம் விதமான பேச்சுக்கள். நடுவில் வேணு வேகவேகமாக அந்த மரக்கதவைத் திறந்தான்.

'கக்கரக்க்ரீச்ச்ச்...' -சப்தமுடன் அந்த முக்கால் பனை மர உயரக் கதவு திறந்து கொள்ள "ஈஸ்வரா..." -என்றபடியே பட்டர்தான் முதலில் காலை வைத்தார். நிமிர்ந்து நேரே பார்த்தவருக்கு தூக்கியடித்தது. எதிரில் நந்திக்கு முன் உள்ள கல் மண்டபத்தில் ஏகத்துக்கும் விளக்குகள் எரிய நடராஜமூர்த்தியின் சொரூபம்!

பட்டர் வேகவேகமாக ஓடினார்.

பின் தொடர்ந்தது கூட்டம். தீட்சிதர் அவர்களுக்கு நடுவில் சிலிர்ப்புடன் தெரிந்தார்.

"நான் எதிர்பார்த்தது நடந்துடுத்து.." என்று முனங்கி யவர் பார்வை நடராஜமூர்த்தி விக்ரகத்தைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டபடியே திரும்பி நாலா பக்கமும் பார்த்தது.

'ஹோ'வென்று வெட்டவெளி!

யாரையும் காணவில்லை. கோயிலின் உள் கூட்ட மரங்களில் மட்டும் பட்சிகள் சண்டை போட்டுக் கொண் டிருந்தன.

தீட்சிதருக்கு ஏமாற்றமாக இருந்தது.

பட்டரோ நடராஜ விக்கிரகத்தைப் பார்த்து வியர்த்து விட்டிருந்தார்.

பச்சை மரகதத்தால் ஆன பசலை பூத்த மேனி. அதைக் கூட முடிந்த அளவு துடைத்து மெருகேற்றி மண்டபத்தில் கொண்டு வந்து வைத்தது யார்...? இத்தனை காலமாக எங்கே போயிருந்தார் இந்த மூர்த்தி?

கேள்விகள் அவருக்குள் பிரள சுற்றமும் கூட ஆச்சரியச் சலசலப்பில் அரண்டு பிரண்டது.

"சாமீசு... என்ன சாமி இது? எங்கிருந்து வந்துச்சு இந்த சிலை?"

"பூ போட்டிருக்குது... விளக்கெல்லாம் எரியுது, யாரோட வேலை?"

"களவாணிப் பசங்க வேலையா இருக்குமோ?"

"இது நம்ம கோவில் நடராஜமூர்த்திதான். மரகதத்தால் ஆன சிலை இது. பல நூறு வருஷத்துக்கு முந்தி கஜினி முகம்மது படையெடுத்து வந்தப்போ காணாமப் போனதா சொல்வா... ஆனா இது எப்படி இப்ப இங்க வந்ததுன்னு தெரியலியே..."

-எல்லாரும் நடராஜமூர்த்தியைப் பார்த்தபடியே கருத்துப் பரிமாற்றத்தில் மூழ்க, சிலர் சாஷ்டாங்கமாக விழுந்து சேவிக்கவும் செய்தனர்.

அதைப் பார்த்த பிறகே பட்டருக்கும் தான் நமஸ் கரிக்கத் தவறியதும் உறைத்தது. தோள் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு சாஷ்டாங்கமாக விழுந்தார். நிமிர்ந்தவர் நேராக தீட்சிதரிடம் வந்தார்.

"ஸ்வாமீ..."

"சொல்லு வைத்தி..."

"இதான் நீங்க பீடிகை போட்ட விஷயமா?"

"என்னக் கேட்டா... கோவில்ல கிடைச்ச ஏட்டுக் கட்டோட பாட்டோட பொருளை ஞாபகப்படுத்திப் பாரு..."

"எனக்கு நினைவுல இல்ல. நீங்களே சொல்லிடும். இந்த ஸ்வாமி இங்க எப்படி? எல்லாம் அந்த திருட்டுப் பயலுகளோட வேலையா?"

"நீ இன்னும் தப்பாவே பேசறே..."

"வேற எப்படி பேசறது... என் பொண்ணைப் பத்திதான் ஏதோ தெரியப் போறதுன்னு நான் நினைச்சுண்டே வந்தேன். ஆனா அவ ஓடிப்போயிட்டாங்கறதுதான் உண்மை போல இருக்கு."

-பட்டர் தீட்சிதரிடம் தன் வருத்தத்தை வார்த்தை களாக்கும் சமயம் எல்லார் கவனமும் நடராஜமூர்த்தி மேலேயே இருக்க, கோவில் கோபுர வாசல் வழியே இரண்டு பேர் வெகுவேகமாக வெளியேறிக் கொண்டிருந் தார்கள்.

யார் பார்த்தார்களோ இல்லையோ... தீட்சிதர் மட்டும் தவறாமல் அவர்களைப் பார்த்தார்.

அது பாரதியும் ராஜ்நாராயணும்தான்!

✠ ✠ ✠

ஊருக்குள் செய்தி காட்டுத் தீயாகப் பரவிக்கொண் டிருந்தது.

"கோவில்ல நடராஜமூர்த்தி பிரசன்னமாகியிருக்கார்... மரகதக்கல்லால் ஆன நடராஜமூர்த்தி... பல நூறு வருஷத்துக்கு முந்தி காணாமல் போன சிலையாம்!"

-திபுதிபு வென்று ஜனக்கூட்டமும் திரண்டு வர ஆரம் பித்துவிட்டது. எண்ணிரண்டு பதினாறு தெருக்கள்தான் மரகதலிங்கபுரமே! அதில் புழுதி பறந்தது...

ஊரில் ஒன்றிரண்டு முஸ்லிம்களும் இருந்தார்கள். ஆர்வம் அவர்களையும் துரத்திக் கொண்டிருந்தது.

அன்னபூரணியும் விஷயமறிந்து கோவிலுக்குப் புறப் பட்டவளாக கதவைப் பூட்டப் போனாள்.

"அம்மாாா..."

-குரல் கேட்டுத் திரும்பினாள். பாரதி!

"பாரதீஈஈ..." அன்னபூரணி பூட்டுச் சாவியை அப்ப டியே போட்டவளாக அலறிக் கொண்டு அவளைச் சமீபித்தாள்.

"எங்கடி போய்ட்டே? உன்னைக் காணாம ராத்திரி யெல்லாம் நாங்க பட்ட பாடு இருக்கே..."

-அன்னபூரணி பாரதியின் தோளைப் பற்றி உலுக் கினாள்.

"எங்கையும் நான் போகலம்மா... உள்ற வாம்மா எல்லாத்தையும் சொல்றேன்."

பாரதி உள் ஓட அன்னபூரணியும் திரும்பி உள்ளே சென்றாள்.

✠ ✠ ✠

ராஜ்நாராயண் தன் சூட்கேசைத் திறந்து வெளியில் கிடந்த தனது சாமான்களை அள்ளிப்போட்டுக் கொண் டிருந்தான். அப்படியே போட்டு மூடி விட்டு நிமிர்ந்தவன் எதிரில் தீட்சிதர் நுழைந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவும் அவனிடம் திடுக்.

அவரோ சிரித்தபடியே உள்ளே வந்தவராக கைகளை பவ்யமாக கூப்பி அவனை நமஸ்கரித்தார்.

"சார்... என்ன இது?"

"நமஸ்காரம் பண்றேன்பா... எங்க ஊரோட பொக்கி ஷத்தையே கண்டுபிடிச்சு கொடுத்துருக்கே. அதுக்காக நான் உனக்கு நமஸ்காரம் பண்ணலைன்னா எப்படி?"

"சார் உங்களுக்கு எப்படி...?"

"அதுவா இப்ப முக்கியம்... ஆமா எங்க கிளம்பிட்டே?"

அவனிடம் பதிலில்லை.

"ஊருக்கா?"

அவன் தலை ஆடியது.

"இப்ப பஸ் இல்லையே...?"

"எப்ப... எப்ப வரும்னு சொல்ல முடியுமா?"

"அது வரும்போது வரும். ஆனா நீ ஏன் இப்படி ஓடப் பாக்கறே. உன் அத்திம்பேர்கிட்ட அவ்வளவு பயமா?"

"இல்ல... இது வேற?"

"வேறன்னா..."

"சாரி... நான் இங்க இருந்தா என்ன ஆவேன்னு எனக்கே தெரியலை. இந்த ஊரே ஒரே விசித்ரமா இருக்கு. பாம்பு வருது... நாய்கள் துரத்துது. திடீர்னு எரியாத விளக்கெல்லாம் எரியுது. டோட்டலி எவ்ரி திங் மேஜிக்கா இருக்கு. ஐ டோண்ட் அண்டர்ஸ்டாண்ட்."

"புரிஞ்சுக்க முடிஞ்சா விஞ்ஞானம். முடியலேன்னா அது பரஞானம். அதை விடு. பாரதிக்கு என்ன பதில் சொல்லப் போறே?"

அவரது அந்தக் கேள்வி அவனைக் கட்டிப்போட்டது.

"புத்திசாலித்தனமா யாரும் பாக்காதபடி இரண்டு பேரும் கோவிலை விட்டு வெளியே ஓடிப் போயிட்டீங்க.

'ஊருக்குத் தெரிய வேண்டாமென்னுதான் நானும் கண்டுக்கலை.

'இந்த நிமிஷம் அந்த ரகசியம் தெரிஞ்ச ஒரே நபர் நான்தான். ஆகையால நீ ஏதாவது ஆயிடுமோன்னு கவலைப்படாதே... ஆனா நீ இப்படி பயந்து போய் ஓட நினைக்கறது நன்னா இல்லை."

அவர் ஒரு மாதிரி கேலியான குரலில் சொல்ல, ராஜ்நாராயணும் அவரை ஒரு மாதிரி பார்க்க, வெளியே ஒரு கூட்டம் தீட்சிதரைத் தேடிக் கொண்டு வந்தபடி இருந்தது.

14

"வீரதிரமான செயலை பராக்கிரமம் என்போம். இந்த பராக்கிரமங்களில் சிவ பராக்கிரமம் என்றும் ஒன்று உண்டு.

சிவ பராக்கிரமத்துக்கு இணை எதுவுமில்லை. ஆகமங்களும் சாத்திரங்களும், புராணங்களும் கூறும் சிவ பராக்கிரமச் செயல்களும், அதற்கான வடிவங்களும் மொத்தம் இருபத்தி ஐந்தாகும்.

இருந்தபோதிலும் இந்த மண்ணில் அனைவரும் அறியும் விதமான சிவ பராக்கிரமம் அறுபத்து நான்கு ஆகும்.

இதைத் திருவிளையாடல்கள் என்றும் கூறுவர். இந்த 64 திருவிளையாடல்கள் அல்லாது நிகழ் காலத்தில் சிவம் நிகழ்த்தும் பராக்கிரமச் செயல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

கலியில் சிவம் பிரதோஷ காலத்தில் மானிடத் தின் பாப கர்மம் என்னும் விஷத்தை உறிஞ்சிக் கொள்ளும் வல்லமை படைத்ததாக இருக்கிறது.

பிரதோஷ வழிபாடு சிறப்படைய, சிறப்படைய, சிவ பராக்கிரமும் நம்முள் பெருகும்!"

மரகதலிங்கபுரமே திரண்டு வருவதைத் தீட்சிதரும் பார்த்தார்.

"ராஜ்நாராயணா... செத்த இரு. ஊரே திரண்டு வந்தபடி இருக்கு. என்னன்னு பாத்துடுறேன்"

-தீட்சிதர் கவனத்தை வெளியே கொண்டு சென்றார். அவனுக்குள் தப்பிச் செல்ல முடியாத கவலை தட்டா மாலை சுற்றியது. அதேவேளையில் கூட்டமும் திபுதிபு வென்று வீட்டு வாசலில் மண்டிவிட்டது. அவர்களில் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் கூடவே பட்டரும் இருந்தார்.

தீட்சிதருக்குப் புரிந்துவிட்டது.

"வாங்கோ சப்-இன்ஸ்பெக்டர்" என்று அவரை உள்ளே அழைத்தார். அவரோடு பட்டரும், மற்றவர்களும் உள்ளே நுழைந்தனர். பட்டரைப் பார்க்கவும் ராஜ்நாராயண் விக்கித்துப் போனான். அவரிடமும் அதே நிலை.

"தீட்சிதரே... இவன்!" -அவர் வந்த காரணத்தை விட்டு ராஜ்நாராயணைக் காட்டிக் கேட்க, "உங்க மருமான் இங்க இருக்கானேன்னு பாக்கறேளா? நேத்து ராத்திரி பின்னால கொல்லைப் பக்கமா போய் படுத் துட்டான் போல இருக்கு. நான் கவனிக்கல. மொத்தத்துல எங்கேயும் ஓடிப் போயிடல. இங்கதான் இருக்கான்" என்று பொத்தாம் பொதுவாய்ப் பட்டருக்கு ஒரு பதிலைச் சொல்லிவிட்டு சப் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார். அவரும் ராஜ்நாராயணை ஒரு பார்வை பார்த்தபடியே, "மிஸ்டர் தீட்சிதர்... எனக்கு ஸ்டேஷனுக்கு விதவிதமான தகவல்கள் வந்தன. அந்தக் காலத்துச் சிலை திரும்பக் கிடைச்சுடுச்சின்னு சிலரும் ஒரு கூட்டமே திருட வந்தது. அவங்கதான் அதைக் கொண்டு வந்து வெச்சி ருக்கணும்னு சிலரும் பல மாதிரிப் பேசிக்கிறாங்க. அது மட்டுமில்ல... இப்படி எல்லாம் நடக்கும்னு முந்தியே கோவில் ஏட்டுல வந்ததா நீங்க சொன்னீங்களாம். ஆமா, என்ன இதெல்லாம்?"

-சப்-இன்ஸ்பெக்டர் பெரிய வியப்புகள் எதுவும் இன்றி மிகுந்த தொழில் முறையோடு பேசினார்.

"நீங்க எப்படி நினைக்கறேளோ அப்படி எடுத்துக்குங் களேன்..." -தீட்சிதர் சொன்ன பதில் எல்லாருக்கும் ஆச்சரியத்தைத் தந்தது.

"என்ன சொல்றீங்க... உண்மையில என்ன நடந்த துன்னு அப்ப யாராலையும் சொல்ல முடியாதா?"

"அதான் பிடிச்சு வெச்சிருக்கோமே திருடங்க... அவங் களை விசாரிச்சுப் பாக்கறது..."

"நாங்க திருடத்தான் வந்தோம். நாங்க எதையும் கண்டுபிடிக்கலை. கோவில்ல எதையும் விடவும் இல் லைன்னு சொல்லி கேவிக் கேவி அழறாங்க அவங்க."

"அப்ப ஏட்டுல சொன்னபடி நடந்துருக்கிறதா முடிவு செய்ய வேண்டியதுதான்."

"அது என்ன ஏடு... அதுல அப்படி என்ன சொல்லப் பட்டிருக்கு?"

"மனுஷனுக்கு ஜாதகம் இருக்கற மாதிரி கோவிலுக் கான ஜாதகம்தான் அந்த ஏடு. வேர்ல்ட் டிரேட் சென்டர் மேல விமானம் மோதும்னு ஐந்நூறு வருஷம் முந்தியே நாஸ்டர்டாம்ங்கற ஒரு ஞானி எழுதி வெச்சிருந்த மாதிரி இந்த கோவில்லயும் சில சம்பவங்கள் நடக்கும், அது எப்ப நடக்கும். எப்படி நடக்கும்னு சொல்றதுதான் கோவில் ஏடு."

"அங்க எழுதினது நாஸ்டர்டாம். இங்க எழுதினது யாரு?"

"இந்த கோவிலுக்கு சபேசன்ங்கற ஒரு ஜோதிடப் பண்டிதர் வந்தாராம். இப்ப இல்ல... ஐந்நூறு... அறுநூறு வருஷங்களுக்கு முந்திதான். அவருக்கு கண் பார்வை தெரியாம இருந்ததாம். இங்க வந்து மரகதலிங்க ஸ்வாமிகிட்ட பிரார்த்தனை பண்ணிக்கவும். பார்வை

வந்ததாம். அதன் பிறகு அவர் இந்த ஊர்லயே தங்கி கடைசியிலே இங்கேயே சமாதி ஆயிட்டதா கேள்வி. அவர்தான் தன் ஞான திருஷ்டியால இந்த கோவில்ல எப்ப எது நடக்கும்னு எழுதி வெச்சது..."

"ஐ... சீ... அப்ப அதன்படிதான் அந்த விக்கிரகம் கிடைச்சிருக்கா"

"அப்படித்தான் இருக்கணும்."

"அந்த ஓலைல அப்படி என்ன இருந்தது..."

-சப்-இன்ஸ்பெக்டர் பிரதானமான கேள்விக்கு வரவும், தீட்சிதர் பார்வை ஒருமுறை ராஜ்நாராயணைப் பார்த்தது.

அதுவரை ஒதுங்கியிருந்த அவன் இனியும் பயத்து டன் இருப்பது தப்பு என்று நினைத்தவன் போல முன் வந்தான். "சப்-இன்ஸ்பெக்டர், மற்ற விஷயங்களை நான் சொல்றேன். மை நேம் ஈஸ் ராஜ்நாராயண். நான் ஸ்டேட்ஸ்ல சாப்ட்வேர் இன்ஜினியரா இருக்கேன். இங்க என் அத்தை வீட்டுக்கு வந்தேன். வந்த இடத்துல கோவிலுக்கும் போனேன். ஆனா, நான் உள்ள சுத்திப் பாத்துக்கிட்டு இருக்கும்போது கதவை அடைச்சுட்டு போயிட்டாங்க. எனக்கு எப்படி வெளிய வரதுன்னு தெரி யலை. பல விதமா எப்படியாவது வெளிய வர முயற்சி செய்தப்பதான் திருடங்க திருட வந்து அவங்களை நாய் துரத்திச்சு. அவங்க மரத்துல ஏறி மதில் சுவர் மேல் குதிச்சு தப்பிச்சு ஓடினாங்க.

'என்னையும் நாய் துரத்திச்சு. நான் உள்ளே அபிஷேக நீர் விழற கல் தொட்டியில இறங்கி நாய்கள் கிட்ட இருந்து தப்பிக்க முயற்சி செய்தேன். அப்ப கழிவு நீர் போற வழியா கொஞ்ச தூரம் உள்ள ஊர்ந்து போனப்ப தான் அது ஒரு சுரங்கப் பாதை வழின்னு தெரிஞ்சுது.

'உள்ளேயும் பெரிய அறையைப் போல ஸ்பேஸ். இப்பக் கூட நீங்க வந்தா காட்றேன். அங்கதான் அந்த

மரகதலிங்கம் இருந்தது. அதைக் கொண்டு வந்து கல் மண்டபத்துல வெச்சதும் நான்தான்.

மெயின் கதவைத் திறந்துகிட்டு எல்லாரும் உள்ளே வரவும். நான் ஓசைப்படாம வெளியே வந்துட்டேன். இதுதான் நடந்தது"

-ராஜ்நாராயண் கூட்டாமல் குறைக்காமல் நடந்ததைச் சொன்னான். நல்லவேளை, பாரதியும் தன்னோடு இருந்தாள் என்பதை மட்டும் சென்சார் செய்துவிட்டான், சாமர்த்தியாக.

பட்டர் பார்வை உடனே தீட்சிதரைத் துளைத்தது.

"கொல்லைல படுத்திண்டுருந்ததா சொன்னீரே..."

-கேட்டும் விட்டார்.

"நான் வீட்டுக்குள்ள நுழையும் போது கொல்லைல படுத்துண்டுருந்தான். அதைச் சொன்னேன்."

-தீட்சிதர் ஒருவாறு சமாளித்தார். ராஜ்நாராயணின் ஸ்டேட்மெண்ட்டை அவர் துளி கூட எதிர்பார்க்கவில்லை.

"சார்... நான் சொல்லலைன்னா இது யாருக்கும் தெரியப் போறது கிடையாது. இருந்தாலும் நான் இதை ஏன் சொன்னேன்னா அதுக்கு காரணம் இருக்கு."

-ராஜ்நாராயண் மீண்டும் பேசி பேச்சில் ஒரு கொக்கியையும் மாட்டினான்.

"என்ன காரணம்?" -சப்-இன்ஸ்பெக்டர் கேட்காமல் பார்வையாலேயே கேட்டார்.

"நடந்தது ஒரு தற்செயல் சம்பவம். நான் இந்த ஊருக்கு வந்ததும் என் அத்தையைப் பார்க்க, பர்ட்டிக் குலரா என் அத்தைப் பெண், பாரதியை கல்யாணம் செய்துக்க! அவ்வளவுதான். வந்த இடத்துலதான் இவ்வளவு சம்பவங்களும். இதைப் பத்தி எல்லாம் ஏடு சொல்றதா இந்த தீட்சதர் சொல்றது எவ்வளவு தூரம் உண்மைன்னு எனக்குத் தெரியாது.

ஆனா ஒண்ணு... நான் தெய்வ நம்பிக்கை பெருசா இல்லாதவன். நேற்றைய இரவுச் சம்பவம் என்னை பெரிசா யோசிக்க வெச்சிருக்கு. இதுதான் உண்மை. இந்த உண்மையை நான் சொல்லத் தவறினா அந்தச் சிலை பத்தின விஷயங்கள்ள கற்பனையும் பொய்யும் சொல்லப்படலாம்.

'அதனால்தான் ஒளிவு மறைவில்லாம எல்லா உண்மைகளையும் சொல்லிட்டேன். இன்பாக்ட் இந்தக் கோவில்ல இன்னும் கூட சுரங்கப் பாதைகள் இருக்கலாம். அதுல பல பொக்கிஷங்கள் நமக்குக் கிடைக்க வரலாம். இனிமே கோவில் நிர்வாகத்தோட கவனம் அதுல போறது தான் புத்திசாலித்தனம்.

'அந்த சுரங்க அறைல ஒரு மனித எலும்புக் கூட்டை யும் நான் பார்த்தேன். அனேகமா அது அந்தச் சிலையை திருடவோ இல்லை காப்பாத்தவோ முயன்ற யாராவது ஒருத்தரா இருக்கலாம்..."

-ராஜ்நாராயணின் தொடர் விளக்கம் சப் இன்ஸ் பெக்டரை கேள்வி கேட்க விடாமல் செய்து விட்டது. அவனை மிகுந்த ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"இந்த பிள்ளையாண்டான் சொல்றதுதான் உண்மை. இவன் பேர்தான் ஏட்டுலயும் இருக்கு" -என்று தீட்சதர் திரும்பவும் தொடங்கினார்.

"அப்படின்னா... முதல்ல அந்த ஏட்டைக் காட்டுங்க. பிறகு அந்த எலும்புக் கூட்டைப் பார்ப்போம்."

-சப்-இன்ஸ்பெக்டர் திரும்பினார்.

தீட்சதரும் உற்சாகமாகப் பின் தொடரத் தொடங் கினார். ராஜ்நாராயண் அந்த இக்கட்டான நிலையிலும் பட்டரை நெருங்கி, "சாரி அத்திம்பேர்... எதுவுமே இது பிளான் பண்ணிச் செய்தது கிடையாது. விதிம்பாளே! அதுதான். விதியாவது, கிதியாவதுன்னு பேசறவன்தான் நான். ஆனா, இனி பேசமாட்டேன். ஏன்னா லைப் எப்படி

வேணா திரும்பும்கறதுக்கு இந்தச் சம்பவங்களே ஒரு சாட்சி. அந்த ராத்திரியிலே கோவில்ல அப்படி மாட்டிண்டது நான் மட்டுமில்ல..." நடந்தபடியே அவர் காதில் கிசுகிசுத்தவன், சஸ்பென்சாய் துளி இடைவெளி விட்டான். பட்டர் அவனைப் பதைப்போடு பார்த்தார். "பாரதியும் என்னோடுதான் இருந்தா. ஊருக்குத் தெரிய வேண்டாமேன்னுதான் அவளை நான் சொல்லலை. எங்க பேர்ல எந்தத் தப்பும் இல்ல..." என்றான் பட்டருக்கு வியர்த்துவிட்டது.

✠ ✠ ✠

ஊர்க் கல்யாண மண்டபத்தில் இருந்த அந்த திருடர்களுக்கு நாட்டு வைத்தியர் வந்து பச்சிலைக் கட்டுப் போட்டு ஆளுக்கு ஒரு குவளை கரிசலாங் கண்ணிச் சாற்றையும் குடிக்கக் கொடுத்தார்.

அவர்களும் தப்பிப் பிழைத்த சந்தோஷத்தில் அப்பாடா என்று பெருமூச்சில் இருந்தனர். சுற்றி ஊர்க் கூட்டம் வேறு...

வைத்தியர் அவர்களோடுதான் இருந்தார். "உங்கல்ல யார் வேணும்னாலும் நாயோட விஷம் தலைக்கு ஏற, நாய் மாதிரி குலைச்சுக்கிட்டே கிடந்து சாகலாம். நான் கொடுத்த மருந்தாலும் விஷம் முறிஞ்சு தப்பியும் பிழைக்கலாம்.

'உங்க உசுர் இந்த நிமிஷம் என் கைல இல்லை. அது அந்த சாமி கைல" -வைத்தியர் கோவில் கோபுரத்தைக் காட்டினார்.

"மிரட்டறீங்களே வைத்தியரே... இங்கிலீஷ் வைத்தியத்துல வயித்தைச் சுத்திப் பத்து ஊசி போடுவாங்களாமே. அதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா?" -ஒரு திருடனான கடம்பன், வைத்தியரைப் பார்த்துக் கெஞ்சினான்.

"இந்த ஊசி மருந்தெல்லாம நான் இருக்கறவரை இந்த ஊர்ல நுழைய முடியாது. என் வைத்தியத்துக்கு முன்னால அதெல்லாம் சும்மா! இருந்தாலும் வைத்தியத்துக்கு எல்லாம் வைத்தியம் பாக்கறவனான அந்த சாமி இருக்கும்போது நான் ஒண்ணும் சொல்றதுக்கு இல்லை. அதுதானே நாய் ரூபத்துல வந்து உங்களை தடுத்துச்சு.

அந்த சாமியைக் கும்பிட்டுக்குங்க..." -அவர் மீண்டும் கோபுரத்தை நோக்கி கை காட்டினார். அவர்களும் கை கூப்பினார்கள். அதில் ராஜரத்தினத்தின் பிரார்த்தனை மட்டும் சற்று விசித்திரமாக இருந்தது.

"சாமி... எனக்கு மட்டும் எதுவும் ஆகலேன்னா... உன் கோவிலுக்கு ஒரு காவல்காரனா சாகறவரை இருந்து என் பாவத்துக்குப் பரிகாரம் தேடிக்கறேன்" -மற்ற மூவரும் கூட கிட்டத்தட்ட அதே தினுசில்தான் வேண்டிக் கொண்டனர்.

அப்போது கல்யாண மண்டபத்துக்கே ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. விசாரிக்க வேண்டும் என்று நான்கு பேரையும் போலீஸ் ஜீப்புக்கு கூப்பிட்டார் ஏட்டு ஒருவர்.

வைத்தியர் குறுக்கிட்டார்.

"தயவு செய்து விசாரணையை இங்கேயே வெச்சுப் பண்ணுங்க. ,இவங்க இப்ப முக்கியமான என் சிகிச்சைல இருக்காங்க. எந்த நிமிஷமும் இவங்க விபரீதத்துக்கு உள்ளாகலாம். சில நாய்ங்க நாலஞ்சு அங்குலமெல்லாம் ஆழமா கடிச்சு சதையைக் கிழிச்சிருக்கு" -வைத்தியர் சொன்னது ஏட்டைக் கொஞ்சம் நடுங்க வைத்து விட்டது.

"நான் வர்ற வழியில ஒரு நாயைக் கூடப் பார்க்கலை. அவ்வளவு நாய்கள் எங்க இருந்து, எப்படி வந்துச்சுன்னே தெரியலையே... சரி நான் போய் எஸ்ஐ ஐயா கிட்டச் சொல்றேன். இவங்கள விட்றாதீங்க" -என்று ஒரு இரண்டும் கெட்டானாட்டம் பேசிவிட்டு திரும்பி

ஜீப்பில் ஏறிக் கொண்டு சென்றார் ஏட்டு. வைத்தியர் சொன்னது அந்தத் திருடர்களை உலுக்கிவிட்டது.

"வைத்தியரே... நாய்ங்க அவ்வளவு மோசமானதா?" -என்று கோரசாகக் கேட்டனர்.

-வைத்தியர் முகத்தில் ஆமோதிப்பாய் ஒரு சிரிப்பு!

✠ ✠ ✠

அந்தக் கல் தொட்டியைச் சுற்றி எல்லாரும் நின்று கொண்டிருக்க ராஜ்நாராயணும், எஸ்.ஐயும் அதனுள் இறங்கினர். அபிஷேக நீர் ஓடும் பாதை ஒரு பாதாளச் சாக்கடையாய் ஒரு சுரங்க வழி கணக்காக ஈரத்தோடு நீண்டிருந்தது.

"பாத்து வாங்க..." என்றபடியே ராஜ்நாராயண் உள்ளே ஊர்ந்தான். எஸ்.ஐ. பின் தொடர்ந்தார்.

பட்டருக்கு தானும் போய்ப் பார்த்தால் என்ன என்று தோன்றியது.

"இதுக்குள்ள இப்படி ஒரு வழி இருக்கறதே தெரியாமப் போயிடுத்தே..." என்றபடி அவரும் தொட்டிக்குள் இறங்க முயற்சித்தார்.

"வேண்டாம் வைத்தி... அவா போய்ட்டு வந்துடட்டும்" என்று தீட்சதரின் குரல் தடுத்தது. அவரும் சரி என்கிற மாதிரி நின்றார். எல்லோர் கவனமும் இருவரும் உள்ளே போன அந்தப் பாதை மேலேயே இருந்தது.

அவர்களும் ஒரு பத்தாவது நிமிடம் வெளியே வந்தனர். வந்த போது எஸ்.ஐ கையில் ஒரு துணி மூட்டை.

பட்டர் ஆவலாகக் கேட்டார்.

"சார்... அதுல என்ன இருக்கு?"

எஸ்.ஐ.யும் அதை அப்படியே பிரித்துக் காட்டினார்.

மண்டை ஓடும், எலும்புத் துண்டுகளும் தெரிந்து அனைவரையும் ஒரு மிரட்டு மிரட்டின. சில ருத்ராட்சங் களும், துண்டு துண்டாய் செப்புக் கம்பியும் கூட ஊடே கிடந்தன.

தீட்சதர் அதைப் பார்த்த மாத்திரத்தில் சொன்னார்.

"இது பிரம்மானந்த பட்டரோட எலும்புக் கூடாத்தான் இருக்கணும்."

"பிரம்மானந்த பட்டரா?" -எல்லாரும் தீட்சதரைக் கூர்மையாகப் பார்த்தனர்.

15

'சிவலிங்கத்தைப் பார்க்கும்போது நமக்கு என்ன தோன்றும்? ஒரு உருண்டையான குழவிக் கல்லின் ஞாபகம்தான் வரும். எந்த நிலையிலும் ஒரு மனித சரீரத்தை அதில் கற்பனை செய்து பார்க்க இயலாது.

மனிதர்கள் இறைவனை தங்களைப் போன்ற மனித ரூபத்தில்தான் காண்பார்கள். இது மற்ற உயிரினங்களுக்கும் பொருந்துமல்லவா? ஒரு எறும்பானது அதற்குச் சிந்திக்கும் திறமிருந்தால் இன்னொரு எறும்பாகவே இறை வடிவத்தைக் கற்பனை செய்து பார்க்கும்.

நாம் (மனிதர்கள்) நம்மிலும் வடிவில் பெரிய டைனோசர்களைப் பார்த்து பிரமிக்கிறாற்போல அது நம்மைப் பார்த்து பிரமிக்கும்.,

எனவே, இறை உருவம் என்பது நம் மனம் செய்து பார்க்கும் ஒரு கற்பனை வடிவமே. கோடிக் கணக்கான உயிர்களைப் படைத்த இறைவன், மனித ரூபத்தில்தான் இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.

நம்மால் கற்பனை செய்தும் பார்க்க முடியாத ஏதாவது ஒரு வடிவத்தில் இருக்கலாம். வடிவமே இல்லாமலும் இருக்கலாம். உண்மையான இறைலட்சணம் என்பது நினைத்த மாத்திரத்தில் நமக்குள் வசப்படுதலும் அதேநேரம் அந்த வசப்பாடே ஒரு புதிராக, நம்மால் நினைத்துப் பார்க்க இயலாதவனே இறைவன் என்பதை உணர்த்துத லுமே ஆகும்.

இந்தக் கருத்தை மனதில் கொண்டு லிங்க சொரூபத்தைப் பாருங்கள். அது நம்மைப் போன்ற வடிவில் இல்லை. அதேநேரம் எதுவும் இல்லாமலும் இல்லை.

புராணங்கள் லிங்க சொரூபத்துக்குத் தரும் அர்த்தமே வேறு. லிங்கத்தின் மேல் பகுதியானது ருத்ர பாகம். நடுப்பகுதி ஆவுடையார் விஷ்ணு பாகம். அடிப்பாகம் பிரம்ம பாகம். இது ஒரு கருத்து.

பாணமாகிய ஸ்தூபியே சிவம் என்றும், அது புதைந்து கிடக்கும் ஆவுடையார் பாகமே சக்தி என்றும் சிவசக்திச் சொரூபமே லிங்கம் என்றும் ஒரு கருத்து உண்டு.

எது எப்படியோ?

லிங்கமாகிய சிவம் அஞ்ஞானி முதல் விஞ்ஞானி வரைக்கும் ஒரு அருட்கொடை.

அந்த எலும்புகளையும் ருத்ராட்சங்களையும் பார்த்து விட்டு, 'இது பிரம்மானந்த பட்டரின் எலும்புக் கூடு' என்ற தீட்சதரை எல்லாரும் ஆர்வமாகப் பார்த்தனர்.

எஸ்.ஐ. மட்டும், "யார் சாமி அது?" என்று கேட்டார்.

"பிரம்மானந்த பட்டர் இந்தக் கோவில்ல ஊழியம் பார்த்த ஒருத்தர். இந்த நடராஜ மூர்த்தியைக் காப்பாத் தறதுக்காக தன்னையே அர்ப்பணிச்சுண்டவர். இவரைப் பத்தினக் குறிப்பை சுவடில பார்த்தேன். அதான் இது அவர் எலும்புக்கூடா இருக்கணும்னு சொன்னேன்."

"அந்த சுவடிகளை நான் பாக்கலாமா?" -எஸ்.ஐ கேட்க, தீட்சதர் பார்வை வைத்யநாத பட்டரை நோக்கித்தான் சென்றது.

பட்டரும் புரிந்ததுபோல, "வாங்கோ காட்றேன். அது ஆபரண அறைல பத்ரமா இருக்கு" என்றபடியே அங்கிருந்து நடந்தார்.

எல்லாரும் பின் தொடர்ந்தனர்.

✠ ✠ ✠

ஆபரண அறை. கோவிலின் தெற்குப் பிரகாரத்தில் அறுபத்து மூவர் சிலை வரிசையை ஒட்டியே இருந்தது. அந்த நாளையக் கதவு. பித்தளைப் பூண் போட்ட நாதாங்கி. பூட்டுகூட வழக்கத்தில் இல்லாத சைசில் அரை முழ நீளச் சாவியைப் போட்டுத் திறக்க வேண்டிய தாக இருந்தது.

உள்ளே கும்மிருட்டு. நாலாபுறமும் துளிகூட காற்றுப் போய் வர வழி இல்லாத கருங்கற் சுவர்கள். சுவற்றை ஒட்டி நான்கு பேர் இறங்கிப் படுத்துக் கொள்ளலாம் என்கிற அளவில் பெரிது பெரிதாக மரப் பெட்டிகள். அதில்தான் கோவிலின் நகைகள் இருந்தன.

அந்தப் பெட்டியைப் பூட்டி சீல் வைத்திருந்தார்கள். பக்கத்திலேயே ஒரு சிறிய மரப்பெட்டி. பார்க்கவே படு வினோதமாக இருந்தது.

பட்டர் அதைத் தொட்டுத் தூக்கிக் கொண்டு வெளி யில் வந்தார். கூடவே கோவில் பேஷ்காரும் இருந்தார்.

"பேஷ்கார்... நீங்களே திறந்து போலீஸ்காராகிட்ட காட்டுங்கோ..." என்றார் பட்டர்.

பேஷ்காரும் ஆவலாகத் திறந்தார். ஆனால் உள்ளே எதுவுமேயில்லை பகீரென்றது எல்லாருக்கும்.

"பட்டரே... என்ன ஒண்ணுத்தையும் காணோம்" - எஸ்.ஐ. கேட்க, பட்டருக்குத் தலையைச் சுற்றியது. தீட்சதரும் உள்ளே கூர்மையாகப் பார்த்துவிட்டு அதிர்ந்து போனார்.

"என்ன இது... மாயமா இருக்கு... இதுலதானே அந்த ஏடுகள்லாம் இருந்தது..." பட்டர் பதறினார். எஸ்.ஐ முகம் மாறி விட்டிருந்தது. தீட்சதரைத்தான் ஒரு மாதிரிப் பார்த்தார்.

"என்ன... என்ன... எதுக்கு என்னை அப்படிப் பாக்கறேள்?"

"நீங்கதான் இந்த ஏட்டுக்கட்டைப் பத்தி அதிகம் பேசினவர். இப்ப என்னடான்னா அதைக் காணலை. காணாம போற அளவுக்கு அது விலை மதிப்பில்லாத ஒரு பொருளா என்ன?"

"அதுல சந்தேகமா என்ன? இந்த கோவிலோட வரலாறேன்னா அதுல இருக்கு..."

"அந்த வரலாற்றால யாருக்கு என்ன புண்ணியம்?"

"அப்படி இல்லை சப்-இன்ஸ்பெக்டர் சார். பல நூறு வருஷங்களுக்கு முன்னால இந்த கோயில் கஜினி முகம்மது படையெடுப்பின்போது சூறையாடப் பட்டிருக்கு. அந்த நேரத்துல கோவில்ல பட்டரா இருந்தவர்தான் பிரம்மானந்தர். அவர் கோவில் விக்கிரகங்களை எப்படியும் காப்பாத்தணும்னு ஆசைப்பட்டார்.

'அப்ப அவருக்கு உதவி செய்தவங்க இரண்டு பேர். அதுல ஒருத்தர் பேர் வராகநந்தர், இன்னொருத்தர் பேர் சங்கரலிங்க பூபதி. இதுல வராகநந்தர் ஒரு நெல் வியாபாரி. சங்கரலிங்க பூபதியோ இந்த மரகத லிங்கபுரத்தை உள்ளடக்கின பல கிராமங்களுக்குத் தலையாரியா இருந்தவர்.

'அவருடைய தலைமுறைதான் பின்னால ஜமீன் பரம்பரையா மாறி இப்பவும் அவங்க வம்சாவளிகள் இருக்காங்கன்னா பாத்துக்குங்களேன்."

"அப்ப இந்த விவரங்களெல்லாம் அந்தச் சுவடில இருக்கா?"

"ஆமா... அதனாலதானே எனக்கு இவ்வளவு விஷயமும் தெரியும. அதுமட்டுமில்ல... மாலிக்காபூர் படையெடுப்பின்போது பிரம்மானந்த பட்டர் இந்த இரண்டு பேர் உதவியோட இந்த கோவிலோட பெரிய பொக்கிஷமான மரகதலிங்கத்தையும், அம்பாள் திருமேனியையும் நடராஜ மூர்த்தி விக்கிரகத்தையும் எப்படியோ கொள்ளை போகாம தடுத்துட்டார்.

அவர் அன்னிக்குத் திருடு போகாம காப்பாத்தின நடராஜர், இன்னிக்கு கிடைச்சுட்டார். அதுவும் அமெரிக்காவுல இருந்து இந்த ஊருக்குச் சாதாரணமா வந்த இதோ இந்த ராஜ்நாராயணால... இந்த விஷயமும் அந்த ஏட்டுல இருந்தது."

"அப்படியா... எப்படி? கொஞ்சம் விளக்கமாச் சொல்ல முடியுமா?"

"எல்லாமே பாட்டாத்தான் இருந்தது. உரைநடைல எழுதறது இந்தக் காலம். ஆனா, அந்தக் காலத்துல பெரும்பாலும் பாட்டு ரூபத்துலதான் கதைகள், செய்திகள் எல்லாமே இருந்தது. அப்படி ஒரு பாட்டுதான் இன்னிக்கு நடராஜ விக்கிரகம் கிடைக்கும்னும் ஒரு இண்டிகேஷனைக் கொடுத்தது.

அந்தப் பாட்டுகூட எனக்கு நன்னா ஞாபகம் இருக்கு.

"இட்டமுடன் பாலகனும் அட்டமிநாளதில்
ஆதித்தன் வானம்விட்ட வேளையில்
கிட்ட வருவானே... வருவான் வசத்திலே
பெருமானும் வசப்படுவானே...

வசப்படும் பெருமானும் புலர்ந்திடும்
காலையில் நிஜப்படுவானே...!"

-அதாவது அஷ்டமி நாளன்னிக்கு சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு பாலகனாகிய ராஜ்நாராயண் கைல கிடைக்கும். அப்படிக் கிடைக்கிற பெருமான் அதாவது நடராஜ மூர்த்தி புலர்ந்திடும் காலையில் அதாவது மறுநாள் காலையில் நிஜப்படுவான். அதாவது எல்லாரும் பார்க்கும்படியா தெரியும்னு அதுக்குப் பொருள்.

"இப்ப அப்படித்தானே ஆயிருக்கு?" -தீட்சதரின் விளக்கம் எல்லாரையுமே பிரமிக்க வைத்தது.

"அப்படின்னா அதுல மற்ற விக்கிரகங்களும் எப்பக் கிடைக்கும், எப்படிக் கிடைக்கும்னு... இருக்கு... சரிதானே?"

"நூறு சதம் சரி."

"அப்ப அது ஒரு ரகசியம் இல்லையா?"

"சந்தேகமென்ன...? இன்னிக்குக் கிடைச்சிருக்கற மரகதக் கல்லால் ஆன நடராஜ மூர்த்தியே பல கோடி மதிப்பு பெறும். மரகதலிங்கத்தோட மதிப்பையும், அம்பாள் திருமேனி மதிப்பையும் யாராலையும் கணக்குப் போடவே முடியாதே..."

"அப்படின்னா யாரோ இந்தச் சுவடிகளைத் திட்டமிட்டுத் திருடியிருக்காங்க..."

"சந்தேகமேயில்லை... இல்லேன்னா இந்தப் பொட்டியில அந்தச் சுவடிகள் இருக்கணுமே."

"அது சரி இந்தச் சுவடிகளில் இந்த ரகசியங்களை எழுதினது யார்?"

"எழுதினவர் நாலு காலமும் தெரிஞ்ச ஒரு சித்தர். வெளிப்பார்வைக்கு ஜோதிடரா தெரிஞ்சவர் அவர். இந்தக் கோவிலுக்கு வந்தபோது குருடரா இருந்ததாகவும் இங்க வந்து பார்வை கிடைச்சதாவும் அதன்பிறகு அவர் இந்த

கோயிலை விட்டுப் போகாம இங்கேயே வாழ்ந்து மடிஞ்சார்னும் சொல்வாங்க. மனிதர்களுக்கு ஜாதக பலனை எழுதிக் கொடுக்கற மாதிரி அவர்தான் கோவிலுக்கும் கால பலன்களை எழுதினவர். எழுதினதை ஒரு பெட்டியில வெச்சு இந்தக் கோவில் நிர்வாகிகளும் பாதுகாத்திருக்காங்க. அப்ப இருந்த யாருக்கும் சுவடியோட மதிப்பு தெரியலையா? இல்லை அவுங்க சுவடியை படிச்சே பாக்கலையாங்கறதெல்லாம் விடை தெரியாத கேள்விகள்.

'அந்தப் பெட்டி காலப் போக்குல இந்தக் கோயில் சுரங்கப் பாதைக்கு எப்படிப் போச்சுன்னும் தெரியல. சமீபத்துல இந்தக் கோயிலை புதுப்பிச்சு கும்பாபிஷேகம் பண்ணத் திட்டமிட்டப்போ அந்தச் சுரங்கப் பாதை இருக்கறது தெரிய வந்து அதுல போய்ப் பார்த்தப்போ இந்த பொட்டியும் கிடைச்சுது.

நான்தான் முதல் முதலா திறந்தே பார்த்தேன்" -தீட்சதர் ஒருவழியாக எல்லா விவரங்களையும் சொல்லி முடித்தார்.

கூட்டமும் வாயைப் பிளந்து விட்டிருந்தது.

குறிப்பாக ராஜ்நாராயண் ஆச்சரியத்தின் உச்சத்தில் இருந்தான்.

"சரி... இந்த அறைச்சாவி யார்கிட்ட இருக்கும்?" -எஸ்.ஐ என்கொயரிக்குத் தாவ, பேஷ்கார் முன் வந்து, "இது எப்பவும் தர்மகர்த்தா தணிகாசலம் பிள்ளையோட ஆபீஸ் பீரோவுலதான் இருக்கும். அவர் எங்கையாவது வெளியூருக்குப் போகும்போது பீரோ சாவியை என்கிட்டக் கொடுத்துட்டுப் போவாருங்க..." என்றார்.

"இப்ப மிஸ்டர் தணிகாசலம் எங்கே?"

"அவர் மகளுக்கு வரன் பார்க்க மாயவரம் வரை போயிருக்காருங்க..."

"அப்ப அவர் வந்தா இந்த ஏடு எங்க போச்சுங்கறது தெரிய வருமா?"

"அப்படித்தான் இப்ப நினைக்க வேண்டியிருக்குது."

"எப்படி நினைச்சாலும் சரி. அது ரொம்ப மதிப்புள்ள சுவடிகள். அதுலதான் அடுத்து அம்பாள் விக்கிரகம் எப்பக் கிடைக்கும்னும், மரகதலிங்கம் எப்பக் கிடைக்கும்னும் குறிப்பு இருக்கு. அதனால அந்தச் சுவடிகள் கண்டிப்பா கண்டுபிடிக்கப்பட்டாகணும்."

-தீட்சதர் முத்தாய்ப்பு வைக்க, எஸ்.ஐ பார்வை தன்னோடு நின்று கொண்டு என்கொயரிகளைக் குறிப்பு எடுத்தபடி இருந்த ஏட்டு வரத முத்துவைப் பார்த்தது.

வரதமுத்து புரிந்து கொண்டவர் போல, "தணிகாசலம் பிள்ளை வீட்டுக்கு இப்பவே நான் போய் அவர் எப்ப வருவார்னு தெரிஞ்சுட்டு வந்துட்றேன்" என்றார்.

எஸ்.ஐ தொடர்ந்து ஆபரண அறைக்குள் நுழைந்து ஒரு துழாவு துழாவிவிட்டு அந்தக் காலிப் பெட்டியையும் பார்த்து விட்டுக் கிளம்பினார்.

ராஜ்நாராயண் அதுவரை எதுவும் பேசாமல் கவனித்துக் கொண்டிருந்தவன், தீட்சிதரை நெருங்கி, "காணாம போனவைகளைப் பத்திப் பேசின சுவடியே காணாம போயிடுத்தே... அதுவும் காணாம போகும்னு அதுல ஏதாவது குறிப்பு இருந்ததா?" -கிண்டலாகக் கேட்டான்.

"அம்பி... நடக்கற அவ்வளவையும் நீ ஏதோ சினிமான்னு நினைச்சுப் பார்த்துண்டுருக்கே போல இருக்கு. நீ கேலிக்குக் கேட்டியோ, இல்லை சீரியசாக் கேட்டியோ... அதுபத்தி எனக்கு கவலையில்லை. ஆனா நீ கேட்ட மாதிரி அந்தச் சுவடியில சில வரிகள் இருந்தது.

'கண்ணில் பட்ட நாளிலிருந்து மண்டலம் கால் வரை சீருடன் இருக்குமிச் சுவடி, விண்ணில் பறந்தே விலை பெற்றோடும்'னு ஒரு குறிப்பும் அதுல இருக்கு.

அதுதான் இப்ப நடந்துருக்குன்னு நினைக்கிறேன்." -தீட்சிதர் சொன்னதைக் கேட்ட ராஜ்நாராயண் ஒரு கணம் திக்கு முக்காடிப் போனான். இந்த மனிதரை எப்படிச் சென்றாலும் மடக்க முடியவில்லையே என்று நினைத்தான்.

"அப்படின்னா என்ன அர்த்தம்னும் சொல்லிடுங்களேன்..."

"இந்த ஏட்டுக் கட்டை எடுத்து ஒருத்தன் வித்துடுவான். அதுவும் விமானம் மூலமா வாங்கினவன்கிட்ட போய்ச் சேருங்கறது அர்த்தம்!"

"பரவால்ல... பளிச் பளிச்சுன்னு பாட்டுக்கு அர்த்தம் சொல்றேள். ஃபென்டாஸ்டிக். அப்ப உங்க பாடல் பொருள்படி இந்தச் சுவடி விலை போயிடுத்தா?"

"நிச்சயமா."

"இதை ஏன் எஸ்.ஐ கிட்டச் சொல்லலை?"

"காரணமாத்தான்... சில விஷயங்களை நடக்க நடக்க கன்பார்ம் பண்ணிக்கணும். முதல் விஷயம் உன் சமாசாரம். நடந்து முடிஞ்சாச்சு. இதை நான் முன்னாடியே உன்கிட்ட சொல்லியிருந்தா கதையேன்னா வேற மாதிரிப் போயிருந்திருக்கும்?"

"அப்ப என்கிட்ட மட்டும் இப்ப எதுக்குச் சொன்னீங்க?"

"நீதானே இனி ஒவ்வொரு அட்வென்ச்சருக்கும் கர்த்தா. அதாவது ஹீரோ, அதான் உன்கிட்டச் சொன்னேன்!"

"புரியல..."

"போகப் போகப் புரியும். எனக்கு அந்தச் சுவடிப் பாட்டு வரிகள் அவ்வளவும் அத்துப்படி அதைத் திருடினவன் யாருன்னு போலீஸ் ஒரு பக்கம் தேடட்டும். பாட்டோட அர்த்தப்படி அம்பாள் விக்கிரகம் எங்கே இருக்குன்னு நாம கண்டுபிடிக்கலாமா?"

-உபாசகர் வளைத்துப் பிடித்துக் கேட்ட கேள்வி முன் திணறிப் போனான் ராஜ்நாராயண்!

16

'எந்த ஒரு சிவாலயத்திற்குச் சென்றாலும் கருவறைக்கு நேர்பின்னே பிரகாரத்தை வலம் வருகையில் ஒரு லிங்க ஸ்தூபியையும் அதன் நடுவில் சிவபெருமானின் திவ்ய சொரூபத்தையும் நாம் பார்க்கலாம்.

லிங்கோத்பவர் என்றழைக்கப்படும் அந்த ஸ்தூபி உருவமானது பிரம்மனும் நாரணனும் சிவனின் அடிமுடி தேடிச் சென்று அதை அடைய முடியாத கதையைக் கூறுவதாகும்.

அதாவது லிங்கோத்பவர் ஆதியும் அந்தமும் அற்றவர். இன்றும் காத்தலும் படைத்தலும் உலகில் ஒரு தொடர்கதையாக நிகழ்ந்தபடி இருக்கக் காரணமான ஒரு மூர்த்தியும்கூட.

இந்த லிங்கோத்பவ மூர்த்தியின் சுருங்கிய மாதிரி வடிவமே அருணாச்சல மலை. வடக்கில் இமயம் என்றால் தெற்கில் அருணாச்சலமே ஒப்பற்ற சிவப்பிரகாச மலையாம். அதனாலேயே அங்கும் இங்கும் ரிஷிகளின் முற்றுகை இடையறாது நிகழ்கிறது. அவர்களது சமாதிகளும் இங்கே அமைந்திட அவர்களின் சூட்சம உடல் அந்த மலைத் தலங்களில் சிவபாராயணம் செய்தபடி உள்ளது.

இன்றும் அருணாச்சல மலைக்குச் சென்று மனதை ஒரு முகப்படுத்தி சிவநாம பாராயணம் புரிய, அந்த ஒலி அலையானது ரிஷிகளின், சித்த புருஷர்களின் சூட்சம உடல் அலைகளோடு ஒரு ரேடியோ போல் தொடர்பு கொண்டு அவர்கள் நம்முள் புகுந்திடக் காணலாம். அதற்கேற்ற தூய்மை

யான யோகாப்பியாச உடற்கட்டும் நமக்கிருத்தல் அவசியம்.

அந்த நிலையில் அமர்ந்த இடத்தில் இருந்தபடியே அவர்களின் அருள் வளைப்பால் கைலாய தரிசனம் முதல் அங்கு நடைபெறும் சிவதாண்டவம் வரை காணலாம்.'

தீட்சதர் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி விட்டு ராஜ்நாராயணைப் பார்த்தார்.

அவன் முகத்தில் தீவிர சிந்தனை!

"என்னப்பா... ஊருக்கு திரும்பிப்போறதுதான் உன் முடிவா... இல்ல..."

-அவர் முடிக்குமுன் அவன் அவரை ஊடுருவினான்.

"இதோ பாருங்க மிஸ்டர் தீட்சதர். நான் இந்த ஊர்ல இருந்தா பாரதி ஞாபகத்தை தவிர்க்க முடியாது. அவளும் என்னைப் பார்க்க வருவா. இது என் அத்திம்பேருக்கும் பிடிக்காது. வீணா ரசாபாசமாகும். அவசியமா?"

தீட்சதர் பதிலுக்கு சிரித்தார். பின், "உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?" என்று கேட்டார்.

"சொன்னாதானே தெரியும்?"

"ஓம் நமச்சிவாயன்னு ஒரு தடவை சொன்னாலே பண்ண பாவம்லாம் போயிட்றதும்பா. ஆனா இதுல ஒரு சூட்சமம் இருக்கு. அதை எந்த அளவு ஆத்மபாவத்தோட பக்தியோட சொல்லணும்கறதுதான் அந்த சூட்சமம்."

"இப்ப இதுக்கும் நான் ஊரை விட்டு போறதப்பத்தி சொன்னதுக்கும் என்ன சம்பந்தம்?"

"சொல்றேன்... இப்படி ஓம் நமச்சிவாயன்னு ஆத்ம பாவத்தோட எத்தனை பேரால சொல்ல முடியும்கறதால தான் பல்வேறு வழிமுறைகளை வெச்சுருக்கா. அதுல முக்கியமான ஒரு விஷயம் பிரதோஷத்தின் போது அந்த ஈஸ்வரனை தரிசனம் பண்றது..."

"மிஸ்டர் தீட்சதர்... ஏன் இப்படி நான் கேட்காத கேள்விக்கெல்லாம் பதில் சொல்லி டயத்தை வேஸ்ட் பண்றேள்?"

"பொறுமை ராஜநாராயண். இந்த பிரதோஷ தரிசன மும் பல தோஷங்களைப் போக்கக் கூடியது. குறிப்பா சனிப்பிரதோஷ தரிசனம் ஒரு வருஷம் முழுக்க சிவா லயத்துக்குப் போய் அந்த ஈஸ்வரனை தரிசனம் செய்த பலன்களைத் தரக் கூடியது..."

-தீட்சதர் தொடர்ந்து கொண்டே போக, ராஜ்நாராயண் தன் ஷேக்ஸ்பியர் தாடியை நீவியபடி காலில் எறும்பு ஊறும்போது நெளிகிற மாதிரி நெளிந்து-

"ஸ்டாப் இட்..." என்று அலறினான்.

"கத்தாதே .. காரணமில்லாம இவைகளை நான் இப்ப உன்கிட்ட சொல்லலை. இப்ப 'நமச்சிவாயா'ங்கற நாம பாராயணம் பண்ணாம, பிரதோஷத்துக்கும் கோவிலுக்குப் போகாம உக்காந்த இடத்துல சிவானுக்ரகம் பெறவும் ஒரு சந்தர்ப்பம் இருக்கு.

'அது சிவன் கோவில் கட்ட ஒரு கைப்பிடி மண்ணை நாம வாங்கிக் கொடுக்கறதா கூட இருக்கலாம். அந்த ஒரு செயல் பல தலைமுறைக்கு கூட வந்து நம்மை காப்பாத்தும்னு சாஸ்திரங்கள் சொல்றது.

'அதைவிட ஒரு பெரிய காரியம் நீ பண்ணியிருக் கறது. அதாவது தொலைஞ்சு போன ஒரு அர்ச்சா மூர்த்தியைக் கண்டுபிடிச்சு, திரும்ப அது பூஜைகள் காண வழி பண்ணியிருக்கே...

'இது உனக்கிருந்த அவ்வளவு தோஷங்களையும் போக்கிடுத்து..."

-தீட்சதர் சுற்றி வளைத்து ஒரு இடத்துக்கு வருகிற மாதிரிதான் தெரிந்தது.

"அதனால...?"

"இப்ப உன் அத்திம்பேர் என்கிட்ட கேட்டா நீ பாரதியை கல்யாணம் பண்ணிக்கறதுல ஒரு தோஷமும் இல்லைன்னு சொல்வேன்.

'அதுமட்டுமில்ல... என் மனசுல இருக்கற ஏடுகளோட குறிப்புப்படி புத்திசாலித்தனமா நீ நடந்துண்டு மற்ற இரண்டு விக்ரகங்களையும் கண்டுபிடிச்சு கொடுத்துட்டா அந்த புண்ணிய காரியம் உனக்கு பல தலைமுறைக்குக் கை கொடுக்கும்."

-தீட்சதர் முடித்தார். ஆனால் ராஜ்நாராயணுக்கோ சிரிப்பாய் வந்தது.

"எதுக்கு சிரிக்கறே ராஜ்நாராயணா..."

"சிரிக்காம என்ன பண்ண... நடராஜ விக்ரகத்தை நான் கண்டுபிடிக்கணும்னு கண்டுபிடிக்கலை. ஒளியப்போன இடத்துல கண்ணுல பட்டுது. அதுக்கே தோஷம் போயி டுத்து. அது இதுன்னு நீங்க சொல்றது ஆச்சரியமா இருக்கு.

'போகட்டும்.

'ஒரு வாதத்துக்காக அதை நான் ஒத்துக்கறேன்னே வையுங்கோ. மத்த இரண்டு விக்ரகங்கள்னு நீங்க சொல்ற தும் அதையும் நான்தான் கண்டுபிடிக்கணும்னு சொல்ற தும் ஏன்னு புரியலை.

'ஏடுகளைப் பத்தி சொன்னேள். நாஸ்டர்டாம் எழுதி வெச்சது நடக்கற மாதிரி அதுவும் நடக்கறதா சொன் னேள். அதை சிலர் திருடிண்டு போய்ட்டதாகவும் சொன்னேள். இருந்தும் உங்க மனசுல அது அப்படியே மனப்பாடமாக இருக்கும்போது அந்த ஏட்டுல சொல்லி யிருக்கறபடி நீங்களே மத்த இரண்டு விக்ரகங்களை கண்டுபிடிக்காம என்னை துணைக்கு கூப்பிட்றது ஏன்?

'அதெல்லாம் உண்மைன்னா நீங்களே அதை கண்டு பிடிக்கலாமே! நான் அடிப்படைல தெய்வ நம்பிக்கை

இல்லாத ஒருத்தன். அதுக்காக நம்பிக்கை உள்ளவாளை முட்டாள்னோ மூடர்கள்னோ சொல்றவன் கிடையாது.

'என் போக்கே வேற. இப்படிப்பட்ட என்னால எப்படி உங்களுக்கு உதவி செய்ய முடியும்?"

-ராஜ்நாராயண் கேள்விகளாய் அடுக்கினான்.

"அப்ப ஏடுகள் சொல்றத நீ நம்பலை... அப்படித் தானே?"

"ஆமாம்."

"அது பொய்ங்கறது உன் அபிப்ராயம். அப்படித் தானே?"

"நாளைக்கு என்ன நடக்கும்னு யாராலயும் சொல்ல முடியாது. அப்படிப் பார்த்தா அது பொய்யாத்தான் இருந்தாகணும்."

"அப்ப அதை நம்பி ஒருத்தன் அதை திருடியிருக் கானே அதுக்கு என்ன சொல்றே?"

"பாவம் அவன்... ஏமாறப் போறான்."

"அதுல சொன்னபடியே நடராஜ விக்ரகத்தை நீ கண்டுபிடிச்சு கொடுத்தியே அது..."

"அப்படின்னு நீங்கதான் சொல்றேள். அந்த ஏடுகளைப் பார்க்காத வரை என்னால அதைப் பத்தி ஒண்ணும் சொல்ல முடியாது."

"முடிவா உன் பதில்..."

"நான் பாரதியை விரும்பறேன். தோஷங்கள் பத்தி எல்லாம் எனக்கு அக்கறையே கிடையாது. என்னோட வாழ ஆசைப்பட்டு அவ வந்தா கூட்டிண்டு போவேன். இல்லேன்னா அவளுக்கு பிரியமில்லேன்னு என் மனசை சமாதானப்படுத்திண்டு என் வழியே போய்டுவேன்."

"அப்ப ஊரை விட்டுப் போறதுதான் உன் முடிவா?"

"நான் அமெரிக்கால வேலை பாக்கற ஒரு சாப்ட்வேர் இன்ஜினியர் தீட்சதரே. இந்த ஊருக்கு ஜஸ்ட் ஒரு சேஞ்சுக்காகவும் பாரதிக்காகவும் வந்தேன். வந்த வேலை முடிஞ்சா கிளம்பறதுதானே நியாயம்?"

"சரிப்பா... உன்னால முடிஞ்சா புறப்படு."

-தீட்சதர் ஒரு வரியில் சொன்ன பதிலில் ஆயிரம் அர்த்தங்கள்.

முடிந்தால் என்றால்...?

✠ ✠ ✠

பாரதி மழைப் புறா போல ஒரு ஓரமாய் ஒடுங்கி யிருந்தாள். பக்கத்தில் அன்னபூரணி. சற்று தள்ளி பனை விசிறியால் விசிறிக்கொண்டே அவளை வசை பாடிக் கொண்டிருந்தார் பட்டர்.

"எவ்வளவு தைரியம் இருந்தா ஒரு ராத்திரி முழுக்க நீ அவனோட தனியா இருந்துருப்பே? அதுவும் கோவி லுக்குள்ற. பூட்டின ஒரு சிவாலயத்துக்குள்ற மனுஷா தங்கறதுங்கறது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா?"

"அவ என்ன திட்டம் போட்டுண்டா தங்கினா. நீங்க கதவை சாத்தினதுக்கு அவ என்ன பண்ணுவா?" அன்ன பூரணியிடம் வக்காலத்து.

"நீ வக்காலத்து வாங்காதே அன்னம். நல்லவேளை இவா இரண்டு பேரையும் யாரும் பார்க்கலை. பார்த் திருந்தா என்னாயிருக்கும்னு நீ யோசிச்சியா?"

-அவர் கேட்டு முடிக்க, வீட்டு வாசலில் ராஜ்நாராய ணின் உருவம் தென்பட்டது.

அன்னபூரணி அவனைப் பார்த்துவிட்டு, "வா ராஜா... வா..." என்று வரவேற்றாள். பட்டர் முகத்தை திருப்பிக் கொண்டார். அவரைப் பார்த்தபடியே வந்த ராஜ்நாராயண்,

பட்டரை சமீபித்து நின்றான். அவர் அவனைத் தவிர்த்தே தீருவது என்கிற மாதிரி மோட்டு வளையைப் பார்த்தார்.

"அத்திம்பேர்... நானோ அவளோ திட்டம் போட்டுண்டு கோவில்ல தங்கல. அந்த மாதிரி அமைஞ்சுடுத்து. சொல்லப் போனா அது எனக்கு கிடைச்ச ஒரு நல்ல சந்தர்ப்பம். காலைல நீங்க கதவைத் திறக்கும்போது நாங்க இரண்டு பேரும் ஒண்ணாவே உங்க முன்னால வந்து ஊரறிய எங்க காதலையும் கல்யாண ஆசையையும் பிரகடனப்படுத்தியிருப்போம். ஆனா நான் அப்படி நடந்துக்க பிரியப்படல. அப்படி ஒரு குறுக்கு வழியில போய் பாரதியை கல்யாணம் பண்ணிக்கறத விட நாங்க பிரிஞ்சே இருக்கறது ஆயிரம் மடங்கு மேல்ங்கறது என் அபிப்ராயம்.

'இப்பகூட அந்த நடராஜமூர்த்தியை நான் கண்டு பிடிச்சு கொடுத்ததால என் ஜாதக தோஷம் நீங்கிடுத்து; இனிமே நீ பாரதியை கல்யாணம் பண்ணிக்க ஒரு தடையும் இல்லேன்னு தீட்சதர் சொன்னார்.

'அதையும் நான் ஒரு க்ரெடிட்டா எடுத்துக்கலை.

'இரண்டு பேருக்கு நடுவுல கல்யாணம்னு ஒண்ணு நடக்க அவா இரண்டு பேருக்கும் பரஸ்பரம் பிடிச்சிருக்கணும். எங்ககிட்ட அது இருக்கு. பெத்து வளர்த்து ஆளாக்கின உங்க பரிபூரண சம்மதமும் ரொம்ப முக்கியம்.

இப்ப இந்த ஊரைவிட்டு கிளம்பிண்டு இருக்கேன். கடைசியா ஒரு தடவை பாரதியைப் பார்த்தும் உங்களைப் பார்த்தும் கேக்கறேன்.

என்ன சொல்றேள்?"

-ராஜ்நாராயண் தன் நீண்ட விளக்கத்தில் எதைப் பற்றிச் சொன்னதும் அவரைப் பெரிதாக பாதிக்கவில்லை. தோஷம் நீங்கிவிட்டதாக தட்சதர் சொன்னதுதான் அவர் காதில் நின்று எதிரொலிக்க ஆரம்பித்தது. அன்ன பூரணியும் கப்பென்று அதைப் பிடித்தாள்.

"ராஜா... தீட்சதர் தோஷம் நீங்கிடுத்துன்னா சொன்னார். அத முதல்ல சொல்லு..." -என்றாள்.

"ஆமாம் அத்தை... ஆனா அதை நீங்க பெரிசா எடுத்துண்டு இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்க வேண்டாம்"

"இதோ பார்... நீ மேல் நாட்டுல இருக்கறவன். உனக்கு இதெல்லாம் பெரிசா இல்லாம இருக்கலாம். ஆனா எங்களுக்கு அப்படி இல்லை. அவர் சொல்றது தான் எங்களுக்கு வேதம். அவர்தான் முதல்ல தோஷம் இருக்கறதா சொன்னார். இப்ப அவரே இல்லேன்னும் சொல்லிட்டார்னா அதை விட ஒரு சந்தோஷம் எங்களுக்கு இருக்க முடியாது. என்னன்னா சொல்றேள்?"

-அன்னபூரணி பட்டரைப் பார்த்தாள். அவர் முகத்திலும் பலத்த மாற்றம்.

"உக்காரு ராஜா... ஏன் நிக்கறே? ஏய் பாரதி... என்ன மசமசன்னு நின்னுண்டு... ராஜா உக்கார அந்த நாற்காலியை எடுத்துப் போடு..." -என்று புதிய அன்பைக் காட்டத் தொடங்கினார்.

ராஜ்நாராயணை அது ஏனோ கவரவில்லை.

"அத்திம்பேர்... நீங்க மனசு மாறிட்டேள்ங்கறது நன்னா தெரியறது. ஆனா தீட்சதர் சொன்னதை வேத வாக்கா எடுத்துண்டு அதுக்கேற்ப நடந்துக்கறது எனக்கு துளி கூட பிடிக்கலை. என் கல்யாண விஷயம் உங்களாலையும் என்னாலையும் தான் தீர்மானமாகணும். அவர் ஒரு மூணாம் மனுஷர். அவரால தீர்மானமாகறது எனக்கு பிடிக்கலை" -என்றான் படுவேகமாக..

"அப்படிச் சொல்லாதே... தீட்சதர் ஒரு அபூர்வமான மனுஷர். அவர் நாக்குல அந்த ஈஸ்வரனே இருக்கான்."

"மன்னிக்கணும்... இதெல்லாம் உங்க நம்பிக்கை. அதை நான் விமர்சிக்க விரும்பலை. என் வரைல அவர் ஒரு சாதாரண மனுஷர். அவ்வளவுதான்."

"சரி நீ என்னதான் சொல்ல வரே..."

"அதான் சொன்னேனே... அவர் ஒரு சாதாரண மனுஷன். ஏடு, பலன்னு அவர் சொல்றதெல்லாம் ரொம்ப மிகை. இதை இன்னிக்கு நான் மதிக்க ஆரம்பிச்சா நாளைக்கு வேற ஏதாவது சொல்வார். அதையும் கேட்டுக்க வேண்டி வரும்."

"அதனால..."

"மன்னிச்சுடுங்கோ... அவர் சொன்னார்ங்கறதுக்காக நீங்க சம்மதிக்க வேண்டாம்."

"அவர் மேல உனக்கு ஏன் இத்தனை வெறுப்பு?"

"வெறுப்பெல்லாம் ஒண்ணுமில்லை. அவர் எனக்கு அடைக்கலம் கொடுத்து உதவி செய்தவர். ஆனா புத்தியை நம்பாம தோஷம், ஜாதகம்னு அவர் பேசறதும், ஏடு சொல்றது... அதன்படிதான் எல்லாம் நடக்கும்கறதும் முட்டாள் தனமா எனக்குப் பட்றது..."

"அப்ப நீ அதெல்லாம் பொய்யிங்கறியா?"

"நிச்சயமா... இப்ப கூட என்னால் இந்த ஊரை விட்டே போக முடியாதுங்கற மாதிரி சொல்றார். ஆனா நான் கிளம்பிட்டேன். இனி இந்த ஊர் பக்கமே நான் வரமாட்டேன். எனக்கு இன்னும் மூணு மாசம் லீவு இருக்கு. அது வரை நான் சென்னைல இருப்பேன். அதுக்கு பிறகு அமெரிக்கா கிளம்பிடுவேன். நான் அவர் சொன்னதை முதல்ல பொய்யாக்கறேன். அதுக்குப் பிறகு நீங்களும் எல்லாம் பொய்யுங்கறதை புரிஞ்சுண்டு அவரை விலக்கி வெச்சுட்டு எங்க கல்யாணத்துக்கு சம்மதம் தாங்கோ. நான் பாரதியை கல்யாணம் பண்ணிக்கிறேன். இல்லேன்னா" -அவன் தோளை ஒரு மாதிரி குலுக்கி விட்டு திரும்பி நடக்கத் தொடங்கினான். பாரதிக்கு பதைத்தது. அன்னபூரணி பட்டரை கலக்கத்துடன் பார்த்தாள். ஆனால் பட்டரிடமோ துளிகூட பதற்றமில்லை.

"கலங்காதே அன்னம். ராஜ்நாராயண் சொன்ன மாதிரி, தீட்சதர் சொன்னபடி நடக்கறதா, இல்லை ராஜ்நாராயண் விருப்பப்படி நடக்கறதாங்கறதைப் பார்த்துடுவோம்..." என்றார்.

பாரதியின் கண்களில் கண்ணீர்!

✠ ✠ ✠

மினி பஸ் தயாராக இருந்தது. தன் பெரிய சூடகேசுடன் ஏறி அமர்ந்து கொண்டான் ராஜ்நாராயண். சில நிமிடங்களிலேயே அது நீடாமங்கலத்தை குறி வைத்து ஓடத் தொடங்கியது. அங்கிருந்து தஞ்சாவூருக்கு நிறைய பஸ்கள் இருக்கின்றன. மாறிக் கொள்ள வேண்டும். வெளியே வயல்வெளியைப் பார்த்தபடியே ஒரு வாக்மேனை எடுத்து காதில் மாட்டிக் கொண்டான் ராஜ்நாராயண்.

மினி பஸ்சும் புழுதியை புரட்டியபடி ஓடிக் கொண்டிருந்தது. அவனும் கண்களை மூடிக் கொண்டு வாக்மேனில் ஒலித்த பாடலை ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது துப்பாக்கி ஒன்று தோட்டாவை ஆவேசமாக உமிழும் சப்தம்!

கண்டக்டர் முதல் பயணிகள் வரை எல்லாரும் திடுக்கிட, மினி பஸ்ஸில் ஒருவன் வழிப்பறிக்காக நிமிர்ந்து விட்டிருந்தான்.

அவன் கையில்தான் துப்பாக்கி!

17

உலகில் எவ்வளவோ உயிரினங்கள்! 'ஊர்வன பறப்பன நடப்பன' என்று! இதில் மனிதன் மட்டுமே விதிவிலக்கானவன். நாலும் தெரிந்த இவனது சிறப்பம்சம் நகை! அடுத்தது இவனது ஆறாவது அறிவு. இவனை விஞ்சிய உயிர் ஏதும் இந்த உலகில் அல்லது வான்வெளியில், அங்கும் இங்கு மாய் உள்ள பதினான்கு உலகங்களில், ஏனைய கிரகப் பிரதேசங்களில் உண்டா எனும் கேள்விக்கு இதுகாறும் இல்லை என்கிற பதிலே விடையாக உள்ளது.

எனவே, உயிர்களில் ஒரு முழுமையையும் பெருமையையும் உடைத்த மனித வடிவில்தான் இறைவனும் இருத்தல் வேண்டும் என்பதும் ருசுவாயிற்று. ஆயினும், ஆதி அந்தமற்ற, சாதி பேதமற்ற, ஏற்ற இறக்கமற்ற, உயர்வு தாழ்வுமற்ற, பல்லுயிரையும் சமமாகக் கருதி அருளுகின்றதாகவே இறைவன் இருக்க முடியும் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை.

அதையே நமது புராணங்களிலும் கண்டு தெளிகிறோம். மாலுக்குக் கருடன், ஈசனுக்கு ரிஷபம், முருகனுக்கு மயில், விநாயகனுக்கு மூஷிகம் என்று தெய்வ சொரூபங்களுக்கான வாகனங்களாய் பிற உயிர்கள் வாய்த்தன. ஏன் இறைவர்களே ஆனை முகத்தோடும், குரங்கு முகத்தோடும், சிங்க முகத்தோடும் தோன்றி பேதமற்ற நிலைப்பாடுகளை காட்டியருளினார்கள்?

உலகைப் படைத்து உயிர்களைப் படைத்தவனுக்கு எதற்கு வாகனம்? வாகனங்களாய் அஃறிணை உயிர்களை அடிமை கொள்ளுதல் அழகா? அவை

செய்த பாவம்தான் என்ன? என்று பல கேள்விகள் மனித மனங்களுக்குள் தோன்றலாம்.

உண்மையில் இங்கே வாகனம் என்பது மனிதர்களைத் தாங்கித்திரியும் கார், பஸ் போன்றதல்ல.

சிவனின் வாகனமாக ரிஷபமாகிய நந்தி இருந்து சிவத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதை வேறு மாதிரி பார்க்கவேண்டும்.

ரிஷபம் என்னும் காளை உழைப்பு, வீரம் இவைகளின் வடிவம். சிவத்தை இவையே தாங்கிக் கொண்டுள்ளன என்பதே உண்மை. வேறு ஒரு கதையும் உண்டு.

'சிவன் ஒருமுறை யுத்தம் புரிய நேர்கையில் விநாயகனை வணங்காது ரதமேறிச் செல்ல, ரதத்தின் அச்சு முறிந்து போனதாம். அவ்வேளையில் திருமால் ஓடி வந்து ரிஷப வடிவில் சிவன் கீழே விழாது தாங்கியதோடு சற்று கர்வமும் கொண்டாராம். அதை உணர்ந்த சிவன், திருமாலுக்குத் தன்னை உணர்த்த முடிவு செய்து கனக்கத் தொடங்க, மாலாகிய ரிஷபம் தடுமாறிப் போய் பாரம் தாளாது அரற்றியதாம். பின் சிவத்தைத் தாங்குதலில் கர்வம் கொண்ட தவறுக்கு வருந்த, அனைத்தும் நேரானதாம்.'

எனவே, ரிஷபம் என்பது மாலின் ஒரு சொரூபமே என்றும் கூறுவதுண்டு. அதாவது, சிவத்தைத் திருமாலே தாங்குகிறார் என்பதாகவும் பொருள் கொள்ளலாம்.

துப்பாக்கியுடன் நின்றவனைப் பார்த்து பஸ்சே நடுங்கியது. டிரைவர் பிரேக்கடித்து பஸ்சையும் நிறுத்த, கண்டக்டர் மிரள மிரளப் பார்த்தார்.

சாலையில் சொல்லி வைத்த மாதிரி ஈ, காக்கை இல்லை. மதிய வெயில் அலை புரண்டபடி இருந்தது.

அவனைத் தொடர்ந்து இன்னும் இரண்டுபேர் எழுந்து பயணிகளிடம் நகை, பணம், வாட்ச் என்று கண்ணில் பட்டதைப் பிடுங்கத் தொடங்கினார்கள். ஒருவர் கீழே குதித்து ஓடப் பார்த்தார். அவரது காலைப் பார்த்துச் சுட்டதில் அப்படியே சுருண்டு விழுந்தார்.

இடுப்பு வேட்டி மடிப்பில் பம்ப்செட் மோட்டார் வாங்குவதற்காக வைத்திருந்த நூறு ரூபாய் நோட்டுக்கள் அவிழ்ந்து பொல பொலவென்று கொட்டின.

ராஜ்நாராயணுக்குள் கோபமும் ஆத்திரமும் மலைப் பாம்பு போல் முறுக்கிக் கொண்டு வந்தது. ஆனாலும், விவேகம் கட்டிப் போட்டது.

அந்தத் துப்பாக்கிக்காரனே அவனை நெருங்கி வந்தான். ஆழமாய் குத்துவது போல ஒரு பார்வை. பளிச் சென்ற அவனது முகம், போனிடைல் ஹேர்ஸ்டைல், அமெரிக்கன் ஜீன்ஸ் பேன்ட், கைகளில் பிரேஸ்லெட் டோடும், ரேடியம் ஒளியோடும் தெரிந்த ரிஸ்ட் வாட்ச்.

அவன் முகத்தில் குரூரச் சிரிப்பு உருவானது. குறிப்பாக அவனது பெரிய சூட்கேஸ். அட்டகாசமான வேட்டை என்று அவனை முணுமுணுக்க விட்டது.

அதில்தான் அவனது பாஸ்போர்ட், விசா, கிரெடிட் கார்டு சங்கதிகள் எல்லாம் இருக்கின்றன. பாக்கெட் பர்சில் ஒரு ஆயிரம் ரூபாய் இருந்தால் அதிகம்.

அந்தத் துப்பாக்கி மனிதன் ராஜ்நாராயணின் சூட்கேசைத் தொட்டுத் தூக்கினான். "நோ எடுக்காதே. வேண்டாம். இட்ஸ்ராங்" என்று அவன் கத்தக் கத்த அது பஸ்சை விட்டுக் கீழே இறங்கியது. அப்படியே மூன்று பவுன் பிரேஸ்லெட்டையும், ரிஸ்ட் வாட்சையும் கூடப் பாய்ந்து பிடுங்கினான்.

எல்லாரும் குளிர் புறாப் போல நடுங்கிப் போயிருந் தனர். அதேநேரம் ஒரு ஜீப் அந்த பஸ்சை ஒட்டி வந்து நின்றது. அவர்கள் கொள்ளை அடித்த பொருள்களோடு

அதில் தாவி ஏறினார்கள். ஞாபகமாக டிரைவர் தலையில் துப்பாக்கியின் கைப்பிடி பாகத்தால் ஒரு உச்சபட்சத் தட்டு...

டிரைவருக்குள் இடித்து மின்னல் பறந்தது. சுதாரித்து எழுவதற்கு ஐந்து நிமிடத்துக்கு மேலாகிவிட்டது.

போலீஸ் ஸ்டேஷன்!

பஸ்சை முன்னால் நிறுத்திவிட்டு கீழே குதித்தார் டிரைவர். கண்டக்டர் புயல் வேகத்தில் கத்திக் கொண்டே உள்ளே ஓடினார். பயணிகளும் பின்னால் ஓட, கடைசி நபராக ராஜ்நாராயணும் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்.

தீட்சதர் சொன்னது அவன் காதில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

'நீ இந்த ஊரை விட்டுப் போக முடியாது...'

ஸ்டேஷன் ஏட்டும் சப் இன்ஸ்பெக்டரும் வாயைப் பிளந்து விட்டிருந்தனர். பயணிகளும் 'லபோ திபோ' என்று கத்திக் கூச்சல் போட்டனர்.

"அவங்க எப்படி இருந்தாங்க? எந்தப் பக்கம் போனாங்க?" என்று கேள்விகள். ஆளுக்கு ஆள் பேசினார்கள். ராஜ்நாராயண் வாயே திறக்கவில்லை.

அவ்வளவு பொருளையும் இழந்தது பெரிதாகத் தெரியவில்லை. தீட்சதர் சொன்னதுதான் அவனுக்குள் பெரிதாக விஸ்வரூபம் எடுத்து அவனை நிமிண்டிக் கொண்டிருந்தது.

"நீ இந்த ஊரை விட்டுப் போக முடியாது..."

-அவர் சொன்னபடியே ஆகிவிட்டது. அடுத்து உடுத் திக் கொள்ளமாற்றுத் துணிகூட இல்லை. இதெல்லாம் எதேச்சையாய் நடந்தவையா... இல்லை தீட்சதரே இவனைப் போகவிடாமல் செய்ய ஏதாவது சதி செய்து விட்டாரா?

"மிஸ்டர்..." -சப்-இன்ஸ்பெக்டர் அவனை அழைத்தார். அவனும் நிமிர்ந்தான்."

"படிச்சவன் மாதிரி தெரியுது. உங்களால கூடவா அவங்களை சாமர்த்தியமா மடக்கிப் பிடிக்க முடியல?"

-பதிலுக்கு காலில் குண்டு காயம் பட்டவர் ரத்தப் பெருக்குடன், "ஐயா எனக்கு இங்க உசுர் போகுது. முதல்ல பேசைப் பதிஞ்சுகிட்டு என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்க. என்கிட்ட இருந்து பதினோராயிரம் சொச்சத்தைக் கொண்டுக்கிட்டுப் போயிட்டாங்கய்யா..." என்று கத்தினார்.

சப்-இன்ஸ்பெக்டரும் துரிதமானார்.

"கைல துப்பாக்கி... மிரட்றதுக்கான பொம்மத் துப்பாக்கி இல்ல... தப்பி ஓடப் பார்த்தவன் காலையே துளை போட்டுட்டாங்க. அதைப் பார்த்தும் எதிர்க்க யாருக்குங்க தைரியம் வரும். எனக்கென்னவோ அவனுங்க காரைக்குடி வஸ்தாது திம்மைய்யன் ஆள்களாத் தான் இருக்கணும்னு தோணுது. அவனுங்க போட்டோ படம் இங்க உங்ககிட்ட இருந்தா அடையாளம் காட்டிப்புடுவோம்" என்றார் ஒருவர்.

நல்லவேளை, ஸ்டேஷனில் அவர்களின் புகைப் படங்கள் ஆல்பத்தில் இருந்தன.

"இவங்கதான்... இவங்களேதான்!"

-சிலர் கத்தலோடு ஆமோதித்தனர். ராஜ்நாராயணும் பார்த்துவிட்டு ஆமோதித்தான்.

✠ ✠ ✠

தயிர் சாதத்தை பிசைந்து கொண்டிருந்தார் தீட்சதர். அப்போது வாசற் பக்கம் நிழலாடியது. திரும்பிப் பார்த்தார். பாரதி நின்று கொண்டிருந்தாள். நிறைய அழுதிருக்கிறாள் என்பது ஊதிப் பருத்த முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் உணர முடிந்தது.

"வாம்மா... உள்ள வா!" அழைத்தார். அவளும் உள்ளே வந்தாள். கால் கொலுசு அழகாக கொஞ்சியது. அவரும் தயிர் சாதத்தை ஒரு பாத்திரத்தில் போட்டு மூடியபடி அவளை நெருங்கினார்.

"மாமா..."

"சொல்லு..."

"அவர்..."

"யார்... உன் அம்மாஞ்சியா?"

"ஆமாம்... போய்ட்டாரா?"

"அப்படித்தான்னு வெச்சுக்கோயேன். ஆனா திரும்ப வந்துடுவான் கவலைப்படாதே..."

"எப்படி மாமா... அவர் ரொம்பப் படிச்சவர்..."

"நீ என்ன சொல்லவரே... படிச்சதுக்கும் அவன் திரும்ப வந்துடுவான்னு நான் சொன்னதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இல்ல... வெண்ணை திரளும் போது தாழி உடைஞ்ச மாதிரி என்னென்னவோ நடந்துடுத்து. முதல்ல தோஷம்னு சொல்லி ஒரு கலாட்டா. அப்புறம் அது சரி யாயிடுத்துன்னு சொல்லி இன்னொரு கலாட்டா. அவர் இரண்டையுமே நம்பலை."

"அதனால என்னங்கறேள்?"

"எனக்கென்னவோ அவர் வரமாட்டார்ங்கற மாதிரி தோண்றது?"

"சரி... அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?"

"நான் கல்யாணம் பண்ணிண்டா அவரைத்தான் மாமா பண்ணிப்பேன்..."

"பேஷா பண்ணிக்கோ. அதான் இப்ப ஒரு சிக்கலும் இல்லியே..."

"ஆனா அவர் இங்க நடந்ததை எல்லாம் பார்த்து தப்பா ஒரு முடிவுக்கு வந்துட்ட மாதிரி தெரியறது. அதான் கிளம்பிப் போய்ட்டார். நானும் மெட்ராசுக்கு அவரைப் பார்க்கப் போலாமான்னு பாக்கறேன்..."

-பாரதி குழம்பிப்போயிருக்கிறாள் என்பதும் தனது ஆசையை மட்டும் விடாமல் பிடித்துக் கொண்டிருப்பதும் தீட்சதருக்குப் புரிந்தது.

சிரித்தார்.

"இப்படி சிரிச்சா என்ன அர்த்தம்?"

"அத விடு... இதைச் சொல்லத்தான் இங்க வந்தியா?"

"எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. என்ன பண்றதுன்னே தெரியல."

"அவன் நாலு எழுத்து படிச்சவன். அமெரிக்காவுல சயின்ஸ்... சயின்சுன்னு அலைஞ்சவன். ஆகையால எது நடந்தாலும் புத்தியைக் கொண்டு அளந்து பாக்கறதும், அப்படி அளக்கும்போது சரியா விடை வரலைன்னா எல்லாம் தற்செயலான சம்பவங்கள்னோ, இல்ல யாரோ பிளான் பண்ணிண்டு எல்லாம் பண்றாளோன்னு சந்தேகப் படறதும் ரொம்ப சகஜம். நீ இதே ஊர்ல பொறந்து வளர்ந்தவ! இந்த ஊர்ல ஈஸ்வரனை தினமும் சேவிச்சவ. உனக்குக் கூடவா நம்பிக்கைப் போயிடுத்து?"

"நம்பிக்கை எல்லாம் போகலை... அதே நேரம் அவர் பேசறதும் சரியாத்தான் தோன்றது..."

"இதுக்குப் பேர்தான் அறிவு மயக்கம்கறது. ஒண்ணப் புரிஞ்சுக்கோ குழந்தை. துணிமணி, நகைநட்டுனு சாமான் களை அளந்து பார்த்து சரியா இருந்தாத்தான் வாங்கு வோம். ஆனா அதே முறையை மாத்திரை மருந்துல

காட்ட மாட்டோம். அதை மட்டும் நம்பிக்கை வெச்சுத் தான் வாங்குவோம். அப்படித்தான் தெய்வ நம்பிக்கை சார்ந்த விஷயங்களும். அதை நம்பிட்டா எடை போட் டுப் பார்க்கக் கூடாது. எடை போட்டா உன் மாதிரி குழப்பம்தான் மிஞ்சும்..."

"நீங்க பேசறதே புரியல..."

"புரியாது... உன் வயசு அப்படி. நீ இப்ப நம்பிக்கையா ஆத்துக்குப்போ. ராஜா கட்டாயம் வருவான். அவனால எவ்வளவு காரியங்கள் ஆக வேண்டியிருக்கு தெரியுமா?"

"ஒரு சந்தேகம்..."

சொல்லு..."

"எல்லாம் தெரிஞ்சு சாஸ்திரமும் புரிஞ்ச உங்களால நடக்காதது எப்படி, சாமி நம்பிக்கை இல்லாத என் அம்மாஞ்சியால மட்டும் நடக்கும்?"

"பரவாயில்ல... சரியான சந்தேகம்தான் உனக்கு வந்துருக்கிறது. இதுக்கு பதிலை உனக்கு நான் இப்ப சொன்னாப் புரியாது. போகப் போக தெரிஞ்சிப்பே" -அவர் தயிர் அன்னத்துடன் கிளம்பக் காலெடுத்தார். அவள் ஏனோ நின்று கொண்டேயிருந்தாள். அதே வேளையில் வாசல்புரம் ராஜ்நாராயணின் உருவமும் தெரிந்து இருவரையும் ஆச்சரியத்தில் அமுக்கியது.

"அம்மாஞ்சி..." -கூவினாள் பாரதி.

அவனோ மிக நிதானமாக நடந்து உள்ளே வந்தான்.

"என்ன சார்... என்ன திரும்பிட்டேள்? பஸ் கிடைக் கலியா? இல்ல பஸ் பிரேக் டவுனா? எங்க உங்க லக்கேஜ் எல்லாம்?" -தீட்சதர் கேலியாக் கேட்டார்.

"எல்லாம் திருட்டுப் போயிடுத்து... தற்சமயம் காலணா கைல கிடையாது. நீங்க ஆசைப்பட்ட மாதிரியே என்னால இந்த ஊரை விட்டுப் போக முடியல. இப்ப உங்களுக்கு திருப்திதானே?"

-அவன் பேச்சும் கேள்வியும் ஒரு தினுசாக இருந்தது.

"என்னப்பா... உன் தொனியே சரியில்லையே... என்ன நடந்தது?"

"ஓடிண்டிருக்கற பஸ்சுல துப்பாக்கியக் காட்டி வழிப்பறி. என்னைப் போக விடாம செய்ய நீங்கதான் அந்தத் திருட்டுப் பசங்களை அனுப்பிச்சேளோன்னுகூட தோன்றது..."

-அவன் அவருக்கே கொக்கி மாட்டினான்.

"ஈஸ்வரா... உன் புத்தி ஏன் இப்படி நெகட்டிவாவே எல்லாத்தையும் யோசிக்கறது. சீப்பை ஒளிச்சு வெச்சுட்டா கல்யாணம் நின்னுடுமா? உன் சமான்லாம் காணாமப் போயிட்டா என்ன இப்போ? அது கிடைச்சா கிடைக் கட்டும். கிடைக்கலைன்னா போகட்டும்.

'நான் இப்ப உனக்குப் பணம் தரேன். உன்னோட தஞ்சாவூர் வரைக்கும் கூட வரேன். கிளம்பேன். அப்பத் தெரிஞ்சுட்டுப் போறது, இந்த தீட்சதன் தனக்குத் தெரிய வந்ததைச் சொன்னானா இல்ல உன்னைத் தடுத்து நிறத்த திருடன்களை அனுப்பினேனாங்கறது..." -தீட்சதர் குரலில் கணிசமான கோபம்.

"அம்மாஞ்சி... ஏன் இப்படிப் பேசறேள். மாமா ரொம்ப நல்லவர். அவர் அப்படி எல்லாம் பண்ணமாட்டார்."

-பாரதியும் வக்காலத்து வாங்கிப் பேசினாள்.

"பாரதி, நீ குறுக்கே பேசாதே. இவன் இப்படி எல்லாம் யோசிக்கறான்னா அதுக்குக்கூட அந்த ஈஸ்வரன்தான் காரணம். தோ பார்ப்பா... நீ இருந்தா எனக்கென்ன போனா எனக்கென்ன?

'மனசுல பட்டதை நான் சொன்னேன். அவ்வளவுதான். இனி இந்தக் கோவில் தொடர்பா ஒரு வார்த்தை பேச மாட்டேன். அப்படி நான் ஒரு பூட்டு போட்டுக்கணும்னு கூட இப்படி நடக்கறதோ என்னவோ? நீ இருந்தா இரு, போனா போ.. அதே போல இவளைக் கல்யாணம் பண்ணிக்கறதும் பண்ணிக்காததும் உன் விருப்பம்தான். ஆளை விடு. எனக்காக வீர்யன் காத்துண்டிருப்பான்!" -தீட்சதர் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு என்கிற மாதிரி பேசிவிட்டுப் புறப்பட்டார்!

பாரதி ராஜ்நாராயணை கலக்கத்துடன் வெறித்தாள்!

✠ ✠ ✠

மாயவரம்!

குறிப்பிட்ட முகவரி முன் போலீஸ் ஜீப் தேங்கி நிற்க, இரண்டு சிபிசிஐடி போலீஸ்காரர்கள் சிவில் உடுப்பில் அந்த முகவரிக்குரிய வீட்டுக்குள் நுழைந்தார்கள். வீட்டில் இருப்பவர்களிடம் விசாரிக்க,

"இங்க தணிகாசலம் பிள்ளை வந்தாரா?"

"மரகதலிங்கபுரம் தர்மகர்த்தா தணிகாசலம்தானே?"

"அவரேதான்..."

"பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்து லௌகீகப் பேச் செல்லாம் பேசி முடிச்சிட்டு கிளம்பிப் போயிட்டாரே?"

"எங்க போனார்... திரும்ப மரகதலிங்கபுரத்துக்கா?

"இல்லை... சென்னை மண்ணடியில் அவர் நண்பர் ஒருத்தரைப் பார்க்கப் போறதா சொன்னாரு..."

"அந்த முகவரி இல்ல போன் நம்பர் இருக்கா?'

"தெரியாதுங்களே... எதுக்குக் கேக்கறீங்க?"

"காரணமாத்தான். நாங்க வரோம்" -அவர்கள் திரும்பினர்.

ஜீப்பும் சீறியது.

உள்ளே-

"என்ன பண்ணலாம் கதிரேசன். மண்ணடியில எங்கேன்னு போய்த் தேட?"

"எனக்கும் அதான் ஒண்ணும் புரியல..." -இருவரும் பேசிக் கொள்ளும்போது ஜீப் செல்லும் சாலை ஓரமாக ஒரு கிணற்றைச் சுற்றி ஒரே கூட்டம். என்ன என்று இருவரும் இறங்கிப் போய்ப் பார்த்தனர்.

கிணற்றில் ஒரு மனிதரின் சடலம் குப்புற மிதந்து கொண்டிருந்தது.

"யாருய்யா அது? எப்ப இருந்து இப்படி மிதக்குது?" -விசாரணையில் நுழைந்த இருவரும் கிணற்றில் இறங்கி ஒரு மூங்கில் கழியால் பிணத்தைப் புரட்டிப் பார்த்த போது அவர்களுக்குள் தீப்பிழம்பு போல ஒரு பகீர் உணர்வு.

பிணமாக மிதந்து கொண்டிருந்தது தணிகாசலம் பிள்ளை!

18

'சிவத்தின் பல ரூபங்களில் சதாசிவமும் ஒன்று. 'ஈசானம் காருடம், வாமம், பூத தந்திரம், பைரவம்' என்கிற ஐந்து சித்தாந்தங்களை உள்ளடக்கிய ஐந்து முகம் கொண்ட மூர்த்தியே சதாசிவமென்பதாம்.

ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு சித்தாந்தங்களை அருளுவது. அதைப் புரிந்து அனுசரிக்கும்போது நாமே சதாசிவமாகி அந்த சிவத்துடன் ஒன்றி விடலாம்.

எதற்கு இந்த சித்தாந்தங்கள்? இவற்றை ஏன் அனுசரிக்க வேண்டும்? என்ற கேள்விகளுக்குள்தான் மனித வாழ்வின் ஞானவிலாசமே அடங்கியுள்ளது.

இந்த சதாசிவ மூர்த்தியே காமிகம், யோகஜம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளியவர். அதையும் இருபத்தெட்டு ரிஷிகளுக்கு அருளி அவர்கள் மூலமாக மனிதகுலம் உயர்வடைய வழியைக் காட்டியவர்.

ஆகமம் என்கிற சொல்லுக்கு ஆழ்ந்த பொருள் உண்டு. 'ஆ' என்பது புரிந்து கொள்ளும் ஞானத்தைக் குறிப்பது. 'க' என்பது அதனால் நாம் அடையப்போகும் மோட்சத்தைக் குறிப்பது. 'ம' என்பது உடம்பை வென்று உள்ளொளி பெருக்கிக் கொள்ளும் மலநாசத்தை அதாவது மானிட சரீரத்தை மனம் வெற்றி கொள்வதைக் குறிப்பது.

மொத்தத்தில் ஆகமமே மனிதப் பிறப்பினைப் புரியவைத்து மனிதன் தன்னுள் இறையைக் காண வழிகாட்டுவதாம்.

நமக்கு நாம் புரிய முதலில் ஆகமம் வசப்படுதல் அவசியம். ஆகம வசப்படுதலில் விஞ்ஞானம் முதல் மெய்ஞானம் வரை சகலமும் அடக்கம்.

நீரின் குணத்தையும் ஆழத்தையும் உணர அதில் மூழ்குதலே தலை சிறந்த வழி. கரையில் அமர்ந்து கற்பனையில் எப்படி நீரின் இயல்பை அறிதல் இயலாதோ அதேபோல சிவத்தை அறிய ஆகமத்தில் இறங்கி அதில் மூழ்கி அதன்வழி நடத்தலே சிறப்பானதாம்!'

நீரில் ஊறிப் பருத்துக் கிடந்த தணிகாசலம் பிள்ளையின் சடலம் அந்த போலீஸ்காரர்கள் இருவரையும் ஒரு குமட்டு குமட்டியது.

'யார் இவர்...?' என்கிற கேள்வியோடு சடலத்தை ஊன்றிப் பார்த்தவர்கள் பிள்ளையின் சட்டைப் பாக்கெட்டில் கிடந்த மணிபர்சைப் பார்த்து அதைத்தான் முதலில் வெளியே எடுத்தார்கள்.

உள்ளே ரூபாய் நோட்டுக்கள்... கண்ட கண்ட ரசீதுகள் எல்லாமே நீர் ஊறி நமுத்திருந்தன. ஒரு வங்கியின் ATM கார்டும் இருந்தது. அதில் பெயர் பளிச்சென்று கண்ணில் பட்டது.

தணிகாசலம் பிள்ளை என்று கண்ணில்பட்ட பெயரைப் படித்த மாத்திரத்தில் இருவர் கணுக் காலையும் நண்டுக் கொடுக்கு நெருங்கியது போல் இருந்தது.

அதில் ஒருவர் சற்றுமுன் மாயவரத்தில் தணிகாசலம் பிள்ளையைத் தேடிச் சென்ற வீடு நோக்கிப் பறக்க ஆரம்பித்தார். போன வேகத்தில் பிள்ளையின் அந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் சிலரோடு திரும்பி வந்தார்.

வந்தவர்களும் பிள்ளையின் சடலத்தைப் பார்த்து வாயைப் பிளந்தார்கள்.

"சார்... இவர்தான் தணிகாசலம் பிள்ளை... இவர் எப்படி இங்க பிணமா கிடக்கறாருன்னு தெரியலியே..." பதறினார்கள்.

அந்த போலீஸ்காரர்கள் புத்தி வேகமாய் வேலை செய்ய ஆரம்பித்தது!

வைத்யநாத பட்டரின் வேட்டியைத்தான் கட்டிக் கொண்டிருந்தான் ராஜ்நாராயண். அதுவும் இடுப்பில் நிற்பேனா என்றது. அவிழ்ந்து அவிழ்ந்து பாடாய்ப் படுத்தியது.

"உன் பேண்ட் சட்டையை தோச்சு போட்ருக்கேன். காயற வரை செத்த இதை உடுத்திக்கோ" என்று பட்டரின் வேட்டியையும், ஒரு அங்கவஸ்திரத்தையும் அன்னபூரணிதான் எடுத்துத் தந்திருந்தாள்.

அந்த இரண்டையும் அவன் உடம்பில் அணிந்து கொண்டிருந்ததாகவே சொல்ல முடியாது. சுருட்டிக் கொண்டிருந்த மாதிரிதான் இருந்தது.

இருந்தும் பாரதி அதை வெகுவாக ரசித்தாள். எப்படியோ அவன் ஊருக்குப்போகவில்லை... தீட்சதர் சொன்ன மாதிரியே ஊரின் எல்லையை அவனால் ஒரு அடி தாண்ட முடியவில்லை.

அவளுக்கு அதை நினைத்து வியப்பாகவும் மறுபறம் கல்யாணத் தடை எல்லாம் நீங்கி அவன் தங்கள் வீட்டிலேயே வந்து தங்கிவிட்டது அவளுக்குள் சந்தோஷமான சந்தோஷத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தது.

அவனோ பாஸ்போர்ட் முதல் விசா வரை களவு போய்விட்ட குமுறலிலேயே இருந்தான்.

"அத்தை, நான் அந்த நடராஜ மூர்த்தியையே கண்டுபிடிச்சு கொடுத்தவன். ஆனா அவரோ என் ஜட்டி பேண்ட்டைக் கூட விட்டு வைக்கல. எல்லாம் திருடு போயிடுத்து.

'என்ன ஸ்வாமி இவர்.

'நிஜமா அவர் இருந்தா இப்படியா பண்ணுவார்?" என்று குமுறலுக்கு நடுவே கொஞ்சம் நாத்திகம் பேசினான்.

"அப்படி எல்லாம் பேசாதே ராஜா... காரணமில்லாம எதுவுமே நடக்கறது கிடையாது. இதுக்கு எதாவது அர்த்தம் இருக்கும். நீ வேணா பார், நீயே உன் வாயால எங்க ஊர் ஸ்வாமியை உருகி உருகிப் பாராட்டப் போறே..." என்றாள் அன்னபூரணியும்.

"அட என்ன அத்தை நீ... ஒரு பக்கம் ஸ்வாமி ஸ்வாமின்னு எல்லாரும் மாஞ்சு போறேள். மறுபக்கம் சாமியாவது பூதமாவதுன்னு அதையே திருட ஒரு கூட்டம். அப்புறம் வழிப்பறி, கொள்ளைன்னு இன்னொரு கூட்டம். நிஜமா ஸ்வாமி இருந்தா அவர் எல்லோரையும் சந்தோஷமான்னா வெச்சிண்டிருக்கணும். திருட்டு புத்தி ஏன் சிலருக்காவது வரது?"

"அம்மாஞ்சி... நீங்க என்ன சொல்ல வரேள். ஸ்வாமியே இல்லேங்கறேளா?" சின்னவள் சந்திரிகா குறுக்கில் நுழைந்தாள்.

"இருந்தா அவர் எதுக்கு கோவில்லையே ஒரு டார்க் ரூம்ல பல காலம் குப்பையாட்டம் கிடக்கணும். மனுஷன் வந்து காப்பாத்தற லெவல்லையா ஒரு சாமி தன்னை வெச்சுண்டுருக்கும்?"

"போதும்... நேத்து ராத்திரி கோவில்ல என்னல்லாம் நடந்ததுன்னு யோசிச்சுப் பாருங்க. 12 அடி நீள சர்ப்பம் ஒண்ணு வந்து சப்தகன்னியர்களை சேவிக்கல... யார் வந்து ஏத்தினான்னே தெரியாதபடி விளக்குகள் எரியலை... அவ்வளவு ஏன், பூட்டின கோவிலுக்குள்ள அவ்வளவு நாய்கள் எங்க இருந்து வந்ததாம்...?"

பாரதி பதிலுக்கு கேள்விகளை அடுக்கினாள்.

"இதை எல்லாம் தெய்வச் செயலா நினைக்க நான் தயார் இல்லை. பாம்பு இன்னிக்கு எங்க இல்லை? எதார்த்தமா அது வந்துருக்கலாம். அதே மாதிரி விளக்கு கூட அந்த திருட்டுப் பசங்கள்ள எவனாவது ஏத்தி எடுத்துண்டு போக முயற்சி செய்துருக்கலாம். நாய்கள் இன்னிக்கு ஒவ்வொரு ஊர்லையும் நூத்துக்கணக்குல இருக்கு.

'புதுசா யாரைப் பார்த்தாலும் குலைச்சுண்டு துரத்தத் தான் செய்யும்.

'எதுவும் எனக்கு பிரமாதமா படலை.

'நிஜமா ஸ்வாமி இருந்தா எதுக்கு இப்படி நாய்களை ஏவி விட்டு திருடன்களைத் துரத்தணும்? அவர் கைல தான் பெரிய திரிசூலம் வெச்சிண்டு இருக்காரே... அதை ஏவிவிட்டா முடிஞ்சிது. அது பறந்து வந்து திருடன்களை துரத்தித்துன்னா அதை மிராக்கிள்னும், தெய்வச் செயல்னும் சொல்வேன்... பாரதி, நீ சரியான பட்டிக் காடு, எதையும் லாஜிக்கா யோசிக்க கத்துக்கோ..."

"சரி... உங்களாலதான் அந்த நடராஜமூர்த்தி விக்கிர கம் வெளிப்படும்னு சுவடில எழுதியிருந்ததே அதுக்கு என்ன சொல்றேள்?"

"புடலங்கா... சுவடியாம் சுவடி. இதுல அது திருட்டு போயிடுத்துன்னு ஒரு புது திருப்பம். நான் அப்படி ஒண்ணு இருக்கறதாவே நம்பல. எல்லாமே புளுகு."

-பதிலுக்கு பதில் ராஜ்நாராயண் பிளந்து கட்டிக் கொண் டிருந்தபோதுதான் பட்டர் பரபரப்போடு வீட்டுக்குள் நுழைந்தார்.

முகம் வாடிய வெற்றிலையாக கறுத்துக் கிடந்தது.

"என்னன்னா... மணி அஞ்சுதான் ஆறது, அதுக்குள்ள வந்துட்டேள்... கோவில்ல யார் இருக்கா?"

"என்னத்த அன்னம் சொல்லுவேன். கோவில் நடையை சாத்தும்படி பண்ணிட்டானே அந்த நடராஜன்."

"நடையை சாத்திட்டேளா... என்ன சொல்றேள்."

"தர்மகர்த்தா தணிகாசலம் பிள்ளை செத்துட் டாராம்டி...!"

"என்னது...?"

"மாயவரத்துக்கு வெளியில கும்பகோணம் போற ரூட்ல ஒரு கிணத்துல அவரோட உடம்பு மிதந்துண்டு இருந்ததாம். விசாரணைக்குப் போன போலீஸ்காரா பார்த்துட்டு தகவல் சொல்லியிருக்கா. உடம்பு இப்ப மாயவரம் பெரிய ஆஸ்பத்திரி மார்ச்சுவரில் இருக்காம்!"

"ஐயய்யோ என்ன கொடுமை இது...?"

"கொடுமைதான். சுவடி முதல்ல திருடு போச்சு. இப்ப அதுக்கு பொறுப்பான அவர் உசுரே போயிடுத்து- சுவடிக்காக அவரை யாராவது கொலை செய்தாளா... இல்லை காசுக்கு ஆசைப்பட்டு சுவடியை வித்துட்டோமே, போலீஸ் வரைக்கும் விஷயம் போயிடித்தே. இனி தப்பிக்க

முடியாதேன்னு அவர் தற்கொலை பண்ணிண்டுட்டா ரான்னு தெரியல. விசாரணை நடந்துண்டுருக்காம்..."

பட்டர் சோர்ந்து போய் ஒரு ஓரமாக அமர்ந்தார். அது வரை கேள்வியும் பதிலுமாக மல்லு கட்டிக் கொண்டிருந்த ராஜ்நாராயணும் பாரதியும் சந்திரிகாவும் கூட அந்த செய்தி முன் ஸ்தம்பித்திருந்தனர்.

"ஆமா இது தீட்சதருக்கு தெரியுமா?"

"அவரைப் பாக்கத்தான் அவர் ஆத்துக்குப் போனேன். ஆனா அவர் இல்ல. இடிஞ்ச கோவிலுக்கு விளக்கு போடப் போயிருக்காரோ என்னவோ?"

"இடிஞ்ச கோவிலுக்கு விளக்கா?" -ராஜ்நாராயண் நிமிர்ந்தான்.

"ஆமாம்... இந்த ஊர்லயே ஒரு பாதாள சிவன் கோவில் ஒண்ணு இருக்கு. அங்க ஊர்ல யாரும் போக மாட்டா. தீட்சதர் மட்டும் போய் பாதாள லிங்கத்துக்கு விளக்கு போட்டுட்டு அங்க இருக்கற கழுகுக்கு தயிர் சாதம் கொடுத்துவிட்டு வருவார்..."

"யெஸ்... யெஸ்... ஊருக்கு வெளியே ஒரு கோவில் இருக்கு. நான் கூட பஸ்சுக்காக நின்னுண்டு இருக்கும் போது பார்த்தேன். அந்த கோவில்தானே?"

"அதேதான்..."

"ஏன் அங்க யாரும் போறதில்ல... இவர் மட்டும் எதுக்காக போறார்?"

"பாம்பும் தேளும் இருக்கற இடத்துக்குப் போக யாருக்கு தைரியம் வரும். தீட்சதர் போறார்னா அவருக்கு மந்திர சக்தி உண்டு..."

"அப்ப மத்தவா போனா ஏதாவது ஆயிடும்கற பயமா?"

"பயமில்ல... பலபேருக்கு உசுரே போயிருக்கு. அது மட்டுமில்ல, அங்கதான் எங்க மரகதலிங்க ஸ்வாமி

கோவில் பத்தி எல்லாம் சுவடில எழுதி வெச்ச சித்தரோட மகாசமாதி இருக்கு. அவர் இப்பவும் அங்க நடமாட்ற தாவும் ஒரு நம்பிக்கை வேற உண்டு. அதனால யாரும் போறதில்ல..."

"பாதாளலிங்கம் சித்தர்சமாதின்னு என்னென்னவோ சொல்றேளே... சம்திங் ராங்."

"ராஜா... நீ வந்ததுல இருந்தே எதையும் நம்பாம சைன்ஸ்லயே இருக்கே. அது உன் விருப்பம். ஆனா இப்ப என் கவலையே வேற..."

"என்ன அத்திம்பேர்?"

"கோவிலோட ஆபரணப் பெட்டி சாவி தணிகாசலம் பிள்ளைகிட்டதான் இருக்கு. அதை அவர் ரகசியமா வெச்சுருப்பார். இப்ப அவர் செத்துப் போய்ட்டதால் அந்த பெட்டி சாவி என்னாச்சுங்கற கேள்வியும் வந்தாச்சு.

அவர் கொலை செய்யப்பட்டிருக்கார்னா கொன்னவா சாவியையும் சேர்த்து அவர்கிட்ட இருந்து அபகரிச் சிருக்கணும்...

அப்படின்னா எப்ப வேணா கோவில் நகைகளும் திருட்டு போகலாம்.

அவ்வளவும் பல கோடின்னா மதிப்பு பெறும்."

பட்டரின் கவலையில் நியாயம் இருக்கத்தான் செய்தது.

அதே வேளையில் ராஜ்நாராயண் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மெல்ல வெளியே கிளம்பக் காலெடுத் தான்.

"நீ எங்கப்பா புறப்பட்டுட்டே..."

"எங்கையும் இல்ல... வந்துட்றேன்."

-ராஜ்நாராயண் மனதுக்குள் அந்த இடிந்த கோவிலைக் குறி வைத்து நடக்க ஆரம்பித்தான்.

தீட்சதர் அவனுக்குள் மிகத் தவறாக அர்த்தமாகிக் கொண்டிருந்தார்.

19

'சிவத்தின் அசாதாரண சொரூபம் உமா மஹேஸ்வர மூர்த்தி உருவாகும். உயிர்களில் ஆண், பெண் என்கிற அடையாளப் பிரிவுகள் இருக்கலாம். தெய்வங்களிலுமா என்கிற கேள்விக்கு ஆம் என்றும், இல்லை என்றும் கூறும் வடிவமே உமாமஹேஸ் வரம்!

உலகின் உயிரை ஆட்டுவிக்கும் சக்திகள் ஐந்து. 'இச்சை, க்ரியை, ஞானம், ஆதி, பரம்' என்கிற அந்த ஐந்தின் ஒரே சொரூபமே உமை!

இவள் சிவத்தோடு கலந்துவிட்ட அர்த்த நாரீச சொரூபமே உமாமஹேஸ்வரம்.

இந்த சொரூபம் உணர்த்தும் உண்மை மிக உன்னதமானது. ஆச்சரியம் தருவது.

ஆணும் பெண்ணும் சேர்ந்தாலே இன்னொரு ஆணோ அல்லது பெண்ணோ உருவாக முடியும். இங்கே பெண் உருவம் தருபவள், அந்த உருவத் துக்குள் உயிரையும் அதை ஆட்டுவிக்கும் ஐந்து வித சக்திகளையும் அவளே தருகிறாள்.

ஆதலால் தாய்மையே உலகின் உன்னதம் என்கிறோம். அந்த தாய்மையால் உருவையும் சக்தியையும் தர இயலும். அது ஆணா, இல்லை பெண்ணா என்பதைத் தீர்மானிப்பது சிவமாகிய ஆண் உயிர் சக்தியே.

இந்த விதத்தில் பார்த்தால் ஒவ்வொரு ஆணுக் குள்ளும் கோடிப் பெண் அணுக்களும் உள்ளனர். அவர்களை ஆணே தன் சரீரத்தில் பாதுகாக்கிறான். பெண்ணைப் பாதுகாப்பதே ஆணின் உயிர்

இலக்கணம். இதைச் சொல்வது போலக் காட்சி தரும் சொரூபம் உமாமஹேஸ்வர சொரூபம்!'

ராஜ்நாராயண் பேச்சோடு பேச்சாக நழுவுவதைப் பாரதி துல்லியமாகப் புரிந்து கொண்ட மாதிரி தோன்றியது.

அவள் கண்களில் கூர்மை.

அவன் நிச்சயம் இடிந்த கோவில் பக்கமாகத்தான் போவான் என்பது போல ஒரு யூகம்.

அப்படிப் போனால் அங்கே ஏதாவது விபரீதம் ஆகிவிட்டால்... என்கிற கேள்வி அவளுக்குள் எழும்பிய வேகத்தில் பயத்தில் நெஞ்சை அடைத்தது.

அம்மாஞ்சீ...சீ...! மனதில் அரற்றல்.

✠ ✠ ✠

இடிந்த கோவில்! எங்கு பார்த்தாலும் தரை மண்ணே தெரியாதபடி நெருஞ்சி முட்களின் ஆக்கிரமிப்பு. நடுநடுவே கோரைகள், கண்டங்கத்திரிகள், தூதுவளைச் செடிகளும் செழித்திருந்தன.

சுவற்றிலெல்லாம் மரக்கிளைகள் போல கோணல் மாணலாய் விரிசல்.

ஒரு இடத்தில் லிங்க ஸ்தூபி ஒன்று ஆட்டுரல் போல தனியே விழுந்து கிடந்தது. இன்னொரு இடத்தில் ஆவுடையார் மட்டும் பாதி புதைந்தும் மீதி புதையாதபடி ஒரு பக்கமாய் சாய்ந்தும் கிடந்தது.

ஆவுடையாரின் உட்குழிப் பாகத்தில் எப்போதோ பெய்த மழை நீரின் மிச்சம். அதில் பச்சை உடம்புத் தவளை ஒன்று பாசிமணி போன்ற தன் உருண்டைக் கண்களுடன் ஒரே இடத்தை வெறித்தபடி மிதந்து கொண் டிருந்தது.

வேட்டியை மடித்துக் கட்டியபடி அந்த பிராந்தியத்தில் காலை வைத்திருந்த ராஜ்நாராயண் காலில் சிலீர் என்று ஏறியது. கொத்தான நெருஞ்சி முட்களின் கூட்டம். உச்சந்தலை வரை அதனால் வலிச் சிலிர்ப்பு ஏற்பட, எகிறிக் குதித்து மேலும் மேலும் முட்களை காலில் குத்தவிட்டுக் கொண்டான் அவன்.

அவனையறியாமல் 'ஐயோ அம்மா' என்கிற அலறல் வெளிப்பட்டு அதனால் அங்கிருந்த புதர்களில் பதுங்கிக் கிடந்த உடும்புகளும், ஓணான்களும் விடைத்து எழுந்து நின்று அவனைப் பார்த்தன.

ஆலஞ்செடி துளிர் விட்ட கோவில் கோபுரக் கலச பாகத்தில் சுணங்கிப் போய் அமர்ந்திருந்த வீரியனும் விறுவிறுவென்று தலையை உசுப்பிக் கொண்டு கீழே பார்த்தது.

ராஜ்நாராயண் ஒரு மாதிரி சுதாரித்து முள் இல்லாத ஒரு காய்ந்து கிடந்த கல்தூண் மேல் போய் அமர்ந்து காலில் தைத்த முட்களைப் பிடுங்க ஆரம்பித்தான்.

அப்படியே பக்கவாட்டில் பார்வையைச் செலுத்தினான். அவன் அமர்ந்திருந்த கல்தூணில் ஒரு நாட்டியமாடும் பெண்ணின் உருவம். ஒரு கால் சற்றே வளைந்திருக்க ஒரு கால் உயர்ந்து மடங்கியிருக்க அந்தப் பெண் ஒரு கையைக் கண்ணாடியாகக் கருதி கண்ணெதிரே நிறுத்திக் கொண்டு மறுகையால் திலகம் இட்டுக் கொள்வதைப் போன்ற அந்த சிற்பத்தில் ஒரு பரிபூரணம் இல்லை. குறிப்பாக முகத்தில் நெற்றி, உதடு, மூக்கு, காது என்று எல்லா உறுப்புகளும் இருக்க, கண்கள் மட்டும் துப்புர வாகச் செதுக்கப்படாமல் அந்த இடம் மொட்டையாக இருந்தது, அவனை என்னவோ செய்தது. ஊன்றிப் பார்த்தான்...! ச்சே... என்ன ஒரு அழகான சிற்பம். எவ்வளவு நுட்பமான வேலைத்திறன். தலை முடியில்கூட வரிவரியாய எத்தனை தெளிவு... இத்தனை தூரம் இந்த

சிற்பத்தைச் செதுக்கியவன் கண்ணைச் செதுக்க மறந்துவிட்டானே...?

கேள்வி அவனுள் ஒரு நங்கூரம் போல விழுந்தபோது 'ஜலீர்' என்று மனசுக்குள் ஒரு வித சலனம். காதுக்குள் ளும் உளிகளின் கொத்துச் சப்த ஒலி!

'க்ளைக்... க்ளைக்...
க்ளைக்... க்ளைக்...
டணுங்... டணுங்...
டணுங்... டணுங்...'

-தன்னை மறந்து அப்படியே அந்த ஒலிச் சத்தத்தில் மூழ்கியவன் மனக் கண்ணிலும் ஒரு புதிய காட்சியின் விரிவு.

அவனே ஒரு உளியுடன் சிறுசுத்தியலுடன் அந்தத் தூண் முன் நின்று கொண்டிருக்கிறான். எதிரில் ஒரு பெண். அவள் நடனத்தில் ஒரு முத்திரை போல பொட்டிட்டபடி நின்று கொண்டிருக்கிறாள்.

அவள் கிட்டத்தட்ட பாரதியைப் போலவே இருக் கிறாள். அவன் கரமோ சிலையில் காது பாகத்தை வடித்துக் கொண்டிருக்கிறது.

அவள் நடுவில் தனது முத்திரையை கைவிட்டு விட்டு வந்து அவன் செதுக்கிய உருவத்தை ஒரு பார்வை பார்க்கிறாள்.

"பிரதாபி என்ன இது... நீ இப்படி நடுநடுவே முத்திரையை கலைத்துக் கொண்டு எட்டி எட்டிப் பார்த்தால் நான் எப்படி இந்த சிற்பத்தை வடித்து முடிப்பதாம்?"

-அதைக்கேட்டு அவள் சிரிக்கிறாள். சிரிப்பா அது? மணிச் சரம் ஒன்று தென்றல் பட்டு சிணுங்குகிற மாதிரி இருக்கிறது.

"சிரித்து என்னை மயக்கப் பார்க்காதே. போய் நில்..."

"நிற்கிறேன்... ஆமாம், இது என்ன கண்ணைத் தவிர மற்ற அத்தனை உறுப்புகளையும் முடித்துவிட்டீர்களே... எப்போது கண்ணை வடிக்கப் போகிறீர்கள்?"

"நீ இப்படி நிற்காமல் நடமாடினால் எப்படி நான் வடிப்பது... எப்போதும் சிற்பத்தில் கண் திறப்பது என்பது இறுதியில்தான். அதுதான் ஒரு சிற்பத்துக்கு உயிர் கொடுக்கும் இறுதிச் செயல்... இன்னமும் கொஞ்சம்தான். போய் நில்..."

-அவன் கை காட்ட அவளும் போய் மீண்டும் முத்திரை பிடிக்க முயலும்போது அங்கே ஒரு வயதானவர் இடையில் ஒரு சன்யாசி கவுபீனத்துடன் வருகிறார். அவருடன் கோவில் பட்டரும் வந்திருக்க, பட்டரிடம் இருந்து கேள்வி:

"என்ன நாராயண அழகா... பிரதாபி என்ன சொல்கிறாள்?

"முத்திரை பிடிக்கச் சொன்னால் வினாடிக்கு வினாடி அசைந்து சிற்பத்தை எட்டி எட்டிப் பார்க்கிறாள் பிரம் மானந்தரே..."

"சரிதான்... உன்னை அசைத்துக் கொண்டேயிருக் கிறாள் என்று சொல்."

-பிரம்மானந்த பட்டரின் கேலியான கேள்வியை ஒதுக்கியபடியே அந்த கவுபினம் தரித்த சன்யாசி சிற்பத் தூணைப் பார்த்துவிட்டு உதிர்ந்து கிடக்கும் அதன் கல்துணுக்குகளையும் பார்த்துவிட்டு முகம் சுளிக்கிறார்.

அப்போது திபுதிபுவென்று புரவிக் கூட்டங்களின் காலடிச் சத்தமும் கேட்க, "அடடா மிலேச்சப் படை ஊருக்குள்ளேயே நுழைந்துவிட்டது போல் இருக்கிறதே... ஸ்வாமி நீங்கள் சொன்னது போலவே நமது மரகதலிங்க புரமே சூறையாடப்பட்டு விடுமோ என்று எனக்கு அச்ச மாக உள்ளது. நீங்கள்தான் உங்கள் சித்து விளையாட்

டால் எதையாவது செய்து இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்."

-அதைக் கேட்க அவரிடம் மந்தகாசமான ஒரு வித புன்னகை. அவர் கண்களும் அகண்டு விரிகிறது...!

அவன் தோளின் மேலும் ஒரு கை விழ, நிமிர்ந்து பார்த்தான். எதிரில் தீட்சதர்.

"என்ன ராஜா... இங்க எங்க வந்தே?" -அவர் கேள் விக்கு சட்டென்று பதில் கூற முடியாமல் வெறித்துப் பார்த்தான்.

"உன்னைத்தான்... ஊரைவிட்டுப் போகாம இங்க வந்து உக்காந்துண்டு என்ன சிந்தனை?"

-அந்தக் கேள்வியும் அவனை பேச வைக்கவில்லை. வெறிப்பு தொடர்ந்து கொண்டேயிருந்தது. அதேநேரம் மழை வருவதற்கான அறிகுறியாக வானில் சாம்பல் தட்டிய மேகக் கூட்டத்துக்கு நடுவில் ஒரு மின்னல் இடிக் கூச்சலோடு ஒரு ஓட்டம் ஓடியது. காதைப் பிளக்கும் சத்தம்!

தீட்சதர்கூட காதைப் பொத்திக்கெண்டார். அவனும் வெறிப்பைக் கலைத்துக் கொண்டு காதைப் பொத்திக் கொண்டான்.

இடிச் சத்தமும் தேய்ந்து முடிந்து போனது.

அவனுக்கும் பிரக்ஞை வந்த மாதிரி இருந்தது.

"தீட்சதர்..."

"தீட்சதனேதான்... என்ன உலகையே மறந்துட்டியா?"

"அ... ஆமாம்... ஏதேதோ ஞாபகம். ஆமாம் எங்க பிரதாபி...?"

"பிரதாபியா...?" தீட்சதரிடம் ஆச்சரியம்.

"சாரி... வெரி சாரி... உளர்றேனோ?"

"எனக்கு உளறலாத் தெரியல. இங்க உக்காந்துண்டு பிரதாபின்னா அது ஒரு காலத்துல இந்தக் கோவில்ல நாட்டியமாடின ஊர்த் தலையாரியோட பொண்ணு பேர். ஆமா, இங்க வந்து கல்வெட்டை எல்லாம் படிச்சியா என்ன?"

"நானா... கல்வெட்டையா?"

"என்ன கேள்வி இது? கல்வெட்டப் படிச்சிருந்தாதானே அந்தப் பேரே உனக்குத் தெரிய வந்திருக்க முடியும், பாரு..."

-தீட்சதர் கரம் பக்கத்தில் கோவிலின் சுவர் பாகம் ஒன்றைக் காட்டியது. அதில் கொச கொச வென்று எழுத்துக்கள்.

ராஜ்நாராயணுக்குள் நிஜமாலுமே இப்போது மின்னல் வெட்டியது. பாரதியும் அங்கே தலை காட்டியிருந்தாள்.

ராஜ்நாராயண் தலையை உதறிக் கொண்டான்.

"வாம்மா... நீயும் தைரியமா இங்க வர ஆரம்பிச் சுட்டியே... எல்லாம் இவனோட நாத்திகப் பேச்சோட எதிரொலியா?"

-தீட்சதரின் கேள்வி பாரதியைக் கொஞ்சம் குழப்பி யது. விழித்தாள்

"சரி... சரி... கிளம்புங்கோ..." அவர் துரிதப்படுத் தினார். ராஜ்நாராயண் அசையவேயில்லை.

"உங்களைத்தான்... இருட்டப் போறது. பகல் பொழு துல இங்க வரவே எல்லாரும் பயப்படுவா. இதுல இருட்டறப்ப இங்க இருந்தா அவ்வளவுதான்..."

"ஏன்... என்ன ஆகும்?" -இந்தக் கேள்வியை மட்டும் பட்டென்று கேட்டான் ராஜ்நாராயண். தீட்சதரும் பதில் சொல்லாமல் ஒரு பார்வை பார்த்தார்.

"சொல்லுங்கோ... நீங்க தினம் வரலாம். உங்களுக்கு ஏதுவும் ஆகாது. ஆனா எங்களுக்கு ஏதாவது ஆயிடுமா? அப்படி என்ன ஆயிடும்?"

-தீட்சதர் தொடர்ந்து முன்பு அவன் பார்த்தது போலவே பார்த்து விட்டு, "சரி... இரு... இப்ப நீ பேசல. விதி பேசறது. நான் கிளம்பறேன்."

சொன்ன சூட்டோடு கிளம்பினார். பாரதிக்கு அவர் கேள்வி அவன் பதில் எல்லாமே என்னவோ செய்தது. அவர் தலை மறையவும் அவனைப் பார்த்தவள், "அம் மாஞ்சி... என்ன இது... எதுக்காக இங்க வந்தேள்? தீட்சதர் மாமா சொன்ன மாதிரி இங்க யாரும் வரமாட்டா. வந்தா ஏதாவது கெடுதல் நடந்துடும்ங்கற பயம் இந்த ஊர்ல எல்லோருக்கும் உண்டு. வாங்கோ ஆத்துக்குப் போகலாம்."

-அவன் கையைப் பிடித்து இழுத்தாள் அவன் தட்டி விட்டான்.

"இல்ல பாரதி... நீ வேணா போ. நான் வரமாட்டேன். எனக்கு இங்க நிறைய வேலை இருக்கு..."

"இங்கையா... என்ன அம்மாஞ்சி இது பேத்தல்?"

"சொன்னா கேளு. உனக்கு பயமா இருந்தா நீ கிளம்பு. நான் அப்புறமா வரேன்."

-ராஜ்நாராயண் எழுந்தான். தீட்சதர் சுட்டிக் காட்டிய கல்வெட்டின் அருகே சென்றான். கூர்ந்து பார்த்தான். தன் மனதுக்குள் ஒலித்த அந்தப் பிரதாபி என்கிற பெய ரைத் தேடினான். உருண்டையாய் வளையம் வளைய மாய் எழுத்துக்கள். அவனால் படிக்கவே முடியவில்லை. கல்வெட்டு பாஷை என்றே ஒன்றிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறான். ஆர்க்கியால ஜியில் நாட்டம் உள்ளவர் கள் தங்கள் தேடலுக்கு சவுகர்யமாக படித்து வைத் திருப்பார்கள். சாமான்யமாக படிக்க முடியாது. அவனாலும்

படிக்க முடியவில்லை. பாரதி அவன் செயலை மவுன மாகப் பார்த்துக் கெண்டிருந்தாள்.

அப்படியே சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தாள். பிரண்டைப் புதர் ஒன்றுக்குள் கருநாகம் ஒன்று நுழைந்து கொண்டிருந்தது. பார்த்த நொடி வயிற்றில் மஞ்சள் பாஸ்பரஸ் அக்னிச் சுடரோடு எரிகிற மாதிரி கூட இருந்தது.

ராஜ்நாராயண் கைகளோ அந்தக் கல்வெட்டு எழுத்தை வருடிக் கொண்டிருந்தது. உள் மனதில் அதை செதுக் கியதேகூட அவன்தானோ என்கிற மாதிரி ஒரு நெருடல். அப்படியே நிமிர்ந்து சுவற்றோரமாக நடந்தான்.

“அம்மாஞ்சி வேண்டாம்...” -பாரதி தடுக்கப் பார்த்தாள். அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்தான். இடிந்த கோவிலின் பிரகார வாயில்வரை நடந்தவன் உள்ளே பார்த்தான். உள்ளே கும்மிருட்டு. குப்பென்ற வவ்வால்களின் கழிவு வாசம். அந்த இருட் டிலும் உள்ளே நீண்ட தொலைவில் கருவறை போன்ற ஒரு இடத்தில் மிகச் சிறியதாய் ஒரு அகலின் ஒளி. அனேகமாய் தீட்சதர் வந்து ஏற்றியதாகத்தான் இருக்க வேண்டும்.

அது அவனையும் உள்ளே அழைத்தது. அவனும் உள்ளே செல்ல ஆரம்பித்தான். மீண்டும் வானத்தில் மின்னல் விளையாட்டு- இடிச்சத்தம். பொல பொல வென்று தூறல்களும் பூமி நோக்கி இறங்கத் தொடங்கின

அவனோ இருளில் அந்த அகல் நோக்கியே நடந்து அருகிலும் சென்றுவிட்டான். அகல் விளக்குக்கு அப்பால் இடுப்பில் தூக்கி வைத்துக் கொள்ளுமளவில் சிறிய சிவலிங்கம். அதன் உச்சந்தலை மேல் ஒரு செம்பருத் திப் பூ. பின்னாலயே வந்து நின்ற பாரதியும் லிங்கத்தைப் பார்த்தாள். தன் வாழ்நாளில் முதல்முறையாகப் பார்க் கிறாள்.

தன்னையுமறியால் கன்னத்தில் போட்டுக் கொண்டாள். ராஜ்நாராயண் தீர்க்கமாய் மூச்சு விடும் சத்தம் மிகத் துல்லியமாகக் கேட்டது.

அவ்வளவு நிசப்தம். வெளியில் மழையும் வலுத்திருந் தது. ஆனால் அதன் சத்தம் துளியும் காதில் விழாதபடி ஒரு நெருக்கமான அமைதி அங்கே.

மூச்சு விடும் சத்தம் மட்டும் ஸ்ஸ்ஸ்... என்று கேட்ட அந்த அமைதியான சூழலில் அந்த சத்தம் அப்படியே மருகி, ‘ஓம் நமச்சிவாய’ என்று ஒலிப்பது போலத் தோன்றியது.

யாரோ பாதாளத்துக்குள் இருந்து கொண்டு உச்சரிப் பது மேலே தேய்ந்து வந்து ஒலிக்கிறாற் போலகூடத் தோன்றியது.,

“பாரதி...” -அவன் அவளைக் கூப்பிட்டான்.

அந்த அழைப்பு பலமாகவே கேட்டது.

“அம்மாஞ்சி...”

“உன் காதுல ஓம் நமச்சிவாயங்கற குரல் விழறதா?”

“விழறது... ரொம்ப... ரொம்ப மெலிசா... யாரோ தூர இருந்துண்டு உச்சரிக்கிற மாதிரி... ஆனா இங்க நாலு பக்கமும் கல்சுவர். எப்படின்னு தெரியலையே...”

அவள் கையை உதறிக்கெண்டு பேச, அவன் சட்டென்று பக்கத்து கல் சுவரில் காதை வைத்தான். இப்போது அந்த மெல்லியச் சத்தம் திடமாகக் கேட்கத் தொடங்கியது.

“பாரதி... பாரதி... சுவத்துல காதை வைய்யேன்.”

-அவளும் வைத்தாள். கண்கள் அகண்டு போய், “அம்மாஞ்சி... சுவத்துக்குக்கு அன்னண்ட யாரோ இருந்துண்டு சிவ நாமத்தை ஜெபிச்சுண்டிருக்கிற மாதிரி தெரியறது...”

"எக்ஸாட்லி..." அவன் கத்திக் கொண்டே மறுபக்கம் யார் இருக்கிறார் என்று பார்க்கத் தயாரானான்.

20

'மனித இனம் காலத்தைக் கணக்கிட கடிகாரத்தைக் கண்டறிந்துள்ளது. அந்த கடிகாரமும் ஒரு சுற்று சுற்றி வர பனிரண்டு மணி நேரம் என்று ஒவ்வொரு நாளையும் இரண்டு முறை சுற்றி வருகிறது.

இந்தக் கடிகாரத்துக்கு எல்லாம் கடிகாரமான இயற்கைக் கடிகாரம் ஒன்று வானில் உள்ளது. அதுதான் சந்திரன். சூரியப் பிரவேசமும், மறைவும் பகலிரவுக்குத்தான் உதவும். ஆனால் சந்திரனோ மாதங்களையே கணக்கிட உதவுபவன். பதினைந்து தினத்துக்குத் தேய்ந்தும், பின் பதினைந்து தினத் துக்கு வளர்ந்தும் அவன் வான சஞ்சாரம் செய்வதை வைத்தே உலகில் ரிஷிகளும், முனிவர்களும் அன்றைய தினங்களைக் கண்டு கொண்டனர். அவன் இப்படிப் பயன் தரவேண்டும் என்பதற்காகவே மற்ற கிரகங்கள் போல் அகக் கண்ணால் காண முடியாத தூரத்தில் சந்திரன் ஒருபுள்ளி போல இருந்துவிடாமல் பூமிக்குச் சமீபத்தில் சூரியனை ஒத்த அளவில் அவனது கிரகமண்டலம் அமைந்துள்ளது. இதெல் லாமே தற்செயலான ஒரு வான்வெளி அமைப்பல்ல. மிகத் திட்டமிட்ட மனித வாழ்க்கைக்குப் பயன்கள் கிட்டுவதற்காகப் புரியப்பட்டவை.

இப்படிப்பட்ட சந்திரனே மனித உயிர்களின் மனங்களுக்கு அதிபதியாகிறான். ஒருவரது ஜாதகத்தில் சந்திரன் இருக்கும் இடத்தை வைத்து அவரது மன நலனைக் கூறிவிடலாம்.

அப்படிப்பட்ட சந்திரனுக்கு வளர்ந்து தேயும் இந்த ஆற்றலை வழங்கியதே சந்திரசேகரமாகிய

சிவம்தான். 27 நட்சத்திரப் பெண்களைத் திருமணம் செய்து கொண்ட சந்திரன், ரோகிணி, கார்த்திகை யிடம் மட்டும் கூடுதல் அன்புடன் இருந்ததால் மற்றவர்கள் தங்கள் தந்தையான தட்சனிடம் சென்று முறையிட்டனர். ஒளியிழந்து போகுமாறு சந்திரனைத் தட்சன் சபித்தான். அந்தக் காலத்தில் இருந்து அவனை ஆட்கொண்ட சிவமானது அவன் முற்றிலும் ஒளியிழந்த நாளை அமாவாசையாக்கி, அதன் பின் வளர்பிறையில் அவன் மீண்டும் வளர்ந்து பூரண ஒளி பெற்றுப் பவுர்ணமியாக இருக்க அருளினார்.

இதனால் சாபமும் விமோசனமும் உலகின் நலனுக்கான ஒன்றாக மாறிப் போனது. அதே நேரம் மாந்தர் மனங்களிலும் உச்ச, நீச்சங்கள் அமைந்து மனமானது அரக்கத்தனமாகாதபடி காப்பாற்றப் பட்டது.

சிவம் புரிந்த அரிய இந்த செயலை உணர்த் துவதே சந்திர சேகர சொரூபம்.

ஜாதகங்களில் சந்திரனை நீச்சமாக உடையவர் கள், மனச் சலனம் மிகுந்தவர்களாக இருப்பர். அவர்கள் சிவ வழிபாடு செய்தால் சிவனருள் பலத்தைத் தந்து மனதை உறுதிப்படுத்தும்.

வெளியே மழை விளாசிக் கொண்டிருந்தது. கூடவே இருட்டும் சேர்ந்து வந்து கவிழ்ந்திருந்தது. ராஜநாராய ணால் வெறும் கால்களுடன் கோவிலின் பக்கவாட்டுப் பிரகார வெளியில் நடந்து கருவறைக்கு மறுபக்கத்தைக் காண அத்தனை சுலபமாக முடியவில்லை.

"அம்மாஞ்சி... வேண்டாம் அந்தப் பக்கம் போகாதேள். அங்கதான் மேலூப் புத்து இருக்கு" -பின் தொடர்ந்து வந்த பாரதி, அவனைத் தடுக்கும் விதமாகப் பேசினாள்.

அவள் பேசி முடிக்க மின்னல் ஒன்று ஒரு லட்சம் வாட்ஸ் மெர்க்குரிப் பல்பைப் போல பிரகாசித்து அந்த பிரகார வெளியையும் காட்டி மறைந்தது.

அதில் மேரூ வடிவில் மலை போல் புற்று ஒன்றும் தெரிந்தது. மழைநீர் சரங்களும் உடம்பை நனைத்து விட்டன. கண்ணைக் கரித்தது. அப்படியே திரும்பி மீண்டும் பிரகாரத்திடம் வந்து நின்றான்.

பாரதியும் அங்கே நின்றிருந்தாள்.

"பாரதி, இங்க நடக்கற எல்லாமே எனக்குப் பெரிய புதிரா இருக்கு. இதுக்கு முந்தி இங்க நான் பல தடவை வந்துருக்கேன்னும் என் மனசு சொல்றது"

"என்ன அம்மாஞ்சி சொல்றேள்... இப்பத்தானே நீங்க இங்க வந்திருக்கேள்"

"இருக்கலாம்... ஆனா என் மனசுல பட்டதைச் சொன் னேன். நானே ஒரு சிற்பி மாதிரியும், நீ கூட ஒரு நாட்டியக்காரி மாதிரியும் எனக்குள்ள எண்ணங்கள். ஆமா உனக்கு அப்படி எதுவும் தோணலையா?"

"இல்லையே..." -அவள் சொல்லும் போதே மீண்டும் ஒரு மின்னல், பெரிதாக இடிச் சத்தம் வேறு.

பயத்தில் ராஜ்நாராயணை நெருங்கிக் கட்டிக் கொண் டாள். அவனும் மறுப்பின்றி கட்டிக் கொண்டான். இடியும் மின்னலும் ஓய்ந்த பிறகும் அவளை விலக்க வில்லை. அவளும் விலக விரும்பவில்லை.

அந்த அணைப்பிலேயே கிசுகிசுவென்று பேசினாள்.

"ஒரு ஆச்சரியம் பார்த்தேளா?"

"என்ன பாரதி?"

"காலம் இப்படி யாரும் பார்க்காதபடி நம்மளைச் சேர்த்து சேர்த்து விட்டுடுதே..."

"ஆமாம்... பெரியவாளுக்குப் பிடிச்சாலும் பிடிக்கலேன் னாலும் நாம இரண்டு பேரும் எப்படியோ சேர்ந்துட றோம்..."

"இன்னிக்கும் விடிய விடிய இங்கேயே தங்கும்படி ஆயிடுமோ?"

"உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா... எனக்கும் ஆட்சேபணையில்லை..."

"ஆசையைப் பாரு. இவ்வளவு பிரியத்தை வெச் சுண்டுதான் ஊருக்கு திரும்பக் கிளம்பினேளாக்கும்?"

"வாஸ்தவம்தான்... நான் ஏன் அப்படி நடந்துண் டேன்னு நினைச்சா எனக்கே ஆச்சரியமாயிருக்கு..."

"மண்ணாங்கட்டி... எல்லாம் படிச்ச திமிறு..."

"திமிறு இல்ல... பாதிப்பு... நான் என்ன பண்ணட்டும்? என் பகுத்தறிவு அப்படியெல்லாம் கேட்கறதே? இப்பக் கூட இந்த 'ஓம் நமச்சிவாய'ங்கற குரல் எங்க இருந்து கேக்கறது, யார் சொல்றான்னு தெரிஞ்சுக்கற துடிப்புதான் அதிகமா இருக்கு..."

"அனேகமா அது இந்தக் கோவில்லயே இருக்கற சித்தரோட குரலா இருக்கலாம்..."

"சித்தரா...?"

"ஆமாம்... அப்படித்தான் கேள்வி... அவரோட சமாதி இந்த இடிஞ்ச கோவில்லதானே இருக்கு."

"சமாதி ஆயிட்ட ஒருத்தர் எப்படி சிவ நாமம் ஜெபிக்க முடியும்? அவர் ஆவி வந்து ஜெபிக்கறதுன்னு சொல்லப் போறியா...?"

"சித்தர்களுக்குச் சாவே கிடையாதாமே... கேள்விப் பட்டதில்லையா நீங்க?"

"அது எப்படி மனுஷனாப் பொறந்த ஒருத்தனுக்குச் சாவு இல்லாமப் போக முடியும்? இதைக் கேட்டா அப்புறம் படிச்ச திமிறுன்னு சொல்வே..."

"சரி அதை விடுங்கோ... இப்ப நாம என்ன பண்ணலாம்?"

"மழை நிக்கட்டும்... ஒரு டார்ச்சை எடுத்துண்டு வரேன். இந்தக் கோயிலை முழுசா சுத்திப் பாத்துடுவோம். குறிப்பா அந்தச் சித்தர் சமாதியைக் கட்டாயம் நான் பாக்கணும்."

"வேண்டாம். பகல்ல வேணும்னா வருவோம். இப்ப வேண்டாம்."

"அதுவும் சரிதான்... இந்தக் கோவில் என்ன நடந்து ஓடியா போயிடப் போறது?"

-அவன் சம்மதிக்க, மழையும் சீற்றம் தணிந்த மாதிரி அடங்கிப் போனது. வானில் நட்சத்திரக் கண் சிமிட்டல்கள் தெரிய ஆரம்பித்தன.

"போலாமா?"

"வேற வழி... இல்லேன்னா உன் அப்பாவே இங்க தேடிண்டு வந்துடுவாரே..."

-பேச்சோடு இருவரும் அங்கிருந்து கிளம்பினார்கள். காலை இடறியது அந்த நாட்டியமாடும் பெண் உருவக் கல்தூண்.

ஒரு வினாடி நின்று அதைப் பார்த்தான் ராஜ்நாராயண். மீண்டும் அவனுக்குள் அந்தப் பூர்வ நினைவுகள். நெற்றிப் பொட்டிலும் மெலிதான அதிர்வு!

✠ ✠ ✠

அந்த விமானம் மேகப் பொதிகளுக்குள் நீந்திக் கொண்டிருந்தது. விண்டோவை ஒட்டி அமர்ந்திருந்தான் அவன்!

மொட்டைத் தலை, காந்திக் கண்ணாடி, அடர்ந்த மீசை, ஆகிருதியான மார்பு, அதை மூடிய குரோகடைல் டீ சர்ட், ஜீன்ஸ் பேன்ட், கான்பூர் கட் ஷூ என்கிற மேற்கத்திய பாதிப்புகளுடனான நவீனத் தோற்றத்துடன் இருந்தான்.

விமானத்தில் இருந்து குழைவான குரலில் அறிவிப்பு-வாரணாசி வந்து விட்டதை அது சொல்லியது.

அவனும் கீழே பார்த்தான்... புனித கங்கையின் ஓட்டம் ஒரு பாம்பு போல வளைசல் நெளிசலோடு கண்ணில் பட்டது.

அற்புதமான ஆன்மிக நதி... பளிங்கு போலத் தண்ணீர். ஆனால் மனிதர்கள் அதை அழுக்காக்கி மாசுபடுத்திக் கெடுத்து வரும் கோபம் அவன் நெஞ்சைக் குத்தியது.

புண்ணியம்கற பேர்ல ஒரு ஆற்றை அசிங்கப் படுத்துவதில் உடன்பாடில்லாதவன் போல நெற்றியைத் தேய்த்துக் கொண்டான்.

விமானமும் தாழ்ந்திருந்தது. தரையைத் தொட்டுச் சீறிப் பின் ஓய்ந்து நின்றது.

ஒரு பிரீப் கேசுடன் விமானத்தை விட்டு வெளியில் வந்தான்.

டொமஸ்டிக் கேட் வழியாக வீச்சலாக நடந்து, விமான நிலைய வாசலை அடைந்தவன், எதிரில் ரமணி சாஸ்திரி பஞ்சக்கச்சம், கட்டுக்குடுமி, நெற்றிப் பட்டை, காதுக் கடுக்கன் என்கிற சாஸ்திரீயத் தோற்றம்.

"வந்துட்டியா பல்ராம்..."

"வராமப் போவேனா... போன காரியம் என்ன ஆச்சு?"

"நான் போற காரியம் என்னிக்குடா சக்ஸஸ் ஆகாமப் போயிருக்கு?"

"அப்ப அந்த ஓலைக் கட்டு இப்ப இந்தப் பெட்டியிலன்னு சொல்லு..."

"முதல்ல கார்ல ஏறு... அப்புறமாக் காட்றேன்."

-ஏறி அமர்ந்தனர். நம்பர் லாக் பிரீப் கேஸ் அது. ரகசிய எண்ணைத் திருகி, பட்டனை பிரஸ் செய்ய, ஜிஜக்கென்று திறந்தது பிரீப்கேஸ்.

உள்ளே ஏட்டுக் கட்டுகள்!

சாஸ்திரி தொட்டு எடுக்கப் போனான்.

"டோன்ட் டச்... அவ்வளவும் கொஞ்சம் ரஃப்பா ஹேண்டில் பண்ணாலும் பொடிப் பொடியாயிடும்."

"ஐ நோ... ஐ நோ..."

"யூ டசன்ட் நோ் எனிதிங். பொங்கல், வடை சாப்பிடத் தான் நீ லாயக்கு. பேசாம வா. ஆமா, குப்தாஜி இருக் காருல்ல..."

"நோ... உனக்கு நான் பதில் சொல்ல மாட்டேன்டா. என்னை நீ ரொம்ப அண்டர் எஸ்டிமேட் பண்றே..."

"ஏய் சும்மா கலாட்டா பண்ணேன். டேக் இட் ஈஸி..."

அவர்கள் இருவரும் விளையாட்டாகப் பேசிக் கொண் டனர். அந்த சாஸ்திரி ஒரு செல்போன் வைத்திருந்தான். இடையில் அதை நிமிண்டி, "குப்தாஜி... ஆகையா" என்று இந்தியில் பேசினான். பிறகு பல்ராம் என்னும் மொட்டையன் பக்கம் திரும்பினான்.

"ஆமாம், மரகத நடராஜர் சிலை கிடைச்சிருச்சாமே?"

"ஆமாம்... ஏட்டு விஷயம் பொய் இல்லேங்கிறதுக்கு அதுவே புரூப் ஆயிடுச்சு..."

"நீ பாத்தியா பல்ராம்..."

"இல்ல, அப்ப நான் தஞ்சாவூர்ல இருந்தேன். அந்த தர்மகர்த்தாகிட்ட அப்பத்தான் டீல் வெச்சுக்கிட்டு இருந்தேன்."

"அந்த ஆள் கூட தற்கொலை பண்ணிகிட்டா னாமே...?"

"அதுதான் இல்ல. அவன் கொஞ்சம் அவசரப்பட்டுட் டான். முட்டாள்."

"எப்படி பல்ராம்? விவரமாச் சொல்லு..."

"ஏட்டுக்கட்டை போலீஸ் பாக்க வந்துருக்கு. மரப்பெட்டியில இல்லேன்ன உடனே தர்மகர்த்தாவைத் தேட ஆரம்பிச்சுட்டாங்க. அதுக்குள்ள நான் அதை வாங் கிட்டேன். திருப்பிக் கேட்டான். முடியாதுன்னு சொன் னேன். போலீஸ் அளவுக்கு இந்த விவகாரம் போகும்னு நான் எதிர்பார்க்கலை. ஆகையால போலீஸ் என்னைக் கேட்டா நான் சமாளிக்கறது கஷ்டம்னான். ஏதாவது டூப்ளிகேட் ஓலைங்களை வெச்சு சமாளின்னேன்."

"இல்ல... எங்க ஊர்ல தீட்சதர் ஒருத்தர் இருக்கார். அவர் கண்டுபிடிச்சுடுவாருன்னான்..."

"சாரி... இனிமே உன் பாடு. நான் இதுக்கு உனக்கு அஞ்சு லட்சம் பே பண்ணியாச்சு. இது இனிமே எங்க பிராப்பர்டின்னேன்.

"இன்பாக்ட் ஒரு ஆராய்ச்சிக்காக தேவைன்னு சொல்லித்தான் கேட்டிருந்தேன். ஆனா இதுல இருக்கற விஷயங்கள் உண்மைங்கற மாதிரி மரகத நடராஜர் விக்கிரகம் எப்படியோ வெளிய வந்துடுச்சி. அது அவனை பயமுறுத்திடிச்சி.

"நீ திருப்பிக் கொடுக்கலைன்னா நானே போலீசுக்குப் போய் நீ என்னை பிளாக் மெயில்பண்ணி இந்த ஏடுகளை வாங்கிட்டதாச் சொல்லிக் கம்ப்ளைன்ட் பண்ணுவேன் னான்.

அதுக்கு மேல அவன்கிட்ட பேச இடம் இல்லேங்கிற மாதிரி தெரிஞ்சிச்சு. கழுத்தை நெரிச்சுக் கொன்னுட் டேன். கார்ல தூக்கி போட்டுக்கிட்டு வந்து பாடியையும் ஒரு கிணத்துல தூக்கிப் போட்டுட்டேன்"

"அதை தற்கொலைன்னு போலீஸ் நம்பிடிச்சா?"

"அது எப்படி நம்பும்? போலீஸ்காரங்க என்ன காதுல பூ சுத்திக்கிட்டா வேலைக்கு வர்றாங்க."

"அடப்பாவி... விவகாரம் பண்ணிட்டு வந்துருக்கியே. எல்லாம் அந்தச் சுவடிகளுக்காகன்னு தெரிஞ்சிட்டா என்ன பண்ணுவே?"

"ஏன் கத்தறே... முள்ளே குத்தாம ரோஜாவை பறிக்க முடியாது. தேனீக்களுக்குப் பயந்தா தேனும் கிடைக்காது... போலீஸ் ஒரு பக்கம் அலையட்டும். அவங்கள டபாய்க்கறதும், சுவடிகள்ல உள்ளபடி சிவலிங்கத்தையும், அம்பிகை விக்ரகத்தையும் தேடிக் கண்டுபிடிக்கறதும்தான் இனி என்னோட வேலை..."

-பல்ராம் அலட்டலே இல்லாமல் சொல்லி முடிக்க, வாரணாசிக்குப் புறநகரில் ஒரு பழைய அரண்மனை போன்ற கட்டிடத்தின் முன்னால் கார் நிற்கச் சரியாக இருந்தது.

இறங்கி உள்ளே நுழைந்தனர்.

-முகப்பு வெளியில் புல்வெளி... நான்கைந்து டாபர்மேன் ஜாதி நாய்களுக்கு பார்க்க சுவாமிஜியைப் போன்ற தோற்றத்தில் இருந்த குப்தாஜி என்பவர் பிஸ்கட்டுகளை வீசிக் கொண்டிருந்தார்.

பல்ராமும், ரமணி சாஸ்திரியும் நெருங்கவும் நாய்கள் அவர்களை நோக்கி வந்து மார்வு வரை எம்பி தங்கள் பரிச்சயத்தைக் காட்டின.

ரமணி சாஸ்திரி பிரீப் கேசை குப்தாஜியிடம் நீட்டினான். அதை வாங்காமல் பல்ராம் பக்கம் வந்த குப்தாஜி, "எப்படி பல்ராம் அந்த மரகத நடராஜர் விக்கிரகம் கோவில் மண்டபத்துக்கு வந்தது? அது யாரோட வேலை?" -படு ஷார்ப்பாக ரமணி சாஸ்திரிக்குக் கூடத் தோன்றாத அந்த கேள்வியைத்தான் எடுத்த எடுப்பில் கேட்டார் குப்தாஜி.

பல்ராமிடம் திகைப்பு!

21

"இந்த உலகம், இதில் வாழும் தாவரங்கள், ஜீவராசிகள், அதில் மனிதர்கள், அவர்கள் வாழத் தேவையான காற்று, நீர், நெருப்பு முதலான ஆதாரங்கள் இவற்றை விஞ்ஞானக் கண் கொண்டு பார்த்தால் வியப்பாக இருக்கும். ஒரு எல்லைக்கு மேல் ஆய்வு செய்ய இயலாமல் போய் குழப்பமாகவும் இருக்கும். செய்த வரையிலான ஆய்வுகளும் ஸ்திரமாக இருக்காது. ஒருவர் கூறிய கருத்தை அவருக்குப் பின்னால் வருபவர் மறுத்து புதிதாக ஒரு கருத்தைக் கூறுவார்.

ஆனால் உலகம்- உயிரினங்கள் பற்றிய மாறாத கருத்துக்களையும் சத்தியமான உண்மைகளையும் கூறுவதாக புராணங்கள் இருப்பதை நடு நிலையோடு ஆய்ந்தால் உணரலாம்.

அதிலும் சிவ புராணம் உணர்த்தும் உண்மைகள் ஒப்பற்றவை.

சிவனால இறவா வரம் பெற்ற சூரபத்மனை யாராலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. சூரபத்மன் பெற்ற வரப்படி அவனை கருவில் திருவுற்ற எவராலும் அழிக்க ஏலாது. இந்நிலையில் சிவனே தனது ஐந்து திருமுகங்களிலிருந்தும், ஆறாவதான அஜோ முகத்தினின்றும் ஆன்மச் சுடர்களை உருவாக்கி, அதை நீராகிய கங்கையில் சேர்ப்பித்து, கங்கையும் அதனை ஒரு பொய்கையில் சேர்ப்பிக்க, அந்த ஆறு சுடரும் ஆறு உருவாக மாறி கார்த்திகைப் பெண்டிரால் வளர்க்கப்பட்ட அந்த அறுவரே பின் ஆறுமுகப் பெருமானாக மாறியதாக புராண வரலாறு கூறுகிறது. பின் இந்த ஆறுமுகனே சூரபதுமனையும் வதம் செய்தான்.

சிவம் எதற்கு இப்படி சுற்றி வளைக்க வேண்டும்? சிவத்தால் ஏலாதது எப்படி அதன் ஆறுமுக ரூபங்களால் மட்டும் இயலும் என்பன போன்ற கேள்விகளை உற்று நோக்கினால் உண்மை புரியும்.

அழித்தல் நாயகனான சிவன் இங்கே ஆக்கிப் பின் அழிப்பவனாகிறான். அவனது ஆக்கத்தில் அக்னி, வாயு, நீர் மூன்றும் முக்கியப் பங்காற்று கின்றன.

நட்சத்திர மகளிர் காலத்தால் குமாரனை ஆளாக்குகின்றனர்.

பஞ்ச பூதங்களோடு இதனால் காலம் என்ற ஒன்றும் இணைகிறது. சூரபதுமன் இங்கே அழிக் கப்பட வேண்டிய ஒரு சக்தி. அவன் காலத்தால் அழிக்கப்பட முடியாத வரமாகிய வல்லமை பெற்றவன்.

காலத்தால் அழிக்க முடியாதவனை காலத்தா லேயே அழித்தல் என்பதே கந்தபுராணம் சொல்லும் செய்தி. இதை விஞ்ஞானக் கண் கொண்டு சில ஆய்வுகளோடு பொருத்திப் பார்த்தால் நுட்பமான பல உண்மைகள் தெரிய வரும்!'

குப்தாஜியின் அந்த கேள்வி முன் விழித்தான் பல்ராம்....

"பாஸ், நீங்க ரொம்ப ஷார்ப்... எதைக் கேட்கணுமோ அதைக் கேட்கறீங்க..." என்றான்.

"நீ என் கேள்வியையே பதிலாக்காதே. பதிலைச் சொல். எப்படி கோவில் மண்டபத்துக்கு வந்தது அந்த நடராஜர் சிலை...?"

"என்ன பாஸ்... அதான் நான் போன்லையே சொன்னேனே... ராஜ்நாராயண்னு ஒருத்தன், அவன்தான் அதைக் கண்டுபிடிச்சவன்..."

"அவன் ஒரு அமெரிக்கன் ரிடர்ன்தானே?"

"ஆங்..."

"சாஃப்ட்வேர் இன்ஜினியர்..."

"அப்சல்யூட்லி..."

"அவனைப் பார்த்தியா நீ?"

"இல்ல பாஸ்... நான் தணிகாசலம் பிள்ளையோட அப்ப டீல்ல இருந்தேன்."

"நீ டீல்ல இருக்கே... ஆனா அவனோ காரியத்தையே கச்சிதமா முடிச்சுட்டான்"

"பாஸ்... அவன் பிளான் பண்ணி இதைச் செய்யலை. ரொம்பவும் தற்செயலான ஒரு விஷயம் இது."

"இதை நான் நம்பத் தயாரா இல்லை. அவன் சிலைகளைக் கண்டுபிடிக்கத்தான். அமெரிக்காவுல இருந்தே மரகதலிங்கபுரத்துக்கு வந்திருக்கணும்னு நினைக்கறேன்..."

"ஓ... நீங்க அப்படி யோசிக்கிறீங்களே..."

"முட்டாள்... அப்படித்தான் யோசிக்கணும். பல நூறு வருஷம் இருக்கற இடம் தெரியாம இருந்த ஒரு சிலையை ஒருத்தன் ஒரு நாள்ல சாதாரணமா கண்டு பிடிச்சுட்டான்னா அதை நான் நம்பவா?"

"அப்படின்னா...?"

"என்னையே திருப்பிக் கேள்... இந்த ஏட்டுக்கு எவ்வளவு கொடுத்தே?"

"அஞ்சு லட்சம்."

"வேஸ்ட். ஒண்ணு இது போலியா இருக்கணும். இல்லே இதே போல ஒண்ணு அவன்கிட்ட இருக்கணும். நம்ம வேலையை இப்ப அவன் பாக்கறான்."

"அப்படியா சொல்றீங்க...?"

"அதுமட்டுமில்ல... நீ ஒரு துரோகின்னும் சொல்றேன்."

"பாஸ்..."

"ஆமாம்... அந்த ஆளை ஏண்டா கொலை செய்தே?"

"நான்தான் போன்லேயே சொன்னேனே... அவன் போலீசுக்குப் போவேன்னான்."

"முட்டாள்... அவனைக் கடத்தி இங்க கொண்டுகிட்டு வந்துருக்கலாம்தானே?"

"அப்ப எனக்கு அது தோணாம போயிடிச்சு பாஸ்..."

"இப்ப அதனால போலீசை வேற இந்த விஷயத்துல நல்லா இழுத்து விட்டுட்டே ஓசைப்படாம தேடி எடுக்க வேண்டிய ஒரு காரியத்தை உன் அவசரம் கெடுத்து டுச்சி..."

"பாஸ்..."

"நீ இந்த காரியத்துக்கு லாயக்கில்லே. உன்னால இண்டர்நேஷனல் லெவலுக்கு டெவலப் ஆக முடியாது. நீ ஒரு அவசரக் குடுக்கை..."

-குப்தாஜி அதிகபட்சம் ஐந்து நிமிடம் கூட அவனிடம் பேசவில்லை. அவன் நடுங்கத் தொடங்கி விட்டான்.

"உன்னை வெச்சுகிட்டு பெரிய பெரிய பிளான்லாம் பண்றது ஆபத்து. நீ ஒரு முட்டாள்."

"மன்னிச்சுக்குங்க பாஸ்..."

"உன்னை மன்னிச்சா நான் மாட்டிக்குவேனே..."

-குப்தா சொன்ன விதத்தில் ஒரு அசாத்ய கூர்மை. ரமணி சாஸ்திரியும் வெலவெலத்துப் போய் விட்டிருந் தான். குப்தாஜி அடுத்து அந்த நாய்களைத்தான் பார்த்தார்.

அதுவரை அவன் வரையில் நட்பாக விளையாடிய அவை அவர் பார்த்த பார்வைக்கு புதிய அர்த்தத்தை உணர்ந்த மாதிரி அவன் மேல் ஆவேசமாகப் பாய்ந்தன.

அவன் அலற ஆரம்பித்தான்.

"சாஸ்திரி... இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துல அவன் செத்துடுவான். புதைச்சுட்டு வந்து என்னைப் பார்..."

"பாஸ்... ப்ளீஸ் சேவ் மீ... நான் உங்க விசுவாசி. உங்களுக்காக நான் பேங்க் ஆபீசர் வேலையையே..."

அவன் அலறலுக்கு நடுவில் பேசாதே என்கிற மாதிரி ஒரு டாபர்மேன் அவனது குரல் வளையையே எகிறிக் கவ்வியது.

ரமணி சாஸ்திரி உறைந்து போய்விட்டான்.

குப்தாஜீயோ பிரீஃப்கேசுடன் கட்டிடத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

✠ ✠ ✠

ஆர்க்கியாலஜியில் இருந்து ஒரு குரூப்பே வந்திருந் தது. மூத்த வரலாற்று ஆய்வாளர் கிருஷ்ணசாமி என்பவ ரும் வந்திருந்தார்.

நடராஜர் விக்கிரகத்தைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்துக் கொண்டிருந்தனர். சால்ட் பேப்பரில் தேய்த்தும், ஒரு சொட்டு ஆசிட் விட்டும், சோப் ஆயிலால் பிரஷ் செய்தும், சுண்ணாம்பைப் பூசியும் விதம் விதமாக அந்த விக்கிரகத்தைச் சோதித்த அவர்கள் இறுதியாக ராட்சச வில் தராசு ஒன்றில் எடையிட்டும் பார்த்தனர்.

கிட்டத்தட்ட அறுபத்து நான்கு கிலோ நிறை இருந் தது. நடராஜ மூர்த்தியின் திருவாச்சியில் தகதகவென தீச்சுடர் போல செதுக்கப்பட்டிருந்த தீ நாக்குகளும் அறுபத்து நான்கு இருந்தது. பீடத்தின் காலடியில் முயலகனை மிதித்த நிலையில் பீடத்திலும் அறுபத்து நாலு வரிக்கோடுகள்

"இந்த மூர்த்தி விக்கிரகம் புராண காலத்தது இல்லை. அறுபத்து நான்கு திருவிளையாடல் புரிந்தவன் ஈசன்

என்கிற இண்டிகேஷன்ஸ் இந்த சிற்பத்துல எல்லா லெவல்லையும் இருக்கு. ஆகையால இது இதிகாச, புராண காலத்து சிறப்மா இருக்க வாய்ப்பு இல்லை. சிவபெருமானோட திருவிளையாடல்கள் முடிந்து அது பற்றி தெரிய வந்து ஆகமத்தால் வழிபாடுகள் உயிர்ப்பிக்கப்பட்ட காலத்துல இதை யாராவது அரசர்கள் தங்களுடைய சுயபிரதாபத்துக்காக செய்து இந்த கோவிலுக்கு கொடுத்திருக்கலாம்."

-ஆய்வாளர் கிருஷ்ணசாமி தனது யூகத்தைச் சொல்ல, ஆர்க்கியாலஜியின் சீனியர் ஷாநவாஸ், "ஜாவா சுமத்ரா தீவுகள்ல மட்டுமே கிடைக்கற உயர்ந்த ஜாதி மரகதக்கல் இது... சென்ட் மதிப்பு போட்டா பல லட்சம் சென்ட்டுக்குள்ற அடங்கற இதோட மார்க்கட் மதிப்பு மட்டுமே முப்பது கோடி இருக்கலாம். நான் சொல்றது மரகதக் கல்லுக்கான மதிப்பு மட்டும்தான். அதோட வேலைப்பாடு ஏன்ஷியன்ட் வேல்யூசை சேர்த்தா இது ஒரு விலைமதிக்க முடியாத பொக்கிஷம். இதை இங்க இவ்வளவு வெளிப்படையா வெச்சிக்கறது ஆபத்து.

'மாஃபியாக்கள்ல ஃபைவ்எக்ஸ் குரூப்னு இருக்கு. அவங்க இந்த மாதிரி பொக்கிஷங்களை அதிரடியா கடத்தறதுல பயங்கர திறமைசாலிங்க.

'அவங்க மூலமா நம்ம இந்தியாவை விட்டு வெளிய போயிருக்கற பொக்கிஷங்களுக்கு ஒரு அளவே கிடையாது"

-ஷாநவாஸ் சொன்னது எல்லோருக்கும் கிறுகிறுப்பைத் தந்தது. அருகிலேயே இருந்து அவர்களுக்கு ஒத்துழைப்பு தந்து கொண்டிருந்த பட்டரும், தீட்சதரும் கூட கொஞ்சம் கலங்கித்தான் போனார்கள்.

"அஃப்கோர்ஸ் மிஸ்டர் ஷாநவாஸ்... இந்த கோவிலுக்குச் சொந்தமான முக்கியமான ஓலைச்சுவடிகள் திருட்டுப் போயிருக்கு. அதுக்காக கோவில் தர்மகர்த்தாவும்

கொல்லப்பட்டுருக்கார். அதனாலதான் இந்த விக்கிரகம் கிடைச்சதுல இருந்து இங்க போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கு..." என்றார் கிருஷ்ணசாமி.

"இந்த போலீஸ் பந்தோபஸ்தெல்லாம் சுண்டைக்காய் மிஸ்டர் கிருஷ்ணசாமி. ஒரு பட்டாலியனே இருந்தாலும் குறிவெச்சுட்டா அடிக்கறவங்கதான் ஃபைவ்எக்ஸ் பார்ட்டிங்க"

"தென்... என்ன பண்ணலாம்கிறீங்க?"

"இதை இம்மீடியட்டா சென்னை மியூசியம் கன்ட்ரோலுக்குக் கொண்டு போயிட்றது பெட்டர்... அங்க செக்யூரிட்டி சிஸ்டமும் அட்வான்ஸ்ல இருக்கு."

"இல்ல... கூடாது... இது இந்த கோவில் சொத்து. இதை இங்க இருந்து கொண்டு போக நாங்க யாரும் அனுமதிக்க மாட்டோம்... இது மியூசியத்துல கண்காட்சிப் பொருளா இருக்கறதுக்காக கண்டுபிடிக்கப்படலை. இது பூஜிக்கப்பட வேண்டிய மூர்த்தி. இந்த மூர்த்தியோட சக்தி பத்தி உங்களுக்குத் தெரியாது. ஆராய்ச்சி பண்றேன்னு நீங்க இதை தொட்டுப் பார்த்ததே தப்பு."

-அதுவரை அமைதியாய் இருந்த தீட்சதர் அலறினார். பட்டரும் ஒத்து ஊதிடத் தொடங்கினார்.

"ஆமாண்ணா... இருந்திருந்து பல நூறு வருஷம் கழிச்சு இது கிடைச்சிருக்கு... இதைப் போய் கொண்டு போறேன்னா என்னண்ணா அர்த்தம்?"

"பட்டர்... இங்க நோ சென்டிமென்ட்ஸ். நான் இங்கு சட்டப்படிதான் எதையும் பேச முடியும். இது இங்க இருந்தா பாதுகாக்கறது ரொம்ப கஷ்டம். இன்டர்நேஷனல் லெவல்ல இதை கடத்த முயற்சிகள் செய்வாங்க. அதனால உங்க உயிருக்கும் மத்தவங்க உயிருக்கும் தான் ஆபத்து..."

-ஷாநவாஸ் தனது நியாயத்தைச் சொன்னார்.

"இல்ல... ஒண்ணும் ஆகாது. உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ... இருந்தாலும் சொல்றேன். இந்த நடராஜ மூர்த்தி காணாமப் போனதுல இருந்து இப்ப திரும்பக் கிடைச்சிருக்கறது வரை எல்லாமே திருவிளையாடல். இது இனிமே இந்த ஊரை விட்டு எங்கேயும் போகக் கூடாது. போகவும் போகாது.

'இதோட சேர்ந்து இன்னும் இரண்டு விக்ரகங்கள் இருக்கு. கூடிய சீக்கிரம் அதுவும் கிடைச்சிடும். அப்படி கிடைச்சுட்டா அதையும் இந்த மூர்த்தியையும் இந்த ஊர் இடிஞ்ச கோயில்ல வெச்சு பிரதிஷ்டை பண்ணி பூஜையையும் ஆரம்பிச்சுடுவோம்.

'வாஸ்தவத்துல இது அந்த கோவில் சொத்து. பத்திரமா பாதுகாக்கறதுக்காக இந்த கோவில் சுரங்க அறைல கொண்டு வந்து வெச்சவர் பிரம்மானந்தர்ங்கற பட்டர்தான்..."

-தீட்சதர் ஒரு புதிய கோணத்தைக் காட்டினார்.

"இதெல்லாம் எப்படி உங்களுக்குத் தெரியும்?"

-ஆய்வாளர் கிருஷ்ணசாமி சற்று முன்னால் வந்தார்.

"எனக்கு இந்த ஊரோட விஷயங்கள் அத்துபடி. பல முன்னோர்கள் சொல்லிவிட்டுப் போனது, பழைய புத்தகங்கள்ல படிச்சு தெரிஞ்சுண்டது. அவ்வளவு ஏன் இடிஞ்ச கோவில் கல்வெட்டு போதுமே எல்லாத்தையும் சொல்லுமே..."

"அப்ப அந்த கோவிலுக்குப் போய் முதல்ல பார்ப்போமே..."

-கிருஷ்ணசாமி கிளம்பியேவிட்டார். அப்போது வேட்டி நுனியைப் பிடித்தபடியே ராஜ்நாராயணும் வந்து கொண்டிருந்தான்.

22

'இந்த உலகம் தட்டையானது என்கிற கருத்தே முதலில் இருந்தது. பின்னரே அது உருண்டை வடிவானதாக கண்டறியப்பட்டது. இதை மேலை நாட்டு அறிஞர் கலிலியோதான் முதலில் கண்டறிந்ததாகக் கூறுவார்கள். ஆனால் அதற்கும் முன்பே நமது ரிஷிகள் இதுபற்றி தெளிவாகக் கூறி யுள்ளார்கள். நமது பஞ்சாங்கங்களில் அது தெள்ளத் தெளிவாக இருப்பதைக் காணலாம்.

ஒரு வட்டத்தில் ஒரு இடத்தைப் பிளந்து கொண்டு நுழைந்தால் மீண்டும் அந்த நுழைந்த இடத்தை அடைய ஒரு முழுச் சுற்று வந்தாக வேண்டும். இதை மாதங்களும், காலங்களும் திதிகளும், ஹோரைகளும் தெளிவாக உணர்த்துகின்றன. இதற்கு ஆதாரமாக வானில் சந்திரனும் கடிகாரம் போல செயல்பட்டு உதவிக் கொண்டிருக்கிறான்.

உதாரணமாக 15 நாள்களுக்கு பதினைந்து திதி. இதில் வளர்பிறையில் 15 நாள்களும் தேய்பிறையில் 15 நாள்களும் என்று சராசரியாக மாதத்திற்கு 2 முறை ஒரு திதி வந்து செல்லும்.

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயலை நாம் செய்ய இந்த வளர்பிறை, தேய்பிறையும் இதனூடே உள்ள திதிகளும் அன்றும் இன்றும் நமக்கு பயன்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் பார்த்தால் ஒரு திதியில் நாம் செய்த செயலை நாம் தொடர்பு கொள்ள ஒரு சுற்று காத்திருக்க வேண்டும். மாதத் தர்ப்பணங்கள், திவச காரியங்கள் திதிகளைக் கணக்கிட்டே செய்யப் படுகின்றன.

இந்த வகையில் திதிகள் காலத்தில் குறித்த காலத்தை நமக்கு அடையாளம் காட்டுகின்றன.

இதை வலியுறுத்தும் விதமாகவே பிரதோஷம் வருகின்றது. திரயோதசி திதியும் அதன் பிரதான நேரமான சூரிய அஸ்தமன நேரமும் மகாசிவனால் பஞ்சபூதங்களில் உருவான விஷத்தை உறிஞ்சி கண்டத்தில் தேக்கும் காலங்களாம். நாம் நமது விஷத்தை (Negative) இவ்வேளையில் சிவநாமத் தால் சப்தித்து கரைக்கலாம். அது சிவத்தின் கண்டத்திற்கு போய்ச் சேர்கிறது. சிவத்தாலன்றி வேறு ஏதாலும் Negative விலகினாலே பாசிடிவ் தானாக உருவாகிவிடும். அதற்கு மாதம் இரண்டு முறை சிவம் மனித உயிர்களுக்கு பிரதோஷ வேளையில் கருணை செய்து கொண்டுள்ளது.

இடிந்த கோவிலைப் பார்க்க கிளம்பிக் கொண்டிருந்த கிருஷ்ணசாமியும் ஷாநவாசும் எதிரே வரும் ராஜ்நாராய ணைப் பார்த்து தேங்கினார்கள்.

தீட்சதர் உற்சாகமாய் அவனை அறிமுகப்படுத்தத் தொடங்கினார்.

"இவர்தான் இந்த நடராஜ மூர்த்தி வெளிப்படவே காரணம். பெயர் ராஜ்நாராயண்."

அவர்களும் மகிழ்ச்சியோடு கை குலுக்கினார்கள்.

"உங்க கண்டுபிடிப்போட வேல்யூ எவ்வளவுன்னு தெரியுமா?" -ஷாநவாஸ் கேட்டார். ராஜ்நாராயண் விழித்தான்.

"நியர் தேன் 50 க்ரோர்ஸ். இது கூட அப்ராக்ஸிமேட் வேல்யூதான். புராதனத்துக்கெல்லாம் மதிப்பு வைக்க நம்மால முடியுமா?"

அங்கே ஒரு வாரப் பத்திரிகை நிருபரும் வந்திருந்தார்.

"எக்ஸ்யூஸ்மீ சார்... அந்த சிலைக்குப் பக்கத்துல போய் நில்லுங்களேன் நான் ஒரு படம் எடுத்துக்கறேன்."

அந்த நிருபர் கரங்களில் ஜப்பானிய ஜூமர் குழல் கொண்ட கேமரா.

"நோ... வேண்டாம். நான் இதை எல்லாம் பெருசாவே நினைக்கல" -மறுத்தான்.

"நீங்க நினைக்காம இருக்கலாம். ஆனா எங்களால அப்படி இருக்க முடியாது. இது ஒரு லைஃப் டைம் அசீவ்மென்ட் ப்ளீஸ்..."

"வாங்க ராஜ்நாராயண்... கமான். லெட் அஸ் கம் வித் க்ளோசர்..." என்றபடியே கிருஷ்ணசாமி அவன் தோள் மேல் கை போட்டு நடராஜ மூர்த்தி சிலையை ஒட்டி நிற்க, நிருபர் மளமள்வென்ற வெளிச்ச நொடிகளை உருவாக்கி அவனை காமிராவுக்குள் சிறைப் பிடித்துக் கொண்டார்.

"அப்ப அந்த இடிஞ்ச கோவிலுக்கு..." மீண்டும் கிருஷ்ணசாமி பழைய கோவிலை ஞாபகப்படுத்தினார்.

"பேஷா போய் பார்க்கலாம். ஒரே ஒரு கண்டிஷன்." என்றார் தீட்சதர்.

"என்ன...?"

"அந்த கோவில்ல உங்கள்ல யாருக்காவது எதாவது தப்பா விபத்து நேரிட்டா வருத்தப்படக் கூடாது..."

"விபத்தா... எங்களுக்கா...?"

"ஆமாம்... அந்த கோவிலுக்குள்ற ஆறு கால பூஜை நடக்கும் போதுதான் பக்தர்கள்லாம் சகஜமா போய் வர முடியும்கறது ஏடோட தகவல்..."

"நானே கேட்கணும்னு இருந்தேன். அந்த ஏடு என்ன ஈஸ்வர லிபியா? இவ்வளவு நம்பிக்கையோட சொல் நீங்களே..."

"நிச்சயமா... அது ஈஸ்வர லிபியேதான். அதனாலதான் ஊர்ல யாரும் அங்க போறது கிடையாது."

"இது காலம் காலமா நிலவற சாதாரண நம்பிக்கையா கூட இருக்கலாம். இல்லியா?"

"வெறும் நம்பிக்கைக்கும் காலம் காலமா நிலவற நம்பிக்கைக்கும் நிறைய வித்தியாசமிருக்கே..."

"எல்லா நம்பிக்கையும் ஒண்ணுதான் தீட்சதர். ஒரு கோவிலுக்குப் போய் பாக்கறதால ஆபத்து வரும்னா என்னால அதை ஜீரணிக்க முடியல. அது கோவிலா இல்ல சுடுகாடா?"

-கிருஷ்ணசாமியிடம் கணிசமாய் கோபம் வெளிப்பட்டது.

"கரெக்ட் சார்... இவங்க எல்லா விஷயங்களையும் மிகையாவே சொல்றாங்க. நேத்து நான் கூட அந்த இடிஞ்ச கோவிலுக்குப் போனேன். எனக்கு எதுவும் ஆகலை. மாறா அங்க யாரோ ரகசியமா ஒளிஞ்சுகிட்டு ஓம் நமச்சிவாயன்னு சொல்லிக்கிட்டிருக்கற மாதிரிதான் எனக்கு தோணிச்சு."

-ராஜ்நாராயண், கிருஷ்ணசாமிக்கு பக்கவாத்தியம் போல பேசினான். அவன் இப்படி வெட்டியே பேசுவது தீட்சதருக்கு எரிச்சலைத்தான் தந்தது.

"அம்பி ராஜ்நாராயணா... செத்த சும்மா இருக்கியா? உன்னைச் சுத்தி எவ்வளவோ நடக்கறது. ஆனா அதை புரிஞ்சுக்காம பேசறதே உனக்கு வழக்கமா போச்சு."

"புரிஞ்சுக்காம பேசலை தீட்சதரே... புரிஞ்சுக்கத்தான் பேசறேன்."

"சரி கிளம்புங்கோ... ஒரு விஷயம் நல்ல விஷயமோ, கெட்ட விஷயமோ அதை தள்ளி வேணா போடலாம். ஆனால் தடுத்து நிறுத்திட முடியாது" -தீட்சதரே முதலில் காலெடுத்தார். அவர்களும் புறப்பட்டனர்.

✠ ✠ ✠

ஒரு கூட்டமாய் தீட்சதரும் பட்டரும் அந்த ஆர்க்கியாலஜிகளுடன் வீதிவழியே இடிந்த கோவிலை நோக்கிச் செல்வதை அங்கங்கே பலரும் பார்த்தார்கள். போன வாரம் வரையில் மிக அமைதியாக, இருப்பது தெரியாமல் இருந்த மரகதலிங்கபுரம் ஒரு வாரமாய் தினம் ஒரு அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாகிக் கொண்டிருப்பது அவர்கள் முகங்களில் அப்பட்டமாகத் தெரிந்தது. இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ என்கிற கேள்வியும் பயமும் கூட அவர்கள் முகங்களில் தெரிந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் தர்மகர்த்தாவின் வீடும் அவரது வீட்டுக்கு துக்கம் விசாரிக்க வந்திருந்த கூட்டத்தவர்களும் கூட தீட்சிதர் ஒரு கும்பலோடு நடந்து செல்வதைப் பார்த்தார்கள்.

எதிரில் இன்ஸ்பெக்டர் வேறு மோட்டார் பைக்கில் வந்து அவர்கள் அருகே தங்கி நின்றார். தீட்சதரையும் ஒரு தினுசாகப் பார்த்தவர், "எங்க சாமி கிளம்பிட்டீங்க?" என்றார்.

"நம்ம ஊர் இடிஞ்ச கோயிலை இவாள்ளாம் பாக்கணும்னு ஆசைப்பட்டா... அதான் கூட்டிண்டு போயிண்டிருக்கேன்."

"அந்த கோவிலுக்கா...?"

"ஆமாம்... வேண்டாம்னேன்! இவா கேக்கலை"

"நான், நீங்க அந்த திருட்டுப் பசங்களைப் பார்க்கத்தான் கிளம்பிட்டீங்களோன்னு நினைச்சேன்"

"யாரைச் சொல்றேள்...?"

"அதான் சாமி... கோவில்ல திருட வந்து நாய்க் கடிபட்டு இப்ப வைத்தியர் கிட்ட வைத்தியம் பாத்துகிட்டிருக்காங்களே...

'அதான் சாமி உங்களைப் பார்க்க வந்தேன். அந்த நாலு பேர்ல இரண்டு பேர் ரொம்ப வெறி பிடிச்ச நிலைல

இருக்காங்க. ஒருத்தன் நிலை என்னாகும்னு தெரியல. ஆனா ராஜரத்னம்கறவன் மட்டும் பரிபூரணமா குண மானா மாதிரி தெரியறான்."

"மோசமான்னா எப்படி இருக்கா?"

"நாய் மாதிரியே குலைக்க ஆரம்பிச்சுட்டாங்க. வாய்லையும் எச்சில் ஒழுக ஆரம்பிச்சிடிச்சு. வைத்தியரும் இனி என்னால இவங்களை மனுஷனாக்க முடியாதுன்னு சொல்லிட்டாரு..."

இன்ஸ்பெக்டர் குரலில் வருத்தம் பளிச்சிட்டது.

தீட்சதரும் அவர் பேச்சால் மருண்ட மாதிரி தெரிந்தது. ஆர்க்கியாலஜிஸ்ட் கிருஷ்ணசாமியும் ஷாநவாசும் விஷயம் புரியாமல் நின்றனர்.

"ஒண்ணுமில்ல... நீங்க கோவில்ல பார்த்த நடராஜர் விக்கிரகத்துல இருந்து கோவிலையே கொள்ளை அடிக்க ஒரு கூட்டம் முயற்சி செய்தது. ஆனா காலபைரவ ஸ்வாமி அவங்களைத் தடுத்துட்டார். அவங்கள்ல இரண்டு பேர்தான் இப்படிக் கிடக்கறாளாம்" -தீட்சதர் விளக்கினார்.

"அவங்களை நாங்க பார்க்க முடியுமா?"

-ஷாநவாஸையும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

"பேஷா... ஆனா அவாளை நீங்க பார்த்து என்ன பண்ணப் போறேள்?"

"ஒரு ஆர்வம் மட்டுமில்ல... எச்சரிக்கையும் கூட. எங்க டிபார்ட்மென்ட்டுக்கே சவால் இந்த மாதிரி திருடங்கதான். அவங்களைப் பார்த்தா எந்த கோஷ்டின்னு தெரிய வரலாம் இல்லையா?"

"ஓ நீங்க அப்படி வரேளா? சரி வாங்கோ. முதல்ல அவாளைப் பார்த்துட்டே அப்புறமா இடிஞ்ச கோவிலுக் குப் போவோம்..."

-தீட்சதர் மிக இயல்பாக அவர்களிடம் பேசினார். பின் இன்ஸ்பெக்டருக்கும் அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஷாநவாஸ் பரஸ்பரம் விசாரிக்க ஆரம்பித்தார்.

"உங்க பேர்?"

"குமாரவேல்."

"இவ்வளவு நாள் நீங்க எப்படி இருந்தீங்களோ தெரி யாது. இனி நீங்க ரொம்ப ஜாக்ரதையா இருக்க வேண்டி யிருக்கும்."

"நானும் கேள்விப்பட்டேன் மிஸ்டர் ஷாநவாஸ்... இப்ப இந்த மரகதலிங்கபுரம் மேல இண்டர்நேஷனல் லெவல்ல பார்வை விழுந்திருக்கறதா..."

"யூ ஆர் கரெக்ட்... அதுமட்டுமில்ல. கிடைச்சிருக்கிற மரகதலிங்கம் ஒரு சாம்பிள்தான். கிடைக்க வேண்டியது நிறைய இருக்கு. திருட்டு போன ஏட்டுக்கட்டுகள் போதுமே... எதிரிகளுக்கு வழிகாட்ட..."

-ஷாநவாஸ் சொல்ல தீட்சதர் பார்வை ராஜ்நாராயண் பக்கம் திரும்பியது.

ஆராய்ச்சி ஆராய்ச்சி என்று அதையே தொழிலாகக் கொண்டவர் கூட நம்புகிறார். ஆனால், மவனே நீ நம்பாம முரண்டு பிடிக்கிறியே என்று அது கேட்கிறாற் போல இருந்தது. அவன் அதற்கெல்லாம் அசைந்து கொடுக்கா மல் வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அவர்களும் நடக்கத் தொடங்கினர். இன்ஸ்பெக்டர் தன் மோட்டார் பைக்கில் முன்னால் சென்று அந்தக் கொள்ளையர்களை அடைத்து வைத்திருந்த கல்யாண மண்டபம் முன்னால் போய் காத்திருக்க ஆரம்பித்தார்.

அனைவரும் வந்து சேரவும் உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே நுழைந்த நொடிப் பொழுதில் தூக்கி வாரிப் போட்டது. வைத்தியர் சட்டை எல்லாம் கிழிந்து

மயங்கிக் கிடக்க, ராஜரத்னமும், கடம்பனும் கூட படுக்கையில் தங்களை மறந்து மயக்கத்தில் இருந்தனர்.

அந்த முற்றிப் போன நாய் போலவே குரைத்த திருடர்களைக் காணவில்லை!

✠ ✠ ✠

அவர்கள் இருவரும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர். அந்த ஓட்டம் அச்சு அசல் நாய்கள் ஓடுவது போலவே இருந்தது.

வழித்தடத்து பள்ளம் மேடுகளில் அவர்கள் தாவி ஏறிய விதமும், திரும்பிப் பார்த்த போது கண்களில் தெரிந்த குரூரமும் துரத்தும் சென்ட்ரி போலீசையே ஒரு வினாடி உலுக்கி எடுத்தது.

வழியில் சிலரும் கூட அந்த ஓட்டத்தைப் பார்த்து கதி கலங்கிப் போனார்கள்.

ஓடும் வழியில்தான் இருந்தது இடிந்த கோயில். அதை அவர்கள் கடக்கும்போது கோபுரத்தில் அமர்ந்து கொண்டிருந்த வீர்யன் கழுகும் அதைப் பார்த்தது. துரத்திக் கொண்டு வரும் சென்ட்ரி போலீஸ் காரர்களுக்கு நடுவில் சரேலென்று பாய்ந்து பறந்த அது அந்த போலீஸ்காரர்களின் ஓட்டத்தைத் தடுத்தது.

அவர்களும் கழுகைப் பார்த்து தேங்கி நிற்கவும் அந்த இரண்டு பேரும் அருகில் உள்ள சோளக்காட்டுக்குள் நுழைந்து விட்டிருந்தனர்.

வீர்யன் என்னும் கழுகும் தன்னுடைய கடமை முடிந்தது என்கிற மாதிரி மீண்டும் கோபுரக் கலசத்தின் அருகே போய் அமர்ந்து கொண்டது.

துரத்திக் கொண்டு வந்த போலீஸ்காரர்கள் முகத்தில் பலத்த ஏமாற்றம்!

23

'இந்த உலகில் உள்ள தாவர ஜங்கம உயிரினங்களில் சிரத்தின் தொடக்கத்திலேயே விஷத்தை உடைய ஒரே உயிரி சர்ப்பம்தான். மனிதர்கள் மனதில் இது மூட்டும் அச்சமும் கொஞ்ச நஞ்சமல்ல. காலும் கையுமின்றி ஒரு நீண்ட கோடு போல உள்ள ஒரு உருவம் வளைந்தும் நெளிந்தும் செல்வதே கூட ஆச்சரியமும், அதிர்வும் தரும் ஒரு அனுபவமாகும். இந்த உருவம் மனித மனங்களுக்குள் மூட்டும் அச்சத்திற்கு ஒரு அளவே இல்லை.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்கிற ஒரு பழமொழியையே உருவாக்கிவிட்ட இந்த சர்ப்பங்கள் சிவபெருமானின் திருமேனியில் ஆபரணமாகத் திகழ்வதை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதன் பின்புலத்தில் ஒரு புராண வரலாறும் உண்டு. காச்யப மகரிஷியின் மனைவியரில் இருவர் கத்துரு, விநதை. இவர்களுக்கு நடுவில் ஒரு சமயம் கருத்து வேற்றுமையால் சண்டை ஏற்பட்டது. இதில் கத்துருவின் கரம் ஓங்கிட விநதை சிறையில் அடைக்கப்பட்டாள்.

விநதையின் மகனே கருடன். கருடன் மிகச் சிறந்த சிவபக்தன். தாய் சிறையில் அடைபடவும் அவளை மீட்கும் பொருட்டு தனயனான கருடன் தேவலோகம் சென்று இந்திரனுடன் சண்டையிட்டு அமுத கலசத்தை அவனிடம் இருந்து பறித்துக் கொண்டு சென்றான்.

அதை கத்துருவுக்கு வழங்கி தாயை விடுவிக்கச் செய்ய வேண்டும் என்பது கருடனின் விருப்பம். கத்துரு பெண்ணாக இருப்பினும் அவள், சர்ப்ப வம்சம். நாகலோகத்தைச் சேர்ந்தவள். அவள் அமிர்

த்தை உண்டால் அழியாப் பெருவாழ்வு பெற்று விடுவாள்.

கிரத்தில் விஷத்தை உடைய சர்ப்பங்கள் அழியாப் பெருவாழ்வு பெற்றால் மற்ற உயிரினங்கள் என்னாவது?

இதை அறிந்த தேவர்கள் காக்கும் கடவுளான திருமாலிடம் முறையிட, திருமாலும திருவுள்ளம் கொண்டு கருடனைத் தடுத்து விநதையைச் சிறை மீட்க தான் உதவுவதாகக் கூறி அவ்வாறே செய்ய, கருடன் அந்த நொடி முதல் மாலின் அடியவனாக மாறி வாகனமாகவும மாறினானாம்.

நாகலோகத்தைச் சேர்ந்த கத்துருவோ அடைக்கலம் தேடி சிவபெருமானை அடைந்தாளாம். அவளையும் அவளது புத்திரர்களையும் ஆட்கொண்ட சிவன், பதிலுக்கு அவளது சர்ப்பங்களையே தனது மேனிக்கான அலங்கார ஆபரணங்களாக ஆக்கிக் கொண்டு அருள்பாலித்தார்.

தலையில் விஷத்தை உடைய சர்ப்பங்கள் கழுத்தில விஷத்தை உடைய நீலகண்டனின் திருவாபரணங்களாயின. அவற்றை அழிக்கும் குணமுள்ள கருடன் மாலின் வாகனமானான்.

இது வரலாறு. ஆனால் இதன் உட்பொருளே வேறு. உலகில் அழிக்கும் தன்மை படைத்த அனைத்தும் சிவனைத் தஞ்சமடையும் பட்சத்தில் அவனருளால் நம்மை அழிக்காது நமக்கு ஆபரணமாகவும் ஆகிவிடக்கூடும். அதாவது நமக்கு பயன்படக் கூடியதாகிவிடும் என்பதே உட்பொருள்!

வைத்தியரையும் மற்ற இரண்டு திருடர்களையும் பார்க்கக் கூடாத கோலத்தில் பார்த்த தீட்சதருக்கும் இன்ஸ்பெக்டருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

காவலுக்கு போட்டிருந்த சென்ட்ரி போலீஸ்காரர்களையும் காணவில்லை.

இன்ஸ்பெக்டர் பார்வை நாலாபுறமும் சுழன்று அவர்களைத் தேடியது. தீட்சதரும் பட்டரும் வைத்தியரை நெருங்கி அவரை மயக்கம் தெளிவிக்க முயன்றனர்.

ராஜ்நாராயண், ஷாநவாஸ், கிருஷ்ணசாமி மூவரும் வெறித்த விழிகளோடு தொட்டுத் தொட்டு நடப்பதை எல்லாம் பார்த்தபடி நின்றனர்.

"வைத்தியரே... வைத்தியரே..."

"ஆங்... அம்மா..."

"என்னய்யா... என்ன இது கோலம்? என்ன ஆச்சு?"

"சாமியா... சாமி அந்த இரண்டு திருட்டுப் பசங்களும் எங்க... ஓடிப்போய்ட்டாங்களா?"

"என்னய்யா சொல்றீர்... நீர்தானே அவங்களுக்கு வைத்தியம் பார்த்தது... ஓடிட்டாங்களான்னு எங்களக் கேட்டா என்ன அர்த்தம்?"

"சாமி... கொஞ்சம் முந்தி இங்க நடக்கக் கூடாதது எல்லாம் நடந்துடிச்சி. திடீர்னு அவங்க இரண்டு பேரும் நாய் மாதிரி குலைச்சுகிட்டு ரொம்ப ரகளை பண்ண ஆரம்பிச்சுட்டாங்க. நான்கூட வியாதி முத்திப் போச்சுன்னுதான் நினைச்சேன். அதான் இன்ஸ்பெக்டர் கிட்ட சொல்லி ஒரு முடிவு எடுக்கறதுக்காக உங்களை கூட்டிகிட்டு வரச்சொன்னேன். இவர் இந்தப் பக்கம் நகர்ந்துருப்பாரு... அவ்வளவுதான்... அவங்க அப்படியே என் மேல பாஞ்சு கடிச்சுக் குதறிட்டு ஓடினாங்க. சென்ட்ரி போலீசும் அவங்களை துரத்திட்டு ஓடினாங்க..."

வைத்தியரின் விளக்கத்திற்கு மறுபதில் போல சென்ட்ரி போலீஸ்காரர்கள் இருவரும் திரும்ப வந்தபடி இருந்தனர்.

இன்ஸ்பெக்டர் குமாரவேல் அவர்களைப் பார்க்கவும் விரைப்பாகி கத்தினார்.

"எங்கய்யா... எங்க அந்த இரண்டு பேரும்?"

"ஓடிப் போய்ட்டாங்க சார். அவங்க ஓடின வேகத்துக்கு எங்களால ஓட முடியலை. ஆவேசமா ஒரு நாய் துரத்தும் போது என்ன வேகம் இருக்குமோ, அந்த வேகம் அவங்க கிட்ட இருந்தது. பக்கத்து சோளக்காட்டுக்குள்ள பூந்து ஓடினவங்கதான்... எங்க போனாங்க, என்ன ஆனாங் கன்னே தெரியலை!"

-சொன்ன போலீஸ்காரர்களிடம் மூச்சு இரைத்தது. இன்ஸ்பெக்டர் குமாரவேல் எரிச்சலோடு கைகளைக் குத்திக் கொண்டு, "அவங்களை சுட்றதுக்கென்னய்யா... துப்பாக்கி எதுக்கு கொடுத்துருக்கு பூஜைக்கா...?"

"இல்ல சார்... ஒரு நொடி கூட அவகாசம் கிடைக்கல. ஓடும்போது எங்க ரைஃபிள் வேற கீழ விழுந்துடுச்சு. அங்க கழுகு ஒண்ணு கொத்த வந்துச்சு."

"இப்ப உங்க கேரியரே கீழ விழப்போகுது. உங்களை சஸ்பெண்ட் பண்ணா என்னய்யா பண்ணுவீங்க?"

"சார்ர்..."

-அவர்கள் அலறினார்கள்.

"இன்ஸ்பெக்டர் சார் கோபப்படாதேள். இதை எல்லாம் நான் எதிர்பார்த்தேன். அவா எங்கேயும் போகமாட்டா, வந்துடுவா. தைரியமா இருங்கோ..." -தீட்சதர் சமாதானப் படுத்தப் பார்த்தார். வீர்யன் துரத்தியது என்று அவர்கள் கூறியது அவரை யோசிக்க வைத்துவிட்டது.

"இல்ல சாமி... இதெல்லாம் டிபார்ட்மென்ட் மேட்டர். கைதிங்க தப்பிச்சா அது எவ்வளவு பெரிய விஷயம் தெரியுமா?"

"அவாளை ஏன் கைதிகளா பார்க்கறேள். அவா கைதிகள் கிடையாது. திருட வந்தவா. ஆனா திருட முடியலை. இருந்தும் பகவான் அவாளை தண்டிச்சுட்

டான். விடுங்கோ... வீர்யன் இவாளைத் தடுத்துருக் கான்னா அப்ப அதுல அர்த்தமிருக்கு..."

"அப்படி இல்ல சாமி... வெறி நாய் கடிச்ச ராபிஸ்ங்கற வியாதியோட திரியற அவங்க யாரைக் கடிச்சாலும் கடிப் பட்டவங்களும்ல செத்து வைப்பாங்க? அது எவ்வளவு பெரிய ஆபத்து தெரியுமா? அதுக்காகவாவது அவங் களைப் பிடிக்கணும் சாமி..."

"சரி... உங்க வேலையை நீங்க பாருங்கோ. இந்த இரண்டு பேரையாவது பத்ரமா பாத்துக்கோங்கோ. நாம இவ்வளவு கவலைப்பட்டுண்டு இருக்கும் போதும் தங்களை மறந்து தூங்கிண்டு இருக்கா பாத்தேளா?"

"அவங்க தூங்கலை. மயக்கத்துல இருக்காங்க. நான் கொடுத்துருக்கற மருந்து அப்படி. ஆனா அதைச் சாப்பிட்டும் அந்த இரண்டு பேரும் ஓடிப் போனதுதான் கொடுமை... எப்படின்னே தெரியல?"

-வைத்தியர் கையும் காலும் அநியாயத்துக்கு நடுங் கியது. ஆனால் தீட்சதர் முகத்தில் மட்டும் ஒருவித மர்மமான புன்னகை! அதுவரை பேசாமல் நின்று கொண்டிருந்த ராஜ்நாராயண் அந்த புன்னகையைப் பார்க்கவும் சற்று கோபமானான். அவர் அருகே நெருங்கி மிக மெலிதான குரலில், "அடிக்கடி மர்மச் சிரிப்பு சிரிக்கிறீங்க... இன்ஸ்பெக்டர் குமாரவேலோட கவலை ரொம்ப நியாயமானது சுவாமி. நாய்க்கடி மாதிரி ஒரு கொடுமையான விஷயமே உலகத்துல கிடையாது. இதுல நீங்க தினம் சோறு போட்ற கழுகு வேற இந்த போலீஸ்காரானை தடுக்கப் பாத்துருக்கு. கூட்டிக் கழிச்சா எனக்கு சந்தேகமா இருக்கு..." என்றான்.

"என்ன சந்தேகம்?"

"இதுவும் எதானா மாயா ஜாலமா... இதைப்பத்தியும் அந்த ஏட்டுல எதாவது குறிப்பு இருக்கணுமே?"

-கிண்டல் தொனித்தது அவன் குரலில்.

"ரொம்ப சரியாச் சொன்னே... நிச்சயமா இந்த சம்பவம் பத்தியும் அதுல இருக்கு."

-தீட்சதர் அசராமல் சொன்ன பதில் ராஜ்நாராயணின் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது.

ஷாநவாசும் கிருஷ்ணசாமியும் மயக்கத்தில் கிடந்த கடம்பனையும், ராஜரத்னத்தையும் அருகே சென்று பார்த்துவிட்டு வந்து தீவிர யோசனையில் இருந்தனர்.

"என்னண்ணா... இந்த பசங்களை உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமா?"

"ஆமாம் தீட்சதர். நாங்க சந்தேகப்பட்டு இவங்களப் பார்க்க வந்தது சவுகர்யமா போச்சு. இவங்க இன்டர் நேஷனல் லெவல்ல மூவ் பண்ற அந்த பைவ் எக்ஸ் குரூப்புக்கு தமிழ்நாட்டுல ஏஜென்ட் மாதிரி இருந்து செயல்பட்றவங்க. கோவில்ல திருட பிளான் போட்டுக் கொடுத்தா அதை கச்சிதமா செஞ்சு முடிச்சிட்டு காசை வாங்கிட்டு போயிடுவாங்க..."

"அப்ப அந்த பைவ் எக்ஸ் குரூப்தான் இவங்களை அனுப்பியிருக்கணும்னு சொல்றீங்களா?"

"நிச்சயமா... இவங்க கண் விழிச்சா அந்த உண் மையை நான் வரவழைச்சுடுவேன்."

-ஷாநவாசின் பதிலைத் தொடர்ந்து தீட்சதர் வைத்தி யரைப் பார்த்தார். வைத்தியர் உடனே அவர்கள் அருகே சென்று ஒரு மூலிகையைக் கசக்கி மூக்கில் விட்டார்.

முதலில் ராஜரத்னம் கண்களைத் திறந்தான். பின்னாலேயே கடம்பன்!

கண்களைக் கசக்கிக் கொண்டே இருவரும் ஷாநவா ஸையும், கிருஷ்ணசாமியையும் பார்த்து விதிர்த்துப் போனார்கள்.

ஷாநவாஸ் ஒரு மாதிரிச் சிரித்தார்.

"என்ன ராஜரத்தினம் என்னைத் தெரியுதா?"

"நல்லா தெரியுதுங்க சாமி... மீனாட்சிபுரம் கோவில் கொள்ளைல எங்கள பிடிச்சப்போ அந்த சாமி சிலைங் களப் பாக்க வந்தது நீங்க தானே?"

"பரவால்ல... உனக்கும் நல்ல ஞாபக சக்தி. எனக்கும் நல்ல ஞாபக சக்தி. ஆமா இந்த ஊருக்கும் அதே மாதிரி திட்டத்தோடதான் வந்தியா?"

"சாமி... தயவு செய்து விலாவரியால்லாம் கேக்காதீங்க. மொத்ததுல திருட வந்தோம். இப்ப திருந்தி நிக்கறோம்"

"அப்ப இனி திருடவே மாட்டே?"

"நிச்சயமா சாமி... நாயுங்க துரத்துனதை நினைச்சா இப்பக் கூட நெஞ்சை அடைக்குதுங்களே..."

"இதை நான் நம்பவா?"

"நம்புங்க சாமி... நான் சொல்றது சத்தியம்"

"அது சரி... திருட வந்தேன்னு சொன்ன நீ அதுக்கு மேல விபரமா எதையும் சொல்ல மாட்டேங்கிறியே. உன்னை ஐ ஆம் சாரி உங்களை இங்க ஏவி விட்டது யாரு. அதுக்கு உங்களுக்கு சம்பளம் எவ்வளவு? எல்லாத் தையும் சொன்னா நல்லாருக்கும்."

"இல்ல சாமி... வேண்டாம். அது எங்க தொழில் தர்மம் இல்ல..."

"திருட்டுத் தொழில்ல கூட தர்மம்லாம் இருக்கா?"

"இந்த தொழில்லதான் சாமி அது நிறையவே இருக்கு. இதுல இருக்கற நாணயம் வேற எந்த தொழில் லையும் கிடையாது"

"இவ்வளவும் சொல்றே... ஆனா உங்களை அனுப்பி னது யார்னு கேட்டா மட்டும் சொல்ல மாட்டேங் கிறியே..."

"சாமிஈஈ..."

"சும்மா சொல்லு... நீ சொல்றதுலதான் மத்த விக்ரகங்களை நாங்க காப்பாத்த முடியும்..."

"சாமி... சொன்னா கேளுங்க. நானோ எங்க கூட்டாளிங்களோ இனி திருட மாட்டோம். இது சத்யம். இதுக்கு மேல எதுவும் கேக்காதீங்க. அது உங்களுக்கும் நல்லதில்ல..."

"எனக்கும் நல்லதில்லேன்னா... மிரட்றியா ராஜரத்தினம்?"

"உங்களுக்குத் தெரியாததா சாமி... அந்தக் கூட்டம்தான் எந்த சண்டாள வேலையையும் ஈவு இரக்கமே இல்லாம செய்யுமே..."

"அப்ப அவங்க பைவ் எக்ஸ் பார்ட்டிதான்னு சொல்..."

"சாமீஈஈ..."

"கமான்... நான் இருக்கேன். இன்ஸ்பெக்டர் இருக்கார். உனக்கு ஒரு ஆபத்தும் வராது. உன் கூட நாங்க இருக்கோம். யார் அது?"

-ஷாநவாஸ் விடாமல் நெருக்கினார். ராஜ்நாராயணும் ஏக டென்ஷனில் இருந்தான். ஆனால் ராஜரத்தினமோ தீட்சதரைப் பரிதாபமாகப் பார்த்தான்.

24

'ஈரேழு பதினான்கு புவனங்களில் நாம் வசிக்கும் பூமியின் வடிவமும் சரி, அதன் ஆற்றலும் சரி ஒரு அதிதேர்ந்த படைப்பாளியின் அற்புதத் திட்டமிடலுடன் கூடியது.

உருண்டை வடிவத்தைக் காற்றால் போர்த்தி உரிய வேகத்தில் சுழலவும் செய்து வெப்பம், நிழல், இருட்டு என்னும் மூன்றையும் சமனாக இந்த பூமியில் படும்படி செய்து அதனால் பல்லாயிரக்

கணக்கான உயிர்கள் ஜீவிக்கவும் வழிவகை செய்து ஒரு பஞ்ச பூத சாம்ராஜ்யத்தை இம்மிப் பிசகின்றி நிர்வகிப்பது என்பது மனிதர்களால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாத ஒன்றாகும்.

இந்தப் பூமியில் நீரும் நிலமும் கலந்தும் பிரிந்தும் கிடந்தாலும் பாரத பூமி மட்டும் இதில் விசேஷ அமைப்பைப் பெற்ற ஒன்றாகும்.

அதிலும் தென்பகுதி போல ஒரு சிறப்புடைய நிலப்பரப்பு இந்த பூமியில் வேறு எங்கும் இல்லை எனலாம்.

அதனாலேயே அதிபுத்தியோடு புவனங்களைப் படைத்த அந்த பரமன் தனது திருவிளையாடல்களுக்கு உகந்த இடமாய் தென்பகுதியைத் தேர்வு செய்தானோ என்னவோ?

எந்த வகையில் இந்தப் பகுதி சிறப்பினை உடையது என்று சிந்தித்தால் உண்மை புலப்படும்.

வெம்மையும் குளுமையும் சமச்சீரோடு இருப்பது தென்பாகத்தில்தான்... துளசி முதல் வில்வம் வரையிலான மூலிகைகள் அதிகம் பயிராவதும் இங்கேதான்...

அனைத்திற்கும் மேலாக, இங்குள்ள குமரியில் மட்டுமே ஒரு புள்ளியில் நின்று உதயத்தையும் அஸ்தமனத்தையும் காண முடியும். உலகில் வேறு எங்கும் இந்த ஆகாய விளக்கை இப்படி நகராமல், திரும்பாமல் காண ஏலாது.

அத்தகைய சிறப்பினை காலத்தால் பதிவு செய்ய வேண்டி இறைவன் பரமன் அருளிச் செய்த நிகழ்வு ஒன்று உண்டு.

பங்குனி உத்திர நாளில் ஒரு சூட்சமமான திருவிளையாடலால் அன்னை உமையை பரமன் மணக்க விழைய, அதன் பொருட்டு இமயத்தில் குழுமிய தேவாதி தேவர்களால் வடபுலமாகிய தலைப்பாகம் அமிழ்ந்து கால் பாகமான தென்னகம் மேலேறியது.

இவ்வேளையில் தானும் ஒரு சிவனடியாரான அகத்தியரும் ஒருவரே என்பதை உணர்த்தவும் அந்த ஏற்றத்தாழ்வைச் சரி செய்யவும் அகத்தியரை தென்முனையில் உள்ள பொதிகைக்கு பரமன் அனுப்பிட மீண்டும் சமநிலை ஏற்பட்டது.

ஒரு பூமியின் நிலப்பரப்பு எங்காவது உயர்ந்து தாழுமா...? அதை ஒரு மனிதர் வந்து சமன் செய்ய ஏலுமா? என்கிற லாஜிக்குகளைப் புறந்தள்ளி ஆழ்ந்து சிந்தித்தால் இதில் வேறுவிதமான உண்மை விளங்கும்...

கோடி பேர் குவிந்தாலும் இமயத்திற்கு சிறப்பு வந்திடாது... ஒரே ஒருவர் மட்டுமே இருந்தாலும் தென்புலம் தாழ்ந்திடாது என்று உணர்த்துவதோடு தலை கனப்பது ஆபத்து... திருவடி கிடத்தலே சாலச் சிறந்தது என்பதையே இந்த புராண வரலாறு உணர்த்துகிறது...

இந்த சத்தியத்தை உணர்த்திய சிவமே கல்யாண சுந்தரமாகத் திகழ்கிறது!'

ராஜரத்தினத்தின் பதற்றமான பார்வை தீட்சதர் மேல் படிவதை ஷாநவாஸ் துல்லியமாக கவனித்தார். தீட்சதரை அவன் பார்வை என்னவோ செய்தது.

"என்னை எதுக்கு அப்படி பாக்கறே... நீ பாக்கறதப் பார்த்தா எனக்குத்தான் ஏதோ தெரியும்கற மாதிரி இருக்கு..."

தீட்சதர் சற்று அலறவே செய்தார்.

"இல்ல சாமி... நான் உங்களைப் பாத்ததுக்குக் காரணம் வேற சாமி. நீங்கதான் எங்களைக் காப்பாத்தனும்..."

"நானா... என்ன சொல்றே நீ?"

"ஐயா கிட்டத்தட்ட எங்க நதிமூலம், ரிஷிமூலத்தைச் சரியா கண்டுபிடிச்சு நெருங்கிட்டாரு. நாங்க உண்மையைச் சொன்னா எங்களை ஏவி விட்டவங்க எங்களை

கொன்னுடுவாங்க. சொல்லாட்டி போலீஸ் எங்களை உண்டு இல்லைனு பண்ணிடும்.

'திருந்தாத திருடங்களாவே இருந்திருந்தா இந்த சமயத்துல எதையாவது சொல்லி குழப்பி தப்பிச்சு ஓடப் பார்த்துருப்போம். ஆனா திருந்திட்டோம். ஆனா சாமியோட அருள் விளையாட்டை நேர்லையும் பார்த்துட்டோம். இனி செஞ்ச பாவத்துக்கெல்லாம் பரிகாரமா இந்த கோயில்ல ஊழியம் பார்த்து இங்கேயே சாகனும் கறதுதான் என் விருப்பம். அதுக்கு நீங்கதான் வழி காட்டணும்..."

"என்னப்பா நீ... வழிகாட்ட நான் யார்? போ... போய் அந்த ஸ்வாமி கால்லயே விழு. அதுக்கு முந்தி உன்னை ஏவிவிட்டவாளைப் பத்தியும் சார்கிட்ட சொல்லிடு..."

"சொல்லிடலாம் சாமி. அவங்களும் கம்பி எண்ண வேண்டியவங்கதான். ஆனா நாங்க அதுக்குப் பிறகு இந்த கோவில்ல சுதந்திரமா ஊழியம் பாக்க முடியாதே..."

ராஜரத்தினம் எங்கே வருகிறான் என்பது ஸாநவாசுக்குப் புரிந்தது.

ராஜ்நாராயணுக்கோ சிரிப்பு வந்தது.

தீட்சதர் அவனை எதற்கு சிரித்தாய் என்கிற மாதிரிப் பார்த்தார்.

"பின்ன என்ன... நூத்துக்கணக்கான நாய்கள் துரத்தியே ஒண்ணும் ஆகலை. அந்த ஈஸ்வரன் காப்பாத்திட்டான். அவன் திருவிளையாடலை நேர்லையும் பார்த்துட்டோம்னு சொல்றான். அப்ப அவன் இருக்கான். உதவியும் செய்யறான்கறது புரூவ் ஆகுது. ஆனா தன்னை ஏவிவிட்டவங்க பேரைச் சொன்னா அந்த கோஷ்டி வந்து தங்களைக் கொன்னுடுங்கறான்.

'நூத்துக்கணக்கான நாய்கள்கிட்ட இருந்தே காப் பாத்தின அந்த சிவன், இந்த திருட்டுக் கூட்டத்துக்கிட்ட இருந்தா காப்பாத்தாம போயிடுவான். ஒருபுறம் நம்பிக்கை, மறுபுறம் அவநம்பிக்கை. நடுவுல குழப்பம். இதுதான் இன்றைய பக்தியோட நிலை. அதுக்கு இவன் ஒரு உதாரணம்.'

-ராஜ்நாராயணின் விரிவான பதில் ஷாநவாஸை மிகவே யோசிக்க வைத்தது. நெருங்கி வந்தார். கைகளை நீட்டி 'வெல் செட்' என்றார்.

"தேங்க்யூ சார்..." என்றான் அவனும்.

அதேசமயம ராஜரத்தினத்திடம் சட்டென்று ஒரு ஆவேசம்.

"தம்பி... உங்க கேலிப் பேச்சு என் கண்ணைத் திறந் துருச்சுங்க. ஐயா கேட்டுக்குங்க, நாங்க கூலிக்கு திருட்டு வேலை பாக்கறவங்க. அப்படித்தான் இந்த வேலையையும் செஞ்சோம். எங்களை ஏவிவிட்டவர் இப்ப உசுரோட இல்லை. அவர் வேற யாரும் இல்லீங்க. தர்மகர்த்தா தணிகாசலம் ·பிள்ளைதான்."

-ராஜரத்தினம் சொன்னது கொஞ்சம் நெஞ்சில் குத்தியது. பட்டரும், தீட்சதரும் அனல் வாழை போல வாடிப் போனார்கள்.

"நல்ல மனுஷன்னு நம்பிண்டிருந்தோம். அது என் னமோ தெரியல. பல இடங்கள்ல ராட்சச புத்திக்காராதான் கோவில் தர்மகர்த்தாவாவே வரா. அப்புறம் மழை எங்க இருந்து பெய்யும்..."

-பட்டரின் புலம்பலுக்கு நடுவில் ஷாவநாஸ், கிருஷ்ணசுவாமியை ஒரு பார்வை பார்த்தார்.

"ஷாநவாஸ்... இது சீக்ரெட்டா பண்ண வேண்டிய என்கொயரி. நாம இங்கேயே டயத்தை வேஸ்ட் பண்ணி

கிட்டிருந்தா எப்படி? முதல்ல இந்த மரகத நடராஜரை எப்படி பாதுகாக்கறதுங்கறதை பத்திப் பேசுவோமே..."

-கிருஷ்ணசுவாமி ஷாநவாஸை பிரச்னையின் மையத்திற்கு இழுக்க... "அதான் சொல்லிட்டோமே... இது இந்த ஊரை விட்டுப் போகக் கூடாது. போகவும் விட மாட்டோம். இது இந்த ஊரோட பொக்கிஷம்..."

-தீட்சதரிடம் திரும்பவும் பழைய பல்லவி.

"ஓ.கே... முதல்ல அந்த இடிஞ்ச கோவிலுக்குப் போய் பார்த்துடுவோமே..."

"பேஷா... நீங்கதான் இவனண்ட என்கொயரில போய்ட்டேள்..."

"இன்ஸ்பெக்டர்... இவங்கள ஜாக்ரதையா பார்த்துக் குங்க எந்த வினாடியும் இவங்களுக்கு எது வேணுமானா லும் நடக்கலாம். அதேபோல இந்த நடராஜர் விக்கிரகத் துக்கு பாதுகாப்பும் ரொம்ப அவசியம்..."

"கவலையே படாதேள்... இப்பவே இந்த கோவில் வாட்ச்மேன்கிட்ட சொன்னா ஒரு நூறு பேரோட வந்து தர்ணா பண்ற மாதிரி இந்த விக்கிரகம் முன்னால உக்காந்துடுவான்..."

-பட்டர் எடுத்துக் கொடுத்தார்.

"இது எப்ப பைவ் எக்ஸ் பார்ட்டிகளோட அசைன் மெண்ட்டுங்கறது தெரிஞ்சு போச்சோ அப்பவே இதுக்கு அசாத்ய பாதுகாப்பும் அவசியம்கறதுதான் உண்மை. முதல்ல உங்க வாட்ச்மேன் கிட்ட சொல்லி நூறு பேரோட வாங்க. அப்புறமா நாங்க கிளம்பறோம்..."

-ஷாநவாஸ் அதிகம் பயப்படுகிறார் என்பது அவர் சொன்னதில் தெரிந்து போயிற்று.

பட்டரும் தள்ளி நின்று கவனித்துக் கொண்டிருந்த வேணுவைப் பார்த்தார். தீட்சதரும் அவனை உசுப்பி விட்டார்.

"வேணு... ஓடு போய் நம்ம பசங்களை எல்லாம் கூட்டிண்டு வா... இல்லன்னா இங்க பாதுகாப்பு இல்லேன்னு நடராஜ விக்கிரகத்தை மியூசியத்துக்கு எடுத்துண்டு போயிருவான்னு சொல்லு..."

-வேணு திரும்பி ஓடினான். பட்டரும் தீட்சதரும் ஷாநவாஸைப் பார்த்தனர். "அப்ப நாம அந்த இடிஞ்ச கோவிலுக்குப் போவோமா?"

"இருங்க... அந்த வாட்ச்மேன் ஆட்களோட வரட்டும்..."

"சந்தேகப்பட வேண்டாம். வந்துடுவான் அவன்."

"சந்தேகப்படணும் மிஸ்டர் தீட்சதர். அதான் என் தொழில் தர்மம். உங்களுக்கு சீரியஸ்னஸ் புரியலை. ஓலை, சுவடி, அருள்னு மட்டுமே நம்பிகிட்டு பேசறீங்க. உங்களுக்கு பைவ் எக்ஸ் பார்ட்டீஸ் பத்தி தெரியாது..."

ஷாநவாசிடம் டென்ஷன் ஏறிக் கொண்டே போனது. ராஜ்நாராயண் அவரை மிக ரசித்தான். அந்த ஊரில் அவனையும் பாராட்டி கை கொடுத்தவர் அல்லவா?

அவரோடு போய் நெருங்கி நின்றான்.

"சீரியஸ்னஸ் தெரிஞ்ச செகண்ட் உங்க ட்யூட்டியில ஒரு டென்ஷன் ஏறிட்டதைப் பாக்கறேன். ஐ அப்ரிஷியேட் யூ சார்" என்றான்.

"தேங்க்யூ ராஜ்நாராயண். நீங்களும் ரொம்ப கவனமா இருங்க. உங்க உயிருக்கும் ஆபத்து இருக்கு..."

"என் உயிருக்கா?"

"ஆமாம்... பீ கேர்ஃபுல். நீங்க இனி தனியா எங்கேயும் போகக் கூடாது. நான் போலீஸ் இன்ஸ்பெக்டர்க்கு ஸ்பெஷலா ஒரு ஃபுட்நோட்டு போட்டு கொடுக்கப் போறேன்."

"ரொம்ப ஆச்சர்யமாயிருக்கு. அந்த பைவ் எக்ஸ் பார்ட்டிகள் என்னை எதுக்கு குறி வைக்கணும்?"

"உங்களாலதானே இந்த விக்கிரகம் வெளி உலகத்துக்குத் தெரிய வந்தது."

"அஃப்கோர்ஸ்."

"அதனாலதான் சொல்றேன்."

"ரொம்ப தற்செயலா நான் கண்டுபிடிச்சது எப்படி இப்படி பிரச்னைக்குரியதா மாறும்..."

"தற்செயல்னு நீங்க சொல்றதை இந்த ஊர் நம்பலாம். நாங்களும் நம்பலாம். ஆனா அவங்க நம்பணுமே?"

"நீங்க ரொம்ப டூ மச்சா யோசிக்கறேள்னு நினைக்கறேன்."

"நோ... நெவர்... என் பேச்சை நீங்களும் சீரியஸா எடுத்துக்கணும்."

"எதுக்கு இப்படி பயமுறுத்தறீங்க..."

"ப்ளிஸ் புரிஞ்சுக்குங்க..."

-இருவரும் மாறி மாறிப் பேசிக் கொள்வதை தீட்சதரும் கேட்டார். அப்படியே அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். "ஈஸ்வரா..." என்றார்.

நடுவில் தாவணி முந்தியை உழற்றியபடியே சந்திரிகா அங்கு வந்தாள். பட்டரின் இளைய மகள். பட்டரைத் தேடிக் கொண்டு வந்திருந்தாள்.

"என்ன சந்திரிகா...?"

"அப்பா... உங்களையும், அத்தானையும் அம்மா சாப்பிட வரச் சொன்னா..."

"இதச் சொல்லத்தான் வந்தியா?"

"ஆமாம். எல்லாம் சூடா இருக்காம். செத்த வந்து சாப்டுட்டு போய் எந்த வேலையா இருந்தாலும் பாப்பேளாம்..."

"போடி பைத்யம். இங்க ஆளுக்கு ஆள் பதற்றத்துல இருக்கோம். சாப்பாடுதான் பெருசாக்கும். நான் அப்புறமா வரேன்னு சொல்லு போ..."

-பட்டரின் சீற்றம் சந்திரிகாவுக்கே புதிதாக, ஆச்சரிய மாக இருந்தது.

"அப்படி என்னப்பா இங்க பிரச்னை?"

"மண்ணாங்கட்டி... போங்கறேனோல்லியோ?" கத்தி னார்.

வாட்ச்மேன் வேணுவும் ஒரு கூட்டத்தோடு வந்தபடி இருந்தான். ஒரு இருபது பேர் இருந்தால் அதிகம். நெருங்கியவன்-

"சாமி... இப்போதைக்கு இவ்வளவுபேர்தான் இருக் கோம். எப்படியும் விஷயம் கேள்விப்பட்டு நம்ம ஊர்ப் பசங்க கோவிலுக்கு வந்துடுவாங்க..." என்றான். பட்ட ரும், தீட்சதரும், ஷாநவாஸையும் கிருஷ்ண சுவாமி யையும் பார்த்தனர்.

"ஓ.கே... நீங்கல்லாம் அப்படியே கோவிலுக்குப் போங்கோ. இந்த ஊரைச் சேராத யார் வந்தாலும் அவங்க கிட்ட எச்சரிக்கையா இருங்க.. நாங்க அந்த இடிஞ்ச கோவிலுக்குப் போய்ட்டு வந்துட்றோம்" -ஷாநவாஸ் வேணுவுக்கு கட்டளையிட்டு விட்டு புறப்படக் காலெ டுத்தார்.

அவரோடு பட்டர், தீட்சதர், ராஜநாராயண், கிருஷ்ண சுவாமி மற்றும் சிலர் ஒட்டிக் கொண்டு நடந்தார்கள்.

எப்பொழுதோ தார் ரோடு போட்டு பெயர்ந்து போயி ருந்த தெருக்கள், அதில் அவர்களின் ஊர்வல நடை!

வீட்டு வாசலில் இருந்து ஊர்ப் பெண்கள் பலரும் கூட ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

தெருப் பிச்சைக்காரன் ஒருவன் கூடப் பார்த்தான். அழுக்கு வேட்டியும் பலநாள் தாடியும் மீசையுமாக ஒதுங்கி நின்று பார்த்தான்.

அவர்கள் தெருவை விட்டு மறையும் வரை பார்த்தவன், அப்படியே ஒதுங்கிச் சென்று ஒரு காலித் திண்ணையில் அமர்ந்தான்.

தன்னை யாரும் பார்க்கிறார்களா என்று நாலாபுறமும் பார்வையை விட்டவன், தனது தோளில் தொங்கிய அழுக்குத் துணி மூட்டைக்குள் கையை விட்டான். கையை வெளியே எடுக்கவும் அதில் ஒரு செல்ஃபோன்!

அதைத் தட்டிபேசத் தொடங்கினான்.

"அந்த ஷாநவாஸ் வந்து எல்லாத்தையும் கெடுத்துட் டான். சாமி சிலைக்கு இப்ப ஊரே காவலா நிக்குது. எல்லாரும் இப்ப இடிஞ்ச கோவிலுக்கு போய்கிட்டு இருக்காங்க.

அந்த அமெரிக்காக்கார பையனும் கூடவே போய்கிட் டிருக்கான்! யாருக்கோ தகவல் கொடுத்துவிட்டு அவனும் இடிந்த கோவிலில் நடப்பதைக் கவனிப்பதற்காக நடந்தான்.

25

ராமன் அவதரித்த ரகுவம்சப் பரம்பரையில் வந்தவன் பகீரதன். இவனால் இந்த மண்ணுக்கு வந்த ஒரு நதியாக கங்கையைக் கூறுவார்கள்.

சிவனாரின் சடையில் ஒளிந்து கொண்ட கங்கையை பகீரதனே பெரு முயற்சி செய்து மண்ணில் தவழ விட்டான் என்பார்கள். அப்படி மண்ணில் கங்கை ஓடினால்தான் தன் முன்னோர் களின் அஸ்தியை அதில் கரைத்து தன் முன்

னோர்களுக்கு முக்தி தர முடியும் என்பது பகீரதன் எண்ணம்.

அதாவது, கங்கைய்ய உயிர்களுக்கு முக்தி தருபவள். அவளது ஒரு துளிகூட நமது பாவம் போக்கி விடும் வல்லமை உடையது. அதனாலேயே பாவம் போக்கும் புனித நீராக இன்றும் அது ஓடியபடி இருக்கிறது.

அது எப்படி ஒரு ஓடும் நதி பாவம் தீர்க்கும்? எல்லாம் அபத்தமான புராணக் கற்பனை என்னும் நமது லாஜிக்குகளைப் புறத்தில் வைத்து விட்டு பரிபாஷையைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறாற் போல இந்த விஷயத்தைப் பார்க்க வேண்டும்.

இந்தப் புராணக் கதைப்படி கங்கை என்பவள் சிவனின் சிரத்தில் இருந்து வருபவள். சிவம் என்பது அழிக்கும் சக்தி. அதுவே இமயமாய் இருந்து கங்கையைப் பெருகச் செய்து பூமியின் பசிப் பிணியை அழிக்கிறது. பசி, தாகம் காரணமாகவே மனிதன் பாவங்கள் புரிகிறான். பெருகி வரும் கங்கையில் எப்போதும் நீரும், அந்த நீராலேயே வாழ்வு என்கிற புத்தித் தெளிவும் உள்ள மனிதர்கள் அந்த நீரைக் கொண்டாடி மகிழ்வர். ஆக, கங்கை ஓடும் வரை அழிக்கப்படவேண்டியவை அழிக்கப் பட்டு இந்த உலகில் நல்வினைகள் நீடித்தபடி இருக்கும் என்பதே செய்தி. இந்தச் செய்தியைச் சொல்லும் விதமாக உள்ள மூர்த்தியே கங்கா விஸர்ஜன மூர்த்தியாக இருக்கும் சிவம் ஆவார்.'

இடிந்த கோவில் கோபுரக் கழுகு ஒரு கூட்டமாக வரும் நபர்களை எல்லாம் பார்த்து விடைத்தபடி எழுந்தது. தீட்சதரும் கோவில் முகப்பில் நின்று அந்தக் கழுகை ஷாநவாசுக்கும் கிருஷ்ணசுவாமிக்கும் அறிமுகப் படுத்தத் தொடங்கினார்.

"அதோ அங்க உக்காந்துண்டுருக்கிற கழுகுதான் இந்த இடிஞ்ச கோவிலுக்குக் காவல். மழை, காத்து, வெயில்னு

எதுவும் அதுக்கு ஒரு பொருட்டு கிடையாது. அந்தக் கோபுரத்து மேலேயே தான் இருக்கும். அதோட வயசு என் வயசை விட அதிகம்!"

-தீட்சதர் அப்படிச் சொன்னதுதான் தாமதம். ஷாநவாஸ் ஒரு மெல்லிய முறுவல் பூத்தார்.

"நம்ப முடியலையா மிஸ்டர் ஷாநவாஸ்...?"

"ஆமாம். பறவை ஜாதில வான் கோழியைத் தவிர மற்ற பறவைகளுக்கு அதிக அளவு ஆயுள் கிடையாது. உங்களுக்கே ஐம்பது வயசு இருக்கும் போலத் தெரியுது. இந்தக் கழுகுக்கு அதுக்கும் மேலன்னா எப்படி நம் பறது?"

"இல்ல... தீட்சதர் சொல்றது உண்மை. எனக்கு நினைவு தெரிஞ்ச நாளா இருக்கு இந்தக் கழுகு. இது ரொம்ப தெய்வீகமானது. இந்தக் கோவில்ல சமாதியா யிட்ட சித்தரோட ஆத்மா இந்தக் கழுகின் உயிரோட கலந்துடுத்துன்னும் சொல்வா..."

-பட்டர் வக்காலதது வாங்கினார்.

"சரி... உங்க நம்பிக்கைகளை நான் விமர்சிக்க விரும்பல. உங்க விருப்பப்படியே நினைச்சுக்குங்க. நாம கோவிலுக்குள்ள போகலாம்."

-ஷாநவாஸ் பதிலோடு நடந்தார். கான்பூர் செருப் பணிந்த கால்கள் பதறிப் போனார் பட்டர்.

"அண்ணா... செத்த நில்லுங்கோ. செருப்புக் காலோட இந்தக் கோவிலுக்குள்ள நுழையறது அபச்சாரம்..."

"சுத்தப் பேத்தல், முதல்ல இப்ப இது கோயிலே இல்ல. அடுத்து உள்ள பாம்பும் தேளும் நடமாடிக்கிட்டு இருக்கு. அங்க பார் ஒரே நெருஞ்சி முள்." -ராஜ்நாராயண் வக்காலத்து வாங்கினான் உடனே. ஆனால், பட்டரின் கருத்துக்கு மரியாதை தருவது போல செருப்பைக் கழற்றினார் ஷாநவாஸ்.

உங்களோட இந்தக் கருத்தை நான் மதிக்கிறேன். மதிப்புக்குரிய இடங்களை மதிச்சு நடக்கறதுதான் நல்லது. அதுதான் பண்பாடும்கூட...” -அந்தப் பதில் பட்டர், தீட்சதர் இருவரையும் குளிர்வித்தது. கன்னத்தில் போட்டுக் கொண்டு உள்ளே காலை வைத்தனர்.

கழுகு பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தது.

கிருஷ்ணசுவாமி மிக உன்னிப்பாகப் பார்த்தார். அங்கங்கே பெயர்ந்து கிடந்த தூண்கள். முளை விட்டிருந்த செடி கொடிகள்... புதர்கள்...

கல்வெட்டுக் குறிப்பை நன்கு படிக்கக் கற்றிருந்த கிருஷ்ணசுவாமியை கோவிலின் பக்கவாட்டுச் சுவர் கவர்ந்து இழுத்தது. ஷாநவாசும் கவனித்தார்.

“என்ன சார்... கல்வெட்டுச் செய்தியா... என்ன சொல்லுது?

“இருங்க படிச்சுட்டுச் சொல்றேன்...”

-சொன்னபடி அவர் கண்கள் இடுங்கின. உதட்டில் முணுமுணுப்பு.

ராஜ்நாராயண் அவர்கள் அங்கேயே நின்று படிக்கட்டும் என்கிற மாதிரி நழுவி முதல்நாள் போக ஆசைப்பட்ட அந்தப் பாம்புப் புற்றருகே போயிருந்தான். ஆளுயரத்துக்கும் மேல் இருந்தது. ஒரு இடத்தில் பாம்பு சட்டை ஒன்று உரிந்து கிடந்தது. எச்சரிக்கையாக அதைத் தாண்டி நடந்தான். அந்த ‘ஓம்’ என்கிற சத்தம் எங்கிருந்து வந்திருக்கும் என்கிற தேடல்... கோவிலின் பின்புறம்... அதிலும் கருவறைக்கு நேர் பின்னால் ஒரு சிறிய கல் மண்டபம். மண்டபத்தின் நடுவில் ஒரு சிவலிங்கம். சிவ லிங்கத்தின் மேல் காய்ந்த மலர்கள். உற்றுப் பார்த்தான். திடீரென்று யாரோ வரும் அரவம். நிமிர்ந்தான். தீட்சதர்!

“நீங்களா?”

“நானேதான்... எல்லாரும் அங்க இருக்கும்போது நீ இங்க என்ன பண்றே?”

“பாத்தா தெரியலியா? சுத்திப் பாத்துண்டு இருக்கேன்...”

“பாரு... நன்னாப் பாரு... பார்த்தாதானே நீ யாருங்கறது தெரியும்?”

-தீட்சதரின் பதிலில் ஏதோ சூட்சமமான உட்பொருள். அந்தப் பதிலோடு அவர் ஒதுங்கிக் கொண்டார். ராஜ் நாராயண் மீண்டும் அந்தச் சிவலிங்கத்தைப் பார்த்தான்.

வெயிலிலும் மழையிலும் காய்ந்து விட்டிருந்த அது அவனை என்னவோ செய்தது.

சரேலென்று அதன்மேல் ஒரு பெண் குடம் நீரைக் கொட்டுகிறாள். அப்படியே செம்பருத்தி, கொழுக்கட்டை மந்தாரை, முல்லை, அல்லி என்று பூக்களை வாரி அந்த லிங்கத்தின் சிரசின் மேல் வைக்கிறாள். கை வளை, கால் தண்டை எல்லாம் குலுங்க விழுந்து வணங்குகிறாள். அப்படி அவள் வணங்கும்போது முன் மார்பிரண்டும் விம்மி வழிகிறது. ஐயோ எத்தனை எழிலான காட்சி...? நிமிர்ந்து எழும் அவள் தோள்மேல் கை வைக்கிறான் ஒரு வாலிபன். அவனது ஒரு கரத்தில் சிற்ப உளி, மறு கரமோ அவள் தோள்மேல்...

“என்ன இது...? கையை எடுங்கள்.”

“எடுத்துவிட்டு இழுத்து அணைத்துக் கொள்ளச் சொல்கிறாயா பிரதாபி...”

“போதும்... இன்று ஆதிரை நாள்... ஈசனின் திரு நட்சத்திர தினம். நான் உபவாசம் இருந்து வழிபாடு செய்ய வந்திருக்கிறேன். உங்கள் சல்லாப உணர்வுக் கெல்லாம் இடமில்லை...”

“ஏன்... என் வருங்காலத் திருவாட்டி உன்னோடு நான் சல்லாபிப்பதில் அந்த ஈசனுக்கு என்ன குறைகிறதாம்?”

"போதும்... மனத் தூய்மை, உடற் தூய்மை இரண்டுமே பக்தியில் பிரதானம். அதைத் தெரிந்து கொண்டு முதலில் வழி விடுங்கள்."

"அப்படியானால் நான் உன்னைத் தொடுவதால் நீ தூய்மையற்றுப் போகிறாயா?"

"ஆமாம்..."

"ஒரு கற்சிலைக்காக என் காதலையும் அதன் அன்பையுமா அழுக்கு என்கிறாய்?"

"ஆரம்பித்து விடாதீர்கள் உங்கள் நாத்திகவாதத்தை. உங்கள் நாத்திகவாதத்துக்கும் அதன் பாவதோஷங்களுக்கும் சேர்த்தே நான் ஈசனிடம் வழிபாடு செய்து வருகிறேன். வழி விடுங்கள்."

"நில் பிரதாபி... எது நாத்திகவாதம்? என் கேள்விகளுக்குப் பதில் சொல். இந்த உருவங்கள் நான் கல்லுக்குள் இருந்து செதுக்கி உருவாக்கியவை. இதைப் படைத்தவன் நான். ஆனால் இது என்னைப் படைத்தது என்பதைப் போல் நீ பேசுவது அபத்தம். உண்மையில் இறைவன் இங்கு நானே!"

"வாயைக் கழுவுங்கள். ஆதியும் அந்தமுமில்லாத அந்த ஈசனை சிறுமைப் படுத்தி பாவியாகாதீர்கள். கல்லைப் படைத்து பின் உங்களையும் படைத்து உங்களுக்குள் படைப்பாற்றலையும் படைத்து, பின் அதன் மூலம் தன்னையும் படைத்துக் கொள்ளும் பேராற்றல் கொண்டவன் அந்த ஈசன்..."

"பைத்தியமே... ஹும்! உன்னைப் போய் காதலித்தேன் பார்... என்னைச் சொல்ல வேண்டும்..."

"ஆம். நானும் அதற்காக இப்போது வருந்துகிறேன். எனது பக்தியைப்போற்றம் ஒரு பண்பாளரை அந்த ஈசன் எனக்குக் காட்டாதது ஏன் என்று தெரியவில்லை..."

"ஈசன்... ஈசன்... ஈசன்... எங்கே இருக்கிறான் அவன்? முதலில் அவனை எனக்குக் காட்டு, பிறகு பேசு."

"கூப்பிட்டால் ஓடி வர அவன் என்ன அரண்மனைச் சேவகனா... கற்பகோடி காலம் தவமிருந்தாலும் காண இயலாதவனல்லவா அவன்?"

"இப்படி கேட்டால் அப்படி அப்படிக் கேட்டால் இப்டியுமாக பதில் கூறுவதே உனக்குப் பிழைப்பாகி விட்டது. நான் இப்போது சொல்கிறேன். கேட்டுக் கொள். உன்னையும் என்னையும் பிரிப்பதே இந்த கற்பனையான ஈசன் தான். இதை நீ கற்பனை என்று எப்போது உணர்கிறாயோ அன்றுதான் நம் காதலுக்கும் உயிர் வரும். அல்லாத பட்சத்தில் நம் காதல் இறந்து போகட்டும்."

"ஒரு வகையில் இந்த முடிவை நானும் ஏற்றுக் கொள்கிறேன். நான் நம்பும் ஈசன் நிச்சயம் நம் காதலுக்கு உயிர் தருவான். இதெல்லாம் கற்பனையல்ல என்று உங்கள் முன் தோன்றி உணர்த்துவான். அப்படி உணர்த்தினாலே அவன் பரம்பொருள். அல்லாத பட்சத்தில் என் பக்தி, வழிபாடு, நம்பிக்கை அவ்வளவும் பொய் ஆகட்டும். வருகிறேன்."

-பிரதாபி ஆவேசமாகப் பேசிவிட்டு விலகிச் செல்கிறாள்.

அவனும் பார்த்தபடியே நிற்கிறான். அவன் கையில் உள்ள சிற்ப உளிகூட நழுவிக் கீழே விழுகிறது. கோபத்துடன் அதை எடுப்பவன் தானே செதுக்கிய, பிரதாபி வழிபட்ட அந்த லிங்கத்தின் மேல் வீசி எறிகிறான். அது லிங்கத்தின் தலைப் பாகத்தில் பட்டு ஒரு கற்சில்லு தெரித்து விழுகிறது. அதுவும் அவன் கண்ணருகே பட்டு அவனை அலற வைக்கிறது."

"ஆ...!" அவன் போட்ட சத்தம் கேட்டு ஓடி வந்தார்கள் சிலர். அவனும் கண்ணைத் திறந்து பார்த்தான்.

எதிரில் ஷாநவாஸ், கிருஷ்ணசுவாமி, பட்டர், தீட்சதர்.

"என்னாச்சு மிஸ்டர் ராஜ்நாராயண்?"

-ஷாநவாசின் கேள்விக்கு ராஜ்நாராயணால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை.

"இவர்களெல்லாம் யார்... எங்கே போனாள் பிரதாபி...?" அவனுள் குழப்பமான கேள்விகள்...

"ராஜ்நாராயண்... என்ன ஆச்சு உங்களுக்கு? யாரையோ புது மனுஷங்களைப் பாக்கற மாதிரிப் பாக்கி நீங்களே..."

"ஆமா... சாரி... வெரிசாரி... இங்க வந்தாலே எனக்குள்ள எல்லாமே மாறிப் போகுது. அதான்."

"அப்ப அடிக்கடி வந்திருக்கீங்களா?"

"இல்ல... இது இரண்டாவது தடவை. முதல் தடவை வந்தப்போ நான் ஒரு சிற்பியாகவும் தூணைச் செதுக்கற மாதிரியும் ஒரு கற்பனை. இந்தத் தடவை என் காதலி பிரதாபியோட வாக்குவாதம்..."

"பிரதாபியா...?" -ஷாநவாஸ் அதிர்ந்தார்.

"ஆமாம்... நான் என்கிட்ட இருக்கற உளியால இந்த லிங்கத்து மேல அடிக்கறேன். அதோட தலைல பட்டு ஒரு சில்லு தெரித்து..."

-சொன்னபடி லிங்கம் அருகில் சென்றான் ராஜ் நாராயண். அந்த லிங்கத்தின்மேல் குழி விழுந்தாற் போல ஒரு ஒச்சம்!

பகீரென்றது...

"விடுங்கோ... அவன் பெரிய சாப்ட்வேர் இன்ஜினியர். அவனா எது சொன்னாலும் நாம கேட்டுக்கணும். ஆனா நாம எது சொன்னாலும் நம்பாம பேசுவான். மிஸ்டர் ஷாநவாஸ் நீங்க இந்த இடிஞ்ச கோவிலைப் பாக்கணும்னு சொன்னீங்க. பாத்துட்டீங்க. என்ன தெரிஞ்சுக் கிட்டீங்க...?"

-ஷாநவாசிடம் தீட்சதர் நேராக விஷயத்துக்கு வந்தார். ஆனால், கிருஷ்ணசுவாமி பேசினார்.

"தெரிஞ்சுக்க என்ன இருக்கு? இந்த மாதிரி பாழடைஞ்ச கோவில்கள் மட்டுமே தமிழ்நாட்டுல நூத்துக் கணக்குல இருக்கு. அதுல இதுவும் ஒண்ணு. பலநூறு வருஷங்களுக்கு முன்னால இந்தக் கோவிலை வேதமாத வராயர்ங்கற ஜமீன்தார் பராமரிச்சு வந்திருக்கார்னு தெரியுது. அதுக்கு முந்தி ராஜேந்திர சோழன் காலத்துல இது கட்டப்பட்டு குடமுழுக்கும் நடந்திருக்கு. நாயன் மார்கள் சிலர்கூட இந்தக் கோவிலுக்கு வந்து வழிபட்டிருக்காங்க. மாலிக்காபூர் படையெடுப்பின்போது இது இடிக்கப்பட்டு சிதைக்கப்பட்டிருக்கணும்...

நாராயண அழகன், பிரம்மானந்த பட்டர், பிரதாபிங்கற பேர்கள்லாம் கல்வெட்டுக் குறிப்புல இருக்கு. அதான் இப்ப ராஜ்நாராயண் பிரதாபிங்கற பேரைச் சொல்லவும் ஒரு ஆச்சரியம். அவர் இந்தக் கல்வெட்டைப் படிச்சுட்டு அந்த பாதிப்புல பேசினாரா... இல்லை வேற காரணமாங்கறதுதான் தெரியல..."

கிருஷ்ணசுவாமி பதிலைத் தொடர்ந்து ராஜ்நாராயண் தலையைச் சிலிர்ப்பிக் கொண்டான்.

"இல்லே.. நான் எதையும் படிக்கலை. என்னால படிக்கவும் முடியாது. இந்தக் கல்வெட்டுத் தமிழ் எனக்குப் புரியலை..."

"அப்ப பிரதாபிங்கற பேரை கச்சிதமா எப்படிச் சொன்னீங்க...?"

"அதுசரி யார் அந்தப் பிரதாபி?"

"வேதமாதவராயர் காலத்துல இந்த ஊர்ல தேவதாசியா இருந்தவ- அப்படின்னு குறிப்பு சொல்லுது..."

"தேவதாசியா... இல்ல... பிரதாபி என் காதலி. அவ பெரிய சிவபக்தை."

-ராஜ்நாராயண் தன்னை மறந்து மீண்டும் இடையிட்டான்.

மீண்டும் அவர்களிடம் ஆச்சரிய அதிர்வு. ஆனால், தீட்சதரோ கண்களைப் பரவசத்துடன் மூடியவராக 'ஈச்வரா உன் திருவிளையாடலை என்னன்னு சொல்வேன்' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

கோவிலுக்கு வெளியே அந்தப் பிச்சைக்கார ஒற்றனும் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

யாரும் சந்தேகப்பட்டுவிடாதபடி சுற்றிச் சுற்றியும் பார்த்துக் கொண்டான். எல்லாரும் ஒன்றாக முன்புறம் வரவும், அவர்கள் பார்வையில் பட்டுவிடாமல் இருக்க எதிர்ப்புறம் உள்ள கோவிலின் பாழடைந்த மண்டபம் ஒன்றில் புகுந்து நின்றான்.

உள்ளே கோரைப் புற்களும், பிரண்டையும் மண்டிக் கிடந்தன. காதைக் கூர்மையாக்கிக் கொண்டு ஒளிந்தவன் எதிரில் அந்த மண்டப அறையில் ஒரு பிளவுபட்ட துவாரமும், துவாரத்துக்கு வெளியே கோவிலின் தெற்குப் பிரகாரமும் தெரிந்தன

ஆளரவமற்ற அந்தப் பிரகாரத்தில் ஒரு கோவணம் கட்டிய சித்தர் ஒருவர் நடந்து கொண்டிருந்தார். அவனுக்குள் திகைப்பு. கண்களைக் கசக்கிக் கொண்டு துவாரத்தின் அருகே முகத்தைக் கொண்டு சென்று பார்த்தபோது கோபுரக் கழுகு அந்த பிரகார வெளியில் தத்தித் தத்தி நடந்தபடி எதையோ கொத்தி விழுங்கிக் கொண்டிருந்தது.

எங்கே அந்தக் கோவணாண்டிச் சித்தர்?

26

'புராணங்களில் நாம் காணும் இறை அவதாரங்கள் தனிச் சிறப்பை உடையவை.

ஒன்றாகிய இறைவன் ஒன்றாகவே இருந்து கொண்டு செயல்படாமல் ஏன் பல அவதாரங்கள் எடுக்க வேண்டும் என்பது இதில் பிரதான கேள்வி.

இறையே கற்பனை- இதில் அதன் அவதாரங்கள் கட்டுக்கதை என்னும் மிகையான கற்பனை. இதனால் மனிதர்களுக்குப் பொழுது போகலாம். ஆனால் இறைமை சிறுமைப்படுத்தப்படுகிறது என்று இந்த அவதாரச் சிறப்புகளை உணராமல் சிலர் பேசக்கூடும்.

உண்மையில் அவதாரம் என்பது எதுவும் முடிந்த முடிவு அல்ல என்பதை உணர்த்துவதோடு முயற்சித் திருவினையாக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

காக்கும் கடவுளான திருமாலின் ஒவ்வொரு அவதாரமும் இந்த நுட்பத்தையே உலகுக்கு உணர்த்துகிறது.

அரக்கன் ஹிரண்யகசிபு புத்திசாலித்தனங்களின் மொத்த உருவாக, மனித சக்தியின் உச்சமாக இறவாத வரத்தைக் கேட்டுப் பெற்ற ஒருவன்.

பகலிலோ இரவிலோ, ஆணாலோ பெண்ணாலோ மிருகங்களாலோ, விஷத்தாலோ, காற்றாலோ, நீராலோ, நெருப்பாலோ, ஆயுதங்களாலோ என்று இது உயிரைக் குடித்து விடும் என்று- இந்த உலகம் சொல்லும் அவ்வளவாலும் தனக்கு மரணம் நேரக்கூடாது என்று தன் உயிருக்கு ஒரு பூட்டைப் போட்டுக் கொண்டான்.

இருந்தும் நரசிம்மாவதாரம் அவன் கதையை முடித்துவிட்டது. ஹிரண்யகசிபுவின் புத்திசாலிப் பூட்டின் சாவியாக நரசிம்மாவதாரம் மாறியது. இரவும் பகலுமற்ற சந்தியில், ஆணும் பெண்ணுமற்ற விலங்குருவில், முழு விலங்குமற்ற புதிய வடிவில், கை நகங்களையே ஆயுதமாகக்கொண்டு அவன் வரத்துக்கும் பங்கம் வராமல், அதே நேரம் அநீதியும் வாழ்ந்து விடாதபடி அவனை வதம் செய்து முடித்தது.

இதற்கு முன்னோடியாகிய சிவமும் அர்த்தநாரி யாக ஆண் பெண் கலந்த சொரூபமாக விளங்கிய தற்குப் பின்பும் ஒரு நுட்பம் உள்ளது.

சிவமே பெரிது, அதுவே போதுமானது என்று அன்னை உமையை விடுத்து ஆண் சக்தியாகிய சிவத்தை மட்டுமே துதித்து வந்தார் பிருங்கி முனிவர். அந்தத் தவறினைத் திருத்த உமை எண்ணம் கொண்டாள். அவளது அம்சமான உதிரம், மாமிசம் இவைகளை அவர் உடலில் வற்றச்செய்து அவரை விட்டு விலகினாள். அதாவது, பிருங்கி யிடம் இருந்து சக்தி விலகியது.

இருந்தும் சிவம் தடுத்தாட்கொண்டு அவருக்கு கருணை புரிந்தது. இதனால் சிவமும் சக்தியை இழந்து சோர்வுறும் நிலையை அடையப் பார்த்தது.

ஐயனின் தளர்ச்சியைக் காணத் தாங்காத உமை அவரிடம் வாமபாகத்தைக் கேட்டு அவரது உடலில் சரிபாதியாகக் கலந்தாள். இதைக் கண்ணுற்ற பிருங்கியும் சிவம் வேறு சக்தி வேறு என்று தான் கருதியதற்கான தவறை உணர்ந்தார். சிவமே இதை அன்னை உமையைக் கொண்டு உணர்த்தியது. ஆணாயினும் பெண்ணாயினும் இருவரும் இயைந் திருந்தாலே இயக்கம். இதில் உயர்ந்தது, தாழ்ந்தது என்று ஏதுமில்லை என்பதே அர்த்தநாரீஸ்வர சிவம் உணர்த்தும் செய்தியாகும்."

அந்தப் பிச்சைக்காரன் விக்கித்துப் போனான். எங்கே போனார் அவர் என்று தெரியாமல் குழம்பவும் செய்தான்.

அதற்குள் கழுகு அமர்ந்திருந்த அந்த இடத்துக்கு ஷாநவாசும் கிருஷ்ணசாமியும் வந்தபடி இருக்க, மற்றவர்களும் பின்தொடர்ந்து வந்து நின்றனர். அவர்கள் வருகையைப் பார்த்து கழுகும் படபடத்து மேலேறி தனது வழக்கமான இருப்பிடமான கோபுரக் கலசப் பகுதியில் போய் அமர்ந்து கொண்டது.

தீட்சதா அதைப் பார்த்து 'ஈஸ்வரா' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார். ராஜ்நாராயண் திரும்பவும் சிரித்தான்.

"என்ன சிரிக்கிறீங்க ராஜ்... கழுகுக்காக தீட்சதர் கன்னத் துல போட்டுக்கிட்டது உங்களுக்கு வேடிக்கையா இருக்கா?" -ஷாநவாஸ் கவனித்துக் கேட்டார்.

"ஆமாம் சார்... சில விஷயங்கள் சிரிப்பாத்தான் இருக்கு. கடவுள் முதல்ல மனுஷ உருவத்தில்தான் இருப் பார்ங்கிறதே தப்புங்கறது என் எண்ணம். சரி போகட் டும்னு விட்டா அவருக்கு வாகனமா கருடன், காளை, மயில், எலி, காக்கா, சிங்கம்னு மற்ற உயிரினங்களையும் சேத்துப் போட்டு இந்த உயிர்கள்லாம் சுமை தூக்கிங்கிற மாதிரி சித்திரிக்கறது மனுஷனோட இல்ல, கடவுளோட கர்வத்தைக் காட்டலை, அடக்குமுறையைக் காட்டலை?"

-அவன் ஒரு மென்மையான மனிதனாக மிகப் பொதுமையாகக் கேட்ட கேள்வி தீட்சதரைக் கீறியது.

"எதையும் கோணலாவே பாக்கறது உனக்கு வழக்கமாப் போச்சு. இந்தப் பிரபஞ்சத்துல எந்த உயிரும் தாழ்ந்தது கிடையாதுன்னு உணர்த்தத்தான் வாகனங்களா அவை களுக்கு இடத்தைக் கொடுத்து அவைகளையும் மதிக்கச் சொல்றது நம்ம மதம்" -என்றார் படுவேகமாக.

"தாழ்ந்தது இல்லேன்னா அது ஏன் கடவுளர்களைச் சுமக்கணும். அந்த மிருக சொரூபங்கள்லயும் கடவுள் இருக்கலாம் இல்லையா?"

-மடக்கினான் ராஜ்.

"ஏன் இல்ல... ஆஞ்சனேய மூர்த்தி யாராம் பிள்யைார் யாராம்...? நரசிம்ம மூர்த்தி யாராம்...?" -பட்டர் பாய்ந்து வந்து வக்காலத்து வாங்கினார். அதை ஷாநவாஸ் ரசித்தார். கிருஷ்ணசாமிக்கு தாங்கள் வந்த நோக்கத்தை விட்டு விலகி வெளியே செல்கிற மாதிரி தோன்றியது.

"மிஸ்டர் ராஜ்நாராயண்... உங்களுக்கு இளவயசு. வாழ்க்கையைச் சுற்றின விஷயங்கள்ல நிறைய கேள்விகள் இருக்கும். ஒரு விஷயம் புரிஞ்சிருக்கணும். உங்க நம்பிக்கை உங்களுக்கு எவ்வளவு பெரிசோ அதே அளவு மத்தவங்களுக்கு அவங்களோட நம்பிக்கை பெரிசு. அதை எந்த நிலையிலயும் தாழ்வா நினைக்கக் கூடாது. ஓ.கே. நாம புறப்படுவோம். இதுக்குமேல இங்க நின்னு டயத்தை வேஸ்ட் பண்ண வேண்டாம்..." என்றார்.

ராஜ்நாராயணுக்கு அது சரி என்று தோன்றியது.

"சாரி சார்..." என்றான்.

"ஓ.கே. விட்டுத் தள்ளுங்க. ஷாநவாஸ், இப்ப இந்த கோவிலையும் பாத்தாச்சு, உங்களுக்கு ஏதாவது கிடைச்சிருக்கா?"

"நிறைய்ய... மிஸ்டர் தீட்சதர் சொல்ற மாதிரி பல அபூர்வ விக்ரகங்கள் இந்த ஊர்ல இன்னும் இருக்கு. இது காலத்தால சிதைஞ்ச கோவில் இல்ல. மாலிக்காபூர் படையெடுப்பால் நேர்ந்த கோரம் இது.

'எனக்குத் தெரிஞ்சு அப்படி ஒரு படை எடுப்பால அழிஞ்ச கோவில்கள் எல்லாம் பின்னால காலத்தால் சீர் செய்யப்பட்டிருக்கு.

'ஆனா, இங்க மட்டும் ஏன் அப்படி நடக்கலேங்கறது தெரியணும்?"

-ஷாநவாசின் பேச்சு ஒளிந்திருக்கும் அந்தப் பிச்சைக் காரன் காதில் விழுந்தபடியே இருந்தது. ஷாநவாசுக்கு தீட்சதரே பதில் சொன்னார்.

"அது வந்து என்னன்னா... இந்த கோவிலை புனருத் தாரணம் பண்ண முயற்சி செஞ்சப்பல்லாம் நடக்கக் கூடாதது நடந்தது. அதாவது... யார் அதுக்கு ஸ்டெப் எடுத்தாலும் அவா செத்துப் போனா.

'அதனால ஒரு பயம் தானா வந்துடுத்து. அது மட்டுமில்ல... இங்க ஒரு துஷ்ட சக்தி இருக்கறதாவும் அது இங்க யார் வந்தாலும் அவாளைப் படுத்தறதாவும் கூட நம்பிக்கை..."

"அப்ப நீங்க தினம் வரீங்களே... உங்களுக்கு எதுவும் ஆகலையா?"

"நல்ல கேள்வி... நான் அதை நம்பாதவன். எங்க ஈஸ்வரன் ரட்சிக்கிறவன். அழிக்கிறவன் கிடையாது..."

"அப்ப செத்துப் போனாங்கன்னு சொன்னீங்களே..."

"அது தற்செயலா இருக்கலாம். விதி முடிஞ்சு அவாப் போய்ச் சேர்ந்திருக்கலாம். ஆனா, ஒண்ணு. இங்க ஒரு சக்தி இருக்கு. சித்தர் ஒருத்தரும் இங்க நடமாடிண் டிருக்கார்.

அவர் அனுக்ரகத்துல இந்தக் கோவில் கூடிய சீக்கிரம் புனருத்தாரணம் ஆகி எல்லாருக்கும் அனுக்ரகம் பண்ணத்தான் போறது. அதுக்கான காலம் வந்தாச்சுன்னு நான் நினைக்கிறேன்."

தீட்சதர் பதிலுக்கு ராஜ்நாராயண் யாரும் பார்க்காதபடி முகத்தைத் திருப்பிக் கொண்டு சிரித்தான்.

ஆனால், அந்தப் பிச்சைக்கார உளவாளி அதைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அவர்கள் பேச்சோடு பேச்சாக கோவிலை விட்டு வெளியேறினர். அவனும் ஒடுங்கி அமர்ந்து அவர்கள் கண்ணில் படாமல் தப்பித்தான்.

அவர்கள் சென்ற பிறகு மெல்ல வெளியில் வந்தான். வெறிச்சோடியிருந்தது கோவில். இருளும் சூழத் தொடங்கிவிட்டது.

எங்கே போனார் அந்த கோவணாண்டி மனிதர்? யார் அவர்? தீட்சதர் தன் பேச்சில் சொன்னது போல அவர்தான் சித்தரா? அவரைத் தேடியபடி அவன் கால்கள் நடந்தன.

கால்களை நெருஞ்சி முட்கள் அவ்வப்போது குத்தின. அவன் அதை லட்சியமே செய்யவில்லை. பார்வையில் ஒரு வித குரூரத்தோடு நடந்தான். நடுவில் செல்போன் அலறியது.

எடுத்து காதில் வைத்தான்.

"அவங்க போய்ட்டாங்க. நான் இடிஞ்ச கோவில்லதான் இருக்கேன். இங்க சுரங்கப் பாதை எல்லாம எதுவும் இருக்கறதா தெரியல..."

"..."

"நல்லது... நாளைக்கு நான் கோவில் நிலை பத்திச் சொல்றேன். அனேகமா போலீஸ் புரடக்ஷன் ஹெவியா யிருக்கும். ஒண்ணும் பண்ண முடியாது. அந்த ராஜ் நாராயண் மேல குறியா இருந்தா போதும். அவனுக்கு நிச்சயமா மத்த விக்ரகங்கள் இருக்கற இடம் தெரியும். அவன் எமகாதகன். பயங்கர நாத்திகனா இங்க எல்லார் முன்னாலயும் நடிச்சுக்கிட்டிருக்கான்..."

-பேசிக்கொண்டே நடந்தவன் அப்படியே தாடையைச் சொறிந்தபடி அண்ணாந்தான். கோவில் சன்னதி கோபுரத்தில் பல பொம்மை முகங்களுக்கு நடுவில் ஒரு உயிருள்ள முகமாய் அந்த சித்தர் முகம்.

பகீரென்றது!

பதற்றத்தில் கையில் இருந்த செல்போன் நழுவி பக்கத்தில் இருந்த புற்றுத் துவாரத்தில் விழுந்தது.

அதைப் பார்த்து ஐய்யோ! என்றபடி திரும்பவும் கோபுரத்தைப் பார்த்தபோது கோபுரத்தில் பொம்மை முகங்கள்தான்!

அவனுக்கு குழம்பியது.

புற்றுத் துவாரத்தில் விழுந்துவிட்ட செல்போனை எடுக்க மனது துடித்தது. அப்படியே கோபுரத்தில் தெரிந்து மறைந்த சித்தர் முகம் கிலியை மூட்டியது.

குழப்பத்துடன் துவாரத்துக்குள் கையை விட முயன்றவன் பயந்து ஒரு முடிவுக்கு வந்தவனாய் காலால் புற்றை உதைக்கப் பார்த்தான்.

'திம்... திம்' என்று இரண்டே உதை... உள்ளேயிருந்து சீறிக் கொண்டு வந்தது ஒரு நாகம்.

ஒரு விநாடி கூடத் தாமதிக்கவில்லை.

ஒரே போடு!

✠ ✠ ✠

விடிந்துவிட்டது!

பட்டர் வீட்டுக் கொல்லையில் கிணற்றடியில் பாரதி. வாயில் பிரஷ்ஷுடன் ராஜ்நாராயணும் வந்து சேர்ந்தான். அவள் காரியத்தில் குறியாக இருந்தாள்.

"என்ன பாரதி... பேசமாட்டியா?" -பேச்சை ஆரம்பித்தான்.

"உங்களோட பேசக் கூடாதாம்..." -பட்டென்று பதில் வந்தது.

"யார்... உங்கப்பாவோட உத்தரவா?" -அவள் தலை ஆடி ஆமோதித்தது.

அவனிடம் குபீர் என்று சிரிப்பு பீறிட்டது.

27

'சப்தம்!

இதனில் அமைந்ததே மொழிகள்.

மொழிகளாகிய சப்தம் இன்றேல் மனித இனமும் சரி, விலங்கினங்களும் சரி ஜீவிக்கவே முடியாது.

பூட்டைத் திறக்கும் சாவி போல மனதைத் திறப்பது சப்தமாகிய மொழியே. சப்தம் என்பது ஒலி வடிவம்! மொழி அதன் வரி வடிவம். இந்த மொழியிலும் மிக உத்தமமானது எண்களே! எண்கள் என்கின்ற ஒன்று இல்லாவிட்டால் உலகில் இயக்கமே இருக்காது. கழிந்து கொண்டிருக்கும் காலநேரம் எது என்று அறிவது முதல், நாம் யாருக்கும் எதையும் கொடுத்து வாங்கத் துணை செய்வது வரை எண்களே.

ஒரு மொழியறிந்த ஒருவருக்கு இன்னொரு மொழி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இப்படி வேறுபட்ட மொழிகள் அறிந்தவர்களும் குழப்ப மின்றி ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு செயலாற்ற துணை செய்வது எண்கள்தான்.

ஆம், உலகின் ஒரே பொதுவான வரி வடிவம் எண்களே! இந்த எண்களே நியாயம் வழங்கும் உயரிய நீதிபதியும் கூட எண்ணியல் அளவைகள் இல்லாவிட்டால் நியாயமாக யாருக்கும் எதையும் வழங்கவே முடியாது. அனைத்திலும் ஒரு குத்து மதிப்பதான் இருக்கும். துல்லியம் என்பது நம் வாழ்வில் எங்கும் இருக்காது.

எனவே எண்தான் ஒலியிலும் வரிவடிவிலும் மிக உயர்ந்தது. மகா உத்தமமானது. இதுவும் கூட ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது என்கிற ஒன்று முதல் ஒன்பதுக் குள் அடங்கிவிட, பின் அதன் கூடுதல்களும், குறைவுகளுமே எண்கணிதமாகி நம் வாழ்வுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கின்றன.,

மொத்தத்தில் 1 முதல் 9 வரை எண்கள் இல்லை யானால் உலகில் உயிர்கள் இருந்தும் இயங்காமல் மடிந்து மாளும் நிலையே தோன்றும். வாழ வைப்பதும், வாழ்வில் குழப்பங்களை நீக்குவதும் இந்த எண்களே!

நமது வீட்டுக்கான கதவிலக்கம் முதல் பள்ளிச் சான்றிதழ், தொலைபேசி, பாஸ்புக், வாகனங்கள் என்று எங்கும் துணை வருவது எண்களே!

அப்படிப்பட்ட இந்த எண்களின் மூலம் சிவம் என்றால் வியப்பாக இருக்கும். சிவத்துக்குள் ஒன்று முதல் ஒன்பது வரை ஒளிந்து கிடக்கின்றன.

லிங்க சொரூபம் ஒன்று! ஆயினும் அந்த லிங்கமாகிய சிவத்துள் சக்தியும் சமமாக கலந்தி ருப்பதால் அது இரண்டு. கணபதியோடு மூன்று, கந்தனோடு நான்கு, அய்யனோடு (ஐய்யப்பன்) ஐந்து, விடை வாகனமது ஆறு, அணி நாகமது ஏழு, சடை கங்கையது எட்டு, திரிசூலமது ஒன்பது என்பது ஒரு கணக்கு.

இதையே பிரம்மாண்ட புராணம் வேறு விதமாகக் கூறுகிறது. சிவமாகிய இறைவன் இந்த புவனங் களின் நடுவில் லகுளேச்வரம் என்னுமிடத்தில் மாளிகை கொண்டிருக்கிறார்.

இந்த லகுளேச்வரம் பற்றி கூறும் போது லகுளேச் வரம் எங்கிருக்கிறது என்று கூற ஒரு கணக்கு கூறப்படுகிறது.

எட்டு அணுக்கள் கொண்டது திரிசரேணு. அதில் எட்டு கொண்டது இலீகை. அதில் எட்டினை

உடையது யவை. அதில் எட்டினை உடையது அங்குலம். அதில் இருபத்[illegible] நான்கு கொண்டது முழம். அதில் நான்கு [illegible]டது வில். இரண்டு கொண்டது தண்டம். இ[illegible]ண்டாயிரம் கொண்டது குரோசம். இந்த குரோசத்தில் நான்கு கொண்டது யோசனை. யோசனை நூறு கொண்டது ஒரு அண்டம். இதில் ஆயிரம் சேர்ந்தது ஒரு பிருத்வி. இந்த பிருத்வி போல் பத்து கொண்டதே அப்பு. இதன் பத்தே தேயு. இப்படி விரிந்து கொண்டே செல்கிறது அந்தக் கணக்கு.

எண்ணின் மூலமாக சிவம் இருந்து வாழ்வில் குழப்பம் நீக்கியருளியபடி உள்ளது. இதை உணர்த் தும் சிவமே லகுளேச்வர மூர்த்தியாகத் திகழ்கிறார்!

தான் வருத்தப்பட்டு பேச மாட்டேன் என்று சொல்லி யும் அதற்காக வருத்தப்படாமல் சிரிக்கும் ராஜ்நாராயணை பாரதி மிக ஆச்சரியத்தோடு பார்த்தாள். எல்லாம் சில நொடி வரைதான். பிறகு அந்த உணர்வை மாற்றிக் கொண்டவளாக, "உங்களுக்கு ரொம்ப துளிர் உட்டு டுத்து..." என்றாள்.

"அப்படின்னா?" இது அவன்.

"கொஞ்சம் கூட பயமே இல்லை. எலலாத்துலையும் ஒரு சந்தேகம். உங்க எதிர்க்க அந்த பெருமாளே நேர வந்து நின்னாலும் நம்பமாட்டேள். யாரோ சினிமா நடிகர் நன்னா மேக்கப் போட்டுண்டு வந்து நின்னுண்டு இருக்கறதா சொல்வேள்."

"ஓஹோ... இப்ப நான் நாத்திக[illegible]ா இருக்கறதுதான் உன் கோபத்துக்கெல்லாம் காரணமா?"

"ஆமா... பின்ன என்ன?

'கோவில்ல நாம மாட்டிண்டப்போ என்னென்ன பார்த் தோம்? அதை எல்லாம் பார்த்துமா உங்களுக்கு பக்தி வரலை?"

பாரதி கோபத்தில் துளி செல்லத்தையும் கலந்து சிணுங்கினாள். நல்ல வேளை. பட்டர் இல்லை. அவர் கோவிலுக்கு போய்விட்டிருந்தார். அன்னபூரணி மட்டும் எட்டிப் பார்த்தாள். பாரதி கேள்வி கேட்பதில் தனக்கும் உடன்பாடுதான் என்பது போல நினைத்தவள், கொல்லைப்புறத்திற்கு ராஜ் அருகில் வந்து நின்றாள்.

"அத்தே... நீ என்ன கேக்கப் போறே?"

"நீ அவ கேக்கற கேள்விக்கு முதல்ல பதில் சொல். நான் அப்புறமா வரேன்?"

"என்னத்த சொல்ல... ஒரே ஒரு கேள்வியை நான் கேக்கறேன். நீங்க பதில் சொல்லுங்கோ."

"குதர்க்கமா எதையாவது கேப்பே... தெரியாதாக்கும்?"

"நான் கேக்கவே இல்லை. அதுக்குள்ள அதை குதர்க்கம்னா எப்படி?"

"உன்னை மாதிரி நாலு எழுத்து படிச்சவா ரொம்ப பேர் குதர்க்கம் தானே பேசறா. அவாளுக்கெல்லாம் ஆகாசத்துல இருந்து அப்படியே நேரா குதிச்சுட்டதா ஒரு மிதப்பு வேற..."

"அவசரப்பட்றே அத்தை... நான் கேக்கற கேள்விகள்ல என்ன தப்பு இருக்கு?"

"எல்லாமே தப்புதான் ராஜா. கடவுள் நம்மளை சோதிக்கலாம். ஆனா நாம கடவுளை சோதிச்சா அது பேராபத்துல முடியும்?"

"தப்பு அத்தை... எதையும் ஏன், எதுக்கு, எப்படின்னு கேட்டதாலதான் மனுஷன் வளர்ந்தான். ஒவ்வொண்ணா கண்டுபிடிச்சான். ஏன் என்ற கேள்வி கேட்காமல் வாழ்க்கையில்லைன்னு எம்ஜி ஆரே பாடியிருக்காரே?"

"அவர் பாடின அடுத்த வரியை மறந்துட்டியே 'நான் என்ற எண்ணம் கொண்ட மனிதன் வாழ்ந்ததில்லை'ங்கற வரிகளையும் ஞாபகத்துல வெச்சுக்கோ."

"அதை நான் மறப்பேனா?"

"மறந்ததாலதான் உன்னை பெரிசா நினைச்சுண்டு எல்லாத்தையும் கேள்வியா கேட்கறே. நம்ப மாட்டேங்கறே. கோவில், அதுல இருக்கற தெய்வம், கால காலமா நடக்கற பூஜைகள் அதன் மேலான நம்பிக்கைகள் எல்லாம் உனக்கு பொய்யாத் தெரியறது."

"திரும்பவும் அவசரப்பட்றே... என் கேள்விக்கு முதல்ல பதில் சொல். கடவுள் இருக்கார்னா அந்த கடவுளைத் திருடவோ இல்லை அழிக்கவோ சிலர் முயற்சி செய்தப்போ அதை எதுக்கு தங்கம் வைரத்தை ஒளிச்சு வெக்கிற மாதிரி அன்னிக்கு சிலர் ஒளிச்சு வைக்கணும்?

'அவரே அழிக்கவும், திருடவும் வந்தவனை அப்படியே பிரசன்னமாகித் தடுத்திருக்கலாமே?

'தன்னையே பாதுகாத்துக்க முடியாம ஒரு பாதாளக் குழிக்குள்ற கிடந்த கடவுளா உன்னை என்னை இந்த ஊரை உலகத்தை காப்பாத்திண்டிருக்கார்"

-ராஜ்நாராயண் டூத் பிரஷ்ஷை வாளித் தண்ணீரில் கழுவியபடியே முதல் கேள்வியை முடித்தான்.

அன்னபூரணியிடமும், பாரதியிடமும் திணறல்.

"என்ன, பதில் சொல்ல முடியலையாக்கும்... போகட்டும். இது என் அடுத்த கேள்வி. அந்த கடவுள் விக்ரகத்தைத் திருடி காசு பார்க்க இப்பவும் ஒரு கூட்டம் அலை மோதிண்டு இருக்குன்னு கேள்விப் பட்டேன். அந்த கூட்டத்தைச் சேர்ந்த மனுஷாளைக் கூட உங்க சித்தாந்தப்படி கடவுள்தன் படைச்சார். அவர் மனசு வெச்சா அவா மனசுல பூந்து ஒரு வினாடி இது தப்புன்னு ஏதோ ஒரு வகைலகூட உணர்த்தினா போதுமே... ஏன் அதை அவர் செய்ய மாட்டேங்கறார்?

போலீஸ் காவல்தானே இப்பவும் போட வேண்டியிருக்கு?"

-இரண்டாவது கேள்வியும் அவர்களைக் குழப்பியது.,

"நான் ஒளிஞ்சிண்டிருந்தப்போ பாம்பு வந்தது... விளக்குகள் எரிஞ்சது... நாய்கள் துரத்தினது... இதை எல்லாம் நானும் பார்த்தேன். இவைகளை ஏன் ஒரு மனுஷன் பிளான் பண்ணி செய்திருக்கக் கூடாது?

'அப்படிச் செய்தா கோவிலோட சக்தி வெளிய தெரிய வந்து நிறைய கூட்டம் கூடும். அதிகரிக்கும்னு யாராவது செய்திருக்கலாமில்லியா?"

-மூன்றாவது கேள்வி அவர்களைக் கலக்கிவிட்டது.

"போறும்... இதுக்கு மேல நீ எதையும் கேட்காதே. செப்படிவித்தைக்காரன் மாதிரி நீ வார்த்தை ஜாலம் காட்றே. ஒண்ணு மட்டும் நிச்சயம். உன் கேள்விக்கெல்லாம் பதில் இருக்கு. ஆனா எங்களுக்கு அதை எப்படி சொல்றதுன்னுதான் தெரியல..."

-அன்னபூரணி பதிலோடு திரும்பி உள்ளே சென்றாள். பாரதி மட்டும் மலங்க மலங்கப் பார்த்தாள்.

"உலகம் உருண்டைன்னு கலிலியோ சொன்னப்போ எல்லாரும் அவரைக் கல்லால அடிச்சாளாம். என் வரைல உங்களுக்கு அப்படி நடந்துக்கத் தெரியல. ஆனா அந்த மனுஷாளும் நீங்களும் ஒண்ணுதான்."

-ராஜ் முகத்தைக் கழுவியபடியே சொல்லி முடித்தான்.

பாரதி அதைக் கேட்டு விக்கித்துப் போயிருந்தாள். கண்களில் ஜலக்கூடு!

"எதுக்கு இப்ப கண்கலங்கறே?"

"நீங்க என்னை கல்யாணம் பண்ணிக்க வந்தேளா இல்ல இப்படி எல்லாம் தர்க்கம் பண்ணவா?"

"நான் என்ன திட்டம் போட்டுண்டா இதை எல்லாம் பண்றேன். பைத்தியம்... நடக்கற விஷயங்கள் என்னை இப்படி பேச வைக்கறது."

"எனக்கு பயமா இருக்கு?"

"எதனால?"

"உங்களை ஜாக்ரதையா இருக்கச் சொன்னாராமே அந்த ஷாநவாஸ்..."

"ஆமாம்..."

"ஏன்?"

"ஒரு எச்சரிக்கைக்குத்தான்..."

"பாத்தேளா... ஸ்வாமி விஷயத்தை நீங்க நம்பாததால எவ்வளவு கஷ்டங்கள்?"

"பைத்தியம்... எதுக்கெடுத்தாலும் ஸ்வாமியா? அவரே இல்லேங்கறேன்... இல்லாதவரை இழுத்துப் போட்டு பேசறதே உங்க வழக்கமா இருக்கே..."

"இல்ல... அவர் இருக்கார். அப்படி எல்லாம் சொல்லாதேள்."

"அப்ப அவரை தன்னை காப்பாத்திக்கச் சொல்லு. எதுக்கு போலீஸ் காவல்?"

"அவர் நம்பளை சோதிக்கிறார்..."

"புடலங்கா... வழியை விடு!"

-ராஜ்நாராயண் கோபமாக அங்கிருந்து விலகத் தொடங்கினான்.

அவள் கண்களில் திரண்டிருந்த கண்ணீர் கொட்டத் தொடங்கியது.

அவனுக்கும் அடுத்து என்ன செய்வது என்று தெரியவில்லை.

திருட்டுக் கொடுத்த தன் பொருள்கள் பற்றித்தான் முதலில் நினைத்தான்.

அவை கிடைத்தால் கிளம்பிவிடலாம்.

தனக்கும் நிம்மதியாக இருக்கும்... இவர்களுக்கும் பிரச்னை இருக்காது என்று தோன்றியது.

கண்ணாடி முன் நின்று தலையை வாரிக் கொண்டான். போலீஸ் ஸ்டேஷன் வரை சென்று சப்-இன்ஸ்பெக்டரைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டான்.

அதே சமயம் வீதியிலும் ஒரே பரபரப்பு!

'நம்ம இடிஞ்ச கோவில்ல ஒரு பிச்சைக்காரன் பொணம் கிடைக்கறதாம்...!'

-சிலர் பேசிக்கொண்டது காதில் விழவும் நெஞ்சு அதிர்ந்தது.

'கோவிலில் பிச்சைக்காரன் சடலமா?'

-கேள்வியோடு கோவில் நோக்கித்தான் நடந்தான்.

'இந்த ஊருக்கு என்னவோ ஆயிடுத்து. தொட்டுத் தொட்டு தப்புத் தப்பா என்னென்னவோ நடக்கறது?' -நடக்கையில் ஒருவர் அவன் காது பட பேசியது சிரிப்போடு எரிச்சலைத் தந்தது.

28

'சிவமானது திரிபுராந்தக மூர்த்தியாகத் திகழ்ந்த வரலாற்றை நோக்கினால் பல விஷயங்கள் மிக ஆச்சரியம் தரும்.

காத்து ரட்சிக்கும் கருணாமூர்த்தியான திருமால் முதல், அனைத்து மொத்த தேவர்களுக்கும் முதற் கடவுளாய் விளங்கும் கணபதி வரை இந்த திரபுராந் தக மூர்த்திக்கு உதவியிருப்பதைப் பார்க்கலாம்.

தாரகாஷன், கமலாஷன், வித்யுந்மாலி என்னும் மூவரும் தாரகாசுரனது புத்திரர்கள். கடுந்தவம் செய்து பிரம்மனிடம் தங்களைத் தற்காத்துக்

கொள்ளும் பொருட்டு முப்புரங்களை உருவாக்கிக் கொள்ளும் வரத்தினையும் பெற்று விடுகின்றனர்.

பூமியில் இரும்பு மதில், வானில் வெள்ளி மதில், அதற்கும் மேலான அமரருலகில் பொன் மதில்களை அமைத்துக் கொண்டு தங்கள் அட்டகாசங்களையும் தொடங்குகின்றனர்.

அசுரர்கள் இயல்பே வரம் பெறும் வரை அடங்கி யிருப்பதும், பெற்ற பின் ஆட்டம் போடுவதும்தான். இதனால் தேவர்கள்படாதபாடுபட, மூவரையும் அழித்தாலே அனைவரும் வாழ இயலும் என்கிற ஒரு நிலை தோன்றுகிறது.

அந்த மூன்று அரக்கர்களும் பெற்ற வரத்தின்படி அவர்களை சிவனையன்றி யாராலும் அழிக்க இயலாது. அரக்கர்களோ சிவனைத் துதித்து சிவனை கட்டிப் போட்டிருக்கின்றனர். இந்நிலையில் அவர்கள் அழிய வேண்டுமானால் அவர்கள் சிவத்தை மறக்க வேண்டும். இதனால் சிவம் சினக்க வேண்டும். சிவம் சினந்தால் அழிவும் நிச்சயம். இதை அறியும் திருமால்,தேவர்களைக் காத்திடத் திருவுள்ளம் கொண்டு அந்த அரக்கர்கள் கர்வமுற்று சிவபூஜை செய்யாதபடி திகழ நானே கடவுள்- நானே பரம் பொருள் எனும் கர்வம் மிகுந்த துறவிகளைப் போல ஆக்குகிறார்.

இதனால் சிவம் அவர்களுக்குள் சவமாகிறது. இதனால அருட் தொடர்பற்றுப் போக சிவனும் கோபம் கொண்டு அவர்களை வதம் செய்து அழிக்கத் தயாராகிறார். யுத்தம் செய்ய கிளம்பவும் ரதத்தின் அச்சு முறிந்து போகிறது. சிவபிரான் உடனே விநாயகப் பெருமானை வணங்கிட, பின் அது சீராகி வழிகாட்டுகிறது. அசுரர்களும் அழி கின்றனர். திரிபுரங்களைத் தன் புன்னகையாலேயே எரித்து சாம்பலாக்கிட திருபுராதியர்களாகிய அம்மூவரும் மாயை விலகி மீண்டும் சிவனைப் பணிகின்றனர். சிவனும் அவர்களை மன்னித்து தமது

துவார பாலகர்களாய் அவர்கள் திகழ வழிவகை செய்கிறார்.

இதுவே திரிபுராந்தக மூர்த்தியின் புராண வரலாறு. இதைக் கூர்ந்து நோக்குவோர்க்கு பல லாஜிக்கான கேள்விகளும், கோபங்களும்கூட எழும்.

அசுரர்களைக் கர்வம் மிகுந்தவர்களாக ஆக்க முனைந்த திருமால், பதிலுக்கு அவர்களை ஞானிய ராக்கி நல்லவர்களாக்கி விட்டிருந்தால் சிவபெரு மான் வதம் பண்ண வேண்டிய அவசியமே இல் லையே. இந்த அசுரர்களை விடவும் அதிநுட்ப வரம் பெற்ற ஹிரண்யனையே அழித்த மூர்த்திக்கு இந்த மூவர் எம்மாத்திரம்?

அடுத்து சிவபெருமான் யுத்தத்துக்குக் கிளம்பும்போது ரதத்தின் அச்சு முறிகிறது. உடனே விநாயகரை வழிபட அது சீராகிறது. எங்காவது தந்தை மகனை வணங்குவாரா? என்று நமது வாழ் வியலில் உறவு முறைகளில் நாம் காட்டி வரும் லாஜிக்குகளை அப்படியே எடுத்து இங்கும் பொருத்திப் பார்த்தால் இப்படித்தான் கேட்போம்.

அதுமட்டுமல்ல, மனித மனத்தின் கேள்விகள் அது அறிந்த மொழியாலும், அவன் வாழும் நிலத் தாலும், அவன் சார்ந்த மனிதர்களாலும், கலாசார முறைமைகளாலும், அவன் கற்ற கல்வியாலும் அமைவன.

அதை வைத்துக் கொண்டு கோடானு கோடி ஆண்டு வரலாறு கொண்ட புவனங்களை அளந்து பார்க்க முயன்றால் அதில் தவறான கருத்துக்களே உருவாகும்.

புராணங்கள் எப்பொழுதும் சூட்சுமப் பொருளை உடையவை. அதைப் புரிந்து கொள்ள ஒருவருக்கு முதலில் தன்னைப் பற்றிய ஞானம் வேண்டும். தான் யார் என்பதில்தான் புராண சூட்சுமங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பது தெரிய வரும்.

திரிபுராந்தக மூர்த்தியின் புராண வரலாற்றை உற்று நோக்கினால் ஒரு விஷயம் தெளிவாகும். இறை வடிவங்கள் சில நேரங்களில் தங்களுக்குள் பெரியவன், சிறியவன் என்று சண்டையிட்டுக் கொண்டது முதல், அடங்கி வணங்கிப் போவது வரை எல்லாமே ஒரு கருத்தைச் சொல்வதற்கே

முப்புராதியர்களையும் படைத்ததும்கூட இறையே. ஒரு க்ஷணத்தில் அவர்களுக்குள் மனமாற்றத்தை அந்த இறைவனால் உருவாக்க முடியும். அப்படிச் செய்ய முடிந்தால் உலகில் யாருமே பாவிகளாக இருக்க முடியாது. மாயை என்கிற ஒன்றுக்கே இடமில்லாமல் போய்விடும். ஏனென்றால் ஒரு உயிரைப் படைக்கும் போதே இன்றைய மனித வாழ்க்கை கூறும் தவறுகளைத் தவிர்த்து விட்டு மனிதர்களை கடவுள் படைத்தால் அந்த வாழ்க்கை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

மனிதர்களிடம் இயக்கமே இருக்காது. அதுதான் முடிவாக இருக்கும். வாழ்க்கை என்பது வெற்றி, தோல்வியை உள்ளடக்கிய விளையாட்டு போல். விளையாட்டு என்றால் அதில் சுலபமாக வெற்றி கிட்டாத விதத்தில் விதிகள் அமைந்திருக்கும். அந்த விதிகளை அனுசரித்து விளையாடித் திறமை காட்டினாலே வெற்றி.

வாழ்க்கையும் அப்படியே. இன்ப, துன்ப விதிப்பாடுகளுக்கு நடுவில் இரண்டினூடே அதை வெற்றி கொள்வதே பிறப்பின் நோக்கம்.

இரண்டும் இருந்தாலே சுவாரஸ்யம்.

அந்த வகையில் துன்பமான விஷயங்கள் அதிகரிக்கும்போதும் இறைவன் அதை ஒரு முறையோடுதான் அடக்குகிறான்.

திரிபுராந்தக மூர்த்தி புராண வரலாறும் அதையே காட்டுகிறது!'

திருமாலே முழுமுதற் கடவுள்! இருப்பினும் அவர் சிவனாலேயே அசுரர்கள் அழிபட வேண்டும்

எனும் வரத்தினை அதாவது சத்தியத்தைக் காப்பாற்ற தன்னால் வதம் செய்ய முடிந்த போதும் செய்யாமல் அதே சமயம் மிக புத்திய பூர்வமாக நடக்கிறார். சொல்லப் போனால் சிவத்திற்கு சிறப்பு சேர்க்கிறார். அப்படிப்பட்ட சிவம் எந்த ஒன்றின் தொடக்கமாகவும் விநாயகன் இருப்பதை உலகுக்கு உணர்த்த அவனை வழிபட்டுப் பின் யுத்தம் புரிய கிளம்புகிறார். விநாயகனை வழிபடுவதால் சிவம் தாழவில்லை. மேலும் உயரவே செய்கிறது.

இது புரியாமல் கடவுளர்களுக்குள்ளும் இனம் பிரித்து உயர்வு தாழ்வை நாம் கற்பித்தல் ஒரு வகையில் நமது அவசரத்தையும் ஆற்றாமையையுமே குறிப்பதாகும்.

ஆனால் கூர்ந்து நோக்கினால் இறை செயல்களில் ஒரு செய்தியும், அற்புதமான நேர்த்தியும், நமக்கான வழிகாட்டலும் பொதிந்து கிடக்கும்.

திரிபுராந்தக மூர்த்தம் அதை மிகத் தெளிவாகக் கூறுகிறது!

இடிந்த கோவிலைச் சுற்றி ஒரே கூட்டம். கோவிலுக்குள் ஒருவர்கூட இல்லை. வெளியே நின்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

உள்ளே போலீஸ்காரர்கள் இருப்பதை கோவிலுக்கு வெளியில் நிற்கும் ஜீப் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது.

ராஜ்நாராயண் கட்டத் தெரியாமல் கட்டிக் கொண்டிருக்கும் வேட்டியுடனும், பட்டரின் ஜிப்பாவுடனும் அந்தக் கூட்டத்துக்குள் நுழைந்தான்.

அவனைப் பார்க்கவும் அவர்களிடம் முணுமுணுப்பு "கோவிலுக்குள்ற ஒரு கூட்டம் ஆராய்ச்சி பண்றோம்னு போகும்போதே நினைச்சோம். இப்படி ஏதாவது நடக்கும்னு..."

"ஆமா இந்த பிச்சைக்கார பய எதுக்கு கோவிலுக்குள்ற போனான்?"

"யோவ்... இந்த ஊருக்கு கெட்ட காலம் ஆரம்பிச்சுடுச் சய்யா அதான் தொட்டுத் தொட்டு ஏதேதோ நடந்துகிட்டு இருக்கு. ஒண்ணும் புரிய மாட்டேங்குது..."

அவர்கள் பேச்சு ராஜ்நாராயணை இளக்காரமாக சிரிக்க வைத்தது. சிரித்தபடியே நேராக கோவிலுக்குள் நுழைந்தான்.

இன்ஸ்பெக்டர் குமாரவேல் போட்டோகிராபருக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்தபடி இருந்தார். அந்த பிச்சைக் கார உளவாளி கருநீலமாய் மாறி தரை மேல் கிடந்தான். மூக்குத் துவாரத்துக்குள் ஈக்கள் புகுந்து வெளிவந்து பறந்து கொண்டிருந்தன. கண்கள் நிலை குத்திய நிலையில் கோபுர கலசத்தில் ஊன்றியிருந்தன.

கழுகும் அங்கேயேதான் இருந்தது.

ராஜ்நாராயண் வரவும் குமாரவேல் இணக்கமாகப் பார்த்தார்.

"என்ன சார்... அடுத்த பிராப்ளமா?"

"ஆமாம் மிஸ்டர் ராஜ்... ஊருக்குள்ற பிச்சை எடுத்துக் கிட்டிருந்தவன் இங்க எங்க வந்தான்னு தெரியல. ஆளைப் பாத்தாலே பாம்பு கடிச்சு இறந்துட்டது நல்லா தெரியுது.

'இன்ஃபாக்ட் இவனோட துணி மூட்டைல ஒரு ரிவால்வர் இருக்கு. அதை வெச்சு பார்க்கும்போது ஷாநவாஸ் சொன்ன பைவ் எக்ஸ் பார்ட்டிகளோட ஆளோன்னும் சந்தேகமா இருக்கு..."

-குமாரவேல் பதிலோடு அந்த ரிவால்வரைக் காட்டி னார். ஒரு கர்ச்சீப்பில் வைத்து அதை அவர் காட்டிய விதமே ராஜ்நாராயணை கலக்கியது.

பிச்சைக்காரனுக்கு எதற்கு ரிவால்வர்?

நெற்றியை தேய்த்துக் கொண்டான்.

"டெஃபனட்டா இங்கையும் எதாவது இருக்கலாம்னு தேடி வந்துருக்கணும். அதான் என் யூகம்...!"

"யூ மீன்...?"

"பைவ்எக்ஸ் பார்ட்டிகள் ஊர்ல நிறைய பேர் இருக்க லாம். அதுல ஒருத்தன்தான் இவன். உங்களை எச்சரிக் கையா இருக்கச் சொல்லி ஷாநவாஸ் சொன்னதை ஞாபகப்படுத்த விரும்பறேன்."

"போதும் இன்ஸ்பெக்டர். எனக்கு ஒரே வெறுப்பா இருக்கு. என் லாஜிக்குக்கு ஒரு விஷயம்கூட பொருந் தலை. நான் இங்க இருந்துகிட்டு டயத்தை வேஸ்ட் பண்ண விரும்பலை. ஐ வாண்ட் டு கா பேக். அதுக்கு என் பாஸ்போர்ட் விசா எல்லாம் ரொம்ப முக்கியம். அது திருட்டு போன விஷயம் உங்களுக்கும் தெரியும். எனி இம்ப்ரூவ்மென்ட். அந்த திருடங்க கிடைச்சாங்களா? என் திங்க்ஸ் எல்லாம் எப்ப கிடைக்கும்?"

பிணத்தின் கால்மாட்டில் நின்று கொண்டு ராஜ்நாரா யண் கேட்டதை குமாரவேலும் ரசிக்கவில்லை என்பது அவர் முகபாவத்தில் தெரிந்தது.

"நோ மிஸ்டர் ராஜ்நாராயண். நீங்க இப்ப ஊருக்கு கிளம்ப நினைக்கறது ஆபத்து. உங்க மேல உள்ள சந்தேகத்தை அதிகரிக்கும்..."

"என் மேல சந்தேகமா... என்ன சொல்றீங்க?"

"யெஸ்... நீங்க எப்ப இந்த ஊருக்கு வந்தீங்களோ அப்ப இருந்துதான் இங்க எல்லா பிரச்னையுமே... உங்க பேச்சும்கூட எல்லா விஷயத்திலையும் ஆண்ட்டியா இருக்கு. ஒரு செயின் மாதிரி தொட்டுத் தொட்டு சம்ப வங்கள் தொடர்ந்துகிட்டே இருக்கு. உங்களை வெச்சுத் தான் நான் அந்த பைவ்எக்ஸ் பார்ட்டிகளைப் பிடிக்கணும். நீங்க இருந்தாதான் அவங்க உங்களை நோக்கி வரு

வாங்க. நீங்க எங்களைப் பொறுத்தவரைல ஒரு பொறி. உங்களை வெச்சுத்தான் நாங்க அவங்களைப் பிடிக் கணும்."

குமாரவேலின் விளக்கம் அவனைக் குழப்பியது. முதலில் அவன் மேல் சந்தேகம் என்றவர், பிறகு அவனே எதிரிகளைப் பிடிக்க பொறி என்கிறார்.

இவர் என்னதான் சொல்ல வருகிறார்?

ராஜ்நாராயண் குழம்பிக்கொண்டிருக்கும்போது வெளியே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு தள்ளாத வயதுக்காரர் நின்று பார்த்தது போதும் என்பது போல அங்கிருந்து நழுவத் தொடங் கினார்.

அருகில் வயல் வரப்பு... அதில் தடுமாற்றத்தோடு இறங்கி நடந்தவர் கிணற்று திட்டு ஒன்றை அடைந்து அமர்ந்தார். வறட்டு இருமல் இருமினார். அது சிக்னலோ என்னவோ... அருகில் வைக்கோல் போர் ஒன்றில் இருந்து குடைந்து கொண்டு இரண்டு பேர் வெளியில் வந்தனர்.

அவரை நெருங்கி வெறித்தனர்.

அவரும் நிமிர்ந்தார்.

"அதிகபட்சம் 24 மணி நேரம்தான் உங்களுக்கு டயம். அந்த அமெரிக்காகாரன் உசுரோட இருக்கக் கூடாது. குறி தப்புனா நீங்க உசுரோட இருக்கக் கூடாது..." -அவரது குரலின் கடுமை அவர்களை மிரட்டியது.

29

நதிகளின் ராஜமாதாவாக கங்கையை நாம் கருதுகிறோம். இந்த உலகில் எவ்வளவோ நதிகள், அவற்றால்தான் உயிர்கள் ஜீவிக்கின்றன. நதியில்

லாத பூமி கதியற்றுப்போகும். நதி பாயுமிடத்திலோ செல்வமும் கலைகளும் செழித்து வளரும்.

இப்படிப்பட்ட நதிகள் அனைத்திலும் ஓடுவது ஜலம்தானே... இதில் ஒன்று மட்டும் மிகச் சிறந்தது என்று கூற வேண்டிய அவசியமென்ன என்கிற கேள்விகள் எழலாம். அதில்தான் சூட்சுமம் உள்ளது. அதிலும் கங்கையை ராஜமாதாவாகக் கருத பல காரணங்கள் உள்ளன.

பொதுவில் தோஷம் போக்கும். வல்லமை உடைய ஒரு வஸ்துதான் நீர். அதனாலேயே சூதகம், தீட்டு, பூசனை என்கிற சகலத்திற்கும் தலை முழுகி தேகத்தைக் கவ்வியிருக்கும் அன்றாட சூதக பாதகங்களில் இருந்து விடுவித்துக் கொள்கிறோம்.

இந்த தலைமுழுக்கு என்பது கிணற்றில் நிகழும் போது ஒருவிதமாயும் குளத்தில் நிகழும்போது ஒரு விதமாயும் ஓடும் நதிப் புனல்களில் நிகழும் போது ஒருவிதமாயும் நமக்குப் பலன்களைத் தருகின்றன.

நதி நீரில் மண்மிசைக் கதிர்களுடன் அதில் நீரா டும் உயிர்களின் தேகக் கதிர்களும் அடங்கி யிருக்கின்றன. குறிப்பாக ஐம்புலன் சுருக்கி உள் ளொளி பெருக்கி சரீரத்தை திருமூலர் சொன்னது போல், "உள்ளம் கோயில்- ஊனுடம்பு ஆலயம்' என்று ஆலயமாகவே ஆக்கிக் கொண்ட பல யோகியர்களின் தேகக் கதிர்களும் கலந்திருக்க வாய்ப்பு மிக அதிகம்.

இந்தக் கதிர்கள் நீராடுபவர்களின் உடலில் உள்ள நவக்கிரக ஆதிபத்ய சக்கர இயக்கத்தில் அவற்றுக்கு வலு சேர்ப்பவை. அதனாலேயே ஆல யங்களுக்கு வருபவர்கள் ஆலயத் திருக் குளத்தில் நீராடுதல் நலம் எனப்பட்டது. மகா மகம் போன்ற நிகழ்வுகளில நீராடுதல் என்பது கட்டாயமாகவும் வைக்கப்பட்டது.

தீர்த்தம் ஒன்றுக்கே தீ வினைக் கதிர்களைக் கூட நல்வினைக் கதிர்களாய் மாற்றி தன்னகத்தே வைத்துக் கொள்ளும் சக்தி உண்டு.

அதிலும் கங்கை நதி நீருக்கு இம்மட்டில் அளப்பரிய சக்தி உண்டு. காரணம்? கங்கை நீர் என்பது மலைமிசை விழுந்து மண்ணின் தோஷங்களைத் தன்னகத்தே ஏற்றுக் கொண்டு ஓடி வரும் தோஷங்கள் அற்ற நீர். அத்துடன் அதன் சிலுசிலுப்பு காரணமாய் சில உயிர்களே கங்கை நீரில் ஜீவிக்க இயலும். இதனால் மற்ற நதி நீர்களை விட இதில் வினைக் கதிர்களும் தோஷக்கதிர்களும் குறைவு. அதனால் மனிதர்கள் மூழ்கி எழும்போது உடம்பின் கணச்சூடு வரை அதன் சிலுசிலுப்பு ஊடுருவிச் சென்று உயிர்ச் சக்கரங்களை மிக வேகமாகச் சுழற்றுகிறது.

அனைத்திற்கும் மேலாக புலனடக்கம் மிகுந்த யோகியர்கள் பல ஆயிரமவர் கங்கை உற்பத்தியாகும் இமயத்தில் மகா சமாதியாகியுள்ளனர். அவர்களின் பூத உடலைத் தழுவி ஒப்பற்ற மின்னலைகளுடன் அது ஓடி வருகிறது. மேலாய் அந்த இமயத்தை சிவச்சடையாகவும் அதனுள் அடைபட்ட நிலையில் இருந்து அது பீறிட்டு வருவதாகவும் புராணச் செய்திகளும் கூறுகின்றன.

அதனாலேயே கங்கை நீராட்டு மனித உயிரினத்திற்கு ஒரு கட்டாயச் செயலாக்கப்பட்டது. அதிலும் காசியம்பதியில் அந்த விஸ்வநாத சிவத்தைத் தரிசிப்பதும், அங்குள்ள மணிகர்ணிகை படித்துறையில் நீராடுவதும் உயிரின் முக்திக்கும் மீண்டும் பிறவாமைக்கும் நம்மை இட்டுச் செல்வதாகும்.

இந்த உன்னதத்தை விளக்கும் ஒரு சம்பவத்தை சிவமே புரிந்துள்ளது. கயாசுரன் என்னும் யானை வடிவ அசுரன் சிவனாலன்றி யாராலும் அழிக்க முடியாத வரம் பெற்றவன். அவனால் துன்புறும் தேவர்கள் ஈசனிடம் முறையிடவும், ஈசனே அந்த

அசுரனை வதம் புரியவும் ஒரு வழியை யோசிக்கின்றனர்.

தேவராயினும், அசுரராயினும் வினைப் பயன்கள் விடுவதில்லை. எனவே காசியில் கங்கைக் கரையான மணிகர்ணிகையில் மூழ்கி தங்கள் தீவினையைத் தொலைத்து விசுவநாதனிடம் தஞ்சம் புகுந்து வேண்டுகின்றனர். அதே சமயம் கங்கையில் அல்ல எங்கு மூழ்கினாலும் விடமாட்டேன் என கயாசுரன் அங்கும் அவர்களைத் துன்புறுத்த வருகிறான். அவனது செயல் ஈடேறினால் கங்கை வினைகளைக் களையும் நதி என்பது பொய்யாகி விடும். ஆனால் அதுவே மோட்சமார்க்கம் இட்டுச் செல்லும் ஒன்றல்லவா? எனவே அந்த கங்கையைத் தன் சடையில் கொண்டிருக்கும் சிவனே ஓடோடி வந்து கயாசுரனை வதம் செய்கிறார். தன் ஜோதிச் சுடரொளியால் அவர் அசுரவதம் செய்து அவனது சரீரத்தைப் பிளந்து தன் மேனி மேல் ஒரு போர்வை போல் போர்த்திக் கொள்கிறார். அப்படியே கஜயுக்த மூர்த்தியாகவும் காட்சி தருகிறார். இந்நிலையில் ஜோதிச் சுடரொளியாய் அவர் மணி கர்ணிகை தேவர்களுக்கு காட்சி தந்ததாய் புராணங்கள் கூறுகின்றன.

பொதுவில் பரம்பொருளாகிய அந்த ஆதியாம் ஜோதியில் உயிர்கள் கலப்பதையே முக்தி என்கிறோம். அதை உணர்த்துவது போல அந்த சிவமானது மணிகர்ணிகையில் ஜோதிச் சுடராய் மின்னியது என்பர்.

இன்றும் மணிகர்ணிகையில் நீராடி அகல் ஒன்று ஏற்றி அதை ஈசனாய் பாவித்து வணங்குவதால் மனதுக்குள் அறியாமை இருள் நீங்கி ஞானக் கதவுகள் திறக்கக் காணலாம்."

இருபத்தி நான்கு மணிநேரம் என்று கெடு விதித்த அந்த நபர் சுற்றி ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

அறுவடையான வயல்களில் அங்கும் இங்குமாய் சில ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

அந்தப் பகுதியில் எப்பொழுதும் ஆடு, மாடுகளை மேய்த்தபடி சுற்றி வரும் காத்தாயி கையில் கொப்புடன் ஒரு இடத்தில் தெரிந்தாள்.

வயதான மனிதரின் கட்டளையை ஏற்றுக் கொண்டது போல இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

"பாத்துடா... இந்த ஊர் வரைல நாம எது செய்தாலும் அது நமக்கு எதிராவே திரும்பிடுது. ரொம்ப கவனமா நடந்துக்கிடணும்."

-கிளம்பும்போது அவர்களுக்கு எச்சரிக்கை வேறு விடுத்தான். அவர்களும் பதிலுக்கு தலையை ஆட்டியபடி சென்றனர்.

சற்றுத் தள்ளி ஐந்து யானைகள் ஒன்றாக நிற்கிற அளவில் ஒரு பெரிய வைக்கோல் போர். அந்த வயதான மனிதன் அந்த வைக்கோல் போரைச் சமீபித்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கைகளால் விலக்கினான். உள்ளே குகை போல் ஒரு அறை! திரும்பவும் யாரும் பார்க்கிறார்களா என்று ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே நுழைந்து திரும்பவும் வைக்கோல் பிரிகளால் மூடிக் கொண்டான்.

உள்ளே ஒரு எமர்ஜென்சி ஹாலோஜன் விளக்கு இருந்தது. அதைத் தட்டிவிட்டான். பளிச்சென்று வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் பெரிய மரப்பெட்டி முதல் செல்போன்கள் வரை நிறைய பொருள்கள் அங்கே இருப்பதைப் பார்க்க முடிந்தது.

அவனும் தலையில் கையை வைத்து தலைமுடியைப் பற்றி இழுக்க அது ஒரு நரைத்த விக் என்பது பிறகு தான் தெரிந்தது. அவனது வயதிலும் சரி பாதி குறைந்தது போக அவனது தலையும் மொழு மொழுவென்று மொட்டையாகக் காட்சியளித்தது. அதை ஒரு முறை சுகமாகத் தடவிக் கொண்டான்.

அப்படியே மூடப்பட்டிருந்த கறுத்த பாலிதீன் தாள் ஒன்றை தொட்டுத் தூக்கினான். உள்ளே ராஜ்நாராயண் தொலைத்த அவனது அமெரிக்கன் சூட்கேஸ்! அதைத் திறக்க முயன்றான். ஆனால் முடியவில்லை. சீக்ரெட் நம்பர் லாக்கர் கொண்ட அந்த பெட்டி அவனைத் திணற விட்டது. ஒரு கட்டத்தில் எரிச்சல் வந்தது. மிக புழுக்கமாகவும் வைக்கோல் புரிகள் உள்ளே புழுங்க விட்டன. மார்பை ஊதி விட்டுக் கொண்டான். அப்போது அங்கிருந்த செல்ஃபோன்களில் ஒன்று சப்தமிட்டது. பதறியபடி எடுத்து காதைக் கொடுத்தான்.

"ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய..." -மூன்று முறை மறு முனையில் குரல் கேட்டது. புரிந்து விட்டது. அது ரமணி சாஸ்திரி. பதிலுக்கு "சுவாமியே சரணம்..." என்றான்.

"யார் விட்டல்ராவா?"

"யெஸ் ரமணி சாஸ்திரி..."

"பேசலாமா... சுத்தி யாரும் இல்லையே?"

"இல்ல... நான் இப்ப நம்ம ரகசிய இடத்துலதான் இருக்கேன். இருங்க... சிக்னல் கொஞ்சம் வீக்கா இருக்கு..." என்ற விட்டல்ராவ் என்று அழைக்கப்பட்ட அந்த மொட்டையன் மூடிக்கொண்டு விட்ட வைக்கோல் புரிகளில் சிலவற்றை சற்றே தள்ளி உள்ளே காற்று வரும் படி செய்து கொண்டு திரும்பப் பேசத் தொடங்கினான்.

"சொல்லுங்க ரமணி சாஸ்திரி..."

"என்னத்த சொல்ல... நம்ம கஜமணி பாம்பு கடிச்சு செத்துப்போயிட்டானாமே?"

"ஆமாம் சாஸ்திரி... போலீஸ் வந்து உடம்பை போஸ்ட் மார்ட்டத்துக்கு எடுத்துகிட்டு போயிருக்கு..."

"எப்படிய்யா இப்படி ஆச்சு...?"

"அவன் கொஞ்சம் அவசரப்பட்டுட்டான்னு நினைக் கறேன்"

"மண்ணாங்கட்டி... அந்த ராஜமாணிக்கம் குரூப்பும் போலீஸ்ல அப்ரூவரா ஆயிட்டாங்களாமே...?"

"ஆமாம் சாஸ்திரி..."

"ஆக நாம நினைக்கற மாதிரி ஒரு விஷயம் கூட நடக்கலை... அப்படித்தானே?"

"உண்மைதான். போலீஸ் வேகமா சுதாரிச்சுட்டாங்க. எல்லாம் அந்த ராஜ்நாராயண் வேலையாத்தான் இருக் கணும்..."

"அவன் என்ன அவ்வளவு கில்லாடியா?"

"பார்க்க அப்பாவியாட்டம் தெரியறான். ஆனா ஒரு திட்டத்தோடதான் வந்துருக்காங்கறது நல்லா தெரியுது. இல்லேன்னா இடிஞ்ச கோவிலை அவன் ஏன் சுத்திச் சுத்தி வரணும்?"

"நீங்க என்ன பண்றீங்க அவனை போட்டுத் தள்ள வேண்டியதுதானே?"

"இப்பதான் அதுக்காக இரண்டு பேரை அனுப்பியிருக் கேன். 24 மணி நேரம்தான் கெடு..."

"இதையாவது கவனமா கச்சிதமா செய்து முடிங்க. குப்தாஜி ரொம்ப கோபத்துல இருக்கார்... விஷயத்தை சொதப்பின பல்ராமை பரலோகத்துக்கு பார்சல் பண்ணி யாச்சு. விட்டல் உனக்கும் அந்த நிலை வந்துட வேண் டாம்."

"நிச்சயமா..."

"அந்த ராஜ்நாராயண் பரலோகம் போறதவிட முக்கியமான விஷயம் அந்த நடராஜ விக்கிரகமும் மற்ற விக்கரகங்களும் நம்ம கைக்கு வருவதுதான். இந்த ஆபரேஷனே அதுக்காகத்தான். ஆஸ்திரேலியா பார்ட்டிங்க

கிட்ட வாங்கின அட்வான்ஸ் பணத்துலதான் வேலையே நடந்துகிட்டிருக்கு.

'போட்ட பிளான்படி எல்லாம் நடந்தா உங்களுக்கு போனஸ் அமௌண்ட்டே உண்டு இல்ல..."

-சாஸ்திரி குரலில் எச்சரிக்கையின் அதிர்வலைகள்.

மொட்டையன் விட்டல்ராவ் பதில் கூற முடியாத பயத்தோடு செல்போனை பிடித்தபடி நின்றான்.

"என்ன விட்டல்ராவ்... பேசுய்யா..."

"சொல்லுங்க... கேட்டுகிட்டுதான் இருக்கேன்."

"என்னத்த சொல்றது... நல்ல தகவலே வரமாட் டேங்குதே...?"

"வரும்... கூடிய சீக்கிரம் வரும். நம்ம ஆட்கள் ஊருக் குள்ள பரவலா கலந்துருக்காங்க. கச்சிதமா காரியத்தை முடிச்சுடுவாங்க"

"திரும்பவும் சொல்றேன். இந்த அசைன்மெண்ட் மற்ற ஊர்கள்ல நாம சாதிச்ச மாதிரியான விஷயம் கிடையாது. தணிகாசலம் பிள்ளை மூலமா கிடைச்ச ஏடுகளை குப்தாஜி படிச்சுகிட்டிருக்கார். அவர் படிச்சு முடிச்ச உடனே ஒரு சரியான நபர் அந்த ஏட்டுக் கட்டுகளோட மரகதலிங்கபுரத்துக்கு வந்து சேருவார். அவர் வரும்போது ஊர்ல அந்த ராஜ்நாராயணோ இல்ல போலீசோ யாரும் இருக்கக் கூடாது...

ஏட்டுக்கட்டுகளோட வரப்போற நபர் அடுத்தடுத்து அங்க மறைஞ்சிருக்கற சிலைகளைத் தேடும் போது நீ தான் எல்லா உதவியும் செய்யணும். ஞாபகம் வெச் சுக்கோ..."

"நிச்சயமாங்க..."

"அந்த ராஜ்நாராயணோட சூட்கேசைக் கடத்தினீங் களே... அதுக்குள்ற அவன் உண்மைல யார்னு தெரிஞ் சுக்க ஏதாவது எவிடென்ஸ் கிடைச்சதா?"

"அதை திறக்கவே முடியலை. உடைக்கலாம்னா உள்ற முக்கியமான எவிடென்ஸ் ஏதாவது இருந்து, அது டேமேஜ் ஆயிடுமோன்னு பயமா இருக்கு..."

"சீக்ரெட் நம்பர் லாக்கரா?"

"ஆமாங்க..."

"நான் ஒரு நபரை அனுப்பி வைக்கறேன். அவன் ரிசர்வ் பேங்க் லாக்கரையே திறக்கக் கூடியவன். யூஸ் பண்ணிக்கோ."

"சரிங்க..."

"திரும்ப சொல்றேன். எச்சரிக்கை."

"சரிங்க..."

"இன்னொரு முக்கியமான விஷயம்?"

"என்னங்க?"

"பாம்பு கடிபட்டு செத்துப் போய்ட்ட கஜமணி கிட்ட நம்ம செல்போன் ஒண்ணு இருக்கு. அது போலீஸ் கைல கிடைச்சிருக்கும். அதுல நம்ம ஆட்கள் நம்பர் ரெக்கார்ட் ஆகியிருக்கலாம். போலீஸ் ஃபாலோ பண்ணிகிட்டு வரலாம். அப்படி வரதுக்கு முந்தி நம்ம ஆட்களை எச்சரிக்கையா இருக்கச் சொல். ப்ரீபெய்ட் சிம் கார்டு மூலமாத்தான் அவன் பேசியிருக்கான். இருந்தாலும் தமிழ்நாடு போலீஸ் சுத்தி வளைக்கறதுல கில்லாடிங்க. எச்சரிக்கை"

"சரிங்க... நான் இப்பவே தகவல் கொடுத்துட்றேன்..."

"ஜாக்கிரதை!"

-ஒருவழியாக பேச்சு முடிந்தது. மொட்டையன் விட்டல்ராவுக்கும் வியர்த்து ஒழுகியிருந்தது. திரும்பவும் பாலிதீன் தாளால் ராஜ்நாராயணின் சூட்கேசை மூடினான். விளக்கை அணைத்தான். மெல்ல வெளியே பார்த்தான். யாருமில்லாததை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

பழையபடி நரை விக்கை எடுத்து மாட்டிக் கொண்டான். வயதும் கூடியது. வெளியே வந்தான். உடம்பிலும் கொஞ்சம் தடுமாற்றத்தைக் கலந்து கொண்டான். வைக்கோல் போரைச் சுற்றியுள்ள பிரம்பு வேலித் தட்டியை மூடிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

✠ ✠ ✠

தாடையை வருடியபடி உட்கார்ந்திருந்தான் ராஜ் நாராயண். மணக்க மணக்க காபியோடு அவனை நெருங்கினாள் சந்திரிகா.

"அம்மாஞ்சி காப்பி..." என்றபடியே நீட்டினாள்.

"தேங்க்யூ..." -வாங்கிக் கொண்டு சூப்பினான். அப்பொழுது பார்த்து ஒரு பூக்குடலையுடன் பாரதி கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். ராஜ்நாராயணைப் பார்த்தும் பார்க்காதவள் போலச் சென்றாள்.

அவனுக்கு ஒருபுறம் அது சிரிப்பையும் வருத்தத்தையும் சேர்த்தே தந்தது. அவள் விலகவும் அத்தை அன்னபூரணி ஒரு ஈரப் புடவையை காயப் போட அவனைத் தாண்டி நடந்தாள்.

"அத்தை..."

"என்னப்பா...?"

"ஏன் இப்படி எல்லாரும் உம்முனு இருக்கேள். நான் ஊருக்குப் போறேன்னா அந்த இன்ஸ்பெக்டர் நீங்க இங்க இருந்துதான் தீரணும்கறார். ஆனா இங்க சுவத்தைப் பாத்துண்டு உக்காந்துண்டுருக்கப் பிடிக்கலை அத்தை..."

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே?"

"நான் ஒரு முடிவு பண்ணியிருக்கேன்..."

"என்னன்னு சொல்?"

"அத்திம்பேர்கிட்ட ஒரு இருநூறு ரூபா பணம் வாங்கித் தாங்கோ. நான் மெட்ராஸ் கிளம்பறேன். என்னால இனிமே ஒரு நாள் இங்க இருக்க முடியாது... என் பொட்டி கிடைச்சா சொல்லி விடுங்கோ... இல்லை அது காணாமப் போனதாவே இருக்கட்டும். நான் டூப்ளி கேட்டுக்கு ஏற்பாடு செய்துக்கறேன். அமெரிக்காவுல என் கம்பெனிக்கும் நான் தகவல் தந்தாகணும்."

"அப்படியே செய்... அத்திம்பேர் கோவில்லதான் இருப்பார். போய் நீயே கேட்டு பணத்தை வாங்கிக் கோயேன்..."

-அன்னபூரணி மறுப்பேதும் சொல்லாமல் அவன் விருப்பத்தை முன்மொழிந்தது அவனை என்னவோ செய்தது.

இந்த ஊரை விட்டே நீ செல்ல முடியாது' என்று தீட்சதர் சொன்னதெல்லாம் அவன் மனதில் சுத்தமாய் நினைவில் இல்லை.

முற்றிலும் தனது எண்ணங்களுக்கும் சிந்தனைக்கும் நேர்மாறான ஒரு களத்தில் தானும் நசுங்கிக் கொண்டு உயிருக்குயிராய் நேசித்த பாரதியே வெறுத்துவிட்ட அளவுக்கு மேலும் நசுங்கிக் கிடப்பதைவிட நடந்தாவது ஊரை விட்டுப் போய் விடுவது நல்லது என்று தீர்மானித்தவன் பட்டரைச் சந்திக்க கோவிலுக்குக் கிளம்பினான்.

நினைப்பதைப் போலவா எல்லாம் நடக்கிறது.

அவன் தலைக்கு மேல் இடிந்த கோவில் கழுகு அவனுக்கு நிழல் தந்தபடி பறக்கத் தொடங்கியிருந்தது தான் ஆச்சரியம்!

30

ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாத பவுர்ணமி யின் போது இந்த உலகில் உள்ள அனைத்து லிங்க சொரூபங்களுக்கும் அன்னாபிஷேகம் செய்யப்படு வது வழக்கம்

பவுர்ணமி என்பது இரவில் ஒளி மிகுந்த நாள். இன்னும் சொல்லப் போனால் சூரியன் பெண் வடிவு கொண்டு சாந்தமாய் வலம் வரும் நாள் என்றும் ஒரு கருத்து உண்டு.

இந்த உலகில் உயிர்கள் ஜீவிக்க சூரிய, சந்திரர்கள் ஒரு பிரதான காரணம். சூரியனே பஞ்ச பூதங்கள் நடுவில் கிரியை புரிந்து நமக்கான அனைத்தையும் பூமியின் துணையோடும், நீரின் தயையோடும் வழங்குபவன். இவன் இருபத்தி நான்கு மணி நேரமும் உதித்தாலும் ஆபத்து, அறவே உதிக்காமல் போனாலும் ஆபத்து. எனவேதான் இரவு பகலை இறைவன் சமமாகப் பங்கிட்டு அதிலும் துவக்கம், உச்சம், அந்திமம் என்கிற மூன்று நிலையினை வைத்து இந்த பூமியை அற்புதமாக இயக்கிக் கொண்டிருக்கிறான்.

பகல் பொழுதில் காலத்தை அறிய வழிவகை இருந்தது. சூரிய ஒளியின் நிழலைக் கொண்டு அப்பொழுதைய காலத்தைக் கணக்கிட்டனர். இதற்காகவே காலக்கழி என்கிற ஒன்று உயரமான கட்டிடத்தின் மேல் நடப்பட்டு அது சூரியனை கிழக்கின் உதிப்பில் இருந்து மேற்கின் மறைவு வரை காணும் விதமாய் அமைக்கப்பட்டிருந்தது. அதில் நிழல் விழும் நீளத்திற்கேற்ப கால நேரங்கள் கணக்கிடப்பட்டன.

இது பகலுக்குச் சரி; இரவில் எதை வைத்து கால நேரத்தை அறிவது? இரவில் இதே போல் நிழல் ஏற்பட வழியில்லையே

அதனாலேயே சந்திரன் மேல் சூரிய ஒளி விழும் விதத்தில் சந்திரன் வளர்ந்து தேயும் ஒரு கிரகமாக ஆக்கப்பட்டு பவுர்ணமி, அமாவாசைகள் அறுதியிடப்பட்டன.

சுருக்கமாய் சொல்லப் போனால் டைடன், டைமெக்ஸ், ஹெச்எம்டி வாட்சுகளுக்கெல்லாம் முன்னோடியாய் சூரிய, சந்திரர்களை இறைவன் எப்பொழுதோ படைத்து முடித்துவிட்டான்.

இதில் ஐப்பசி பவுர்ணமி என்பது மிக விஷேசமான நாள்.

இந்த மாதத்தில் சூரியன், துலாராசியில் நீச்சமாகிறான். அதாவது அவனது ஒரு முழுச் சுற்றில் சரி பாதி தூரத்தில் அவன் திறம் மறைந்து போகிறது. அதேசமயம் பவுர்ணமிக்கு திறம் கூடுகிறது. ஆகவேதான் ஐப்பசி பவுர்ணமி மற்ற பவுர்ணமிகளில் வேறுபடுகிறது.

ஐப்பசி என்பது மழைக்காலமும் கூட... அடைமழை பிடித்தாட்டும் காலம். நிலத்தில் பச்சைகள் துளிர்விடும். பலர் ஒரு போகம் முடித்து அடுத்த போகத்திற்கும் தயாராகிக் கொண்டிருப்பார்கள். இந்த நாளில் சூரியனைவிட சந்திர பலம் அதிகமாயிருக்க அதன் தண்ணொளியில் பயிர்கள் ஊட்டம் பெறுவது ஒரு நிகழ்வு.

அப்படி ஊட்டம் பெற வேண்டிய நமக்கான அன்னத்தை, நமக்கு வழங்கும் ஈசனுக்கு அர்ப்பணம் செய்து அபிஷேகிக்கும் போது ஒவ்வொரு பருக்கையுமே ஒரு லிங்க சொரூபம் ஆகிறது. அதை விநியோகிக்கும்போது ஒவ்வொரு வரும் சிவத்துடன் ஐக்கியமாகிறார்கள்.

வாழும் நாளிலேயே நாமே சிவமாகி பசி எனும் பணியிலிருந்து முற்றிலுமாய் நாமும் நம் சந்ததியினரும் விடுபட இந்த அன்னப்பிரசாதம் துணை செய்கிறது.

பவுர்ணமி ஒளிமிசையால் மூழ்கும் சிவாலயக் கோபுரக் கலசம் அதை அப்படியே கருவறை லிங்கத்தின் மேல் தள்ள லிங்க சொரூபமே ஒரு நிலாத்துண்டாகிக் திகழ்வதாகவும் கூறப்படுகிறது. ஜாதக ரீதியாக சந்திரபலம் குறைந்தவர்கள் சூரியன் நீசனாகப் பெற்றவர்கள் இந்த நாளில் ஈசனை வழிபட்டும், அன்னப் பிரசாதத்தைச் சாப்பிட்டும் பலம் பெறலாம்.

சொல்லப் போனால் அப்படி பலம் பெறவே இப்படி ஒரு ஐதீக நிகழ்வு, சான்றோர்களால் உருவாக்கப்பட்டது.

தெருவில் நடக்கையில் மேலே பறந்த கழுகின் நிழல் ராஜ்நாராயணையும் நிமிர்ந்து பார்க்க வைத்தது. அவனுக்கு ஆச்சரியமாகிப் போனது.

அவன் கோவிலை நெருங்கவும் அதுவும் விலகி இடிந்த கோவில் நோக்கிப் பறந்தது.

கோவில் முகப்பில் நிறைய ஊர்க்காரர்கள்.

புதிதாய் டூரிஸ்ட் பஸ் ஒன்று வந்து நின்ற நிலையில் அதிலிருந்தும் பக்தர்கள்.

எல்லாம் கண்டறியப்பட்ட மரகத நடராஜ விக்ரதகத்தால் வந்த மாற்றம். படுவேகமாய் கோயில் ராஜகோபுரம் முன்னால் நிறைய கடைகளும் முளைத்திருந்தன. இதில் செருப்பு பார்த்துக் கொள்ள ஒருவர் தனியாக அமர்ந்து டோக்கன் போட்டுக் கொண்டிருந்தார்.

ராஜ்நாராயண் தன் செருப்பை விடவும் காசுக்காக கை நீட்டினான்.

"டேய்... அவர்தாண்டா புது சாமியையே கண்டு பிடிச்சவர். அவர்கிட்டையே கை நீட்றியா நீ?"

-பக்கத்து தேங்காய்ப் பழக்கடைக்காரன் ஒரு குரல் கொடுத்ததில் அவன் அடங்கி உடம்பையும் வளைத்து, "நீங்க போங்க சாமி" என்றான்.

ராஜ்நாராயணுக்கு சிரிப்புதான் வந்தது.

"இது என்னப்பா புதுசா இருக்கு? செருப்பு பாத்துக்க காசா?"

"இல்லயா சாமி...? ஒரு செருப்புக்கு ஐம்பது காசு. சைக்கிள், ஸ்கூட்டர்னா ஒரு ரூவா. அர்ச்சனைத் தட்டுக்கு பத்து ரூவா. கார், பஸ் வந்தா அஞ்சு ரூவா..."

"அடி சக்கை... புது டைப் பிசினசா?"

"பொழைக்கணுமே... வயிறு இருக்குதே..."

"அதுக்காக கண்ணை வித்தா சித்திரம் வாங்கு வாங்க..."

"என்ன சாமி சொல்றீங்க...?"

"இதெல்லாம் சர்வீஸ் பண்ணி சமாளிக்க வேண்டிய விஷயங்கள். இதைத் தொழிலாக்கி இதுல காசு பணத்தை நுழைக்கறது நல்லதில்ல..."

"அப்ப கவர்மென்டுகிட்ட சொல்லி எல்லாருக்கும் வேலை தரச் சொல்லுங்க. கோவிலுக்கும் நிறைய உதவி பண்ணச் சொல்லுங்கோ... ஏன்னா கோவில் வரும் படியையே அது வந்து பங்கு போட்டுக்குது. அப்பால எங்களை எல்லாம் இங்க வந்து சர்வீஸ் பண்ணச் சொல்லுங்க செய்யறோம்."

-செருப்புக்காரன் புதிய பொருளாதாரத் தத்துவம் பேசினான் ராஜ்நாராயணும் அதை ரசித்தான்.

அமெரிக்காவில் எல்லாம் இப்படிக் கிடையாது.

அங்கே செருப்புத் திருட்டு, வாகனத் திருட்டெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாத விஷயம். காரணம், அடிப்படைப் பொருளாதாரம் பலம். அதனால அங்குள்ள

சர்ச்சுகளில் பிரார்த்தனைக்குச் செல்பவர்களுக்கு செலவு கிடையாது.

இங்கே குறைந்தது ஒரு ரூபாயாவது இருந்தால்தான் ஆலய தரிசனம் என்றாகிவிட்டது.

எல்லாருக்கும் பொதுவான சாமியையே மையமாக வைத்து சம்பாத்யம்!

'வெரிகுட்... இதை எல்லாம் பார்த்து மனம் நொந்தாவது அந்த சாமி நேரில் வருகிறதா பார்ப்போம்...'

-மனதுக்குள் சொல்லிக் கொண்டே நடந்தான்.

அவனைப் பார்ப்பவர்களில் பலர் பெரிதாகக் கும்பிடு போட்டார்கள். அவனுக்கே என்னவோ போல் இருந்தது. கேட்டால் கடவுளையே கண்டறிந்தவன் என்பார்களோ? இல்லாத ஒருவரை நான் எப்படி கண்டறிய முடியும்? முட்டாள்களா... நான் கண்டுபிடித்தது ஒரு சிலையை... ஃபார்ச்சுனேட்லி அது மரகதக் கல்லாக அமைந்து விட்டது. உலக அளவில் அதற்கு மதிப்பும் அதிகம். பழமை வேறு அதன் மேல் புதைந்து கிடக்கிறது. அதற்காகத்தான் ஒரு கூட்டமே அதைத் திருட அலைந்து கொண்டிருந்தது...

-அவனுக்குள் அவனே கேள்விகேட்டு பதிலையும் சொல்லிக் கொண்டான்.

மரகத நடராஜ விக்கிரகம் இருந்த கல் மண்டபத்தை நாலாபுறமும் பிரம்புத் தட்டி கட்டி அடைத்திருந்தார்கள். சுற்றி நான்கு தூணுக்குக் கீழேயும் தொளதொளவென்ற தோய்த்து உலத்திய தலையணை உறை போன்ற யூனிஃபார்முடன் தொந்தியும், தொப்பையுமாய் சில போலீஸ்காரர்கள். அவர்கள் கையில் ஒரு லட்டிக் கம்பு.

ராஜ்நாராயணுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

இதுவா போலீஸ் காவல் என்கிற கேள்வியும் எழும்பியது. இருந்தும் கூட்டம் அதிகம் இருந்ததால் பெரிதாக பாதிப்பு வராது என்று தோன்றியது.

கூட்டம் இருக்கும்போதே இரண்டே இரண்டு தீவிரவாதிகள் குஜராத் கோவில் ஒன்றில் நுழைந்து நூற்றுக் கணக்கானவர்களைச் சுட்டுத் தள்ளிவிட்டு தாங்களும் இறந்தது ஞாபகம் வந்தது.

மனிதன் மிருகமாகிவிட்டால் எது வேண்டுமானால் நிகழலாம் என்பதுதான் இன்றைய எதார்த்தமோ-சிந்தனையோடு கர்ப்பக்கிரகம் நோக்கி நடந்தான். எதிரில் ஒரு கூடையை சமந்தபடி திருடர்களான ராஜரத்னமும் கடம்பனும வந்து கொண்டிருந்தனர்.

"நீங்களா... இங்கையா?"

"ஆமாம் சாமி. இனிமே இங்கையே எதாச்சும் சாமி வேலை பாத்துகிட்டு காலத்தை ஓட்டிடலாம்னு இருக்கோம். வெளிய போனா எங்களை உயிரோடையும் விடமாட்டாங்க."

-ராஜரத்னம் சொன்னபடி கடம்பனோடு விலகிப் போனான். ராஜ்நாராயணை ஆச்சரியம் போட்டுப் பிசைந்தது.

திருட வந்தவன் சேவகனாகிவிட்டானே...!

அதேசமயம் சேவை செய்ய வேண்டியவர்கள் வெளியே பொருளாதாரம் பேசி திருடிக் கொண்டிருக்கிறார்களே!

இது வேடிக்கையான பூமிதான்!

சிந்தனையோடு நடந்தவனை கல்தூண் ஒன்றின் பின்னால் இருந்து ஒருவர் உற்றுப் பார்த்தபடி இருந்தார். ராஜ்நாராயணும் அவரைப் பார்த்துவிட்டான். வேகமாக அவரை நெருங்கினான்.

"என்ன... எனக்கான ஸ்பையா நீங்க?"

-நேர்கீறலான அந்த கேள்விமுன் அந்த நபரிடமும் தடுமாற்றம்.

"சொல்லுங்க... நீங்க போலீஸ்தானே?"

"ஆமாம சார்... உங்களுக்கு பாதுகாப்பு தரச் சொல்லி எஸ்.பி. ஐயாதான்..."

"பாதுகாக்கறவர் ஏன் ஒளிஞ்சு ஒளிஞ்சு வர்றீங்க, கமான் என் கூடவே வரலாமே..."

-அந்த பதில் அவரை முழிக்க வைத்தது.

"போங்க... என்னைப் பாத்துக்க எனக்குத் தெரியும். ஐ ஆம் நாட் எ வி.ஐ.பி... யூ நோ ஒன்திங்...? ஐ வான்ட் டு கோ பேக் ப்ரம் ஹியர்... ஐ டோன்ட் ஸ்டே ஹியர். இங்க எங்க பார் குழப்பம். பொய் நம்பிக்கை... ஒரு பக்கம் கடவுள் கடவுள்னு கன்னத்துல போட்டுக்கறீங்க... மறுபக்கம் அதே கடவுளை வெச்சு வயித்துப் பொழப்புன்னு பிசினஸ் பண்றீங்க. யாரை யார் ஏமாத்திக்கிறீங்கன்னே தெரியலை. ஆச்சு... ஹைடெக் யுகத்துக்கே வந்தாச்சு. என்ன பிரயோஜனம்? ஃபான்டசியான விஷயங்களை நம்ப முடியாதுதான். ஆனா அதை யாரும் வெறுக்கறதில்லை. காரணம், அதுல ஒரு த்ரில் இருக்கு. பக்தியும் அப்படி நம்ப முடியாத ஒண்ணா இருக்கலாம். தப்பு இல்ல. ஆனா இங்க அதுவே தப்பா இருக்கே.

'தப்பா பண்ண வேண்டியது...

'கேட்டா அதுதான் மனுஷ இயல்புன்னு மழுப்ப வேண்டியது. அப்புறம் சாமிக்கு மணியடிச்சு கற்பூரம் காட்டி கால்ல விழுந்து கும்புட்டுட்டா அவர் மன்னிச்சிட்டார்னு சொல்லிட வேண்டியது.

'திரும்ப தப்பு பண்ணவேண்டியது...

'திரும்ப கால்ல விழ வேண்டியது.

வாட் நான்சென்ஸ் தீஸ் ஆர் ஆல்?"

-ராஜ்நாராயண் வெடித்தான். சிதறினான். எங்கெங்கோ போய் நின்றது அவன் சிந்தனை. அந்த போலீஸ்காரர் நடுங்கிவிட்டார்.

இரண்டு காரணம்... அவன் இப்படி உலுக்கிப் பிடித்தது ஒருபுறம். மறுபுறம் அவன் பார்க்கும்படியாக கண்காணித்தது தெரிந்தால் டிபார்ட்மென்ட்டில் டோஸ் விழுமே என்கிற பயம்

"சாரி சார்... என் ட்யூட்டியை நான் பண்றேன். என்னை தப்பா எடுத்துக்காதீங்க சார்..." -என்று கெஞ்ச ஆரம்பித்தார்.

"அவசியமே இல்லை. நான்தான் சொன்னேனே... நான் ஊருக்கு திரும்பப் போறேன். இங்க கொஞ்ச நாள் இருந்தா என்னையும சாமி ஆக்கிடுவாங்க. இதுல கூட ஒரு கொடுமை என்னன்னா ஜனங்களுக்குத்தான் நான் சாமி. என் அத்திம்பேருக்கு நான் ஒரு நாத்திகன்.

'என்னோட நாத்திகத்துக்குப் பயந்துண்டு அவர் எனக்கு கொடுக்கறதா சொன்ன பொண்ணைக்கூட கொடுக்க மறுக்கிறார். அவ்வளவு ஏன்... என் அத்தை பொண்ணு இதே கோவில்ல நீங்கதான் என் உயிர். போற உயிர் உங்க மடியிலதான் போகணும்னுல்லாம் டயலாக் பேசினா. இப்ப அவளும் ஜூட் விட்றா!

'எனக்கு தெரிஞ்சு பல்டி அடிக்கறதுல இவங்களை மிஞ்ச ஆளே இல்லை.

'பட் ஐ ஆம் எ ஸ்டெடி பர்சன்...

'மித்து, மேஜிக்னு எதுவும் என்னை ஒண்ணும் பண்ணலை. புத்திதான் என் வரைல கடவுள். அண்டர் ஸ்டாண்ட்..."

-ராஜ்நாராயண் சீறிக் கொண்டே போனான். அவர் தலையை உதறிக்கொண்டார்.

"சாரி... வெரி சாரி... நான் உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேன். கொஞ்சம் எக்ஸைட் ஆயிட்டேன். சாரி... வெரி சாரி. ஓ.கே. பை."

-அவரைத் தள்ளியவனாக நடந்தான். முதல் பிரகாரம் சுமாரான இருளில் இருக்க, நேர் நீட்டத்தின் முடிவில் கருவறை.

நடுநாயகமாக லிங்க சொரூபம் ஒரு ரோஜா மாலை யோடு பளிச்சென்று தெரிந்தது. பட்டர் உள்ளே அர்ச்சனை மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். சற்று முன்னால் பாரதி நின்றபடி இருந்தாள். அவளுக்கருகில் பலர்.

அவள் எதிரில் அவரை அழைத்து பணம் கேட்க என்னவோ போல் இருந்தது. சில நொடி தயங்கி நின்றான்.

கூட்டமும் அதிகமாகத் தெரிந்தது... இது குறையட் டும் என்று நினைத்தவன் திரும்பி வெளியே வந்தான்.

மரகத நடராஜர் சிலையைச் சுற்றி நிற்கும் கூட்டத் தைப் பார்த்தபடியே நடந்தான். யாரோ ஒரு கைட் அந்த நடராஜ விக்கிரகம் பற்றி இரண்டு வெள்ளைக் காரர்களி டம் உதார் விட்டுக் கொண்டிருந்தார். அதுவும் பட்லர் இங்கிலீஷில்...

"இது பயங்கர சக்தி உள்ள கடவுள். அப்படியே யாககுண்டம் ஒண்ணுல இருந்து மேல வந்தது. பாலை ஊத்தி சாந்தி செஞ்சாங்க. இதைப் பார்த்துட்டு போனா நினைச்சதெல்லாம் நடக்கும். உங்களுக்கும் பாருங்க இனிமே தொட்டதெல்லாம் ஜெயம்தான்..."

-ராஜ்நாராயணுக்கு எரிச்சலாக வந்தது.

என்ன ஒரு பொய்? அடுத்த நொடி ஆவேசமானான்.

அவர்களிடம் சென்றான். அழகிய அமெரிக்க ஆங்கி லத்தில் அதை தான் எப்படி கண்டுபிடித்தேன் என்பதைக்

கூறியவன் இந்த கைட் புளுகுகிறான் என்றான். அவர்கள் வியந்து போய் அவனை மரகத நடராஜ விக்ரகத்தோடு ஒரு போட்டோ எடுத்துக் கொள்ள பிரியப்பட்டனர்.

அதன்படியே அதனருகில் போய் நிற்க அவர்களும் உரிய கோணம் பார்த்து படம் பிடிக்க முனைந்தனர்.

இதை சற்று தொலைவில் இருந்து இரண்டு நபர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கிழவன் வேடத்தில் இருந்த விட்டல்ராவ் 24 மணி நேர கெடு விதித்து அனுப்பிய ஆட்கள் அவர்கள். அவர்கள் கையில் சயனைட் கலந்த வாழைப்பழமும், தேங்காயும் பிரசாதமாக இருந்தன.

"பாத்தியாடா... அமெரிக்காகாரனே வந்து நிக்க வெச்சு படம் எடுக்கறத... சந்தேகமேயில்ல... இவன் நம்மளையும் மிஞ்சின திருடன்தான்."

"அதான் தெரிஞ்ச விஷயமாச்சே... இப்ப இந்த வாழைப்பழத்தை அவன் சாப்பிடணும். அதுக்கு ஐடியா பண்ணு..."

-ஒருவன் சொல்ல மற்றொருவன் யோசிக்க ராஜ் நாராயணும் அந்த வெள்ளைக்காரர்களிடம் கை குலுக்கி விடை பெற்றவனாய் அந்த இருவரை நோக்கியே நடந்தான்.

31

சிவத் தோற்றத்தில் 'சார்த்தூல ஹர மூர்த்தம்' என்பது மிக நுட்பமான செய்திகளை உடையது.

வனங்களில் மிக விசேஷமானது தாருகாவனம். இதில் சனகாதி முனிவர்கள் தவமியற்றினர்.

நமது வாழ்க்கை இரு விதமானது. ஒன்று இல்லறம் சார்ந்து உயிர் பேணுவது. அதில் அதற்குரிய தர்மங்களைக் கடைபிடித்து மோட்சம் புகலாம். இன்னொன்று தவம் சார்ந்து உயிர் பேணுவது. இதில் ஐம்புலன் சுருக்கினால்தான் உள்ளொளி பெருகும். புலனடக்கம் மிக முக்கியம். புலன்களை அடக்குவது என்பது ஆயிரம் புலிகளை அடக்கிப் பிடிப்பதை விட பெரியது. அசாத்யமான ஒன்று.

கண்ணில் காமம் காணாமல், காதில் மோகம் கேளாமல், நாவில் பல ருசி உணராமல், பேச்சிலும் வன்சொல் கலக்காமல், உண்பதிலும் உப்பு, புளி, காரம் இன்றி தூய்மையுடன் இருந்தாலே உடம்பினுள் ஆன்ம ஒளி ஏற்படும்.

அப்படியும் விசுவாமித்திரனை மேனகை மயக்கி அவரது தவச் சக்தியைச் சிதைத்த கதையை நாம் அறிவோம்.

எனவேதான் புலனடக்கம் புரிபவர்கள் அதற்கு உதவியாக உள்ள வனப்பகுதிக்குச் சென்று ஆசை, பாசம், குரோதம், காமம், சுவைகளைத் தவிர்த்து வாழ்ந்து ஆன்ம ஒளி பெற்றனர்.

அதற்குத் துணை புரியும் வனத்தில் தாருகா வனம் தலைசிறந்தது. அங்கே அப்படித் தவமியற்றிய முனிவர்களுக்கு அனைத்தையும் அடக்கி ஒளி பெற முடிந்தது. அதனாலேயே அவர்களிடம் கர்வமும் துளிர்த்தது.

குறிப்பாக வேதம் கூறும்படி வேள்விகள் செய்து புலனடக்கம் மேற்கொண்டு ஆன்ம ஒளி பெற்றவர்கள் தங்களையே இறைவனாகக் கருதும் ஒரு நிலை வந்துவிட்டது.

இது மிக விபரீதம்!

'பெரிதிற்கழகு பணிதல். சிறுமையாய் தன்னை உணர்தல்' என்பது மரபு. ஆங்காரம் ஏற்படவும், அதை அடக்க வேண்டிய, அழிக்கவேண்டிய ஒரு நிலை சிவனுக்கு ஏற்பட்டது.

எனவே திருமாலைப் பெண்ணாக்கி தன்னையும் பிட்சாடனராக்கிக் கொண்டு வனம் புகுந்து புலனடக்கிய ரிஷிகள் முன்னால் மாயையை உருவாக்கிட அவர்கள் அதில் வீழ்ந்து தங்கள் ஒளியைத் தொலைத்தனர்.

இந்நிலையிலும் தங்களது உறுதிப்பாடும், ஒளியும் கர்வத்தால் கரைந்ததை உணராமல் அதற்குக் காரணம் சிவனும் மாலும் புரிந்த நாடகம் என்று அறிந்து கோபம் கொண்டு எஞ்சியுள்ள தங்கள் தவபலத்தால் வேள்வி செய்து அதன் நோக்கமே சிவத்தை அழிப்பதுதான் என்றனர்.

இதில் தாருகாவனத்து ரிஷிகள் இறுதியாக ஏவிய அஸ்திரம் புலியாகும். சிவமாகிய இறைவன் அதையும் சம்காரம் செய்து அந்த புலியின் தோலினை ஆடையாகப் போற்றிக் கொண்டு காட்சி தந்த கோலமே சார்த்தூல ஹர மூர்த்தமாகும்.

இது புராணச்செய்தி. இதை கூர்ந்து பார்த்தால் இதில் வேறு ஒரு செய்தியும் தெரிய வரும். காட்டு மிருகமான சிங்கமும் புலியும் இறைச்சியை உணவாகக் கொண்டவை. அனைத்து உயிர்களுக்கும் உணவளிக்கும் ஈசனின் கருணைப்படி பார்த்தால் அந்த விலங்குகள் மான் போன்ற மற்ற மிருகங்களைச் சம்கரித்தே வாழ வேண்டும். அதாவது கருணை என்னும் விஷயமே இந்த உயிர்களிடம் கிடையாது. அது இருந்தால் இவை அழிய நேரும். ஆயினும் இவையும் தங்கள் குட்டிகளிடம் கருணை காட்டி அன்பு செலுத்தும். தன் இனத்திடம் அன்பு காட்டும். தன் இனம் நீங்களாக மற்றவைகளை இது அழித்து தன்னுள் உணவாக்கிக் கொள்ளும்

என்ன ஒரு விந்தை?

கருணையில்லாத மிருகத்துக்குள் மற்றவை அடங்க, அது தன் வடிவான இனத்திடம் கருணை செய்கிறது. அப்படி புலிக்கும் சிங்கத்துக்கும் உணவாகும் உயிர்களும்கூட இறந்து உணவாகும்

முன்வரை எந்தவித துன்பமுமில்லாத உழைப்பு மில்லாத ஒரு ஏகாந்த வாழ்க்கையே வாழ்கின்றன.

ஏகாந்த வாழ்வின் முடிவு இப்படி குரூரமான ஒன்றில் ஒடுங்குதல் என்பதே செய்தி. உலக வாழ்வில் ஏகாந்தம் தரும் அவ்வளவிற்கும் இது பொருந்தும். அவை வலிய ஒன்றின் பசிக்கு இரையாகும். அதனால் வலி மிகுந்த ஒன்று வாழ நேரும். தாருகாவன முனிவர்களுக்கு இதை நுட்பமாய் உணர்த்தும் விதத்தில் செயல்பட்ட ஈசனின் திருவிளையாட்டில்தான் எத்தனை நுட்பம்!

ராஜ்நாராயண் சயனைட் வாழைப்பழத்துடன் நிற்பவர்களை நோக்கி நடக்க, அவர்களும் அவனை எதிர்கொள்ளத் தயாராயினர். அவன் கிட்டே வரவும் மெரிதாக சிரித்தனர். பதிலுக்கு ராஜ்நாராயணும் சிரித்தான்.

“நீங்கதானே சார் அந்த நடராஜ மூர்த்தியைக் கண்டுபிடிச்சது?”

-ஒருவன் பேச்சைத் தொடங்கினான்.

“தப்பா சொல்றீங்க... அதுதான் என் கிட்ட வந்து மாட்டிச்சு...” -ராஜ்நாராயணும் சாமர்த்தியமாகப் பதிலளித்தான்.

“ரொம்ப குறும்பா பதில் சொல்றீங்க சார்...” என்று இருவரும் திரும்பவும் சிரித்தனர். அப்படியே வாழைப் பழத்தில் இரண்டை எடுத்து அவனிடம் நீட்டினர்.

“எதுக்கு...?”

“சும்மா சாப்பிடுங்க. சாமி பிரசாதம்.”

“சாரி... எனக்கு பிரசாதத்துல எல்லாம் நம்பிக்கை கிடையாது. அதோட இப்ப நான் எதையும் சாப்பிட்ற மூட்லையும் இல்லை.”

"என்ன சார். அன்பா கொடுத்தா இப்படி சொல்றீங்க? உங்க அமெரிக்காவுல கர்ட்டசியை ரொம்ப மதிப்பாங்களாமே. நீங்க என்னடான்னா...?"

-அவன் நடக்க பேச்சோடு தொடர்ந்தனர்.

வெளிப்பிரகார வெளியில் அவ்வளவாக யாரும் இல்லை. ராஜ்நாராயணும் பிரசாதத்தை வாங்கி சாப்பிட்டு விட்டு நெஞ்சைப் பிடித்துக் கொண்டால் ஒரே ஓட்டமாக ஓடிவிடலாம்தான்...

ராஜ்நாராயண் வேறு வழியில்லாமல், "சரி தாங்க..." என்று வாங்கிக் கொண்டான்.

அப்படியே கையில் வைத்துக் கொண்டு தொடர்ந்து வந்தான். அவர்களுக்கும் அதற்கு மேல் அவனை வலியுறுத்திச் சாப்பிட வைக்க வழி தெரியவில்லை.

விலகுவது போல விலகி ஒரு ஓரமாய் சென்று நின்று கொண்டு கவனிக்க ஆரம்பித்தார்கள். தொடக்கத்தில் இருந்தே அவனை நோட்டம் போட்டுக் கொண்டிருந்த போலீஸ்காரரும் அவனுக்குத் தெரியாமல் நைசாகப் பின் தொடர்ந்தார்.

ஒரு நல்ல பட்டப் பகல் பொழுதில் ஆர அமர நடந்தபடி கோயில் சிற்பங்களைப் பார்ப்பது அவனுக்குப் பிடித்த ஒன்றாகவே இருந்தது.

நடுநடுவே மணிசப்தம் கேட்டபடி இருந்தது.

சன்னதிக்குள் பட்டர் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் அர்ச்சிப்பதை நினைத்துப் பார்த்தான். மீண்டும் சிரிப்ப வந்தது.

ஆட்டுக்கல் போல் ஒரு கல்! அதன் மேல்தான் இந்த ஜனங்களுக்கு எத்தனை பக்தி-அன்பு! இதில் நூற்றில் ஒரு பங்கை தன் சக மனிதனிடம் காட்டினால்கூட போதுமே, வாழ்க்கையே வசந்த மயமாகிவிடுமே.

கண் எதிரில் நடமாடும் உயிர்களிடம் பெரிய பிரேமை இல்லை. ஆனால் ஒரு கல்லிடம் தாளமுடியாத பிரேமை. பிரேமை என்பதுகூட பொய், பயம்!

இந்தக் கல்லுக்கு ஆகாசத்தில் ஒரு உலகம் இருக்கறதாம். அங்கிருந்தபடியே கோடானு கோடி பேரையும் அது சூப்ரவைஸ் செய்கிறதாம்.

is it possible?

போதாக்குறைக்கு தலை எழுத்து என்று ஒரு நம்பிக்கை. ஒவ்வொருவர் தலையிலும் மொத்த ஆயுட் காலத்திற்கும் நடக்க வேண்டியதை எழுதி அனுப்ப வேண்டிய அவசியம்தான் அந்த கடவுளுக்கு என்ன?

என்ன ஒரு முட்டாள்தனமான நடை முறைச் சாத்யமில்லாத சிஸ்டம் இது!

ஏன் பகுத்துப் பார்த்து யோசிக்கமாட்டேன் என்கிறார்கள்?

அவன் புத்தி பாட்டும் ஜிகுஜிகுவென்று ஒரு ரயில் இன்ஜின் கணக்காய் கேள்வியும் பதிலுமாய் ஓடிக் கொண்டேயிருக்க அந்த சப்த கன்னியர் குகைக்கோயிலும் ஒரு முனையில் அவன் எதிரில் வந்தது. கையில் சயனைட் வாழைப்பழம் கனத்தது. முன்பு ராத்திரியில் பார்த்தபோது எங்கிருந்தோ ஒரு பாம்பு வந்தது. அது அகஸ்மாத்தாகத் தான் வந்திருக்கும். விளக்கெரிந்ததுதான் ஆச்சரியம். அது அனேகமாய் யாராவது செய்யும் திருவிளையாட்டாகத்தான் இருக்க வேண்டும்.

சிந்தனையுடன் குனிந்து உள்ளே எட்டிப் பார்த்தான். ஏனோ அந்த வாழைப்பழங்கள் இரண்டும் அவனைச் சாப்பிடத் தூண்டாமல் கையில் கசகசத்தன.

தூக்கி எறியவும் மனது வரவில்லை.

இரண்டு பழங்கள் பழுக்க எத்தனை நாள் தேவைப் பட்டிருக்கும்? ஒரு வாழைமரம் மனிதனின் பசிக்காக

சூரியனோடு குலாவி இனிக்க இனிக்க சமைத்துத் தரும் ஒரு அற்புதம்தான் இந்த பழம்.

இதை தூக்கி எறிவது அகங்காரம்.

ஒன்று நாம் சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் யாருக்காவது கொடுக்க வேண்டும். யாருக்குக் கொடுக் கலாம்...? சுற்றி ஒரு பார்வை பார்த்தான்.

அந்த கல்லுளிமங்கர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டு நிற்கிற மாதிரி பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

அந்த போலீஸ்காரர் வேறு ஒரு கல்தூணாய் பார்த்து சாய்ந்து நின்று கொண்டார். 'சரியான திராபை பிடிச்ச வேலைப்பா இது' என்று தனக்குள் முனங்கியும் கொண்டார். ராஜ்நாராயணுக்கு... என்ன தோன்றியதோ! உரித்து சாப்பிட்டு விடுவது என்று தோலை உரிக்க ஆரம்பித்தான்.

டார்கெட் ஃபிக்ஸ் செய்தவர்களிடமும் டென்ஷன் தொற்றிக் கொண்டது.

உரித்த பழத்தை வாயில் வைக்கப் போனதுதான் தாமதம். எங்கிருந்தே சரேலென்று பறந்து வந்தது அந்த கோயில் கழுகு.

தன் கடகக் கால்களால் அந்த பழத்தை அப்படியே கவ்விக் கொண்டு சிறகால் அவன் தலை மேலும் ஒரு தட்டு தட்டியபடி மேலேறிப் பறந்தது.

குரங்குகள் இப்படி மனிதர்கள் பழத்தை உரிக்கும் போது பார்த்துவிட்டால் ஓடி வரும்.

இங்கே கழுகு!

அவனுக்குப் புரிந்துவிட்டது-

அந்தக் கழுகும் பறந்து அருகில் உள்ள கோபுரச் சருக்கத்தில் போய் அமர்ந்து கொண்டு பார்த்தது.

ராஜ்நாராயண் அது தன் பசிக்காகத்தான் அப்படிச் செய்ததாக நினைத்தவன் அடுத்த பழத்தையும் அப்படியே அதை நோக்கி தூக்கி எறிந்தான். அதை கோபுரக் குரங்கு ஒன்று பார்த்து விட்டு வந்து தான் எடுத்துக் கொண்டது.

"ரைட்... இரண்டு பேர்ல யார் சாப்பிட்டாலும் எனக்கு ஓ.கே என்று சப்தம் போட்டுச் சொன்னவன் திரும்பி தனக்கு அதைத் தந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் தோல்வியோடு வேகமாக திரும்பி நடக்க ஆரம்பித் திருந்தார்கள்.

போலீஸ்காரர் மட்டும் பார்த்துக் கொண்டேயிருந்தார். ராஜ்நாராயணும் நிம்மதியாக சப்த கன்னியர் குகைக் கோவிலுக்குள் நுழைந்து உள்ளே பார்த்தான்.

கும்மென்ற இருட்டு!

ஒரு விளக்கு கூட எரியவில்லை. வவ்வால் தேங்கியிருக்கும் கசட்டு நாற்றம். மூக்கைச் சிலுப்பிக் கொண்டான். வெளியில் வந்தான். பாரதி கையில் பிரசாத தட்டுடன் பிரதட்சண வலம் வந்து கொண் டிருந்தாள். அவனை அங்கே பார்க்கவும் தயங்கி நின்றாள். அவன் அவளை நெருங்கினான்.

"என்ன உள்ற ஆராய்ச்சி?"

"சும்மா எட்டிப் பார்த்தேன்."

"சும்மா என்ன பார்வை..."

"பின்ன என்ன காசு கொடுத்துட்டா பார்ப்பா..."

"இந்த குறும்புக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை."

"ஆமா ஏன் இப்படி திடீர்னு இந்த சீறு சீற்றே...?"

"பேசாதேள்... எனக்கு அழுகை அழுகையா வர்றது."

"கவலைப்படாதே... ஊருக்கு கிளம்பிண்டிருக்கேன். உன் அப்பாகிட்ட சொல்லிட்டு பணம் வாங்கிண்டு போகத்தான் வந்தேன்."

"இப்படி எல்லாம் சொன்னா எனக்கு உங்க மேல இருக்கற கோபம் குறைஞ்சுடும்னு நினைக்கறேளா..."

"பைத்தியமே... நான் சீரியசா சொல்றேன். இந்த ஊர்ல இன்னும் நாலு நாள் இருந்தேன். நான் பைத்திய மாயிடுவேன்."

"இப்ப மட்டும் என்னவாம்...? கேட்டபடி நடந்தாள்.

"வெச்சுக்கோ... இப்ப கூட நான் உன் முன்னால ஒரு பைத்தியம்தான்..." -அவனும் தொடர்ந்து கொண்டே பதில் அளித்தான். பிரகார பாதை வளைந்து திரும்பியது. அந்த ஒடுக்கில் பிரகாரச் சுவரில் ஒரு அரசஞ்செடி.

"நீங்க கோவிலை பாத்துக்கற லட்சணத்தைப் பார்... தரைல வளர வேண்டியது சுவத்துல வளர்றது..." - சொல்லிக் கொண்டே அருகில் சென்று அதை பிடுங்கப் போனான்.

அந்த கற்சுவர் சதுரம் ஒன்றில் ஏதோ கல்வெட்டு எழுத்துக்கள்.

எதார்த்தமாக படித்தவனுக்கு தலையைச் சுற்றியது.

'உள்ளுக்குள் உள்ளது நம் உள்ளத்தில் உள்ளது.
உள்ளதை உள்ளபடி உணர்ந்து எடுக்க
உள்ளங்கை கொள்ளுமே சிவம்!'

என்ன பொருள் இதற்கு?

32

'உலகானது பஞ்சபூதங்களால் ஆனது. இதில் வாழும் நாமும் ஒரு பஞ்சபூத சேர்க்கைதான்.

நமது உடலிலும் நீர், நெருப்பு, ஆகாயம், காற்று, நிலம் ஆகிய அம்சங்கள் உள்ளன.

அதன் கலவைதான் நாம். இதை யோசித்த புருஷர்கள் 'அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளது. பிண்டத்தில் உள்ளதே அண்டத்தில் உள்ளது' என்றனர்.

இப்படி பஞ்சபூதச் சேர்க்கையான நமக்குப் பிரதானம் இரண்டு.

ஒன்று ஒலி!

அடுத்தது ஒளி!

விஞ்ஞானிகள் ஒலியைவிட ஒளி வேகமானது என்று கண்டறிந்துள்ளனர். ஒலியோ, ஒளியோ இல்லாவிட்டால் உயிரியக்கம் ஸ்தம்பித்து விடும்.

இதிலும் மனிதனுக்கு ஒளியை விட ஒலியே பிரதானமாகிறது. ஒலிதான் சப்தம். இதில் உள்ளதே மொழி. மொழி இல்லாத மனிதனால் எப்படி உணர்வுகளைப் பிறருக்கு புரிய வைக்க முடியும்?

இந்த உலகில் எண்ணிறந்த மொழிகள்.

மனிதன் தான் வாழும் சூழ்நிலைக்கேற்ப, அந்த மண்ணின் குணநிலைக்கேற்ப தனக்கான மொழியை உருவாக்கிக்கொண்டான்.

அதைப் பாதுகாக்க எழுத்தைக் கண்டுபிடித்து அதை அதனுள் நிலைநிறுத்தினான். அப்படியும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு மொழியோ, எழுத்தோ இல்லாமல் போய்விட்டது.

மனிதன் தன் உணர்வைக் காத்துக் கொள்ளப் பயன்படும் மொழி வேண்டுமானால் பல நூறு இருக்கலாம். ஆனால் இறைவன் ஒருவன்தானே? ஒரு குழந்தையை இரு தாயார் பெற்றெடுக்க முடியும்?

அதேபோல இந்த உலகையும் பல கடவுள்களா படைத்திருக்க முடியும்?

இதிலிருந்து ஒருவனே இறைவன் என்பது ஊர்ஜிதமாகிறது. இந்த இறைவனுக்கு நாம் பேசும் பலநூறு மொழிகள் தெரிந்தாலும் புரிந்தாலும்

அவனை நாம் புரிய துணை செய்வது ஒரு மொழி யும் அதன் மூலமும்தான். நாம் பேசும் பல மொழிகள் இந்த மூலத்திலிருந்து வந்ததுதான்.

இதிலிருந்தே பலநூறு மொழிகளும் அதன் எழுத்துக்களும் தோன்றின.

இந்த மொழிகள் என்னும் சப்தத்தில் அந்த மூலத்தாயான இறைவனை நமக்கு உணர்த்தும் சப்தம் எது தெரியுமா?

அதைத்தான் பிரணவம் என்னும் 'ஓம்' என்கிறோம்.

இதை உச்சரிக்கும்போது விரிந்து சுருங்கும் ஒரு உணர்வை நாம் அனுபவிக்க முடியும்.

இதை உணர்த்தும் விதமாய் கணபதியை நமது புராணங்கள் சுட்டுகின்றன. கூர்ந்து பாருங்கள். விலங்குகளில் பெரியது யானை... இதற்கு பார்க்கும் கண்கள் மிகச் சிறியன. ஆனால் கேட்கும் காது மிகப்பெரியது. கேட்டல் பெரிது என்று மறைமுக மாக இது கூறுகிறது. இத்தனை பெரிய மிருகத் திற்கு அதன் சரீரத்தைத் தாங்கும் விதமாய் நான்கு பருத்த கால்கள். அதை நான்கு வேதங்களாய் கொள்ளலாம்.

ஒரு சிங்கம், புலி போல இதற்கு முகத்தில் வாயைப் படைக்காமல் தும்பிக்கையைப் படைத் ததையும் யோசிக்க வேண்டும்.

நீண்ட அந்த தும்பிக்கையும் ஒரு குழாய் போல காற்றையும் நீரையும் உறிஞ்சும் விதமாய் இருப்பதிலும் நுட்பம் உள்ளது.

பருத்த அதன் தேகத்திற்குத் தேவையான சக்தியை வழங்க நீரை உட்கொள்ளும் வாயாகவும், காற்றை உட்செலுத்தும் மூக்காகவும், உணவைச் சாப்பிடப் பயன்படும் கையாகவும் ஒரு தும்பிக் கையையே அது கொண்டிருக்கிறது.

மூன்று பிரதானங்கள் இங்கே ஒரு உறுப்பில் நிகழ்கின்றன... ஒரு ஆச்சரியம் பாருங்கள். பார்க்கும் விழி சிறியது... மற்ற பிரதானங்களும் கூட ஒரு உறுப்பில் அடங்கி விடுகின்றன. ஆனால், கேட்கும் காது மட்டும் பெரிதாய்...

இது பிரணவமே பெரிது... அதைக் கேட்பதிலும், அந்தச் சப்தத்தில் அமிழ்ந்து அதை புரிவதிலுமே உயிர்களின் மோட்சகதி உள்ளது என்பதை அல்லவா சொல்லாமல் சொல்கிறது.

இந்த பிரணவத்தை, இதன் சொரூபமான கணபதியை நினைவால் சிவத்தோடும், உருவால் தன் மேனிப் புறத்தோடும் சேர்த்து ஜனிக்கிறாள் அன்னை உமை.

தனக்கான (மோட்சகதி) துவாரபாலகனாகவும் பணிக்கிறாள். அந்தப் பணியைப் புரிகையில் பார்வதி யைக் காண வரும் சிவபிரானைக்கூட இந்த கணபதி அனுமதிக்காமல் தந்தையுடனேயே யுத்தம் புரிகிறான்.

எல்லாம் அறிந்த சிவமும் மகனுடன் யுத்தம் புரிந்து நிற்க, உமை வந்து வெற்றி தோல்வி இன்றி சமன் செய்கிறாள். பின்னர் உயிர்கள் முக்தி பெறவும் மனிதர்கள் தான் யார் என்பது முதல் சகலத்தையும் அறியவும் காரணகர்த்தாவான கணபதியைத் தொழுவதிலேயே அனைத்தும் உள்ளது என்பதைப் புரிய வைக்க சிவமே கணபதியை வணங்கி வழிகாட்டுகிறது.

இப்படி வணங்குவதால் சிவம் தாழ்கிறது, கணபதி உயர்கிறான் என்று பொருள் கொள்ளாமல், ஒரு நல்ல நெறியை உலகுக்குப் போதிப்பவர் முதலில் அதன் வழி நடந்து காட்டுபவராக இருக்க வேண்டியது போல சிவமும் இங்கே இறையை அறியும் பிரணவமாம் கணபதியை உய்த்துணருங் கள்- உள்ளொளி நிச்சயம் என்பதை நமக்கு உணர்த்த கணபதியை வணங்குகிறது.

வணங்கி வழிகாட்டுதல் எத்தனை உயரிய செயல். இதை உணர்ந்த நிலையில் ஒரு யானையைப் பாருங்கள். தீவிரமாக யோசியுங்கள். ஓம் என்றும் இடைவிடாது சொல்லிப்பாருங்கள்.

புதுப் புது சிந்தனைகளும் அதன் காரணமாய் புரிதல்களும் ஏற்படக் காணலாம்.'

ராஜ்நாராயண் அந்த சுவற்றுக் கல்லில் தெரிந்த எழுத்துக்களை மீண்டும் ஒரு முறை ஊன்றிப் படித்தான். பாரதியும்கூட பார்த்தாள்.

'உள்ளுக்குள் உள்ளது... நம்
உள்ளத்தில் உள்ளது!
உள்ளதை உள்ளபடி உணர்ந்து எடுக்க
உள்ளங்கை கொள்ளுமே சிவம்!'

-அந்த பாடல் வரிகள் போன்ற எழுத்தை உரக்க முணு முணுத்தான் ராஜ்நாராயண். பாரதியின் காதிலும் விழுந்தது.

"பாத்தியா பாரதி... இந்த அரசங்கன்றைப் பிடுங்க லாம்னு வந்தா இங்கையும் ஒரு கல்வெட்டுப் பாட்டு. அந்த காலத்துல கல் கிடைச்சா போறும், காகிதத்தில் எழுதற மாதிரி எதையாவது பொறிச்சு வெச்சுட்றா... எல்லாம் பேப்பரும் பேனாவும் இல்லாததால வந்த வினை..."

-சொல்லிக் கொண்டே அரசஞ் செடியைப் பிடுங்கி எறிந்தான். அதுவும் ஒரு கை நுழையும் துவாரத்தை உருவாக்கியபடி பொலபொலவென்று மண் கட்டிகளோடு வந்து விழுந்தது.

"இந்த இடத்தை உங்கப்பாகிட்ட சொல்லி பூசச் சொல்லணும். விட்டா அப்படியே பெரிசாகி மழைத் தண்ணி இறங்கி சுவரே ஒருநாள் விழுந்துடும். என்ன சொல்றே?" -திரும்பவும் நடந்தவனாய் பாரதியிடம் கேட்டான்.

"ரொம்பதான் இந்த கோவில்மேல உங்களுக்கு அக்கறை?" -என்று சற்று சிணுங்கிக் கொண்டாள் அவள்.

"பைத்தியம்... நான் கோவில்ங்கறதால இப்படிச் சொல்லலை. இது உங்காத்து காம்பவுண்ட் வாலா இருந்தாலும் இதான் என் கருத்து. ஆனா சுவாமி பூதம்னு விழுந்து விழுந்து சேவிக்கற உங்களுக்கு இந்த மாதிரி அழிவு பத்தி எல்லாம் அக்கறையே கிடையாது. இருந்திருந்தா இப்படி மதில் சுவர்ல ஒரு அரசஞ் செடியை முளைக்க விடுவேளா?" -அவன் கேள்வியின் நியாயம் அவளைக் கொஞ்சம் குத்தியது.

"உங்களுக்கு கடவுளைக் கூட சவுகர்யமா நாலு பேர் வந்துட்டு போற இடத்துல பார்த்தாதான் மனசு நிறையும். எல்லா இடத்துலையும் கடவுள் இருக்கான்னு சொல்வேள். ஆனா அந்த கடவுள் இடிஞ்ச கோவில்ல இல்லைன்னு நினைச்சுண்டு இந்த கோவிலுக்குத்தான் வருவேள்.

"பெரிய பங்களாவுல இருக்கற பணக்காரன் மாதிரி கடவுளும் நல்ல வசதியான கோவில்ல இருக்கணும் இல்ல" மீண்டும் அவனிடம் எள்ளல்.

"போறும்... எதுடா சாக்குன்னு ஆகாத்யம் பேசாதேள். நம்பிக்கை இல்லாத உங்களுக்கு ஆன்மீகம் பத்தி பேச உரிமை கிடையாது..."

"அட்றா சக்கைன்னானாம். அப்படின்னா நாத்திகத்தைக் குறை சொல்ற உரிமையும் உனக்குக் கிடையாது. அதை தெரிஞ்சுக்கோ..." -அவனது முத்தாய்ப்பான பதிலைத் தொடர்ந்து பிரகாரமும் முற்றுப் பெற்று கோவில் முன்புறம் வந்தது. சற்று தொலைவில் கோபுரத்தின் அடியில் ஒரே கூட்டம். அதே சமயம் ஒளிந்து ஒளிந்து அவனை நோட் செய்து கொண்டிருந்த போலீஸ்காரர் அவனை நோக்கி ஓடி வந்தார்.

"சார்... பெரிய ஆபத்துல இருந்து நீங்க இப்ப தப்பிச்சிருக்கீங்க சார்... நல்ல வேளை. என் வேலையும் போகத் தெரிஞ்சிச்சு. அந்த இடிஞ்ச கோவில் கழுகு புண்ணியத்துல தப்பிச்சுகிட்டேன்..." -என்று பரபரத்தார்.

"என்னய்யா சொல்றீங்க?"

"உங்ககிட்ட இருந்த வாழைப்பழங்களை கழுகு கவ்விகிட்டு போச்சுதானே?"

"ஆமாம்..."

"அதுல ஒண்ணை ஒரு குரங்குக்கு தூக்கிப் போட்டீங்களா?"

"ஆமாம்... அதுக்கென்ன?"

"அதுல விஷம் இருந்துருக்கு. உங்களுக்கு அதைக் கொடுத்தவங்க உங்களைக் கொல்ல குறி வெச்சு வந்தவங்க. அந்த வாழைப்பழத்தைச் சாப்பிட்ட குரங்கு அடுத்த இரண்டாவது நிமிஷம் செத்து கோபுரத்துல இருந்து கீழே பிணமா விழுந்துடிச்சு" போலீஸ்காரரின் விளக்கம் ராஜ்நாராயண் இதயத்தில் திம்மென்று ஒரு குத்து குத்தியது.

வெகுவேகமாக கூட்டத்தை நோக்கி ஓடினான். பரிதாபமாகச் செத்துக் கிடந்தது குரங்கு.

ஓ!

அவனுக்கும் நெஞ்சையடைத்தது.

அப்படியே அண்ணாந்து கோபுரத்தைப் பார்த்தான். அந்த கழுகு கூர்மையாக பார்த்தபடி அமர்ந்திருந்தது. பட்டரும் வந்திருந்தார். போலீஸ்காரரும் அருகில் இருந்தார்.

பாரதிக்கு ஒரு ஷணம் வெலவெலப்பு தட்டி உடம்பு நடுங்கியது.

"என்ன சார் நீங்க... இவ்வளவு சொல்ற நீங்க அவங்களைப் பிடிக்கறதுக்கென்ன... அதை விட்டுட்டு

இங்க என்ன பண்றீங்க?" அவரிடம் கோபத்தோடு குமுறினாள்.

"விடுவேனாம்மா... நான் சந்தேகப்பட்டு அவங்கள ஃபாலோ பண்ணினேன். ஆனா அவங்க ஒரு வேன்ல ஏறிப் பறந்துட்டாங்க. நான் எங்க டிபார்ட்மென்ட்டுக்கு தகவல் தந்துருக்கேன்.

"நிச்சயம் அவங்களை பிடிச்சிடுவாங்க. நூறு மைல் வேகத்துல போனாலும் இந்த நொடி பத்து பதினைஞ்சு மைல் கூட போக முடியாது அவங்க. நீங்க வேணா பாருங்க... அவங்கள நிச்சயம் எங்க டிபார்ட்மென்ட் பிடிச்சிடும்" -அவர் பதிலில் நம்பிக்கை மின்னியது

ராஜ்நாராயண் காதில் அதெல்லாம் விழவேயில்லை. எதற்கு என்னை இப்படி குறி வைத்து துரத்துகிறார்கள் என்கிற கேள்வியும் அதன் கடைச்சலும் அவனுக்குள் பிரதானமாகிவிட்டன.

பட்டர் அவனை கலக்கத்துடன் பார்த்தார்.

"இப்ப நீ எதுக்கு கோவிலுக்கு வந்தே?" -கேட்டார்.

"உங்கள பார்க்கத்தான்..."

"என்ன விஷயம்?"

"நான் ஊருக்கு கிளம்பிப் போக முடிவு செய்திட்டேன். அத்தைகிட்ட பணம் கேட்டேன். உங்ககிட்ட வாங்கிக்க சொன்னா. ஒரு இருநூறு ரூபா வேணும். அதுக்காகத்தான் வந்தேன்."

"ஈஸ்வரா... நேரா என்னண்ட வராம யாரோ தந்த வாழைப்பழத்தை எல்லாம் வாங்கிண்டா என்ன அர்த்தம்?"

"நான் எங்க வாங்கிண்டேன். அவாதான் விடாம வற்புறுத்தித் தந்தா... தந்த அதையும் கழுகு தட்டி விட்டுடுத்து..."

"ஈஸ்வரா... அந்த கழுகு மட்டும் தட்டி விடலைன்னா இப்ப உன் கதி என்னாயிருக்கும்... உனக்கு ஸ்வாமி மேல அக்கறை இல்லைன்னாலும் அவருக்கு உன் மேல எவ்வளவு அக்கறை. ஈஸ்வரா..."

பட்டர் சிலிர்த்துப்போனார். கோபுரத்தை அண்ணாந்து பார்த்து அங்கு அமர்ந்திருந்த கழுகைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டார்.

"ஆமாம் தம்பி... அது சாமி கழுகுங்கறது உண்மை தான். எனக்கே நினைச்சா உடம்பெல்லாம் சிலிர்க்குது." -போலீஸ்காரரும் பட்டர் கருத்தோடு சேர்ந்து கொண்டார்.

ராஜ்நாராயண் எதுவும் பேசாமல் வெறித்தான்.

"இவர் இதைக் கூட தற்செயல்... கழுகு-குரங்குன்னா சாப்பிட்ற ஐட்டத்தைப் பிடுங்கத்தான் பார்க்கும்னு சைன்ஸ் பேசுவார்.

"ஒருக்கால் அந்த சிவனே நேர்ல சூலாயுதத்தோட வந்தாலும் நம்பாம அவரை மேக்கப் போட்டுண்டு வந்துருக்கற நடிகர்னு சொல்வார். இவரண்ட போய் பேசிண்டு..." பாரதி குறுக்கில் தன் கோபக் கணைகளை இதுதான் சந்தர்ப்பம் என்று பாய்ச்சினாள்.

ராஜ்நாராயண் எதுவுமே பேசாமல் போய் ஒரு இடத்தில் அமர்ந்தான்.

உண்மையில் கடவுள்தான் தன்னைக் காப்பாற்றி னாரா... இல்லை ஒரு தற்செயலை இவர்கள் கடவுள் செயல் என்கிறார்களா?

எதற்காக அந்த கடவுள் இப்படி ஒளிந்து ஒளிந்து காப்பாற்ற வேண்டும்?

கேள்விகளில் விழுந்து தலையை சிலிர்ப்பிக் கொண்டான்.

அவ்வளவையும் அந்தக் கூட்டத்தில் கிழவன் வேடத் தில் இருந்த விட்டல்ராவ் என்கிறவனும் பார்த்துக்

கொண்டுதான் இருந்தான்.

அவன் நினைபபெல்லாம் சொதப்பி விட்டு ஓடிவிட்ட அந்த இருவர் மேலேயே இருந்தது. அவர்களை போலீஸ் பிடித்து விடுமோ?

அவனுக்குள் சந்தேகக் குமுறல்!

✠ ✠ ✠

அந்த வேனை திருவாரூர் ரோட்டிலேயே போலீஸ் ஜீப்பில் வந்தவர்கள் பார்த்துவிட்டனர். துரத்தல் ஆரம்ப மாகியது.

அவர்களும் அசுரவேகம் காட்டினர்.

கோவிலுக்கு சாமி கும்பிட வந்தவர்களின் வேன் டிரைவர் வேனுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான். ஒரே தாவாய் ஏறி கிளப்பிக் கொண்டு வந்துவிட்டார்கள்.

பழைய வண்டி.

ஆக்சிலேட்டரை மிதிப்பதே பெரும்பாடாக இருந்தது.

"டேய்... இந்த வேன்ல நாம ஓடித்தப்பறது சாத்யம் இல்ல... அப்படியே எங்கையாவது ஓரம் கட்டி நிறத்தி விட்டு இறங்கி ஓடித் தப்பிப்போம். போலீஸ் நம்மைப் பார்த்தாலும் இரண்டு பேர்ல ஒருத்தரைத்தான் துரத்தும். ஒருத்தர் தப்பிக்கலாம். இல்லேன்னா இரண்டுபேரும் மாட்டிப்போம். என்ன சொல்றே?" -டிரைவர் சீட்டில் இருந்தவன் கேட்க, அருகில் இருந்தவன் தலையை அசைத்தான்.

"நான் அப்படியே வழியில வர்ற கிராமத்து ரோடு எதுலையாவது விட்றேன். அதோ பார் ஒரு சோளக் கொல்லை. அப்படியே உள்ள விட்டு குதிச்சு தப்பிப் போம்... என்ன சொலறே?"

"பேசாதே... முதல்ல செய்..." -பக்கத்து சீட் நபர் உரத்த குரலில் கட்டளையிட, வேன் சாலையை விட்டு விலகி சோளக்காட்டுக்குள் வேகமாக இறங்கியது.

நடுக்காட்டில் தேங்கி நின்ற அதில் இருந்து இருவ ரும் பக்கவாட்டில் குதித்து அப்படியே குனிந்த நிலையில் வெகுதூரம் ஓடினர்.

கரும்பு வயல் ஒன்றும் சவுகர்யமாக கை கொடுத்தது. அதில் எல்லாம் சிராய்க்கச் சிராய்க்க வேகம் காட்டினர்

கிட்டத்தட்ட பத்து பதினைந்து நிமிட நேரம்... இடைவிடாத ஒரு ஓட்டம்.

அதற்குமேல் ஓட முடியாதபடி நெஞ்சுக் கூடு இளைப் பெடுத்தது.

பெருமூச்சுடன் தயங்கி அப்படியே நின்றனர். போலீசிடம் இருந்து தப்பிவிட்டதாகவே தோன்றியது.

சில நிமிடங்கள் பெருமூச்சுடன் ஆசுவாசிக்கவே சரியாக இருந்தது.

அதன்பின்தான் மார்பு சமனமானது.

'அப்பாடா' என்றிருந்தது.

எப்படியோ போலீசிடம் அகப்படாமல் தப்பிவிட்டோம் என்கிற நிம்மதியோடு நிமிர்ந்தவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது.

எதிரில் நாய்க்கடிபட்டு நாயாகவே மாறி பின் போலீஸ் காவலில் இருந்தும் தப்பித்த அந்த இரண்டு கள்ளர்கள். நாயைப் போலவே நாக்கைத் தொங்கப் போட்டபடி பார்த்த அவர்கள் பார்வையில் சொல்ல முடியாத அளவு ஒரு குரூரம்!

அவர்களும் அதிக நேரம் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை

ஒரே பாய்ச்சல்!

33

'சிவாலயங்களுக்குச் சென்றால் சன்னதிக்கு நேர்பின்புறம் 'லிங்கோத்பவர்' என்கிற பெயரில் ஒரு சிவமூர்த்தியின் லிங்க உருவினைப் பார்க்க லாம்.

தென்புறத்தில் தட்சிணாமூர்த்தியாகவும் வட புறத்தில் சிவதுர்க்கையோடும், பின்புறத்தில் லிங் கோத்பவர் உருவத்தையும் கொண்டே சிவாலயங்கள் உருவாக்கப்பட்டிருக்கும்.

அதில் லிங்கோத்பவ லிங்கம் உரைக்கும் விஷயம் மிக நுட்பமானது. ஒரு நீதிக்கதை போன்றது அது. சிவம் என்பது ஆதி அந்தம் காண முடியாத ஒன்று. அதற்கு முடிவுமில்லை தொடக்கமு மில்லை என்பதை உணர்த்தும் அந்தக் கதையை அனேகமாக எல்லாரும் அறிந்திருக்கலாம்.

சிவனின் சிரசினைக் காண பிரம்மனும், திருவடி தேடி திருமாலும் முயல, அதில் பிரம்மா சூது செய்து சிவனின் தலைமுடியில் இருந்து விழுந்த தாழம் பூவை வழியில் கைப்பற்றி அப்படியே திரும்பி வந்து அதை சிவனிடம் தந்து, தான் உச்சியைக் கண்டுவிட்டதாகப் பொய்யுரைக்க அதை அறிந்த சிவன், பிரம்மாவின் பொய்யைக் கண்டித்து பூலோகத்தில் உமக்கு ஆலயமே இல்லாமல் போகட்டும் என்று சபித்ததாக அந்தக் கதை செல்லும்.

மேலோட்டமாய் பார்த்தால் இந்தக் கதைச் சம்பவம் உணர்த்தும் விஷயங்கள் பலவித கேள்வி களுக்குரியவை.

ஆதி அந்தம் காண முடியாதவன் சிவம் என்பது படைப்புக் கடவுளான பிரம்மனுக்கே தெரியாத அளவு பிரம்மா ஒரு சராசரிக் கடவுளா? இல்லை

சிவனின் பெருமையை உலகுக்குச் சொல்ல இப்படி பிரம்மாவையும் விஷ்ணுவையும் மட்டுப்படுத்தினார்களா என்றெல்லாம் பல கேள்விகள் நம்மைத் தொடரும்.

உண்மையில் கடவுளில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றோ, பெரியவன் சிறியவன் என்றோ கிடையாது.

ஒரு வட்டத்தில் எது ஆரம்பம்? எது முடிவு?

அப்படித்தான் இறையும். அது ஆதி அந்தம் இல்லாதது... அதனுள் உள்ள நாமெல்லாம் கூட ஒருவிதத்தில் அதன் அங்கம்தான். நாம் வேறு இறை வேறு இல்லை. இதை உணர்வதில்தான் சூட்சமமே உள்ளது.

இதை உணராத நிலையில் பிரம்மமே ஆனாலும் அது வணக்கத்திற்கு உரியது அன்று. இதை மறைவாக உணர்த்தவே அப்படி ஒரு கதை சொல்லப்பட்டது.

மனித வடிவில் இருந்தாலும் ஒரு நாயைப் போலவே எல்லாவிதத்திலும் மாறிவிட்ட அந்த இரண்டு திருடர்களின் பாய்ச்சலும் தாக்குதலும் தப்பிவிட்டதாகக் கருதிய விட்டல்ராவின் கையாட்களை ஒரு உலுக்கி உலுக்கிவிட்டது.

அந்த இரண்டு பேரும் நாய் மனிதர்களின் பிடியில் நார்நாராகிப் போனார்கள்.

சரியாக ஐந்து நிமிடம்.

இருவரும் குதறப்பட்டு வீசியெறியப்பட்டனர். அப்படி எறியப்பட்ட அவர்கள் உடம்பில் உயிரும் இல்லை!

ஒரு பதினைந்து நிமிட கால அவகாசத்தில் அவர்களைத் துரத்திவந்த போலீஸ்காரர்கள் இருவரின் சடலத்தையும் பார்த்து உறைந்து போனார்கள்.

வயர்லெஸ்சில் தகவல் பறந்தது. மரகலிதங்கபுரத்தில் கோவில் முகப்பில் டென்ஷனோடு நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் குமாரவேல் காதுகளை அது அடையவும் அவர் கைகளைக் குத்தி பிசைந்து கொண்டார்.

அருகில்தான் இருந்தார் தீட்சதர்.

"என்ன சார்... அந்த திருட்டுப் பசங்க பிடிபட்டுட்டாளா?"

"இல்ல தீட்சதரே... இரண்டு பேரும் மிருகங்களால தாக்கப்பட்ட மாதிரி செத்துக் கிடக்கறாங்களாம்...!"

"ஈஸ்வரா...! எந்த மிருகம் வந்து அவாளைத் தாக்கித்தாம்?"

"தெரியவில்லை... சேஸ் பண்ணிப் போன சப் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் உடனடியா தகவல் தந்துட்டாரு. பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ணினா எல்லாம் தானா தெரிய வரலாம்..."

"என்ன இது... எதை நம்பறதுன்னே தெரியலியே."

"ஒண்ணுமட்டும் உறுதி தீட்சதர். இங்க நம்ம காவல் எல்லாம் சும்மா கண் துடைப்புக்குத்தான். ஒரு பவர் பக்காவா வேலை செய்துகிட்டிருக்கு.

"இல்லேன்னா ராஜ்நாராயணை அந்த கழுகு வந்து காப்பாத்தியிருக்குமா?"

"ஒரு பவர்னு ஏன் பொதுமைல சொல்றேள்? அது சாட்சாத் அந்த ஈஸ்வரன்னா..."

"உண்மைதான்... பொதுவுல பக்தி விஷயத்துல நான் அலட்டிக்கற ஆள் கிடையாது. ஒரு விபூதி வெச்சுக்கக் கூடயோசிப்பேன் ஆனா இப்ப அதெல்லாம் தப்புங்கிற மாதிரி ஃபீல் பண்றேன்."

"நல்ல மாற்றம்தான்... ஆனா இவ்வளவு நல்ல காரியத்துக்கும் பின்னால இருக்கற அந்த ராஜ்நாராயண்

மட்டும் நடக்கற அவ்வளவையும் தற்செயலாவே எல்லாம் நடக்கறதா நினைக்கறான்."

"நானும் கவனிச்சேன்... எனக்கென்னவோ அதுக்கு ஒரு சரியான காரணம் இருக்கும்னுதான் தோணுது" -இன்ஸ்பெக்டர் குமாரவேலும் தீட்சதரும் பேசியபடி இருக்க, நிறைய போலீஸ்காரர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

கிழட்டு வேஷத்தில் இருக்கும் விட்டல் ராவும் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காகிவிட்டதை உணர்ந்து குழப்பத்தில் இருந்தான்.

தப்பி ஓடிய தன் சகாக்கள் செத்துப்போய்விட்ட விஷயம் இன்னமும் அவனை எட்டியிருக்கவில்லை.

அவன் மனதில் நடுக்கம்.

முதல் தடவையாக நிஜமாலுமே இந்த கோவிலில் ஏதாவது சக்தி இருக்கிறதோ என்கிற கேள்வியும் சந்தேகமும் வேறு அவனை ஆட்டிப் படைக்க ஆரம்பித்திருந்தது.

'ரமணி சாஸ்திரி அனுப்பி வைப்பதாகச் சொன்ன நபர்கள் வேறு எப்படி வரப் போகிறார்களோ தெரியவில்லை.

முன்னைவிட போலீஸ் காவலும் அதிகமாகிவிட்டது. ராஜ்நாராயண் திட்டம் போட்டு தங்களை உணர்ந்து தப்பிக்கிறானா, இல்லை அந்த சிவபெருமான்தான் அவனை ஒவ்வொரு முறையும் காப்பற்றிக் கொண்டிருக்கிறானா!'

-விட்டல்ராவுக்குள் கேள்விகளின் அலைப் புரட்டல்கள் கண்ணிரண்டும் கோவிலை வெறித்தபடி இருக்க மனதுக்குள் உழன்று கொண்டேயிருந்தான்.

சரி ராஜ்நாராயண் எங்கே?

✠ ✠ ✠

பட்டர் வீட்டில் ஊஞ்சலில் ராஜ்நாராயண்.

"எனக்கு பணம் தரது பத்தி இல்லை. ஆனா ஊருக்குக் கிளம்பிப் போறது தப்பு. அது ரொம்ப ஆபத்தான விஷயம்னு சொல்றார் இன்ஸ்பெக்டர் குமாரவேல். நன்னா யோசிச்சுக்கோ..."

-பட்டர் அவனுக்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார்.

பாரதி கண்கள் கலங்க முழங்காலிட்டு அமர்ந்திருந்தாள். அதைப் பார்த்த சந்திரிகா, "நீ ஏன்க்கா கண் கலங்கறே?" என்று கேட்க, ராஜாவும் அவள் கலக்கத்தைக் கவனித்தான்.

"ஒண்ணுமில்ல... எல்லாம் என் தலை எழுத்து."

"போதும் பாரதி... தலைல முடிதான் இருக்க முடியும். எழுத்தெல்லாம் இருக்க முடியாது. அலட்டிக்காதே..."

"ராஜா... அப்படியெல்லாம் பேசாதே. தலை எழுத்துன்னா தலைல எழுதியிருக்கற எழுத்துன்னு அர்த்தம் கிடையாது. சில விஷயங்களை நேரா அப்படியே அர்த்தம் பண்ணிக்கக் கூடாது."

"சாரி அத்தை... எப்படி பேசினாலும் ஒரு பதிலை சொல்லிட்றேள். அது சரி, பாரதி எதுக்கு அழறா? ஏன் அழணும்?"

"நீ இப்படி இருக்கியே... அதை நினைச்சுதான்."

"வேண்டாம். திரும்ப நாத்திக ஆத்திக சர்ச்சை நமக்குள்ற வேண்டாம். நானும் அந்த டாபிக்கை எல்லாம் பேசத்தயார் இல்லை. ஐவாண்ட்டு கோ பேக். நான் கிளம்பறேன்."

"அதான் அத்திம்பேர் சொன்னாரே... போலீஸ்ல வேண்டாம்னு சொல்றாளாமே..."

"அவா பேச்சை நான் எதுக்கு கேட்கணும்? என் திருட்டு போன சூட்கேசைக் கண்டுபிடிச்சு கொடுக்க துப்பு இல்ல.

இவா என்னைப் பார்த்து ஏதாவது சொல் லிண்டிருப்பா. நான் கேட்டுக்கணுமா?"

"என்ன ராஜா நீ... உன்னை கொல்லத்தான் ஒரு கூட்டம் அலையறதே... விஷ வாழைப்பழத்தை கொடுத்தவனைப் பார்த்துமே உனக்கு பயம் ஏற்படலை."

"அதென்னமோ வாஸ்தவம்தான். அதுக்காக நான் இந்த கிராமத்துல அர்த்தம் கெட்டதனமா இருந்துண்டு பொழுதைத் தேய்க்க முடியாது. ரொம்ப ஆசையா கல்யாண எண்ணங்களோட வந்தேன். ஆனா எல்லாமே தப்புத் தப்பா போயிடுத்து.

"இனியும் டயத்தை வேஸ்ட் பண்ண நான் பித்துக்குளி கிடையாது. லீவு கிடைக்கறதே அபூர்வம். அதை இங்க வேஸ்ட் பண்ணச் சொல்றேளா?"

"சரிப்பா... எதுக்கு வளவளன்னு பேசிண்டு. இன்ஸ்பெக்டர் குமாரவேல் கோவில் வாசல்லதான் இருக்கார். அவரண்ட போய் சொல்லிட்டு நீ கிளம்பு" -பட்டர் நறுக்கென்று ஒரு முடிவுக்கு வந்து ஒரு வழியையும் காட்டினார்.

"சரி நான் பணம் கேட்டேனே..."

"இந்தா... இருநூறு ரூவாதான் கேட்டே. ஆனா ஐந்நூறே தரேன். போய்க்கூட அனுப்பணுங்கற அவசியமெல்லாம் இல்லை. பிடி" -பட்டர் ஒரு ஐந்நூறு ரூபாய்த்தாளை அவன் வசம் தந்தார். அவனும் கிளம்பினான்.

இனி யாராலும் அவனைத் தடுக்க முடியாது என்கிற மாதிரி கிளம்பின அவனை பாரதி கண்கலங்கப் பார்த்தாள்.

உள்ளுக்குள் அவன் மேலான காதல் அவளைப் போட்டு பிசைந்து கொண்டிருந்தது .அவனைத் தொடரும் மர்ம மனிதர்கள் வேறு அவளுக்குள் கிலியை மூட்டினார்கள்.

அவள் அதற்காகவெல்லாம் சேர்ந்து உருகி அழும் போதே அவன் வேட்டி நுனியைப் பிடித்துக் கொண்டு வீதியில் இறங்குவிட்டான்.

பட்டரும், அன்னபூரணியும் ஒருவரை ஒருவர் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டனர்.

"இவ்வளவு நடந்திருக்கு... எல்லாம் அந்த ஈஸ்வரக் கிருபைங்கறது அவனுக்கு புரியல பாரு" -பட்டர் பெருமூச்சோடு முணுமுணுத்தார்.

"அவன் வயசு அப்படி... படிச்ச படிப்பு சம்பாத்யம்னு ரொம்ப உயரப் போயிட்டான். விதரணையா சொல்லிப் புரிய வைக்காம வெறுப்பைக் காட்டினா இங்க இருக்க பிரியம் இருக்குமா என்ன? போறேன்னுதான் சொல்வான்" -அன்னபூரணி, பட்டரின் புலம்பலில் அர்த்தமில்லை என்கிறாற் போல் ஒரு செல்ல இடி இடித்தாள்.

பட்டரும் முறைத்தார்.

பாரதி பார்வை மட்டும் வீதியில் அவன் நடந்து சென்று கொண்டிருப்பதன் மேலேயே இருந்தது.

✠ ✠ ✠

ராஜ்நாராயணைப் பார்த்த குமாரவேல் இணக்கமாக சிரித்தார்.

"இன்ஸ்பெக்டர் சார்... நான் மெட்ராஸ் கிளம்பிட்டேன். உங்ககிட்டையும் ஒரு வார்த்தை சொல்லிக்கத்தான் வந்தேன்."

"சாரி ராஜ்நாராயண்... நீங்க போகக் கூடாதுன்னு சொல்லியிருக்கோமே..."

"வெரி சாரி இன்ஸ்பெக்டர். நான் கைதி இல்ல, உங்க பேச்சைக் கேட்க... நான் போகத்தான் செய்வேன். இங்க எனக்கு பொழுது போவேனாங்கறது..."

"படிச்சவர் நீங்க. புரியாம பேசாதீங்க. உங்க நல்லதுக்காகத்தான் சொல்றோம்..."

"அஃப்கோர்ஸ்... எனக்கு த்ரெட் இருக்குன்னா என் கூட இரண்டு எஸ்கார்ட் போலீசை அனுப்புங்க. நான் ஸ்டேட்ஸ் கிளம்பற வரை அவங்க என் கூடவே காவலா இருக்கட்டும். தயவுசெய்து இங்கேயே இருன்னு மட்டும் சொல்ல வேண்டாம்..."

"இப்ப உங்களுக்கு இங்க பொழுது போகணும். அவ்வளவுதானே?"

"ஐயோ... எதையாவது சொல்லி இங்க இருன்னு மட்டும் சொல்லிடாதீங்க."

"ஒரு வெல்விஷரா இந்த கோவில் மர்மங்கள் விலகி குற்றவாளிகள் பிடிபடணும்கற அக்கறை உங்களுக்கு இல்லையா?"

குமாரவேல் கேட்ட கேள்வி ராஜ்நாராயணை கொஞ்சம் சிந்திக்க வைத்தது. மவுனித்தான்.

"நல்லா யோசிச்சு பாருங்க... ஏதோ ஒரு சக்தி தொட்டு தொட்டு ஒவ்வொரு விஷயத்தையா உலகத்துக்கு காட்டி கிட்டு வரலை?

"இப்பக்கூட உங்களை சயனைட் வாழைப்பழத்தால கொலை செய்ய நினைச்ச இரண்டு பேரை மிருகங்கள் கடிச்சு கொன்னே போட்றுச்சு.

"திருட முயற்சிசெய்யறவங்க அடி மேல அடி வாங்கறாங்க. அதேசமயம் உங்களாலையும் ஒரு அடி கூட இந்த ஊரை விட்டு வெளிய எடுத்து வைக்க முடியல.

"நீங்க உங்க மனசுல எதை நினைச்சாலும் எப்படி சிந்திச்சாலும் எங்களுக்கு ஒரு புரொடக்ஷன் எங்களை மீறி இருக்கு...

"அதைப் பத்தி எல்லாம் யோசிச்சு பார்க்காம எதனால எப்படின்னு கேள்விகள் கேட்டுக்காம இங்க இருந்து போனா போதும்னே நினைக்கறீங்களே. நான் தெரியாமத் தான் கேக்கறேன். சென்னைப் போய் என்னதான் பண்ணப் போறீங்க?" குமாரவேல் அவனை நன்றாகவே தன் கேள்விகளால் கட்டிப் போட அவனும் தீவிரமாக யோசித்த படியே பக்கத்து கோவில் சுவர் மேல் சாய்ந்தான்.

சாய்ந்த இடத்தில் சில தேய்ந்த கல்வெட்டு எழுத்துக் கள்!

அதில் 'மாலிக்காபூர் படையெடுப்புக்குப் பின் காலடிப் பேட்டை ஜனங்களுக்கு வெள்ள நிவாரண உதவியாக ஆயிரம் கலம் நெல்லும் குதிரைகளுக்கான கொள்ளும் தரவும், பிரதி உபகாரமாய் அவர்கள் எழுப்பித் தந்த மதிற் கோட்டைச் சுவராம் இது. ஸ்தாபித்தோன்-மருங்காபுரி மயில் வாகனம் தலையாரி...'

என்கிற எழுத்துக்கள் பார்க்கும் போதே மனம் படித்து விட பளிச்சென்று அர்த்தமான அதன் பொருள் ஷணத் தில் அவனுக்குள் ஒரு மின்னலை வெட்டியது

'நாராயண அழகா... இந்த ஓலையில் உள்ள செய் தியை அதோ அந்த ஈசான்ய மூலையில் உள்ள 48-வது கற்துண்டில் பொறித்து விடு. நமது வேதமாதவ ராயர் உத்தரவு இது' -என்று யாரோ எப்பொழுதோ காதருகே நின்று கூறியது போலவும் ஒரு பிரமை.

தலையைப் போட்டு உதறிக் கொண்டான்.

34

நமது ஆன்மீக நெறியை உறுதியாகப் பின்பற்றி இறைவனை அடைந்தவர்களாக நாயன் மார்களையும் ஆழ்வார்களையும் குறிப்பிடுகின்றோம்.

இவர்களும் வேதநெறியில் நம்பிக்கை வைத்து சிவனையும், திருமாலையும் தங்கள் முழுமுதல் கடவுளாகக் கருதி அதற்கேற்ப பக்தி செலுத்தி மோட்ச கதி அடைந்தவர்கள்.

இன்றும் அவர்களின் வழிபாட்டு முறைகள், பாடல்கள் பெரிதும் மதிக்கப்பட்டு போற்றப் படுகின்றன.

இவர்களிடையே சித்த புருஷர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர். சித்த புருஷர்கள் வேத விளக்கங்களையோ, ஐதீகங்களையோ அன்றாட பூசனைகள், அபிஷேக ஆராதனைகளையோ பெரிதாகக் கருதாதவர்கள்.

புலனை அடக்கி சரீரத்தையே கோவிலாகவும் உள்ளிருக்கும் ஆன்மாவையே கடவுளாகவும் குறிப்பிட்டவர்கள். பல வகைகளில் ஆழ்வார்களை யும் நாயன்மார்களையும் விஞ்சியவர்கள் என்று கூட சொல்லலாம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் அவ்வளவாக அற்புதங்கள் நிகழ்த்தியவர்கள் என்றோ, உடம்பை வென்று வாழ்வாங்கு வாழ்ந்த வர்கள் என்றோ கூற முடியாது. ஆனால் சித்தர்கள் இன்றும் உடம்பை வென்று வாழ்ந்து கொண்டிருப் பதாகவும், சர்வ சாதாரணமாக அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இப்படிச் சொல்வதால் சித்தர்கள் உயர்ந்தவர்கள், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்று கோணலாகப் பொருள் கொண்டிடக் கூடாது.

இந்த கோணல் பார்வையே சிவம்தான் கடவுளர் களில் பெரிது என்றும் திருமால்தான் கடவுள்களில் மகா பெரியவர் என்றும் பேச வைக்கிறது.

காஞ்சிப் பெரியவரே, இந்த பெரியவன்- சிறிய வன் கருத்தைப் புறம் தள்ளி இரு தெய்வங்களை ஒழுகியவர்களும் தங்கள் வழிபாட்டுக்குரிய தெய்வத்தை முழுமுதலாகவும் மற்றதை உபதெய்வ மாகவும் வைத்து அவரவர் புராணங்களில் எழுதி விட்டுப் போய்விட்டார்கள் என்கிறார்.

உண்மையில் ஒரு குழந்தையை இரு தாயால் எப்படி பெற்றிட முடியாதோ அப்படி இந்த உலகை யும் இரு கடவுள்கள் படைத்திட வாய்ப்பு இல்லை.

இறை ஒன்றே... அதை உணரும் நெறிப் பாடுகளே வேறு வேறாக உள்ளன. மனிதமனம் எப்பொழுதும் உயர்வு தாழ்வு பார்த்தே ஒன்றை புரிந்து கொள்ளப்பார்க்கும் என்பதால் இறை விஷயங்களிலும் இவை உள் நுழைந்துவிட்டன என்பதே யதார்த்தம்.

எது எப்படி இருப்பினும் தெளிவாக ஒன்றைப் பிடித்துக் கொண்டு அதற்கான நெறிமுறையில் சென்று மோட்சகதி அடையலாம் என்பதே ஆழ்வார்கள், நாயன்மார்கள் சொல்லும் சேதியாகும்.

மாறாய், தன்னுள் இறையைக் காண்பதே சித்தர்கள் சொல்லும் சேதியாகும். ஒரு ஆச்சரியம் இந்த சித்தர்கள் தங்களுக்குள் இறையைக் கண் டுணர்ந்த போதிலும் இவர்களில் சிலர் லிங்க ஸ்வ ரூபத்தை தியானித்தே 'நான் யார்?' என்பதற்கான விடையைப் பெற்றனர்.

இவர்களால் தியானிக்கப்பட்ட லிங்கங்கள் 'ஆரிட லி.ங்கங்கள்' எனப்பட்டன.

எந்த ஒரு சித்தபுருஷரும் பிரம்மா, விஷ்ணு முதலான தெய்வ வழிபாட்டையோ, சக்தி வழிபாட் டையோ கூட செய்திருக்கவில்லை. ஆனால் லிங்கத் தைத் தங்களின் மனச் சாதனமாகக் கருதினார்கள்.

லிங்கமே ஒரு வகையில் அவர்கள் மனக்குறியாய், இலக்காய் நின்றது. 'லிங்' என்றால் அடக்கிக் கொள்வது என்று பொருள். 'கம்' என்றால் விடுபடுவது என்று பொருள். புவனங்களை அடக்கிக் கொள்ளுதல், பின் விடுபட்டு இயக்குதல் என்கிற இயக்கச் செய்தியாக லிங்கம் திகழ்கிறது

எனவேதான் ஐதீக நெறிப்பாடு இல்லாத காட்டு நெறியில் காற்றையே கூட சமயங்களில் உணவாகப் புசித்த சித்த புருஷர்கள் லிங்கத்தை மட்டும் தங்கள் மனச் சாதனமாக்கி உருகி வழிபட்டார்கள்.

இந்த லிங்கத்தின் முன் 'நெய் தீபம்' ஏற்றி வழிபட மிக உகந்த மாதம் கார்த்திகை என்பதெல்லாம் சில நலன்கள் உருவாக கூறப் பட்டதாம்!

மதில் சுவரில் சாய்ந்த மாத்திரத்தில் அதில் செதுக்கப்பட்டிருந்த செய்தியைப் படித்தவன் தன்னையே மறந்து நெற்றியைப் பிடித்துக்கெண்டு ஒரு ஓரமாகப் போய் அமர்ந்தான்.

இது இன்ஸ்பெக்டர் குமாரவேலுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. தரிசனத்திற்காக உள்ளே சென்றிருந்த தீட்சதரும் அப்போது அவர்களை நோக்கி வந்த வண்ணமிருந்தார்.

குமாரவேலுவையும் ராஜ்நாராயணையும் மாறி மாறிப் பார்த்தவர் முகத்தில் ஒரு அர்த்த புஷ்டியுள்ள புன்னகை.

"என்ன சாமி சிரிக்கிறீங்க?"

"சிரிக்கல... ரசிக்கறேன்..."

"ரசிக்கிறீங்களா... இங்க ரசிக்க என்ன இருக்கு? தம்பிக்கு தலை வலிக்குதாட்டம் இருக்கு. நல்லா பேசிகிட்டு இருந்திச்சு. அப்படியே உக்காந்துடிச்சு."

"இதுக்குத்தான் நான் காத்திருந்தேன்."

"என்ன சொல்றீங்க... தலைவலிக்கட்டும்னு நீங்க காத்திருந்தீங்களா?"

"தலைவலிக்கல இன்ஸ்பெக்டர்... அவன் இப்ப சித்தக் கலக்கத்துல இருக்கான்..."

"சித்தக் கலக்கமா!"

"ஆமாம்... இங்க ஒரு சக்தி இருக்கு. அது எல்லாத்தையும் வழி நடத்திகிட்டு இருக்குன்னு கொஞ்சம் முந்தி சொன்னீங்கல்ல..."

"ஆமாம்..."

"அதோட வேலைதான் இதுவும்..."

"கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்."

"இந்த ஒரு விஷயத்தை மட்டும் புரியும்படி சொல்லவே முடியாது இன்ஸ்பெக்டர். ஒரு மனிதன் தன் வாழ்நாள்ல எவ்வளவோ விஷயங்களை அனுபவிக்கிறான். அதை அடுத்தவங்களுக்கு புரிய வைக்க இன்பமானது துன்பமானதுன்னு இரண்டு நிலைப்பாட்டுல வெச்சு சொல்றான். இந்த இரண்டு நிலைப்பாட்டுலையும் சேராதபடியும் எந்த வார்த்தைகளால எப்படிச் சொல்றதுன்னே தெரியலியேன்னு தவிக்கற விதமாகவும் ஒரு விஷயம் இருக்கு.

"அதை 'அமானுஷ்யம்'னு ஒரு சராசரி வார்த்தையால சுட்டிக்காட்டலாம். அப்ப கூட எது அமானுஷ்யம், அது எப்படிபட்டதுன்னுல்லாம் சொல்லி விளங்க வைக்க முடியாது.

என் அனுபவத்துல சொல்றதா இருந்தா எந்த நிலையிலும் தான் மட்டுமே உணர முடிந்த, பிறருக்கு உணர்த்தவே முடியாத ஒன்றுதான் அமானுஷ்யம்!

இப்ப ராஜ்நாராயணும் அதுலதான் இருக்கான்..."

-தீட்சதரின் நீண்ட விளக்கம் இன்ஸ்பெக்டர் குமாரவேலுவை கொஞ்சம் போல குழப்பியது. சொல்லப் போனால் சுத்தமாக, புரியவில்லை. ராஜ்நாராயணோ ஒரு புதிய சிந்தனை வயப்பட்டவன் போல எழுந்தான்.

அப்படியே விஸ்ராந்தியாக காட்டில் ஏகாந்தமாக கை வீசி நடக்கும் சித்தர்களைப் போல கோவிலுக்குள் நடக்க ஆரம்பித்தான்.

"இந்த ஷணம் ஊருக்குப் போறேன். இங்க எனக்கு இருக்கவே பிடிக்கலைன்னு சொன்னவர் திடீர்னு மந்திரிச்ச கோழி மாதிரி ஆயிட்டாரு... அதுவும் இந்த சுவத்துல இருக்கற செய்தியைப் படிச்ச பிறகுதான். அப்படி என்ன இருக்குது இதுல...?"

-குமாரவேல் ஒரு பார்வை பார்த்தார். அதை சிரமப்பட்டு எழுத்துக் கூட்டி படித்துவிட்டு திரும்பினார்.

"என்ன செதுக்கியிருக்கு?"

"இந்த சுவத்தை ஒரு ஊரைச் சேர்ந்த மக்கள் ஒண்ணா கூடி கட்டுனதா இருக்கு. அதுவும் மாலிக்காபூர் படை எடுப்புல பாதிக்கப்பட்ட பிறகு..."

"அப்ப அந்த கோவில் மாலிக்காபூர் படை எடுப்புக்கு உள்ளான ஒரு கோவிலா?"

"இல்லேன்னா மரகதலிங்கமும் மரகத நடராஜரும் அம்பாள் திருமேனியும் காணாம போயிருக்குமா?"

"காணாமலா?"

"காணாமன்னா... அவன் கொண்டு போயிட முடியாத படி ஒளிச்சு வைக்கப்பட்டிருக்குமான்னு கேட்டேன்."

"ஓ... அப்படி ஒளிஞ்சு கிடந்ததுதான் இந்த மரகத நடராஜர் விக்ரகமா?"

"இல்லையா பின்னே...?"

"அப்ப மத்த இரண்டு விக்ரகமும் கூட எங்கையோ இருக்குன்னு சொல்லுங்க..."

"நிச்சயமா..."

"காணாம போன எட்டுக்கட்டுல அதைப் பத்தி தகவலுங்க இருந்திச்சோ?"

"இல்லேன்னா அதை எதிரிகள் திருடிகிட்டு போயிருப்பாங்களா?"

"அப்ப அந்த குரூப்தான் ராஜ்நாராயணைக் கொலை செய்ய அலையுதோ...?"

"இருக்கலாம்..."

"பைவ் எக்ஸ் பார்ட்டிகள்னு நம்ம ஆர்க்கியாலஜி ஷாநவாஸ் சொன்னாரே..."

"அது அவங்களுக்கான பெயர்... ஆமாம் ஒரு போலீஸ் காரரா இருந்துகிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி என்கிட்ட கேக்கறீங்களே..."

"அலையுற பார்ட்டியைத்தான் உங்களுக்குத் தெரியும். ஆனா அவங்களும் இந்த கோவிலுக்குமான தொடர்பு தெரியணும்னா உங்களைப் போல மூன்றாம் பார்வை உள்ளவங்ககிட்ட பேசினாத்தானே தெரிஞ்சிக்க முடியும்."

"மூன்றாம் பார்வையா... அப்படின்னா?"

"உங்க பாணியிலையே சொல்லணும்னா அமானுஷ்யம்தான்."

"நான் அமானுஷ்யமா எதைச் சொன்னேன்...?"

"சொல்லாம சொல்றீங்களே... அப்பப்ப மர்மமா சிரிக்கிறீங்களே... கேட்டா சொல்றதுக்கு வார்த்தைகள் இல்லேங்கிறீங்களே..."

"பரவால்ல இன்ஸ்பெக்டர்... என்னையும் எடை போட்டுத்தான் வெச்சிருக்கீங்கன்னு சொல்லுங்க..."

-இருவரும் தொட்டுத் தொட்டு பேசிக் கொண்டிருக்க ராஜ்நாராயண் மதில் சுவரை ஒட்டியே நடந்து அந்த அரசஞ்செடி முளை விட்டிருந்த மதில் சுவர் அருகே நின்றிருந்தான்.

அதை நின்ற இடத்தில் இருந்து கவனித்த தீட்தரும் இன்ஸ்பெக்டர் குமாரவேலுவும் ஒருவரை ஒருவர்

பார்த்துக்கொண்டு அவனை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

பெரிய அந்தக் கோவிலில் ஒரு பக்தரைப்போல அமர்ந்திருந்த விட்டல்ராவும் அதை கவனித்து விட்டு அவர்களோடு சேர்ந்து நடக்க ஆரம்பித்தான். இரண்டு அடிதான் போட்டிருப்பான் அவன். இடுப்புச் செல்போன் சிணுங்கி அவனைக் கூப்பிட்டது.

சுற்றுமுற்றும் பார்த்தவன் அப்படியே திரும்பி வந்து ஒரு மறைவிடமாகப் பார்த்து ஒளிந்து செல்போனுக்கு காதைக் கொடுத்தான்.

"விட்டல்... நான் ரமணி சாஸ்திரி பேசறேன்."

"சொல்லுங்க.."

"என்னய்யா... 24 மணி நேரத்துல அந்த ராஜ்நாராயண் கதையை முடிச்சுடுவேன்னு சொன்னே... ஆனா முடிக்கப் போனவங்க கதை முடிஞ்சிடுச்சாட்டம் இருக்கே..."

"..."

"என்ன பதிலைக் காணோம். நான் சொன்னது மறந்து போச்சா. இந்த அசைன்மென்டுக்கு கைநீட்டி பணத்தை வாங்கிட்டோம். ஆனா தொட்டுத் தொட்டு உதை வாங்கிகிட்டு இருக்கோம். யார் புத்திசாலின்னே தெரியலே..."

"சந்தேகமே இல்லீங்க... இந்த நிமிஷம் அந்த ராஜ் நாராயணும் போலீசும்தான்..."

"இதைச் சொல்ல உனக்கு வெட்கமா இல்லை."

"நான் சொல்லாட்டி உங்களுக்கு தெரியாம போயிடுமா என்ன... இங்க ஒரு சக்தி இருக்குதுங்க. போலீஸ் இன்ஸ்பெக்டரே அதை நினைச்சு வியந்து போய் பேசறாருன்னா பாத்துக்குங்களேன்."

"போச்சுய்யா...

இப்படி எல்லாம் இல்லாததை இருக்குன்னு நம்ப ஆரம்பிச்சா இந்த இயக்கத்துல நீ எல்லாம் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது..."

"அது எனக்கும் தெரியும்... ஆனா சில விஷயங்களை அனுபவப்பட்டாதாங்க புரியும்."

"முண்டம். எதுய்யா அனுபவம்? சக்தி இருக்குதுன்னா அந்த சக்தி குப்தாஜியையும் என்னையும் ஒழிச்சு கட்டலாமே... அவ்வளவு ஏன் இந்த சிலைகளுக்கு ஆசைப்படற மேல்நாட்டுக்காரங்க மனசுல கட்டுப்பாடுகளை உருவாக்கலாமே...

"எவ்வளவு சுலபமா இந்த விஷயம் ஒரு முடிவுக்கு வந்துடும்னு யோசிச்சுப் பார். அதை விட்டுட்டு அந்த கோவில்ல அந்த சக்தி கண்ணாமூச்சி விளையாடுமா?"

-நல்ல லாஜிக்கான கேள்விதான். ராஜ்நாராயண் காதில் விழுந்திருந்தால் சபாஷ் சொல்லியிருப்பான். ஆனால் விட்டல்ராவால் அப்படிச் சொல்ல முடியவில்லை. அதே சமயம் ஒரேயடியாக மறுத்து விடவும் முடியவில்லை.

"சாஸ்திரிஜி... ரொம்ப முக்கியமான ஒரு சம்பவம் நடக்கும் போல தெரியுது. அப்புறம் கூப்பிடுங்க. அந்த ராஜ்நாராயண் பைத்தியக்காரன் மாதிரி ஏதோ பண்ணிகிட்டிருக்கான். அதை நான் கவனிக்கணும்..."

"தாராளமா கவனி. அப்படியே நீ கேட்ட சூட்கேஸ் திறக்கற ஆளும், ஏட்டுக்கட்டோட புவனாங்கற ஒரு மாடர்ன் கேர்ளும் இந்த நிமிஷம் மரகத லிங்கபுரத்துக்கு வந்துருப்பாங்க. உன்னையும் வந்து பார்ப்பாங்க. விட்றாதே..."

"அப்படியா... வந்துட்டாங்களா அவங்க...!"

-விட்டல்ராவ் கேட்ட விதத்திலேயே ஒருவித அசதி.

35

'சிவத்தைப் பற்றி சிந்திக்கையில் சிவத்தால் பல காரணங்களுக்காகவும், நோக்கங்களுக்காகவும், சிவாம்சத்தோடு உருவாக்கப்பட்ட ருத்ரர்கள், வீரபத்திரர் முதலானோரைப் பற்றிச் சிந்திப்பதும் அவசியம்.

அதிலும் வீரபத்திரர் பற்றி சிந்திப்பது நமக்கு பல நுட்பங்களைப் புரிய வைக்கும்.

தட்சன் யாகம் வளர்க்கிறான். யாகம் வளர்ப்பதன் நோக்கமே பாபம் கரைத்தல் அல்லது வரம் வேண்டல் என்கிற இரண்டின் பொருட்டே...

இதில் பாவத்தை மன்னித்தும் கேட்ட வரத்தைத் தந்தும் மகிழ்விப்பதேயாக மூர்த்திகளின் கடமையும் ஆகும். இவ்வகையில் பல அசுரர்கள் தவம் புரிந்து, யாகம் வளர்த்து பலப்பல வரங்களைப் பெற்றிருக் கிறார்கள். பின் பெற்ற வரத்தை அதை அளித்த இறைவர்களிடமே பரீட்சை செய்தும் பார்க்க முயன்றிருக்கிறார்கள்.

இதை ஒரு வகையில் பார்த்தால் ஒருவர் கையைக் கொண்டே அவர் கண்களைக் குத்திக் குருடாக்கும் முயற்சி எனலாம்.

அசுரர்கள் நோக்கமும் அதுவே... வரம் தருமளவு ஒரு வல்லமை படைத்த தெய்வம் ஒன்று இருக்குமானால் அந்த தெய்வமாய் தாங்கள் மட்டும் ஏன் மாறிடக் கூடாது என்று அகம்பாவத்தோடு நினைப்பதன் எதிரொலியே வரம் தந்த தெய்வத் தையே அழிக்கும் முயற்சியாகும்.

இப்படி ஒரு எதிர்ப்பும், கபடமும் அசுரர்களுக்கு இருப்பது தெரிந்தும் இறைவன் வரம் தருவது ஏன் என்பதே இங்கே பிரதான கேள்வி.

அடுத்து வரம் தருமளவு வல்லமையுடைய இறைவனுக்கு அசுரத் தாக்கத்திலிருந்து தப்பிக்க முடியாதா? அந்த தாக்கமெல்லாம் ஒரு பொருட்டா என்பது அடுத்த கேள்வி.

அதற்கு பதிலுரைப்பது போன்றவைதான் வீரபத்திரர் போன்ற சிவகணங்களின் செயல்கள்.

தட்சனின் யாகம் நல்லவிதமாக முடிந்தால் அதன் எதிரொலியாக அவன் தானும் இறைவனுக்குச் சமமானவன் என்று புவனங்களை அடிமை கொள்ளும் ஒரு அவலம் ஏற்படலாம்.

யாகம் வளர்க்கும் தட்சனோ இறைவனான சிவபெருமானை மதிக்காமல் சிவனுக்குரிய அவிர்ப் பாகத்தைத் தராமல் ஐதீகச் செயலால் சிவனையே வெற்றி கொள்ளப் பார்க்கிறான்.

அதைத் தடுப்பதும், புவனங்களைக் காப்பதும் இறைவனின் திருப்பணிகளில் ஒன்றல்லவா? எனவே சிவபிரான் தன் கோபாக்கினியைத் தொகுத்து அதை உயிர்ப்பித்து வீரபத்திரரைப் படைத்து தட்சனின் யாகத்தைத் தடுத்து வெற்றி கொள்ள அனுப்புகிறார்.

வீரபத்திரரும் யாகசாலை சென்று தட்சனைத் தடுத்தும் அவன் கேளாததால் அவனைக் கொன்று தீயில் இட யாகம் தடைபடுகிறது.

பின் தட்சனின் மனைவி காலில் விழுந்து கதற, தட்சன் உயிர்த்தெழுந்து வருகிறான், ஆட்டுத் தலையோடு...

இந்த யாகத்தில் மற்ற தேவர்களும் தட்சனுக்கு உடந்தையாகி அவனது மந்திர தந்திரங்களுக்கு மயங்கிவிட வீரபத்திரர் அவர்களையும் தண்டிக் கிறார்.

இது புராணக்கதையின் சுருக்கமான வரலாறு. கேட்பதற்கு நம்பமுடியாத அம்சங்களோடு நிறைய லாஜிக் குழப்பங்களுடன் இது நம்மை குழப்பும்.

குழம்ப வேண்டிய அவசியமே இல்லை.

புராணக் கதைகளை நேரடியாகப்பொருள் கொண்டிடக் கூடாது. அதில் சூட்சும மறைபொருள் மிகுதி. அத்துடன் ஒவ்வொரு நூற்றாண்டிலும் பலப்பல மாறுதல்களுக்கு ஆளாகி வரும் மனித வாழ்க்கை நெறிமுறைகளோடும் பொருத்திப் பார்க்கக் கூடாது.

சூட்சுமப்பொருள் கொண்டு வந்த புராண சம்பவங்களைப் பார்த்தால் பல நுட்பங்கள் புரிய வரும்.

இந்த வீரபத்திரர் அவதாரச் சிறப்பிலும் பல நுட்பம் உள்ளது. வீரபத்திரர் இங்கே ஒரு சிவாயுதம். அத்துடன் வீரபத்திரரான ஆணும் பெண்ணும் கூடிக் கலந்து பஞ்ச பூத சேர்க்கையால் உருவான மனிதப் பிறப்பை போன்றவரல்லர். இறைவன் சிவனால் உயிரூட்டப் பெற்ற ருத்ர அம்ச மூர்த்தி அவர். ஒரு வகையில் பார்த்தால், அவர் வேறு சிவம் வேறு அல்ல; இரண்டும் ஒன்றுதான். அதேசமயம் சிவம் தட்சன் போன்ற அகங்கார மமதை கொண்டவர்களை அழிக்க தானே முன்சென்று அவனை சமராக்கவும் விரும்பவில்லை. முதலில் தன் அம்சத்திற்கு பதில் சொல்லட்டும் என்று விட்டுவிட்டார்.

இதை எல்லாம் தட்சனின் யாகத்திற்கு பயந்தோ அவன் வலுப்பெற்று விடுவான் எனக் கருதியோ அவர் செய்யவில்லை.

வேதமும், யாகமும் இறைவனை ஆவிர்ப்பிப்பவை. அப்படிப்பட்ட உன்னதமான ஒன்றால் எக்காலத்திலும் ஒருவர்தானே இறை என்கிற கர்வம் கொண்டு சர்வ சக்தி பெற்று எல்லோரையும் ஆட்டிப்படைக்கலாம் என்ற ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாதல்லவா?

கண்ணை விற்று சித்திரம் வாங்கி என்ன பயன்? அதைத் தடுத்து ஞானம் ஏற்படுத்துவதே சிவத்தின் நோக்கம்.

இறுதியில் தட்சனும் திருந்தி சிவநெறிச் செம்மலாகிறான். சிவமும் தட்ச யக்ரு ஹதமூர்த்தியானது. அதே சமயம் சிவனின் ருத்ராம்சமாக உருவான வீரபத்திரர் இன்றும் நம்முள் மேலோங்கும் தட்ச குணங்களை சம்ஹரித்து நம்மை ரட்சிப்பதும் தொடர்கிறது.

ராஜ்நாராயண் ஓடிப்போய் அந்த அரசஞ்செடி மதில் அருகே நின்று கொண்டுவிட்டான். அவன் அடுத்து என்ன செய்வான்? என்கிற கேள்வியில் தீட்சதரும் குமாரவேலுவும் பின்னாலேயே சென்று பார்க்க, விட்டல்ராவும் கோவிலை 48 பிரதட்சணம் செய்யும் ஒரு பக்த சிகாமணி போலே மாறி ராஜ்நாராயணை நோட்டமிட ஆரம்பித்தார்.

ராஜ்நாராயண் கரங்கள் துவாரம் விழுந்திருக்கும் அந்தச் சுவர்ப்புறத்தை வருட ஆரம்பித்திருந்தன. நினைவுகளும் எங்கோ பறந்து சென்று மிதக்கிற மாதிரி இருந்தது.

மெல்ல... மிக மெல்ல காதுகளில் உளியின் செதுக்குச் சப்தமும் அதன் தொடர்ச்சியாக மனக் கண்ணிலும் அந்த இடத்தில் பலர் நின்று அந்த மதில் சுவரை எழுப்புவது போல் தோன்றியது.

✠ ✠ ✠

அருகே மாட்டு வண்டியில் இருந்து சதுரக் கற்கள் இறக்கப்பட்ட வண்ணமிருக்க ஓரிடத்தில் சுண்ணாம்பு, விளாம்பழ விழுது, பாழ் முட்டைக் கலவை, புளியஞ்சாறு, நாட்டு வெல்லச் சாறு, கடுக்காய் ஊறல் என்று தாழி தாழியாய் கலவைகள்.

அவைகளை ஆற்று மண்ணில் நூறு சிப்பத்துக்கு பத்து ளிப்பானை அளவு சுண்ணாம்பும், விளாம்பழ விழுதும்,

பாழ் முட்டைக் கலவையும், புளியஞ்சாறு மற்றும் நாட்டு வெல்லச் சாற்றுக் கலவையையும், கடுக்காய் ஊறலை யும் கலந்து வார்ப்பிரும்புச் சிப்பத்தில் அந்தக் கலவையை ஒருவர் பொழிந்து தர அதைக் கொண்டுதான் சுவரும் எழுப்பப் பட்டுக்கொண்டிருந்தது.

அவ்வப்போது ஒருவன் வந்து அந்த கலவையை உருண்டை போல கையில் எடுத்துப் பிடித்துப் பார்த்து பின் அத்துடன் பச்சிலைச் சாறு போல் ஒன்றைக் கலந்து அனுப்பிய வண்ணமிருந்தான்.

அங்கங்கே கோவேறு கழுதைகள் மணல் பொதிகளைச் சுமந்து வரத் தோதாக நின்று கொண்டிருக்க ஆலயத்தின் உள்ளே ஓங்கலாய் ஒரு வில்வமரமும் வளர்ந்திருந்தது. அதன் கீழே பட்டுச்சால்வை போர்த்தினது போல இரண்டு புரவிகள். அதுவே சோழ ராஜ்யப்பிரதிநிதிகள் யாரோ வந்திருக்கின்றனர் என்று சொல்லாமல் சொல் லிற்று.

அது உண்மைதான்!

கோயிலின் உட்பிரகாரக் கூட்டில் ஒரு கல்மண்டபம் இருக்க அதில் பிரம்மானந்த பட்டரிலிருந்து வேத மாதவராயர் வரை அனைவரும் இருந்தனர். சோழ ராஜ்ய பிரதிநிதியைப் போன்றவனும் இருந்தான். அவன்தான் பிரதானமாய் பேசினான்.

உளி முனைகள் ஒழுங்கில்லாத சதுரக் கற்களைச் சீராக செதுக்கும் ‘நொட்... நொட்...’ என்கிற சப்தத்திற்கு நடுவில் அவன் பேசுவது அவ்வளவாய் யார் காதிலும் விழவே இல்லை.

“எத்தனை முறை இந்த ஆலயம் சிதைக்கப்பட்டாலும் சரி... அத்தனை முறையும் இது உயிர்த்தெழ வேண்டும். அந்த வடவக்கொடுங்கோலன் காபூர் அயர்ந்து போக வேண்டும்.

“கொள்ளை அடித்து பொருள்களை அபகரிப்பது மட்டும் அவன் நோக்கமல்ல... நமது ஆலயங்களைத் தரைமட்டமாக்குவதும் அவன் குறிக்கோள்.”

“நீங்கள் கவலையே படாதீர்கள். வேதமாதவராயர் உள்ளவரை ஆலயப் புனருத்தாரணம் பற்றி கவலையே படவேண்டாம்.

“நூறு முறை அவன் படை எடுத்தால் நூற்றி ஒரு முறை இந்த ஆலயமும் திரும்ப எழும்.

“அந்த கைலாயச் சிவன் காபூர் மூலம் நம்மைச் சோதிக்கிறான். இந்தச் சோதனையில் நாம் வென்றே தீர வேண்டும்.”

“நாம் வெல்வது இருக்கட்டும்... மூல விக்ரகங்கள் கொள்ளை போய் விடாமல் காப்பாற்ற வேண்டியது நமக்கு மிக மிக முக்கியம். அதிலும் இந்த மரகதலிங்க பரத்து மூர்த்திகள் மீது காபூர் தனிக்கவனம் செலுத்துவ தாகக் கேள்வி.”

“வரட்டும்... எத்தனை முறை வந்தாலும் ஏமாற்றம் தான் மிஞ்சும். இப்பொழுது கூட மரகதலிங்க மூர்த்தி யாராலும் அறியப்படாத வகையில் அதேசமயம் இதே ஆலயத்தில்தான் உள்ளார்.

என்று நாம் தனிப்பலம் பெற்று இந்து ராஷ்ட்ரம் உருவாகிறதோ அன்று மூர்த்தி தானாக வெளியே வந்து பூசனைகள் ஏற்பார்...”

“ஒரு விஷயத்தை மறந்து விடக் கூடாது. எலி வாயிலிருந்து தப்பித்து புலி வாயில் விழுந்து விட்ட கதையாகி விடக்கூடாது.

“நம்முடைய அலய விக்ரகங்கள் அருள் மதிப்பு, பொருள் மதிப்பு இரண்டாலும் உயர்ந்தவை. அவைகளை அந்தக் கொடுங்கோலுக்கு அஞ்சி முறையில்லாமல் எங் காவது வைத்துவிடக்கூடாது. பின் காலத்தால் புதை யுண்டு போகும்.”

"உண்மைதான்... அவை மறைக்கப்பட்டு காப்பாற்றப் பட வேண்டியது மட்டுமல்ல... அவைகளை மறைமுகமாய் பூசிக்கவும் பட வேண்டும். பூசனை அற்றுப் போய் விடக் கூடாது..."

"கவலையே படாதீர்கள்... ஒரு ஆலயத்தின் ஈசான்ய பாகம் என்றும் புனிதமாகவே கருதப்படும். காலத்தால அங்கே கட்டிடங்கள் எழும்ப வாய்ப்பே இல்லை.

அத்துடன் விழாக் காலத்தில் அங்கே உற்சவ மூர்த்தி கள் நின்று சேவை சாதிப்பார்கள். கோவிலுக்குள் உள்ளி லும் வெளியிலும் ஏற்றப்படும் தீபங்கள் கூட ஈசான்யம் நோக்கி ஏற்றப்படும். எனவே ஈசான்ய பாகத்தைவிட ஏற்ற இடம் ஒன்று கிடைத்துவிடாது..."

"இல்லையில்லை... காலத்தால் அங்கே கிணறோ களமோ உருவாகலாம். வாஸ்து சாஸ்திரம் அதை அனுமதிக்கிறது. அப்பொழுது ஆபத்தாகிவிடும்..."

"ஒரு ஆபத்தும் வராது... நாம் கருவிகள். நம்மை ஆட்டுவிப்பது அந்த ஈசன். எனவே நாம் அவன் தாள் பணிந்து திட்டமிட்டு செயல்படுவோம். வரும் பவுர்ணமி நிச்சயம் அந்த மாலிக்காபூரின் குதிரைப் படை இந்த ஆலயத்தைச் சுற்றி வளைக்கும் அபாயம் இருப்பதாக உளவுத் தகவல்கள் வந்துள்ளன.

அப்படி அந்தப் படை வந்து பார்க்கும் போது அவர் களின் முந்தைய தாக்கத்தில் இடிக்கப்பட்ட இந்த மதில் சுவர் மேலும் ஒரு அடி உயர்ந்து ராஜ கம்பீரமாக காட்சி தர வேண்டும்.

அவனும் அதைக் கண்டுவெட்கித் தலைகுனிய வேண்டும்!"

-அவர்கள் தங்களுக்குள் பேசியவண்ணம் இருக்க சிற்பி நாராயண அழகன் அவர்களை நோக்கி வந்தபடி இருந்தான்.

"வந்துவிட்டாயா?" -கேட்டது மாதவராயர்.

"அழைத்தீர்களாமே...?"

"ஆமாம்... நீதான் தேர்ந்த சிற்பியாயிற்றே. ஒரு சிறந்த சமதளமதான கல்லில் நான் தரும் ஓலைச் செய்தியை கல்லெழுத்தில் வார்த்துத் தருவாயா?"

"இதென்ன கேள்வி... அது என் கடமை மாதவராயரே..."

"மிகவும் மகிழ்ச்சி. எள் என்றால் எண்ணையாக நிற்கிறாய். ஆனால், இத்தனை அற்புதமாய் வடிவங்கள் உருவாக்கத் தெரிந்த உன்னிடம் அந்த இறை சிந்தனையே இல்லாமல் இருப்பதுதான் விந்தையாக உள்ளது."

"வேண்டாம் மாதவராயரே... தயவு செய்து என் நம் பிக்கை சார்ந்த விஷயங்கள் பற்றி இங்கே எதுவும் பேசா தீர்கள். நான் அம்மட்டில் மனச் சோர்வில் இருக்கிறேன்..."

"விந்தையான மனிதனப்பா நீ. நீ இப்படி பேசுவதைப் பார்த்தால் வேதனையாகத்தான் உள்ளது. அதேசமயம் இறைபணி ஆற்றுபவர்கள் இறையாளர்களாக இல்லாமல் செயல்படுவது ஆபத்தானதுகூட."

"நன்றாக சொன்னீர் மாதவராயரே... நான் கூட இந்த நாராயண அழகன் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். இவனுக்கும் அந்த மாலிக்காபூருக்கும் எனக்கு பெரிய வித்யாசமிருப்பதாகத் தெரியவில்லை." -என்றபடியே குறுக்கிட்டார் சோழ அரண்மனைப் பிரதிநிதி.

"என்னது... காபூரும் நமது அழகனும் ஒன்றா?" -மாதவராயரும் திடுக்கிட்டார்.

"இல்லையா பின்னே...? காபூருக்கும் வழிபாட்டுக் குரிய நமது மூர்த்திகள் மேல் பற்றுதலோ பக்தியோ கிடையாது. அவன் வரையில் அவை கற்சிலைகள். இவனும் அப்படித்தானே நினைக்கின்றான்."

"இல்லை... அந்த கொள்ளையனோடு என்னை ஒப்பு வைத்து பேசாதீர்கள். அவன் ஆதிக்க குணம் பிடித்த வெறியன். நான் அப்படி அல்ல..."

"என்றால் இறை பற்று இல்லாமல் இருப்பது ஏன்?"

"நான் உங்களை ஒன்று கேட்கவா?"

"எத்தனை கேள்வி வேண்டுமானாலும் கேள்..."

"உங்கள் வரையில் இறைவன் பெரியவனா -இல்லை அந்த காபூர் பெரியவனா?"

"இது என்ன கேள்வி... அற்ப மனிதனான காபூர் எங்கே...? அந்த இறைவன் எங்கே?"

"அப்படி ஆனால் அவரே மிகப்பெரியவர் அல்லவா?"

"அதிலென்ன சந்தேகம்?"

"அவரே இந்த பிரபஞ்ச மூர்த்தி... சக்திமிக்க வல்லாளர்... அப்படித்தானே...?"

"முக்காலத்திலும் அதுவே சத்தியமான உண்மை நாராயண அழகா."

"அப்படி அத்துணை பெரியவர் நம்மைக் காப்பாற்று கிறாரா இல்லை நாம் அவரைக் காப்பாற்றுகிறோமா?"

"என்ன கேள்வி இது...? கல்லுக்குள் காற்று புகக் கூட இடமில்லாத இடத்திலிருக்கும் தேரைக்கும் உணவளிப்ப வன் அவன். அவனை நாம் காப்பதா? அவனல்லவா நம்மை, இந்த மண்ணை காத்துக் கொண்டிருப்பவன்?"

"அப்படியானால் ஒரு சாதாரண மானிடனான காபூரிடம் இருந்து அவர் தன்னைத் தற்காத்துக் கொள்ளமாட்டாரா? நாம் எதற்காக அவரின் திருமேனியை ஒளித்து வைத்து காத்திட முயற்சிக்க வேண்டும்?"

"அது... அது... இது நல்ல பேச்சல்ல. இதைத்தான் விதண்டாவாதம். -என்பார்கள்" எகிறிக் குதித்தார் சோழப் பிரதிநிதி.

"எனக்கு புரிகிறாற் போல் பதில் கூற முடிந்தால் கூறுங்கள்... இப்படிக் கூக்குரலிடாதீர்கள்..."

"வேதமாதவராயரே... இவன் எதிர்மறைச் சிந்தனை உடையவன். இவனிடம் இருப்பது அசுர குணம். அது தான் இப்படி எல்லாம் பேசுகிறான்."

"சரி, சரி, வந்த விஷயத்தை மறந்து எங்கெங்கோ செல்லவேண்டாம். நாராயண அழகனுக்கு உரிய பதிலை நாம் கூற முடியாது. அதற்கு ஏற்றவர் மகாபண்டிதர், வேதவித்தகர் சச்சிதானந்தர்தான்."

-வேதமாதவராயர் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது போல பேசி விட்டு நீ செல்லலாம் என்கிற மாதிரி பார்த்தார்.

அவனும் ஒரு தெற்றுப்புன்னகையோடு அங்கிருந்து விலகினான்.

ஓரிடத்தில் கற்தச்சர்களுக்கு பானகம் வழங்கிக் கொண்டிருந்தாள் பிரதாபி.

இளமையின் வாசலில் தங்கத்தை உருக்கி பார்த்துப் பார்த்து செதுக்கிய சிற்பம் போல இருந்தாள். அவளைப் பார்த்த நொடி உண்மையில் உலகின் மிகப்பெரிய சிற்பி அவளது தந்தைதான் என்று தோன்றியது.

அவர் சிற்பங்களைச் செதுக்குவதில் மட்டுமல்ல- அவளையும் கருவிலேயே கன கச்சிதமாக செதுக்கி யுள்ளார்.

ஆனால், அவளோ அவனைப் பார்த்தும் பாராதது போல் பானகம் வழங்குவதிலேயே குரியாக இருந்தாள்.

எல்லாம் அவனது பகுத்தறிவால் வந்தவினை.

அவள்தான் கூறிவிட்டாளே... 'இறை சிந்தனை இல்லாத நீங்கள் என்னைத் தொடாதீர்கள் என்று. அவனு மல்லவா சொல்லியிருக்கிறான் இருந்தால் அது எனக்கு தன்னை உணர்த்தட்டும்' என்று...!

யார் ஜெயிக்கப் போகிறார்கள்?

-நாராயண அழகன் அவளைப் பார்த்த வினாடி அந்தக் கேள்வியில்தான் விழுந்தான்.

அதேசமயம் அவன் தோளின் மேல் ஒரு கரம்!

யாரென்று பார்த்தான்.

பட்டர்!

"என்ன பட்டரே... இப்பொழுது என்ன கூறப் போகிறீர். இறை பற்றில்லாத இந்த நாராயண அழகன் ஆலயப் பணி மட்டும் எதற்கு செய்கிறாய் என்று கேட்கப் போறீரா?"

"ராஜ்நாராயணா... என்னாச்சுப்பா உனக்கு? என்ன இது தீடீர்னு ராஜா காலத்து பாஷைபேசறே?"

-கேட்டவர் இப்போதைய பட்டர். ராஜ்நாராயணோ திணறிப் போனான். அவரையே ஊன்றிப் பார்த்தான்

"என்னப்பா... என்ன ஆச்சு? ஆமா இங்க என்ன பண்றே?"

"நீங்கள்... நீங்கள்... பிரம்மானந்தர்தானே?"

"பிரம்மானந்தரா... யார் அது?"

"பிரம்மானந்தரே என்ன கேள்வி இது...?"

-ராஜ்நாராயண் திருப்பிக்கேட்க பட்டரும் விக்கித்துப் போக, அதை கூர்மையாக பார்த்தபடி தீட்சதர் ஒரு மூலையிலும், விட்டல்ராவ் ஒரு பக்கமும் இருக்க, கோவில் முகப்பில் ஒரு வாலைக்குமரி பிரவேசித்த வண்ணமிருந்தாள்.

தோளில் ஒரு தோல்பை தொங்கியபடி இருக்க மதர்ப்பான் ஒரு காட்டுக் குதிரை போல அடர்வான தலைமுடியோடு அதை கோதிவிட்டபடி கூலிங்கிளாஸ் சகிதம் நுழைந்த அவளின் தோல்பையில்...

36

"சொற்ப காலம் வாழ்ந்து பின் மறைந்து விடும் ஒரு மனிதனுக்கே பல உறவுமுறைகள் உருவாகி விடுகின்றன. தம்பிக்கு அண்ணன், மனைவிக்கு கணவன், மகனுக்கு அப்பா, தாய்க்கு பிள்ளை, மருமகனுக்கு மாமா என்று ஒரு ஒற்றை மனிதன் கொள்ளும் உறவு நிலைகளே அவனுக்கும் அவனைச் சார்ந்தவர்க்கும் உள்ள தொடர்பு எப்படிப் பட்டது என்பதைக் கூறுவதாகும்.

இதே போன்றதுதான் பரம்பொருள் ஆகிய ஒரு இறைவனின் பல சொரூபங்கள். அந்த சொரூபங்களே பரம்பொருளின் சிறப்பை நாம்புரிந்து கொள்ள துணை செய்பவை.

சிவம் என்று ஒரு கடவுள்... அது சிவமாகவே நின்று தன்னைப் புரிய வைத்தல் ஆகாதா...? எதற்கு பல்வேறு தோற்றங்கள், அவதாரங்கள் என்கிற குயுக்தியான கேள்வியைப் புறம் தள்ளி விட்டு அதன் சொரூபங்களைப் புரிந்துகொள்ளும் நோக்கோடு பார்த்தால் பல உண்மைகள் புரியும்.

சிவத்தின் சொரூபங்களில் பைரவமூர்த்தியாக அவர் திகழ்கின்ற கோலம் இந்த கலியுகத்தில் நாம் கருத்தோடு கொள்ள வேண்டிய கோலமாகும்.

அதற்கு முன் பைரவர் யார் என்று பார்த்து விடுவோம். சக்தியின் ஒரு அம்சம், சிவத்தின் கண்டத்தில் தேங்கியிருந்த விஷத்துடன் கலந்து ஒரு பெண்ணுருக் கொண்டது. காளமாகிய விஷம் தான் பரவும் அனைத்தையும் அழித்து அதை அது தனதாக்கிக் கொண்டு விடும்.

அழிப்பது அதன் வினை... அந்த அழிக்கும் வினையே ஒரு பெண்ணாக உருக்கொண்டு வந்தால் எப்படி இருக்கும்?

காளமாகிய விஷத்தில் இருந்து வந்த படியால் அது காளி என்று ஆனது. காளியை அன்னை உமை அண்ணல் சிவத்தின் கண்ட விஷத்துடன் உரு வாக்கக் காரணமே தாருகாசுர வதத்திற்காகத்தான்.

அவன் மற்ற அரக்கர்களைப்போலவே படு புத்திசாலித்தனமாய் யாராலும் அழிக்க முடியாத வரத்தினைப் பெற்றிருந்தான். அவன் வரம் பெற்ற போது உலகில் உள்ள உயிர்கள் எதனாலும் அழிவு ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொண்டான்.

காளியோ உலகின் உயிர்கள் போன்றவள் அல்ல. அவள் பெண் உருவம் கொண்டிருந்த போதிலும் உலகப் பெண்களைப் போல சூல் கொண்டு ஒரு மகவைத் தரும் ஆக்கமில்லாதவள். பொதுவாய் பெண்கள் மார்பில் பால் எனும் உயிர்பேணும் அமுதமுடையவர்கள். காளியோ காளத்தாலேயே ஆனவள். எனவே முற்றிலும் வேறுபட்ட ஒரு பெண்ணுரு. அந்த பெண்ணுரு தான் பிறந்த நோக்கத்திற்கு ஏற்ப தாருகாசுரனை தன் விஷ நெருப்பால் சம்கரித்தது. பின் அதே விஷச்சுடர் ஒரு மகவானது. காளியும் ஒரு தாயாய் அதற்கு தன் விஷத்தையே பாலாய் ஊட்டிட காளியின் மைந்தனாய் காளன் தோன்றினான் அவ்விருவரை யும் சிவமானது தன்னுள் அடக்கிக் கொள்ள, கால பைரவர் தோன்றினார். அந்த காலபைரவ மூர்த்தி யாக சிவமே காட்சி தந்திட அந்த கோலத்தைத்தான் பைரவமூர்த்தி கோலம் என்கிறோம்.

இது அபிதான சிந்தாமணி என்னும் நூல் கூறும் செய்தி. வழக்கம் போல லாஜிகலாய் இதைப் பார்த்தால் ஒரு மில்லிமீட்டர் கூட இதைப் புரிந்து கொள்ள முடியாது.

லாஜிக் என்பது இன்றைய காலகட்டம், இன்றைய மனித வாழ்க்கை முறை மற்றும் செயல் பாடுகளை வைத்து நமக்குள் உருவாக்கியிருக்கும் ஒருவித ஒப்பீட்டுச் சிந்தனை. இந்த ஒப்பீட்டுச்

சிந்தனை யுகங்களுக்கு முற்பட்ட ஒரு விஷயத்தை அளக்கப் பொருந்தாது.

ஒருவரின் உயரத்தை அளக்க, பொருளை எடையிடும் தராசு பயன்பட முடியாது அல்லவா? அதற்கேற்ற மீட்டர் அளவுகோல் தேவைப்படுவது போல் இந்த பைரவமூர்த்தியை அளக்கவும் நம்முள்ள நம்பிக்கையோடு கலந்த ஞான அறிவு தேவை. இது இருந்தால் பைரவரை நன்கு உணரலாம்.

பைரவம் என்பது சிவசக்தி சொரூபம் என்பதில் இருந்து அதன் நேரடி வடிவாக இல்லாமல் அழிக்கும் சக்தியின் தோன்றலில் உருவாகி எட்டுத் திக்கும் வெற்றி கொள்ளப் பார்த்த அதை, ஐயன் மீண்டும் தன்னுள் அடக்கி தனது கணங்களில் ஒன்றாக்கி நிறுத்தினான். எத்திசையிலிருந்தும் தாருகாசுரன் போல ஒரு அசுரத்தாக்கம் நமக்கு நேரிடாமல் காத்திடும் வல்லமை பைரவருக்கே உண்டு. அவரது வாகனமான நாயும் கூட பல நுட்பங்களை உணர்த்தவல்லது. காற்றை ஊடுருவும் பார்வை, அதில் வாசத்தை அறியும் மோப்ப சக்தி, சதா ஒரே நினைவோடு இயங்கும் திறம், அதை வெளிப் படுத்தும் விதமாய் ஆடியபடி உள்ள வால், யாரை யேனும் கடித்தால் கடிபட்டவர் விஷமாகி மடிந்து விடும் கொடுமை, ஒரு நாகத்தைவிட கொடிய நஞ்சினைக் கொண்டிருந்தாலும் அதன் காரணமாக அச்சுறுத்தாமல் மனிதர்களிடம் மிக நன்றி பாராட் டும் அதன் குணம் என்று விலங்குகளில் நாய் மிக மிக வேறுபடுகிறது.

இதை ஆரோகணிக்கும் பைரவமூர்த்தியும் பல நுட்பங்களைக்கொண்ட மூர்த்தியாவார்!

பைரவ வழிபாடு நமது தப்பான வினைக் கர்மங்களை சிறப்புக்கு மாற்ற வல்லதும் கூட!

பிரவாகமாய் பாய்ந்து வரும் ஒரு நதியைப் பார்க்கும் பொழுது ஏற்படும் உற்சாகம் அவளைப் பார்க்கும் யாருக்கும் வரும்!

அப்படி ஒரு அழகு...

அப்படி ஒரு துள்ளல்!

தோளில்தொங்கியபடி இருந்த அவளதுதோல்பையில் ஒரு பாலிதீன் தாளுக்குள் சுருட்டி வைக்கப்பட்ட நிலையில் இருந்தது கோவிலில் காணாமல் போன ஏடுகள்!

படு துணிச்சலாய் அந்த ஏடுகளோடு அதே கோவிலுக்குள் அவள் நுழைந்த வண்ணமிருந்தாள். போனிடைல் ஹேர் ஸ்டைலும் ஜீன்ஸ் பேன்ட் டாப்ஸ் என்று செம மிரட்டு மிரட்டினாள்.

ராஜ்நாராயணோ தலையைப் பிடித்தபடி ஒரு ஓரத்தில் உட்கார்ந்துவிட்டான். மிக அருகில் மதில் சுவரில் அந்த அரசஞ் செடிப் புதர்.

அவனைச் சுற்றி இன்ஸ்பெக்டர் குமாரவேலும் தீட்சதரும் பட்டரும் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். பக்தர்கள் சிலரும் கூட அவர்களைப் பார்த்தபடி பிரதட்சணம் செய்து கொண்டிருந்தனர்.

"என்ன தீட்சதரே... இவரோட பேச்சு உங்களுக்கு ஏதாவது புரியுதா? நாராயண அழகன்... பிரதாபின்னு ஏதேதோ பேசறாரே..." -குமாரவேல் தீட்சதரைக் கேட்க தீட்சதர், "அவன் இப்பதான் வழிக்கு வர ஆரம்பிச்சிருக்கான்..." என்றார்.

"எனக்கு அந்த நம்பிக்கையே துளிகூட கிடையாது. ஊருக்கு போறேன் போறேன்னு சொல்றவனை எதுக்கு இங்க கட்டிப் போடணும். போகட்டுமே..." -பட்டர் தன் விருப்பத்தைச் சொன்னார். அதேசமயம் அந்த குதிரைப் பெண் அவர்களை நோக்கித்தான் வந்தபடி இருந்தாள்

"இன்ஸ்பெக்டர் சார்... யாரோ ஒரு பொண்ணு வரா பாருங்க... பேன்ட்டும் சட்டையுமா என்ன ஒரு கோலம்?" -பட்டர் சடைத்துக்கொள்ள, "யாராவது பத்திரிகைக்காரங்களா இருக்கும்..." என்று குமாரவேலுவும் தாடையை வருட, அவள் அவர்களைச் சமீபித்தாள்.

ராஜ்நாராயண் தலையைக் குனிந்தபடி இருந்ததால் அவளுக்கு அவனது முகம் தெரியவில்லை. குமாரவேலு வைத்தான் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.

"இன்ஸ்பெக்டர்... மை நேம் ஈஸ் ஜீவா. ஐ ஆம் கமிங் ஃப்ரம் சென்னை. நான் சென்னை டைம்ஸ் ரிப்போர்ட்டர்" -பேச்சோடு ஒரு ஐடன்டி கார்டை எடுத்து அவர் எதிரில் நீட்டினாள். அதைப் பார்த்த குமாரவேலுவும் உற்சாகமாகி, "யெஸ்... வாட் கேன் ஐ டு ஃபார் யூ?" என்றார்.

"இந்த கோவில் பத்தி நிறைய கேள்விப்பட்டு எங்க எடிட்டர் இங்க என்னை அனுப்பியிருக்காரு. நான் ஒரு நாலைஞ்சு நாள் தங்கியிருந்து அப்சர்வ் பண்ணி ஒரு தொடர் கட்டுரை எழுதலாம்னு நினைக்கறேன்."

"அதெல்லாம் எதுக்கு... வேண்டாம் எழுதாதீங்கன்னு நான் சொன்னா கேக்கவா போறீங்க?"

"ஐ சீ... நீங்க அலுத்துக்கறத பார்த்தா அப்டி நான் எழுதறதுல உங்களுக்கு உடன்பாடு இல்லாத மாதிரி தெரியுதே..."

"ஆமாம்... இப்ப ஒரு மோசமான சூழ்நிலைல இந்த கோவில் இருக்கு. இந்த சந்தர்ப்பத்துல உங்களை மாதிரி பத்திரிகையாளர்கள் இங்க நடக்கறதைப் பார்த்து சென்சேஷனலா நியூஸ் போட்டா அதனால உங்க பத்திரிகை விக்கலாம். ஆனா, இங்க எங்க பாடு திண்டாட்டமாயிடும்."

"அப்படி என்ன மோசமான சூழ்!நிலை, சந்தோஷமா பரபரப்பான நிலைன்னு சொன்னா கூட நான் ஒத்துக்கு

வேன். தலைகீழா பேசறீங்களே...” -ஜீவா என்கிற அவள் கூந்தலைக் கோதியபடி சொன்னதும், உதட்டை சுழித்து விட்டுக் கொண்டதும் பட்டரையும், தீட்சதரையும் என்னவோ செய்தது. அதேசமயம் தரையின் மேலே வீர்யன் கழுகு வட்டமிடும் நிழல் வேறு.

அண்ணாந்து பார்த்தார் தீட்சதர்.

வீர்யனேதான்!

வீர்யன் காரணமில்லாமல் இடிந்த கோவிலை விட்டு வந்து பறக்கவே மாட்டான். அதிலும் இந்த பெண் வந்திருக்கும் வேளையில் அவளைச் சுற்றுகிற மாதிரி அவன் பறக்கிறான் என்றால் இந்தப் பெண்ணிடம் ஏதோ விசேஷமோ இல்லை விபரீதமோ இருக்க வேண்டும். அவர் மனது வேகமாக கணக்குப் போட்டு முடித்துவிட்டு அவளைப் பார்த்தது.

அவளோ தன்னை மறந்து தலைகவிழ்ந்து அமர்ந்துவிட்டிருக்கும் ராஜ்நாராயண் மேலேயே கண்ணாக இருந்தாள்.

அவனும் நெற்றியைத் தேய்த்தபடி நிமிர்ந்தான்.

ஜீவாவையும் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்த நொடி பார்வையும் பார்வையும் முட்டி மோதிக் கொண்ட மறுநொடி, “ஏய்... ராஜா...” என்று அவளும், “ஏய் ஜீவா நீயா...” என்று இவனும் பரஸ்பரம் கூவிக் கொண்டனர்.

இன்ஸ்பெக்டர் குமாரவேலுவுக்கு புரிந்துவிட்டது. இருவருக்கும் ஏற்கெனவே பரிச்சயம் இருந்திருக்க வேண்டும்.

அதனால்தான் பார்த்த மாத்திரத்தில் பற்றிக் கொண்டு விட்டது.

“ராஜ் இங்க என்ன மேன் பண்றே?”

“என்னைக் கேக்றது இருக்கட்டும். நீ எங்க இங்க?

“நான் இப்ப ஒரு ஜர்னலிஸ்ட். இந்த கோவில் பத்திதான் என்னென்னவோ நியூஸ்லாம் வருதே. அதான் எல்லாத்தையும் தெரிஞ்சுக்க வந்தேன். ஒரு நல்ல தொடர் கட்டுரை எழுதத்தான்...”

“ஐ சீ... வெரி கிளாட்!” என்றவன் குமாரவேலுவின் பக்கம் திரும்பியவனாக, “சார்... ஜீவா என் காலேஜ் மேட்” என்றான்.

“நினைச்சேன்...”

அப்பவே இவ ரொம்ப தைரியசாலி. துப்பாக்கி சுட்டு, கராத்தே சண்டை எல்லாம் போடுவா...”

“அது இருக்கட்டும்... மென்டலி இப்ப நீங்க எப்படி ஃபீல் பண்றீங்க ராஜ்?”

“எனக்கென்ன... ஐஃபீல் ஓ.கே...”

“இல்ல... கொஞ்சம் முந்தி சம்பந்தா சம்பந்தம் இல்லாம ஏதேதோ பேசினீங்களே... அதான் கேட்டேன்.”

“அப்படியா... நானா சம்பந்தா சம்பந்தம் இல்லாம பேசினேன்?”

“ஓ... அதுகூட இப்ப உங்களுக்கு ஞாபகத்துல இல்லையா?”

“இல்ல இன்ஸ்பெக்டர்... பட் இந்த கோவிலுக்கு வந்தாலும் சரி, அந்த இடிஞ்ச கோவிக்குள்ற போனாலும் சரி, எனக்கு என்னவோ ஆயிடுது.”

“என்னவோ ஆயிடுதுன்னா?”

“எனக்கு சொல்லத் தெரியல...”

“நீ ஒண்ணும் சொல்லவேண்டாம். இப்ப ஊருக்குப் போகப் போறியா இல்லையா? அதுக்கு முதல்ல பதிலைச் சொல்” -பட்டர்தான் கத்தரித்துக் கேட்டார்.

“அது... அது...”

"என்ன அது... தெளிவா ஒரு முடிவைச் சொல். ஏன்னா நீ எங்கலை குழப்பற குழப்புக்கு ஒரு அளவே இல்லாமப் போயிடுத்து. போறேங்கறே... போகலேங்கறே... அப்புறம் போறேங்கறே..."

"என்ன ராஜ்? நீ இந்த ஊர் இல்லையா... ஊருக்குப் போகப் போறியா?" -ஜீவா தன் வேகமான கேள்வியை இருவர் இடையே செருகினாள்.

"ஆமாம் ஜீவா. நான் இப்ப யூ.எஸ்.ல இருக்கேன். ஜஸ்ட் ஒரு த்ரீ மன்த்ஸ் லீவுல இண்டியா வந்தேன். இங்க இந்த கிராமத்துலதான் என் அத்தை இருக்காங்க. சரி அவங்களையும் பார்ப்போமேன்னு வந்தேன். வந்து ஆச்சு பத்து நாள்!

ஆனா இந்த பத்து நாள்லதான் இங்க என்னென்ன சம்பவங்கள் தெரியுமா? நினைச்சா தலையே சுத்துது..."

"ஓ... நான் கேள்விப்பட்ட அந்த அமெரிக்க ராஜ்நாரா யண் நீதானா... நீதான் அந்த மரகத நடராஜரைக் கண்டு பிடிச்ச கொலம்பஸா?"

"புடலங்கா... நான் எதையும் கண்டுபிடிக்கலை. ஆனா கண்டுபிடிச்சதா சொல்லி இவங்களும் உன்னைப் போல பத்திரிகைகாரங்களும் படுத்தற பாடு இருக்கே..." -ராஜ்நாராயண் சலித்துக்கொள்ள, வயதான வேடத்தில் இருக்கும் விட்டல்ராவ் அவன் பேச்சைக் கேட்டபடியே பிரதட்சணத்தில் இருந்தான். அவனுக்கு ஜீவாவின் மேல் சந்தேகம்.

'ரமணி சாஸ்திரி அனுப்பிய ராட்சஸி இவளா, இல்லை இவள் வேறு யாரோவா?' கேள்வியோடு 'சிவ சிவ சிவ...' என்று குமாரவேலு தன்னை சந்தேகித்து விடாத படி அவனது பிரதட்சணம் தொடர, "ரொம்ப சந்தோஷம் ராஜ்... நீதான் எனக்கு வேணும். உன்னைப் பாக்கறதுதான் எனக்கு ரொம்ப முக்கியமான அசைன்மெண்ட்டும்கூட. தயவுசெய்து ஊருக்கு போறனேன்னு கிளம்பிப் போய்

டாதே. நான் இப்பதான் வந்துருக்கேன். கொஞ்சம் கம்பெனி கொடு" என்றாள்.

"ஆமாம் மிஸ்டர் ராஜ்நாராயண். உங்களுக்கு இனி போர்டிக்காது. அதான் உங்க ஃப்ரெண்ட் வந்துட்டாங் களே. இந்த ஊருக்குப் போற ஆசையை கொஞ்சம் தள்ளி வைங்க. அதுக்குள்ற அந்த ஃபைவ் எக்ஸ் பார்ட்டி கள பத்தி ஏதாவது க்ளூ எங்களுக்குக் கிடைக்காமலா போயிடும்..." -குமாரவேலுவும் வழி மொழிந்தார்.

"ஃபைவ் எக்ஸ் பார்ட்டிகளா... அது யார் சார்?" -ஜீவா உடனே கூர்மையானாள்.

"நோ... ஒரு ஜர்னலிஸ்ட்டான உங்ககிட்ட நான் அதுபத்தி எல்லாம் பேசக் கூடாது. பேசவும் மாட்டேன்."

"வேண்டாம். எனக்கு இங்க அக்காமடேஷன் பண்ணித் தரலாமே?"

"சாரி... நீங்க ஒண்ணும் எங்க ஆதரைஸ்ட் டிபார்ட் மெண்ட் பர்சன் கிடையாது. என்னால உங்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. அதான் உங்களுக்கு ராஜ் நாராயண் இருக்காரே?"

"அட ஆமால்ல... ராஜ் நானும் உன் கூடவே தங்கிட் றேனே..."

"வாட்... நீ என் கூடவா? நானே என் அத்தை வீட்ல தாம்மா தங்கியிருக்கேன்..."

"அதனால என்ன... ஒரு பேயிங் கெஸ்ட்டா நான் தங்க உன் அத்தை வீட்ல பர்மிட் பண்ண மாட்டாங் களா?"

அவள் கேள்வியைத் தொடர்ந்து அவன் பார்வை பட்டர் மேல்தான் சென்றது.

தீட்சதர் மட்டும் அவள் பேசுவதைக் கூர்மையாக கவனித்தபடி இருந்தார். வீர்யனும் வானில் வட்டமிட்டு இருந்தது!

✠ ✠ ✠

செல்ஃபோனின் வைப்ரேஷன் சவுண்டில் இடுப்புப் பக்கத்தில் மெல்லிய கூச்சமெடுக்கவும் ஒரு தூண் பின் ஒதுங்கி கையில் எடுத்தான் விட்டல்ராவ்.

"விட்டல், நான் ரமணி சாஸ்திரி."

"பேசுங்க."

"உனக்கு ஒண்ணும் ப்ராப்ளம் இல்லையே..."

"என்ன விஷயம்?"

"ஜீவான்னு ஒருத்தி... பாக்க அந்த நாள் சில்க் மாதிரி இருப்பா... இந்த நிமிஷம் அங்க வந்துருப்பா."

"ஜீன்ஸ் பேன்ட், டாப்ஸ், போனிடைல் ஹேர் ஸ்டைல்ல... கரெக்டா?"

"பாத்துட்டியா?"

"பயங்கரமான ஆளா இருப்பா போல இருக்கே. டைரக்டா அந்த ராஜ்நாராயணையே பிடிச்சுட்டா. கூடவே போலீஸ் இன்ஸ்பெக்டர் குமாரவேல். அவர்கிட்டயே தங்க இடமும் கேக்கறா..."

"அவ பின்லேடன்கிட்ட பேசிகிட்டே ஜார்ஜ் புஷ்கிட் டையும் கைகுலுக்கத் தெரிஞ்சவ. நம்ம கூட்டத்தோட ஒரு அசாதாரண ஏவுகணையும் கூட. அவ கேக்கற உதவிகளை செய்து கொடு..."

"நிச்சயமா... ஆமா பூட்டைத் திறக்க ஆள் அனுப்பறதா சொல்லியிருந்தியே..."

"ஒரு சின்ன திருத்தம் அதுல... அந்த வேலையைச் செய்யப் போறதும் ஜீவாதான்."

"ஆச்சரியமா இருக்கே. இவளுக்கு இன்னும் என்னால்லாம் தெரியும்?"

"பாத்துகிட்டே இரு. மரகதலிங்கபுரத்தையே பிளாட் போட்டு வித்துட்டுதான் ஊரை விட்டே கிளம்புவா."

"அவ்வளவு பயங்கரமான பார்ட்டியா?"

"ஆமாம். அவகிட்டதான் இருக்கு ஏடு. அது இனி உங்களுக்கு வழிகாட்டும். அதேசமயம் அந்த ராஜ்நாரா யணை அவ எப்படி காலி பண்ணப் போறான்னும் பாரு..."

"அவன் காலியாகணும். இல்லாட்டி இங்க எங்களால ஒரு ஸ்டெப் முன்னேற முடியாது. இப்ப கூட ஒரு மதில் சுவர்கிட்ட போய் நிக்கறான். அங்க ஏதோ விஷயம் இருக்கணும்."

"அதை எல்லாம் இனி ஜீவா பார்த்துப்பா. அவளை ஒரு சரியான சமயத்துல உன் ரகசிய இடத்துக்கு கூட்டிக்கிட்டு போயிடு..."

"நிச்சயமா...?"

"அதிகபட்சம் ஒரே வாரம். எல்லா வேலையும் முடிஞ்சிடணும்."

"அத நான் எப்படி சொல்ல முடியும்? அந்த ராஜ் நாராயண் ஒழியணுமே..."

"ஒழிவான்... கூடவே இருந்து ஜீவா எப்படி ஒழிக் கறான்னு பார்..."

-ரமணி சாஸ்திரி முடித்துக் கொள்ள விட்டல் ராவும் தூணை விட்டு வெளியில் வந்தான். மதில் சுவர் அருகே அவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்தான்.

இல்லை!

ஓ... கிளம்பிவிட்டார்களா?

கேள்வியோடு நடந்த விட்டல் ராவ் அந்த சுவர் துவாரம் இருக்கும் இடம் அருகே வந்தான்.

துவாரத்துக்குள் எட்டியும் பார்த்தான். உள்ளே ஒரு சிறிய பெரை போல் இடைவெளி!

ஆச்சரியமாக இருந்தது. ஒரு மதில் சுவரில் இப்படி இடைவெளி இருக்க வாய்ப்பே இல்லையே என்றது

டியை எடுத்தவன், அதில் ஒரு குச்சியை எடுத்து உரசிய வனாக திரும்ப அந்த மதில் சுவர் துவார இடைவெளிக்குள் விட்டான்.

பதிலுக்கு பச்சையாக ஒரு ஒளிப்பந்து அவன் கண்ணில் பட்டு அவனை அதிர வைத்தது.

37

'சிவ சொரூபங்களில் தட்சிணாமூர்த்தி சொரூபம் மிக ஆழ்ந்த பொருளினை உடையது.

இந்த உலகைப் பற்றிக் கூறுகையில் இது ஒலியில் இருந்து தோன்றியது என்பார்கள்.

ஆச்சரியமான இந்த கருத்தை விஞ்ஞானிகளாலும் மறுக்க முடியவில்லை என்பதே உண்மை.

ஆம்... பலவித ஆய்வுகளும் ஒலிக்கூறுகளுக்குள் உலகம் அடங்கிக் கிடக்கிறது என்றே கூறுகின்றன. அதனால்தான் சப்தங்களின் வகைகளில் இசை மனதை மயக்குகிறது... இசை நீங்கலான வேறுவித பேச்சுக்கள் அதன் பொருளால் நம்மை பலவித உணர்வுகளுக்கு ஆளாக்குகின்றன.

மந்திரங்களும் ஒலிக்குள் அடங்கி ஒலிப்பவை தான். ஆகவே, ஒவ்வொரு மந்திரமும் அது ஒலிக்கப்படும் பொழுது பிரபஞ்ச இடைவெளியில் உள்ள பஞ்சபூத அணுக்களைக் கூட்டிக் குறைத்து ஒருவிதமான கிரியையினைச் செய்கிறது.

இதை நமக்கு வாய்த்த உடல் மற்றும் மனதால் உணர்ந்து அறிவது மிகக் கடினம்.

பலவிதமான சூட்சமங்களையும் அறிய இயலாத படி உப்பு, புளி, காரத்தால் நமது திரேகம் மதர்த்து விட்டது. இவைகளைத் தவிர்த்து யோகத்திலும், தியானத்திலும் உட்புகும் பொழுது இந்த சூட்சமங்கள் தானாய் விளங்கும்.

மாறாக சூட்சம ரகசியங்களை, அதாவது உலகு குறித்த, மனிதப் பிறப்பு குறித்த, இறை குறித்த விஷயங்களை எவ்வளவு விளக்கினாலும் அது புரிவைத் தராது. புரிந்தது போல் தோன்றி சந்தேகத்தில் சென்று நின்று கேள்விகள் கேட்பதை வாடிக்கையாகக் கொண்டுவிடும்.

உண்மையில் எங்கே ஒலி அடங்குகிறதோ அங்கே ஒளி பெருகி பின் சூட்சமமும் வசப்படும் என்பதே உண்மை.

இந்த மகத்தான உண்மையைத்தான் பகவான் ரமணரிடம் ஒருவர் தனக்கு தெரிந்தவிதத்தில் கேள்வியாகக் கேட்டார்.

'பகவானே... நான் கடவுளை எப்படி அறிவேன்? யார் இருக்கிறார் அவரை எனக்கு காட்ட?' என்று கேட்டார். அதாவது, 'நானிருக்கிறேன்...' என்று ரமணர் சொல்வார் என்கிற எதிர்பார்ப்பில்...

ரமணரோ, 'இங்கே நீ எப்படி வந்தாய்...? எது உன்னுள் விசாரமூட்டியது? எது இப்படி ஒரு கேள்வியை உன்னை கேட்கத் தூண்டியது...? அதுவே உனக்கு கடவுளையும் காட்டும்' என்றார்.

மறைமுகமாய் குருவருள் என்பது போதித்து வழி நடத்துவதல்ல... மோனமாய் புன்னகைத்தும், வாழ்ந்து காட்டியுமே வழி நடத்துவதாகும்.

அதாவது, 'ஒரு வார்த்தைகூட பேசாதே... இறை நாட்டத்தோடு வாழு. உன் வாழ்க்கையே மற்றவர்க்கு உதாரணமாகும்' என்பதே இங்கே செய்தி.

ரமணரும் வாய்மொழியால் உணர்த்தியதைவிட மவுனமாய் உணர்த்தியது அதிகம். ரமணரைப் பார்த்தும், அவரது குருவான சேஷாத்ரி ஸ்வாமிகளைப் பார்த்தும் காஞ்சிப் பெரியவரே கூறியிருக்கிறார்.

'இவர்களைப் போல பேசாமல் ஞான வழி காட்டும் தபஸ் என்னிடத்தில் இல்லை. நான் ஊர் ஊராய்ச் சென்று வேதபுராணம் பற்றி பேசி ஐதீக ஸ்தாபிதமே செய்கிறேன். உண்மையில் இதைவிட மவுனத் தபஸ் மகா பெரியது' என்கிறார், பெரியவர்.

இப்படியே ஒலியற்ற மவுனத்தை மிகப் பெரிதாக உணர்த்தும் ரூபமே தட்சிணாமூர்த்தி ரூபம்!

பிரம்மாவின் புதவல்வர்களான ஸநகன், ஸநந்தநன், ஸநாதனன், ஸனத்குமாரன் ஆகிய நால் வரும் வேதங்களைக் கற்று ஆராய்ந்து அவைகளால் பலவிதமான சிந்தனைகள், கேள்விகளுக்கு உள்ளாகி விரிவடைந்து கொண்டே சென்றனர். எல்லையின்றி விரியும் சிந்தனையால் எப்படி இதனைப் புரிந்து கொள்ளப்போகிறோம் என்று கூடத் தோன்றியது.

அதாவது வானில் ஒருவன் அதன் முடிவைத் தேடி பயணம் செய்தால் என்னாகும். அவன் உயிருள்ளவரை பயணம் தொடரும். ஆனால், வானின் முடிவை அவன் கண்டறிவானா? முடியுமா? உண்மையில் வானத்துக்கு ஆரம்பமும், முடிவும் உண்டா என்ன?

அதே வானில் கண்ணை ஒருவினாடி மூடினாலும் போதும், அது முற்றிலும் இல்லாமல் போவதைப் பார்க்கலாம்.

இதை உணர்த்தும் விதமாக, சின்முத்திரை காட்டி, மவுனமாய் அந்நால்வருக்கும் மவுனத்தையே பொருளுரைக்க, அவர்களும் அந்த மவுனத்தில் வேத இதிகாச புராணங்களில் இல்லாததைக்கூட உணர்ந்து தெளிந்தனர்.

தட்சிணாமூர்த்தி சொரூபம் குருவருளை வாரித் தரவல்லது... ஞான சிந்தனைகளை நமக்குள் மூட்டக் கூடியது. அதிலும் அந்த சின் முத்திரை அசாதாரண மானது.

சிவாலயம் செல்பவர்கள் தட்சிணாமூர்த்தி முன் நின்று சின்முத்திரையைப் பார்த்து மனதை அங்கே பதியுங்கள்.

பல ரகசியங்கள் காலப்போக்கில் தானாய் நமக்குள் அர்த்தமாவதை உணரலாம்!

ஒரு வினாடி விட்டல் ராவுக்கு சுரீர் என்றது. சுற்று முற்றும் ஒரு பார்வை... அப்பொழுது ஒரு பக்தர் கூட்டம் பிரதட்சணத்தில் இருந்தது. எனவே, தனக்குள் ஏற்பட்ட பதற்றம், பரபரப்பை எல்லாம் அடக்கிக் கொண்டு கோபுரத்தைப் பார்த்துகைகளைக் கூப்பியபடி வணங்க ஆரம்பித்தான். அந்தக் கூட்டம் தாண்டிச் செல்லவும் திரும்பவும் ஒரு தீக்குச்சியை உரசி உள்ளே சுடரைக் காட்டி ஆழமாய் பார்த்தான்.

ஒரு லிங்கத்தின் தலைபாகம் போல் ஒன்று தெரிந்தது. ஷணத்தில் குபீர் என்று வியர்த்தது. சட்டென்று கைகளை உதறி விட்டு உள்ளே தொட்டு வருடிப் பார்க்க முனைந்தபோது அது ஒரு இரண்டடி உயர சிவலிங்கம் என்பது புரிந்து போயிற்று.

மதில் சுவரில் கல் வரிசையில் ஒரு சில கற்களுக்குப் பதிலாக சிவலிங்கம்!

வாவ்!

அந்த நாளில் இப்படிக் கூட ஒளித்து வைத்திருப்பார்களோ...? அருகிலேயே கல்வெட்டுப் பாடல் இருந்து அதுவும் கண்ணில் பட்டது

'உள்ளுக்குள் இருப்பது உள்ளே இருப்பது...' என்று கண்ணில் பட்ட அந்த வரிகள் அவனுக்கும் சுலபமாகப் புரிந்தது. 'நம் மனதுக்குள் இருக்கும் கோவிலில் குடி கொண்டுள்ள அந்த பரமேஸ்வரனே இங்கேயும் சுவருக்குள் இருக்கிறான். அத்துடன் அதை சுலபமாகத் தொட்டுத் தூக்கி மார்பு முன்னால் பிடித்தும் கொள்ளலாம்'

என்று அதன் பொருளைக் கச்சிதமாக ஊகித்தவன் உற்சாகமாக கையைச் சொடக்கி விட்டுக் கொண்டான்.

அவனுக்கு அந்த ஷணமே ஏன் அங்கே ராஜ்நாராயண் வந்து நின்றான் என்பதும் புரிந்துவிட்டது.

'அப்பா... ராஜ்நாராயணா... நீ பெரிய எமன்டா!' என்று உள்ளுக்குள் ஒரு கூவல் கூவியவன் உடனடியாக அதை வெளியே எடுத்துக் கொண்டு ஓட முடியுமா என்றுதான் பார்த்தான்.

அவ்வப்போது பிரதட்சணம் வரும் பக்தர் கூட்டம் அவனைத் தடுத்துத் தடுத்து நிறுத்தியது. ஒரு கட்டத்தில் ஆவேசமாக கையை விட்டு சிவலிங்கத்தை அப்படியே மேலே தூக்கப் பார்த்தான். ஆனால், அதன் அடிப்பாகமாக ஆவுடையார் தரையோடு தரையாக ஒட்டிக்கொண்டிருக் கிற மாதிரியோ இல்லை எதனாலோ ஒட்ட வைக்கப் பட்டது போலவோதான் தோன்றியது.

சுவரைச் சுற்றிலும் முழுமையாக இடித்தால் ஒரு சதுரக் கல்லுக்கு பதிலாக அது இருக்க வேண்டிய இடத்தில் லிங்கம் இருக்கும் என்றும் மனது ஒரு கணக்கு போட்டுப் பார்த்தது.

அடுத்து என்ன செய்வது?

படுவேகமாக யோசித்தவன் அங்கிருந்து நகர்ந்தான். ஒரு இடத்தில் சிறிதாக முருகன் சன்னதி இருந்து மறித்தது. அதன் பக்கவாட்டில் யாருமில்லை. அங்கே ஒதுங்கியவன் செல்ஃபோனைத்தான் முதலில் கையில் எடுத்தான். மறுமுனையில் ரமணி சாஸ்திரி.

"என்ன விட்டல்?"

"சாஸ்திரிஜி... ஒரு முக்கியமான விஷயம்?"

"சீக்கிரம் சொல்லு."

"மீதி இருக்கற இரண்டு விக்ரகங்கள்ல ஒண்ணு இருக்கற இடம் தெரிஞ்சு போச்சு. நான் அதை கண்ணா லேயே பார்த்துட்டேன்."

"நிஜமாவா?"

"சத்தியமா... பச்சை மரகதக் கல்லாலான இரண்டடி உயர சிவலிங்கம்..."

"எங்க பார்த்தே விட்டல்?"

"எல்லாம் அந்த ராஜ்நாராயணை வெச்சுத்தான் சந்தேக மில்லை. அவன் ஒரு பயங்கரக் கில்லாடி. கோவில்ல ஒரு இடத்துல அடிக்கடி நின்னு பாத்துகிட்டு இருந்தான். அங்க நான் நோட்டம் போட்டப்பதான் அந்த லிங்கம் என் கண்ணுல பட்டது!"

"ஒண்டர்ஃபுல்... வெரிகுட்... அதை அங்க இருந்து உடனேயே எடுத்துகிட்டு உன் ரகசிய இடத்துக்குப் போறதுக்கென்ன?"

"அதுசரி... முடிஞ்சா செய்யாம இருப்பேனா சாஸ்திரி. கோவில்ல நல்ல கூட்டம். அதோட அங்க விக்ரகம் இருக்கற விஷயம் தெரிஞ்ச ராஜ்நாராயண் ஒரு பக்கம்."

"அவன் எப்படி விட்டு வெச்சுருக்கான்...?"

"தெரியல... ஏதோ இருக்கு. என்னைக் கூட யாராவது கவனிச்சுகிட்டு இருக்கலாம். நான் அந்த லிங்கத்தை எடுக்கும்போது மடக்கிப் பிடிப்போம்னு காத்துகிட்டிருக் கலாம்."

"நோ... அப்படி எல்லாம் எதுவும் நடக்கக்கூடாது. இதுவரை இந்த கோவில் விஷயத்துலே வந்த தோல்வி கள் போதும்."

"அதனாலதான் பதற்றப்படாம ஒதுங்கி வந்து உங்க கிட்ட என்ன பண்ணலாம்னு கேக்கறேன்."

"என்கிட்ட கேட்டா... சிச்சுவேஷன் எப்படின்னு உனக்குத்தானே தெரியும்?"

"இந்த விஷயத்துல நீங்க அனுப்பியிருக்கற அந்த குதிரை எனக்கு ஹெல்ப் பண்ணுவாளா?"

"குதிரையா...?"

"அதான் நீங்க அனுப்பின அந்த பொண்ணு..."

"ஓ... புவனாவைச் சொல்றியா? அவ எம காதகி. ஜஸ்ட் நீ நம்ம குரூப்போட சிக்னமல மட்டும் அவ எதுக்க கொடுத்துப் பார். அப்புறம் தெரியும்."

"ஆமா அவ பேர் புவனாவா. ஜீவாவா?"

"புவனா... ஏன்?"

"ஜீவான்னு இங்க சொன்ன மாதிரி காதுல கேட்டுது."

"அது அவ அந்த ஊர்ல எடுத்துருக்கற புது ஆவதாரப் பேரா இருக்கும்."

"ஆமா... ராஜ்நாராயணை அவளுக்கு ஏற்கெனவே தெரியுமா?"

"என்னய்யா வினோதமான கேள்வியாவே கேக்கறே... அவனை எப்படி இவளுக்குத் தெரிய முடியும்?"

"தெரிஞ்சிருக்கே... அவன்கூடவேல்ல தங்கவும் போறா?"

"ரியலி..."

"இந்த நிமிஷம்... அவன்கூட அவன் வீட்டுக்குத்தான் போயிருக்கா... அதாவது அவனோட அத்தை வீடான பட்டர் வீட்டுக்கு..."

"அப்படியா சேதி... புவனா அப்ப ஏதோ ஒரு தனி ரூட்ல போறான்னு நினைக்கறேன்."

"தனி ரூட்டா...?"

"ஆமாம். அதை எல்லாம் விட்டுத் தள்ளு. நான் சொல்றபடி செய். சிக்னல் கொடு. அவ நிச்சயம் உனக்கு உதவி செய்வா. உதவி என்ன? உனக்கு பிரமாதமா ஐடியா கூட கொடுப்பா..."

"சரிங்க... காரியத்தை முடிச்சுட்டு திரும்பிக் கூப்பிட்றேன்."

"பி கேர்ஃபுல்... என்ன?" -மறுமுனை முடங்க தீவிர மாக யோசித்தவன் அங்கிருந்து விலகத் தொடங்கினான்.

அப்படியே திரும்ப ஒரு பார்வை அந்த இடிந்த மதில் மேல் சென்றது. அதை அப்படியே துவாரத்துடன் விட்டுச் செல்வது தவறு என்கிற மாதிரியும் தோன்றியது. திரும்ப வும் அங்கேயே சென்றான். சற்று தள்ளி ராஜ்நாராயண் பிடுங்கிப் போட்டிருந்த ஆலஞ்செடி பாதி காய்ந்தும் மீதி காயாமலும் கிடந்தது.

எடுத்தான். துவாரம் தெரிந்த இடத்தில் அதை திரும்பச் செருகி வைத்தான். சற்று நிம்மதியோடு நடக்க ஆரம்பித்தான்.

✠ ✠ ✠

அன்னபூரணி ஒரு பக்கமும் பாரதி ஒரு பக்கமும், சந்திரிகா ஒரு பக்கமுமாய் நின்று கொண்டு ஜீவா என் னும் அந்த புதிய பெண்ணையே பார்த்துக் கொண்டிருந் தனர். அவள் அவர்கள் யார் பார்ப்பதைப் பற்றியும் லஜ்ஜையும் இன்றி ஒரு மினி கண்ணாடியில் முகம் பார்த்தபடி லிப்ஸ்டிக் பூசிக் கொண்டிருந்தாள்.

பூசி முடித்தவள் ஒருமுறை உதட்டை மடக்கிப் பிரித்து ஒட்டிப் பார்த்துக்கொண்டு விட்டு பாரதி பக்கம் திரும்பினாள்.

"கமான்... நீயும் போட்டுக்கோ. உன் உதட்டுக்கு இது ரொம்ப பிரமாதமா இருக்கும்" என்றாள். பாரதி பதில் சொல்லவில்லை. ஒருமாதிரி குழப்பமான முறைப்பி லேயே இருந்தாள்.

"அத்தை... இவளும் இங்க என்கூட தங்க அனுமதிச்சதுக்கு ரொம்ப நன்றி..." என்று ஒரு மாதிரி செருமலோடு கனைத்தான் ராஜ்நாராயண். பிறகு அவளோடு கொல்லைப்புறத்துக்குச் சென்றான்.

கொல்லையில் கிணற்றுத் திட்டின் மேல் வீரியன் கழுகும் காத்துக் கொண்டிருக்கற மாதிரி அவனைப் பார்த்தது. ராஜ்நாராயணுக்கு சுருக்கென்றது. அவளோ... 'பியூட்டிஃபுல்' என்று கூவிக்கொண்டே வீட்டுக்குள் சென்று தன் பேக்கைத் திறந்து மினி வீடியோ கேமராவை எடுத்து வந்தாள். அதை ஃபோகஸ் செய்து கழுகைப் பார்க்கவும் முயன்றாள்.

தன் படபடக்கும் இமைகளை விலக்கி லென்ஸ் வழியாக கண்ணிரண்டையும் அழுந்தப் பதித்துக்கொண்டு கழுகை ஃபோகஸ் செய்த போது கழுகு அங்கே இல்லை. பதிலுக்கு ரிஷி ஒருவர் கிணற்றுத் திட்டின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார்!

38

மாதங்களில் மார்கழிக்கு தனிச்சிறப்பு உண்டு. இந்த மாதத்தில்தான் வைணவச் சிறப்பு மிக்க வைகுண்ட ஏகாதசி திதியும் சைவச் சிறப்பு மிக்க திருவாதிரை தினமும் பெரிதும் வழிபாடு செய்யப் படுகின்றன.

மாதம் தோறும் ஏகாதசியும் திருவாதிரையும் வந்தாலும் மார்கழியில் மட்டும் அது சிறப்பாகக் கருத பல நுட்பமான காரணங்கள் உள்ளன.

நாள், கிழமை, மாதம் என்கிற பொழுதுகளின் அடையாளங்களை எடுத்துவிட்டால் என்னாகும் என்று ஒரு சிறு கற்பனை செய்து பாருங்கள்.

உலகை இயக்கமே ஸ்தம்பித்துப் போய்விடும். யாருக்கு எவ்வளவு வயது என்பதில் இருந்து வாடகை தருவது, வட்டி தருவது என்கிற பொருளாதாரச் செயல்பாடுகள் வரை சகலமும் ஸ்தம்பித்து குழப்பமும் மிகுதியாகிவிடும்.

இந்நிலையில் நில்லாமல் ஓடிக்கொண்டு இருக்கும் காலத்திற்கு ஒரு அடையாளம் தேவைப் பட்டது. அந்த அடையாளத்திற்கு ஒரு காரணமும் தேவைப்பட்டது.

கறுப்பான மனிதனை கருத்த ஆசாமி என்றும், உயரம் குறைந்தவனை குட்டையன் என்றும் அழைக்கிறமாதிரி நாள்களையும் அதற்குண்டான காரண காரியங்களை ஆராய்ந்து அதற்கேற்ப அடையாளங்களை அவைகளுக்குள் உருவாக்கினார்கள்.

இந்த காலம் என்பது நில்லாமல் செல்லும் ஒரு நேர்கோடு போன்றது என்றே முதலில் கருதப் பட்டது. ஆனால், தவறு என்று உணர்ந்து அது ஒரு வட்டம் என்று கொள்ளப்பட்டது.

வட்டத்தில்தான் நாம் ஒரு முழுச்சுற்று சுற்றிய நிலையில் சரியாக ஏறிய இடத்திற்கே வந்திருப் போம்.

பொழுதுகளையும் கூர்ந்து கவனித்து பாருங்கள். கிழக்கு அடிவானில் காலை6 மணிக்குத் தெரியும் சூரியன் திரும்ப அதே இடத்தில் மறுநாள் 6 மணிக்கு தெரிகிறான் என்றால், காலப்பயணம் என்பது வட்டமானதாக இருந்தால் அல்லவா இது சாத்தியம்?

இப்படி பார்த்து பார்த்து தெரிந்துகொண்டவைகளில் மேலும் பல நுட்பங்கள் தெரிய வந்தன. அதன்படி வானில் நிகழும் கிரகங்களின் சஞ்சாரங்கள், பயணங்களுக்கேற்ப பூமியில் பொழுதுகளில் காற்றாலை வரிசையில் இருந்து ஒளி அலை, மின்காந்த அலை மற்றும் பற்பல விதமான அலைவரி

சைகளில் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன என்பதே அது.

அந்த மாறுதல்களை உணர்ந்தும், காலவட்ட பயணத்தை கச்சிதமாய் அது எங்கு நிகழும் என்பது தெரிந்தும், என்று நிகழும் என்றும் உணர்ந்தும் வகுத்தவைத்தான் திதிகள், ஹோரைகள் ராகு கால, எமகண்டம், அமிர்த நாழிகை நேரங்கள்!

அதாவது ஒருவர் ஐப்பசி மாதம் கேட்டை நட்சத்திர நாளன்று மாலை 5.30 மணிக்கு பிறக்கிறார் என்றால் அவர் பிறந்த அதே நொடிப் புள்ளி சரியாக ஒரு ஆண்டு கழித்து திரும்ப வரும். அவரும் வாழ்வில் ஒரு சுற்று எனும் வயதைக் கடந்திருப்பார். அதேசமயம் தான் பிறந்த வேளைக்கு ஆசிகளால் பலம் சேர்த்துக்கொண்டு அடுத்த சுற்றை தொடங்கும்போது காலநேரங்கள் நமக்களிக்க தயாராக உள்ள நன்மைகளை நாம் பயன்படுத்திக் கொள்ள தெரிந்தவர்கள் ஆவோம்.

இந்த கால நேர ஞானப்படி ஏகாதசி திதியைப் பார்த்தால் அன்று ஒரு அதிசயம் நம் உடலில் நிகழ்கிறது. அதாவது நமது சரீர சுரப்பிகள் அன்று தேக ஆரோக்கியத்திற்கு எதிராக ஒரு திரவத்தை அதிகம் சுரக்கச் செய்கின்றன. வாயில் எச்சில் சுரப்பதுபோல் இப்படி சுரக்கும் திரவம் உணவு செரிக்கப்படும் போது உருவாகும் உடற் கிரியை யால் அந்த உணவில் கலந்து பின் ரத்தத்தில் சேர்ந்து உடம்பெங்கும் பயணமாகி எலும்பறைகள் என்னும் மூட்டுக்களின் உள்ள சக்தி பசையையும் ஒரு ரசாயன திரவம் போல கரைத்து விடுகிறது.

எனவே அன்று விரதமிருந்து இரத்த ஓட்டத்தின் விரியத்தைக் குறைத்துவிட வேண்டும். பின் மறு நாள் துவாதசி திதியில் அதே சுரப்பிகள் அமிர்தத் திற்கு இணையான திரவத்தைச் சுரக்கின்றன. அப்படி சுரக்கும் திரவம் உடம்பில் ஒட்டி நோய் எதிர்ப்புத் திறன் உடையவர்களாய் நாம் திகழ

வேண்டி துவாதசி அன்று நெல்லி அகத்தி இஞ்சி முதலியவைகளை அன்றைய உணவில் சேர்த்து கொள்கிறோம்.

எவர் ஒரு ஏகாதசி விரதம் இருந்து அன்று உணவு உட்கொள்கிறாரோ அவர் 100 ஆண்டுகள் ஆரோக்கியமானவராக மருத்துவரையே சந்திக்காமல் வாழக் கூடியவராய் இருப்பார். அத்துடன் மார்கழி யில் உதய காலத்தில் ஓசோன் வாயுவுடன் பல ஜீவ வாயுக்கள் இயற்கையாகவே மிகுதியும் தோன்று வதால் அதிகாலை வேளையில் எழுவது, தொழுவது ஒரு சிறந்த பயிற்சியாகிறது.

இது அப்படியே திருவாதிரைக்கும் பொருந்தும். அன்றுதான் ஈசன் நடராஜ மூர்த்தியாய் களி நடனம் புரியும் நாள்.

நடனம் என்பது ஒரு கலைச்செயல் கண்ணை யும் கருத்தையும் கவர வல்லது. காண்பவர் மனதுக் கும் பல வித சிந்தனைகளையும், ஆனந்தத்தையும் தரக் கூடியது. அதாவது நம்முள் சந்தோஷம் மற்றும் புதிய எண்ணங்கள் உருவாகும். நடராஜ நடனமும் உலகில் பல புதியவைகளை உருவாக்குகிறது.

அதாவது அவன் நடனமே உலகின் இயக்கம். இந்த உலகம் ஆனந்தமாய் இயங்க ஆனந்த தாண்டவம் புரிகிறார் அந்த மூர்த்தி.

அந்த மூர்த்தியைத் தரிசிக்கையில் நம்முள்ளும், பிரபஞ்சம், அதில் வாழும் உயிர்கள், அதன் இயக் கம் வாழ்வு மறைவு போன்ற சகலத்தையும் பற்றிய எண்ணமும் தாக்கமும் ஏற்பட்டு இறுதியில் நான் யார்? என்ற கேள்வி வந்து நிற்போம்.

நடராஜரே நான் யார் என்கிற ஞானவிசாரத்தை நம்முள் உருவாக்குபவர். நான் யார்? என்பது தெரிந்துவிட்டாலோ புரிந்துவிட்டாலோ எது முக்தி, எது மோட்சம் என்பது வரை எல்லாம் தெளிவாகி விடுமே!

ஸ்தம்பிப்பில் இருந்தாள் ஜீவா! கேமரா வழியாக பார்த்தபோது தெரிந்த சித்தர் உருவம் கேமராவை விலக்கவும் கழுகாகத் தெரிந்தது ஆச்சரியம்.

அவள் முகம் போன போக்கு அதில் தொணித்த அதிர்ச்சி எல்லாமே ராஜ்நாராயணைக் கூர்மையாக அவளைக் கவனிக்க செய்தது.

அவனோடு பட்டரும் மற்றவர்களும் கூட அவளைக் கூர்ந்து பார்த்தபடி இருந்தனர். பாரதியிடம் அந்த கூர்மை கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது.

"என்ன ஜீவா... ரொம்ப ஆர்வமா படம் எடுத்தே... இப்ப என்னடான்னா திருதிருன்னு முழிக்கிறே?" -ராஜ்நாராயண் அவளை கேள்வியால் கலைத்தான்.

"இல்ல... ஒண்ணுமில்ல... ராஜ் இப்ப இங்க யாராவது ஒரு ஓல்ட்மேன் உக்காந்திருந்தாரா?"

"ஓல்ட் மேன்?"

"ஆமாம்... தாடி மீசையோட லைக் ஒரு கோமணம் கட்டிகிட்டு பிச்சைக்காரனாட்டம்?"

"என்ன உளர்றே... இரண்டு பேரும் ஒண்ணாத்தானே இங்க வந்தோம். இதோ சுத்திலும் இவ்வளவு பேர் வேற இருக்காங்க. அப்படி இருக்க பிச்சைக்காரன் மாதிரி ஒருத்தன் எப்படி வர முடியும்?"

"அப்படியா... ஐ ஆம் சாரி... நான் தான் கொஞ்சம் கன்ஃப்யூஸ் ஆயிட்டேன் போல இருக்கு. ஆமா இந்த கழுகு?"

"இது இந்த ஊர்ல திரியற கழுகுதான்..."

"ரொம்ப கேஷுவலா எப்படி இங்க வந்து உக்காந்திருக்கு..."

"என்னக் கேட்டா... என் அத்திம்பேரைக் கேள். அவர்தானே இந்த ஊர்க்காரர்..." -அவன் பட்டரை நோக்கி கை காட்டினான்.

பட்டர் மிடறு விழுங்கினார்.

"இந்த கழுகைப் பத்தி தெரிஞ்சுண்டு என்னம்மா பண்ணப் போறே? என் பொண்டாட்டி தினம் சோறு போடுவா. அதுக்காக வரும்னு வெச்சுக்கோயேன்" -வேண்டா வெறுப்பாக பதில் சொன்னார்.

"கழுகு, காக்கா மாதிரி சோறு சாப்பிடுமா என்ன?"

"இது சைவக் கழுகு ஜீவா..." -ராஜ்நாராயண் சொல்லிட்டு வேகமாகச் சிரித்தான். ஆனால், அவளால் சிரிக்க முடியவில்லை. காமிரா வழியாகப் பார்த்தபோது தெரிந்த சித்தர் முகம் அவளுக்குள் ஆழமாகப் பதிந்து விட்டிருந்தது.

பாரதி பார்த்துக் கொண்டே நின்றாள்.

சந்திரிகா அதை கவனித்தவளாக அவள் காதைக் கடிக்க ஆரம்பித்தாள்.

"என்னக்கா... அத்தான் ரூட் மாறுகிறார் மாதிரி தெரியறதா?"

"வாயை மூடுடி..."

"ஜாக்ரதை... நீ இப்படியே சிடுசிடுன்னு இருந்தே அவ கொத்திண்டுபோய்டுவா. உன்னை விட ஷேப்பா தளதளன்னு வேற இருக்கா. தஸ்சுபூஸ்ங்கன்னு இங்கிலீஷும் பேசறா..."

"இப்ப நீ வாயை மூட மாட்டே..."

"என்ன பண்ணப் போறே... இங்கையே நின்னுண்டு அவா பேசறத ஒட்டுகேட்கப் போறியா?" -சந்திரிகா பதிலுக்கு பதில் என்று பாரதியைப் பிரட்டி எடுக்க உள்ளே அன்னபூரணியும் பட்டரிடம் கசிந்து கொண்டிருந்தாள்.

"ஏன்னா... இப்படி எவளோ ஒருத்தியைக் கூட்டிண்டு வந்துருக்கானே... எத்தனை நாளைக்கு இருக்கப் போறாளாம்?"

"யாருக்குத் தெரியும்... ஊருக்கு போறேன்னு சொன்னவனை தீட்சதரும், இன்ஸ்பெக்டரும் மடக்கித் தடுத்துப்பிட்டா. நானும் இவன் தங்கமாட்டான். ஓடிடுவான்னு நினைச்சேன். ஆனா போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடங்கற மாதிரி இந்த குட்டியை வேற கூட்டிண்டு வந்து நிக்கறான்."

"எனக்கு என்னமோ அவளைப் பார்த்தா நல்ல பொண்ணு மாதிரியே தெரியல. பொம்மனாட்டி எங்கையாவது பேன்ட் போடுவாளோ?"

"அடி போடி பைத்தியம்... அதையாவது அவ போட்டுண்டு இருக்காளேன்னு நான் நினைக்கறேன். நீ என்னன்னா..."

"சரி... இவளுக்கு சாப்பாடு நம்ம ஆத்துலதானா?"

"வேற வழி... இந்த கிராமத்துல ஓட்டலா இருக்கு. போய் சாப்ட்டுக்கோன்னு சொல்ல..."

"ஹூம்... என் தலையெழுத்து. மகராஜன் எந்த வேளைல ஊருக்குள்ற காலடி எடுத்து வெச்சானோ..." -மடேரென்று அன்னபூரணி மார்பில் அறைந்து கொண்டு விலக, பட்டரும் கழுத்தை வளைத்து தோட்டத்துப்புறம் பார்த்தபோது மதில் சுவர் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தது வீர்யன்.

'கோவில்ல இருந்து இந்த பொண்ணை இது தொடர்ந்துண்டு வரதே... ஏதாவது காரணம் இருக்குமே?' -மனதுக்குள் கேள்வி கேட்டு ஒரு சில வினாடி கண்களை மூடிக் கொண்டு யோசித்தவர் திரும்ப மதில் சுவர் வீர்யனைப் பார்த்தபோது பகீரென்றது. சுவர் மேல் காலாட்டியபடி ஜோமணத்துடன் அந்த சித்தர். ஜீவா வர்ணித்த அதே உடை- உருவ அமைப்பில்.

பட்டருக்கு ஷணத்தில் திக்கியது திணறியது...

"அ... அ... அன்னம்... செத்த இங்க வா. ஓடி வா... வந்து பார்..." -திக்கித்திணறி மனைவியை அழைத்தார். அவளும் ஓடி வந்து பார்த்தாள். சரியாக அந்த நொடி அந்தக் கழுகு சரேலென்று வானம் எழும்பிப் பறந்தது. பட்டர் வரையில் சித்தரே ஆகாயத்தில் எழும்புகிற மாதிரி தான் இருந்தது.

"என்னன்னா... வீர்யன் பறக்கறத பார்க்கவா கூப்பிட்டேள்..."

"இல்ல அன்னம். அது வீர்யன் இல்ல. அது அது சித்தர்... சித்தர்..."

"சித்தரா... என்ன சொல்றேள்?"

"ஐயோ உன் கண்ணுக்குத் தெரியலியா?"

"கழுகுன்னா தெரிஞ்சது..."

"அப்படியா... என் கண்ணுக்கு அந்த சித்தர் தெரிஞ்சாரே... அந்த பொண்ணு கூட கேட்டாளே..."

"அப்படியா...?"

"ஆமாம் அன்னம்... வீர்யன் கழுகு இல்லடி. அது சித்தர். அந்த இடிஞ்ச கோவில்ல ஒரு சித்தர் சமாதி ஆயிட்டதா சொல்வாளே அந்த சித்தர்... இப்பதான் தெரியறது... அவர்தான் கழுகா இருக்கார்..."

"எப்படி... எப்படின்னா இது சாத்யம்?"

"சாத்யமில்லாமலா ஒரு கழுகு மனுஷனானது. என் கண்ணுலையும் பட்டது...?" -பட்டர் உடம்பு பரவசத்தில் நடுங்கியது.

கொல்லையில் கிட்டத்தட்ட ராஜ்நாராயணும் ஜீவா என்கிற அந்த நாகரீகக் குதிரைப் பெண்ணிடம் ஒருவித பரவசத்துடன்தான் பேசிக்கொண்டிருந்தான்.

"இங்க வந்ததுல இருந்து நடக்கற ஒரு விஷயம் கூட நம்பும்படியாவே இருக்காது ஜீவா. நீ கேட்டா நான் உன் காதுல பூ சுத்தறதா நினைப்பே.

"எனக்கும் சமயங்கள்ல ஏன் இங்க வந்தோம்னு இருக்கு... நம்ம பேரண்ட்ஸ் அடிக்கடி எல்லாம் தலை எழுத்து எல்லாம் தலை எழுத்துன்னு சொல்வாங்க. நீ கூட கேள்விப்பட்டிருப்பே..."

"அதுக்கென்ன...?"

"அது உண்மையா இருக்குமோன்னு நான் நினைக்க ஆரம்பிச்சுட்டேன்னா பாத்துக்கையேன்..."

"ஒரு பொய்ய பத்து பேர் ஒத்துகிட்டு ஃபாலோ பண்ணினா அதுவும் உண்மையாயிடும். இது ஒரு தியரி. படிச்சிருப்பியே..."

"உம்... சொல்லு..."

"அப்படித்தான் நீ சொல்றதும் இருக்கு. தொடர்ச்சியா நம்ப முடியாத விஷயங்கள் சில சமயங்கள்ல நடக்கறது உண்டு. அப்ப நம்ம புத்தியே ஒருவித மயக்கத்துக்கும், தயக்கத்துக்கும் உள்ளாகி சுத்தி நடக்கறதுல இருக்கற சைன்சைப் பார்க்காம அமானுஷ்யமா அதை நினைக்க ஆரம்பிச்சிடும்..."

"அப்படிங்கறியா?"

"வேற என்ன சொல்ல..."

"சரி... ரீ இன்கார்னேஷன் பத்தி நீ என்ன நினைக் கறே?"

"இருக்கற குழப்பத்துல அது வேறயா?"

"ஆமாம்... அந்த கோவிலுக்கும் இடிஞ்ச கோவிலுக்கும் போனாலே நான் ஒரு சிற்பியாயிட்றேன் தெரியுமா?"

"யூ மீன்?"

"என்னத்த சொல்ல... என் பேர் நாராயண அழகன்னு மாறிடுது. சினிமா ஃப்ளாஷ்பேக் மாதிரி பழைய காலம் அப்படியே பிச்சர் ஆகுது. ஆனா அதுலையும் ஒரே ஒரு ஆறுதலான விஷயம் ஒண்ணு இருக்கு..."

"என்ன அது?"

"அப்பவும் நான் சாமி இல்லேன்னு சைன்ஸ் பேசறேன்."

"அப்படின்னா டெஃபனட்டா உனக்கு மெண்ட்டலா ஏதோ பிராப்ளம்டா..."

"யூ மீன்...?"

"ருத்ரன், பழனிவேல், மீரா ஹெலன்னு சைக்கியாட் ரிஸ்டைப் பார். இதை கஷ்டமான ஒரு இங்கிலீஷ்ல ஃபோபியா லிஸ்ட்லதான் வைப்பாங்க."

"நானும் அப்படித்தான் நினைச்சேன். விட்டா போதும்னு ஓட விரும்பினேன். ஆனா யாரோ ஒரு எக்ஸ் குரூப்பாம். அவங்க டார்கெட்ல இந்த கோவில் இருக் காம். பார்ட்டிக்குலரா நான் இருக்கேனாம். ஆகையால அந்த இன்ஸ்பெக்டர் குமாரவேல் இங்கையே இருன்னு ஸ்டாப் பண்ணிட்டார். பத்தாக்குறைக்கு நீ வேற வந் துட்டே..." -ராஜ்நாராயண் குரலில் வருத்தம் இழையோடி யது. அந்த பதில் ஜீவாவையும் யோசிக்க வைத்திருந்தது. அவள் முகத்தில் தீவிர சிந்தனை.

"என்ன ஜீவா... என்ன யோசனை?"

"ஒண்ணுமில்ல..."

"ஏய் கமான்... என்னவோ பெருசா திங்க் பண்றே நீ..."

"யெஸ்... நான் உன்னை சில கேள்விகள் கேட்கலாமா?"

"எப்படி... கேஷுவலாவா... இல்லை ஒரு ஜர்னலிஸ்டா பேட்டி காணப் போறியா?"

"டூ இன் ஒன்..."

"சரி கேள்..."

"நிஜமா சொல்... இந்த ஊருக்கு நீ உன் அத்தை பெண்ணை பார்க்கத்தான் வந்தியா?"

"பார்க்க மட்டுமில்ல... கல்யாணமே பண்ணிக்க. அவளோட ஸ்டேட்ஸ் திரும்பறதுதான் என் பிளான்."

"அப்ப நீ கண்டுபிடிச்ச அந்த நடராஜர் சிலை?"

"நான் எங்க கண்டுபிடிச்சேன். லவ் பண்ணும்போது கோவிலை மூடிட்டாங்க. இது தெரியாம இரண்டு பேரும் ஜொள்ளு விட்டுகிட்டு கோவில்லயே இருந்தோம். அப்பதான் அந்த விக்ரகம் கண்ணுல பட்டது."

"அது எப்படி யார் கண்ணுலயும் படாதது உன் கண்ணுல மட்டும் படும்?"

"நான்சென்ஸ்... நான் கோவிலை விட்டு தப்பிக்க ஷாட் ரூட் தேடினேன். அப்ப பார்த்து நாய்வேற துரத்தவும் ஒரு இடத்துல போய் ஒளிஞ்சேன் அப்பதான் கண்ணுல பட்டது."

"நிஜமாவா?"

"என்ன நீ... உன்கிட்ட எதுக்கு நான் பொய் சொல்லணும்?"

"இல்ல... என் பத்திரிகை ஆசிரியருக்கு வந்த தகவல்படி நீ இந்த ஊர்ல இருக்கற சிலைகளைக் கடத்த வந்தவன்னும் ஒரு டாக் இருக்கு. அதான் அப்படி கேட்டேன்."

"அடக் கொடுமையே... இதோ பார் ஜீவா. என் சூட்கேஸ் திருட்டு போயிடிச்சு. அதுலதான் என் பாஸ்போர்ட், கிரீன்கார்ட், விசா, டாலர்ஸ் எல்லாம் இருக்கு. அது இல்லாம நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்ல... சீ... இப்படி அத்திம்பேர் வேஷ்டியை கட்ற ஆளா நான்..."

"இப்ப அதுக்கென்ன?"

"கேளு... என் சூட்கேஸ் திருடு போயும் நான் டூப்ளிகேட் ரெடி பண்ண ஊருக்கு கிளம்பிட்டேன். என் அத்திம்பேர்கிட்ட சேவலமா 200 ரூவா இருந்தா கொடுன்னு கேக்க வந்தேன். 20 ஆயிரம் டாலர்ஸ்

சம்பாதிக்கற நான் 200 ருபீஸ்க்கு கோவிலுக்கு வந்தேன். அப்பதான் உன்னைப் பார்த்தேன்.

'இப்பவும் சொல்றேன். என்னை வண்டி ஏத்தி விட்டேன்னு சொல்லு. ஓடிப்போயிடுவேன். போக முடியாம நான் இங்கேயே இருக்கறத வெச்சு கன்னாபின்னான்னு கெஸ் பண்ண ஆரம்பிச்சுட்டீங்களா?"

"அப்ப உன் சூட்கேஸ் கிடைச்சா நீ கிளம்பிடுவியா?"

"ஒரு நொடி இங்க இருக்கமாட்டேன். இதோ பார் ஜீவா... உன் பத்திரிகை ஆசிரியர்கிட்ட சொல். நான் எதையும் தேடி வரலை. நான் ஒரு அப்பாவி!" -ராஜ்நாராயண் நிஜமாலுமே நொந்து போய் பேசினான். கேட்டுக் கொண்டிருந்த பாரதிக்கோ அது என்னவோ செய்தது!

✠ ✠ ✠

எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் வாசல்புறம் திண்ணையில் போய் படுத்துக் கொண்டாள் ஜீவா. நாலும் துணைக்கு என்று ராஜ்நாராயணும் போய் படுத்துக் கொண்டான்.

பாரதிக்கு பக்பக்கென்று ஆகிவிட்டது.

பஞ்சும் நெருப்பும் பற்றிக் கொண்டுவிட்டால்...?

தூக்கம் வராமல் புரண்டபடி இருந்தாள்.

அப்போது அந்த நிசப்தத்தில் செல்ஃபோன் ஒன்றின் சிணுங்கல்!

39

இந்த உலகில் மாறாமல் இருப்பது மாற்றம் ஒன்றுதான் என்பார்கள். அது எவ்வளவு பெரிய உண்மை என்பதை நாம் ஒவ்வொரு விஷயத்திலும் உணரலாம்.

நாம் கூட பிஞ்சுக் குழந்தையாய் தாயின் மடிக்குள் அடங்கி விடக்கூடிய அளவில் இருந்து பின் ஆறடி வரை வளர்ந்து உருமாறி விடுகிறோம்.

மனித உயிரிடம் மட்டுமா இந்த மாற்றம்? கல், மண், செடி, கொடி என்று எல்லாமுமே மாறிக் கொண்டேயிருக்கிறது.

உயரமான மலைகள் கூட ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஏதோ ஒரு வகையில் வளருவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இதன் மூலம் மாறுதல் என்பதன் பின்னே ஒரு இயக்க சக்தி இருப்பதை நாம் உணரலாம். அது உலகம் முழுக்க ஒரு விஷயத்தைக் கூட விடாமல் கைப்பற்றி மாற்றிக் கொண்டிருப்பதையும் உணரலாம்.

இந்த உண்மைகளை உணர்ந்து கொள்ளும், சிந்திக்கும் திறம் கொண்ட மனம் கூட ஒருவேளை இருப்பது போல் ஒரு வேளை இருப்பதில்லை. நமது எண்ணங்கள் கூட மாறிக் கொண்டேதான் இருக்கின்றன.

இந்த மாற்றத்தை இயக்கம் என்றும் கூறலாம். இந்த இயக்கத்துக்கு கர்த்தா யார்? எல்லா மதங்களுமே ஒரு சிறு பேதம் கூட இல்லாமல் இறைவன் என்கின்றன.

இவருக்குமேல் ஒரு நாத்திகவாதி இருக்க முடியாது என்கிற ஒரு சுய சிந்தனையாளர் கூட இந்த இறைகருத்தை பரிசீலிக்கிறார்...

என்னைத் தொட்டு, நான் வந்த என் தாயைத் தொட்டு, அவள் தாயைத் தொட்டு, அவளுக்கும் தாயைத் தொட்டு தொடர்ந்து கொண்டே போனாலும் ஒரே ஒரு ஆணும், ஒரே ஒரு பெண்ணும் அதாவது இந்த உலகில் இருந்திருக்க வேண்டும். அவர்கள் எப்படி வந்தார்கள் என்பதன் பின்னால் ஒருவேளை இந்தக் கடவுள் இருக்கலாம். ஒரு வாதத்துக்காக இதை ஒத்துக்கொள்ளலாம் என்றுதான் கூறுகின்றனர்.

ஆக மாறாத தன்மை படைத்த மாற்றம் என்னும் இயக்கத்தின் பின்னே இறைவன் என்று ஒருவன் இருக்கிறான் என்பது நிதர்சனம்.

இது ஒரு விஞ்ஞானக் கூடத்தில் டெலஸ்கோப் வழியாக ஒன்றைப் பகுத்துப் பகுத்துப் பார்த்து இறுதியில் அதை ஒப்புக் கொள்வது போன்ற ஒரு அப்பழுக்கில்லாத உண்மை.

ஒரு ஆச்சரியம் பாருங்கள்.

இந்த இயக்க கதியான இறைவனை நமது வேத புராணங்கள் 'நடராஜன்' என்கின்றன! ஒரு ஷணம்... இல்லையில்லை அந்த ஷணம் கூட அதிகம். அதனிலும் குறைவான நொடிப் பொழுது அந்த நடராஜனின் ஆட்டம் நின்றாலும் உலக இயக்கத்திலும் ஒரு தேக்கம் ஏற்படும்... ஸ்தம்பிப்பு நிகழும் என்றும் கூறப்படுகிறது.

பிரளயம், பூகம்பம் இவைகளால் பூமியில் அவ்வப்போது அழிவு ஏற்பட்டு வருவதை அறிவோம். அவ்வாறு அழிவு ஏற்பட்ட பின் அது எதனால் ஏற்பட்டிருக்கக் கூடும் என்கிற காரண காரியங்களை விஞ்ஞானிகள் கூறுவர்.

முன்னதாக ஒருபோதும் பூகம்பங்களை, பிரளயத்தை, எரிமலை வெடித்துச் சிதறுவதை யாரும் கூறியதில்லை. ஒன்று நிகழ்ந்து முடிந்த பின் இதனால் அதனால் என்று கூறுவது ஒன்றும் பெரிய காரியமும் இல்லை.

இந்தப் பிரளய, பூகம்பங்களை நடராஜ கோபம் என்றோ, இல்லை நடனத்தின் ஒரு கடின வளைவு என்றோ, அதுவுமன்று ஒரு பலமான வீச்சு கொண்ட முத்திரை என்றோதான் ஞானிகள் கருதுகின்றனர்.

இன்றைய வாழ்வியல் சிந்தனைகளுடன் இந்த கருத்தைப் பரிசீலிப்போ மேயானால் சிரிக்கத்தான் தோன்றும்.

ஆனால், புரிந்து கொள்ள முயன்று ஞான விலாசத்துடன் பார்த்தால் நடராஜ அற்புதம் புரியும்.

ஒரு கணக்கிற்கு சூத்திரம் என்று ஒன்று இருக் கிறது. அதைக் கொண்டு போடப்படும் கணக்கோ பக்கம் பக்கமாகக் கூட விரியக் கூடும். ஆனால், சூத்திரம் சிறியதாக இருக்கும். அதே போல கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கலுக்கெல்லாம் உலகின் பல மொழிகளுக்கு நடுவில் அனைவரும் புரிந்து கொள்ளத் தோதாக பொதுவாக குறிகள் உள்ளன. அந்த குறியைப் பார்க்கும் மாத்திரம் நமக்கும் அது விளங்கி விடும். ஒரு கூட்டல் குறியைப் பார்த்து அது கூட்டல் என்கிற பொருளை விளங்கிக் கொண்டு பல நூறு கோடிகளைக் கூட விடை காணலாம். அந்த கோடிகள் எண்ணிக்கையில் மிகவும் பெரியவை. அந்த பெரியவை பெரியவை யாக உதவிய கூட்டல் குறியோ ஒரு சிறு வடிவம்தான்.

இதிலிருந்து உணர்த்தும் குறியீடுகள் சிறியதாக ஒரு புள்ளியாக மட்டுமே இருந்தாலும் அதன் விரிவாக்கம் எல்லையற்றது என்பது விளங்கும்.

இந்த குறியீட்டுச் சிந்தனையோடு அப்படியே நடராஜ மூர்த்தியைப் பார்க்கும்போது அதிலும் ஆயிரம் குறியீடுகள்...! அவை பஞ்ச பூத விளக்கங் களாய் அதில் உயிர்கள் தோன்றி வாழ்வதன் விளக்கமாய் அவைகளுக்கு நேரிடும் மாற்றங்களை ஒவ்வொரு நொடியும் சொல்வதாய் இருப்பது தெரியும்.

நடராஜ தோற்றமே ஒரு மாபெரும் பிரபஞ்ச தத்துவம். அது நடனமாடும் ஒரு ஆண் மகனை புகைப்படமாய் பிடித்து வைத்திருப்பது போன்ற ஒன்று அல்ல.

ஊன்றிப் பார்த்தால் பார்க்கும் போதே நாம் அதனுடன் இணைந்து கொள்ளலாம். அந்த நொடி ஒரு இடையறாத ஆட்டத்தை மனக்கண்ணில் காணலாம்.

அந்த ஆட்டத்தில் ஒவ்வொரு அசைவிலும் பிரபஞ்சப் பந்தலில் காற்று வீச்சில் மாறுதலையும் சூரிய உலாவின் ஒளிஅலைகளையும் கூட மெல்ல மெல்ல அறியலாம்.

அந்த மூர்த்தியின் ஒரு ரோமக் கால் அசைவால் எங்கோ ஒரு இடத்தில் காற்றழுத்த மையம் ஏற்படு வதில் இருந்து, உதைத்து ஆடும் கால் வளைவால் இடி முழக்கமே வான்வெளியில் ஏற்படுவதையும் கூட உணர முடியும் என்றால் பிரபஞ்சம் வேறு அந்த நடராஜன் வேறில்லையோ என்கிற ஞானம் மெல்ல ஒரு மொட்டு போல துளிர்விடும்... இது அப்படியே வளர்ந்து இறதியாக நாம் வேறு நடராஜன் வேறில்லை, நாம் வேறு உலகம் வேறு இல்லை... நம் செயல்களின் எதிர் விளைவே உலகில் நிகழும் ஒவ்வொரு செயலும் என்பது வரை அது செல்லும்... அறிவது அறிவு என்றால் அதையும் சேர்த்து புரிந்து கொள்வதே ஞானம்.

நடேசன் அந்த ஞானத்தின் மூலம்!

மெல்லிய செல்ஃபோனின் சிணுங்கல், தூங்காமல் படுத்தபடி இருந்த பாரதியை உசுப்பியது.

எங்கிருந்து வருகிறது?

மெல்ல எழுந்திருந்தாள்... பட்டர் சற்றுத் தள்ளி பலகையைத் தலையணையாக வைத்தபடி படுத்திருந்தார். அவருக்கு சற்றுத்தள்ளி அன்னபூரணி.

அவர்கள் தூங்குவதும் ஒரு அழகு என்கிற மாதிரி கோணல் மாணலாக இல்லாமல் ஒருக்களித்தும் ஒடுங்கியும் உடம்பை வைத்துக் கொள்ளாமல் மல்லாக்க காலை நீட்டியபடியும், மார்பு மேல் இரு கைகளை சேர்த்துக் கொண்டும் படுத்திருந்தனர்.

துளி கூட துணி விலகியோ, சுருண்டோ இல்லை.

அந்த நிலையிலும் பாரதிக்கு அது ஆச்சரியமாக இருந்தது. ஆனால், சந்திரிகா ஒரு மரவட்டை போல் சுருண்டிருந்தாள். தலைக்கு வைத்துக்கொள்ள வேண்டிய தலையணையை கால்களுக்கு இடையில் செருகிக் கொண்டிருந்தாள்.

வாசல் கதவு தாழிடாதபடி ஒருக்களித்து சாத்தப் பட்டிருந்தது.

மெல்ல எழுந்திருந்து கதவை நெருங்கும்போது செல்ஃபோன் அரவமும் முடிந்து போயிருந்தது. எட்டிப் பார்த்தாள் பாரதி!

ஜீவா வெளியே சாலைக்குப்போய் நின்றபடி யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்த நொடி என்ன ஒரு தைரியம் என்றுதான் தோன்றியது.

அவள் பேசுவது பாரதி காதில் விழவில்லை. அவ்வளவு சன்னமான குரலில் பேசியபடி குறுக்கும் நெடுக்குமாய் நடந்துகொண்டிருந்தாள்.

இரவில் பிசாசுகள் இப்படித்தான் நடக்குமோ? பாரதி கூர்ந்து கவனித்தபடி இருட்டோடு இருட்டாக நிற்க, வெளியில் பேச்சு தொடர்ந்து கொண்டிருந்தது

"நல்லவேளை, இப்பவாவது பேசினீங்களே... செல்லை ஆஃப் பண்ணியே வெச்சிருந்தா எப்படி? நீங்க பட்டர் வீட்ல இருக்கறது தெரிஞ்சு அந்த பக்கமா ஒரு நாலு

தடவையாவது வந்துருப்பேன். அதே சமயம் என்னை போலீஸ் கவனிக்குதோன்னும் ஒரு பயம்."

"விஷயத்துக்கு வா... இப்ப எதுக்கு கூப்ட்டே?"

"எதுக்கா... கேட்டா அசந்துடுவீங்க. அந்த ராஜ்நாராயண் சரியான எமன். இரண்டாவது சிலை இருக்கற இடத்தை அவன் கண்டுபிடிச்சுட்டு சுமுக்கமாக இருக்கான். அது தெரியுமா உங்களுக்கு?"

"உளறாதே... ராஜா ஒரு அப்பாவி. எதையும் நான் கண்டுபிடிக்கலேங்கறான்."

"எந்தத் திருடனாவது நான்தான் திருடன்னு ஒத்துக்குவானா... என்னம்மா இது கேள்வி."

"இதோ பார்... நான் சொல்றததான் நீ கேக்கணும். என்னை கன்ஃப்யூஸ் பண்ணாதே."

"அட, என்னம்மா நீங்க... நான் இந்த ஊர்ல மூணு மாசமா மாறு வேஷத்துலையும், பிச்சக்காரனாவும் அலைஞ்சுகிட்டிருக்கறவன். நீங்க இப்படி என் பேச்சைக் கேட்காம பேசினா எப்படி?"

"திரும்பவும் சொல்றேன், நான் சொல்றத நீ கேள். ராஜாவோட சூட்கேஸ் இப்ப உன்கிட்டதானே இருக்கு?"

"ஆமாம்மா..."

"அது திரும்ப ராஜாவுக்குக் கிடைக்கணும். அது கிடைச்சுட்டா அவன் கிளம்பிடுவான்."

"அப்ப அதைத் திறந்து பாக்க வேண்டாமா?"

"வேண்டாம். ராஜா ஊருக்குப் போகட்டும். அப்பதான் நம்ம வேலை சுலபமா முடியும்."

"இப்பவே பாதி முடிஞ்ச மாதிரிதான். இரண்டாவது விக்ரகத்தைப் பார்த்துட்டேன். விடியறதுக்குள்ளே எடுக்கலேன்னா அவன் முந்திக்குவான்."

"இரண்டாவது விக்ரகம்னா... சிவலிங்கமா, இல்லை அம்பாள் விக்ரகமா?"

"மரகதலிங்கம்மா... மரகதலிங்கம். தீக்குச்சியை உரசிக் காட்டுனா பச்சையா டாலடிக்குது ரொம்ப விவ ரமா கோவில் மதில் சுவர்ல ஒளிச்சு வெச்சிருக்காங்க..."

"மதில் சுவர்லையா...?"

"மதில் சுவர்லையேதான்... அதுவும் நீங்க எங்க அந்த ராஜ்நாராயணை மீட் பண்ணீங்களோ அந்த சுவத்துல..."

"ஏய் நீ நிஜமாதான் சொல்றியா? உளறலையே..."

"இப்பவே வந்தா கூட காட்றேன்."

"போலீஸ் காவல்லாம் எந்த அளவு இருக்கு?"

"வழக்கம் போலத்தான்... மதிலைச் சுத்தி பாரா போட் ருக்காங்க. ஆனா பாரா கத்தறவனுங்க சரியான சோத்து மாக்கானுங்க. சிகரெட் பிடிச்சுகிட்டு அழுவாத குறையா நடந்துகிட்டு இருக்காங்க."

"அப்ப அவங்களை சமாளிச்சு உள்ள போக முடியுமா?"

"தாராளமா... நூறு அடி சுவர் மேல கூட தாவி ஏற நங்கூரப் பல் பூட்டுன கயிறு ஏணி தயாரா இருக்குது. ஆனா அவங்களை எப்படி டபாய்க்கறது?"

"கவலைப்படாதே... இப்பவே நான் வரேன். அவங்க சிகரெட் பிடிப்பாங்க தானே?"

"தாராளமா... சிகரெட் இல்லாட்டி செத்தே போய்டு வாங்க. அப்படி ஊதித் தள்றாங்க..."

"சரி அந்த மதில் சுவர்கிட்ட வா. அவங்க உன்னை சந்தேகப்பட்டு பிடிச்சு வைச்சு விசாரிப்பாங்க. நான் வரேன். உன்னையும் அதை வெச்சே அடையாளம் தெரிஞ்சுக்க முடியும்."

"என்னையும் பிடிச்சு வெச்சுகிட்டா எப்படிம்மா மீள்றது. கதை கந்தலாயிடுமே..."

"பேசாதே. நான் அங்க என்ன பண்றேன்னு பார். உன்னை அவங்க விசாரிச்சா வயிறு சரியில்லாம டாய்லெட் போக வந்தேன்னு மட்டும் சொல். மிச்சத்தை நான் பாத்துக்கறேன்..."

"சரிம்மா... உங்களை நம்பித்தான் போறேன். கவனம்மா..."

"போ... போ... பத்து நிமிஷத்துல அங்க இருப்பேன்" -பேச்சோடு பேச்சாக சுற்றிச் சுற்றிப் பார்த்தவள் வாசல்படி அருகில் கறுப்புக்குள் அடர் கறுப்பாய் நின்றபடி இருக் கும் பாரதியையும் பார்த்துவிட்டாள்.

ஆனால் துளியும் அசரவில்லை.

புத்திக்குள் மின்னலாய் ஒரு புதுக் கணக்கு.

செல்ஃபோனை மார்பருகே உள்ள சட்டைப் பாக்கெட்டில் வைத்தபடியே திரும்பி வந்தாள்.

"கமான் பாரதி... என்ன பண்றேன்னு கவனிக்கிறியா?" என்று படு நைச்சியமாகக் குரல் கொடுத்தாள்.

பாரதிக்கு உதறல் எடுத்துவிட்டது.

மெல்ல வெளிப்பட்டு திண்ணை வராண்டாவிற்கு வந்தாள்.

ராஜ்நாராயண் சூப்பர் குறட்டையில் இருந்தான்.

"என்னடா நடுராத்திரியில யார் கூட போன்ல பேசறே னேன்னு பாக்கறியா? பத்திரிகையில வேலை பாத்தாலே இப்படித்தான். எடிட்டர் பேசினார். இப்பக்கூட ஒழுங்கா பாதுகாப்பு கொடுக்கறாங்களான்னு கவனிச்சு அதையும் கட்டுரைல எழுதச் சொன்னார்.

"இஃப் யூ டோண்ட் மைன்ட்... என் கூட இப்ப உன்னால வரமுடியுமா?" -அவள் கேள்வி பாரதியை விக்கலெடுக்கவிட்டது.

"இந்த ராத்திரியிலையா...?"

"ஆமாம்... ராஜாவை கூப்பிடலாம். ஆனா அவன் ராத்திரியில வந்தா அது அவனுக்கு ஆபத்துல முடியலாம். அவனைத்தான் ஒரு குரூப் தேடிகிட்டு இருக்காங்களே... அதனாலதான் உன்னை கூப்பிட்டேன்."

"காத்தால போய்க்கலாமே..."

"காத்தால போக எனக்கு தெரியாதா... இந்த போலீஸ்காரங்க தூங்கிட்டாங்களா முழிச்சுகிட்டிருக்காங் களாங்கறது தெரிய வேண்டாமா?"

"அது... அது..."

"சரி உனக்கு பிடிக்கலைன்னா நீ போய் படு. நான் ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வரேன். தூக்கம் தள்ளுது. ஆனாலும் கடமை... என்ன பண்ண?"

-ஒரு செயற்கை கொட்டாவி விரிய ஒரு மாதிரி பார்த்தவள் உள் மனதுக்குள் 'நீ மட்டும் வந்தால் அது எனக்கு பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி' என்றும் சொல்லிக் கொண்டாள்.

பாரதி பேந்தப் பேந்த விழித்தாள்.

"என்ன... பயமா இருக்கா? பைத்தியம். நான் இருக் கேன். அதான் ஊர் பூரா போலீஸ்காரங்களா இருக்காங் களே..."

"இல்ல... அப்பாகிட்ட ஒரு வார்த்தை..."

"கிழிஞ்சது... நான் போனது தெரியாம போய்ட்டு வரணும்னு நினைச்சா... நீ கெடுத்துடுவே போல இருக்கே. அப்படியே ஒரு நைட் வாக். அவ்வளவுதான். ஜஸ்ட் 15 நிமிஷம்! கமான்..." -பேச்சோடு கையைப் பிடித்தும் இழுத்தாள். பாரதி தயங்கித் தயங்கி அவளு டன் வீதியில் கால் வைத்தாள்.

✠ ✠ ✠

இந்த மதில் சுவருக்கு மறுபுறத்தில் உள்ள வீதி. விட்டல் ராவை ஒரு போலீஸ்காரர் குடைந்து கொண் டிருக்க விட்டல் ராவும், "கொல்லைக்குப் போக வந்தே னுங்க..." என்று சொல்லியபடி இருக்கும்போது டார்ச் லைட் ஒளி தரையில உருள ஜீவா, பாரதியுடன் அந்தப் பக்கமாய் வர இரண்டு பாரா போலீஸ்காரர்களும் அவளை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

"என்ன சார்... யார் இந்த ஆள்? சந்தேக கேசா...?" -படு தோரணையாகக் கேட்டாள். பாரதி பக்கத்தில் இருப்பது படுசவுகர்யமாக இருந்தது. அவளைத் தெரி யாத போலீஸ் இல்லை.

"நீங்க யாரும்மா?"

"சரிதான்... பிரஸ் கவரேஜுக்காக வந்த ஜீவா... உங்க இன்ஸ்பெக்டர் குமாரவேல் எதுவும் சொல்லலையா?"

"அப்படியா... இந்த ராத்திரியில கவரேஜா?"

"இப்ப வந்தாதானே இந்த மாதிரி சந்தேக கேஸ் பார்ட்டிகளைப் பாக்க முடியும். நீங்களும் தூங்கறீங்களா, முழிச்சுகிட்டிருக்கீங்களான்னுல்லாம் பாக்க வேண்டாமா?"

பேச்சில் பட்டை கிளப்பினாள். பாரதி திறந்த வாயை மூடவில்லை. விட்டல்ராவும் அசந்திருந்தான்.

அப்படியே பாக்கெட்டில் இருந்து சிகரெட் பாக் கெட்டை வெளியில் எடுத்தாள். உதட்டில் ஒன்றை செருகிக்கொண்டு நெருப்புக்காக போலீஸ்காரர்களைப் பார்த்தாள்.

அவர்கள் முனியப்பசாமி மாதிரி கண்களை விரித்திருந் தனர். அரை மனதாக ஒரு போலீஸ்காரர் தனது சிகார் லைட்டை அவள் சிகரெட் முன் நீட்டி சுடரைக் காட்டினார்.

அவளும் சுடரைப் பிடித்து புகையைக் சுக்கியபடி சிகரெட்டை அவர்களை நோக்கி நீட்டினாள்.

"உம்... ஃபாரின் சிகரெட். பிடிச்சுப் பாருங்க கமான்..."

"இருக்கட்டும்மா..."

"அட என்ன சார் நீங்க... ஒரு பொம்பள நான் பிடிக் கறேன். நைட் ட்யூட்டி பாக்கற உங்களுக்கு என்ன... கமான், ஹேவ் இட்..." அவளது துள்ளலான பேச்சு அவர் களை சிகரெட்டை எடுத்துக் கொள்ள வைத்தது. அவள் எதிரிலேயே பற்ற வைத்தனர். அதே சமயம் ஒருவித வாசம் ஸ்ப்ரே செய்யப்பட்டு பரவினது போலவும் இருந் தது. அது பாரதியை மயக்கத்தில் பிடித்து இழுத்தது... அவளைப் பின்தொடர்ந்தனர் அந்த இரண்டு போலீஸ் காரர்களும். விட்டல்ராவ்கூட மயங்கி விழப் போனான். மற்றவர்கள் விழுந்துவிட அவனை மட்டும் தாங்கிப் பிடித்தவள் மளமளவென்று வேறு ஒரு ஸ்ப்ரேயரை பேன்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து அவன் மூக்குக்கு நேரே அடித்தாள்.

அவனும் தலையை உதறிக்கொண்டு அவளைப் பார்த்தான்.

"கொஞ்ச நேரம் கிறுகிறுப்பா இருக்கும். அப்புறம் சரியாயிடும். அவங்க இப்ப எழுந்திருக்கமாட்டாங்க. அவங்க புடிச்ச சிகரெட் அந்த மாதிரி—கமான்... எங்க இருக்கு அந்த சிலை..."

"காட்றேன்மா. நிஜமா சொல்றேன். நீங்க பயங்கரமான பொம்பளதான். என்ன ஒரு வேகம், என்ன ஒரு தைரியம். ஆமா இந்த சிலையோட நீங்க போயிடுவீங்களா... இல்லை?"

"நீ சிலையை காட்டு. நான் இந்த ஊரை விட் டெல்லாம் அவ்வளவு சுலபத்துல கிளம்ப மாட்டேன்."

"அவங்க மயக்கம் தெளிஞ்சு எழுந்தா உங்களைத் தேடுவாங்களே..."

"எதுக்கு தேடணும்... நானும் அவங்க கூடவே கொஞ்ச நேரம் கழிச்சு வந்து மயங்கினா மாதிரி படுத்துடப் போறேன். நீ எங்களை மயங்க வெச்சுட்டு தப்பிச்சு ஓடிட்டேன்னு சொல்லிட்டா முடிஞ்சு போச்சு பிரச்னை..."

"அப்ப நான் சிலையோட கம்பி நீட்டணுமா?"

"ஆமாம். தொணதொணக்காம சிலை எங்க? முதல்ல காட்டு..." -அவள் துரிதப்படுத்த அவன் சுக்கிதமாக இடிந்த மதிலை சமீபித்து அருகில் இருளில் சுருட்டிப் போட்டிருந்த நூல் ஏணியை எடுத்து விரித்து ஆதன் நங்கூரப் பல்லோடு அதைத் தூக்கி மதில் மேல் எறிந் தான். அதுவும் நச்சென்று மாட்டிக்கொண்டு அவளை மேலே ஏறு என்றது.

ஏற ஆரம்பித்தாள்.

மதிலின் உச்சி வரை சென்றவள் அங்கே காலைத் தூக்கிப் போட்டு அமர்ந்தவளாக கோவிலுக்குள் பார்த்தாள். பகீரென்றது!

உள்ளே பிரகார வெளியில் சித்தர் ஒருவர் நிர்வாண மாய் எங்கோ வெறித்தபடி நடந்து கொண்டிருந்தார்!

40

'சிவமானது அர்ஜுனனுக்கு பசுபதாஸ்திரத்தை வழங்கிய தகவல்கள் மகாபாரதத்தில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

நமக்கெல்லாம் அர்ஜுனன் யார் என்று தெரியும். 'வில்லுக்கு அர்ஜுனன்' என்று சொலவடையே உள்ளது. அதாவது அவனைப்போல குறி வைத்து ஒன்றை அடைந்தே தீர்பவர்கள் எவருமில்லை.

அவன் குறி வைத்தால் அவனுக்குக் கிடைக்காத தும் ஒன்றுமில்லை. அர்ஜுனனுக்கு இன்னொரு

பெயர் தோல்வியே அடைய முடியாத ஒரு முயற்சி. சுருக்கமாய் ஒரு வார்த்தையில் சொல்வதானால் வெற்றி. இதன் வடமொழிப் பெயரே விஜயன்!

இந்த விஜயன் சிவபெருமானை வணங்கித் துதித்து குறி வைத்து தவமும் இயற்றிட அதன் பலனாய் கிடைத்ததுதான் பசுபதாஸ்திரம்! அதாவது பசுபதியின் அஸ்திரம். அதுவுமல்லாது பசுபதியாகிய சிவமே அஸ்திரமாகி விஜயன் வசம் சேர்ந்தான். அதனால் அவனும் வெல்ல முடியாத ஜெயத்ரதனை வென்றான்.

ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த பசுபதாஸ்திரத்தை விஜயன் அடைந்திட வழிகாட்டியவர் யார் என்றால் மிக வியப்பாக இருக்கும். அது சாட்சாத் அந்த நீலவண்ணக் கண்ணன். விஜயனின் தேரோட்டி.

பாரதத்தில் கர்ணனுக்கும், விஜயனுக்கும் தன் விஸ்வரூப தரிசனத்தைக் காட்டி, அதனுள் சர்வத்தையும் காட்டி பரம்பொருள் நானே என்று நிரூபித்தவன். கீதையை உபதேசித்து மானிட வாழ்க்கைக்கு வாழ்க்கைநெறிகளைக் கூறியவன்.

'மஹா விஷ்ணுவின் அவதார மூர்த்தியான கண்ணன், அர்ஜுனனுக்கு எதற்காக சிவத்தை உபாசித்து அஸ்திரம் பெற வழிகாட்ட வேண்டும்?

அந்த அஸ்திரத்தைத் தானே தரலாமல்லவா?

சிவத்தையும் தன்னுள் அடக்கிய மூர்த்திக்கு எதற்கு இந்த சுற்றி வளைக்கும் வேலை?

அடுத்து அர்ஜுனனின் வீரத்துக்கு மிஞ்சியவனாகி விட்டவனா ஜெயத்ரதன்? இவனை அழிக்க சிவகடாட்சம் அர்ஜுனனுக்குத் தேவையா?

இப்படி எல்லாம் கேள்விகள் நம்முள் எழும்?'

கொஞ்சம் சந்தனக் கடத்தல் வீரப்பன் விஷயத்தைப் பார்ப்போமா? ஒரே ஒரு தனி மனிதனான இவன் ஆயிரக்கணக்கான போலீசாராலும் வெல்ல

முடியாதவனாக இருக்கிறான். எந்தக் காடு நமக்கெல்லாம் மழை தருகிறதோ அதே காடு அவனுக்கு அன்றாடம் உயிர் தருகிறது.

ஒரு கோணத்தில் பார்த்தால் ஒரு அரசுக்கு இரு அரசுகள் முனைந்தும் வீரப்பனை நெருங்க முடியவில்லை. ஆனால் அவனோ நகருக்குள் புகுந்து பல வி.ஐ.பிக்களை கடத்திச் சென்று பேரம் பேசுகிறான். தன் செய்கைகளுக்கு அவன் அனேக நியாயங்களையும் கற்பிக்கிறான். அந்த நியாய வாதங்களை ஒதுக்கித் தள்ளவும் முடியாது. அரசும் தன்னால் அவனை நெருங்க முடியாததற்கு பல காரணங்களைக் கூறியபடி உள்ளது. நிச்சயம் இதற்கு ஒரு முடிவு உண்டு.

கொஞ்சம் புராணத்திற்கு வாருங்கள். அசுரர்கள் அட்டகாசம் செய்யும்போது தேவர்கள் அணி திரண்டு பரமாத்மாவான சிவனிடமோ, விஷ்ணுவிடமோ செல்வார்கள். அவரும் நேராகவோ, மறைமுகமாகவோ உதவிட முன் வருவார், பின் அதுவும் ஒருநாள் நிகழும்.

ஆயினும் நேராக வந்து அழித்திடாமல் அசுரர்களின் வரசித்திக்கு ஏற்ற கொலைக் கத்தியை அனுப்புவார்.

காலம் எவ்வளவு மாறினாலும் அணுகுமுறைகள் அப்படியேதான் இருக்கின்றன.

இப்பொழுதும் வீரப்பனை அழிக்க மத்திய அரசான பரமாத்மா அந்த காட்டில் ஒரு அணு குண்டைப் போட்டால் போதும். ஆனால், அவனோடு சேர்ந்து அழியும் மற்ற விஷயங்களைத் திரும்ப பெற முடியுமா? அவனை மட்டும் அழிக்க திட்டமிடுவதுதானே சிறந்த முடிவாக இருக்க முடியும்?

பசுபதாஸ்திரமும் அப்படித்தான்!

மனிதனாய்ப் பிறந்துவிட்டதால் அந்தப் பிறப்புக்குண்டான கட்டுமானங்களோடு கூடிய கண்ணன் அதர்மத்தை அழிக்கவே வல்லதான

அழித்துக் காக்கும் மூர்த்தியான சிவத்தைச் சுட்டு கிறான்.

அர்ஜுனன், கண்ணனிடம் கண்ட அம்சங்கள் மற்றும் அர்ச்சிக்கத் தூவிய மலர்கள் சிவன் மேலும் கிடக்கக் காண்கிறான். கண்ணன் வேறு சிவம் வேறில்லை என்றும் உணர்கிறான்.

அப்படியே இறையருளாலன்றி உலகில் சில வெற்றிகளை அடைய முடியாது என்றும் அறி கிறான். அந்த வெற்றியைப் பெறுமுன் எத்தனை பெரிய வீரனாக இருந்தாலும் புலனடக்கி முனி வனாகிட வேண்டும் என்றும் தெரிந்து கொள்கிறான்.

அனைத்துக்கும் மேலாய் வெற்றியும் தோல்வியும் எதிர்க்கின்ற விஷயத்தை வைத்தே கிட்டுவதையும் புரிந்து சிலிர்க்கிறான்.

உண்மையில் இத்தனை ஞானங்களை ஜெயத்ரதன் மூலம் பெற்ற அர்ஜுனன் அவனை களத்தில்தான் எதிரியாகப் பார்க்கிறான். கருத்தில் அவன் கண்ணனைவிட அவனுக்கு பேருதவி செய்து கொண்டிருப்பவன் என்பதுதான் நிஜம்.

பசுபதாஸ்திரம் அளித்த சிவம் இப்படி பல சிந்தனைகளை நமக்குள் ஏற்படுத்துகிறது.

அதன் அஸ்திரம் ஒன்று! ஆனால் தாக்கங்கள்...? நினைக்க நினைக்க மலைக்க வைக்கிறதல்லவா?

ஜீவா மதில் சுவர் மேல் அமர்ந்திருந்த நிலையில் ஏதோ வீதி உலா செல்லும் ஒரு பாதசாரியைப் போல விஸ்ராந்தியாக அந்த ராத்திரியில் நடந்து செல்லும் அந்த சித்தரைப் பார்த்து மிரண்டு போனாள்.

அவர் ஏறத்தாழ அவள் கேமிரா வயிலாக வீர்யன் கழுகினைப் பார்க்க முனைந்தபோது தெரிந்த அதே சித்த சன்யாசி போலத்தான் இருந்தார்.

இதற்குள் கீழிருந்து வீட்டல்ராவ் குரலைத் தணித்தபடி கத்தினான்.

"ஹலோ... நேரமாகுது அந்தப் பக்கமா கீழ இறங்க வழி தெரியலியா?"

அவளிடமோ பதில் இல்லை. அந்த சித்தரோ அவள் மேலே மதில் மேல் அமர்ந்திருப்பதைப் பார்க்காமல் அந்த இடிந்த சுவர்ப் பக்கமாகச் சென்று நின்றார்.

காய்ந்து போன நிலையில் செருகப்பட்டிருந்த அரசஞ் செடியைப் பிடுங்கிப் போட்டுவிட்டு பரபரவென்று கைகளைத் தேய்த்து விட்டுக் கொண்டார். பின் உள்ளே நிதானமாக எட்டிப் பார்த்தவர் அப்படியே சற்றுத் தள்ளி தரையில் பத்மாசனம் போட்டு அமர்ந்து கொண்டார். கைகளைக் குவித்து வணங்கவும் தொடங்கினார்.

ஜீவாவுக்கு நடுங்கியது.

இந்த நபர் இப்படி ஒரு காவல்காரன்போல் அமர்ந்து கொண்டிருக்கின்றானே...? இவனை எப்படி சமாளிப்பது? இவன் யார்? என்றெல்லாம் கேள்விகள் அவளுக்குள் குதித்துக்கொண்டு ஓடின.

திரும்ப கீழ் இருந்து கத்தினான் விட்டல்ராவ்.

"நேரமாகுது... இப்படி மேல பதில் சொல்லாம உட்கார்ந்திருந்தா எப்படி?"

உடனே அவள் கை தட்டி அவனை மேலே வரும்படி சொல்ல பரபரவென்று நூல் ஏணியில் அவன் ஏறத் தொடங்கினான்.

ஜீவாவை சமீபித்து அப்படியே காலைத் தூக்கிப் போட்டு மதில் மேல் அமர்ந்தான். கொஞ்சமாய் மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கினான்.

ஜீவா கீழ் நோக்கி கை காட்டினாள்.

அந்த சித்தர் பத்மாசனத்தில் வணங்கிக் கொண்டிருந் தார். விட்டல்ராவுக்கு ஷணத்தில் திக்கென்றது. மெல்லிய இருளில் அவன் அதிர்ச்சியடைந்ததை அவளும் கவனித் தாள்.

"யார் இந்த ஆள்?" -கிசுகிசு குரலில் கேட்டாள்.

"தெரியல... என்கே இது ஆச்சரியமாத்தான் இருக்கு..."

"நமக்கு பயந்துகிட்டு போலீஸ் உள்ளேயும் காவல் போட்டிருக்குதா?"

"நிச்சயமா இல்ல... கோவில் ஐதீகப்படி பள்ளியறை பூஜைக்குப் பிறகு கோவிலுக்குள்ற ஈ, காக்கா இருக்கக் கூடாது."

"அப்ப யார் இந்த ஆள்... இவனை நான் பட்டர் வீட்டு கிணத்தடிகிட்டேயும் பார்த்தேன்."

"நெஜமாவா?"

"அவர்கள் மளமளவென்று காதோடு காதாக பேசிக் கொண்டார்கள். அவரோ தன் வழிபாட்டைத் தொடர்ந்து கொண்டேயிருந்தார்.

"சரி இப்ப என்ன செய்யலாம்?"

-விட்டல்ராவுக்கு கைகால்கள் எல்லாம் நடுங்கியது. கீழே விழுந்து விடுவானோ என்று கூடத் தோன்றியது.

"கீழ இறங்குவோம்... என்கிட்ட துப்பாக்கி இருக்கு. வெச்சுக்கறேன் இவனை..." -ஜீவா பேசிய விதத்தில் முன் வைத்த காலை பின் வைக்க அவள் தயாரில்லை என்பது விட்டல் ராவுக்குப் புரிந்தது. உடனேயே மறு பேச்சு பேசாமல் மளமளவென்று ஏணியைப் பிடித்து இழுத்து இறங்கவேண்டிய கோவில் பக்கம் அதை தள்ளி விட்டான்.

அதே சமயம் வேகமாய் காற்றும் வீச ஆரம்பித்தது... மெல்ல... மிக மெல்ல என்று வீச ஆரம்பித்த காற்றிடம் ஒரு அசாத்ய வேகம். வானிலும் கோணல் மாணலாக ஒரு மின்னல் கொடி வெகு வேகமாய் ஓடியது. அந்த நொடி யில் ஜீவாவும் வானத்தைப் பார்த்தாள். அடர்வான

மழை மேகங்கள். காற்றோ அவள் கூந்தலை அவிழ்த்து விட்டு அவள் முகத்தையே மூடியது.

விட்டல் ராவும் ஏணியில் இறங்க முடியாமல் திண்டாடிப் போனான்.

"உம் சீக்கிரம்... இறங்கு." அவள் அவனையே முதலில் இறங்கச் சொன்னாள். அவனும் சமாளித்து நூல் ஏணியில் காலை வைக்க படாத பாடுபட்டான். காற்று அவனை அப்படியே புரட்டிப் போட்டு அவன் பிடித்துக் கொண்டிருந்த ஏணியோடு ஒரு ஊஞ்சலைப்போல் ஆட்டியது

அத்தனையிலும் அந்த சித்தர் மட்டும் தனது பத்மாச னக் கோலத்தை விட்டு கலையவேயில்லை. ஜீவாவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. அதே வேளையில் புத்தியி லும் ஒரு சிகப்பு ஒளி.

நிச்சயம் மழை வரப் போகிறது. அந்த நீர்ப் பொட்டு கள் இந்த பக்கமாய் கோவில் மதில் ஓரம் மயக்கத்தில் கிடக்கும் போலீஸ்காரர்களையும், பாரதியையும் எழுப்பி விட்டால்?

கேள்வி அவளை கொத்தும்போது விட்டல்ராவ் நூல் ஏணியின் பிடியில் இருந்து சற்றும் எதிர்பாராதபடி நழுவி கீழே விழ ஆரம்பித்தான்.

"ஐயோ..." -அவள் பதைக்கும் போதே ஒரு பெரிய இடிச் சப்தம்... அது அவன் அலறிக் கொண்டு விழுந் ததை அமுக்கினாலும் நிச்சயம் அவன் பிழைக்க முடி யாது என்றுதான் ஜீவாவுக்கு தோன்றியது. முப்பது அடி உயர சுவரில் இருந்து தலைகுப்புற விழுந்தால் கபாலம் நிச்சயம் பிளந்து கொள்ளுமே...?

சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவள் நூல் ஏணியை இழுத்து திரும்ப சாலைப் பக்கமாய் போட்டு அந்தக் காற்றிலும் மளமளவென்று இறங்கி தரையைத் தொட் டாள். ஒரு மாத்திரையை பேண்ட் பாக்கெட்டில் இருந்து

எடுத்துப் போட்டுக் கொண்டு விழுங்கியவள், ஓடிப்போய் மயங்கிக் கிடந்த போலீஸ்காரர்கள் அருகே மயங்கியவள் போல் படுத்துக் கொண்டாள்.

மழையும் வலுத்த நிலையில் விழ ஆரம்பித்தது!

✠ ✠ ✠

கண் திறந்த ஜீவா எதிரே இன்ஸ்பெக்டர் குமாரவேல், ராஜ்நாராயண், தீட்சதர் என்று ஒரு கூட்டமே...

"நான்... நான் எங்க இருக்கேன்?"

-ஒன்றும் தெரியாதவள் போல ஆரம்பித்தாள்.

"இங்க பட்டர் வீட்லதான் இருக்கீங்க. நல்லவேளை... உங்களுக்கு ஒண்ணும் ஆகலை!" என்றார் குமாரவேல்.

"எனக்கு ஒண்ணும் ஆகலையா? அப்போ யாருக்கு என்ன ஆச்சு?"

மீண்டும் அவளிடம் ஜெகஜ்ஜாலம்.

"எல்லாத்தையும் பாரதி சொன்னாள். ஆமாம் எங்க டிபார்ட்மென்ட்டை டெஸ்ட் பண்ண நீங்க யார்? பத்திரிகையாளர்னா என்ன பெரிய கொம்பா... திஸ் ஈஸ் டூ மச் மிஸ் ஜீவா..."

-குமாரவேல் மெல்ல கோபத்தைக் கொட்ட ஆரம்பித்தார்.

"ஆமாம் பாரதி..."

அவளும் அந்த போலீஸ்காரங்களும் நல்லவேளை பல மணி நேரம் முந்தியே கண் விழிச்சுட்டாங்க. ஆனால் நீங்க தான் பயமுறுத்திட்டீங்க. ஆமா அங்க என்ன நடந்தது யார் என்ன செய்தாங்க?"

"ஏன் அதையும் பாரதியே சொல்லியிருப்பாளே?"

"நான்சென்ஸ். எனக்கு உங்க ஸ்டேட்மென்ட் ரொம்ப முக்கியம். ஏதோ ஒரு ஸ்ப்ரே ஸ்மெல்லுல மயங்கிட்டதா சொன்னா பாரதி. அந்த நேரத்துல அங்க வந்த நபர் உங்க மேல ஸ்ப்ரே பண்ணி மயங்க வெச்சுட்டு நூல் ஏணியால கோவிலுக்குள்ளயும் இறங்கியிருக்கான்."

குமாரவேல் விவரிப்பதை ஆவலாய் கேட்கத் தொடங்கினாள் ஜீவா. அத்தோடு கேள்வி வேறு...

"அடப்பாவி... உள்ளேயே இறங்கிட்டானா... அவன் இப்ப எங்க?"

"எங்க... பரலோகத்துல! போலீஸ்காரங்களால முடியாததை அந்த சாமி செய்துடிச்சு. வானத்துல இருந்து ஒரு மின்னல் சரியா அவன் தலைல விழுந்ததுல ஆள் ஸ்பார்ட் அவுட்...!"

"மைகாட்... இப்ப பாடி எங்க?"

"எதுக்கு? அதையும் போட்டோ எடுத்து போட்டு கான்ட்ரவர்சியை க்ரியேட் பண்ணவா? ஆமா அர்த்த ராத்திரியில 'நீங்க போனதே தப்பு. இப்படியா பட்டர் பொண்ணையும் கூட்டிகிட்டு போவீங்க?

"உங்களுக்கு ஏதாவது ஆகியிருந்தா?"

-குமாரவேல் அவளுக்கு சாதகமாகத்தான் கோபித்துக் கொண்டு பேசினார்.

அவளுக்கு தான் தப்பித்ததை நினைத்து அந்த நிலையிலும் நிம்மதிப் பெருமூச்சு.

ஏனோ தீட்சதர் மட்டும் அவளையே கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தார்.

41

விளக்கேற்றுதல்!

ஓரிடத்தில் விளக்கினை ஏற்றுவதால் இருள் அகலுகிறது. நம்மாலும் பார்க்க முடிகிறது. பார்க்க முடிந்தாலே அடுத்தடுத்து செயல்படவும் முடியும். இடையறாச் செயல்பாட்டுக்கு பார்ப்பது என்பதும் பார்ப்பதற்கு ஒளியே மூலம் என்பதும் இதனால் ருசுவாகும். அதிலும் பசு நெய்யில் விளக்கேற்றுவது என்பது மிக உன்னதமான ஒன்றாகக் கருதப் படுகிறது. இதை வலியுறுத்த ஒரு புராணக் கதை ஒன்றும் சொல்லப்படுகிறது. மகாவிஷ்ணுவால் சோதிக்கப்பட்ட மகாபலிச் சக்கரவர்த்தி பற்றி கேள்விப்பட்டிருப்போம். மூன்றடி இடம் கேட்ட விஷ்ணுவுக்கு அதை வழங்க முடியாமல் திணறிய மகாபலி இறுதியில் கர்வம் நீங்கி ஞானம் பெற்றான்.

அந்த மகாபலியின் பூர்வ பிறப்பு ஒரு எலி பிறப்பாகும். சிவாலயம் ஒன்றில் எலியாகப் பிறந்து கோவிலைச் சுற்றி வந்தபோது அணைந்து விடும் நிலையில் இருந்தது ஒரு விளக்குச் சுடர். அருகே தவறி விழுந்திட அதனால் தூண்டப் பெற்ற திரியா னது தொடர்ந்து அணையாமல் எரியலாயிற்று. ஒரு சிவாலயத்து விளக்கு இப்படி தொடர்ந்து எரிய தன்னையும் அறியாமல் காரணமாய் விளங்கிய எலி, அதன் காரணமாக மறு ஜென்மத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்கிறது அந்த புராண வரலாறு.

இது ஏதோ ஒரு மிகைப்படுத்தப்பட்ட கற்பனை போலத் தோன்றும். மகாபலியின் பிறப்பில் அந்த உண்மை இருக்கிறதோ இல்லையோ, விளக்கேற்றும் நற்செயல் உளவியல் ரீதியாகவே பல நன்மைகளைச் செய்வதை உணரலாம்.

ஒரு லிங்கம்.

அதன் முன் ஒருவர் விளக்கேற்றி வைத்து விட்டுச் செல்கிறார். பின்னாலேயே ஒருவர் வரு கிறார். விளக்கு ஒளியில் லிங்கத்தைப் பார்த்து மனம் லயித்து வணங்கித் தொடங்குகிறார். இதனால் சிவனருளுக்குப் பாத்திரமாகும் அவர், அருளுற்ற நிலையில் அடுத்தடுத்து செய்யும் செயல்களில் எல்லாம் அதன் எதிரொலிகள்.

அவர் ஆலயம் வராமல், விளக்கொளியில் லிங்கத்தைக் காணாமல் வணங்காமல், அருளுக்கு ஆட்படாமல் தன்னிச்சையால் சென்றிருந்தால் அதற்கேற்பவே அவர் செயல்கள் இருந்திருக்கும்.

இங்கே ஒளியானது உருவத்தைக் காட்டி மனதைக் கட்டிப்போட்டு தன்னிச்சையில் இருந்து திசை திருப்பி அருளுக்குப் பாத்திரமாக ஒருவரை ஆக்குகிறது.

இவர் கோடி ரூபாய் தானமாய்க் கொடுத்தாலும் அந்த புண்ணிய கணக்கு விளக்கேற்றி பலர் வழிபாடு செய்யக் காரணமாய் இருந்த புண்ணியத்துக்கு ஈடாகாது.

அடுத்து விளக்கேற்றுதல் என்பது நமது மனதுக் குள்ளும் ஒரு ஒளிப் புனலை உருவாக்கும்.

உலகிலேயே அழுக்கில்லாதது, அனைத்தையும் விழுங்கவல்லது, இயல்பு மாறாதது நெருப்பே. நீரில் கூட ஒருவர் கண்டதைக் கலந்து அசுத்தத் தைப் புகுத்தி விடலாம். நெருப்பிடம் மட்டும் அது சாத்யமே இல்லை. இப்படிப்பட்ட நெருப்பிடம் இருந்து அழகாக வெப்பத்தை நாம் எடுத்துக் கொண்டே ஜீவிக்கிறோம். அதற்கு பயந்து நாம் எச்சரிக்கையாகச் செயல்படும்போது அது நமக்கு நன்மை செய்யும் ஒன்றாகவே உள்ளது. மாறாக அதைத் தவறாக கையாளும்போதோ அது நம்மை விழுங்கி விடுகிறது.

எல்லா வகையிலும் நெருப்பு நமது எஜமானாக விளங்குகிறது. நமது உடலிலும் அது அடக்கமாக எரிந்து கொண்டுதானிருக்கிறது. உயிர் போய் விட்டது என்று நாம் கூறுவதற்கும், வெப்பம் போய் விட்டது என்று கூறுவதற்கும் பெரிய வித்யாச மில்லை.

உடம்பில் வெப்பமாய் திகழ்ந்ததுதான் உயிரோ என்று கூடத் தோன்றுகிறது. உண்மையும் அது தான். எனவேதான் தீபமேற்றும் செயலும் உயிரைத் தூண்டும் செயலும் ஒன்றாக உள்ளது. தினம்தினம் தீபம் ஏற்றுபவர்கள் தாங்கள் ஏற்றும் தீபங்களூடே தங்கள் தீவினைகளை எரிக்கக் கொடுக்கிறார்கள்.

எனவே தீவினை எரிந்து நல்வினை மலர்ந்திட தீபம் ஏற்றுங்கள். அதிலும் சிவாலயத்தில் ஏற்றிடும் தீபம் பிறர்க்கு மட்டுமல்ல, நமக்கும், நமக்குள் இருக்கும் ஆன்மாவிற்குமே ஒரு நாள் இல்லை ஒரு நாள் இந்த ஈஸ்வரனை நேரிலேயே காட்டியருளும்! தினம் தீபம் ஏற்றி வழிபடுதல் ஒரு ஒத்திகையே...!

தீட்சதர் ஒரு தினுசாகப் பார்ப்பதை ஜீவாவும் கவனித்தாள். இருந்தும் கவனிக்காத மாதிரி ராஜ்நாராயணைப் பார்த்தாள். அவன் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தான்.

இப்பொழுதைக்கு ஊருக்குக் கிளம்புதல் சாத்யமே இல்லை என்கிற மாதிரி இன்னொரு களவு முயற்சி-அதைத் தொடர்ந்து ஒரு சாவு!

அவனுக்குள் எரிச்சல் பீறிட்டது.

இடையில் பட்டர், இன்ஸ்பெக்டர் குமாரவேலை தனிமையில் அழைத்து காதைக் கடித்தார்.

"இன்ஸ்பெக்டர்... இந்தப் பொண்ணு வந்த முதல் நாளிலேயே வயித்தை கலக்கிட்டா. நல்லவேளை... என் பாரதிக்கு ஏதாவது ஆகியிருந்தா என்னத்த பண்றது? இவளை தயவு செய்து ஊருக்கு கிளம்பிப் போகச் சொல்லுங்கோ. அதுதான் எல்லாருக்கும் நல்லது."

-இன்ஸ்பெக்டர் குமாரவேல் அதைக் கேட்டு சிரித்தார்.

"என்ன சிரிக்கிறேள்..."

"சிரிக்காம... உங்களுக்கு இன்னிக்கு பத்திரிகைகளுக்கு எவ்வளவு சக்தி இருக்குன்னு தெரியல. நான் அந்த பொண்ணை பார்த்து நீ இடத்தை காலி பண்ணுன்னு சொன்னா அதையும் ஒரு பாயின்ட்டா எழுதி என் மானத்தையும் வாங்கிடுவா.

"போலீஸ்காரங்க நாங்க இவங்ககிட்ட படறபாடு உங்களுக்கென்ன தெரியும்."

"அப்ப இவ இங்கதான் இருப்பான்னா... என் வீட்ல இவ இருக்க வேண்டாம்."

"அதை நீங்க தாராளமா சொல்லுங்க. ஊர்ல வேற யாரும் இடம் கொடுக்காதபடி நான் பாத்துக்கறேன். அந்த நிலைல இந்த பொண்ணு எங்க தங்கறான்னுதான் பார்ப்போமே..."

-அவர்கள் ஒரு முடிவுக்கு வர ஜீவாவும் வீட்டுக்குள் சென்று தனது பேக் மற்றும் இத்யாதிகளுடன் வெளியே வந்தாள்.

"என்னம்மா எங்க கிளம்பிட்டீங்க?"

"இனி இங்க என்னை தங்கவிடமாட்டீங்கன்னு நல்லா தெரியும். அய்யர் உங்ககிட்ட குசுகுசுன்னு பேசினதே அதுவாகத்தான் இருக்கும். சரி... இது அவர் வீடு. நான் யார் அவர்கிட்ட உரிமைப் போர் நடத்த...? ஆகையால நைஸா கழண்டுக்கறதுதான் எனக்கு மரியாதை."

"வாவ்... பயங்கர பிரைட்மா நீ. சரி எங்க போவீங்க? பட்டர் வீட்லையே இடமில்லேன்னா மத்தவங்களும் இடம் தரமாட்டாங்க. ஊர்ல லாட்ஜ் வசதியும் கிடையாது."

-குமாரவேல் அவளைப் பார்த்து, நீ ஊருக்கு போவது தான் உனக்கிருக்கும் ஒரே வழி என்கிற மாதிரி பேசப் பேச, ஜீவா முகத்தில் மந்தகாசமாய் ஒரு புன்னகை.

அந்த புன்னகையோடு ஏதோ மலை ஏறியவன்போல களைப்பாக அமர்ந்திருந்த ராஜ்நாராயணைப் பார்த்தவள், "ராஜா வர்றியா என் கூட?" என்று கேட்டாள்.

"எங்கே?"

"வா... கம்பெனி கொடு. இவ்வளவு பெரிய ஊர்ல நாம தங்கத்தானா ஒரு இடம் கிடைக்காம போயிடும்."

-அவன் அவள் பேச்சைக்கேட்டு திருதிருவென்று விழித்தான். பட்டர் வீட்டில் ஏட்டிக்குப் போட்டியாக பேசிக் கொண்டு உட்கார்ந்திருப்பதற்கு இவளோடு சென்றால் உதவியது போலவும் இருக்கும். தனக்கும் ஓரளவு பொழுது போகும் என்று நினைத்தவன் எழுந்து அவ ளோடு சேர்ந்து நடந்தான்."

குமாரவேல் இதை எதிர்பார்க்கவில்லை.

"ராஜ்நாராயண்... என்ன இது? அவங்களோட எங்க கிளம்பிட்டீங்க?"

"சாரி சார்... என்னால இனியும் இந்த வீட்ல இருக்க முடியாது. ஹைலி போர். ஜீவா என் கிளாஸ் மேட். இந்த சூழ்நிலையில் அவளுக்கு நான் கம்பெனி கொடுக்கறது தான் நல்லதுன்னு எனக்கு படுது."

"நாசமா போச்சு... உங்களை பாதுகாக்கிற பொறுப்புல இருக்கிற நாங்க என்ன பண்ண?"

"எனக்கெதுக்கு பாதுகாப்பு? வேண்டாம். ஜீவா இருக்கா. இவ போதும் இப்போதைக்கு. உங்களுக்கு புண்ணியமாகப் போகும். என் சூட்கேஸை சீக்கிரமா கண்டுபிடிச்சு என்னை ஊருக்கு அனுப்பி வையுங்க."

-என்றவன் ஜீவாவோடு வேகமாக நடந்தான். பாரதி வாசப்படி அருகில் நின்று கொண்டிருந்தாள். அவன்

ஜீவாவுடன் செல்வது பிடிக்காதவள் போல ஓங்கி வலது கையால் பக்கத்து சுவரைக் குத்தினாள். பார்த்துக் கொண்டேயிருந்தாள் சந்திரிகா.

"அக்கா... அவ்ளோதான். அம்மாஞ்சி இனிமே அந்த ஜீவாமாஞ்சிதான்," என்றாள்.

"போடீசசு" -பாரதியிடம் எரிச்சல் பீறிட்டது.

குமாரவேலும் கையைப் பிசைந்து கொள்ள, பட்டர் குழம்பிப் போக, தீட்சதர் மட்டும் பொருள் பொதிந்த ஒரு பார்வையோடு முகத்தில் ஒரு பிரகாசத்துக்கும் உள்ளானார்.

"என்ன சாமி... நடக்கிறத எல்லாம் மவுனமா கவனிக்கறவராவே மாறிட்டீங்களே. கோவிலுக்குன்னு ஏடு இருக்குது... அதுல எழுதியபடிதான் எல்லாம் நடக்குது. காணாம அது போய்ட்டாலும் எனக்கு அது ஞாபகத்துல இருக்குதுன்னீங்களே. அதுல நேத்து இடிவிழுந்து செத்த வன், பத்தி இந்த பொண்ணைப் பத்தி எல்லாம் ஏதுனா இருக்குதா?"

-குமாரவேல் கேட்டதற்கு தீட்சதர் அசரவேயில்லை.

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு இன்ஸ்பெக்டர்வாள். நான் ஒண்ண மட்டும் இப்ப சொல்லிக்கிறேன். இந்த பொண்ணு மட்டுமல்ல, இனி எந்த காலத்துலையும் இந்த ஊரைவிட்டு போகவே மாட்டான்னு என் மனசுக்கு தோன்றது. போகப்போக பாருங்களேன்."

"போகாம...? எங்க தங்குவாங்கலாம்? சத்திரமா சாவடியா... இங்க தங்க..."

"பாருங்கோ... இனிமேதான் நிறைய விஷயம் நடக்கப் போறது..." தீட்சதர் தன் பங்குக்கு புதிர் போட்டார்.

ராஜ்நாராயணையும், ஜீவாவையும் படு ரகசியமாக ஒரு போலீஸ்காரர் தொடர்ந்து கொண்டிருந்தார்.

"ஜீவா... இப்ப நாம எங்க போறோம்?" நடந்தபடி ராஜ்நாராயண் கேட்டான்.

"வா சொல்றேன். நாம தங்கறதுக்கு சரியான ஒரு இடம் இந்த ஊர்ல இருக்கு."

"எந்த இடத்தைச் சொல்றே?"

"எல்லாம் நீ இரண்டு மூணு தடவை போய்ட்டு வந்த இடம்தான்."

"சரி... சாப்பிட என்ன பண்ண?"

"பிஸ்கட், பழம்னு வாங்கிச் சாப்பிட்டு ஒப்பேத்த முடியாதா என்ன?"

"நான் தெரியாமத்தான் கேக்கறேன்... அப்படியானா இந்த ஊர்ல இருக்கணுமா... பேசாம மெட்ராஸ் போயிட்டா என்ன?"

-அவன் கேட்க அவள் நடந்த நிலையில் நின்று அவனை ஊடுருவினாள்.

"என்ன ஜீவா...?"

"நிஜமா மெட்ராஸ் போயிடலாம்கிறியா...?"

"இதுக்கு எதுக்கு நான் பொய் சொல்லணும்."

"உன்னைத்தான் குமாரவேல் சார் தடுத்து நிறுத்திகிட்டே இருக்காரே..."

"அவருக்கென்ன... எனக்கு போனா போதும்னு இருக்கு..."

"சரி... என்கூட ஜஸ்ட் ஒருநாள் இரு. இரண்டு பேரும் சேர்ந்தே கம்பி நீட்டிருவோம். அதுவும் சொகுசா கார்ல..."

"காருக்கு எங்க போக?"

"உனக்கு ஏன் அந்த கவலை...?" -அவள் கேள்வியோடு நின்ற இடம் இடிந்த கோவில்!

"இதுதான் நாம தங்கப் போற இடம். உனக்கு ஆட்சேபணை இல்லியே..." -ஜீவா கேட்டதைத் தொடர்ந்து ராஜ்நாராயணிடம் ஒரு அசாத்ய திகைப்பு.

"இங்கயா?" -என்றான் பெரிதாக.

"ஏம்ப்பா... இந்த கோவிலுக்கென்ன? பொது ஜன தொந்தரவு இல்லாம ஏகாந்தமா அமைதியா நாம இருக்கலாம்."

"அமைதியா இங்கயா... இங்க வந்தாலே எனக்கு ராஜா கால ஞாபகங்கள் வந்துடுதுன்னு சொன்னேன்ல..."

"வரட்டும். நானும் அதை பார்க்கறேன்."

"ஒரு விதத்துல நீ இங்க தங்கச் சொல்றதும் சரிதான். எனக்கு தெரிஞ்சு இங்க ஏற்கெனவே ஒருத்தர் இருக்கார்."

"நிஜமாவா... யார் அவர்?"

"யார்னுல்லாம் தெரியாது. உள்ள வந்துபார். 'ஓம்... ஓம்'னு ஒருத்தர் ஜெபிக்கிற குரல் கேட்கும்."

"ரியலி..." -ஜீவா துளியும் பயமே இல்லாதபடி குதூகலித்தாள். அப்படியே, "வா... வா... உள்ள போய் அந்த குரலை கேட்போம்" என்று கோவிலுக்குள் தன் மிதியடிக் கால்களை தூக்கி வைத்தாள்.

கோபுரச் சருக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த வீர்யன் கழுகு அவளது அந்த மிதியடிக் கால்களை நோக்கி படு வேகமாக பறந்து வர ஆரம்பித்தது. அவளும் பார்த்துவிட்டு சட்டென்று கால்களை விலக்கிக்கொண்டு ராஜ்நாராயண் மேல் தடுமாறி விழுந்தாள். இருவரும் தரையில் விழுந்து புரண்டு எழுந்தனர். வீர்யனும் சிறகுகள் படபடக்க கோபுரச் சருக்கத்தில் திரும்பிப் போய் அமர்ந்தது.

"என்ன ராஜ்... இந்த கழுகு கொஞ்சம் தொல்லை கொடுக்கும் போல இருக்கே."

"ஆமாம் அப்படித்தான் தெரியுது. இருந்தாலும் உனக்குத் தைரியம் ஜாஸ்திதான் ஜீவா. ஒரு வினாடி நீ என் மேல விழவும் நான் பதறிப் போயிட்டேன் தெரியுமா?"

"சரி, இதோ வர்றேன்."

அவனைப் பிரிந்தவள் ஒரு கல்தூண் அருகே ஒதுங்கி வேகமாக செல்போனை எடுத்து தட்டினாள்.

மறுமுனையில் ரமணி சாஸ்திரி மாட்டினார்.

"சாஸ்திரி நான் புவனா பேசறேன்."

"என்ன ஆச்சு... உன் போனுக்காகத்தான் காத்துகிட்டிருக்கேன். மொட்டையன் விட்டல் ராவ் சொதப்பிட்டானா?"

"சாரி... அவன் போய் சேர்ந்துட்டான்."

"வாட்!"

"அதிராதே. அவன் போய்ட்டதாலே பெரிசா எந்த பாதிப்பும் இல்ல. மரகதலிங்கம் இந்த நிமிஷம்வரை பத்திரமாதான் இருக்கு. இன்னிக்கு எடுத்துருவேன்."

"எப்படி... யார் இருக்கா?"

"வழி இருக்கு... இப்ப நான் என்ன சொன்னாலும் கேட்கற ஒருத்தன் என்கூட இருக்கான்."

"யார்?"

"வேற யார்... நீ யாரை நான் கொல்லணும்னு அனுப்பினியோ... அந்த ராஜ்நாராயண்தான்...

"ஜாக்ரதை... அவன் பெரிய கில்லாடி."

"நான் கில்லாடிக்கு கில்லாடி. சேம் டைம் இங்க கொஞ்சம் மேஜிக்கலான விஷயங்களும் இருக்கும்போல தெரியுது."

"மேஜிக்கல்...?"

"யெஸ்... ஒரு கிழவனார் அடிக்கடி என் கண்ணுல பட்டுகிட்டு இருக்கார். யார்னு தெரியல. ஊர்ல சித்தர்னு ஒருவேளை அவரை சொல்லலாம். சித்தர் புத்தர்லாம்தான் பயங்கர டாபர் ஆச்சே. எல்லாம் கப்ஸா."

"எனிவே கேர்ஃபுல்! இந்த நிமிஷம் சிலையை எடுத்திருப்பீங்கன்னு நினைச்சேன். ஆனா விட்டல் போயிட்டாங்கறது பெரிய அதிர்ச்சியா இருக்கு. இன்னும் காரியம் முடியலைங்கறது அதைவிட அதிர்ச்சியா இருக்கு."

"கவலையை விடு. இன்னிக்கு ராத்திரி என்ன ஆனாலும் சரி. அந்த லிங்கம் என் கைக்கு வந்தே தீரும். அதுக்கு ஐடியா பண்ணியாச்சு. பை!"

-ஜீவா செல்போனை முடக்கியவளாக தலையை கோதிவிட்டுக் கொண்டாள். அப்பொழுது எதார்த்தமாக கோபுரம் கண்ணில் பட்டது. அதில் ஒரு சிலை இருக்கும் இடத்தில் முதல் நாள் இரவில் அவள் கோவிலில் பார்த்த அதே சித்தர்!

ஜீவாவுக்கு நிஜமாலுமே பக்கென்றது.

சட்டென்று தோளில் தொங்கியபடி இருக்கும் தோல் பையில் இருந்து பிஸ்டலை எடுத்தவளாக திரும்பவும் நிமிர்ந்தாள். சித்தர் இல்லை. சிலை தான் இருந்தது! எப்படி...? தன் கண் ஒரு வேளை தன்னை ஏமாற்றுகிறதா... இல்லை ஏதாவது மாயமா?

அவள் குழப்பத்தோடு ராஜ்நாராயணிடம் வந்து நின்றபோது அவன் நீட்டிப் படுத்திருந்தான்.

"ஏய்... என்ன தூங்கிட்டியா?"

"தூக்கம் வருது."

"தூங்கிடாதே... நாம இரண்டு பேரும் இன்னிக்கு கோவிலுக்குப் போக வேண்டியிருக்கு."

"கோவிலுக்கா... எதுக்கு?"

"வா சொல்றேன்... இந்த இடிஞ்ச கோவில்ல குடித்தனம் நடத்தவா இரண்டு பேரும் இங்க வந்துருக்கோம்..."

"ஜீவா... எதுக்கு இப்படி ரிஸ்க் எடுக்கறே?"

"உம்... அதுதாண்டா என் தொழில்!"

-ஜீவாவின் பதிலில் உறுதி மின்னியது.

42

சிவம் பற்றி சிந்திக்கவும், வந்திக்கவும் இன்று துணை புரியும் நூல்கள் வெகு சிலதான். அவைகளை வாசித்தும் அந்தச் சிவத்தின் பேரருளாலேயே சிவத்தை யோசித்தும் இன்று சில நூல்கள் வந்துள்ளன.

சிவம் பற்றி அறிய துணை செய்யும் பழைய நூல்கள் அபிதாந சிந்தாமணியும் ஹாலாஸ்ய புராணமும் தேவி மஹாத்மியமும் ஓரளவு சிவம் பற்றி அறிய துணை செய்கிறது. போன நூற்றாண்டில் (1895) ரத்தினவேலு முதலியார் என்பவர் இவைகளை வாசித்து சாரங்களை எடுத்துத் தொகுத்து சிவபராக்கிரமம் என்ற நூலை எழுதினார்.

பொதுவில் இந்த நூல் அந்நாளைய நடப்பை அப்படியே சொல்வதாகவே உள்ளது. எந்த ஒரு சம்பவமும் எழுத்தில் வடிக்கப்படும்போது சற்று மிகையான வடிவமெடுத்து விடும். இதைத் தவிர்க்கவே முடியாது. உதாரணமாக 'அடிபட்டு ஒருவன் தரையில் கிடக்கிறான். உடம்பெல்லாம் ரத்தம்' என்று நாம் எழுதினால் அதைப் படிப்பவர்கள் தங்கள் மனக் கண்ணில் தங்கள் விருப்பத்திற்கு ரத்த சகதியாக அதை கற்பனை செய்து பார்த்துக் கொள்வார்கள். அதையே அவர்கள் பிறருக்குச் சொல்லும் பொழுது அவர் எது ரசனையைக் கலந்து

ஒரே ரத்தம் ஆறாகப் பெருகி ஓடியபடி இருந்தது. அவன் பிழைப்பானோ மாட்டானோ தெரியவில்லை என்றெல்லாம் கூறுவார். ஒரு சாதாரண சம்பவமே இப்படி கற்பனை, ரசனை, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பலவித உணர்ச்சி மாறுதல்களுக்கு உள்ளாகி வெளிப்படும்பொழுது மிகுந்த சாகசங்களும் நுட்பமும் உடைய புராணச் செய்திகளில் அவை எந்த அளவு கலந்திருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இதனாலேயே இன்றைய வாழ்வியல் முறைகளுடன் புராண இதிகாச வாழ்வியல் முறைகள் துளியும் பொருந்தாமல், நம்ப முடியாத ஒன்றாய் அதீத கற்பனையாய், பொய்யாய் பலரால் நினைக்கப்படுகிறது.

ஆனால், இந்த மானிட இயல்பு புரிந்து பகுத்தறிவுடன், அதே நேரம் நம்பிக்கையுடன் புராணச் செய்திகளைப் பார்த்தால் அவை நமக்கு மிகுந்த ஆச்சரியம் தரும். அதுமட்டுமல்ல... இன்றைய விஞ்ஞான வசதிகளால் நாம் நிகழ்த்திக் கொண்டிருக்கும் வாழ்க்கையையும் மிஞ்சிய ஒரு வாழ்க்கை முறை அப்பொழுது இருந்திருக்குமோ என்கிற கேள்வியும் எழும்.

ஒரு கற்பனை செய்து பாருங்கள். நாம் வாழும் இந்த பூமியில் அணு ஆயுத அச்சம் நிறையவே உள்ளது. பல வல்லரசுகள் அவைகளை கைகளில் வைத்துக் கொண்டு பூச்சாண்டி காட்டியபடி உள்ளன. நமது துரதிர்ஷ்டம் அவை பயன்படுத்தப்பட்டால் இந்த மொத்த பூமிப் பந்தும் சர்வநாசமாகப் போவது நிச்சயம். மனிதர்களும் உயிரினங்களும் அழியும். ஆனால், நாம் பயன்படுத்திய கார்கள், பஸ்கள், கட்டிடங்கள், எந்திரங்கள் எல்லாம் அப்படியேதான் இருக்கும்.

அந்நிலையில் ஆதாம் ஏவாள் போல் எப்படியோ மீண்டும் மனிதர்கள் தோன்றுவதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் இந்த காரையும் பஸ்ஸையும்

பார்த்து என்ன நினைப்பார்கள்? நாம் இன்று மலைக் குகைகளையும் மரப்புதர்களையும் பார்க்கிற மாதிரி நிழல் தரும் ஒன்றாகத் தானே நினைப்பார்கள். பெட்ரோல் என்று ஒன்று பூமிக்கடியில் இருந்தது. அதை வெளியே எடுத்து சுத்திகரித்து மனிதன் அந்த காருக்கும் விட்டு அதை பல மைல் வேகத்தில் ஓட்டிப் பயன்படுத்தினான் என்றா நினைப்பார்கள், நினைக்கத்தான் முடியுமா? அதற்காக அவன் அப்படியே விலங்கு போல பசிக்கு இரை தேடி வாழ்ந்து மறைந்துவிடப் போவதில்லை. காலத்தால் கொஞ்சம் கொஞ்சமாய் தன் செயல்பாடுகளில் சவுகர்யங்களை உருவாக்கிக் கொள்ளும்போது அது அறிவியலாகிவிடும். அதேநேரம் அவன் இன்று நாம் அறிவியலால் அடைந்திருக்கும் முன்னேற்றம் அனைத்தையும் அடைய பல ஆயிரம் ஆண்டுகள் ஆகலாம். அந்த நிலைப்பாட்டை அப்படியே இன்று நமக்கும் பொருத்திப் பாருங்கள். புராணகால சிறப்புக்களை நாமும் போகப்போக அனுபவப் பூர்வமாகவே புரிந்து கொள்வோமோ என்னவோ? அன்று விக்ரமாதித்தன் பதுமைகளுடன் பேசியதாக கதை உண்டு. எங்காவது பதுமை பேசுமோ என்று இன்றைய அறிவியல் சிந்தனையோடு கேட்பது மிக எளிது. ஏன் பேசியிருக்காது? அது எப்படி பேசி யிருக்கும்! அதற்கு எது காரணமாக இருக்கும் என்று சிந்திப்பதுதான் உண்மையான முற்போக்குச் சிந்தனை.

அதேவித முற்போக்குச் சிந்தனையோடு சிவ பராக்கிரமங்களைப் பார்க்கும்போது அதில் பல நுட்பங்கள் இருப்பதை புரிந்து கொள்ளலாம்.

சிவபராக்கிரமத்தில் சண்டதாண்டவமூர்த்தி பற்றிய விஷயங்கள் மிக ஆச்சரியமூட்டுபவை. திருவாலங்காட்டில் சண்டியாகிய காளியோடு சிவமானது போட்டி நடனம் புரிந்து, அவ்வாறு நடனம் புரிகையில் காதில் இருந்து விழுந்த மகரக் குழையை மீண்டும் தன் காலாலேயே எடுத்து

அணிந்து கொள்ள அதை கால் தூக்கி ஆடிய நடனக் காட்சியாக சித்திரங்களிலும் பார்த்திருப்போம். இங்கே காளி அவ்வாறு செய்ய வெட்கப்பட்டு போட்டியிலும் தோற்கிறாள்.

இதை உடனே ஆணால் சாதிக்க இயலும். பெண்ணால் இயலாது என்கிற ரீதியில் பார்த்தல் கூடாது. பெண்ணாலும் இயலும்- வெட்கத்தை கை விட்டால். ஆனால் அதன்பின் என்னாகும்? அவள் அந்த போட்டியில் வேண்டுமானால் வெற்றிபெற்ற வளாகக் கருதப்படுவாள். ஆனால் வாழ்வில் அவள் தோற்றவள் ஆகிவிடுவாள். எனவேதான் வாழ்க்கை யில் நிரந்தர வெற்றியைப் பெற அங்கே தற்காலிக மாக தோல்வியை ஒப்புக் கொள்கிறாள். உடற்கூறு ரீதியாக மாறுபட்ட பெண் இனம் தன்னுள் ஒரு ஆணையே உருவாக்கி ஜனிக்கவல்லது. ஆனால் ஆணால் இம்மட்டில் அவளோடு கூடி உதவத்தான் இயலும். அதாவது ஒன்றை படைத்திட உதவி யாளனாகத்தான் ஆண் இருக்க முடியும். அவனே படைப்பாளியாகிவிட முடியாது. அது பெண்ணுக்கே உரிய தனிப்பெரும் சக்தி. அவளே தேவர்- மானிடர் மற்றும் ஏனைய உயிரினங்களிலும் முதன்மை யானவள்.

அதை உணர்த்தவே திருவாலங்காட்டில் அந்த சம்பவம் நடந்தது. நடனத்தில் சிவன் வெற்றி பெற்றான். ஆனால் நடனத்தில் தோற்றதன் மூலம் அவனையும் மொத்த உயிர்களையும் வெற்றி கொள்கிறாள் பெண் வடிவான காளி.

இதுவே அதனுள் பொதிந்திருக்கும் நுட்பச் செய்தி!

ஜீவாவின் பதிலால் ராஜ்நாராயண் திகைத்தான்.

"நீ ஆம்பளைதானே?" - அவள் திடீரென்று அவனை நோக்கி கேட்டாள்.

"என்ன ஜீவா... எதுக்கு திடீரென்று இப்படி கேக்கறே?"

"ஏன் எதையும் ஸ்போர்ட்டிவா பாக்காம, ஒரு ப்ரபோஸ்மென்டாலிடியோடையே பாக்கறே?"

"நீ என்ன சொல்றே... புரியல எனக்கு?"

"என்னைப் பார்த்து ரொம்ப ஆச்சரியப்படறே. ஊரை விட்டு போயிடவும் ரொம்ப ஆசைப்படறே. இந்த ஊருக்கு நீ எதுக்கு வந்தியோ அந்த நோக்கத்தைப் பத்தி நீ கவலைப்பட்ட மாதிரியே தெரியல..."

-ஜீவா அழகாக அவனுக்கான பீடிகையைப் போட்ட படியே தொடர்ந்தாள்.

"குறிப்பா இந்த ஊரை, ஊர்ல இருக்கிற கோவிலை நீ புரிஞ்சுக்க முயற்சியே பண்ணலை. இங்க புரிஞ்சுக்க என்ன இருக்கு? எல்லாமே தற்செயல் சம்பவங்கள்னு முடிவே கட்டிட்டே..."

-அவளது கேள்விகள் அவனுக்கு வியப்பான வியப்பை அளித்தன.

"ஜீவா நீ என்ன சொல்றே... மிராக்கிள்னு எல்லாரும் சொல்ற விஷயங்களை நம்பச் சொல்றியா?"

"ஸ்டுப்பிட் மாதிரி கேள்வி கேக்கறியே. இப்ப என்னை எடுத்துக்கோ. இந்த ஊருக்கு வந்து முழுசா 24 மணி நேரம் ஆகலை. ஆனா நான் இங்க ஒரு மேஜிக்கலான விஷயத்தை இரண்டு தடவை பார்த்துட்டேன். சாரி மூணு தடவை..."

"மேஜிக்கலான விஷயமா?"

"ஆமாம். இதோ இந்த கோவில் கோபுரத்துல உட்கார்ந்திருக்கே கழுகு..."

"சொல்லு..."

"அது... ஒரு முறை வயசான ஒரு சாமியார் மாதிரி தெரியுது. இன்பாக்ட் நேத்து நைட் கோவில்லையும் அந்த சாமியாரைப் பார்த்தேன். ஜஸ்ட் இப்போ இங்கே அதோ அந்த கோபுரத்துல அவர் உட்கார்ந்துகிட்டு என் னையே வெறிச்சு பார்த்துகிட்டிருந்ததைப் பார்த்தேன்."

"ரியலி..."

"ஆமாம். இதை நான் விடப்போறதில்லை. யாரோ மர்மமா பிளே பண்றாங்க. அது என்னன்னு தெரிஞ்சு கிட்டே தீரணும். அதுக்காகவும் சேர்ந்துதான் கோவிலுக்கு இன்னிக்கு நைட் போவோம்கிறேன்."

"மொத்தத்துல சி.ஐ.டி. வேலை பாருங்கறே! அப்படித் தானே?"

"இல்ல... நம்மளை டபாய்க்க நெனக்கிற பொய்யோட முகத்திரையைக் கிழிப்போம்கிறேன்."

"இங்கதான் நான் வேறுபடறேன். வெட்டிவேலை ஜீவா. நான் இதுக்காக வரலை. நீ ஜர்னலிஸ்ட் இப்படி எல்லாம் இறங்கினா உனக்கு இன்ட்ரஸ்ட்டிங்கா நாலு விஷயங் கள் கிடைக்கலாம். நான் ஒரு சாஃப்ட் வேர் இன்ஜினியர். என் புரொபஷனுக்கு இது எந்த வகைல ஹெல்ப் பண்ணும்?"

"போடா... ஆம்பளையா லட்சணமா, நான் இருக்கேன் ஜீவா... ஒரு பொம்பளை நீயே இவ்வளவு தூரம் துணிச் சலா யோசிக்கும்போது நான் பல மடங்கு யோசிக்கணும்னு சொல்வேன்னு பார்த்தா மூக்கால அழுவறியே..."

"இதோ பார்... என்னை இப்ப என்ன செய்யணும்னு சொல்றே?"

"எனக்கு ஹெல்ப் பண்ணு! என் கூடவே இரு. இன்பாக்ட் இந்த கோவிலுக்குன்னு பலன் சொல்ற நாடி ஜோசிய ஏடுகள்லாம் வேற இருக்காமே...?"

"ஆமாம்... அந்த தீட்சதர் அதைப் பத்திக்கூட நிறைய சொல்லியிருக்கார். அதுக்கென்ன இப்போ?"

-புதர் மண்டிய அந்த கோவிலின் இடிந்த பிரகார வெளியில் ஒரு சரிந்து கிடந்த கல்தூண் மேல் அமர்ந்து கொண்டு ஒரு மாதிரி கன்னத்தில் கை வைத்தபடி அவன் கேட்க பதிலுக்கு அவள் ஒரு தூணின்மேல் சாய்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு அவனைப் பார்த்தவிதம் சட்டென்று அவனுக்குள் ஒரு பொறியை ஊதிக் கிளப்பியது.

"அந்த தீட்சதர் அந்த ஏடுகள் பத்தி என்னெல்லாம் உன்கிட்ட சொல்லியிருக்கார்?"

-அவள் ஆழம் பார்க்க முயன்றது அவன் காதில் விழவேயில்லை. அவனுக்குள் அங்கு வந்தாலே ஏற்படும் அந்த வரலாற்றுக் காலத் தாக்கம் எழ அவனது நெற்றி யில் பலத்த சுருக்கம்.

அதே தூண்...

ஜீவா சாய்ந்து நிற்கும் அதே தூண்...

அதில் சாய்ந்து நின்று கொண்டிருப்பதும் ஜீவாதான்!

தலைமைச் சிற்பி மகாதேவரின் மகள் இந்த ஜீவா!

அவளுக்கு எதிரில் நாராயண அழகனின் உளிகள். ஒரு தூணில் சிற்பம் ஒன்றை செதுக்கிக் கொண்டிருந்தன.

அவளோ நின்று அவனையே பார்த்தபடி இருந்தாள்.

அவனது திறந்த மார்பிலும் பருத்த புஜத்திலும் வியர்வைத் துளிகள். அவனது சுருண்ட கேசம் பின்பிடரி வரை வளர்ந்து சுருண்டு கிடக்கிறது.

உளியைப் பிடித்துக் கல்துகள்களை பெயர்ப்பது ரசனைக்குரிய ஒரு செயலாக இருக்கிறது.

பார்த்துக் கொண்டே நிற்கிறாள் ஜீவா!

ஒரு கட்டத்தில் வியர்வை வழித்தபடி திரும்பிய நாராயண அழகன் அவள் வெறிப்பதைப் பார்த்து சற்றே துணுக்குற்றவனாக அவளை பதிலுக்கு வெறித்தான்.

"என்ன பார்க்கிறீர்கள்?"

"நானா... நீயா?"

"நான்தான் நெடுநேரமாக உங்கள் கைகள் புரியும் கலைப்பணியில் என்னை மறந்து ரசித்தபடி நின்று கொண்டிருக்கிறேனே..."

"ரசிக்கக் கூடிய அளவிலா இருக்கிறது இந்தச் செதுக்கல்...?"

"இல்லையா பின்னே?"

"ஒரு சிற்பியின் மகளா இப்படிப் பேசுவது... ஏதோ காணாததைக் கண்டுவிட்டது போல்..."

"என்வரையில் உங்கள் செயல்பாடு எல்லாமே காணாத ஒன்றுதான்..."

"புதிர்போடாமல் புரியும்படி பேசு ஜீவா."

"செய்வது இறைபணி... ஆனால், இறைவன் மேல் பற்றுதல் கிடையாது. செய்ததோ காதல். ஆனால் காதலி யுடனோ கருத்துவேறுபாடு. உங்களை புரிந்து கொள் ளவே முடியவில்லையே?"

-ஜீவா அவனோடு வாக்குவாதம் செய்யத் தயாராகி விட்டது போல கேட்ட கேள்வி அவனை சிரிக்க வைத்தது.

"எதற்கு இந்தச் சிரிப்பு?"

"சிரிக்காமல் என்ன செய்வது... உழைத்துதான் பிழைக்க வேண்டும். உழைத்துப் பிழைத்தாலே அவன் மனிதன். இல்லாவிட்டால் மனித உருவில் உள்ள விலங்கு என்பது என் கருத்து. எனவே, விலங்காகி விடக் கூடாது என்று கருதி உழைக்கிறேன். எனக்குத் தெரிந்த உழைப்பு சிற்பம் செதுக்குவது... அதை வேண்டுமானால்

மற்றவர்கள் வியக்கலாம். ஆனால்! கலையறிவை வியக்காமல் அதில் கடவுள் இருக்கிறார் என்பதும் அந்த கற்சிலையை ஆராதிப்பதும் புத்தியுள்ள செயலாக எனக்குத் தெரியவில்லை. இதை கண்டித்தால் அது எனது காதலிக்கே பிடிக்கவில்லை. மொத்தத்தில் கடவுள் என்கிற ஒரு கற்பனையான விஷயம் ஒருபுறம் உங்களை முட் டாளாக்கி என் வரையில் எதிரியாகி விட்டது. அதாவது இல்லாத ஒரு எதிரி எனக்கு உருவாகிவிட்டார்."

"அந்த இல்லாத எதிரி குறித்து கவலை உண்டா?"

"ஒருவேளை அந்த கடவுள் உண்மையாக இருப் பாரோ, நாம்தாம் அவரைப் புரிந்து கொள்ளவில்லையோ என்று..."

"பைத்தியமே... மறந்தும் இப்படி ஒரு அச்சம் அல்லது குழப்பம் எனக்கு வரவே வராது.

"ஒரு கற்பனையாக கடவுள் இருக்கிறார் என்று வைத்துக்கொள். என் கேள்விகளுக்கு நீ பதில் சொல்.

"இந்த உலகத்தில் ஆயிரக்கணக்கில் உயிரினங்கள் உள்ளன. இவைகளில் மனிதனும் ஒரு உயிரினம். அனைத்தையும் படைத்தது கடவுள்தான் என்றால் அவர் இந்த உயிர்களில் எந்த உயிரின் வடிவத்தில் இருப்பார்? நம்மைப் போல்தான் இருப்பார் என்றால் அவர் படைத்த மற்ற உயிரினங்கள் தாழ்ந்ததா?

"ஆம், தாழ்ந்தவைதான் என்றால் கடவுள் ஏன் உயர்வு தாழ்வோடு உயிர்களைப் படைக்க வேண்டும்?

அடுத்து அவர் படைத்த உலகில் வாழாமல் அவர் எங்கோ, ஏன் மறைந்து செயல்பட வேண்டும்?

"அவர்தான் நம் செயல்களை கண்காணிக்கிறார். நம் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப படியளக்கிறார் என்றால் எதற்கு பாவம் செய்யவிட வேண்டும்- பின் தண்டனை அளிக்க வேண்டும்.

"இதை எல்லாம் கூட விட்டுத் தள்ளு...

"மனிதர்கள் பிற உயிர்களைப் படைத்து இயக்கிக் கொண்டிருப்பது எதற்காக... இதில் அவருக்கு என்ன கிடைக்கிறது?

"எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு கேள்வி, இந்த சிலை என்று ஒன்று இருக்கிறது என்றால் அதை படைத்தவன் ஒருவன் இருந்தே தீர வேண்டும். அதேபோல் நான் இருக்கிறேன் என்றால் என்னைப் படைத்தது இறைவன் என்றால் அந்த இறைவனைப் படைத்தது யார்? ஒரு வாதத்துக்கு இதற்கெல்லாம் விடை இருக்கிறது என்றே வைத்துக் கொள். நம்மைப் படைத்து உலகைப் படைத்து உயிர்களையும் படைத்த இந்த கடவுளை கேவலம் ஒரு மனிதனுக்கு பயந்து நாம் ஒளித்து வைத்து காப்பாற்ற நினைக்கிறோமே... இதிலேயே தெரியவில்லை இல்லாத ஒருவரை இருப்பதாகக் கருதி காப்பாற்றிக் கொண்டிருப் பது நாம்தான் என்று... அவர் உண்மையில் இருந்தால் இதேமனிதக் கூட்டத்தில் ஒருவன் அவரை அழிக்க முயல்வானா? முயன்றால்தான் நடக்குமா?

"அப்படி நடந்தால் அது நன்றாயிருக்குமா?

-நாராயண அழகன் அடுக்கிய கேள்விகளில் ஜீவா மலைத்துப் போய் நின்றுவிட்டாள்.

அதே சமயம், "அருமையான கேள்விகள்... அற்புதம்... அற்புதம்..." என்றபடியே ஒரு வயதான சித்தரைப் போன் றவர் அவர்கள் இருவரை நோக்கிவந்தபடி இருந்தார்!

43

உயிர்களை ஆட்டிப் படைப்பதில் ஒரு சர்வாதிகாரியைப் போன்றது காம உணர்வு.

ஒவ்வொரு உயிருமே இன்னொரு உயிரிரண் டின் காமத்தால் உருவானவைதான். கடவுள் இல்லையேல் நாம் இல்லை என்பது மறைவான உண்மை. காமம் இல்லையேல் நாம் இல்லை என்பதே வெளிப்படையான உண்மை.

உயிர் வரிசைக்குப் பின்னால் இருந்து கொண்டு நம்மை எல்லாம் இயக்கிக் கொண்டிருப்பது காமம்தான்.

உலகம் நமக்கு புரியாத பருவத்தில் பாச அன் பாய் பரிமளிக்கிறது. இது பருவ வயதில் அப்படியே காதல் அன்பாய் மாறுகிறது. பின் முதுமையில் அனைத்தையும் அனுபவித்து முடித்த நிலையில் ஒரு சலிப்புக்குள்ளாகி, அனுபவித்த இன்பமெல் லாம் எதுவும் தங்காமல் போனதை உணர்ந்து ஞானத்தை அடைந்து காதல் அன்பை அப்படியே இறைமேல் பக்தியாய் மாற்றிக் கொண்டு மெல்ல உலக பந்தத்தை வலியின்றி கைகழுவி விட்டு விடுகிறது.

ஒரே நெருப்புதான் இடத்திற்கு தகுந்தமாதிரி எரிந்து பயன்படுகின்றாற்போல காம உணர்வு என்னும் நெருப்பும் பிராயத்திற்கு ஏற்ப பயன்பட்டு உயிர்களின் வாழ்க்கையை ருசி உடையதாக மாற்றுகிறது.

இந்த நெருப்பை ஒழுங்காய் எரித்து பயன் படுத்திக் கொண்டு வாழவே வாழ்வியல் நெறி முறைகளை முன்னோர்கள் வகுத்தனர். நெறி பிழன்று போகும்போது அது நம்மை எரித்து அவித்து விடும் விபத்து நேரிட்டு விடுகிறது.

போகட்டும்...

இந்த நெருப்பு எங்கிருந்து வந்தது தெரியுமா? அதிதேர்ந்த ஞானியர்க்கே இதன் இருப்பிடம் சிவனின் நெற்றி என்பது தெரியும். இந்த நெருப் புக்கு ஒரு உருவம் கொடுத்தபோது ஜனித்தவன் தான் மன்மதன்.

இவன் கர்த்தாவாகிய சிவனையே ஹிம்சித்து அதன் காரணமாக அழிந்து சாம்பலானவன். அந்த கதை மிக நுட்பமானது.

தட்சன் சிவனைப் புறக்கணித்து யாகம் வளர்த்ததும், அதற்குத் தடையாக அவன் மகளும், சிவனின் சமபாகம் உடையவளுமான பார்வதி யாகிய தாட்சாயணி சென்றதும் நாமறிவோம்.

தாட்சாயணி சிவத்துக்குரிய மரியாதை கிட்டாத தவிப்புணர்வோடும், தந்தையே இப்படி இழிவாக நடக்கிறாரே என்கிற பாச உணர்ச்சியோடும் தடுமாறிய காலகட்டம் அது.

அதன் எதிரொலியாக அவள் 'ஐயன் சொல் கேளாத பெண்' என்கிற பழிக்குள்ளாகி சிவத்தை விட்டு தற்காலிகமாகப் பிரிகிறாள்.

இந்நிலையில் சிவனும் யோக நிட்டையில் அமர்ந்துவிட, உலகில் இயக்க கதியே மாறிப் போகிறது. குறிப்பாக உயிரணுக்களைத் தூண்டும் காம நெருப்பே அவிந்துவிடும் ஒரு நிலை தோன்று கிறது.

ஐயனின் இந்த நிலையை மாற்றிட பிற தேவர் கள் திருவுள்ளம் கொண்டு மன்மதனை ஐயனின் நிஷ்டையை கலைக்க அனுப்புகின்றனர். மன்மத னின் பாணத் தாக்குதல் உயிர் அணுக்கள் இடையே வேகத்தை தூண்டுதலை மூட்டக் கூடியது. சிவமும் அந்த பாதிப்பால் நிஷ்டையை கலைக்கிறது. அதே நேரம் அது கோபத்தோடு மன்மதனையும் எரிக் கிறது.

பின் பார்வதியை மணக்கும் நாளில் மன்மதன் உயிர் பெற்று எழுவதோடு ரதியின் கண்களுக்கு மட்டும் புலனாகும் வரத்தையும் அளிக்கிறது.

இது கதை.

ஆனால், இதை நுட்பங்களுடன் புரிய முயன்றால் பல அரிய செய்திகள் இதில் கிட்டும்.

காமத்திற்குக் கடவுளும் விதிவிலக்கில்லை என்பது மட்டுமல்ல, அதுவே இயக்கத்திற்கு காரணம். அந்தக் காமம் ஒரு கட்டுக்குள் இருத்தலும் மிக மிக அவசியம்.

கட்டுமீறினால் பிடி சாம்பலே மிஞ்சும். அதற்கு தன் வாழ்க்கைப் போக்கிலேயே ஒரு விடையைத் தந்தருளிய சிவமூர்த்தமே காமதஹன மூர்த்தமாகும்.

நாராயண அழகனின் கேள்விகளை ரசித்தபடியே அதேநேரம், "அற்புதம். எல்லாமே அறிவுப் பூர்வமான கேள்விகள்" என்றபடியே வந்த சித்த புருஷரை சற்று வெறுப்புடன் பார்த்தான் நாராயண அழகன்.

ஜீவாவும் அவர் பாராட்டியதை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"என்ன பெண்ணே, அப்படிப் பார்க்கிறாய்? நான் பாராட்டியது ஆச்சரியத்தை அளித்துவிட்டதா உனக்கு?" என்று அவரும் அவளைப் பார்த்து கேட்டார்.

"நிச்சயமாக. தாங்களோ ஒரு சிவனடியார். தாங்கள் எப்படி இவரது இந்த கேள்விகளை ரசிக்கிறீர்கள்?"

"ரசிப்பது மட்டுமா... அவ்வளவும் உன்னதமான கருத்துக்கள். அதை நான் பாராட்டவும் செய்கிறேன்" என்றவர் அவரே தொடர்ந்து,

"குழப்புகின்றீர்களே ஸ்வாமி. இவர் சிவமே பொய் என்கிறார். நீங்களோ மெய் என்றுரைப்பவர். மெய்யாகிய நீங்களா இந்தப் பொய்யை ஆதரிப்பது."

"பரவாயில்லையே ரசிக்கும்படியாக வியக்கும்படியாகவே கேட்கிறாய். ஆனால் இதற்கெல்லாம் நான் பதில் சொன்னால் உனக்குப் புரியாது. அதுதான் எனக்கு கவலை தருகிறது"

"அப்படியானால் பதில் என்று ஒன்று இருக்கிறதா?"

"இந்த நொடி பதில் இல்லாத ஒரே கேள்வி என் வரையில் ஒன்றே ஒன்றுதான். அது நம்மைப் படைத்த இறைவனை யார் படைத்தார் என்பதுதான்."

"அப்படியானால் இறைவன் இருக்கிறான் என்பதுதான் உங்கள் நிலைப்பாடு. அப்படித்தானே?"

"என்ன கேள்வி இது? நான் இருக்கிறேனே என்றால் இறைவன் என்று ஒருவன் இருந்துதானே தீர வேண்டும்?"

"அடியவரே... தயவுசெய்து குழப்பமான பதில்களால் எங்களை மேலும் குழப்பாமல் இங்கிருந்து நடையைக் கட்டுகிறீர்களா?"

இடைபட்டது நாராயண அழகனின் குரல். அதுவும் அதட்டலாக.

"நாராயண அழகரே... சற்றுச் சும்மா இருங்கள். அடியவரே பேசுங்கள். விடை தெரியாத அந்த கேள்வியைப் பற்றி நாம் பிறகு சிந்திப்போம். மற்ற கேள்விகளுக்கு பதில் கூற முடியுமா உங்களால்?"

"அதுதான் கூறினேனே நான் கூறத் தயார். ஆனால் உனக்குப் புரியாது."

"அதையும்தான் பார்க்கிறேனே கூறுங்கள்."

"நீ முதலில் கேள்விகளைக் கேள். அதுவும் வரிசையாக."

"சரி. கடவுள் இருக்கிறாரா?"

"நீயும் நானும் இந்த நாராயண அழகனும் மற்றுமுள்ள இதோ இந்தச் செடி கொடிகளும் கல்லும், மண்ணும், காற்றும், நீரும், ஒளியும் ஒலியும் என்று நம்மைச் சுற்றி இத்தனை விஷயங்கள் இருப்பதால் அவர் நிச்சயம் இருக்கிறார்."

"இதை கடவுள்தான் படைத்தார் என்று எதை வைத்து நம்புவது?"

"உன்னை யார் நம்பச் சொன்னது? நம்பாதே. அதனால் கடவுளுக்கு ஒரு நட்டமும் இல்லை."

"நான் லாப நட்டத்திற்காக இப்படி கேட்கவில்லை. கடவுளைப் புரிந்து கொள்ளவே இவ்வாறு கேட்கிறேன்."

"அப்படி வருகிறாயா நீ? நல்லது. பெண்ணே ஒரு ஆற்றின் ஆழத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் என்ன செய்வாய் நீ?"

"அதில் இறங்கி மூழ்கிப் பார்த்து தெரிந்து கொள்வேன்."

"கடவுளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றாலும் அதே பாணியில் தான் செயல்பட்டாக வேண்டும்."

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? புரியவில்லை."

"கடவுளைப் புரிந்து கொள்ள அவரது பிரதாபங்களைப் படி, பக்தி செலுத்து. அதாவது அவருக்குள் இறங்கு. உனக்கு அவரும் புரிவார்."

"அது எப்படி... ஆறோ, குளமோ என் கண்களுக்கு நன்றாகத் தெரிகிறதே. அதன் ஆழம்தான் பார்த்த மாத்திரத்தில் தெரியவில்லை. எனவே, இறங்கிப் பார்த்து தெரிந்து கொள்கிறேன். ஆனால்,நீங்கள் புரிந்து கொள்ளச் சொன்ன அந்த கடவுள் என் கண்ணுக்குத் தெரியாமல் அல்லவா இருக்கிறார். கண்ணுக்குத் தெரி யாத வரை எப்படி இருப்பதாக நம்பி புரிந்து கொள்ள முடியும்?"

"அதுசரி... பிறப்பிலேயே பார்வையின்றிப் பிறந்தவர் களுக்குத் தங்கள் கண்களுக்கு இந்த உலகமோ, உயிர்களோ தெரியவில்லை என்பதால் தங்களைச் சுற்றி எதுவுமே இல்லை என்றா நினைக்கிறார்கள்?"

சித்தராகிய அந்த சிவனடியாரின் கேள்வி ஒருவினாடி ஜீவாவை யோசிக்க வைத்தது. நாராயண அழகனோ சிரித்தபடி, "கண்களால் பார்க்க முடியாவிட்டாலும், ஸ்பரி சித்து அவர்களால் உணரமுடியுமல்லவா? அப்படியாவது உங்கள் கடவுளை நானோ, இவளோ உணரமுடியுமா?"

"ஆஹா... அழகான கேள்வியையே இப்போதுதான் நீ கேட்டிருக்கிறாய். தோளில் ஆட்டுக்குட்டியை சுமந்து கொண்டிருக்கும் ஒருவன், வெளியில் எங்கே அதைத் தேடினாலும் கிடைக்காதல்லவா?"

"நான் கேட்ட கேள்விக்கு நேரிடையாக நறுக்கு தெரித்தமாதிரி பதில் சொல்லவே உங்களுக்குத் தெரி யாதா? எதற்கு இப்போது ஆட்டுக்குட்டி விஷயத்தை தொட்டீர்கள்?"

"அப்படிக்கேள். ஆட்டோடு இருப்பவன் ஆட்டைத் தேடுவது எவ்வளவு அபத்தமோ, அவ்வளவு அபத்தம் அவரை சதா ஸ்பரிசித்துக் கொண்டிருக்கும் நீ, அவரை ஸ்பரிசித்துப் பார்த்து உணரமுடியுமா என்பதும்."

"நான் இறைவனை ஸ்பரிசித்துக் கொண்டிருக் கிறேனா?"

"இல்லையா பின்னே?"

"போதும். நீங்கள் ஒரு அழுக்குப் பிரசங்கி. குழப்பப் பிரசங்கியும் கூட."

நாராயண அழகன் கோபித்துக் கொண்டு உளியை விட்டு எறிந்தான்.

"நில்" அவரே தடுத்தார். அவனும் நின்று வெறித் தான்.

"இப்போது எதற்காக இந்த கடவுள் சர்ச்சை?" அவரே கேட்டார்.

"இல்லாத விஷயத்தைப் பற்றி இருப்பதாகக் கருதிக் கொண்டு காலநேரத்தை விரயம் செய்பவன் நானில்லை. இந்த சர்ச்சையைத் தொடங்கியது இதோ இவள்தான்."

நாராயண அழகன் கை ஜீவாவை நோக்கி நீண்டது. ஜீவா அவன் அப்படிச் சொன்னதற்காக அசரவில்லை.

"அடியவரே நில்லுங்கள். அவரை விட்டுத் தள்ளுங்கள். என் கேள்விகளுக்கு முதலில் பதில் கூறி முடியுங்கள்" என்றாள்.

"சரி கேள்" மீண்டும் அவரும் தயாரானார்.

"நாத்திகவாதம் புரிந்த இந்த நாராயண அழகனின் கேள்விகளை எப்படி உங்களால் ரசித்து ஒப்புக் கொள்ள முடிகிறது?"

"அதில் அர்த்தச் செறிவு இருப்பதால்."

"அர்த்தச் செறிவா... எப்படி?"

"ஆமாம். கடவுள் நம்மைக் காப்பவர் என்கிறோம். ஆனால் அவரை இங்கே நாமல்லவா காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம் என்றானல்லவா? இது எத்தனை அறிவுப் பூர்வமான கேள்வி."

"சரி. அதற்கு உங்கள் பதில்?"

"திரும்பவும் சொல்கிறேன். நான் பதில் சொன்னால் உனக்கு புரியாது."

"பரவாயில்லை சொல்லுங்கள்!"

"நாம் வாழ நமக்கு இந்த உலகில் செல்வம் என்று ஒன்று தேவைதானே?"

"நிச்சயமாக"

"அதைத் தேடி அலைந்து அதைச் சம்பாதித்து பல தலைமுறைகளுக்கு ஏன் நாம் சேர்த்து வைக்கிறோம்?"

"அந்த தலைமுறைகள் நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான்"

"அதாவது முதலில் பணத்தை நீ தேடிப்பிடித்து அதை நிலமாய், வீடாய், காடு கரையாய் மாற்றி உன் பெயரில் பத்திரப்படுத்துவாய். பிறகு அது உனக்கு காலமெல்லாம் பயன்படும். அப்படித்தானே?"

"ஆமாம் அப்படித்தான். என் தந்தைகூட அடிக்கடிச் சொல்வார். முதலில் செல்வத்தை நீ காப்பாற்று பிறகு அது உன்னைக் காப்பாற்றியபடியே இருக்கும் என்று."

"வழிக்கு வந்துவிட்டாய் நீ."

"நம்மை எஞ்ஞான்றும் இறைவன் காத்து நிற்க வேண்டும் என்றே இங்கே தற்காலிகமாக நாம் அவனை காத்து நிற்கிறோம்.

அந்த சித்த புருஷரின் பதிலால் ஜீவாவின் கண்களில் புதிதாய் ஒரு ஒளி! நாராயண அழகனுக்கோ பற்றிக் கொண்டு வந்தது.

"இப்படி உதாரணம் காட்டி உதாரணம் காட்டி உளற எனக்கும் தெரியும். அப்படி இங்கே நீங்கள் காட்டிய செல்வத்தை சேமிக்கும் உதாரணமும் மிக அற்பமானது.

"இறைவன் ஆதி அந்தமற்றவன். ஈரேழு பதினான்கு புவனம் படைத்தவன். கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பவன் என்றெல்லாம் அவனைப் புகழ்ந்து விட்டு ஒருவரிடம் நிலையாக, நில்லாத செல்வத்தோடு அவரை ஒப்பிட்டுப்பேசுவது உங்களுக்கே இழிவாகத் தெரியவில்லையா?"

என்று அந்த அடியாரை நோக்கிப் பாய்ந்தான். அடியா ராகிய அந்த சித்த புருஷரோ அதைக் கேட்டு கோபம் கொள்ளாமல் திரும்பவும் சிரித்தார்.

ஜீவாவுக்கோ அவர் தெளிவாகப் பேசுவதாகவே தோன்றியது.

"நாராயண அழகரே! ஒரு உதாரணத்திற்காக எனக்கு புரிய வேண்டும் என்றுதான் அவர் அப்படிச் சொன்னார். பதில் எனக்கு தவறு இருப்பதாகத் தெரியவில்லை" என்றாள் அவளும் மிக ஆவேசமாய்.

"அப்படியா? அப்படியானால் அவர் சொன்ன உதார ணத்தையே வைத்து இவரிடம் நான் ஒரு கேள்வி கேட் கிறேன். செல்வத்தை நாம் முதலில் காப்பாற்றுவோம். பிறகுதான் அது நம்மை காப்பாற்றுகிறது என்றால் சரி- அதை கண்ணால் பார்க்கிறோம். கருத்தால் உணர்கிறோம். குறிப்பாக அது காப்பாற்றும் என்று நம்புவதாலேயே அதைத் தேடிச்சேகரிக்கிறோம். என்னைப் படைத்த இறை வனும் என் கண் எதிரில் தெரியட்டும். பிறகு நான் அதை நம்புகிறேன். அது எப்படி வேண்டுமானாலும் தெரியட்டும். புல்லாய், புழுவாய், பூண்டாய், ஏன் இந்த உலகில் நாம் யாருமே கண்டிராத புதிய வடிவாய், அல்லது சப்தமாய் அதுவுமல்லாது உணர்வாய் அது எப்படி வேண்டுமானால் இருக்கட்டும்.

"பசிச்சென்று நான் இந்த உலக விஷயங்களை உணர்வதுபோல அதை உணர வேண்டும். அப்படி உணர முடியுமா?

"வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பதில் கூறுங்கள்.

நாராயண அழகன் அந்த சித்தபுருஷரை இறுக்கிப் பிடித்தான். அவர் பார்வை ஜீவா மேல் சென்றது. அவளும் உடனே அதை ஆமோதித்தாள்.

"அடியவரே, உங்களால் முடியும். முடியும் என்று சொல்லுங்கள்" என்றாள்.

"அது எப்படியம்மா... உனக்காக நான் உண்டால் உன் பசி எப்படி ஆறும்? இதுவும் அப்படித்தான்" என்றார்.

"ஜீவா விடு. இவரால் முடியாது. இவரால் மட்டுமல்ல, யாராலும் முடியாது. இந்த உலகில் இருக்கிற ஒன்றைத்

தான் ஒருவனால் கண்டறிய முடியும். இல்லாத ஒன்றை எவ்வளவு தேடினாலும் கண்டறிய முடியாது. இவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டு அறிவு மயக்க முடைய ஒருவர்.

"இந்த பிரபஞ்சத்தை புரிந்து கொள்ள வகையற்றவர். பிறர் நடந்த பாதையில் சுலபமாக நடக்க ஆசைப் படுபவர். நடந்து கொண்டும் இருப்பவர். துளியும் சுய சிந்தனையோ, பகுத்தறிவோ இல்லாதவர்."

அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவரை அப் படியே தீயாய்ச் சுட்டது. அதுவரை உணர்ச்சிவயப்பாடே இல்லாமல் அவனைப் பார்த்து சிரித்தபடியே பேசியவரின் கண்கள் அப்படியே ரத்தச் சிவப்பாய் மாற ஆரம்பித்தன.

44

'சிவ மூர்த்தத்தில் தட்சிணாமூர்த்தி மூர்த்தம் விசேஷ சிறப்பை உடையது. சிவமானது தென் திசை நோக்கி அமர்ந்து பிரம்ம புத்திரர்களுக்கு நால்வகை வேதம் குறித்தும், உயிர்கள் குறித்தும் பிறப்பு இறப்பு குறித்தும் ஈரேழு பதினான்கு புவனங்கள் குறித்தும் இன்று இந்துமதத்தில் த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என்று ஞானிகளால் காணப்பட்டிருக்கும் வித்தியாசமான இறைபாதைகளுக்குள் உள்ள அனைத்து நுட்பம் குறித்தும் உபதேசித்த கோலமே தட்சிணாமூர்த்த கோலம்.

ஞான குருவாய் நின்று சிவமானது மவுனமாய் உபதேசித்த இந்த ஞான விலாசமானது நாமும் இன்று தட்சிணாமூர்த்தியை மனத்தில் நிறுத்தி தொழுதக்கால் நமக்குள்ளும் உருவாகும்.

யாரிடமும் கேள்வி கேளாமல், யாருடைய பதிலாலும் உந்தப்பட்டு யோசியாமல் நாமே நம்முள் அவிந்து அடங்கி அவ்வப்போது நமக்குள்ளேயே கேள்விகளில் விழுந்து பின் விடையையும் பெற்றிட தட்சிணாமூர்த்தியே உகந்தவர்.

அதிலும் அவரது சின் முத்திரை தனிச் சிறப்பு உடையது. பிரிந்து கிடக்கும் விரல்நுனிகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும்போது உடம்பின் கதிர் இயக்கத்தில் ஒரு உள்சுழற்சி ஆரம்பமாகிறது. கைகள் இரண்டும் ஒன்றை ஒன்று தொட்டிராத நிலையில் விரல் நுனிவழியாக கதிர் இயக்கம் பிரபஞ்ச வெளியில் கலந்தபடி உள்ளது. அதே விரல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ளும்போது பிரபஞ்ச வெளியில் விழாமல் நமக்குள்ளேயே திரும்புகிறது. அவ்வாறு அது திரும்பும்போது மனமும் ஒரு நிலையில் தியானத்தில் இருக்க அந்த சக்தி பல மடங்கு அதிகரித்து நமது உயிர் மையம் உள்ளே மெல்ல ஒளி பெறத் தொடங்குகிறது. இவ்வாறு உயிர் மையம் ஒளிபெறத் தொடங்கும்போது நமது எண்ண அலைகளிலும் அசாத்ய மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது எப்படி என்ற கேள்விக்கு அந்த நிலையை அடைந்து சுய அனுபவம் பெறுவதே சிறந்த செயலாகும். அதன்பின் கேள்விகள் வெளியே எவரிடமும் கேட்கவேண்டிய அவசியமில்லை. கைவிரல்களில் உள்ள சூட்சமம் அப்போது புரியும். விரல்கள் நமக்கு உதவி புரியும். நமக்கான ஆயுதம் மட்டுமல்ல அது ஒரு பிளாக் பாயின்ட்டைப் போன்றதும் கூட.

தெய்வத்தை வணங்க இரு கரங்களையும் சேர்த்துக் கொள்கிறோம். அந்த கூம்பிய நிலைகூட ஒரு வித முத்திரை. இறை சன்னதியில் நம் நயனம் மூலம் நாம் பெற்றிடும் அருள் அலைகளை கைகளை பிரிந்த நிலையில் வைத்து இழந்து விடாமல் நமக்குள்ளேயே தக்க வைத்துக் கொள்ளும்

ஒரு நிலை அது. அலையாவது புடலங்காயாவது. எல்லாம் கற்பனை. இதெல்லாம் அபத்த விளக்கங்கள். ஒரு அலையும் நம் உடலில் உருவாவதில்லை என்பவர்களை விஞ்ஞானமே புறந்தள்ளி விடுகிறது.

இன்று பலவித சிறப்பு பெற்ற லென்சுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் நமது உடலின் புறத்தில் காற்று வெளியில் நிகழும் மாற்றங்களை மிக நுட்பமாய் காட்டும் லென்ஸ் ஒன்றைப் பொருத்தி ஒரு மனிதனின் நடவடிக்கையை திரைப் படமாகவே எடுத்துள்ளனர். அதில் அந்த மனிதன் கோபப்படும்போது பல மடங்கும் புறத்தோலில் அலைப்பாடுகள் உருவாவது தெரிய வநதுள்ளது.

அந்த லென்ஸ் புறத்தில் நிகழும் மாற்றங்களை மட்டுமல்ல. அகத்திலும் நிகழும் மாற்றங்களையும் நுட்பமாக காட்டுகிறது.

தட்சிணாமூர்த்த சிவத்தின் சின் முத்திரை இப்படி பலவித சிந்தனைகளை நம்முள் உருவாக்கு கிறது. அந்த சின் முத்திரையும் அலைபாயும் மனதை அப்படியே மெல்ல அமைதிப்படுத்துகிறது.

இறுதிவரை நாராயண அழகன் எதிர்வாதமே செய்ய, துளிகூட சொல்வதைப் புரிந்து கொள்ளாமல் புரிந்து கொள்ள முயற்சியும் செய்யாமல் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்கிற தொனியிலேயே பேசியதும் கேள்விகள் கேட்டதும் இறுதியாக என்னை, உங்களை, மேலும் பல உயிர்களை மற்றும் இந்த உலகைப் படைத்த அந்த கடவுள் நம்மைப் போலவே ஒரு உருவம் கொண்டு இருப்பது நிஜமானால் அவரை நான் பார்க்க முடியுமா? -கேள்வியில் வந்து நிற்க அந்த சித்த புருஷர் கோபத்தில் கண்கள் சிவக்க, அவனை உற்றுப் பார்த்தார்.

உடனே, "இந்த கோபம் ஒரு இயலாமை" என்றான் நாராயண அழகன். ஜீவாவிற்கு தங்கள் விவாதம் எங்கோ போய்க் கொண்டிருப்பது போலத் தோன்றியது. நாராயண

அழகனைப் பார்த்தாள். அப்படியே பார்வை அந்த சித்த புருஷர் மேலும் சென்றது.

அவரோ அந்த ஆலயத்தினுள் கோவில் கொண்டு அமர்ந்திருக்கும் சிவலிங்கத்தின் மேல்பார்வையை வைத்தவராய் சிந்தனையில் இருந்தார்.

"என்ன அடியவரே... என் கேள்விக்கு பதில் சொல்ல இயலாத நிலையில் பார்வை அந்த அம்மிக்கல் மேல் சென்றுவிட்டதோ?" -அழகன் அவரைக் கவ்வி இழுத்தான்.

"எப்படிப் பார்க்கிறறோமோ அப்படித் தெரிபவனே அந்த கயிலாயமூர்த்தி. உனக்கு அம்மிக்கல்லாகத் தெரிகிறனா?"

"தவறு. அந்த அம்மிக்கல்லைதான் நீங்கள் கயிலாய மூர்த்தி என்கிறீர்கள்."

"நிறுத்து... எவ்வளவு முயன்றாலும் கல் தரையில் பயிர் வளர்க்க முடியாது. நீயும் அப்படித்தான்."

"நல்ல தரயை கற்தரையாக நினைத்துவிட்டாலும் பயிர் செய்ய முடியாது என்பதே என் பதில்."

"விதண்டாவாதம் செய்கிறாய்..."

"அப்படிச் செய்தும் அந்த இறைவனைக் காட்டு கிறேன் என்று சொல்ல முடியவில்லையே...?"

"இப்படித்தான் ஹிரண்யன், பிரகலாதனிடம் பேசி னான். பிரகலாதனோ தூணிலும் துரும்பிலும் கூட அந்த மூர்த்தி இருப்பதாகக் கூற பின் அந்தத் தூணில் இருந்து மூர்த்தி வெளிப்பட்டது."

"அந்த மூர்த்தியை இங்கே வரச் சொல்லுங்களேன்."

"ஆயிரமாயிரம் ஆண்டு தவமிருந்தாலே வசப்படாத வன், நீ நம்ப வேண்டும் என்பதற்காக வருவானா?"

"அது சரி... இல்லாத ஒன்று லட்சோப லட்சம் ஆண்டு தவமிருந்தாலும்தான் வரப் போவதில்லையே..."

"அப்படியானால் ஹிரண்யனை வதம் செய்ய அந்த இறைவன் நரசிம்மமாய் வந்தது பொய்யா...?"

"அதீத கற்பனை... புராணங்கள் உங்களைப் போன்ற வர்களால் எழுதப்படுபவைதானே? கற்பனை என்றால் காலம் கொண்டு போய் விடும் என்று தான் நீங்கள் அவை களுக்கு தெய்வ சம்பந்தத்தை உருவாக்குகிறீர்கள்."

"வேண்டாம். புராணங்களைப் பழிக்காதே. அவை மனித சமுதாயத்தை நெறிப்படுத்துபவை..."

"அப்படிச் சொல்லியே இவ்வளவு நாளைக் கடத்திவிட்டீர்கள்... என் வரையில் அது நடவாது."

"ச்சீ... வாயை மூடு. இப்படியே பேசினால் நீ என் சாபத்திற்கு ஆளாவாய்..."

"சாபமா... அப்படி என்றால்?"

"கோபம் முற்றினால் சாபம். அந்தச் சாபம் உன்னைப் பொசுக்கிவிடும். நினைவில் கொள்..."

"தீயைத் தவிர வேறு எதனாலும் என்னைப் பொசுக்க முடியாது."

"அப்படியா... இப்போது பார், நீ என்னாகிறாய் என்று" -அந்த சித்த புருஷர் வலக் கையை மூடி நெற்றிப் பொட்டருகே கொண்டு சென்று அவனை சபிக்கத் தயாரானார்.

"ஸ்வாமி..." -குறுக்கிட்டது ஒரு புதிய குரல். அவரது ஒருமுகமும் கலைந்தது. குரல் கொடுத்தவர் பிரம்மானந்த பட்டர்!

பட்டரும் வேகமாக நெருங்கி வந்து, "என்ன ஸ்வாமி இது... எதற்காக இவன் மேல் இத்தனை கோபம்?" என்று ஆரம்பித்தார்.

"இவன் பரம நாத்திகன். இவனைப் போல நான்கு பேர் இருந்தால் போதும். ஊரே அழிந்துவிடும்" -சித்தரிடம் கோபம் குமிழியாய் வெடித்தது.

"தவறு ஸ்வாமி... இவனைப் போல் நான்கு பேர் இல்லை, நான்கு லட்சம் பேர் வந்தாலும் இறைபணியாளர்களுக்கு ஒரு சேதமும் வந்திடாது."

"போதும் பட்டரே... இந்த ஷணம் இறைவனை நேரில் காட்டு நம்புகிறேன் என்கிறான். நம்பாதே! நீ நம்பி யாருக்கு என்னவாகிடப் போகிறது என்று நான் கேட்டால் நான் நழுவுவதாகக் குறிப்பிடுகிறான். சரி என்று பலவித உதாரணங்களைக் காட்டி புரிய வைக்க முயன்றால் எல்லாம் கற்பனை, அபத்தம் என்கிறான். புரிந்து கொள்ள ஒருதுளியும் முயலாமல் தான் சிந்திப்பதே சிந்தனை. பேசுவதே பேச்சு என்று வார்த்தைக்கு வார்த்தை மோதல் நிகழ்த்தும் இவனுக்கு என் தவச் சக்தியை நான் உணர்த்த வேண்டாமா?"

"ஐயோ... என்ன இது உங்கள் கோபத்தின் நியாயம் எனக்குப் புரிகிறது. ஆனாலும் கோபம் முனிவர்களுக்கு அழகல்லவே. அது எதிர்ப்படுபவரைவிட கொண்டவரை அதிகம் பாதிக்கும் ஒரு 'உணர்வல்லவா?"

"என்ன செய்வது... எனக்கு எவ்வளவு பாதிப்புகள் வந்தாலும் பரவாயில்லை என்று இவனைச் சபிக்கவே மனம் துடிக்கிறது."

"நீங்கள் நாராயண அழகனைச் சபிப்பதற்கு பேசாமல், இந்த ஆலயத்தை சர்வ நாசமாக்க முயலும் அந்த மாலிக்காபூரின் படைவீரர்களைச் சபிக்கலாம். குறைந்த பட்சம் ஒரு அழிவாவது தடுக்கப்படும். கடவுள் இருக்கிறாரோ இல்லையோ, இங்கே கலை இருக்கிறது. அது காப்பாற்றப்படும்."

-ஜீவாவும் குறுக்கிட்டு தன் கருத்தை வைத்தாள்.

"அது சரி... அப்படி சபித்த மாத்திரத்தில் ஒன்றை அழிக்கும் சக்தி இருந்தால் எதற்காக இந்த ஆலயத்து சிற்பங்களை நாம் ஒளித்து வைக்கவேண்டும்?

'இந்த சிவனடியாரை ஆலயவாசலில் நிறுத்திவிட்டால் போதாதா... கொள்ளை கொண்டு போக வருகின்றவர்களை இவரது சாபத்தால் அப்படியே சாம்பலாக்கி விட மாட்டாரா என்ன?"

மீண்டும் எக்காளம் நாராயண அழகனிடம்.

"அடேய் சிற்பி... நீ என் சக்தி தெரியாமல் பேசுகிறாய்."

-அந்த சித்த புருஷர் மீண்டும் சீறினார்.

"என்ன சக்தி... பெரிய சக்தி? மனிதனுக்கு இரண்டு சக்திதான்! ஒன்று எதையும் தாங்கும் மனோசக்தி, அடுத்து உடல் சக்தி... இதில் நீங்கள் எந்த சக்தியைக் குறிப்பிட்டு, எனக்கு அது தெரியாது என்கிறீர்கள்?"

"இந்த இரண்டு சக்திகளையும் வழங்கிய இறைசக்தி பற்றி உனக்கு எதுவும் தெரியாததால்தான் இப்படி பேசுகிறாய்..."

"சரி... அந்த சக்தியால் என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?"

"நாராயண அழகா... என்ன இது? எதற்காக இப்படி அவருடன் வார்த்தைக்கு வார்த்தை மல்லு கட்டுகிறாய். சிவனடியார்கள் சபித்தால் அது ஏழு தலைமுறைக்குத் தொடரும். அதைத் தெரிந்து கொள் முதலில்..."

"இப்போது எடுத்திருக்கும் இந்த பிறப்பே தெளிவாகப் புரியவில்லை. இதில ஏழுபிறப்பு என்றும் அதில் இதெல்லாம் தொடரும் என்றும் கூறுவதை எல்லாம் நான் ஏற்கத் தயாராக இல்லை பட்டரே..."

"ஓ... என்னிடமே எதிர்வாதமா? வார்த்தைக்கு வார்த்தை பொருள்தேடுகிறாயே... எல்லாவற்றையும் நிதர்சனமாகவே புரிந்து கொள்ள இயலாது. யூக அறிவு வேண்டும்."

"அது இருப்பதால்தான் உங்களிடம் மல்லாடியபடி இருக்கிறேன். மூட நம்பிக்கைகள் கொண்டிருப்பதால் என் காதலியைக் கூட நான் ஒப்புக்கொள்ளவில்லை. நீங்கள் எம்மாத்ரம்?"

"பட்டரே... விடுங்கள்! இனி இவனிடம் நாம் பேசுவதில் பயனில்லை. அந்த ஈசனிடமே இவனை விட்டுவிடுகிறேன். அதுமட்டுமல்ல... எந்த ஒரு பிறப்பிலும் இவன் இறை நம்பிக்கைகொள்ளக் கூடாது. ஏன் என்றால் அந்த நம்பிக்கை ஒரு கருணை! அந்த கருணை இருந்தால் இவனுக்கு எல்லாம் கிடைத்து வாழ்க்கை சுபிட்சமாகி விடும். இவன் இருந்தும் இல்லாதவனாகவே எப்போதும் இருப்பான் என்று சபிக்கிறேன்."

-அந்த சிவனடியாராகிய சித்தர் நெற்றிப் பொட்டருகே கைகளை கொண்டு சென்று பின் ஆவேசமாக அதை விடுத்துச் சபித்தார்.

அதைக்கேட்டு நாராயண அழகன் சிரிசிரி என்று சிரிக்க ஆரம்பித்துவிட்டான்.

"அழகாக... எதற்கு இப்படி சிரிக்கிறாய்? உடனே இந்த அடியவர் காலில் விழு! இவர் இரக்கம் கொண்டு பரிகாரம் கூறட்டடும்."

"இந்த காலில் விழுவது... கையில் விழுவதெல்லாம் உங்கள் வேலை. ஒரு வகையில் எனக்கு நன்மைதான் செய்திருக்கிறார் இவர். நான் சாபத்தை நம்புபவனில்லை. இருப்பினும் இவரது சாபக் கருத்து எனக்கு மிகப் பிடித்திருக்கிறது. நான் எப்போது ஜென்மமெடுத்தாலும்... அதாவது அப்படி ஒன்று உண்மையில் இருந்தால் அதில் நான் இப்போது இருப்பதுபோலவே புத்திபூர்வமாக இருக்கத்தானே இவர் சொல்கிறார்!

"தேரைக்கும் உணவளிப்பவன் அந்த ஈசன் என்று கூறும் நீங்கள் இன்றில்லை, நாளை, நாளை இல்லை, மறுநாள் அதுவுமில்லை எப்போதாவது தன்னை எனக்கு

உணர்த்தட்டும். ஓ... நீங்கள்தான் சபித்துவிட்டீர்களே... இனி எங்கே நான் உணரப் போகிறேன். ஒருகால் அந்த சிவனே நேரில் வந்தாலும் உங்க சாபம் காரணமாக நான் அவனை யாரோ என்றுதானே நினைப்பேன். அப்படித் தானே? ஹாஹ்ஹா... ஹாஹ்ஹா...!" -நாராயண அழகனின் சிரிப்பொலி அந்த ஆலயம் முழுக்க எதிரொலித்தது.

விஸ்தாரமான சிரிப்பு... எக்காளச் சிரிப்பு... இடி சிரிப்பு...

"ராஜ்... ஏய் ராஜ்... என்ன ஆச்சுடா உனக்கு? எதுக்காக இப்படி சிரிக்கறே?"

-கேள்வியோடு அவன் தோளைப் பற்றினாள் மாடர்ன் ஜீவா! அவனிடமும் மெல்லச் சிரிப்பு அடங்கியது. மலங்க மலங்க ஜீவாவைப் பார்த்தான்.

"என்ன திரும்ப அந்த பழைய ஞாபகமா?"

"ஜீவா... நீ... நீயா?"

"என்ன மேன்... ஏதோ ஒரு தமிழ் சினிமாவுல கவுண்டமணி பண்ற மாதிரியே பண்றியே..."

"இல்ல ஜீவா... இது வேற... உனக்கு சொன்னா புரியாது. நான் இப்ப... நான் இப்ப..."

"இனி எனக்கு உன்னோட பேச டயமில்லை. எனக்கு என் அசைன்மென்ட்தான் குறி. எப்படா அந்த மரகத லிங்கத்தை வெளிய எடுப்போம்னு இருக்கு எனக்கு..."

பேச்சின் போக்கில் அவளையும் அறியாமல் மரகத லிங்கம் பற்றிய ரகசியம் அவளக்குள் இருந்து வந்துவிட, மெல்லிய அதிர்வுடன் அவளைப் பார்த்தான் ராஜ் நாராயண்.

"மரகதலிங்கமா?" -அவன் இதற்கிடையில் ஈனசுரத்தில் கேள்வி.

"அது... அது... மரகதலிங்கம்னா... அப்படியா நான் சொன்னேன்? பார் உன்கூட சேர்ந்து நானும் உளறுகிறேன் பார்..."

-ஜீவா சமாளிக்கப் பார்த்தாள். அப்போது இருவரையும் தன் பக்கம் இழுப்பதுபோல் 'ஓம்' என்கிற உச்சாடன சப்தம் சற்று பலமாகவே அவர்கள் காதில் வந்து மோதியது.

ராஜ்நாராயணைவிட ஜீவாவிடம் தான் அதிக கூர்மை!

45

இன்றைய மனித வாழ்வில் எவ்வளவோ இடர்பாடுகள். வாழ்க்கை என்பதே இங்கே வயிற்றுப் பாட்டிற்காக என்றாகிவிட்டது. ஏன் பிறந்தோம் என்பது தெரியாமல், எதற்காக வாழ்கிறோம் என்பதும் தெரியாமல் பசிக்கிறதே என்பதற்காக, சாப்பிட்டு தூங்கவேண்டுமே என்பதற்காக தூங்கி தேக சுகங்களில் மயங்கி அதற்காகவே வாழ்வது என்பது மனித வாழ்வாகிவிட்டது.

இதில் சிலர்தான் எதற்கு இந்த மனிதப் பிறப்பு என்கிற விசாரத்தில் விழுகின்றனர். உயிர்கள் பற்றி, உலகம் பற்றியெல்லாம் சிந்திக்கின்றனர்.

வெந்ததைத் தின்றுவிட்டு வேளை வந்தால் செத்துப்போகும் வாழ்வை ஒரு பாரமாகக் கருதி பிறப்பிற்கான மூல காரணத்தைக் கண்டறிய முயல்கின்றனர். இதைத்தான் ஆத்ம ஞானம் என்கின்றார்கள்.

இந்த ஞானத்தை ஒருவர் ஒருநாளில் அடைந்து விட முடியாது. சித்தார்த்தனாகத் திகழ்ந்த புத்தர் இந்த விசாரத்தாலதான் கவுதமர் ஆனார். பல ஆண்டுகள் காடுமேடெல்லாம் அலைந்தார். புலை

யன் முதல் தாசிவரை அனைவரிடமும் நேர்முகம் கொண்டார். பிறவிக்கான காரணம் எது என்கிற கேள்வியில் விழுந்து உழன்றார். பின் யாருடைய தயவினாலும் இன்றி சுயமாய் ஒரு போதி மரத்தடியில் அவரது தேடலுக்கான ஒரு விடையை அவர் பெற்றார் என்பார்கள்.

அப்படி அவர் பெற்ற ஞானத்திற்கான விடை மற்றவர்களுக்கு விளக்கிக் கூறமுடியாத ஒன்று. அனுபவித்து மட்டுமே அறியலாம். புத்தரைத் தழுவிய பலரும் புத்தரைப் போல ஞானம் பெற்றார்களா என்றால் இல்லை.

சைவமாகிய சிவ பராக்கிரமும் சிவம் பற்றிய சிந்தனைகளும்கூட ஆத்மவிசாரத்திற்கு விடையளிக்க கூடியவையே. ஒருகால கட்டத்தில் பவுத்தமும் சிவமும் வாதப் போர் புரிந்து கொண்டன. அப்போதெல்லாம் சிவமே கம்பீரமாய் நின்று வென்றது.

அந்த வாதப் போர்கள் மிக ஆழமானவை, நுட்பமானவை. சிதம்பரத்திலும் ஒரு வாதப் போர் நடந்தது. மாணிக்கவாசக சுவாமிகள் நிகழ்த்திய அந்த வாதப்போரில் பல நூறு பவுத்தர்கள் சைவர்களாயினர்.

அதில் பிரதானமாய் இடம்பெற்ற வினா ஒன்றுக்கு யாராலும் தெளிவாக பதில் கூற இயலவில்லை. மனித முயற்சிக்கு ஏற்ப பலன்கள் ஏன் கிடைப்பதில்லை? எந்த முயற்சியும் செய்யாமலே சிலர் சில சுகங்களை அனுபவிக்க எது காரணம்? சைவ சித்தாந்தம் இங்கே இவ்விஷயத்தில் கர்ம பலனைக் குறிக்கிறது. ஒருவர் செய்த நற்கருமம் பிறவிகள் தோறும் தொடரும் என்கிறது. அதுவே ஒரு மனிதனை இயக்கி அவனுக்கு வேண்டியதை வேண்டிய போதோ (அ) தான் விரும்பும்போதோ அளிக்கிறது. பவுத்தம் மறுபிறவி, கருமவினை போன்றவைகளில் மாறுபட்ட கருத்து கொண்டது. அத்துடன் இறைவன் என்று ஒருவன்

தனியே இல்லை. இறைவன் என்பவன் எல்லா உயிர்களுக்குள்ளும் இருப்பவன். மொத்த உயிர்களின் தொகுப்பே இறைவன் என்பதே பவுத்த கருத்துணவே, இறைவன் என்று ஒருவனோ, அவனுக்கு வடிவமோ அது அளிக்கவில்லை. இந்த கருத்தை போதித்த புத்தரே புத்த மதத்துக்கு வழிபாட்டுக் குரியவரானார்.

ஆனால், சிவகடாட்சத்தால் மாணிக்கவாசகர், இறைவன் என்று ஒருவன் இருக்கிறான். அவன் பரமன். அவன் படைத்த படைப்புதாம் நாம். அவன் கருணையால் வினைப்பயன்களை கூட்டியும் குறைத்தும் கொள்ளலாம். அதற்கு தன்னை மறந்த பக்தியே முக்கியம் என்று கூறியதோடு ஒரு ஊமை பவுத்தரைப் பேசவும் வைத்து சிவ பராக்கிரமத்தை உலகுக்கு உணர்த்தியதாக வரலாறு கூறுகிறது.

இறைவனாகிய சிவம் இல்லை என்றால் ஊமை பேசியது எப்படி?

சைவ சித்தாந்தம் இதுபோல ஆழமான கேள்விகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளது.

ராஜ்நாராயணும் ஜீவாவும் கூர்மையாகினர். ஓம் என்கிற சப்தம் எங்கிருந்து வருகிறது...? என்ற கேள்வியோடு அந்த ஆலயத்தை சுற்றி வரத் தொடங்கினர்.

சப்தம் கருவறையில் இருந்துதான் வருவது போலத் தோன்றியது. ஆனால் கருவறையில் ஒரு சிவலிங்கம் மட்டும் இருந்து ஏமாற்றமளித்தது.

ஜீவா நொடியில் அது ஏதாவது ஸ்டீரியோ ரெக்கார்ட் ப்ளேயரின் வேலையாக இருக்குமோ என்றுதான் நினைத்தாள்.

சட்டென்று அந்த சப்தம் நின்றது.

நிசப்தம்.

"ஜீவா கேட்டியா... கேட்டியா...?" -ராஜ்நாராயண் பரபரத்தான்.

"கேட்டேன் ராஜ்... இங்க எங்கையோ ஸ்டீரியோ ரெக்கார்ட் இருக்கலாம்னு நினைக்கிறேன்."

"ரெக்கார்டர் வாய்சா அது... அது எதுக்கு அப்பப்ப காதுல விழணும்?"

"இதுல ஏதோ மர்மம் இருக்கணும். இங்க யாரும் வரக்கூடாது. வந்தாலும் இந்த மாதிர வாய்சைக் கேட்டு பயந்து ஓடிப் போயிடணும்கறது நோக்கமா இருக்கலாம்..."

-உதடுகள் பதிலைச் சொன்னபோதிலும் ஜீவாவின் பார்வை சுற்றிச் சுற்றித்தான் வந்தது. சட்டென்று அவளது செல்போனில் சிணுங்கல்.

"ஒன் செகண்ட் ராஜ்..." -என்றபடியே விலகினாள். செல்போனுக்குக் கதைக் கொடுத்தாள்.

"ஜீவா..."

"யெஸ்"

"நான் ரமணி சாஸ்திரி... வாட்ஸ் த ஹெல் கோயிங் ஆன் தேர்?"

"எதுக்கு இப்படி கத்தறீங்க?"

"கத்தாம... இங்க குப்தாஜி பிரஷர்ல துடிச்சுகிட்டு இருக்காரு. என்னாச்சு அந்த மரகதலிங்கம்?"

"பத்திரமா எங்க இருக்கணுமோ, அங்க இருக்கு. இன்னிக்கு நைட் எப்படியும் எடுத்துருவேன்."

"இப்படித்தான் நேத்து சென்னே... என்ன ஆச்சு?"

"மண்ணாங்கட்டி... நானா இருக்கவும் சமாளிச்சு உயிரோட இருக்கேன். இந்த ஊர்லயும் இருக்கேன். வேற யாரா இருந்தாலும் தில்லானா ஆடியிருக்கணும்."

"ஜீவ்... உன்னை நான் அன்டர் எஸ்டிமேட் பண்றதா நினைக்காதே. இதுவரை மரகதலிங்கபுரம் விஷயம் அவ்வளவும் நமக்கு எதிராவே போய்கிட்டு இருக்கு. ஒரே ஒரு விஷயத்துல ஒரு அங்குல முன்னேற்றமில்ல... எங்களோட ஒரே ஹோப்பே இப்ப நீ மட்டும்தான்..."

"கவலைப்படாதே... இங்க அங்குலத்துக்கு அங்குலம் மர்மம்தான். இப்ப நான் தங்கியிருக்கிற இடிஞ்ச கோவில்ல மிராக்கிளா சில விஷயங்கள்."

"ஆமா எப்ப மரகதவல்லி அம்மன் சிலையை எய்ம் பண்ணப்போறீங்க?"

"முதல்ல அந்த லிங்கத்தை எடுத்துட்டு அப்புறம்தான் மறுவேலை... இன்னிக்கு நைட் அந்த வேலையை முடிச்சுடுவோம். நானும் ராஜ்நாராயணும் இதுக்காகவே கோவில்ல ஒளியப் போறோம்."

"அதுக்கு முந்தி உன்கிட்ட இருக்கிற ஏட்டைக் கொண்டு அந்த மரகதவல்லி அம்மன் சிலையும் எங்க இருக்குன்னு தேட முயற்சி செய்து பாரேன்..."

"அவசரப்படக்கூடாது ரமணி... நீ பேச்சை கட் பண்ணு... என் செல்லோட ஸ்க்ரீன்ல சிக்னல் டிஸ்டர்ப் ஆகுது. போலீஸ் ஒட்டுக் கேட்கலாம்."

"ஓ.கே. நைட் நான் போன் பண்றேன்..."

"பை..."

-பேச்சோடு திரும்பினாள். எதிரில் பாம்புப் புற்று. அவளுக்குள் அதில் பாம்பு இருக்குமா என்று ஒரு சிறிய கேள்வி. அதே சமயம் மெல்லிய செல்போன் ஒலி ஒன்று கேட்பது போலவும் தோன்றியது.

ராஜ்நாராயணும் தன் ஜிட்டுத் தலைமுடியை ரப்பர் பாண்டால் கட்டியபடியே 'எங்கயோ செல்போன் ஒண்ணு முணுமுணுக்கிற மாதிரியே இருக்குல்ல...'

"எங்கேயோ இல்ல... இங்கதான். இந்த புத்துக்குள்ள தான் இருக்கணும்..."

"ஓ... மே பீ... எங்க நகரு?" -என்றபடி அருகே சென்றவன் அப்படியே சென்ற வேகத்தில் பின் வாங்கினான்.

"என்ன?"

"இங்க... இங்கதான் அந்த 5 X குரூப்பைச் சேர்ந்த ஒரு பிச்சைக்கார வேஷம் போட்டவன் பாம்பு கடிபட்டு செத்துக் கிடந்தான். ஜாக்கிரதையா இருக்கணும்."

"ஸ்டுப்பிட் மாதிரி பேசாதே... நகரு..."

-அவள் அவனைத் தள்ளிவிட்டு தன் ஹைஹீல் செருப்புக் காலால் புற்றின் ஒரு ஓரமாய் ஒரு உதை உதைத்தாள். புற்றும் அப்படியே பொலபொலவென்று உதிர்ந்து விழுந்தது.

அப்படியே அடிமட்டம் வரை தகர்ந்து விழுந்த அதனுள்ளே செல்போன் ஒன்றைக் காட்டியது. ராஜ்நாராயண் சொன்னது போல அது அந்த உளவு பார்த்தவனின் கையில் இருந்து நழுவி உள்ளே விழுந்த செல்போன் தான்.

எப்போதோ விழுந்த அதில், அப்போதுதான் சார்ஜ் செய்தது போல் ஃபுல் பவர். திரையை ஆன் செய்து பார்த்தபோது யாரோ அந்த செல்ஃபோனுக்கு உரியவனை தொடர்பு கொள்ள முயற்சிப்பது தெரிந்தது.

"வாவ்... இது அந்த திருட்டுப் பயலோட செல்லாதான் இருக்கணும். ஜீவா இதை நாம பேசாம இன்ஸ்பெக்டர் குமாரவேல் கிட்ட ஒப்படைச்சிருவோம். என்ன?

ஜீவாவுக்கு அவன் கேள்வி அந்த நொடி சரியாகத்தான் தோன்றியது.

தன் மேல் சந்தேகப் பார்வையிலிருக்கும் குமாரவேலுக்கு இது நம்பிக்கையைத் தரும். இன்று கோவிலுக்குள் ஊடுருவுவதும் சுலபமாகிவிடும் அல்லவா?

"ரைட் ராஜ்... கமான். இப்பவே போய் இந்த செல் ஃபோனை ஹேண்ட் ஓவர் பண்ணுவோம்..." என்றபடி வேகமாக முன்னால் நடந்தாள். அதே நேரம் அவர்களுக்குப் பின்னால் உள்ள ஐந்தடி அகல பிரகாரப் பாதையில் யாரோ ஒருவர் நொடியில் கடந்து மறைந்ததுபோல இருந்தது. ஜீவாவுக்குள் அது போலீசின் கண்காணிப்பாகத் தான் இருக்கும் என்று தோன்றியது!

✠ ✠ ✠

சோகமயமாய் இருந்தாள் பாரதி. கைநிறைய மருதாணி வைத்துக் கொண்டு வந்து அவளைப் பார்த்த சந்திரிகாவுக்கு சிரிப்புதான் வந்தது.

"எதுக்குடி சிரிக்கறே?"

"சிரிக்காம... கைக்கு எட்டியும் உனக்கு வாய்க்கு எட்டல. எவளோ ஒருத்தி வந்து அம்மாஞ்சியை தள்ளிண்டுபோயிட்டா இல்ல..."

"வாயை மூடிடு... எவ வந்தா எனக்கென்ன?" -பொய்க் கோபத்தைக் காட்டினாள் பாரதி. பார்த்துக் கொண்டேயிருந்த பட்டருக்கும் ஒரு மாதிரிதான் இருந்தது.

நேராக அன்னபூரணியிடம் சென்றவர், "அவன் நம்ம மானத்தை வாங்காம இந்த ஊரைவிட்டு போகப் போறதில்லே போல இருக்கு" என்றார்.

"எதுக்கு இப்படி எல்லாம் பேசறேள்..." -என்று அவளும் அலுத்துக் கொண்டாள். அப்போது தீட்சதரும் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். அதிசயமாய் சிகப்புப் பட்டு அங்கவஸ்திரம் தரித்திருந்தார்.

"என்னண்ணா... என்ன இது அங்கவஸ்திரம்லாம் தர்பாரா..."

"காரணமாத்தான் வைத்யநாதா. ஆமா கோவிலுக்கு கிளம்பலையா?"

"இதோ..."

"வா... நானும் உன்னோட வரேன்."

"தினம்தான் வரேள். ஆனா இன்னிக்கு என்ன விஷேசம்?"

"வாயேன் சொல்றேன்..."

-தீட்சதர் அழைத்த விதத்தில் ஏதோ ஒரு ரகசியம்! அது?

46

ஒலியாலும், ஒளியாலும் ஆனதே உலகு!

ஒளியற்ற நிலையிலும் கூட உலகு இயங்கி விடும். ஆனால் ஒலியற்றுப் போனால் அவ்வளவு தான்.

பார்வையற்றவன் கூட பேச முடிந்தால் வாழ்ந்து விட முடியும்.

ஒலியாகிய சத்தம் அத்தனை முக்கியமானது.

ஒலி உணர்வுச் சாதனம் மட்டுமல்ல. தொடர்பு சாதனமும் கூட.

ஒலியே மனிதர்களிடம் மொழியாக விளங்கு கிறது. ஒலியை இருவிதமாய் சிறைப்பிடிக்கலாம்.

முதலில் எழுத்தில் அதை சிறைப்பிடிக்கலாம். அடுத்து இன்றைய நவீன விஞ்ஞானத்தில் காந்த நாடாக்களில் (Tape) அதை சிறைப் பிடிக்கலாம்.

இந்த ஒலியின் உன்னத வடிவம்தான் இசை.

ஒருவரைப் பார்க்காமல், புலன்களால் தீண்டாமல் இசையால் உருக்கிவிடலாம். அப்படியே கட்டிப் போட்டு மெய்மறக்கச் செய்யலாம்.

அதே ஒலியை நாராசமாக்கி ஒரு குண்டு வெடிப் புச் சப்தம் போலாக்கினால் காதைச் செவிடாகவும் ஆக்கிவிடலாம்.

இசைக்கேட்டு செடிகள் அமோகமாக வளர்வதை விஞ்ஞான ஆய்வுகள் நிரூபித்துள்ளன். ஆக ஒலியும், அதன் உன்னத வடிவமான இசையும்தான் உலகின் மூலம்.

இந்த மூலத்தின் தாய்தான் பிரணவம்.

'ஓம்' என்கிற பிரணவத்தில் இருந்தே எல்லாவித சப்தங்களும் பிறந்தன. பாஷை பிறந்தது! இந்த 'ஓம்' சப்தத்தை உச்சரித்துப் பார்த்தாலே புரியும். ஒரு புள்ளியில் இருந்து வெடித்துச் சிதறும் ஒன்று, மீண்டும் அந்தப் புள்ளியிலேயே அடங்கி விடுவ தைப் போன்ற உணர்வை அது தரும் (மன ஒருமையோடு உச்சரித்துப் பாருங்கள் புரியும்).

ஓமுக்குள் நுழைந்தால் எல்லாம் புரியும். அதனாலேயே பிரணவ சொரூபமாக இறைவன் இருக்கிறான் என்றனர். இதிலிருந்து இறைவன் ஒலி வடிவானவன் என்பது துல்லியமாகிறதா?

அதனாலேயே இவனை உணர ஒலியால் அமைந்த மந்திரங்கள் தொடர்புச் சாதனங்கள் ஆயின. ஒவ்வொரு மந்திரமும் ஒவ்வொரு விதமான சூட்சமத்தைத் திறக்கும். அதாவது பூட்டைத்திறக் கும் சாவியைப் போன்றவை.

சக்கரத்தை அதாவது வரிவடிவத்தை அல்லது எழுத்தைப் பார்க்கும் போது சப்தத்தால்தான் நம் மூளை அதை இனம் காண்கிறது.

கண்ணால் பார்த்த நொடி வாசிக்கப்பட்டு அந்த சப்தம் நமக்குள் முதலில் ஒலித்து அடங்கும். அவ்வாறு ஒலிக்கையில் நம் உடலுக்குள் நிறைய ரசாயன மாற்றங்கள் நிகழ்கின்றன.

இதற்கு ஆதாரம்... மனதை மயக்கும் இசையைக் கேட்கையில் நாம் மயங்கிவிடுவதுதான்.

ஒருநல்ல செய்தியைக் கேட்டால் மகிழ்கிறோம். கெட்ட செய்தியோ கண்ணீர் வரவழைக்கிறது.

இதெல்லாம் சப்த சாகசங்கள். இந்த சாகச மூலம் ஓம். இந்த ஓம் ஆகிய பிரணவத்தின் மூலமோ சிவம்.

சிவம் வீணா தட்சிணாமூர்த்தியாகத் திகழும் கோலத்தில் அது மந்திர தந்திர எந்திர சிறப்புகளை உணர்த்துவதோடு இசைச் சிறப்பையும் உணர்த்துகிறது.

நாரதர், சுகர் போன்றோர் இசையாலே இறை வனைத் தீண்டியவர்கள். இவர்களுக்கு இசை பற்றி, குறிப்பாக வீணைபற்றி, அதன் சுரம் பற்றி கூறி ஞானத்தை அருளுகிறது வீணா தட்சணாமூர்த்த கோலம்.

இசை... இறைவனை அடைய உதவும் மிக எளிய வழி. இதே இசையோடு பீஜாட்சரங்கள், பாசுரங்கள் சேரும்போது இறைவனை அடைதல் மிகச் சுலபமாகி விடுகிறது. உலகிலேயே அணு வளவு தீங்கும் தராதபடி, பாதிப்புகளை உருவாக்கா மல் பிறரை கவர இசைக் கலைஞர்களால் மட்டுமே முடியும்.

எழுத்தாளர், நடிகர், ஓவியர்களை விடவும் இசை கலைஞர்களே பேரருள் பெற்றவர்கள். மற்றவர் திறன்களைப் புரிந்தாலே ரசிக்க முடியும். இசைக் கலைஞனை ரசிக்க மட்டும் எதுவும் தேவையில்லை, காதுகேட்க வேண்டும் என்பதைத் தவிர...

இசைக் கலைஞர்களே இறைவனுக்கு மிக சமீபத்தில் இருப்பவர்கள். இறைவனும் இசைக் கலைஞர்களுக்கு மிக நெருக்கமாகவே இருக்கிறான்.

இதனாலே அசுரனாக விளங்கிய நிலையிலும் ராவணன் சிவ கடாட்சம் பெற்றான். திருவிளை யாடல் புராணத்திலும் பாணபத்திரருக்காக அந்த சிவனே நேரில் வந்து ஹேமநாத பாகவதருக்குப் பாடம் புகட்டினார்.

சிவத்தை உணரும் குறுக்கு வழிதான் இசை!

தீட்சதர் பட்டரை கோவிலுக்கு அழைக்கும் தொனியையும் விதத்தையும் பார்த்தபோது கோவிலில் ஏதோ ரசாமன ஒரு சம்பவம் நடக்கப் போகிறது என்றுதான் பாரதிக்கு தோன்றியது.

பட்டரும் மறுபேச்சு பேசாமல் தீட்சதருடன் புறப்பட்டார். இருவரும் சாலைக்கு வந்துவிட்டனர். எதிரில் இன்ஸ்பெக்டர் குமாரவேல் வந்து கொண்டிருந்தார்.

இருவரையும் பார்த்து தேங்கி நின்றார்.

"என்ன சார்... எங்க இந்த பக்கம்?"

"உங்களைப் பார்க்கத்தான்... ஆமா என்ன இது ராஜகோலம்?"

"எப்பவும் பட்டு உடுத்திண்ட நிலைல ஸ்வாமியை வழிபட்டா அது ரொம்ப விசேஷம் சார்..."

"அப்படி ஒண்ணு இருக்கா?"

"ஆமாம், இன்னிக்கு ஜென்ம நட்சத்திரம். அதனாலதான் இந்த சிகப்பு பட்டை உடுத்திண்டு இருக்கேன். அதுமட்டுமல்ல... ஜாதக ரீதியாக இன்னிக்கு எனக்கு உடம்பு சிகப்பாகணும்... புரியலையா?"

"புரியலை... உங்க விஷயம் எது புரிஞ்சிருக்கு... இது புரிய...?"

"அதுவும் வாஸ்தவம்தான்... இது ஒரு எச்சரிக்கை. கிரகங்களால காயப்பட்டு சிகப்பாறதை விட முந்திண்டு நாமளே சிகப்பாயிட்டா, அதோட தாக்குதல்ல இருந்து தப்பிச்சுக்கலாம் பாருங்கோ..."

"ஓ... ஜாதகப்படி உங்களுக்கு இன்னிக்கு ஒரு ஆக்ஸிடெண்ட் இருக்காக்கும்?"

"கரெக்ட்... அதேதான்!"

"இப்படி சிகப்புபட்டு உடுத்திகிட்டா அது எப்படி நடக்காம போகும்?"

"அங்கதான் சூட்சமம் இருக்கு... உங்ககிட்ட பத்து ரூவா கடன் வாங்கிண்ட நான், அந்த பணத்தை திருப்பிக் கொடுக்க முடியாத நிலைல என்கிட்ட இருக்கிற ஒரு பேனாவை கொடுத்து நேர் பண்ணிக்கறா மாதிரின்னு வெச்சுக்குங்களேன்..."

"குழப்பறீங்களே..."

"சரி விடுங்க, நீங்க வந்த விஷயத்தைச் சொல்லுங்க..."

"ரொம்ப முக்கியமான விஷயம்தான். அந்த 5 எக்ஸ் குரூப் ரொம்ப ஸ்ட்ராங்கா இந்த ஊர்ல டேரா போட்ருக்காங்களாம். தகவல் வந்திருக்கு... வடக்கு வாரணசியில இருந்து நிறைய டெலிபோன்கால்ஸ் இங்க பாஸ் ஆகியிருக்கு. இன்ஃபாக்ட் யாரோட யார் பேசிக்கிறாங்கறது கூட கூடிய சீக்கிரம் தெரிஞ்சுடும்.

"சரி... இதையெல்லாம் எங்கிட்ட ஏன் சொல்றேள்!"

"எச்சரிக்கையா இருக்கதான்..."

"இப்ப என்னமோ இல்லாத மாதிரின்னா பேசறேள், அதான் இருபத்திநாலு மணிநேரத்துக்கும் போலீசாரோடையேன்னா ஸ்வாமி இருக்கார்?"

"இந்த காவல்லாம் அவங்களுக்கு சுண்டைக்காய் சாமி. எனக்கு தெரியாம எங்கையும் போயிடாதீங்கன்னு சொல்லத்தான் முக்கியமா வந்தேன்."

"நாங்க எங்க போகப்போறோம்?"

"அப்படித்தான் சொல்வீங்க. கடைசியில வயக்காட்டுல ஒரு வேலை இருந்தது. அந்தப் பக்கம் போனேன். அப்ப அவன் கடத்திகிட்டு போய்ட்டான்னு எங்களுக்கு தகவல் வரும்..."

"ஓ... எங்களை கடத்தக்கூட செய்வாளா?"

"உங்கள கடத்தினா தானே அவங்க காரியம் சுலபமா முடியும்."

"அடக் கொடுமையே...."

"கொடுமைதான்... ஆமாம் உங்க உடம்பு இன்னிக்கு சிகப்பாகும்னு உங்களால கண்டுபிடிக்க முடியும்- கோவிலுக்கு என்ன ஆகும்னு கண்டுபிடிக்க முடியாதா?"

"ஏன் முடியாது... ஆனா எதுவும் ஆகாதுங்கறது என் நம்பிக்கை..."

"நமபிக்கை எல்லாருக்கும் இருக்கு... ஆனா உங்களை மாதிரி நபர்கள் துல்லியமா அது எப்படின்னு சொல்லணும்."

"நீங்க இப்படி வளைச்சு வளைச்சு பேசறத பார்த்தா ஏதோ பெரிசா நடக்கப் போற மாதிரி நீங்க நினைக்கறேள்னு எனக்குத் தெரியறது."

குமாரவேல் பதிலுக்கு ஒரு சிரிப்பு மட்டும் சிரித்தார்.

பேசிக்கொண்டே வந்ததில் கோவில் வாசலும் வந்து விட்டது. அங்கே காவலுக்கு நின்றபடி இருந்த ஒரு போலீஸ்காரர் விரைப்பாக ஒரு சல்யூட் அடித்தார்.

பட்டருக்கும் தீட்சதருக்கும் அது பெருமையாக இருந்தது.

"அப்ப நாங்க உள்ள போறோம்..." தீட்சதர் குமாரவேலிடம் உத்தரவு கேட்டார்.

"நல்லது சாமி..."- குமாரவேலும் அவர்களை அனுப்பி விட்டு கை கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஐந்தைக் கடந்திருந்தது.

அவருக்குள் ஒரு அரிப்பு.

அந்த இடிந்த கோவிலுக்குள் ராஜ்நாராயணும், ஜீவாவும் எப்படித் தங்கியிருக்கிறார்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் போல் தோண்றியது.

அதற்குள் அவர்களைத் கண்காணிக்க நியமிக்கப்பட்ட அந்த உளவு போலீஸ்காரர் மாணிக்கம் என்பவரே அவரை நோக்கி வந்தபடி இருந்தார்.

நெருங்கியவர் ஒரு சல்யூட்டை பலமாக வைத்தார்.

"என்ன' மாணிக்கம்... எப்படி போய்கிட்டு இருக்கு?"

குமாரவேலின் கேள்விக்கு காதோரமாக பதிலுக்கு பிசுபிசுத்தார் மாணிக்கம். குமாரவேலின் முகத்தில் பலத்த அதிர்வலைகள்!

சன்னதியில் தீட்சதர் பெயரில் அர்ச்சனை ஆரம்பமாகியிருந்தது. நல்ல வாசனைக் குங்குமத்தை சிட்டிகை சிட்டிகையாய் எடுத்து மரகதவல்லியம்மாள் திருவடிகளில் சிந்திக் கொண்டிருந்தார் பட்டர். தீட்சதர் கைகூப்பியபடி நின்றிருந்தார். நெக்குருகிப் போயிருந்தது கண்கள். சன்னதியில் பெரிதாக கூட்டமில்லை. பக்கவாட்டில் அபிஷேக தண்ணீர் ஓடும் சிறிய கால்வாய், அதனில் எலி ஒன்று அவ்வப்பொழுது ஓடியபடி இருந்தது. தீட்சதர் கவனம் அதனால் அவ்வப்போது சிதறினாலும் அம்மாளின் திருவடியில் மனதை பதித்துக்கொணடு மனசுக்குள் பிரார்த்தனையிலேயே இருந்தார்.

எப்பொழுதும் இல்லாத கூர்ந்த கவனம்.

அமைதியான சூழலில் பட்டரின் அர்ச்சனைக்குரல் எதிரொலித்தபடி இருந்தது.

கூர்ந்து பார்த்தபடியே இருந்தார்.

குறிப்பாக அம்பிகையின் திருவடிமேல் பிரதான கவனம் இருந்தது.

அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அர்ச்சனை குங்குமத்தை வழித்து அதை ஒரு கிண்ணத்தில் போட்டு தீட்சதருக்கு வழங்குவதற்காக வெளியில் வந்தார் பட்டர்.

தீட்சதரும் பயபக்தியோடு இட்டுக்கொண்டு பின்பு அவர் கொடுத்த பிரசாத மாலையை வாங்கும் போதும் அந்த எலி திரும்பி ஓடியது.

"எலித்தொல்லை அதிகமாக இருக்கே?"

"என்ன பண்றது... பொறிவெச்சுதான் பிடிக்கணும். தர்மகர்த்தா இருந்தவரை விஷம் வைக்கலாம்னார். ஆனா, கோவில்ல விஷம் கூடாதுன்னுட்டேன்... பொறி வெச்சு பிடிக்சு வெளியே கொண்டுபோய் விட்டுட்றது தானேண்ணா நல்லது?"

"ஆமாம்..." தீட்சதர் ஆமோதிக்கும்போது காலில் ஏதோ கொழ கொழவென்று வழுக்கியது. குனிந்து பார்ப்பதற்குள் சறுக்கி விட்டதில் தட்டுத்தடுமாறி கீழே விழப் போனவர் டம்மென்று ஒரு கல்தூண்மேல் மோதிக்கொள்ள அதுதான் சாக்கு என்று ரத்தம் பீறிடத் தொடங்கியது.

சிகப்பு வஸ்த்ரம் கொட்டும் ரத்தத்தை அப்படியே நனைய நனைய வாங்கிக் கொண்டது.

அவரது ஜாதகக் கணிப்பு பலித்துவிட்டது.

பட்டர் பதறிப் போய் கட்டுப்போட முயலும்போது திறந்து கிடந்த அம்பாள் சன்னதிக்குள் சரேலென்று ஒரு உருவம் நுழைந்தது. அம்பாளுக்கு பின்னால் போய் மறைந்து நின்றுகொண்டது!

47

இந்த உலகில் உயிர்கள் எப்போதும் இன்பத்தையே பெரிதும் எதிர்பார்க்கின்றன. அது மனிதப் பிறப்பாக இருந்தாலும் சரி, விலங்குகள், பறவைகள் என்று மற்ற ஜீவராசிகளாக இருந்தாலும் சரி, பிறவியின் நோக்கம் எப்போதும் சுகமாக இருக்க வேண்டும்

என்றே கருதுகின்றன. அதற்காகவே முயற்சிக்கின்றன.

இன்பம் என்கிற ஒன்று உயிர்களை அந்தளவு வசீகரித்து வைத்திருக்கிறது.

எல்லாம் சரி... எது இன்பம்? இந்த இன்பம் எப்படிப்பட்டது? இந்தக் கேள்விக்குள் புகுந்தால் பல ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

சுவையான திண்பண்டம் ஒன்றை விரும்பி விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறோம். சாப்பிடும்போது மிக இன்பமாக இருக்கிறது. சாப்பிடும் வரைதான் அது நீடிக்கிறது.

சாப்பிட்டு முடித்தவுடன் அது மறைந்து விடுகிறது.

எதற்கு இந்த இன்பமும் துன்பமும் என்று ஒருநாள் நாம் சிந்திக்கும் போதுதான் அரிதான ஞானம் தோன்றுகிறது.

அது இன்பமும் துன்பமும் வேறுவேறில்லை என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. இந்த உண்மையை உணரும் போது இன்பம், துன்பம் இரண்டையும் ஓரளவு சமமாகக் கருதும் ஒரு பரிபக்குவ நிலையும் நமக்கு வந்து விடுகிறது.

இந்தப் பரிபக்குவ நிலையோடு மற்ற உயிரினங்களைப் பார்க்கும்போது மேலும் ஆச்சரியங்கள் காத்திருப்பது தெரிகிறது.

விலங்குகளும் உயிரினம்தான்.

ஒரு மான் இருந்தால் அது புலிக்கு உணவு- அது படைக்கப்பட்ட நோக்கமே அதற்காகத்தான் என்று தோன்றுகிறது. புலியின் வாயில் அகப்படுவதற்கு முன்வரை அதற்கு துன்பம் என்றால் என்ன எனறே தெரியாது.

விஞ்ஞானக் கண் கொண்டு பார்த்தால் ஒவ்வொரு உயிரும் இன்னொன்றில் அடங்கி, அந்த இன்னொன்று வேறொன்றில் அடங்விடும்

நிலையில் உயிர்களின் வட்டச் சுழற்சியை நாம் அனுமானிக்கலாம். இதை இன்பம் துன்பமாகவும், துன்பம் இன்பமாகவும், ஒரு விஷயமாகவும் நாம் காணலாம். ஒரு ஆச்சரியம்போல இதனால் எதுவும் எப்போதும் அதிகரித்துவிடாத ஒரு சிறப்பும் தொடர்கிறது. பத்து புலிகள் ஒரு காட்டில் இருந்தால் நூறு மான்கள் அதே காட்டில் இருப்பது உறுதி. மான் குறைந்தால் புலிகளும் குறையும். இந்த உயிர்களின் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிடும் இயல்புக்கும் சிவத்துக்கும் ஒரு பெரிய தொடர்பு இருப்பதுதான் ஆச்சரியம்.

மாறி மாறி வரும் இன்ப துன்பங்களுக்கு இடைப்பட்ட உயிரினமாக நாம் இருப்பது நல்லதா அல்லது எப்போதும் இன்பமாக (அ) இன்பம் துன்பம் இரண்டும் இல்லாத ஒரு நிலைப்பாட்டுக்குச் செல்வது சிறந்ததா என்ற ஒரு கேள்வி எழுந்த போது அதற்கு விடையாக கிடைத்த விஷயம்தான் அமிர்தம்.

இதை உண்டுவிட்டால் இன்ப துன்ப சுழற்சி இல்லை. எந்தப் பசியும் இல்லை. எந்த வலியும் இல்லை.

அந்த அமிர்தத்தை பாற்கடலைக்கடைந்து உருவாக்கியபோது அது முதலில் விஷத்தைத்தான் கக்கியது. அதாவது,இங்கேயும் துன்பம் என்கிற ஒன்றில் இருந்தே இன்பம் தோன்றுகிறது. அதாவது, துன்பமாகிய ஆலகாலமே கடையப்பட்டதால் இன்பமாகிய அமிர்தமானது. அந்த ஆலகாலம் மொத்த உயிர்களையும் அழித்துவிடும் சக்தி கொண்டதாக இருக்கிறது. இவ்வேளையில்தான் சிவம் அதை அப்படியே தான் உண்டு உலகை ரட்சித்து நித்ய இன்பமாகிய அமிர்தம் வெளிப்பட உதவியது.

அதனால், சிவம் நித்ய துன்பமாகிய ஆலகாலத்தால் சூழப்பட்டது. அன்னை உமை சாதுர்யமாக சிவத்தின் கண்டத்தோடு அது நிற்கும் படி செய்தாள்.

சிவமும் இதனால் நீலகண்டமாகியது. இது நடந்த வேளை பிரதோஷகாலமான த்ரயோதசி திதி.

சிவத்தின் கண்டம்தான் நீலமாகியது.

சிவமோ அந்த நீலத்தைத் தாங்கியபடி மொத்த உயிர்களும் ரட்சனை கொள்ள அமிர்தம் தந்து உதவியது.

ஒரு கதையாக இதைப் பார்த்தால் ஏதோ ஒரு சாகஸ நிகழ்வு போலவே நம் மனம் இதை உணரும். உண்மையில் நாம் நித்திய இன்பத்தைப் பெற, அதாவது,அமிர்தம் (அ) மோட்சம் பெற நம் வசம் உள்ள கர்ம துன்பங்களை இந்த வேளையில் சிவத்தின் கண்டத்தில் சேர்த்து விடத்தான் பிரதோஷ காலமே வருகிறது. சிவத்தால் மட்டுமே நம் துன்பங்களை வாங்கிக்கொள்ள இயலும். அதன் அருளால் நாமும் நித்ய இன்பம் பெறுவோம். அதாவது, முக்தி பெறுவோம்.

சிவம் ஒன்றே இன்ப துன்ப உயிர் வட்டச் சுழற்சியை அதன் விதியை மாற்றவல்லது. இல்லாவிட்டால் மார்க்கண்டேயன் பிழைப்பானா? அரிவாளால் அறுத்துச் சமைக்கப்பட்ட பிள்ளைக் கனியமுதான குழந்தைதான் திரும்ப உயிருடன் வந்திடுமா?

மாற்ற முடியாத விதியை மாற்ற, நித்ய இன்பத்தைப் பற்றிக்கொள்ள, நாம் முதலில் நீலகண்டத்திடம்தான் செல்ல வேண்டும்.

மரகதவல்லியம்மன் சன்னதிக்குள் சென்ற அந்த உருவம் பற்றி பட்டரோ, தீட்சதரோ உணர்ந்த மாதிரியே தெரியவில்லை. அந்தப் பெண் உருவம் அவ்வளவு சாமர்த்தியமாக உள்ளே நுழைந்து கொண்டது. பட்டரோ அடிபட்டு ரத்தச்சகதியில் குளிக்க ஆரம்பித்திருந்த தீட்சதருக்கு உதவ வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார்.

"என்னண்ணா இது... சிவப்ப பட்டு உடுத்திண்டா ஆபத்து இல்லைன்னேளே. அப்படியும் இப்படி அடிபட்டு டுத்தே" என்று வருத்தப்பட்ட பட்டர், கைத்தாங்கலாய் தீட்சதரை அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப் பட்டார்.

பட்டருடன் தீட்சதர் சேர்ந்து நடக்கும் போது திரும்பி ஒரு பார்வை அம்பாளைப் பார்த்தார். "அங்க என்ன பார்வை... வேகமா நடங்கோ..." என்றார் பட்டர். அடி பட்ட இடத்தில் இருந்து கொட்டிய ரத்தம் சொட்டுச் சொட்டாய் பிரகார வெளியில் சிந்த ஆரம்பித்தது.

"ஐயோ... ரத்தம் இப்படி கோவில்லபட்றதே, இது நல்லதில்லையே..." என்று பட்டர் திரும்ப அதற்காக ஒருமுறை புலம்பினார்.

"நல்லது கெட்டதும் நம்ம கையிலயா இருக்கு வைத்தி, பதற்றப்படாம வா. எது நடக்கணுமோ அது நடக்க ஆரம்பிச்சுடுத்து. இனி எல்லாம் ஒரு முடிவுக்கு வந்திடும்" என்றார் தீட்சதரும்.

"என்னண்ணா சொல்றேள். இன்னிக்கு உங்க பேச்சே இரண்டு அர்த்தமான்னா இருக்கு?"

"ஒண்ணுமில்லை, நீ நட. ஆமாம், சன்னதியில யாரையும் நிறுத்தலையா?"

"ஸ்வாமி சன்னதியில் சுந்தரேசன் இருக்கான். அவனைத்தான் பார்த்துக்கச் சொல்லணும்."

இருவரும் வெளிப் பிரகாரத்துக்கு வந்தனர். தரிசிக்க வந்திருந்த சில பக்தர்கள் தீட்சதரை ரத்த வெள்ளத்தில் பார்த்து விட்டு பதைத்தனர்.

"ஐயோ சாமி, என்ன இது?"

"ஒண்ணுமில்லை.. வழுக்கி விழுந்ததுல தலைல அடி பட்டுடுத்து. அவ்வளவுதான்."

"நல்லவேளை. நாங்க என்னவோ ஏதோன்னு பயந்துட் டோம்."

தீட்சதர் அந்த நிலையிலும் சிரித்தார்.

இதற்குள் யார் சொன்னார்களோ, இன்ஸ்பெக்டர் குமாரவேல் வேகமாக எதிரில் வந்தார்.

"என்ன சாமி, என்ன ஆச்சு?"

"வழுக்கி விட்டு தலைல அடிபட்டுடுத்து."

"பொய் சொல்லாதீங்க, யாராவது உங்ககிட்ட தப்பா நடந்துக்கப் பாத்தாங்களா?"

"அடக்கடவுளே... இங்க யார் வந்து என்னைக் கஷ்டப் படுத்தப் போறா?"

"அப்ப உங்க ஜோசியப்படி ஆயிடிச்சுன்னு சொல் லுங்க."

"அதான்... அதான் உண்மை. செவ்வா சனி உக்ரமா பார்த்துக்கக்கூடாது, பாத்துண்டா இப்படித்தான்"

"விளக்கம் அப்புறம். முதல்ல வாங்க டாக்டர்கிட்ட போகலாம்."

"நான் பாத்துக்கறேன், நீங்க கஷ்டப்பட வேண்டாம்."

"இதுல என்ன கஷ்டம் சாமி? வாங்கன்னா..."

தீட்சதரை குமாரவேல் தன் பொறுப்பில் அழைத்துக் கொள்ள, பட்டர் கோவில் கடமை இருப்பதால் வேறுவழி யின்றி அனுப்பி வைத்தார்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி ஏழாகத் தொடங்கியிருந்தது.

ஒன்பது மணிக்குள் நடையைச் சாத்த வேண்டும். அதற்கு முன் பள்ளியறை பூஜை இருக்கிறது. அதற்கான முஸ்தீபுகளில் இறங்க ஆரம்பித்தார்.

✠ ✠ ✠

டிவியில் ஒரு மெகா சீரியல் ஓடிக்கொண்டிருந்தது. கதாநாயகன் கிட்டத்தட்ட ராஜ்நாராயண் சாயலில் இருந்தான். கதாநாயகியும் பாரதி போலவே இருந்தாள். "நீ இல்லேன்னா நான் செத்துட மாட்டேன். உன் எதிர்க்கவே வாழ்ந்து காட்றேன் பாரு" -என்று அவன் சவால் விட்டு விட்டு எங்கோ புறப்பட்டான். கதாநாயகி கண்களில் ஜலம்.

"நீயெல்லாம் பெண்ணே இல்லை. ஒரு பொண்ணுங் கறவ கல்லோ மண்ணோ ஒருத்தனை நினைச்சுட்டா மாத்திக்கமாட்டா. ஆனா, நீ பிசாசு"- அவன் போகும் போது பேசிய டயலாக் பாரதிவரை சுருக்கென்று ஏறியது.

சந்திரிகாவும் பார்த்துக் கொண்டிருந்தாள். "அக்கா... உன்னைப் பாத்து ராஜா அம்மாஞ்சி பேசற மாதிரியே இருக்கு" என்று ஊசி ஏற்றினாள் அவள். இடையில் அன்னபூரணி சூடாக, அப்பம் பொரித்து ஒரு கிண்ணத்தில் போட்டு இருவருக்கும் தந்தாள்.

"ராஜா இருந்தா நன்னா ரசிச்சு சாப்பிடுவான். அவன் தலையெழுத்து அந்தக் குட்டியோட சேர்ந்துண்டு அல்லாடணும்னு இருக்கு" என்றும் முணுமுணுத்தாள். பாரதிக்குள் எல்லாம் சேர்ந்து அவனைச் சந்திக்கும் ஆவலை மூட்டிவிட்டன. ஓசையின்றி சூடான அப்பத் துடன் அவனைச் சந்திக்கக் கிளம்பினாள்.

✠ ✠ ✠

இடிந்த கோவில் முன்னால் ஆளரவமே இல்லை. வானத்தில் தெரிந்த அரைச் சந்திரன் மட்டும் ஏதோ பெட் லாம்ப் போல வெளிச்சம் கொட்டிக் கொண்டிருந் தான்.

இடிந்த கோபுரமும், சுவர்களும், திரைச்சீலை ஓவியங் கள் போல கருமையாகத் தெரிந்தன. 'இந்த இருட்டுக்குள் இருவரும் எப்படி இருக்கிறார்கள் என்பது தெரிய வில்லை?'

-கேள்வியோடு மெல்ல உள்ளே கால் வைத்தாள். அப்போது சரசர வென்று ஏதோ ஒரு ஜந்து ஊர்ந்து செல்கிற மாதிரி இருந்தது. பயத்தில் கண்களை மூடிக் கொண்டு காதுகளையும் பொத்திக் கொண்டாள். மாராப்புக் தாவணியில் அந்த எண்ணை அப்பம் சூடாக மார்பைச் சுட்டுக் கொண்டிருந்தது.

சில நொடிகள் அசையாமல் கண்களையும் திறக்காமல் நின்றாள். மெல்லத்திறந்த போது அவள் எதிரில் மண்ட பத்துக்குள் ஒரு தீப்பந்தம் திகுதிகுவென்று எரிந்து கொண்டிருந்தது.

அதற்குள் அது எப்படி வந்தது என்று ஆச்சரியமாகவும் இருந்தது. தயங்கித்தயங்கி உள்ளே சென்றாள். கல் தூண் ஒன்றின் அருகில் யாரோ ஒருவர் அமர்ந்திருக்கிற மாதிரி இருந்தது.

"அம்மாஞ்சி" -அவனோ என்று நினைத்துக் குரல் கொடுத்தாள்.

"வா பாரதி..." -அந்தக் குரலும் அவளை அழைத்தது. ஆனால், அது ராஜ்நாராயண் குரல் இல்லை.

"நீங்கோ... நீங்கோ..."

"பதற்றப்படாதே... நான்தான்!" -பதிலோடு அந்த உருவம் தீப்பந்த வெளிச்சம் முன்னால் வந்தது. தாடியும் மீசையும் புதர்போல இருக்க, கழுத்தில் உத்திராட்சம் தெரிய, இடுப்பில் ஒரு துண்டுக் கோமணத்துடன் தெரிந்த அவரைப் பார்த்து பாரதி வியக்க,

"என்னாம்மா பாக்கறே... நீ வருவேன்னுதான் காத்திருக் கேன்" என்றார் அவர்.

"நீங்கோ யார்னு தெரியலையே..."

"என்னை நீ பாத்திருக்கமாட்டே. ஆனா, கேள்விப் பட்டிருப்பே."

"என்ன சொல்றேள்? இங்க ராஜா அம்மாஞ்சி, அப்புறம் ஜீவா ரிப்போர்ட்டர் எங்கே?"

"அவங்க அவங்க கடமையைச் செய்ய போயிருக் காங்க. நான் என் கடமையைச் செய்ய இங்க வந்துருக் கேன்..."

"என்னென்னமோ சொல்றேளே... நீங்க யாருன்னு சொல்லவேயில்லையே..."

"ரொம்ப காலமா இந்தக் கோவில்லயே இருக்கற சித்தன்மா நான்."

"சித்தரா... நீங்கோ... நீங்கோ..."

"என்ன சொல்லு?"

"சமாதியாயிட்டதான்னா சொன்னா?"

"சமாதியாகறது, சூட்சும உருவத்தோட சுத்தி வர்றது, கூடு விட்டு கூடு பாய்றது இதெல்லாம்தான் சித்தர் களோட பழக்கங்களாச்சே..."

"எனக்கு நீங்க பேசறது புரியல..."

"அப்படியா... எங்க என்னை உத்துப்பாரு... உனக்குப் புரியும்."

"இல்லே... எனக்குப் பயமா இருக்கு..."

"பயப்படாதே. நான் ஒண்ணும் பேய் பிசாசு இல்லை."

"இல்ல... இல்ல..."

"உம் என்னைப் பார்... புரியும் பார்... நல்லாப் பார்" -அவர் தன் கண்களை அகலத் திறந்து கொண்டு ஒரு மெஸ்மரிச டாக்டர்போல கைகளை ஆட்டியபடி சொன்ன விதம் அவளை என்னவோ செய்தது. அப்படியே அவளை யும் அறியாமல் கண்கள் செருக கீழே விழுந்தாள். அவரோ ஒரு சிரிப்பு சிரித்தார்.

✠ ✠ ✠

தலையில் கட்டுடன் வீட்டுக்குள் நுழைந்த தீட்சதர், கொண்டு வந்து விட்ட குமாரவேலுக்கு ஒரு கும்பிடு போட்டு நன்றியைச் சொன்னார்.

"பாத்து சாமி... நல்லா ரெஸ்ட் எடுத்துக்குங்க. நான் காலைல பார்க்கறேன்."

"என்னை வந்து பாக்கறது இருக்கட்டும். உங்களுக்கு வீடு வாசலே கிடையாதா?"

"அது சரி, போலீஸ்காரனுக்கு ஏது சாமி வீடும் வாசலும். இன்னிக்கு கோவில் வாசப்படிதான் எங்க வீடு. வரட்டுமா?"

"போய்ட்டு வாங்கோ" -அவருக்கு விடை கொடுத்து விட்டு உள்ளே நுழைந்தவர் நேராகச் சென்று ஒரு பழைய மரப்பெட்டி ஒன்றைத்தான் முதலில் திறந்தார்.

உள்ளே ஒரு நோட்டு.

எடுத்தவர் அதன் பக்கங்களைத் திறந்தார்.

'மரகதலிங்கபுர விலாசம்' என்கிற தலைப்பு முதலில் தெரிய, மளமளவென்று பக்கங்களைப் புரட்டியவர் குறிப் பிட்ட ஒரு பக்கத்தில் போய் நின்றார்.

'சித்ரபானுவதில் உத்ர நாளதனில்
மந்த்ர மாளிகையில் சுந்தர தேகமதில்
கத்தரித்தாற்போல அந்தணன் குருதி மாளிகை பட
எத்தர்கள் அன்றே சித்தனாலே
பக்தராய் மாறிடும் உத்தமம் நிகழ்ந்திடும்
உதயத்தில் புரிந்திடும், உள்ளிருந்த வையும்
வெள்ளி காணவே துள்ளி வந்திடும்!'

பாடலைப் படித்தவர் ஒருமுறை நெற்றியைத் தொட்டுக் கொண்டார்.

'என் யூகப்படியே எல்லாம் நடக்கிறது. இது சித்ரபானு வருஷம். இன்னிக்கோ உத்ர நட்சத்திரம். மந்த்ர மாளி கைன்னா கோவில். கோவில்ல சுந்தர தேகமான என்

உடம்பு கத்தரிச்ச மாதிரி அடிபட்டு ரத்தமும் தரையில பட்டாச்சு.

இந்தச் சுவடிக் குறிப்புப்படி கோவிலை கொள்ளை யடிக்க நினைக்கிற அத்தனை பேரும் இன்னிக்கு ராத்திரி நடக்கப் போற அதிசயம் ஒண்ணால நல்லபடி மாறப் போறா.

அது விடிஞ்சா தெரிஞ்சிடும்.

உள்ளிருந்தவையும் வெள்ளி காணவே துள்ளி வந்திடும்னா அன்னிக்கு மறைக்கப்பட்டதெல்லாம் நாளைக்கு வெள்ளிக்கிழமை இந்த உலகம் தெரிஞ்சுக்கற மாதிரி வெளிப்படப் போறதுங்கறதுதான் பொருள்.

எனக்கு அடிபட்டு ரத்தம் கொட்றது வரை உண்மை யாயிட்ட பிறகு, இனி நடக்கப் போறதுதானா உண் மையா இருக்காது?'

'ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய...'

கோவிலில் காணாமல் போன சுவடிக் குறிப்புகளை வாசித்து அதை அப்படியே கிரகித்துக் கொண்டு தன்வசம் உள்ள ஒரு நோட்டிலும் பாதுகாப்பாக எழுதி வைத்திருக்க் அந்த நோட்டின் பக்கங்களும் ஒரு உன்னத மர்மத்தின் சாட்சி ஏடுகளாய் வீசும் காற்றில் படபடத்தன.அவரிடமோ 'ஓம் நமச்சிவாய...' என்கிற ஜெபநாமக்குரல்!

✠ ✠ ✠

அதே குரல்தான் அந்தச் சித்த சன்யாசியிடமும் 'ஓம் நமச்சிவாய... ஓம் நமச்சிவாய...'

'வேண்டாம்... இந்த கோவில் நகைகளை எல்லாம் எடுத்துண்டு போகாதே ஜீவா. சிவன் சொத்தைப் பாது காக்கறோம்னு சொல்லி எடுத்துண்டு போறதுகூட தப்பு. அதை இங்கேயே எங்கையானா புதைக்சுவைப்போம். சொன்னா கேளு...'

மயங்கிய நிலையிலும் அவளிடம் உளறல் போல, ஆனால், சீரான ஒரு கருத்து. அதுவே அவள் ஏதோ ஒரு கனவில்தான இருக்க வேண்டும். அதில் தோன்றும் காட்சிக்கேற்ப அவள் இப்படிப் பேச வேண்டும் என்பதை உணர்த்தியது.

அந்த சித்த புருஷரோ அதையெல்லாம் காதில் வாங்காதவராட்டம் நாம ஜெபத்திலேயே இருந்தார்.

✠ ✠ ✠

நடையைச் சாத்திவிட்டு பட்டரும் மற்றவர்களும் புறப்பட, சாத்தப்பட்ட கதவுக்கு முன்னால் நின்று ஒரு பார்வை பார்த்து விட்டு தன் மோட்டார் பைக் நோக்கி நடந்தார் குமாரவேல். அதே நேரம் உள்ளே அம்பாள் சன்னதிக் கதவையும் திறந்து கொண்டு ஒரு பெண் உருவம் வெளியில் வந்தது. வெளிச்சத்துக்கு வரவும் பளிச்சென்று தெரிந்தது அது ஜீவாவென்று.

'ஹோ'வென்று நீண்டு கிடந்த பிரகார வெளியில் நடந்தவள், 'நான் அந்த சப்தகன்னியர் சன்னதியில் இருக்கேன்' என்று சொல்லியிருந்த ராஜ்நாராயணைத் தேடிச் செல்ல ஆரம்பித்தாள்.

கோவிலுக்கு வெளியே புறத்தில் பிரகார வீதியில் ஒரு மரத்தடியில் இருந்த சன்னதிக்குச் செல்வதற்காக உள் பிரகாரத்தை மூடியிருந்த கதவருகே வந்தவள்,அது சாத்தியிருப்பதைப் பார்த்து திறக்க முயன்றாள்.

ஆனால் மறுபக்கத்தில் அது பூட்டப்பட்டிருப்பது அவ ளுக்குத் தெரியவில்லை. அசைத்துப் பார்த்து, இழுத்துப் பார்த்து களைத்துப் போனவள் மாட்டிக் கொண்டது போல ஒரு பயத்துக்கு உள்ளாகி என்ன செய்யலாம் என்று யோசித்துபடி அப்படியே அமர்ந்தாள். அப்போது ஒரு தீபச் சுடர் போல ஒன்று சற்றுத் தள்ளி வேகமாக ஓடியபடி இருந்தது. என்ன அது?

48

மனிதப் பிறப்பைப் பற்றி சிந்திக்கையில் பல வியப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

குறிப்பாக நமக்கு வாய்த்த சரீரம் பற்றிச் சிந்திக்கும்போது வியப்பாக இருக்கும். இன்று உலகில் மேஜை, நாற்காலி, கட்டில் என்று எவ்வளவோ... இவைகள் முதன்முதலாக கண்டறிப்பட்டபோது இப்போதைய வடிவத்தில் இல்லை. முதலில் தேவைக்காக உருவாக்கப்பட்ட பொருள்கள், பின்பு காலத்தால் மெல்ல நமது சவுகரியத்துக்கும் வசதி வாய்ப்புக்கும் ஏற்ப வடிவம் மாறிப் போயின.

இன்று நம் உள்ளங்கையில் அடங்கும் செல்ஃபோனின் துவக்கம் வேறு விதமானது. கேட்க ஒரு கருவி... பேச ஒரு கருவி என்று இரண்டு கைகளைப் பயன்படுத்தி பேசும் விதத்தில்தான் அது இருந்தது. எடுத்த எடுப்பிலேயே இன்றுள்ளது போன்ற செல்ஃபோன் வடிவில் அதைக் கண்டு பிடிக்கவில்லை. அனுபவங்களால்... அறிவாற்றலால் தான் மனிதக் கண்டுபிடிப்புகள் மெருகேறி நல்ல வடிவம் கண்டன. இப்போதுள்ள வடிவம் கூட நிலையானதல்ல.

மாறிக்கொண்டிருப்பதுதான் இங்கே மாறாத விஷயம். எல்லாமே மாறுகிறது.கட்டடங்கள் மாறுகின்றன. ஊரே மாறுகிறது. இதை வளர்ச்சி என்கிறோம். ஆனால், பல்லாயிரம் ஆண்டுகளாக மாறாத ஒரே வடிவமாய் இருப்பது உயிரினங்களின் உருவ அமைப்புதான்.

கை எங்கு இருக்க வேண்டுமோ அங்குதான் இருக்கிறது. விரல்கள்... மிகப்பெரிய ஆச்சரிமாய், சமநிலையாய் இல்லாமல் ஒவ்வொரு விரலுக்கும் குறிப்பிட்ட நீளம். ஒரே நீளமாய் இருந்தால் எதை

யும் பொறுக்கி எடுக்கவோ கைகளை விரும்பியவாறு குவிக்கவோ இயலாதே?

கால்களிலும் இதே கதைதான். மென்மையான தோலால் ஆன பாதம் எவ்வளவு நடந்தாலும் தேய்வதேயில்லை. முழுப் பாதமும் தரையில் பதியாதது இன்னொரு அதிசயம்.மூன்றில் ஒருபங்கு நீங்கி மிச்சபகுதியே தரையில் பதிகிறது. இல்லாவிட்டால் லகுவாக நடக்கமுடியாது.

ஆஹா... என்ன ஒரு தீர்க்கதரிசனமான திட்டமிடல்! நம்மை டிசைன் செய்த அந்த இறைவன் தான் எத்தனை பெரிய புத்திசாலி! சில உறுப்புகளை மட்டும் ஒன்றுக்கு இரண்டாகவே கொடுத்திருக்கிறான்.

கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு
கைகள் இரண்டு, கால்கள் இரண்டு
மூக்கில் துவாரங்களும் இரண்டு.
உடம்புக்குள் சிறுநீரகப் பைகள். இரண்டு
குடலிலும் கூட சிறுகுடல், பெருங்குடல்
என இரண்டு
கழிவுப் பாதைகளும் இரண்டு.

இப்படி அனைத்திலும் இரண்டைக் கொடுத்தவன் வாயையும், இதயத்தையும் ஒன்றாகக் கொடுத்தது மட்டும் ஏன் என்ற கேள்வி எழுகிறது.இதற்குப் பலர் பல விதமாய் பதில் சொல்லிவிட்டனர். உண்பதிலும் எண்ணுவதிலும் ஒரே மாதிரி ஒழுங்காயிருக்க வேண்டும் என்று இவை ஒன்றாகப் படைக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நயமான கற்பனை, அவ்வளவுதான்.

உலகில் எல்லாமே இரண்டு!
இன்பம், துன்பம் இரண்டு!
வாழ்வில் இளமை முதுமை என இரண்டு!
உயிர்களில் ஆண், பெண் என இரண்டு!
நாணயத்துக்கு கூட பக்கம் இரண்டு!
எதற்கும் இரண்டு பக்கம்!

ஜீவாத்மா-பரமாத்மா கூட இரண்டுதான்.
த்வைதம்- அத்வைதம் என்று
இறைபாதையும் இரண்டு.

(விசிஷ்டாத்வைதம், த்வைதத்திலிருந்து துளிர்த்ததுதான்.எனவே அது கணக்கில் வராது...) இப்படி இரண்டாயிருக்கிற அனைத்தையும் படைத்த இறைவன்... அதாவது,அந்த ஆதிசிவன் மட்டும் ஒருவனே... அந்த உணர்த்தும் விதமாகத்தான் நமது உறுப்புகளில் எல்லாம் இரண்டிரண்டாய் இருக்க அனைத்துக்கும் ஆதாரமான நாக்கு மட்டும் ஒன்றாய்!

என்ன ஒரு அதிசயம்.

நாக்கு படுத்திருக்கும் போது ஒரு சிவலிங்கம் போல் இல்லை? அப்படியெனில் ஒவ்வொருவருமே சிவமா? இதைத்தான் உனக்குள்ளேயே இறைவன் இருக்கிறான் என்கிறார்களோ?

ஆம், என்கிறாற் போல வாயினுள் பஞ்ச பூதங்களும்கூட இருக்கிறதே?எச்சில்தான் நீர், திடமான பற்கள்தான் நிலம், வாய் மூடிய நிலையிலும் கூட குழிவான உருண்ட பாகம்தான் ஆகாயம். காற்று இல்லாவிட்டால் பேச்சுதான் ஏது? எப்போதும் வெப்பமும் வாயை வைத்தே அறியப் படுகிறது.இல்லாவிட்டால் மருத்துவர்கள் தெர்மா மீட்டரை வாயில் எதற்கு வைக்க வேண்டும்?

நாக்கில் இருக்கும் சிவனை மகிழ்விக்கத்தான் மந்திரங்கள் கூறச் சொன்னார்களோ? அல்லது இந்த சிவனே மந்திர சப்தம்-மந்திர சப்தமே இவன் என்று மறைவாகச் சொல்லத்தான் நாவும் சப்தமும் ஒன்றிணைந்து கிடக்கிறதோ! இந்த ரகசியங்களைத் தான் சித்த புருஷர்களும் அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும், பிண்டத்தில் உள்ளதே அண்டத்திலும் என்று மறைபொருளோடு கூறிச் சென்றார்களா?

இந்த சிவத்தை அறிந்தும் புரிந்தும் தொழுதிடும் ஒவ்வொருவரும்தான் எத்தனை பெரிய முன்னோடி... எத்தனை பெரிய மெய்ஞானி?

சிறிய ஒளிப்பிழம்போடு ஓடிய ஒன்றைப் பார்த்து அதிர்ந்து போன ஜீவா, அதை முழுமையாகப் பார்க்க எண்ணி தொங்கிக் கொண்டிருந்த ஜோல்னாப் பையில் இருந்து டார்ச்சை எடுத்தாள். அதன் உருண்ட கண்ணாடிப் புறத்தில் ஒளியைக்கொண்டு வந்தாள். ஒளியும் உருண்டு, ஓடும் அது என்னவென்று பார்த்தது.

அது ஒரு எலி!

அதன் கழுத்தில் ஒரு ரத்தின வளையல் ஒன்று மாலை போல் சிக்கிக் கொண்டிருக்க அதை உதிர்க்கத் தெரியாமல் தான் அது குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்தது.

ஜீவாவின் கண்ணிரண்டும் அகண்டது.

எலியின் கழுத்தில் வளையலா? அவள் கேள்விக்குள் விழ, அதுவோ குடுகுடுவென்று அபிஷேக நீர் செல்லும் கால்வாய் பாதையில் ஓட ஆரம்பித்தது.அவளும் பின்னாலேயே ஓடினாள்.

✠ ✠ ✠

சப்த கன்னிகையர் சன்னதியில் வெறுப்போடு உட்காந்திருந்தான் ராஜநாராயண். இப்படி உட்கார்ந்திருப்பது இரண்டாவது முறை! ஒருமுறை ஒளிய வேண்டும் என்று எண்ணமில்லாமல் ஒளிந்திருந்தான். இப்பொழுது அப்படி ஒரு எண்ணத்தோடு...

ஒரு வினாடி தீட்சதர் வந்த புதிதில் சொன்ன, 'நீ என்ன முயற்சி செய்தாலும் இந்த ஊரை விட்டு மட்டும் போக முடியாது' என்று கூறியதும் ஞாபகத்தில் வந்தது. மனிதர் எந்த வேளையில் சொன்னாரோ... ஒரு அடி.... ஒரே ஒரு அடி எடுத்து வைக்க முடியவில்லை.

அட ஊரை விட்டுத்தான் போகமுடியவில்லை, கோயிலை விட்டாவது விலகி இருக்கலாம் என்றால் அதாவது முடிகிறதா?

திரும்பத் திரும்ப திருடனைப் போலவே செயல்பட வேண்டியிருக்கிறதே. முன்பு பாரதி, இப்பொழுது ஜீவா!

அவள் காதலால் உள்ளே இழுத்து வந்தாள். இவளோ... அது இது என்று இழுத்து வந்துவிட்டாள்.

அப்படிச் சொன்னவள் இன்னமும் வராதது எரிச்சலை மூட்டியது. எங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாளோ?

கேள்வியோடு எண்ணை மொழுக்குப் போன்ற அந்த சப்த கன்னியர்களின் சிலை உருவத்தைப் பார்த்தான்.

மீண்டும் அவனுக்குள் நாத்திக ஓட்டம்.

அப்படியே அன்று வந்த பாம்பு இன்றும் வருமா என்று ஒரு கேள்வி, ஜீவாவிடமும் சொல்லியிருந்தான்.

"உள்ள ஒரே மேஜிக் ஜீவா. ஆனா, எப்படின்னுதான் தெரியல..." என்று அவன் சொல்ல, "இன்னிக்கு அதை யும்தான் பார்த்துடுவோமே" என்று அவளும் சொல்லி யிருந்தாள்.

அப்படிச் சொன்னவள் வரவேண்டாமோ?

பொறுத்துப் பார்த்தவன் மெல்ல வெளியில் வந்தான். வெறிச்சோடிக் கிடந்தது புறப்பிரகார வெளி. ஒரே நேரத்தில் பத்து ஹார்மோனியக் கட்டைகள் நசுங்கியது போல ஒருவித ரீங்கார சப்தம். சுவர் கோழிகளின் உபயம். அண்ணாந்தான்.

வைரப் புள்ளிகளாய் நட்சத்திரங்கள்.

முன்பு நாய்கள் விரட்டிய அதே புறப்பிரகார வெளி, வெறிச்சோடிக்கிடந்தது

இடையில் ராஜ்நாராயணுக்கு அந்த நாய்கள் ஞாபகமும் வந்தது... அன்று கூட்டமாய் அத்தனை நாய்கள் எங்கிருந்து வந்திருக்கும்?

யாரோ கால பைரவராமே... அவரது வாகனமாமே இந்த நாய்கள்? இங்கே காரும் பஸ்சும் வாகனமென்றால் இந்தச் சாமிகளுக்கு மிருகங்கள் வாகனமோ...? வைத்துக் கொண்டதை நல்ல குதிரையாக வைத்துக் கொள்ளக் கூடாதோ... நாயால் எப்படி ஒரு மனிதனைச் சுமக்க முடியும்?

அரசமரச் செடி பிடுங்கிப் போடப்பட்ட மரகதலிங்கம் உள்ள மதில் அருகே வந்திருந்தான். சுவர் அருகில் ஒரு அகல் விளக்கு எரிந்தது. யாரோ பூஜித்ததுபோல பூக்கள் கிடந்தன.

✠ ✠ ✠

வாட்சைப் பார்த்தார் குமாரவேல். மணி பதினொன் றைத் தொட்டிருந்தது. அருகில் மப்ளரை சுற்றிக் கொண்டு இரண்டு சென்ட்ரி போலீஸ்காரர்கள். அவர் களிடம் சொல்லிக் கிளம்பினார்.

அருகில்தான் இருந்தது பைக்! உதைத்துக் கிளம் பினார். அப்போது அரக்க பரக்க யாரோ ஓடி வருகிற மாதிரி இருந்தது. ஹெட்லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சியடித்த தில் அது பட்டர் என்பது துல்லியமானது.

ஓடிவந்த பட்டரும் ஆசுவாசித்து நின்றார்.

"என்ன பட்டரே... எதுக்கு இந்த ராத்திரியில் இந்த ஓட்டம்?"

"காரணமாத்தான், என் பொண்ணு பாரதியைக் காணல இன்ஸ்பெக்டர்."

"என்ன சொல்றீங்க..."

"ஆமாம்... இவ்வளவு நேரம் எல்லா இடத்துலையும் தேடிட்டு உங்களை பாக்கத்தான் ஓடி வந்தேன்."

"மைகாட்... எங்க போயிருப்பா... உங்களால யூகிக்க முடியலயா?"

"அவ போயிருந்தா என் மருமகன் ராஜ்நாராயணோட தான் எங்கேயாவது போயிருக்கணும். ஏற்கெனவே ஒரு தடவை இப்படித்தான் ஆச்சு."

"என்ன சொல்றீங்க... அந்த மனுஷன் இடிஞ்ச கோவில்ல அந்த ரிப்போர்ட்டர் பொண்ணோடல்ல இருக்கான்..."

"அதான் தெரியல... இடிஞ்ச கோவிலுக்கு தனியா போக எனக்கு தைரியமில்லை..."

"வண்டில உட்காருங்க."

பைக் சீற ஆரம்பித்தது.

குமாரவேல் வரும்போது யாரோ இரண்டுபேர் கோயில் பகுதிக்குள் இருந்து வயற்காட்டுப் பக்கமாய் திபுதிபு வென்று ஓடுவது ஹெட்லைட் வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது.

மனிதர்கள்தான்... ஆனாலும், மனிதக்குரங்குகள் ஓடுகிற மாதிரி முன்னிரண்டு கைகளால் ஊன்றி எம்பிக் குதித்து ஓடுகிற விதமே ஒருமாதிரி இருந்தது.

"ஏய்... யார் அது?" -பைக்கை நிறுத்தியபடி அலறினார் குமாரவேல். அவர்கள் ஓடிக் கொண்டே இருந்தனர். வயல் வரப்புக்குள் பைக்கை இறக்கி ஓட்டினார் குமாரவேல்.

பட்டரோ அவரை இறுக்கக் கட்டிக்கொண்டு, "ஐயோ... என்ன இன்ஸ்பெக்டர் இது... கொஞ்சம் நில்லுங்கோ... நான் இறங்கிக்கிறேன்" என்று கதறினார்.

குமாரவேல் காதில் அது விழவேயில்லை. அவர்களோ படுவேகமாக ஓடி, பிச்சைக்கார கிழவன் வேடத்தில் இருந்த விட்டல் ராவ் தங்களுக்கான ரகசிய இருப்பி

டத்தை அமைத்துக் கொண்டிருந்த வைக்கோல் போர் அருகே பதுங்கினார்கள். குமாரவேலும் பைக்கை நிறுத்தி விட்டு பாக்கெட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டார். சரேலென்று பைக்கை விட்டு இறங்கியவர். "பட்டரே பயப்படாம அவங்க இந்த பக்கம் வந்தா பாஞ்சு பிடிங்க, நான் இருக்கேன்" என்றபடி ஓடினார்.

வைக்கோல் புதருக்குள் அவர்கள் புகுந்து தப்பிக்கப் பார்த்தனர். "வெளிய வந்துரு... இல்லாட்டி குண்டு பட்டு சாகவேண்டி வரும். உங்கள்ல ஒருத்தனையாவது உயி ரோட பிடிக்க நினைக்கறேன்...வந்துடுங்க..." என்றபடி வைக்கோல் போரைச்சுற்றி வந்தார்.

பட்டர் வெறித்தபடி நின்று கொண்டிருந்தார்.

இருட்டு வேறு... லேசாய் அரை நிலா வெளிச்சம் மட்டும் பெய்தபடி இருக்க வெறுத்துப் போனார். மளமளவென்று வைக்கோல் போரை இழுத்துப் போட்டு உள்ளே தேடத் தொடங்கினார்.

தார்பாய் கூடாரம் ஒன்றின் ஒரு பக்க வாட்டுப் பகுதிச் சுவர் கையில் பட்டு அவருக்கு அதிர்ச்சி அளித்தது.

அவரிடம் வேகமும் அதிகரித்தது. மொத்த வைக்கோல் போரும் வேறுபுறம் உருவிப் போடப்பட்ட நிலையில் ஃபைவ் எக்ஸ் குரூப்பின் ரகசிய இருப்பிடமான கூடாரம் பளிச்சென்று தெரிய, ஒரு நிமிடம் அவருக்கு வியர்த்தே விட்டது. தார்ப்பாயை விலக்கிவிட்டு உள்ளே பார்த்த போது பகீர் என்றது.

உள்ளே அந்த இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு ஒரு சிலைபோல் நின்றிருக்க சுற்றிலும் பல பொருள்கள் இறைந்து கிடந்தன. காலடியில் ஜென ரேட்டர் செட்.

குமாரவேலின் துப்பாக்கி அவர்களை நோக்கி நீண்டது. ஒரு கை துப்பாக்கியை நீட்டிப் பிடிக்க, இன்னொரு

கை ஜென்செட்டின் ஆன்லைன் நைலான் கயிற்றை ஒரு இழு இழுத்தது.

அடுத்த நொடி உள்ளே மளுக்கென்று விளக்கெரிந்தது.

இறுக்கமாக ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டிருந்த அவர்களோ அடுத்த நொடி அவர் மேல் ஒரே பாய்ச்ச லோடு பாய முயற்சிக்க, வினாடியில் விலகினார். அவர் கள் அப்படியே வெளியே போய் விழுந்தனர். திரும்ப ஒழுங்கு நடக்கப் பார்த்தவர்களின் கால்களைப் பார்த்து கச்சிதமாகச் சுட்டார்.

டென்ட் வெளிச்சம் அவர்களைச் சுடுவதற்கு ஒத்து ழைத்தது. அவர்களும் நாய் போல குலைத்துக் கொண்டே சுருண்டு விழுந்தனர். பார்த்துக் கொண்டு நின்ற பட்டருக்கோ சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

அருகில் சென்று அவர்களைப் பார்த்த குமாரவேல் முகத்தில் அதிர்ச்சி...

அவர்கள் கோயிலில் நாய் கடிவாங்கி, தப்பி ஓடிய கள்ளன் ராஜரத்தினத்தின் சகாக்கள். இருவரும் காலை இழுத்துக் கொண்டு அடிபட்ட நாய் போலவே முனகினார்கள்.

"பட்டரே... இவர்களைத் தெரியுதா உங்களுக்கு?"

"தெ... தெரியறது.... கோவில்ல திருடவந்த பசங் கன்னா இவங்க..."

"அவங்களேதான்... இங்கேயே இருங்க... ஓடப் பார்த்தா, இந்தாங்க துப்பாக்கி. கால்லையே சுடுங்க" என்று துப்பாக்கியை பட்டர் கையில் திணித்தவர், ஜென் செட்டால் வெளிச்சமயமாகிக் கிடக்கும் டென்ட்டுக்குள் நுழைந்தார்.

ஒரு மூலையில் கிடந்தது ராஜ்நாராயணிடம் திருடப் பட்ட அவனது பெரிய சூட்கேஸ், பானம் ஏர்லைன்ஸின் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட நிலையில் கைப்பிடியில் அவன் பெயர் எழுதப்பட்ட ஸ்ட்ராப்.

"இது ராஜ்நாராயண் திருடு கொடுத்த சூட்கேஸ்... - உதடுகள் முணுமுணுக்க மற்ற பொருள்களைப் பார்த்தார். சில செல்ஃபோன்கள், வாக்கி டாக்கிகள், சில ட்ரான்ஸ் மீட்டர்கள், துப்பாக்கி ரவைகள், மருந்து பாட்டில்கள், கயிறு, கத்தி கபடாக்கள், அப்படியே ஒரு டைரி, அதில் தொலைபேசி எண்கள்.

அவருக்கு மெல்ல விளங்கத் தொடங்கியது.

டென்ட்டை விட்டு வெளியே வந்தார். பட்டர் நடுங்கியபடி துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தார்.

"பட்டரே... பார்த்தீங்களா... திருட்டுப்பசங்க இங்க இருந்துகிட்டுதான் வேலை காட்டியிருக்காங்க...

"இன்ஸ்பெக்டர்... என் பொண்ணு என்ன ஆனான்னு தெரியாம நான் துடிச்சுண்டு இருக்கேன். நீங்க உங்க கவலைல இருக்கேளே...

"கவலப்படாதீங்க... உங்க மருமகன் கிட்ட அவன் சூட்கேசைத் திருடுனது இந்த திருட்டு கூட்டம்தான். சூட்கேஸ் உள்ளதான் இருக்கு..."

"என் பொண்ணு..."

"இடிஞ்ச கோவில்ல போய் பாப்போம். அதுக்கு முந்தி என் டிபார்ட்மென்ட் ஆளுங்களுக்கு நான் தகவல் தந்து அவங்களை இங்க ஒரு குரூப்பா வரச் சொல்லணும். இந்த திருட்டுப் பசங்களையும் விசாரிக்கணும்" என்றார்.

✠ ✠ ✠

பாரதியிடம் மயக்கம் தெளியவில்லை. சித்த புருஷ ரிடமும் சிவநாம ஜெபம் தொடர்ந்து கொண்டிருந்தது.

அவ்வப்போது பாரதி ஏதோ கனவு கண்டு உளறுகின்ற மாதிரி முனகிக் கொண்டிருந்தாள்.

"தொடாதீர்கள்... இந்தப் பிரதாபியை நீங்கள் தொடக் கூடாது. நான் சொன்னது போல அந்த ஈசன் வருவான். தன்னை உங்களுக்கு உணர்த்துவான். அவனை உணர்ந்த நிலையில் ஒரு சிவ பக்தனாகத்தான் நீங்கள் என்னைத் தீண்ட வேண்டும்."

தெளிவான அவளது முனகல் அந்தச் சித்த புருஷரை சற்றே நாம ஜெபத்தை விட்டு அவளைப் பார்க்க வைத்தது.

அப்படியே அவரது எண்ணங்களிலும் ஒரு பின்னோட்டம். அவை பல நூறு ஆண்டுக்கு முன்னாலே.... படை எடுப்பை ஒட்டிய ஒரு தினத்துக்குள் சென்றுவிட்டது.

✠ ✠ ✠

மரகதலிங்கபுரத்து மரகதலிங்கேஸ்வரர் ஆலயக் கதவுகள் இழுத்து மூடப்படுகின்றன. உள்ளே கதவின் பின்னால் கூட்டம். வெளியே திபுதிபுவென்கிற புரவி களின் பாய்ந்து ஓடும் சப்தம்.

அதேநேரம் கதவைத் திறந்து உள்ளே நுழையவும் முயன்றனர். ஐயோ... எதிரிகள் திறந்து கொண்டு உள்ளே நுழைந்து விடுவார்களோ...? உள்ளிருப்பவர்கள் முகத்தில் சொல்ல முடியாத பதற்றம். கொடி மரத்தின்கீழ் நடுங் கிய நிலையில் நின்று கொண்டிருந்தார் பிரம்மானந்த பட்டர். அவரை ஒட்டி நின்று கொண்டிருந்தார் அந்த சித்த புருஷர். நாராயண அழகனும் நின்று கொண் டிருந்தான்.

சித்த புருஷரைப் பார்த்து, "இப்போது மனித ஆற்றல் தான் இந்த ஆலயத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக் கிறது... நான் மிகுந்த பிரயாசை எடுத்துச் செதுக்கிய

சிற்பங்கள் சிதறக்கூடாது என்றே நானும் இங்கே உங் களோடு போராடுவதற்காக நின்று கொண்டிருக்கிறேன்.

"இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள். அந்த லிங்கேசன் இருப்பது உண்மையென்றால் இந்த நொடி அவன் இங்கே வந்திருக்க வேண்டும்.

"குறைந்தபட்சம் என்னை சபிக்கும் அளவு சக்தி இருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கும் உங்கள் தவ சக்தியாவது இந்த எதிரிகளை விரட்டியடிக்க வேண்டும்... எங்கே பார்ப்போம்... அவர்களை உங்களால் விரட்ட முடிந்தால், அப்போதே நான் கடவுள் இருப்பது உண்மை என்று ஒப்புக்கொள்கிறேன்" -என்று ஒரு நீண்ட கருத்தை யும் உதிர்த்தான் நாராயண அழகன். அவர் முகத்திலோ கலவரப்புயல். கண்களில் ரத்தச் சிவப்பு. அண்ணாந்து வானத்தைப் பார்த்தார். அதே நேரம் எதிரிகளின் முயற்சி வெற்றி பெற்ற நிலையில் கோயில் கதவும் உந்தித் தள்ளப்பட, தடுக்கப் பார்த்தவர்கள் கீழே விழ திபுதிபு வென்று ஒரு பெருங்கூட்டம் உள்ளே பாய்ந்து வர ஆரம்பித்தது...

49

'**இறை பற்றிய சிந்தனைகளெல்லாமே கற்பனையானவை என்று ஒரு கருத்து உண்டு. அதை நாத்திகம் என்று கூறுகிறோம்.**

கடவுள் மனிதனைப் படைத்தான் என்பது ஆத்திகம்.

மனிதன்தான் கடவுளைப்படைத்தான் என்பது நாத்திகம்.

ஒன்று அகம் சார்ந்த கருத்து. இன்னொன்றோ புறம் சார்ந்தது.

இந்த இருவேறு சிந்தனைகளும் எல்லா நாளிலும் இருந்து வந்து கொண்டிருப்பதுதான் விந்தையிலும் விந்தை. புராணங்களில் அசுரர்கள் என்று வர்ணிக்கும் பலரும் மனிதசக்தியே உயர்ந்தது என்பதைக் கருத்தாய் கொண்டவர்கள். தெய்வம் என்பது மாயை... அது ஒரு கோழைத்தனம் என்று கூறிச்சண்டையிட்டவர்கள்.

இந்தக் கருத்தில் மிக உறுதியாக இருந்தவன் ஹிரண்யன். இன்றைய சிலை கலாசாரத்துக்கு இவனே முன்னோடி. இவன் ஆண்ட காலத்தில் 'நானே இறைவன்- என்னையே எல்லாரும் தொழ வேண்டும்' என்று தனது சிலை வழிபாட்டைத் தொடங்கி வைத்தவன் இவன்.

அடுத்து ஜாபாலி என்று ஒருவர் கிருஷ்ணனோடு தர்க்கம் புரிந்தவர். இன்றைய நாத்திகவாதிகள் கேட்கும் அவ்வளவு கேள்விகளையும் இவர் அன்றே கிருஷ்ணனிடம் கேட்டவர். 'ஏ கிருஷ்ணா... அர்க்யம் என்று சொல்லி விடும் எள்ளும் தண்ணீரும் காற்றோடு கலந்து விட்டவர்களுக்கு எப்படிப்போய்ச் சேரும்? உடம்பை இந்த மண்ணில் விட்டு விட்டுப் போனவர்களுக்கு எப்படிப் பசிக்கும்? அவர்களுக்கு எங்கே இருக்கிறது உடம்பு? இல்லாத உடம்பை எப்படி பார்க்க முடியும்?' என்றெல்லாம் கேட்டவர்.

காலம் இந்த நாத்திக சிந்தனைகளை மறுதலித்து ஆத்திக விஷயங்களை மட்டும் புராணத்தில் தங்க வைத்துவிட்டது.

'இதன்படி பார்த்தால் மனிதன், என்று இறைவன் பற்றி சிந்திக்கத்தொடங்கினானோ அன்றே மனிதம் பற்றியும் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

இதில் இந்து மதம் நீங்கலாக மற்ற மதங்கள் சில இறைதூதர்களால் வழி நடத்தப்பட்டு உரு வாக்கப்பட்டதாகக் காட்சியளிக்கின்றன. அவை கடவுள் சிந்தனையைக் கேள்வி கேட்கவே அனு மதிக்கவில்லை.

'சொன்னதைச் செய்' என்கிற கட்டளையாக இருக்கிறது இஸ்லாமியம். ஏசுவோ இதே கருத்தைச் சற்று பரிவோடும் கெஞ்சலோடும் கூறுகிறார். 'நீ தவறு செய்தாலும் நான் மன்னித்து விடுவேன். என்னைச் சரணடைந்து விடு' என்கிறார்.

பவுத்தமோ மனிதவாழ்வை ஒரு ஆசைக் கோட்டையாகப் பார்க்கிறது. மனதை குதிரை, யானை என்று மற்ற மதங்கள் வர்ணித்தால் இது ஒரு இருண்ட அறை என்கிறது. லோகாயதங்களை ஆபத்தானதாகக் கூறி துளிகூடப்பற்று இல்லாமல் வாழச் சொல்கிறது. அதனாலேயே இதனால் எங்கும் பெரிதாய் பரவிகிளைவிட முடியவில்லை. சராசரி மனிதர்களால் பவுத்தத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. சுருக்கமாகச்சொன்னால், வாழ்க்கையை வெறுத்தவனுக்கு பவுத்தம் சற்று ஆறுதல் தரலாம். இந்து மதம் ஒன்றுதான் மனித மனதின் இயல்புகளையும் குணநலன்களையும் உத்தேசித்து அவனுக்கு அனுசரணையாக எல்லா விதங்களிலும் இருக்கிறது.

இதில் சில மேலாதிக்கமும், வர்ணாஸ்ரமமும் மிகப் பிழையானது என்கிற சில சமூக நெறியாளர்கள் கருத்தெல்லாம் மிக மேம்போக்கானவை. உண்மையில் இதனிடம் சிந்திக்கச் சிந்திக்க வியக்க வைக்கும் விஷயங்கள் ஏராளம்.

உருவ வழிபாடும், மனிதனைப் போன்ற பேச்சும், உணர்வும் கொண்டதான இறைவர் கூட்டமும் இதில்தான் மிகுதியாக உள்ளன.

வாழ்க்கைக்கு கல்வி, செல்வம், வீரம் எல்லாம் தேவை. இவைகளுக்குகூட இங்கே தனித்தனி தெய்வங்கள். மற்ற உயிர்களையும் மதிப்பது போலக் குரங்கு, குதிரை, பன்றி, சிங்கம், கிளி முகங்களில் இறைவர்கள். வாழ்வின் பிரதான பஞ்ச பூதங்களுக்குகூட பஞ்ச தேவர்கள்.

இவர்களெல்லாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சிரஞ்சீவியாக இருப்பது இன்னொரு அதிசயம்.

காலம் என்பது மெல்ல மெல்லத்தான் நாகரீக வளர்ச்சி மற்றும் பல முன்னேற்ற சித்திகளை உடையதாக உள்ளது. இன்றுள்ள முதிர்ந்த சில சிந்தனைகள் எடுத்த எடுப்பில் ஏற்பட்டதல்ல. இதற்கு முந்தைய பல சிந்தனைகளின் தாக்கத்தால் தான் ஏற்பட்டவை. இதன்படி பார்த்தால் வரும் நாள்களில் இன்னும் முதிர்ந்த பல எண்ணங்கள் தோன்றக் கூடும். இதே எண்ணத்தோடு சற்று பின்னோக்கிப் பார்த்தால் பல ஆயிரம் ஆண்டுக்கு முன்பே இந்து மதம் சார்ந்த விஷயங்கள் ஒரு இமாலய அர்த்தப் பொதி உடையதாக, ஆழமானதாக இருந்திருக்கின்றன.

இந்த இறை சிந்தனைகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக சிவம் விளங்குகிறது. ஒரு தலைமையகம் எப்படி தன் இயக்கத்தைத் தன்னுள்ளிருந்து பல்வேறு அமைப்பு, அதிகாரங்களைக் கொண்டு தோற்றுவித்து திட்டமிட்டு நடத்துகிறதோ அது போலவே இருக்கிறது சிவத்தின் அமைப்பும்.

விஞ்ஞானப்படியும், மெய்ஞானப்படியும் உயிரினங்கள் பஞ்ச பூதங்களாலானவை. இந்தப் பூதங்களைப்படைத்து இயக்கும் இறை ஆறாம் அம்சம். இந்த ஆறும் ஒன்று சேர்ந்த ஒரு அம்சமாக விளங்குகிறது முருகக் கடவுளின் தோற்றம்.

சிவத்தின் நுட்ப பரிமாணமே முருகு. நமது குழந்தைகளின் முதிர்ந்த சில செயல்பாடுகளை எண்ணி நாம் வியக்கிறாற்போல சிவமும் முருகனின் வீரதீர பிரதாபங்களைப் பார்த்து மகிழ்கிறது. ஒரு வகையில் நம் குழந்தைகளின் வாழ்க்கை நம்முடைய குழந்தைப் பிராய வாழ்க்கை போன்றதே. நாம் வாழும் நாளில் நமது செயல்பாடுகளின் பரிமாணங்கள் நமக்கே எப்படித் தெரியும். நாம் அதை நழுவ விட்டே பெரியவர்களாகிறோம். அப்படி நழுவ விட்டதை நாம் உணரத்தான் நம் எதிரில் நம் குழந்தைகள் வளரும்போது அதை அங்குல அங்குலமாக ரசித்து மகிழ்கிறோம். அவர்கள் பிழைகள்கூட பெரிதாகத் தெரிவதில்லை. ஏன் என்றால் அதுவும் நம் வாழ்வுதான். இதை முருகனைக் கொண்டு உணர்த்துகிறது சிவம். தன் காதுகளைக் கொடுத்து தனக்கும் தெரிந்த பிரணவத்தின் உட்பொருளைக் கேட்டு மகிழ்கிறது. இதெல்லாம் எத்தனை முதிர்ந்த செயல்? இப்படி சிவம் பற்றி ஆய்வுக்குள் நுழைந்தால் அது ஆகாய வெளியாகி விடுகிறது. முதலும் முடிவும் இல்லாமல் போய்க் கொண்டேயிருக்கிறது.

நாராயண அழகனின் கேள்வி ஒருபுறம்- உள்ளே நுழைந்துவிட்ட படையின் தாக்கம் ஒருபுறம், அந்த சித்த புருஷர் கதிகலங்கிப் போனார். எல்லாரும் எதிர்க்க வரும் படை வீரர்களுடன் யுத்தம் புரியத் தயாரானார்கள்.

பிரம்மானந்த பட்டர் ஓடிப் போய் பிரதான வாயில் கதவைச் சாத்தித்தாழிட்டுக் கொண்டுவிட்டிருந்தார். நாராயண அழகன் தினவெடுத்த தோள்வலியோடு எதிர்ப்பட்ட வீரர்களையெல்லாம் அடித்து நொறுக்கத் தொடங்கியிருந்தான்.

சித்த புருஷரையும் சில வீரர்கள் சுற்றிவளைத்துக் கொண்டனர். தாடியும் மீசையுமான அவரது தோற்றம் அவர்கள் கண்களில் வெறியை உருவாக்கியிருந்தது.

அவரும் அவர்களை அப்படியே வெறித்துப் பார்த்தார். ஒரு புறம் நாராயண அழகன் படைவீரன் ஒருவனது வாளைப் பிடுங்கி அதைக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

சில யானைகளும் உள்ளே நுழைந்திருந்தன. அவை பயிற்சி பெற்ற யானைகளைப் போல கற்தூண்களைத் தேடித் தேடிச் சென்று முட்டி மோதி அவற்றைச் சாய்ப்பதில் குறியாக இருந்தன.

ஒரே கூக்குரல்... வாள்களின் மோதல் சத்தம். இதற்கு நடுவே அந்தச் சித்த புருஷர் அவர்கள் கண் எதிரில் அப்படியே காற்றில் கரைந்த கற்பூரம் போல மறைந்து போனார்.

"ஏய்... இவன் ஒரு மாயாவி போல இருக்கிறது!" என்கிற கருத்துடன் அவரை நாலாபுறமும் தேடிச் சென்றனர் சிலர். சுற்றிச் சுற்றிப் பார்த்தனர்.

✠ ✠ ✠

மூடிக் கொண்டு விட்ட பிரதான வாயில் கதவுக்கு அப்பால் பிரம்மானந்த பட்டர் மரகதநடராஜர் உருவைக் கட்டியணைத்தவாறு தப்பிக்கும் வழி தேடி ஓடிக் கொண்டிருந்தார்.

வெளியே நடக்கும் யுத்தத்தின் அவலம் அவர் காதுகளிலும் விழுத்தான் செய்தது.

"இறைவா... உன்னைக் காக்கும் வலிமையையும் நீயே எனக்கு வழங்க வேண்டும்" என்று நடராஜ விக்ரகத்தைப் பற்றிய நிலையில் அவரிடம் பிரார்த்தனை வேறு. அதைக் கேட்டு அந்த நிலையிலும் ஒரு சிரிப்பொலி பிறந்து வந்து அவரைத் தாக்கியது.

ஒரு பெண்ணின் சிரிப்பொலி!

யார் என்று பார்த்தார். சிற்பி மகள் ஜீவாதான்.

"ஜீவா... நீயா?"

"நானேதான்... உங்களுக்கு முன்நான் இங்கே வந்து விட்டேன். நான் மட்டுமல்ல, அதோ..." -அவள் கைகாட்டிய திசையில் பிரதாபி.

"நல்லது... வாருங்கள், எனக்கு உதவுங்கள். ஸ்வாமியின் ஆபரண நகைகளுடன், நாம் சுரங்க வழியாகத் தப்பிக்க முயற்சிப்போம்."

"ஏன் தப்பிக்க வேண்டும்? எதற்குத் தப்பிக்க வேண்டும்?"

"ஜீவா பதிலுக்குக் கேட்ட விதம் பயங்கரமாக இருந்தது.

"ஜீவா என்ன இது... இது பேசும் நேரமில்லை."

"அது எனக்கு தெரியும். அதே நேரம் அந்த இறைவன், 'அதாவது அந்த கயிலாயமூர்த்தி வேடிக்கை பார்க்கும் நேரமில்லை.."

"என்ன சொல்கிறாய்?"

"நாராயண அழகனைப் போல என்னாலும் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. இந்த உலகைப் படைத்து அதில் உன்னையும் என்னையும், ஏன் வெளியே இந்த அரிய கலைப் பொக்கிஷங்களை அழித்து ஒழித்துக் கொண்டிருப்பவர்களையும் படைத்த அந்த ஈசன் இப்போது இங்கு ஏன் வரவில்லை? அவர் வெறும் கல்லோ...

"அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரமும், அழகன் முருகனுக்கு வேலாயுதமும் என்று பார்த்துப் பார்த்து ஆயுதமளித்த மூர்த்தி இங்கே மட்டும் எங்கே போனார்?"

"பைத்தியம் போல உளறாதே... மிலேச்சர்கள்தான் இந்த விக்ரகங்களை வெறும் கல்லாய் பார்க்கிறார்கள் என்றால் நீயுமா?"

"கேள்வி பிறகு. பதில் கூறுங்கள், யாரை யார் காப்பாற்றுவது? நம்மை அந்த இறைவன் காப்பது அழகா... இல்லை, நாம் அவரைக் காப்பது அழகா?"

"எப்போது இருந்து நீயும் அந்த நாராயண அழகன் போல ஆனாய்?"

"அவர் கேள்விகளைச் சிந்திக்கத் தொடங்கியதில் இருந்துதான்..."

"ஜீவா... என்ன இது, இது விவாதம் செய்யும் நேரமில்லை. நாமும் கோழை போல ஒளியாமல் பட்டருக்கு உதவுவோம்..."

- பிரதாபி வக்காலத்து வாங்கினாள்.

"இல்லை பிரதாபி... இவருக்கும், இந்த இறை வடிவம் என்று சொல்கிற கற்சிலைகளுக்கும் உதவுவது பேதமை. இப்போதுகூட இவர் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் பார்க்கிறார். ஆனால், நாராயண அழகனோ எதிரிகளோடு மோதி இவற்றைக் காப்பாற்றப் பார்க்கிறார். யார் உயர்ந்தவர்கள்?"

-வாதத்தில் அனல் பறந்தது. அதே நேரம் கதவு திறந்து கொண்டு விடுவது போல சத்தம் கேட்டது. பட்டர் அதைப் பார்த்து விட்டு, "ஈஸ்வரா.. என்னை, இவர்களை எல்லாம் நீயே காப்பாற்று. காலங்களைக் கடந்து வாழ்பவன் நீ என்பது உண்மையானால் உன் செல்வங்கள் கொள்ளை போகக்கூடாது. இந்த ஆலயமும் சிதையக் கூடாது..."

-என்றபடியே பிரம்மானந்த பட்டர் அந்த மரகத நடராஜர் விக்ரகத்தை சுமக்கமாட்டாமல் சுமந்தபடி ஓடினார்.

பிரதாபி, ஜீவாவை வெறித்துக்கொண்டிருந்தாள். அருகில் திறந்தே இருந்தது மரகதாம்பிகையின் திருச்சன்னதி. அதைப் பார்த்த ஜீவா ஓடிச்சென்று அந்த நகைகளைக் களைந்து தன் சேலை முகப்பில் கட்டத் தொடங்கினாள்.

"என்ன செய்கிறாய்?"

"இந்த நகையோடு நாமும் தப்பிப்போம்"

"அம்பிகையை என்ன செய்வது?"

"கல்தானே... உடைந்து போகட்டும்"

"ஐயோ... ஜீவா, நீயா இப்படிப் பேசுகிறாய்?"

"நீதானே சொன்னாய், பேச நேரமில்லை என்று... உம்..." ஜீவா நகைகளோடு ஓடத் தொடங்கினாள்.

-பிரதாபி மூளியாய் நிற்கும் அம்பிகையைப் பார்த்தாள். அப்படி ஒரு கோலத்தில் ஒருநாள் ஒரு பொழுது கூடப் பார்த்ததில்லை. நெஞ்சையடைத்தது. சட்டென்று உணர்ச்சிவயப்பட்டவள், அந்த விக்ரகத்தை வாரி அணைத்துக்கொண்டாள்.

அவளுக்கு அந்த ஆலயத்தின் ஒவ்வொரு பாகமும் அத்துபடி... அதில் ஒரு வழி வாஸ்து முறையில் ஈசான்யத்தில் திறப்போடு இருந்தது. அந்த முனையில் ஒரு மேதா தட்சிணாமூர்த்தி சிலை இருந்தது. அவரை நகர்த்தினால் கீழே ஒரு சுரங்க வழி தெரியும். அதன் வழியாகச் சென்றால் கோயிலுக்கு வெளியே மதில் சுவற்றுக்கு அப்பால் உள்ள திருக்குளத்தில் போய் முடியும். நீந்தித்தான் மேலேற வேண்டும். சிலையோடு நீந்தி மேலேற முடியுமா?

பிரதாபிக்கு அச்சமாகத்தான் இருந்தது. இருப்பினும், கொடிய சூழல் அவளுக்குள் புதிய சக்தியைத் திரட்டி இயக்கியது. சிலையோடு வேகமாக நடந்தாள்.

சிலையின் பாரம் அவளை அமுக்கியது.

ஜீவாவும், பட்டரும் எங்கே எப்படிப் போனார்கள் என்றே தெரியவில்லை!

மேதாதட்சிணாமூர்த்தி விக்ரகத்தை நகர்த்தி விட்டு உள்ளே இறங்கியவள் திரும்பவும் உள்ளிருந்தபடியே சிலையைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து வைத்த நொடி பிரதான இரண்டாம் வாயில் கதவு திறந்து கொள்ள, நூற்றுக்கணக்கான வீரர்கள் உள்ளே புகுந்தனர்.

அதுவரை புனிதமாய், பவித்ரமாய் கருதப்பட்ட இடம் ஒரு பேய் கோட்டம் போல மாறத் தொடங்கியது.

மனித மனத்தின் விகாரம் எப்படி வேண்டுமானாலும் செல்லும் என்பதற்குச் சான்றாக அது இருந்தது.

மரகதலிங்கபுரத்தின் நுழைமுகத்தில் இருந்தது ஆத்ம லிங்கேஸ்வரர் திருச்சன்னதி.

மிலேச்சர் படையெடுப்பை உத்தேசித்து அனையும் பூட்டிக் கொண்டு விலகிப் போயிருந்தார் அந்த ஆலயத் துப்பட்டர். ஆலயம் பூட்டப்பட்டிருந்தாலும் அதனுள் லிங்க சொரூபம் முன் கண்ணீர் மல்க நின்று கொண் டிருந்தார் அந்த சித்த புருஷர்.

"இறைவா... நானறிந்த அஷ்டமாசித்துவில் ஒன்றான அணிமா ஆற்றலால் நான் என் ஸ்தூல வடிவை அணுவின் சிறியதாக்கி மிலேச்சர்களிடம் இருந்து தப்பி வந்தேன்.

"அங்கே என் காதில் விழுந்த கேள்விகளால் நான் துவண்டு போய்விட்டேன். மிலேச்சர்களுக்காவது தங்கள் படை எடுப்புக்கு ஒரு நியாயம் இருக்கிறது. அவர்கள் வரையில் அவர்கள் மார்க்கமே வேறு. ஆனால், இங்கே நம்மோடு சேர்ந்து வாழ்ந்தும் உன்னை நம்பாமல் ஒருவன் பேசுகிறான்.

நீ பிரசன்னமாகி எதிரிகளை அடக்காததை குறையாகக் கூறுகிறார்கள். அவன் கேள்வி என்னையே அசைத்து விட்டது.

ஆதி பரம்பொருளே... உன்னைத் தீண்டுவோர் எரிந்து சாம்பலாக வேண்டாமா? முக்காலமும் பூசனைகள் கண்ட உன் ஆலயம் அழிவுக்குள்ளாகலாமா? நானும் உன்னைக் கேட்கிறேன், பதில் சொல்..."

-அவர் மனதில் உக்கிரமான பிரார்த்தனை குரல். மறுநொடியே ஒரு இடிச்சிரிப்பொலி கேட்க ஆரம்பித்தது. அந்த சித்த புருஷர் அதிர ஆரம்பித்தார்.

50

'கண்ணுக்குப் புலனாகாதது ஒலி. இதை சிறைபிடிக்கும் வழிவகைகள் இன்று வந்துவிட்டன.

நிரந்தரமாக ஒலியைச் சிறைபிடிக்க கண்டு பிடிக்கப்பட்ட ஒரே வழிதான் எழுத்து.

எந்த ஒரு எழுத்தை உரக்க வாசித்தாலும், மனதுக்குள் வாசித்தாலும் அது ஒலியாகத்தான் உருவகிக்கிறது. அந்த ஒலிதான் உயிர்களின் இயக்கத்துக்கே காரணமாகவும் உள்ளது.

அப்படிப்பட்ட ஒலியானது மனிதர்களிடம் மொழி சார்ந்த உரையாடலாய், பின் இனிமை சார்ந்த இசைப் பாடல்களாய், அதற்கும் பின் இறை யைத் தொடர்பு கொள்ள உதவும் மந்திரங்களாய் மூன்று நிலைப்பாட்டில் உள்ளது.

இதில் மந்திர சப்தத்தில் உறைந்திருக்கும் சிவமூர்த்தம் ஒன்று உண்டு. அதைத்தான் மஹா சதாசிவமூர்த்தம் என்று வேத புராணங்கள் கூறுகின்றன.

உயிர்களில் மேலான உயிரினம் மனித இனமே என்பது ஆய்வாளர்கள் கருத்து. ஏனென்றால், இந்த ஒரு உயிரினம்தான் ஆறாவது அறிவு கொண்டு அனைத்தையும்(தான் உட்பட) அறிந்து கொள்ள வும், புரிந்து கொள்ளவும் துணை செய்கிறது.

மனிதன்தான் நான் யார்? என்று கேட்டுக் கொண்டவன்; பூமியில் இருந்து கொண்டே ஆகாய வெளியையும் அறிந்து அதில் கிரகங்கள் உலா வருவதை உணர்ந்தவன். அதுமட்டுமா? அந்த கிரகங்கள் மனித வாழ்வைப் பலவிதங்களில் கட்டுப் படுத்துவதையும் உணர்ந்து அதன் பொருட்டு

ஜோதிட சாஸ்திரம் என்கின்ற ஒன்றையே உண்டாக்கியவன்.

இப்படியே தொட்டுத் தொட்டுச் சென்ற அவனது அறிவாற்றல் இறுதியாக இறை சிந்தனையில் போய் நின்றது.

ஒரு நாற்காலி இருந்தால் அதைச் செய்த தச்சன் ஒருவன் இருக்கிற மாதிரி, நான் இருக்கிறேன் என்றால் என்னை செய்த ஒருவனும் இருக்க வேண்டும் என்கிற சிந்தனையில் விழுந்து இறுதியில் தன்னைப் படைத்தது இறைவன் என்று ஒரு முடிவுக்கு வந்தான்.

அந்த இறைவனுக்கும் ஒரு வடிவம் தந்தான். அது அவனது மனித வடிவத்தில்தான் இருந்தது. மற்ற உயிரினங்களிடம் இதற்கு எதிர்ப்பு இல்லை. ஏனென்றால் அவை மனிதனைப் போல 'நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கே போகப் போகிறேன்' போன்ற கேள்விகளை எல்லாம் கேட்டுக்கொள்ளவில்லை.

உயிரினங்களில் மேலான உயிரினமான மனிதனைப் போன்றுதான் இறைவனும் இருக்க வேண்டும் என்று கருதிய மனிதன் இறை உருவங்களை தன்னைப் போன்ற வடிவில் உருவாக்கினான். சற்றே கூடுதலாக நான்கு முகங்கள், பன்னிரு கரங்கள், நெற்றியிலும் ஒரு கண் எனறு மனித வடிவத்தின் இயல்புக்கு மாறுபட்டு கூடுதலான வலித்த ஒரு உருவாகப் படைத்தான் என்றாலும் மிகையில்லை.

இதெல்லாம் ஓரளவு நடுவு நிலையோடு சிந்திப்பவர்கள் கூறும் கருத்துக்குள்.

இல்லையில்லை... பல ஞானியர் கண்களுக்கு இறைவன் தெரிந்திருக்கிறான். அதை வைத்தே அவன் வடிவமானது ஆலயங்களில் இப்பொழுது இருப்பதுபோல உருவாக்கப்பட்டது என்றும் ஒரு சாரார் கூறுகிறார்கள்.

நமது புராணங்கள், வேத நெறிகள் இம்மட்டில் தெளிவாக அறுதியிட்டு இறைவடிவம் பற்றி குழப்பமே இல்லாமல் பல தகவல்களை அளித்துள்ளன.

அதில் சிவபிரானை சடைமுடியன் என்றும், புலித்தோல் அணிந்தவன் என்றும், முக்கண்ணன் என்றெல்லாமும் அவை கூறுகின்றன.

மனிதர்களில் பக்தி உணர்வுள்ளவர்கள் இவற்றை எதிர்வாதம் செய்யாமல் ஒப்புக் கொண்டும் விட்டனர். எதிலும் தன்புலன்களையே நம்புகின்றவர்களோ இந்த கருத்தை ஒப்புக்கொள்ளத் தயாரில்லை.

இறை சிந்தனை இன்று இப்படித்தான். இப்படியும் அப்படியுமாக உள்ளது.

இதனூடே சிவ பராக்கிரமம் சிவமானது உருவ வடிவாக மட்டுமில்லை. சப்த வடிவாகவும் உள்ளது. அது 'ஓம் நமச்சிவாய' எனும் பஞ்சாட்சர மந்திர வடிவத்திற்குள் உறைந்துள்ளதைக் கூறுகிறது.

இன்னும் சொல்லப் போனால் 'ஓம் நமச்சிவாய' என்கிற எழுத்து வடிவத்தில் இல்லை 'ஓம் நமச்சிவாய' என்று நாம் சொல்கிற பஞ்சாட்சர ஒலி வடிவுக்குள் அது உறைந்துவிட்டது.

ஒருவர் தன்னுள் சிவம் புக வேண்டும், தான் சிவமாதல் வேண்டும் அல்லது இறையை உணரவேண்டும் என்பதற்காகவே 'ஓம் நமச்சிவாய' அருளப்பட்டதாக புராண நெறிகள் கூறுகின்றன. அதாவது 'ஓம் நமச்சிவாய...ஓம் நமச்சிவாய' என்று உச்சரிக்கும் தோறும் மஹாசதாசிவமூர்த்தி அந்த ஒலி வடிவின் மூலம் நம்முள் நிறைகிறார். சிவம் உள்ளம் புகுந்தால்தான் கள்ளம் முதல் பள்ளம் வரை எல்லாம் மாறி மாசமருவில்லாத நித்ய இன்பத்திற்குள் மனிதன் விழுந்து விடுவானே...

கர்ம வினைகளால் சூழப்பட்ட அவர் வாழ்க்கைப் பாதையே அவன் சிவமாவதால் மாறிவிடுமே!

ஆம்...! சிவம் பஞ்சாட்சர ஒலி வடிவில் திகழ்கிறது. நாம் ஒவ்வொரு முறை உச்சரிக்கும் போதும் நாமே சிவமாகிறோம்.

நாமே சிவமானால் என்னாகும்?

இடையறாத பஞ்சாட்சரம் ஜெபிப்பவர்கள், நித்ய சிவமாவார்கள். கிரக செயல்பாடுகள் கர்ம வினைகள் இதனால் ஸ்தம்பிக்கும்.

ஸ்தம்பிக்க வேண்டும். தான் படைத்த உயிர்கள் எல்லாம்மிகச் சுலபமாக கடைத்தேற வேண்டும் என்றே அந்த மகாசிவன் ஒலியிலும் உறைந் திருக்கிறான்!'

ஆன்மலிங்கேஸ்வரர் ஆலய திருச்சன்னதியில் அந்த சித்த புருஷர் நாராயண அழகன் நிமித்தம் அவனுக்கு பதில் சொல்வதுபோல நீ நேரில் வராமல் போய்விட் டாயே, வந்திருந்து மிலேச்சர்களை அடக்கி ஒடுக்கத் தவறிவிட்டாயே என்பது போன்ற விசாரத்துடன் வருந்தி நிற்கும் பொழுது அங்கே எழும்பிய சிரிப்பொலி ஒரு வினாடி அந்த சித்த புருஷரைத் திகைக்கவிட்டது.

யார் சிரிப்பது?

அவர் பார்வை சுற்றிச் சுழன்றது. சிரிப்பொலியோ இடிமுழக்கம் போல கேட்டது. அவருக்கு அச்சமாகி விட்டது.

“இறைவா! இது என்ன சோதனை... யார் இப்படிச் சிரிப்பது...இதற்கு பொருள்தான் என்ன?”- என்று உரக்கவே கேட்டு ஆன்மலிங்கேஸ்வரர் முன்னால் கைகளைக் கூப்பினார். அப்பொழுது ஒரு அசரீரி...

''சித்தனே... உன் மனதை ஒரு நிலைப்படுத்தி யாதொரு எண்ணங்களும் இன்றி அமர்வாயாக, உன் வினாக்களுக்கு உனக்குள்ளேயே விரிவான பதில் தரு வோம்...” என்கிற அந்த குரலொலி அந்த சித்த புருஷரை அடுத்த கணம் பத்மாசனத்தில் அமர்த்தி அவரின் கண்

களையும் மூடச் செய்தது. உள்ளே அவரது விசாரங் களுக்கான விடையும் ஒலி அலையாய் பரவத் தொடங் கியது.

‘ஆலயம் என்பது ஒரு சாதனம். சாதனம் என்பது ஒருவனுக்குப் பயனளிக்கக் கூடியதாகவும் இன்னொரு வருக்கு எதிரான ஒன்றாகவும் தெரிகிறது. இரண்டுமே மாயைதான். மாயை என்பதை உணர்த்துவதே சாதனத் தின் கடமை.

ஒரு கத்தியானது எப்படி வேண்டுமானால் பயன்பட லாம். அது பயன்படுத்துவதைப் பொறுத்தது. ஒரு உயிரைப் போக்குவதாலோ, இல்லை துருப்பிடித்துப் போவதாலோ அதற்கு பிரத்யேகமாக எந்த நிறைபாடும் குறைபாடும் இல்லை. அதைக்கொண்டு வினை புரிப வர்களுக்குள்தான் எல்லாம் ஏற்படுகிறது.

என்னை உணரவேண்டி எழுப்பப்பட்ட ஆலயத்தில் ஒருவன் என்னை உணர வழியே இல்லை என்று எண்ணுகிறான். என்னை உணர அதுவே வழி என்றும் பலர் எண்ணுகின்றனர். இது இரு அணிகளின் விளையாட் டைப்போன்றது. ஒருவர் மாற்றி ஒருவர் ஒவ்வொரு முறை வென்றபடி இருப்பர். இரு அணிக்கும் சம அளவு நியாயம் வழங்குவதே நடுவனாகிய இறைவன் பணி யாகும். ஒருவரை அடக்கி ஒருவரை உயர்த்தி இடையில் என்னை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கெதற்கு? விளையாட்டில் நடுவர்கள் ஜெயிக்கலாமா?

எங்கும் எப்பொழுதும் ஆன்மபலமே வெல்லும். அதுவே எண்ணத்திற்கு வலிமை தருவது. செயல்பாட் டிற்கும் துணை செய்வது.

ஆலயத்தை அழிக்க நினைப்பவர்கள் அங்கே இறை வன் இல்லை என்று உறுதியாக நினைக்கிறார்கள். அவர் கள் உறுதி முன்னால், இருக்கிறது என்று நினைப்பவர்

களின் உறுதி குறைவாகவே உள்ளது. இப்படி ஒரு நிலையில் அது அழிந்தே தீரும். உண்மையில் அழிவு என்று ஒன்று இல்லை. அது ஒரு மாற்றம்.

மாயைக்குள் இருந்து பார்க்கும் பொழுது இந்த மாற்றம் அழிவாகத்தெரியும். மாயைக்கு வெளியில் வந்து பார்த்தால் இது மாற்றம் என்பது மட்டுமல்ல அதி லும் ஒருபொருள் இருப்பது புரியும். அகண்ட இருளில் தான் ஒளிப்புனலுக்கு பணி இருக்க முடியும். துன்பம் இருந்தாலே இன்பத்தை உணரமுடியும். ஒன்றே இரண் டாக இருந்தாலே அந்த ஒன்று தன்னை அறியஇயலும்.

இரண்டில் ஒன்று அழிவு சக்தியாய் இப்பொழுது வந்திருக்கிறது. இன்னொன்று பதிலை காலத்தால் கூறும்.

மாயையில் சிக்கியவர்கள் ராட்டினத்தில் சுழலுபவர் களைப் போன்றவர்கள். ஓரிடத்தில் நிலைத்திருக்க முடியாது.

அவர்களின் உயிர்ப் பயணத்தில் அவர்கள் மீண்டும் இந்த ஆலய வாசலுக்கே வருவார்கள். அவர்களின் உயிர்வட்ட சுழற்சியில் அது என்று நிகழும் என்பதை வான் கணித வழி அறியலாம்.

அறிந்த ஒருவனும் வருவான். அதை எழுதியும் வைப்பான்.

அஷ்டமாசித்துவால் பஞ்ச பூதங்களை வென்று உயிர்ப்பயணத்தில் கிரகங்களின் பிடியில் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத நீ இதை உணர அதுவரை காத்திரு.

அந்த நாளும் வரும்.

அதை எனது பேரருளாய் ஊரும் உலகும் கொண்டா டும்.

ஆனால், உண்மை அதுவல்ல.

மாயைக்குள் இருந்து பார்க்கும் பொழுது வினைச் செயல்கள் இப்படித்தான் தெரியும். ஒரு நேரம் சிதைவு இன்னொரு நேரம் ஆக்கம். இரண்டுமே மாயை!

அதை உணரும்போதே நான் உண்மையில் வசப்படு வேன். அதுவரை அந்த மாய விளையாட்டை ரசிப்பவர் களில் நானும் ஒருவன்!

சித்த புருஷரின் மனதுக்குள் ஒரு பிரவசனம் போல ஒலித்த குரல் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தது போல அடங்கியது.

அவரும் கண்விழித்தார். இப்பொழுது மனதில் வருத்த மில்லை. கவலையுமில்லை. சலக்கமில்லை. ஒரு தெளிவு.

நிகழ்ந்து கொண்டிருப்பது ஒரு மாற்றம் என்கிற தெளிவு. 'இறை குரல் சொன்னதுபோல இது கூட தற் காலிகமே... இதுவும் மாறும்... மிகச் சிறப்புடன் மாறும். அதுவரை காத்திருப்போம்' என்று தனக்குத் தானே நினைத்துக்கொண்டு அங்கிருந்து விலகி வெளிவந்தார். மிலேச்ச படை அந்த ஆலயத்தையும் சுற்றி வளைத்திருந் தது.

அவரது அஷ்டமா சித்துக்களில் ஒன்றான கூடுவிட்டு கூடு பாயும் உத்தி அவருக்கு துணை செய்தது. கோபுரச் சருக்கத்தில் ஒரு கழுகு அமர்ந்திருந்தது. மிலேச்சர்களில் ஒருவன் அதைப்பார்த்து அம்பு விட்டதில் அது உயிர் விட்டபடி கீழே விழ சித்த புருஷர் தன் ஆன்மாவை அதனுள் புகுத்தியவராக வானம் ஏறி பறக்கத் தொடங்கினார்.

ஆலய வெளியில் அவரது உடல்கிடந்தது.

மிலேச்சர்கள் யுத்தத்தில் அவர் இறந்துவிட்டார் என்று கருதினர். கழுகுக்குள் புகுந்திருந்த சித்தர் நடுவானில் இருந்தபடி கீழே மரகதலிங்கபுரத்தைப் பார்த்தார். இரு ஆலயங்களும் தரை மட்டமாகிக் கொண்டிருந்தன.

பட்டரை, நாராயண அழகனை, ஜீவாவை, பிரதாபியைப் பார்க்க ஆசைப்பட்டு தாழப் பறந்தார்.

நாராயண அழகன் கோயில் பிரகார வெளியில் உயிர் நீங்கிய சடலமாகக் கிடந்தான். ஓடி ஒளியவில்லை. போராடித்தான் உயிர் விட்டிருந்தான். பிரதாபி உடல் குளத்தில் மிதந்தபடி இருந்தது. பட்டர் கண்களுக்கே படவில்லை. ஜீவாவும் கண்ணில் படவில்லை.

ஒன்றுமட்டும் புரிந்தது, இறைமூர்த்தங்கள் காப்பாற்றப்பட்டுவிட்டன. எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் மூர்த்தத்தில்தான் வெளிப்படுகிறான்.

அவனை எப்படியோ காப்பாற்றிவிட்டார்கள். அதாவது அந்த ஆலயத்தில் இறைவெளிப்பாடு கொள்ளை போகவில்லை. 'இறைவன் இருக்கிறான்' என்கிற நம்பிக்கை உள்ளவர்கள், 'அவனைக் காப்பதே நம்மை நாம் காத்துக் கொள்ள உள்ள வழி' என்று பக்தியால் தங்களையே தொலைத்துவிட்டார்கள். இனி இவர்களை அவனே வெளிப்பட்டு காத்திடவேண்டும்.

கல்லுக்குள் தேரைக்கு உணவு வைத்தவனுக்கு அது தானா பெரிய விஷயம்? காலத்தால் அந்த மாயாஜாலம் தான் நிகழப் போகிறதே...?

சித்த புருஷர் கழுகு சொரூபத்தில் பறந்தபடியே எண்ணினார். அப்படியே சிரஞ்ஜீவி மூலிகை இருக்கும் வனப்பகுதிவரை சென்று அம்புக்காயம் பட்ட உடற்பகுதியில் அது ஆறும் வண்ணம் புரண்டெழுந்தார். இனி அந்த தேகத்திற்கு பஞ்சபூதங்கள் உள்ளவரை நரை இல்லை. மூப்பு இல்லை. அது காலத்தை வென்று பறந்தபடியே இருக்கும்!

✠ ✠ ✠

நள்ளிரவு கடந்துவிட்ட நிலை!

உள்ளே அடைபட்டுக்கிடந்த ஜீவா ஒளிப் புள்ளியாகத் தெரிந்த எலியின் பின்னால் ஓடி அது புகுந்து சென்ற பாதை ஒன்றைப் பார்த்து விக்கித்து நின்றாள். அருகில் ஒரு பலகையில் ஏதோ எழுதப்பட்டிருந்தது.

'இது ஒரு தூர்ந்துபோன குகைப்பாதை, அரசு உத்தரவுப்படி மூடப்பட்டுள்ளது. முப்பதடி தூரம்கூட உள்ளே நுழைய இயலாது. ஆக்சிஜன் இல்லாத இடம். யாரும் பிரவேசிக்கலாகாது!' என்று எழுதப்பட்டிருந்த அந்த போர்டு கூடநிறைய எழுத்துக்கள் உதிர்ந்து ஒரு மாதிரிதான் இருந்தது.

அப்பொழுதைய நிலையில் ஜீவா அதைப் பொருட்படுத்தாமல் குகைப்பாதையின் முகப்புக் கதவை அசைத்து உள்ளே நுழைய ஆரம்பித்தாள்!

51

'உண்மையில் உலகம் எப்போது தோன்றியது என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாது. அனுமானமாகக் கூறலாம்.

இன்று 600 கோடிக்கும் மேலான மனிதர்களும், பல ஆயிரம் கோடிகளில் மற்ற ஜீவராசிகளும் இருக்கின்றன. இவை இன்று பல்கிப் பெருகும் விதத்தையே அடிப்படையாக வைத்து பின்னோக்கிச் சென்று உலகின் முதல் மனிதன், ஜீவராசிகளில் முதன்மையானதை ஓரளவு தொட்டு நிற்க இயலும்.

அப்படியொரு ஆரம்ப நிலையை அவடந்து நிற்கும் போதும் ஒரு கேள்வி. அந்த முதல் மனிதனைப் படைத்தது யார்? முதல் உயிரினம் எதுவாயினும் இந்த மண்மேல் அது இரைதேடியும், சுவாசித்தும், நீர் பருகியும் ஜீவிக்க வேண்டிய ஒரு ஆரம்பத்துக்குக் காரணம் எது? என்கிற கேள்வி.

அநேகமாக ஒவ்வொரு மனிதனும் தன் வாழ் நாளில் ஒரு முறையாவது இதுகுறித்து யோசித் திருப்பான்.

உலகின் உண்மையான கேள்வி. கேள்வி களுக்கெல்லாம் கேள்வி.

இதற்கான விடையில்தான் மனிதன், உலகம், உயிர்கள் பற்றிய சகலத்துக்குமான தெளிவு பதுங்கியுள்ளது.

இம்மட்டில் பற்பல விடைகள்.

குரங்கில் இருந்தே மனிதன் உருவாகியிருக்க வேண்டும் என்ற டார்வின் தத்துவமும், ஆதாரம்-ஏவாளிடம் இருந்து மனிதர்கள் தோன்றியதாகக் கூறும் பைபிளின் கூற்றும், இம்மட்டில் கேள்வி களுக்கெல்லாம் கேள்வியான அந்தக் கேள்விக்கு விடையாக இருப்பினும் அதை முழுமையாக ஏற்க முடியவில்லை.

குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்றால் மனிதனை ஒத்த குரங்கினமே இன்று இருக்கக்கூடாது. ஆனாலும், இன்றும் மனிதக் குரங்கினம் இருக்கவே செய்கிறது. இயற்கை மாற்றங்களிடம் அது மட்டும் எப்படி அப்படியே மிஞ்சி நீண்டது என்கிற கேள்வி எழுகிறது.

ஆதாம்-ஏவாள் பற்றி சிந்திக்கும்போது இதுபோலப் பல கேள்விகள்...

பொதுவில் உயிர்கள் அவற்றின் செயல்பாடுகள் பிரமிப்பையே ஏற்படுத்துகின்றன.

கைகள் இன்றி உண்ண இயலுமா? கால்கள் இன்றி நடக்க முடியுமா? என்ற கேள்விகளுக்கு பல மிருகங்களிடம் பதில் கிடைக்கிறது. பட்சி களுக்கு ஏது கைகள்? அவை உண்டு வாழ்வதில் லையா? பாம்புக்கு ஏது கால்கள், அது ஊர்ந்து நகர்வதில்லையா?

எது எப்படி இருப்பினும் ஆதாரமாக நிலம் என்று ஒன்று வேண்டும் எனும்போது நீரில் நீந்தி வாழும் மீனுக்கு எதற்கு நிலம்? என்று கேளாமல் கேட்கிறது.

போகிறது...? நீர், நெருப்பு என்று எதுவும் இன்றி, காற்றும் இன்றி ஒன்றால் உயிர் வாழ இயலாது என்றாவது முடிவுக்கு வரும்போது கல்லுக்குள்ளே ஒரு தேரை வாழும் நிலை நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது.

எங்கும் நம் மூளைத் திறத்தால் ஒரு முடிவுக்கு வரவே இயலவில்லை. விஞ்ஞானம் தன் ஆய்வைத் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இன்று உயிரினம் பற்றி ஒரு கருத்து இருந்தால் அது இன்றைய தினத்துக்குத்தான் பொருந்தும். நாளையே அது மாறலாம். 'வியப்பு, திகைப்பு, குழப்பம்' இவற் றைத் தருவதே உலகின் இயல்பாக இருக்கிறது.

ஒரு பூமிப் பந்திலேயே இத்தனை என்றால் ஆகாயமும் அதில் தெரியும் மற்ற கிரகங்களும் எத்தனை ஆச்சரியங்களை, அதிர்ச்சிகளைக் கொண்டவையாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லை.

ஒரு எறும்பானது இமயம் ஏற முயற்சிப்பது போன்றதுதான் நம் நிலை.... இருந்தாலும் மனித இனம் களைத்து விடவில்லை.

ஒன்று மட்டும் உறுதி. கோடானு கோடி உயிர் களுக்கு மூலாதாரமான ஒன்று இருந்தே தீர வேண்டும்.

அந்த ஒன்றை 'இறைவன்' என்கிறோம். அந்த இறைவன் வேறு யாருமில்லை. அது சிவம்தான் என்கிறது சைவ நெறிமுறை.

ஒவ்வொரு யுகம்தோறும் சிவமே அநேக கோடி பிரம்ம, விஷ்ணு, ருத்ரர்களாம் மும்மூர்த்தியரையும் தமது அங்கத்தினின்றும் சிருஷ்டித்து மீண்டும் தமக்குள்ளே ஒடுக்கிக் கொள்கிறார் என்கிறது.

இப்படி விஷ்ணு, பிரம்மா, ருத்ரர்களைத் தம்முள் ஒடுக்கிய கோலமாய் திரிபாத திரிமூர்த்தி கோலம் விளங்குவதாக அது கூறுகிறது!

வெளியே படித்த எச்சரிக்கையை மீறிக் கொண்டு துணிச்சலுடன் அந்த சுரங்கப் பாதைக்குள் நுழைந்த ஜீவா, ஒரு அளவுக்கு மேல் செல்ல இயலாமல் தடுமாறி னாள்.

மூச்சையடைத்து... இருந்தாலும் அவளது மூர்க்க குணம், ஒரு எலியால் முடியும்... என்னால் முடியாதா என்று எண்ண வைத்து உள்ளே தள்ளியது.

தயாராகக் கொண்டு வந்திருந்த டார்ச் லைட்டின் உதவியால் இருட்டைக் குடைந்தாள். பாதை சரிவாகக் கீழிறங்கியது. நீண்ட கருங்கல் படிவரிசை... வளைவாகத் திரும்பியெல்லாம் இறங்கியது. ஒரு விநாடி கைவசம் கொத்துக்கொத்தாய் நகைகளுடன் தலையில் கிரீடமுடன் அவள் அங்கு துள்ளிக் குதித்து இறங்குகிற மாதிரியும் ஒரு பிரமை தட்டியது.

சட்டென்று நின்றாள்.

இதென்ன நினைப்பு... கிட்டத்தட்ட ராஜ்நாராயண் சொன்னது போலவே...?

இது அவனால் வந்த பாதிப்பா.... இல்லை? கேள்வி நெருக்கியது. நசுக்கியது. ஒரு ஆச்சரியம் போல மூச்சுத் திணறல் இல்லை.

திரும்பத் திரும்ப கை நிறைய நகைகளுடன் குறிப் பாக ரத்னக் கற்கள் பதிக்க ஒட்டியார்ணம், ஆயிரத்தெட்டு காசுகள் கொண்ட காசுமாலை. தலையில் ஒரு கிரீடம்... இந்த மூன்றும் ஏதோ வெகுநேரம் கவனித்து ஒரு நகைக் கடையில் வாங்கியதுபோல மனதில் முண்டியது.

கால்கள் என்னவோ மளமளவென்று கீழிறங்கியது... ஒன்று... இரண்டு... மூன்று... வளைவுகளில் பாதை

நீண்டு கொண்டே போனது... ஒரு ஆலயத்தில் இப்படி ஒரு சுரங்கப் பாதையா....? ஆச்சரியம் மனசைக் கிள்ளியது.

இங்கே இதற்குமுன் யாரோ வந்திருக்கிறார்கள்... இதற்கு மேல் முன்னேற முடியாமல் உயிரை விட்டிருக் கிறார்கள். யாராக இருக்கும்? கேள்வி உள் எழும்பிய மறுநொடி அவளே சாவது போல ஒருகாட்சி அவளுக்குள்.

மீண்டும் அவளுக்குள் குழப்பம்.

சிறிதுநேரம் அமைதியாக நின்றவள் அருகில் இருந்த ஒரு பாறைத் திண்டின் மேல் ஏறி அந்த அத்தாணிப் பகுதியைப் பார்த்தாள்.

கண்ணில் மின்னல் வெட்டியது போல சில நொடி களுக்கு முன்னால் அவள் மனக்கண்ணில் தெரிந்த ஒட்டியாணம், காசுமாலை, கிரீடம் மூன்றும் மூலைக்கு ஒன்றாகக் கிடந்தன.

இது எப்படி சாத்தியம்? நான் இங்கே இப்போதுதானே வந்திருக்கிறேன்... இப்போதுதானே இந்தப் பொருள்களை யும் பார்க்கிறேன். எப்படி இவை முந்திக்கொண்டு என் மனக்கண்ணில் தெரிந்தன?

கண்ணில் பட்ட அந்த விலைமதிப்பில்லாத பொருள் களை எடுப்பதுகூட அவளுக்குப் பெரிதாகத் தெரிய வில்லை. தனக்குள் அது எப்படி முன்கூட்டியே தெரிந்தது என்பதில்தான் அவள் மனது பெரிய அளவில் குவிந்திருந்தது.

வெளியே காத்திருக்கும் ராஜ்நாராயண், கட்டாயமாகக் கடத்த வேண்டிய அந்த மரகதலிங்கம்... எல்லாமே மறந்து போயிற்று!

✠ ✠ ✠

கோயிலின் பிரகார வெளிப்பகுதி!

மதில் சுவரின் சிதைந்த பாகம் அருகே பூஜித்த அடையாளங்கள் ஒருபுறம். அதை அப்படியே தூர்த்தால் மதிலுக்கு வெளியே போக வழி கிடைக்குமா என்கிற யூகம் ஒருபுறமாக மதில் சுவற்றில் கை வைத்து அரசஞ் செடியையும் பிடுங்கிதூர எறிந்து விட்டு அந்த இடை வெளியைப் பார்த்த ராஜ்நாராயண் கண்களில் அகல் விளக்கின் சுடர் ஒளியில் உள்ளிருக்கும் மரகதலிங்கம் பட்டு இன்ப அதிர்ச்சியைத்தான் அளித்திருந்தது. அதை அப்படியே எடுத்துப் பார்த்தவன் மிரண்டு போனான்.

பச்சை மரகதக் கல்லால் ஆன வழவழப்பான லிங்கம். உள்ளேயே இருந்ததில் சற்றே பசலை பூத்திருந்த போதிலும் அங்கங்கே தெரிந்த மரகதப் பச்சைநிறம் அவனுக்கு அது விலைமதிப்பில்லாதது என்பதைப் புரிய வைத்தது.

அவ்வப்போது அவனுக்குள் எழும்பி அலைக்கழிக்கும் பழைய நினைவுகள் மட்டும் இப்போது தோன்றவே யில்லை.

மரகத நடராஜரைப் பதுக்கியது ஒரு இடத்தில் என்றால்... லிங்கத்தை இப்படிச் சுவரில் வைத்துப் பதுக்கி யிருக்கிறார்கள்.

போனமுறை ஒளிந்தபோது அந்த நடராஜ விக்ரகம் அகப்பட்டது. இந்தமுறை லிங்கம்... நானென்ன இவற்றைக் கண்டுபிடிப்பதற்காகவே அமெரிக்காவி லிருந்து வந்திருக்கிறேனா?

லிங்கத்தை ஒருபுறமாய் வைத்து விட்டு அப்படியே அமர்ந்து யோசிக்க ஆரம்பித்தான். மதில் சுவருக்கு அப்பால் பாரா செல்லும் போலீசின் விசில் சத்தம் ஒலிக்கத் தொடங்கி சற்று பயமூட்டவும் செய்தது.

ஏற்கெனவே ஒருமுறை ஒளிந்து தப்பியதே பெரும் பாடு! இந்த முறை இந்த லிங்கத்தோடு என்னைப்

பார்த்தால் நிச்சயம் இதெல்லாம் தற்செயல் என்று நம்ப மாட்டார்கள்.

'பேசாமல் திரும்ப உள்ளே வைத்து விட லாமா?' கேள்வியில் விழுந்து அல்லாடியவன், முதல் காரியமாக உள்ளே வைத்தான். பிடுங்கிப் போட்டிருந்த அரசஞ் செடியையும் கொண்டு வந்து திரும்பச் செருகி பழைய மாதிரியே அந்த இடத்தை மூடினான்.

அப்படியே நடந்து பிரதான சன்னதி வாசலுக்கு வந்து காற்றுக்குரலில், "ஜீவா... ஜீவா..." என்று கத்திப் பார்த்தான். பலமாகக் கத்திக் கூப்பிட பயமாக இருந்தது. கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஐந்தை நெருங்கி யிருந்தது.

ஐயோடா...

இன்னும் அரைமணி நேரத்தில் பட்டர் வந்து ஆலயக் கதவைத் திறப்பாரே...

பதற்றமானது...

பேசாமல் அந்தத் திருடர்கள் அன்று மரத்தில் ஏறி பிறகு சுவற்றுக்குத் தாவி அந்தப் பக்கமாக குதித்தது போல குதித்துக் தப்பிப்போமா?

உள்ளே இருக்கும் ஜீவா மாட்டிக் கொள்வாளே...?

மாட்டினால் மாட்டட்டும். ஆண் பிள்ளை போல அலட்டிக்கொண்டு திரிந்தாலே... இப்படித்தான். எண்ணச் சலனங்களுடன் அங்கிருந்து நடத்தவன் வெளிப்பிரகார வெளியில் மதிலை ஒட்டி வளர்ந்திருந்த வில்வ மரத்தடி யில் வந்து நின்றான்.

எப்படி ஏறுவது என்று தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்து ஒருவழியாக மேலேறினான். பழக்கமில்லாததால் சரிந்து சரிந்து உடம்பு கீழ் இறங்கினாலும் யாராவது பார்த்து விட்டால் என்னாவது என்கிற பயம் தொடர்ந்து அவனை மேலே தூக்கி விடடது. ஒரு வழியாக மரத்தில் இருந்து

மதிலுக்குத் தாவியபின் கீழே பார்த்தான். தலைசுற்றியது. கிட்டத்தட்ட இருபதடிக்குக் கீழ் இருந்தது வீதி.

குதித்தால் எலும்பு முறியலாம் என்றது உள்ளுணர்வு, படபடவென்று மோட்டார் பைக் ஒன்று எங்கோ வரும் சத்தம் வேறு கேட்டது.

அது... அது இன்ஸ்பெக்டர் குமாரவேலின் மோட்டார் பைக்கேதான்.

மதில்மேல் தன்னைப் பார்த்தால் அவ்வளவுதான். அந்தப் பயமே அவனை அங்கிருந்து பிடித்துத் தள்ளியது. 'தொபீர்' என்று குதித்தான். நல்லவேளை... அவன் பயந்தபடி எலும்பு முறிவெல்லாம் ஏற்படவில்லை. பைக் சத்தம் மிகச் சமீபத்தில் கேட்கவும் அப்படியே ஓடத் தொடங்கினான். கோயிலை ஒட்டிய குளத்தின் கரை தெரிந்தது. கரையை ஒட்டிச் சின்ன மதிலும், மதிலுக்கு அப்பால் குளத்தில் இறங்கும் படிகளும் இருந்தன. வெகு வேகமாக ஓடி மதில், தாண்டி அப்படியே படிமேல் அமர்ந்து மூச்சிளைத்தான்.

மோட்டார் பைக் ஒருவழியாகக் கடந்து முடிந்தது. அப்பாடா...!

பெருமூச்செறிந்தது.

தண்ணீர் குடித்தால் தேவலை என்று தோன்றவே படிகளில் இறங்கி நீர்ப் பரப்பை நெருங்கினான்.

படியில் அமர்ந்து தண்ணீரை அள்ளிமுகத்தில் அடித்துக் கொண்டான். பிறகு, குடித்தான். தாகம் அடங்கியது. படிகளில் ஏறி மேலேறினான். எதிரே சாலை விரிந்து கிடந்தது. நடக்க ஆரம்பித்தான். ஜீவா கதிதான் என்னாகுமோ என்று தோன்றியது. இருந்தாலும் அவள் சமாளித்து யார் கைகளிலும் அகப்படாமல் வெளியே வந்து விடுவாள் என்றும் நினைத்துக்கொண்டான்.

ஒருவழியாக இடிந்த கோயிலை அடைந்தபோது விடிந்துவிட்டது. கோயிலுக்குள் மயங்கிக் கிடந்த பாரதி அதிர்ச்சியளித்தாள். 'இவள் எங்கே இப்படி?' கேள்வியோடு அவளைத்தொட்டு உசுப்பினான். அவளும் எழுந்தாள்.

"அம்மாஞ்சி..."

"நீ எப்படி இங்க?"

"அது... அது... உங்களைப் பாக்கத்தான் வந்தேன். வந்த இடத்துல அப்படியே மயங்கிட்டேன்"

"மயங்கிட்டியா?"

"ஆமாம்... அட விடிஞ்சுடுத்தா.... ஐயய்யோ, ஆத்துல அப்பா அம்மால்லாம் தேடிண்டிருப்பாளே?"

பதறிக்கொண்டு எழுந்தாள்.

"ஆமா எப்ப நீ வந்தே?"

"நான் ராத்திரி ஒரு ஒன்பது மணிக்கெல்லாம் வந்து விட்டேன். ஆமா, நீங்க எங்க போய்ட்டேள்...."

"அது... அது... நான் அப்படியே வாக்கிங் போய்ட்டேன்"

"ஆமா, எங்க அந்தச் சித்தர்?"

"சித்தரா...?"

"ஐயோ இங்க இருந்தாரே...?"

"சித்தராவது... புத்தராவது...?"

"சரி நகருங்க, ஆத்துல என்ன நடந்துண்டுருக்கோ..."

பதைப்புடன் அங்கிருந்து ஓடினாள்!

வீட்டு வாசல்!

✠ ✠ ✠

பஞ்சக்கச்சம் சரசரக்க கோயிலுக்கு கிளம்பி கொண்டிருந்த பட்டர் எதிரில் பெருமூச்செறிய வந்து நின்றாள் பாரதி.

பட்டர் ஒரு அனல் பார்வை பார்த்தார். இரவு முழுக்க கண் விழித்த ரத்தச் சிவப்பு கண்களில்...

"அப்பா"

"எங்கே வந்தே?"

"அப்...பா"

"அப்படியே போய்டு. ஓடுகாலிகளுக்கெல்லாம் இனி இந்த வீட்ல் இடம் இல்லை."

"அப்பா என்னை மன்னிச்சுடுங்கோ. நான் அத்தானைப் பாக்கப்போன இடத்தில மயங்கிட்டேன்."

"மயங்கிட்ட உன்னை அவனும் கெடுத்துட்டான்னு அடுத்து சொல்லப்போறே.... அப்படித்தானே?"

"ஐயோ அப்பா, அப்படியெல்லாம் கிடையாது...."

"எதுவும் பேசாதே.... நீ இனி என் பொண்ணே கிடையாது. முதல் தடவை தப்பு பண்ணினப்பவே தண்டிச்சிருக்கணும் விட்டுட்டேன். அதான் இரண்டாம் தடவை அனுபவிக்கிறேன்.

-அவர் பேசிவிட்ட மாதிரி கோயில் நோக்கி வேகமாக நடந்தார். அன்னபூரணியும், தங்கை சந்திரிகாவும் அந்த அதிகாலை யுத்தத்தைக் கண்கொட்டாமல் பார்த்தபடி வீட்டு வாசற்படியில் நின்று கொண்டிருந்தனர். பாரதி அவர்களைப் பார்த்துவிட்டு "அம்மா... இந்த அப்பாவைப் பாரும்மா" என்றபடி திரும்ப ஓடி வந்தாள். அன்னபூரணிக்கும் கோபம்.

"வயசுப் பொண்ணுடி நீ... அப்படி என்ன அவன் மேல உனக்கு மோகம்... போய்டு அப்படியே..." பதிலோடு கதவை மடாரென்று சாத்தினாள்.

நெஞ்சில் குத்து விழுவது போலிருந்தது பாரதிக்கு. அப்படியே வாசல் திண்ணையில் அமர்ந்துவிட்டாள். உள்ளே அன்னபூரணியை முறைத்தாள் சந்திரிகா.

"என்னடி முறைக்கறே... உங்கக்காவைச் சொல்லிட்ட கோவமா?"

"பாவம்மா அக்கா."

"வெளியே தெரிஞ்சா நம்ம குடும்பமே பாவப்பட்ட குடும்பமாயிடும்டி"

"இப்ப நீ கதவைத்திறக்கப் போறீயா இல்லையா?"

"போய் உன் வேலையைப் பார்... உங்கப்பா முடிவுதான் என் முடிவும்..."

"ஆனா, என் முடிவு வேற... அக்காவுக்கு இடமில்லாத ஆத்துல எனக்கும் இடம் வேணா..."

-சந்திரிகா வேகமாக அங்கிருந்து விலகி தாழிட்டக் கதவைத் திறந்தாள். ஆனால், திண்ணையில் பாரதி இல்லை.

எங்கே போய்விட்டாள்?

✠ ✠ ✠

அந்த வைக்கோல் படப்பைச் சுற்றி ஊரே திரண்டிருந்தது. தஞ்சாவூரிலிருந்து ஒரு லாரி கொள்ளாதபடி போலீசும் எஸ்.பி.யும் வந்திருந்தனர்.

பத்திரிகைக்காரர்கள், போட்டோ கிராபர்கள்கூட வந்துவிட்டனர்.

குமாரவேலின் மோட்டார் பைக் ஒரு ஓரமாக நின்றபடி இருக்க, இரவு நடந்ததை எஸ். பி. யிடம் விளக்கிக் கொண்டிருந்தார் அவர். சில கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி. போலீசார் அங்கிருந்த செல் நம்பர்களைச் சேஸ் செய்து ட்ரை பண்ணிக்கொண்டிருந்தனர்.

குமாரவேலை நெருங்கிய ஒரு பத்திரிகைகாரர், "சார் நான் உங்களை ஒண்ணு கேக்கலாமா?" என்று ஆரம்பித்தார்.

"நீங்க யார்?"

"சென்னை டைம்ஸ் ரிப்போர்ட்டர்!"

"சென்னை டைம்சா, இங்கேதான் ஏற்கெனவே ஒரு லேடி ரிப்போர்ட்டர் இருக்காங்களே..." - அந்த ரிப்போர்ட்டருக்கு பகீர் என்றது.

"எங்க பத்திரிகையில லேடி ரிப்போர்ட்டரே கிடையாதே..."

"அப்ப இங்க இருக்கிற ஜீவாங்கிற லேடி..."

"ஜீவாவா?"

"யெஸ்.. அவங்க பேர் அதுதான். இப்பக்கூட இங்கதான் இருக்காங்க."

"சாரி சார்.... அவங்ககிட்டையே அவங்க எந்தப் பத்திரிகைன்னு நல்லா கேளுங்க..."

"கேக்கறேன்..." -குமாரவேல் சொல்லி முடிக்க, கோயில் பட்டரின் உதவியாளனாக இருக்கும் ராஜாமணி மூச்சிறைக்க ஓடி வந்தபடி இருந்தான்.

"சம்திங்ராங்... அவர் எதுக்கு ஓடி வரார்?" - எஸ். பி. கேட்க, ராஜாமணியை எதிர்கொள்ளத்தயாரானார் குமாரவேல்.

"சார்... சார்... கோயில்ல... அம்பாள் சன்னதிதிறந்துருக்கு. அதேநேரம் அம்பாள் மேல புதுசு புதுசா நகைகள். எல்லாம் அந்தக் காலத்து நகைகள்...!"

"என்ன சாமீ சொல்றீங்க..."

"வாங்கோ... வந்து பாருங்கோ தெரியும்."

-அடுத்த நொடியே ராஜாமணியோடு ஒரு ஜீப்பில் குமாரவேலுவும் எஸ்.பி.யும் கோயிலை நோக்கிச் சீறினர்.

✠ ✠ ✠

தனியாக அமர்ந்திருக்க என்னவோ போல இருந்தது ராஜ்நாராயணுக்கு. பிரஷ் செய்து விட்டு ஒரு காபி குடிக்க வேண்டும் போலிருந்தது. அதே நேரம் ஜீவாவுக்கு என்னாயிற்றோ என்றும் கவலை... ஒன்றுமே தெரியாதது போல கோயில்வரை போய் பார்த்து விட்டு வரலாமா?

புறப்பட்டவன் எதிரில் ஒரு புயலைப்போல வந்து நின்றாள் சந்திரிகா.

"என்ன சந்திரிகா?"

"அம்மாஞ்சி, அக்கா இங்க வந்தாளா?"

"இல்லையே... அவ உங்காத்துக்குத்தானே போனா?"

"அக்கா வந்தா... ஆனா, அப்பா துரத்தி விட்டுட்டா. திரும்பகோவிச்சுண்டு கிளம்பினா. எங்க போனான்னே தெரியல...."

"அப்படியா?"

"அங்க கோயில்ல என்னடான்னா அம்பாள் சன்னதியில அந்தக் காலத்து நகைகளோட அம்பாள் தெரியறதாச் சொல்லி ஊரே கோயில்லதான் இருக்கு. அப்புறமா ராத்திரி ஒரு திருட்டுக் கூட்டத்த போலீஸ்காரா சுத்தி வளைச்சுப் பிடிச்சிருக்காளாம்."

சந்திரிகா செய்திகளை மளமளவென்று அடுக்கினாள்.

-ராஜ்நாராயணுக்கு பொறுமை போய்விட்டது. சந்திரிகாவுடன் ஓடினான்.

✠ ✠ ✠

உண்மைதான்!

கோயில் முகப்பில் ஜீப். ராஜ்நாராயண் அங்கே சென்ற நேரம் ஒரு கையில் விலங்குடன் ஜீவாவை அதில் ஏற்றிக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் குமாரவேல்.

"சார்..."

"வாங்க சார்... என்னடா இவங்கள அரஸ்ட் பண்றோமேன்னு பாக்கறீங்களா? இவங்க ப்ரஸ் ரிப்போர்ட்டர் இல்ல. அந்தப் பேர்ல இந்தக் கோயிலைக் கொள்ளையடிக்க வந்த குரூப்பைச் சேர்ந்தவங்க இவங்க. உங்களைப் பார்க்கத்தான் அங்க வரதா இருந்தோம். நீங்களே வந்துட்டீங்க. ஏறுங்க ஜீப்ல."

"நான் எதுக்கு இன்ஸ்பெக்டர்?"

"ஏறுங்க சொல்றேன். உங்க திருட்டுப் போன சூட்கேஸ் கிடைச்சுடுச்சு ராஜ்நாராயண்."

"அப்படியா...?"

"கேள்வி பிறகு... நிறைய என்கொயரி பண்ண வேண்டியிருக்கு... கமான்"

"அதுக்கு முந்தி இன்னொரு முக்கியமான விஷயம்."

"என்ன ராஜ்?"

"பாரதியைக் காணல"

"இதென்ன புதுசா..."

"பட்டர் திட்டினதால எங்கேயோ கோவிச்சுண்டு போய்ட்டா... அவ தப்பா ஏதாவது பண்ணிக்கப் போறா."

ஜீவாவைப் பார்த்தான் ராஜ்நர்ராயண்.

"ஜீவா... நீயா இப்படி?"- அவள் காதில் மட்டும் விழுகிற மாதிரி கேட்டான்.

"இனி எதைப் பத்திப் பேசறதுலையும் அர்த்தமில்ல ராஜ். ராத்திரி எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அசாதாரணமானவை. திருடத்தான் வந்தேன். ஆனா, எடுத்துக் கொடுக்கறவளா மாறிட்டேன். நகைகளோட தப்பிக்க முடியாதுன்னு அம்பாளுக்கு பூட்டிட்டு பட்டர் கதவைத்திறக்கும் போது நைசா நழுவிட முயற்சி செய்தேன். அந்த இடிஞ்ச கோவில் கழுகால எல்லாம் கெட்டுப் போச்சு. அது கண்ணைக் கொத்தற மாதிரி பறந்து வந்து என்னை

அலற விட்டுடுச்சு. பட்டரும் பாத்துட்டார். இப்ப இங்க இப்படி உக்காந்திருக்கேன். நீ ஆரம்பத்துல இருந்தே சொன்ன பல விஷயங்கள் உண்மைல மிராகிளான விஷயங்கதான். இந்த கோயிலுக்குன்னு ஒரு சக்தி இருக்கு. அதோட டைரக்ஷன்லதான் எல்லாரும் இயங்கிக்கிட்டிருக்கோம். அதுல எனக்கு சந்தேகமில்லை"

-ஜீவாவின் விளக்கம் ராஜ்நாராயணை அப்படியே கட்டிப்போட்டுவிட்டது. இரவில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை மறைப்பது ஏனோ நியாயமாகப்படவில்லை.

"மிஸ்டர் குமாரவேல்... ஜீவா இப்படிப்பட்டவங்கறது எனக்குத் தெரியாது. ஒரு பிரஸ் ரிப்போர்ட்டரா கோயிலை ஆராயறதுக்காக என் உதவியைக்கேட்டா. ராத்திரி நானும் இவகூட இங்க ஒளிஞ்சிருந்தேன். ஆனா, இவ ஒரு இடத்திலையும் நான் ஒரு இடத்துலயுமா இந்தக் கோயிலில் இருந்தோம். எப்படியாவது வெளியப் போயிடணும்னு எனக்குள்ள ஒரு அர்ஜ் ஏற்பட்டப்பவே கோயிலைச் சுத்திவந்தேன். அப்ப என் கண்ணுல இன்னொரு அதிசயமான விஷயமும் பட்டது..."

"மைகாட்... என்ன அது?"

"வாங்க நேர்லையே காட்டுறேன்..."

-ராஜ்நாராயண் அந்த அரசஞ்செடி முளை விட்டிருந்த ஈசான்ய மூலை நோக்கி நடந்தான். அரசஞ் செடியைப் பிடுங்கி எறிந்துவிட்டு உள்ளே கையை விட்டு அந்த மரகதலிங்கத்தை வெளியே எடுதுக் காண்பித்தான். அடுத்த நொடி... 'ஹர ஹர மஹா தேவா... என்ற உணர்ச்சி மிகுந்த கோஷம். நம்ப முடியாமல் குமாரவேலைப் பார்த்தார் எஸ்.பி.

"என்னய்யா... ஒண்ணொண்ணா வெளிய வந்துக்கிட்டிருக்குது. இன்னும் ஏதாச்சும் பாக்கியிருக்குதா?"

"இருக்கு சார்... அம்பாளுக்கும் மரகதக்கல்லுல ஒரு விக்ரகம் இருந்துருக்கு. அதுவும் கிடைச்சுட்டா இந்தக் கோயிலைப் பத்தி தீட்சதர் சாமி சொன்ன எல்லாமே நடந்து முடிஞ்ச மாதிரிதான்...."

"ஆமாம்... அவர் எங்க... அவரைக் காணோமே..."

"சார்... இந்த களேபரத்துல பாரதிய மறந்துட்டீங் களே..."

-ராஜ்நாராயண் ஞாபகப்படுத்த, பட்டரும் அங்கு வர, "என்ன பட்டரே நீங்க... தொட்டுத்தொட்டு நல்லது நடக்கற இந்த நேரத்தில உங்க மககிட்ட சண்டை போட்டு எங்கேயோ போகும்படி பண்ணிட்டீங்களே..."

"எங்க போய்ட்டா பாரதி... எனக்கு எதுவும் தெரியாது இன்ஸ்பெக்டர்..."

"காணாம போனதே தெரியாதா... சரிதான்"-குமாரவேல் சில போலீஸ்காரர்களை அழைத்து, காதுகளில் கிதுகிசுத்து விட்டு ஜீவா அமர்ந்திருந்த ஜீப்பில் ஏறிக் கொண்டு சீறினார்.

✠ ✠ ✠

குளத்தில் சுற்றி கூட்டம். ஒருவருக்குப் பத்துபேர் குளத்தில் மூழ்கி எழுந்து கொண்டிருந்தனர். கரையில் அன்னபூரணியும், சந்திரிகாவும் நின்று கொண்டிருக்க, ராஜ்நாராயணும் பட்டரும் எதிர் சாரியில்! பட்டர் புலம்பிக் கொண்டேயிருந்தார். நடுநடுவே, "நான் அவசரப்பட்டுட் டேன்... கோயில்ல ஸ்வாமி கைங்கர்யம் பண்ணியும் எனக்கு நல்ல புத்தியில்லாம போயிடுத்து. என் குழந் தையை நான் சொல்லக் கூடாததெல்லாம் சொல்லிட் டேன்...."

திடீரென மூழ்கித் தேடும் போலீஸ்காரர்களில் ஒருவர், "சார் இங்க ஒரு சிலை மாதிரி ஒண்ணு கிடக்கு" என்று அலறினார்.

அடுத்து முப்பது நாற்பது நொடிகளுக்குப் பிறகு நீர்ப் பரப்புக்கு மேலே வந்த போது சிலரது கரத்தில் அம்பாள் விக்ரகம்.... பட்டர் மலங்க மலங்கப் பார்க்க, தொடர்ச்சி யாக அடுத்த சலசலப்பு....

"சாமி, பாரதி இந்தக் குளத்தில விழுந்து செத்திருக்க லாம்னு நாம நினைச்சது தப்பு. அவ நம்ம தீட்சதர் வீட் டுக்குப் போயிருந்துருக்கா. அதோ பாருங்க." தீட்சதரும் பாரதியும் தெரிந்தனர். ராஜ்நாராயணுக்கும் அவளைப் பார்த்த பிறகே அப்பாடா என்று ஆனது.

ஒரே பரபரப்பு... சலசலப்பு... அம்பாள் விக்ரகத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்ள ஒரு கூட்டமே முண்டியடித்தபோது ராஜ்நாராயணுக்கு சிரிப்பு வந்து விட்டது. அந்தப் பரபரப்புக்கு நடுவிலும் தீட்சதர் அவனை நெருங்கி, "ராஜா" என்றார் இதமான குரலில்.

"வாரும் ஸ்மாமி... ஓவர் நைட் என்னென்னவோ நடந்துடுத்து. ஒண்ணுக்கு இரண்டு விக்ரகம் கிடைச்சு நகைகளும் கிடைச்சிருக்கு... எனக்கே இது ஆச்சரியமாக தான் இருக்கு. நீங்க என்ன சொல்லப் போறேள்?"-கேட்டான்.

"அவன் டைரக்டர். நாம் நடிக்கிறோம். வேற என்னத்தச் சொல்ல?"

"இல்ல இதுக்கும் எதானா இட்டுக்கட்டிச் சொல் வேளே?"

"இனி சொல்ல என்ன இருக்கு? அதான் நடந்து முடிஞ்சுடுத்தே"

"ஒண்ணு மட்டும் ஒத்துக்கறேன். கூட்டிக் கழிச்சா பயங்கர இன்ட்ரஸ்ட்டா நிறைய விஷயம் நடந்துருக்கு.

பைதயை இன்னொரு விஷயம். என் சூட்கேஸ் கிடைச்சிடுத்தாம். இனி நான் ஊருக்குப் போறத யாராலையும் தடுக்க முடியாது...."

"வாஸ்தவம்தான்... பாரதியையும் கூட்டிண்டு நீ கிளம்பினா யார் தடுக்க முடியும்?"

"அவளைக் கூட்டிண்டா... நான் நாத்திகம் ஸ்வாமி. சரிப்பட்டு வராது..."

"இதை அவளல்லவா சொல்லணும்...."

✠ ✠ ✠

டாக்ஸிடிக்கியில் சூட்கேசை பூட்டிவிட்டு காரில் ஏறும் முன் எல்லாரையும் பார்த்தான் ராஜ்நாராயண். பாரதி கண் கலங்க வாசல் கதவு பின்னால் நின்று கொண்டிருந்தாள்.

அவளை நெருங்கியவன், "பாரதி... அழாதே! உனக்கு நான் பொருந்தமாட்டேன். உன் நம்பிக்கை வேற, என் நம்பிக்கை வேற... கருத்து வேறுபாட்டால நாம முட்டி மோதிக்கற ஒரு வாழ்க்கை நமக்கு வேண்டாம். மனசார நீ இந்தக் கடவுள் சிந்தனைகளை ஒதுக்கிட்டு என்கூட சேரமுடியும்னு எப்ப நினைக்கிறியோ அப்ப எனக்கு லெட்டர் போடு, வந்து கூட்டிண்டு போறேன். அழாதே நான் சொன்னதை யோசி. கிளம்பறேன்."

ஏறினான். தீட்சதர், பட்டர் என்று எல்லாருமே கையசைத்து விடை கொடுத்தனர். அவன் கார் மறைந்து விட்டது.

பட்டர் பெருமூச்சுடன் தீட்சதரைப் பார்த்தார்.

"இவ்வளவு நடந்துருக்கு... துளிகூட அவன் மாறலையே. நான் என்னத்தப் பண்ணுவேன்...." -வருந்திக் கசிந்தார்.

"சாபத்துக்கு அவ்வளவு சக்தி வைத்தி...."

"சாபமா?"

"ஆமாம்... உனக்கு நான் அப்புறமா சொல்றேன். இப்பக் கிளம்பறேன். இடிஞ்ச கோயிலைப் புதுப்பிக்கற வேலைக்காக இன்ஸ்பெக்டர் குமாரவேலே சில உபயதாரர்களை அனுப்பறதா சொல்லியிருந்தார். அவாளைப் பிடிச்சு வேலையை ஆரம்பிக்கணும்"

-தீட்சதரும் கிளம்பினார்.

✠ ✠ ✠

இடிந்த கோயில் கோபுர சருக்கத்தில் கழுகு. அதைப் பார்த்தபடியே எப்போதும் போல ஆனால், சொல்ல முடியாத அளவு உற்சாகத்துடன் நுழைந்த தீட்சதர் கருவறையை நோக்கி வேகமாகச் சென்று கைகளைக் கூப்பிக் கொண்டு நின்றார்.

'ஓம் நமச்சிவாய...ஓம் நமச்சிவாய...' என்கிற அந்தப் பஞ்சாட்சர உச்சாடனம் அவர் காதிலும் ஒலிக்கத் தொடங்கியது.

"ஸ்வாமிகளண்ட ஒண்ணுக் கேக்கணும்?"

-அவர் கருவறையைப் பார்த்துப் பேச, அந்தப் பஞ்சாட்சர உச்சாடனம் நின்றது.

"அந்த நாராயண அழகன்ங்கற ராஜ்நாராயண் ஒரு நாத்திகனா இருக்கிறதுகூட எனக்கு பெரிய வருத்தமாப் படலை. ஏன்னா அது ஒரு நிலைப்பாடு. ஆனா, அது அந்தப் பொண்ணு பாரதியை பாதிக்கற அளவு இருக்கறதைதான் சகிக்க முடியல. சாபம் கொடுத்த நீங்களே விமோசனத்துக்கும் வழி காட்டணும்..."

-தீட்சதர் உருக்கமாகப் பேசி முடித்தார்.

"கவலை வேண்டாம். அவன் காதலுக்காக அவ தன்னையே மாத்திப்பா. இனி எப்பவும் அந்தச் சிவனை ரகசியமாத்தான் நினைப்பா.

"சிவத்தை நினைக்கறதா பெரிசு."

"சிறுமைகள் இல்லாம வாழறதுதானே பெரிசு?"

-பதில் தீட்சதரின் பொட்டில் அறைந்த மாதிரி ஒலித்தது. ஒரு நெக்குறுகலான ஸ்தம்பிப்பு அவரிடம். அந்த 'ஓம் நமச்சிவாய' என்னும் பஞ்சாட்சர உச்சாடனம் திரும்பவும் தொடர ஆரம்பித்தது. அவருக்கு மட்டும் கேட்கும் விதமாக...!